5
5/3-59 .336

தற்கால உலகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 1959
MADRAS

ஆங்கில நூலாசிரியர்
எஸ். ஏ. பேக்மன், எம். லி., எம். ஏ.

YI
N39-4
111915

ாக்மில்லன்

தற்கால உலகம்

(1789—1958)

ஆங்கில நூலாசிரியர்
எஸ். ஏ. பேக்மன், சீ. பீ. ஈ., எம்.ஸி., எம்.ஏ.,
முன்னுள் சரித்திர பேராசிரியர்,
சருவ கலாசாலைக் கல்லூரி, இலங்கை

(பல படங்கள் கொண்டது)

இந்நூல் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு இலங்கை வித்தியா பகுதியாரால் தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது

REGISTRA

மாக்மில்லன் அண் கொம்பெனி லிமிடெட்
மதராஸ் பம்பாய் கல்கத்தா லண்டன்
1959


1957-ல் உலக நிலை
பொதுநல நாடுகள்
சோவியத் சோஷியலிஸ்டு குடியரசு ஐக்கிய நாடுகள்
ஐக்கிய நாடுகள்
சீனம்
இந்து சமுத்திரம்
பசிபிக் சமுத்திரம்
அட்லாண்டிக் சமுத்திரம்
அலாஸ்கா
கனடா
கிரீன்லாந்து
ஐஸ்லாந்து
நியூபவுண்லாந்து
வன்கூவர் தீவு
மெக்சிகோ
ஹவாய்
பிரித்தானியத் தீவுகள்
பிரான்ஸ்
ஸ்பெயின்
போர்ச்சுகல்
துருக்கி
பாரசீகம்
ஆப்கானிஸ்தான்
மங்கோலியா
திபேத்து
இந்தியா
பர்மா
இலங்கை
பிலிப்பைன் தீவுகள்
பெர்மூடாத் தீவு
பகாமாக் தீவுகள்
மேற்கிந்தியத் தீவுகள்
மத்திய அமெரிக்கா
வெனிசுவேலா
கயானா
பிரேசில்
பெரு
பொலிவியா
பரகுவே
சிலி
அர்ஜென்டைனா
பாக்லாந்து தீவுகள்
தென் ஜோர்ஜியா
பிரான்: மேற்காப்பிரிக்கா
லிபியா
எகிப்து
சூடான்
காங்கோ
சான்சிபர்
மோரீசு
தென் ஆப்பிரிக்கா
மடகாஸ்கர்
போர்னியோ
கிழக்கிந்திய நாடுகள்
அவுஸ்திரேலியா
நியூசீலாந்து
தாஸ்மேனியா
மேற்கு 100° தீ. ரேகை 80°
கிழக்கு 100° தீ. ரேகை 120°

MACMILLAN AND COMPANY LIMITED
London Bombay Calcutta Madras Melbourne

THE MACMILLAN COMPANY OF CANADA LIMITED
Toronto

ST. MARTIN'S PRESS INC.
New York

This book is copyright in all countries which are signatories to the Berne Convention

COPYRIGHT

First Edition 1939
Second Edition 1948
Third Edition Revised and Enlarged 1953
Fourth Edition Revised and Enlarged 1959

MADE IN INDIA AT THE I. S. S. D. PRESS, MADRAS-2.

நூலாசிரியர் குறிப்பு

(4-ம் வெளியீடு)

இரண்டாவது உலகப் பெரும் போர் முடிவை அடுத்துத் தோன்றியுள்ள இந்நூலின் மூன்றாவது வெளியீட்டுக் காலந் தொட்டு இதுவரையில் உலக முக்கியத்துவம் வாய்ந்த பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இச்சம்பவங்களை ஒன்றோடொன்று சரிவரத் தொடர்புறுத்திப் பார்க்கக் காலம் இன்னும் போதாதெனினும், மாணவர்களை, அவர்கள் வாசிக்கும் புதினச் செய்திகளுடனே, அன்று அவர்கள் கேட்டறியக்கூடிய 'தற்கால சம்பவம்' பற்றிய எத்தகைய விடயங்களுடனுமோ நன்கு தொடர்புறுத்தி விடும் பொருட்டு, யாம் இரண்டாவது உலகப் பெரும் போர் நிகழ்ச்சிகளை இங்கு சுருக்கமாய் எடுத்தாண்டு, அவற்றை அன்று தொட்டு இன்றுவரை நடந்தொழிந்த சம்பவங்களுடன் தொடர்புறுத்திக் காட்ட முயற்சித்துள்ளோம்.

வைகாசி, 1957. எஸ். ஏ. பேக்மன்

முகவுரை

தற்கால சரித்திரக் கல்விக்கு உதவிக் குறிப்புகள்.

18-ம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 1957-ம் ஆண்டு முடிவடையும் வரை, உலக சரித்திரத்தில் நிகழ்ந்துள்ள முக்கிய சம்பவங்களையும், போக்குகளையும் வரையும்பொருட்டு இந் நூல் இயற்றப்பட்டது.

இரண்டாவது உலகப் போர் தற்கால நாகரீகத்தைப் பாதிக்க வந்த பெருங் கண்டம் எனக் கொள்ளலாம். இந்தக் கண்டத்தில் நாம் சிக்கிக் கொண்ட முறையையும், வழியையும் அதின் பயனாக முழைத்தெழுந்து உற்பத்தியான சம்பவங்களையும், இன்று வரை நாகரீக வாழ்க்கை நிற்கும் நித்திய அபாயகர நிலையையும் பற்றி வாசிப்பவரை ஒருவாறு அறியச் செய்வதே எம் நோக்கம். வருங் காலத்திலே இவ்வனைய கண்டம் ஒரு போதும் வந்து பீடிக்கா வண்ணம், சமாதானத்தைப் பெறவும், போரை அறவொழிக்கவும் உழைக்க வேண்டியது வளரும் சந்ததியின் பெருங் கடமையென்று இந்நூலை உபயோகிக்கும் ஆசிரியர் தம் மாணவருக்குக் கட்டாயம் வற்புறுத்த வேண்டும்.

அத்தியாயம் ஒவ்வொன்றின் இறுதியில் அவற்றின் உள்ளடக்கப் பொருளின் சாரமும் அப்பொருளைத் தொடர்ந்து கற்க உதவும் சிறு குறிப்புகளுங் கொடுக்கப்பட்டுள்ளன. சில விசேஷ திகதிகளும் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் வழி காட்டக் கொடுக்கப்படுகின்றன. கால முழுவதையும் சேர்க்கும் அட்டவணைகளை மாணவர்களைக்கொண்டு கோரப்பண்ணுவது ஆசிரியரின் வேலையாகும்.

இப்பொருள் பற்றிய பெரு நூல்கள் பல ஆங்கிலத்தில் உள. ஆனால் தமிழில் எழுதப் பெற்றனவோ அல்லது மொழி பெயர்க்கப் பட்டனவோ வெகு சில. நல்ல ஓர் உலகப் படச்

சுவடி, ஏலுமாயின் சரித்திரச் சுவடி அதிக உதவியாயிருக்கும். ஆனல் நல்ல ஆசிரியன் கரும்பலகையிற் படங்களை வரைவதுமன்றி மாணவரைக் கொண்டும் படங்களை வரையச் செய்வான்.

இந்நூலின் இறுதியில் ஒவ்வொரு அத்தியாயத்தையும் தழுவ வினுக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை ஆசிரியருக்கு மாதிரி வினுக்களாகக் கொடுக்கப்பட்டனவன்றி பொருள்ப் பரப்பு முழுவதையும் அடக்கவில்லை. மாணவரின் கவனத்தைக் கவரவும், தம்மாற்றலாகவே காரியங்களை யோசித்துப் பிடிக்கவும் கூடிய வினுக்களை ஆக்க முயல்வது ஆசிரியரின் கடன்.

பொருளடக்கம்

	விஷயம்	பக்கம்
1.	நிலைமாறுலகம்	11
2.	பிராஞ்சிய அரசியற்புரட்சி	21
3.	கைத்தொழிற் புரட்சி	30
4.	ஐரோப்பியப் பெரும் போர்களும் அவற்றின் விளைவும்	47
5.	ஐரோப்பாவிலுள்ள எதேச்சாதிகார நாடுகள் ...	61
6.	ஐரோப்பியச் சுதந்திர நாடுகள்	73
7.	தாராளக் கொள்கைகளும் புரட்சியும் ...	82
8.	விக்ரோரியா ராணி காலத்திற் பிரித்தானியாவின் நிலைமை	92
9.	இத்தாலி சுதந்திரம் பெற்ற வரலாறு ...	104
10.	ஜெர்மனி ஒற்றுமைபூண்ட வரலாறு ...	113
11.	1914-ம் ஆண்டுவரையில் ருஷ்யாவின் சரித்திரம்	125
12.	ஐரோப்பாவின் புரட்சிக்களம்	134
13.	பொதுநல நாடுகள், பொதுநல நாடுகளின் சுய ஆட்சி செய்யும் டொமினியன்கள் : (i) கனடா	143
14.	சுய ஆட்சி உரிமை பெற்ற டொமினியன் நாடுகள். ஆஸ்திரேலியா—நியூசீலாந்து—தென் ஆப்பிரிக்கா	153
15.	இந்திய உபகண்டம்—1919 வரை	165
16.	ஐரோப்பியரின் செல்வாக்கு பரவினமை ...	182
17.	தூர கிழக்கு நாடுகள்	198
18.	அமெரிக்க ஐக்கிய நாடுகள்	210

பக்கம்

19. விஞ்ஞான சாத்திர விருத்தி ; சமுதாயச் சுக வாழ்வு 224
20. மூவர் ஒப்பந்தமும் மூவர் நட்பும் 234
21. முதலாவது உலகப் பெரும் போரின் நிமித்த காரணங்கள் 244
22. முதலாவது உலகப் பெரும் போர் 1914-1918 255
23. சமாதான உடன்படிக்கைகளும் சர்வதேச சங்கமும் 274
24. போருக்குப்பின் உலக நிலைமை ; போல்ஷ்விக் கரும் பாசிஸ்டுகளும் 286
25. முதலாவது உலகப் பெரும் போருக்குப்பின் உலகம் சீரடைதலும் பின் பொருளாதார வீழ்ச்சியும் .. 299
26. இரண்டாவது உலகப் போருக்கு அடிப்படையான நிகழ்ச்சிகள் 309
27. இரண்டாவது உலகப் போரும் அதன் பின் நிகழ்ந்தவையும் 330
28. பொது நல நாடுகள் 350
29. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் தோன்றிய புதிய தேசங்கள். ஐக்கிய நாடுகள் 370

மாதிரி வினாக்கள் 388

படங்கள்

(தடிப்பான எழுத்துக்களிலுள்ளவை தேசப்படங்களைக் குறிக்கும்.)

1957-ம் ஆண்டில் உலக நிலைமை .. முகப்புப் படம்
1789-ம் ஆண்டில் ஐரோப்பா 22
பாரீசு நகரத்தார் பஸ்தீலைத் தாக்குதல் 25
நூல்நூற்கும் ராட்டினம் 34

பக்கம்

இக்காலத்து நூல்நூற்கும் இயந்திரம் 35
ஸ்தீவன்சன் நிருமாணித்த '' ரொக்கெட் '' .. 40
இக்காலத்துப் புகைரத வண்டி 40
நெப்போலியன் 51
1810-ம் ஆண்டில் ஐரோப்பா 55
மெட்டர்நிக் 62
1815-ம் ஆண்டில் ஐரோப்பா 67
லூயி பிலிப்பு 77
1848-ம் ஆண்டில் '' பிளாக்விரியர்ஸ் பிரிஜ் '' .. 90
விக்ரோரியா ராணி 94
பெஞ்சமின் டிஸ்ரேலி 98
1851-ம் ஆண்டின் பெரும் பொருட்காட்சிசாலை .. 102
கரிபால்டி 107
இத்தாலியின் ஐக்கியம் (1859) 111
பிஸ்மாக் 115
1870-ம் ஆண்டில் ஜெர்மானிய சக்கராதிபத்தியம் 119
ருஷ்ய உழவன் 126
பெர்லின் உடன்படிக்கையை விளக்கும் படம் (1878) .. 136
1914-ல் ஆண்டில் பால்க்கன் நாடுகள் 137
கனடா 147
வோட் உவில்லியத்தின் தானியச் சேமிப்பிடங்கள் 149
ஆஸ்திரேலியாவில் ஆட்டுப்பட்டி 155
தென்னப்பிரிக்கா 161
இந்தியா 168
அரசாட்சியார் மாளிகை, டெல்லி 175
மகாத்மா காந்தி 179
ஆப்பிரிக்கா 184
செசில் ரோட்சு 186

பக்கம்

அடிமைகளின் கூட்டப் பயணம் 187
பண்டைச் சமுராயரின் உடை தரித்த யப்பானியர் .. 201
ஐக்கிய நாடுகளும் சமஷ்டி நாடுகளும் 213
ஆப்ரகாம் லின்கன் 214
லிஸ்டர் பிரபு 226
2-ம் கைசர் உவில்லியம் 239
1914-ம் ஆண்டில் போர் தொடக்கத்தில் ஐரோப்பா 250
போர்க்களங்கள் 256
மேற்றிசைப் போர்க்களம் 258
கீழ்த்திசைப் போர்க்களம் 262
மேற்றிசைப் போர்க்களத்தில் ஒரு காட்சி 269
உட்ரோ உவில்சன் 275
வேர்சேல்சில் சமாதான மகாநாடு 277
1920-ம் ஆண்டில் மத்திய ஐரோப்பா 280
லெனின் .. . 289
மூசொலீனி 296
அடோல்ப் ஹிட்லர் 311
ஐரோப்பாவும் வட ஆப்பிரிக்காவும் 337
மேற்குப் பசிபிக் 340
'' பெருமூவர் ''—உவின்ஸ்டன் சேர்ச்சில், பிரங்க்லின் றூஸ்வெல்ற், மாஷல் ஸ்டாலின் 342
ஜவஹர்லால் நேரு 363
மா சேதுங் 372
மத்திய கிழக்கு நாடுகள் 376
ஐக்கிய நாட்டு ஸ்தாபனக் கட்டடம் .. . 383

1. நிலைமாறுலகம்

மாற்றங்களின் தன்மை. இன்றைக்கு இருநூறாண்டு களுக்கு முன்னே, உலகத்தின் நிலை இக்காலத்து நிலையிலும் மிக வேறாயிருந்தது. அநேகமாய் மனிதர் ஒவ்வொருவரையும் பாதிக்கும் பெரு மாறுதல்கள் இக்காலப்பகுதியிலுண்டாயின. அக்காலத்திலே, பல நாட்டுக் குடிகள் தம்மையடுத்த அயலாரை யன்றி வேறெவரைப்பற்றியும் யாதும் அறியாதவராய்ச் சீவித்த னர்; பலர், அயற் கிராமவாசிகளை அல்லது, தமக்கு அடுக்க வசித்த கூட்டத்தாரைப் பற்றியன்றி, அதற்கப்பாலிருந்த வரைப்பற்றி ஒன்று மறியாதவராயிருந்தனர். ஆனாலிப் போதோ, அவ்வாறன்று. எந்தக் கிராமத்தாராவது, கூட்டத் தாராவது, நாட்டினராவது, தமக்குப் புறம்பான வேறெவரு டனுங் கலவாமல் தம்மிஷ்டப்படியே தனியே வாழ்தல் இயலாது. அக்காலத்திலே, பல நாட்டினரும், அநேக நூற் ருண்டுகளாக முன்பு வாழ்ந்ததுபோல, ஒரே வாழ்க்கை முறையைப் பின்பற்றி வந்தனர். பல நூற்றாண்டுகளாக மேனாடுகளிலே, மாற்றங்கள் நாட்டுப் பகுதிகளிற்றானும் மெள்ள மெள்ளப் பரவி வருவனவாயின. ஆனாற் கீழ்த்திசை நாடுகளிலே, பல நூற்றாண்டுகளாகக் கிராமவாசிகளின் வாழ்க்கையில் நேர்ந்த மாற்றம் மிக அற்பமாகும்; தலைமுறை தலைமுறையாக மாந்தர் அதே வயல்களில் தம் முன்னோர் கை யாண்ட அதே முறைகளின் படியே கமஞ்செய்து வந்தனர். இப்போது நிலைமையோ முற்றிலும் மாறிவிட்டது. இதை 3-வது அத்தியாயத்தில் படித்தறியலாம். உங்கள் ஊரிலிருந்து ஏதோவித ஆகாய விமானத்தால் ஒரு சில நாட்களில் அல்லது சில மணித்தியாலங்களிற்றானும் போய்ச் சேரக் கூடாத இடம் இல்லை. ஆனால் சொற்ப காலத்திற்கு முன்னே இந்தப் பயணம் சில வாரங்கள் அல்லது சில மாதங்கள்தானும் எடுத்திருக்கும். இந்த நூலில் எடுத்தாளப்பட்ட 150 வருட

காலத்திற்குள் நிகழ்ந்த மாற்றங்கள் அதற்கு முன் கடந்த பல நூற்றாண்டுகளில் நிகழ்ந்தவையிலும் பார்க்க அதிவிரைவானவை. இவ்வாறு திகைக்கச் செய்யும் வழியில் காலாகாலமாக நிலவிய முறைகள் முற்றும் மாற்ற மடைவது 'எப்படி,' 'ஏன்' என்பதைக் கண்டு பிடிப்பதுமன்றி, உலகத்தின் மக்களே இம் மாற்றங்கள் எந்த மார்க்கமாக இழுத்துச் செல்கின்றன என்று எங்களே ஆலோசிக்கப் பண்ணுவதும் இந்த நூலின் நோக்கம். இவை ஐரோப்பாக் கண்டத்திலே, பிரித்தானியா, பிரான்சு என்னும் நாடுகளிற்றொடங்கி விரைவிலே அக்கண்டம் முழுவதிலும், அங்கிருந்து வட அமெரிக்காவிலும், பரவின. இதனிலும் மெள்ளவே, இம்மாற்றங்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, தென்னமெரிக்கா, பசிபிக்குச் சமுத்திரத்திலுள்ள பெருஞ் சிறுந்தீவுகள் ஆதியவற்றிலும் சமீபகாலத்தில் பரவலாயின; இவை பொதுவாக ஐரோப்பியராலேயே கொண்டுவரப்பட்டன. எனவே ஐரோப்பாவிலும், உலகினேனைய பகுதிகளிலும் இம் மாற்றங்களுக்கு முன்பு சனங்களின் சீவிய நிலைமை எவ்வாறிருந்த தென்பதை யாமறிதல்வேண்டும்.

இம்மாற்றங்கள் இன்றைக்கு 400 அல்லது 500 ஆண்டுகளுக்கு முன்ரேன்றின; இவை "மறுமலர்ச்சி" அல்லது "புத்தறிவுக்கிளர்ச்சி" என்னும் பெருமியக்கத்தின் பயன்களாம். ஆனல் மாற்றங்களே அதிவிரைவிற் பரவச் செய்தவையும் அதனற் புரட்சிகள் எனுங் காரணப்பெயர் பெற்றவையுமான தொடர்பான இரு நிகழ்ச்சிகள் எவையெனில், பிரித்தானியாவிலே தோன்றிய **"கைத்தொழிற் புரட்சி"** யும், பிரான்சிலே தோன்றிய **"அரசியற் புரட்சி"** யுமாம். இரண்டும் அநேகமாய் ஒரு காலத்திலேயே, அதாவது 18-ம் நூற்றாண்டினிறுதியிலே, தோன்றின. முதலிற் கூறப்பட்ட கைத்தொழிற் புரட்சி, சாதாரண சனங்களாகிய ஆண் பெண்களுக்குக் காரியங்களே நடத்துவதில் செல்வாக்களித்தமையினுலே அவர்களுடைய சீவிய முறையிற் பெரிய மாறுதல்களே உண்டாக்கியது. இதனுலே அவர்களுக்கு ஊண், உடை, வீடு என்பன முன்னிலும் இலகுவாகவும் கூடின அளவாகவும், பொதுவாக, முன்னிலும் சிறந்தனவாகவும் பெறக்

கூடியன ஆயின. இது "சுகவாழ்வினிலையை மேம்படுத்துதல்" எனவும் கூறப்படும். பிந்திய புரட்சி, மக்களது எண்ணங்களில், சிறப்பாக அவர்கள் தம்மரசர்களைப்பற்றிக் கொண்டிருந்த கொள்கைகளைப் பற்றின வகையில்—பெரு மாறுதல்களை உண்டாக்கியது; இது சனங்களின் சுதந்திரத்தை யதிகரிக்கச் செய்ய அதிகம் உதவியதென்க. தமது சுகசீவியத்தை யாருந் தடைசெய்யாத வரையில், சாதாரண மக்கள் தம் சுதந்திரத்தைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனாற் பெருமனம் படைத்தவர்க்கோ, சுதந்திரத் தாகம் அடக்க முடியாததாகின்றது; ஆதலினாலே, அவர்கள் தம்முரிமைகளெனக் கருதுவனவற்றுக்காகத் தம் மெய் வருத்தமும் பாராது, சமர் புரிய மற்றவர்களையுமேவித் தலைமை பூண்டு நிற்பர்.

மாறுதல்களேற்படுமுன் ஐரோப்பாவி னிலைமை. பதினெட்டாம் நூற்றாண்டிலே, ஐரோப்பாக்கண்டத்திற் பெரு மாறுதல்களுண்டாகத் தொடங்கினபோதிலும். சாதாரண சனங்கள் பெரும்பாலும் தம் மூதாதையரைப் போன்றே உண்டுமுடுத்தும், பாடுபட்டும் வந்தனர். அரசர்கள் கடவுளின் திருவருளினாற் றம்மைப் பரிபாலிக்க ஏற்பட்டவரென்றும், அவர்களுக்குக் கீழ்ப்பட்டு நடப்பதே குடிகளாகிய தங் கடமையென்றும் அவர்கள் கருதினர். கொடுங்கோன்மையைச் சகிக்கலாற்றாதபோதும் அல்லது ஏதும் சமய சம்பந்தமான கிளர்ச்சியேற்பட்டபோதும் மாத்திரமே அவர்கள் அரசனை யெதிர்த்தெழுந்தனர். இத்தகைய மனப்பான்மை தொழிலாளரிடையே, அதாவது, கமவேலைசெய் வோரிடையும் கையாற் பண்டங்களை ஆக்குகிற கைத்தொழிலாளரிடையும் காணப்பட்டது. அரசர்கள் எதேச்சாதிகாரிகள்; அதாவது தம் மனம் போன போக்கின்படியே ஆள்பவர்; அநேகமாய் அவர்கள் சுய நன்மையைக் கருதுபவர்களேயன்றிக் குடிகளின் சேமத்தைக் கவனிப்பவரல்லர். அரசர்கள் போர்கள் பல புரிந்தனர்; இப்போர்களிற் பல, அந்நியர் நாடொன்றில் அடுத்த அரசனாக வருபவன் யாவன் எனத் தீர்மானித்தற்காக நடந்தன; உதாரணமாக, ஸ்பெயினிலும், போலாந்திலும், ஆஸ்திரியாவிலும் நிகழ்ந்த போர்களைக்

கூறலாம். இப்போர்களிலே அவர்கள் தங் குடிகளினுதிரத் தையும் செல்வத்தையும் பெருவெள்ளம் போலோடச் செய் தனர்; குடிகளோ வெனில், "இராமனுண்டானென்? இராவணனுண்டானென்?" என்னும் பழமொழிக் கிணங்க தம்மையாட்சி புரிந்தோரைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. மேலும் அரசர்கள் பேராசைப் பேய்களாய் தம்மிலும் வன்மை குன்றிய அயலவர்களது நாடுகளை அபகரித்தற்காக, இடை விடாது தம்முட் சமர்புரிந்தும் சூட்சி புரிந்தும் வந்தனர். இப்படித் தம் நோக்கத்தை நிறைவேற்றுகையில் அவர்கள் ஒரு நாடு முழுவதையுமே பாழாக்கவும் பின்வாங்கமாட்டார்கள். எதேச்சாதிகாரிகளான இவர்களைப் "பிரபுக்கள்" என்னுஞ் சிறு குழுவினர் ஆதரித்தனர்; ஆனால் இதே பிரபுக்களின் முன்னோர், அம்மன்னர்களின் கடும் வைரிகளாயிருந்தன ரென்க. "பிரபுக்கள் என்போருக்கு விசேஷ உரிமைகள் பல வுண்டு; அவற்றுட் சில, கீழ்த்தர வகுப்பினரை நெருக்க உதவின. சமய குருமாரும் பொதுவாக அரசர்களுக்குச் சார்பாகவே இருந்தனர்.

ஆனால், கல்வி கேள்விகளிற் சிறந்த பிரபுக்கள், சமய குருமார், நியாயவாதிகள், வைத்தியர் ஆதியாம் உயர் தொழிலாளர், பொருளீட்டுவதிலேயே முழுக்கருத்துமா யிராத வணிகர், என்போரிடையே திருப்தியீனங் காணப் பட்டது. விசேடமாகப் பண்டைக் கிரேக்கரினதும், அக் காலத்தியப் பிரித்தானியர், அமெரிக்கர் என்போரினதும் சுதந்திரப் பழக்க வழக்கங்களையும், அரசியலையும், சமூக வமைப்பையு மாராய்ந்தறிந்த அறிஞரிடையே இவ்வ திருப்தி விளங்கியதென்க. அக்காலத்தில் நாகரிகத்திலும் அறிவிலும் மேம்பட்டமக்கள் பிரான்சிலிருந்தமையினாலே, இவ்வதிருப்தி அங்குதான் புரட்சியாகக் கிளம்பியது. இவ் வறிஞரைத் தலைவர்களாகக்கொண்டு, கமக்காரரும் தொழி லாளர்களும், கொடுங்கோலாட்சியாற் தாங்கள் நசுக்குண் டிருப்பதை யுணர்ந்து, புரட்சி செய்யவிருந்தனர். ஏனைய நாடுகள் பிரான்சிலுங் குறைந்த அளவுக்கே நாகரிக மடைந் திருந்தபோதிலும், மேற்கு ஐரோப்பாவிலே புரட்சி யென்னுங்

தீ, விரைவிற் பரவியது. ஆனால், எதேச்சாதிகாரிகளாண்ட ஆஸ்திரியாவிலும் ருஷ்யாவிலும் கீழ்த்திசை ஐரோப்பிய நாடு களிலும் அடுத்த நூற்றாண்டின் பெரும் பகுதியில் நெடுகச் சுதந்திரப்போர் நிகழ்ந்து வந்தது. இங்கும் மாந்தரின் சீவிய நிலைமை மிக மெள்ளவேதான் மாற்றமடைவதாயிற்று.

பிரித்தானியாவின் நிலைமை இதனின் வேறாக இருந்தது. 1688-ம் ஆண்டில் நிகழ்ந்த "இரத்தஞ் சிந்தாப் புரட்சி"யின் பயனாகப் பிரித்தானியர் ஓரளவுக்கு அரசியல் விஷயங்களிலே சுதந்திரம் பெற்றிருந்தனர். பொதுவாக அவர்கள், தமது அரசியற் கருமங்களைப் பெருங் காணிக்காரர்களே நடத்தும்படி விட்டு, அரசாட்சியை நடத்துங் கருமம் ஏழைகளாகிய தங்களுக்கு ஏற்ற தன்றெனக் கருதியிருந்தனர். அதோடு பெரிய காணிக்காரருக்குப் பிரதான வணிகருடைய ஆதரவும், படித்த தொழில்வர்க்கத்தாருடைய ஆதரவுமிருந்தது. மேலும், இக்காணிக்காரப் பெருமக்கள் தஞ் சுய நலத்துக்குப் பங்கம் விளையாத வகையிலே நாட்டின் நலத்தைக் கருதியே, ஆட்சி புரிந்தனர் என்பதை நாம் ஈண்டு குறித்தல் வேண்டும்; மொத்தத்தில் நாட்டவரின் ஆதரவைப் பெற்று ஆண்டு வந்தமையினாலே பிராஞ்சிற் போன்று புரட்சியுண்டாக்கத் தூண்டும்படியான அளவுக்கு எவரும் திருப்தியீன மடைந் திருக்கவில்லை. என்றாலும், காணிக்கார பெருமக்களி னாட்சி. வட அமெரிக்காவுக்குச் சென்று அங்கே குடியேறியவர்களுக் குத் திருப்தியளிக்கவில்லை. அவர்கள், பிரித்தானியரால் தமக் கேற்பட்ட பல குறைபாடுகளைக் காரணமாகக் கொண்டு (இக் குறைபாடுகள் விசேடமாக வியாபார சம்பந்தமானவை), பிரித் தானியரை யெதிர்த்தெழுந்து, இறுதியாக 1783-ம் ஆண்டிலே தாம் பிரித்தானிய வரசுக்கு உட்பட்டிருக்குந் தொடர்பை நீக்கி, தம் நாட்டரசியற் கருமங்களைத் தாமே நடத்துவதெனத் தீர்மானித்தனர். உண்மை கூறுமிடத்து, அவர்களுடைய குறைகள் அத்தனை பெரியனவல்ல; பிரான்சு அல்லது ஜெர்மனியிலுள்ள தொழிலாளர்களை நசுக்கிய சுமைகளோடு ஒப்பிடின், அமெரிக்கக் குடியேற்றகாரருக்குக் குறைகளில்லை யென்றே சொல்லவேண்டும். ஆராயுமிடத்து, போரிடாதும்,

இரத்தஞ் சிந்தாமலுமே அவர்கள் தந் தாய் நாடடினின்றும் பிரிந்து போயிருக்கலாம். அவர்கள் புதிதாக அமைத்துக் கொண்ட அரசியற்தேசம் '' **அமெரிக்க ஐக்கிய நாடு** '' எனப் படும். அது இப்போது உலகத்துட் செல்வத்திலும் வலிமையிலும் தலை சிறந்த நாடாக மிளிர்கின்றது.

மாறுதல்களுக்குமுன் உலகத்தின் ஏனைய பகுதிகள் இருந்த நிலைமை. பதினைந்தாம் நூற்றாண்டு தொடக்கம் மக்கள், சில ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஆசியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்குஞ் செல்வாராயினர். ஆனால் அவர்கள் அக்கண்டங்களிலே மாறுதல்க ளுண்டாக்கக்கூடிய எதுவுஞ் செய்யவில்லை. துருக்கிய சுல்தான் ஆசியாவிலே பரந்தவொரு இராச்சியத்தை ஆண்டுவந்தான். ஐரோப்பாவிலே பால்கன் குடா நாட்டுப் பிரதேச முழுவதையும், கொன்ஸ்தாந்திநோப் பில் தொடங்கிப் பாரசீகக்குடா வரையிலுமுள்ள தேசப்பரப்பை யும், கருங்கடல் முதல் அரேபியாவின் வறண்ட தென்கரை வரையிலுமுள்ள நாடுகளையும், அவனுட்சி புரிந்துவந்தான். அவனுளுகை எதேச்சாதிகார மானதும், அநீதி, கைக்கூலி வாங்குதல் முதலிய பழுதுள்ளதுமா யிருந்தது. பொதுவாகக் கொடுங்கோலாட்சியே யெனினும் சகிக்கக்கூடியதாகவே இருந்தது. ஆசியாக் கண்டத்தின் கீழ்ப்பகுதியிலே பெருஞ் சீனசக்கராதிபத்தியமும், பல தீவுகளைக் கொண்ட யப்பானென் னுஞ் சிறு இராச்சியமும், தமது பண்டை வாழ்க்கை முறை யையும் அரசியல் முறைகளையும் ஒரு மாறுதலுமின்றியே அனு சரித்து வந்தன. அவை பல நூற்றாண்டுகளாகத் தங்கள் நிலைமையில் மாறாதும், உலகத்தின் ஏனைய பகுதிகளிலிருப் போரை இகழ்ந்தும், தம்நாட்டுக் கடற்றுறைப் பட்டினங் களுக்கு வந்து செல்லும் மிகச்சிலராய ஐரோப்பிய வணிகர் களைப்பற்றி ஒன்றுங் கவனியாதும் இருந்தன.

இந்தியாதேசம் முகம்மதிய சக்கராதிபத்திய காலத்தி லடைந்திருந்த மேனிலையை யிழந்து அராசக நிலையை யடைந் திருந்தது. மிக்க பராக்கிரமத்துடன் ஆண்ட சக்ரவர்த்திகளுள் கடைசியானவனை **அவுரங்கசீபு** 1707-ம் ஆண்டிலிறக்க, அவ னுக்குப்பின் முடிசூடினோர் உண்மையான அதிகாரம் முழுவ

தையும் கைநழுவ விட்டனர். முகலாயர் மகோந்த நிலையி லிருந்த காலத்திலுங்கூட, அவர்களுடைய செல்வாக்குத் தென் னிந்தியாவிற் சிறிதளவாயிலும் பரவவில்லை. மராட்டியர், ஒரு புதுவல்லரசாகத் தோன்றின ராயினும், வடமேற் கெல்லைப்புறங் களுக்கப்பாலிருந்துவந்து நாட்டைச் சூறையாடிய கொள்ளைக் காரனின் படையெழுச்சிகளினால், இவர்களின் வலிமை சிதை வடைந்தது. கடற்கரைகளிலே பண்டகசாலைகளை தாபித்த ஐரோப்பிய வியாபாரிகள் குழப்பமாகிய இந்நிலைமையைத் தமக்கு நன்மை பயக்குமாறு செய்துகொண்டனர். இவ்வித பண்டகசாலைகளிலும் வியாபாரத்தலங்களிலும் பிரித்தானிய, பிராஞ்சிய வியாபாரிகள் நூறுண்டுகளுக்கு மேலான கால மிருந்த பின்னர், இவ்விரு நாட்டினருக்கு மிடையே பதினெட் டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே போர்மூண்டது. போரிலே வெற்றி பெற்ற பிரித்தானியர், விசாலமான பிரதே சங்கள் தம்வசத்தில் வரவும் இந்திய வல்லரசுகளுள் தாமு மொருவராக வரவும் பெற்றனர். சீக்கிரத்திலே இவர்கள் தாமே இந்தியாவிலுள்ள ஒரேயொரு வல்லரசாக வருபவரா னர். நிற்க, ஆசியாவின் தென்பகுதியிலுள்ள தீவுகளனைத்தி லும் ஐரோப்பிய வியாபாரிகள் நிலையாக நெடுங்காலமாக இருந்துவந்தனர். அவற்றுட் சில தீவுகள் முற்றாக அவர்கள் வசமாயின. என்றாலு மவர்கள் அங்கிருந்த சாதாரண சனங் களின் சீவிய முறையை யதிகமாக மாற்றவில்லை. கடந்த நூற்றாண்டினிறுதியிலே கைத்தொழிற் புரட்சியின் அற்புத மான பயன்களைக் கீழைத் தேச மக்கள் அநுபவமூலமா யறியு முன், மேலைட்டினரால் அவர்களுடைய சீவியத்தை அதிகமாக மாற்ற முடியவில்லை.

ஆப்பிரிக்காவி னுட்பிரதேசம், அந்நியநாட்டவ ரறியாத தும், நாகரிகமடையாத முரட்டு மனிதர் வதியு மிடமாயு மிருந் தது. கடற்கரையி லங்கங்கே ஐரோப்பியரின் வியாபாரத் தலங் களிருந்தன ; மேற்குக் கடற்கரையிலிருந்த வியாபாரத் தலங்கள் இழிவான அடிமை வியாபாரம் நடப்பதற்குப் பெரிது முபயோகப்பட்டன. ஆனாற் பதினெட்டாம் நூற்றாண்டு முடி வடையும்போது ஐரோப்பாவிலே, விசேடமாக, பிரித்தானியா

விலே, பொதுசனங்களின் அபிப்பிராயமானது முன்னிலும் பார்க்க சீவகாருண்யமும் அன்பும் பொருந்தியதாய் வந்தது. அதுகாறும் பொறுத்துவந்த கொடுஞ்செயல்களையும் துர்வழக்கங்களையும் பொதுமக்கள் இனிப் பொறாராயினர்; எல்லாம் தலையாய இத்தீய அடிமை வியாபாரத்தை வெறுத்தனர். போர்த் திறமை வாய்ந்த வலிய சாதியார் தம்மினும் பலங் குறைந்தோரைத் தாக்கிச் சிறையாகப் பிடித்தலே ஊக்கப்படுத்துதல் தவறெனவும், இவ்வியாபாரத்தினுலே ஐரோப்பிய வியாபாரிகளும் அமெரிக்கத் தோட்டத் துரைமாரும் ஊதியம் பெறுவது அதனினும் பெருந்தவறெனவும் படிப்படியாக மாந்தருணர்ந்தனர்.

ஐரோப்பா விசாலித்தமை. புது உலகமான அமெரிக்காவும், ஆப்பிரிக்காவின் தென் பகுதியைச்சுற்றி ஆசியாவுக்குச் செல்லும் கடற்பாதையும் கண்டுபிடிக்கப்பட்ட கால முதலாக மேற்கைரோப்பாவிலும் பிரித்தானியத் தீவுகளிலும் உள்ள முயற்சியுந் துணிவும் மிக்க வணிகர் பலர், முன்னே மாந்தரெவருஞ் செய்யத் துணியாத நீண்ட கடற் பிரயாணங்கள் செய்தனர். ஸ்பானியரும் போர்த்துகீசரும் பெருந் தொகையினராகத் தென்னமெரிக்கா, மத்திய அமெரிக்கப் பிரதேசங்களுக்குச் சென்றுஅங்குள்ள சுதேசிகளிடையே மணம்புரிந்து, கடற்கரைப் பகுதிகளில் எவ்விடங்களிலும், சிறிது தூரம் நாட்டினுட்புறத்திலும், பெருங் குடியேற்றத் தாபனங்களை யுண்டாக்கினர். ஆனல், இத்தாபனங்களை யேற்படுத்துவதில் இவர்கள் காட்டிய ஊக்கம் பின்னர் வரவரக் குறைந்து போனது போலும். அதனல் கலப்பு விவாகத்தினுலே வந்த புதிய சந்ததியார் நாகரிகத்திலே அதிக முன்னேற்றம் காட்ட வியலாதிருந்தனர். இதன் பயனுக இக்குடியேற்ற நாடுகள், ஸ்பானிய, போர்த்துகீச அரசாங்கத்தாரின் கொடுங்கோ லாட்சியினின்றும் விலகி நெடு நாட் கழிந்தும், சமீபகாலம் வரையில் அதிகமான அபிவிருத்தி அடையவில்லை.

போர்த்துகீசர் வியாபாரத்தை நாடினவர்களாய்த் தென்னுப் பிரிக்காவை முதன்முதற் சுற்றி யாத்திரை செய்ததோடு நிற்காது பன்முறை அம்மார்க்கமே வந்து, இந்தியாவிலு மிலங்கை

யிலும், இவற்றுக்குக் கிழக்கேயுள்ள நாடுகளிலும் வாணிபத் துறைகளை யேற்படுத்தினர். அவர்களைப் பின் தொடர்ந்தவர் டச்சராவர்; இவர்கள் போர்த்துகீசரின் வாணிபத் துறைகளை தமக்குரியனவாக்கிக் கொண்டனர். பிரித்தானியரும் பிராஞ்சி யரும் வந்து இந்தியக் கடற்கரைப் பிரதேசங்களிலேயே தம் கருத்தைச் செலுத்துவராயினர். முகம்மதிய சக்கராதிபத்தியஞ் சிதைந்தபோ தேற்பட்ட குழப்பத்தில் தலையிடுவதினால் பெரிய அதிகார வலிமை பெறக்கூடுமென்பதை முதன் முதலாகக் கண்டறிந்தவன் டூப்ளே என்னும் பிராஞ்சிய உத்தியோகத்தனே ஆவன். ஆனால் பிராஞ்சியருடன் போட்டியிட்ட பிரித்தானி யரின் உயரிய கப்பற்படை வன்மையும், கிளைவ், உவாறன் ஹேஸ்டிங்ஸ் என்னு மிருவரினுற்றலும், பிரித்தானியருக்கு வியாபாரம், சாம்ராச்சியம் ஆகிய இரண்டும் கிடைக்கும்படி செய்தன. இதன் பயனாக, இந்தியா இப்போது பிரான்சினுட் சிக் குட்பட்டிராது பிரித்தானிய சாம்ராச்சியத்தி னொருபகுதி யாக 1947 வரையும் இருந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டிலே, உலகத்தினெல்லாப் பகுதி களிலும் பிராஞ்சியரும் பிரித்தானியரும் ஒருவரோடொருவர் போர் செய்து கொண்டிருந்தனர். ஆனால், இவர்கள், வியா பாரத்துக்கும் சாம்ராச்சியத்துக்குமாக மாத்திரம் போர் புரிய வில்லை. பிரித்தானியர் பலரும் பிராஞ்சியர் சிலரும் ஐரோப் பாவினின்றும் புறப்பட்டு வட அமெரிக்காவிற் போய்க் குடி யேறினர். பெருங்கண்டமான அமெரிக்காவிலே பிராஞ்சி யரைப் புகவிடக் கூடாதெனப் பிரித்தானியரும், பிரித்தானி யரைப் புகவிடக் கூடாதெனப் பிராஞ்சியரும் கருதினமையி னாலே அங்குக் கடும்போர் நிகழ்ந்தது. இதிலேயும், பிரித்தானி யரின் மேலான கடற்படை வன்மையும், பிரித்தானியக் குடி யேற்றக்காரரின் தொகை பிராஞ்சியர் தொகையினுங் கூடி யிருந்தமையும், வட அமெரிக்காவிலிருந்துப் பிராஞ்சியரைத் துரத்துதற்குப் பெரிது முதவின. ஆனால் பிராஞ்சியக் குடியேற் றக்காரரிற் பெரும் பகுதியோர் கனடாவிலேயே தங்கி விட்ட னர்; அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடிகளாயமர்வதினும் பார்க்க, தம் வீடு வாசல்களை விட்டுச் செல்ல விரும்பிய ஒரு

சில ஆயிரக்கணக்கான பிரித்தானியக் குடியேற்றக்காரரும் கனடாவை யடைந்தனர். இவ்விருவகைக் குடியேற்றக்காரருமே கனடா ராச்சியத்திற்கு அடிகோலினவரென்று அறிக.

இறுதியாகக் கூறவேண்டிய தொன்றுண்டு. பிரித்தானியரது ஊக்கமுள்ள கப்பற்படையின் வன்மையே ஆஸ்திரலேஷியா வென்னும் புதுக் கண்டம் பிரசித்திபெற்று அபிவிருத்தியடையப் பெரிதும் ஏதுவாயிருந்தது. வட அமெரிக்காவைப் போன்றே இங்கும் சம சீதோஷ்ண நிலையுடன் கூடிய, மானிட சஞ்சாரமற்ற, பரந்த நிலங்கள் இருந்தன. கப்டன் குக் என்பவரின் கடற்பயணங்களினாலே பிரித்தானியர் குடியேறுதற்கான புது நாடொன்று கிடைத்தது ; அடுத்த நூற்றாண்டிலே சனநெருக்க மேற்பட்ட பிரித்தானியத் தீவுகளிலிருந்து மேலதிகமான குடிசனங்களிற் சிலரை இங்கு அனுப்புதல் சாத்தியமாயிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே உலகத்தில் வியாபாரத்திய முதன்மை பெற்று விளங்கிய பிரித்தானியா, பிறநாடுகளிற் குடியேறும் வல்லரசுகளுள் முதன்மை பெற்றதென்பது தெளிவு. இது மாத்திரமன்று ; இயந்திரசக்தியாற் தொழிற்சாலைகளை நடத்தும் தொழின் முயற்சியிலும் பிரித்தானியாவே உலகில் தலை சிறந்த பெரிய நாடாக வருவதாயிற்று.

உதவிக் குறிப்புக்கள்

இவ்வத்தியாயத்தின் நோக்கங்கள் இரண்டாம் : (1) 16-ம், 17-ம், 18-ம் நூற்றாண்டுகளிலே நடை பெற்ற நிகழ்ச்சிகளை ஓரளவுக்குக் கூறுதலும், விசேடமாக ஐரோப்பியர் செல்வாக்கு உலகமுழுவதும் பரவிய அளவைக் காட்டுதலும் ; (2) இரண்டாவது உலகப் பெரும்போரில் மனித சாகியத்திற்கு வந்தெந்திய சிக்கல்கள் இவையிவை யென வாசகர்கள் விளங்கிக் கொள்வதற்காக, இந்நூலிற் கூறப்படுவன யாவை எனக் குறிப்பாகக் காட்டுதலுமாம்.

2. பிராஞ்சிய அரசியற்புரட்சி

1789-ம் ஆண்டுக்குமுன் பிரான்சின் நிலைமை. பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் மேற்றிசையிலிருந்த நாடுகளைப்பற்றிப் பொதுவாகச் சிறிதளவு அறிந்து கொண்டோம்; இனி பிரான்சைப்பற்றிச் சிறப்பாக ஆராய்வோம். 1789-ம் வருடத்துக்கு நூற்றாண்டுகளுக்கு முன்னே, ஐரோப்பாவிற் பிரான்சே வன்மைகூடிய நாடாயிருந்தது. செல்வம், நாகரிகம், இலக்கியம், கலை ஆதியவற்றில் அதுவே முதன்மைப்பெற்று விளங்கியது. ஆனால் அந்நாட்டரசர்கள், அவருள்ளும் பிரதானமாக 14-ம் லூயி, அத்துடன் திருப்தியடையவில்லை. பிராஞ்சிய அரசர்கள் அளவுக்கு மிஞ்சின பேராசைகொண்டு, ஐரோப்பாவிலே பிரான்சு, தனக்கொப்பாரு மிக்காருமின்றி மேலாக விளங்க வேண்டுமெனக் கருதினர். இதனால் ஏனைய நாட்டவரனைவரும் லூயியை எதிர்த்துநிற்க, பிரான்சுக்கு வன்மை குறைவதாயிற்று. லூயிக்குப் பின் முடிசூடின 15-ம் லூயியும், 16-ம் லூயியும், பலவீனர்; இருவருமாக எண்பதாண்டு காலத்துக்கு ஆட்சி புரிந்தனர்; ஏராளமான பணஞ்செலவிட்டுப் போர்களைப் புரிந்தனர்; ஆனாற் றங்குடிகளினிலைமையை மேம்படுத்த இவர்கள் ஊக்கமாய் முயற்சி செய்யவில்லை. 16-ம் லூயி நன்னெக்க முடைவனெனினும் மந்திரிகள் சிலராலும், ஆஸ்திரிய நாட்டிற் பிறந்தவளும் அவன் பட்டமகிஷியுமான மேரி அந்தோனெட் என்பவளாலும், ஒரு பாவைபோல ஆட்டப்பட்டான். எல்லாத் துறைகளிலும், அவற்றுள்ளும் விசேடமாகப் பொருள் வருவாயில், பிரதிகூலப்பட்டு எளிமை யடைந்த அரசாங்கத்தாரின் பலவீனத்தைக் கண்ட எவரும் ஆத்திரப்பட்டனர். அநீதியான கடும் வரிகளை விதித்து அறவிட்ட போதிலும், அரசாங்கத்தில் பணமின்றி முட்டுப் படுவதாயிற்று. வோல்ரேர், ரூசோ போன்ற பேரறிஞர்களைத் தலைவர்களாகக் கொண்ட அறிவாளிக ளனைவரும் திறமையற்ற அரசனை யவமதித்து ஏளனஞ் செய்ததோடு தேசத்தினிலைமை சீர்திருந்த வேண்டுமெனவும் வற்புறுத்துவாராயினர். பெரும்பாலான பிரபுக்கள் பயனற்ற சீவியம் நடத்தினர்; தஞ்



எமரி வாக்கர் லிமிடெட்

சுகபோகமே அவர்களுக்குப் பிரதானமாயிருந்தது ; அவர்கள் கீழ்வகுப்பினரை யவமதித்தனர். பிரபுக்கள் செலுத்துதற்கான வரிகளே இல்லை யெனலாம் ; ஆனல் அவர்களுக்கிருந்த விசேஷ உரிமைகளோ பல ; இவ்வுரிமைகள் அப்பிரபுக்களது தோட்டங்களில் வசிக்குங் குடியானவர்களைத் தாக்கி நட்டப் படுத்துவன வாயிருந்தன. பயிர் விளைந்த வயல்கள் வழியாகப் பிரபுக்கள் குதிரைமீதிவர்ந்து சென்று வேட்டையாடி, அவ் விளைவை யழிப்பர் ; பெருந் தொகையான புறுக்கூட்டங்களை வளர்ப்பர் ; அவைகளும் விளைவை அழிப்பனவாகும் ; எனினும் கமக்காரர் அப்புறுக்களுக்கு யாது தீங்குமிழைத்தல் கூடாது. பெரும்பாலும் கமக்காரர் அரசாங்கத்தாருக்கும், தம் நிலச் சொந்தக்காரரான பிரபுக்களுக்கும் சம்பளமின்றி வேலை செய்ய வேண்டியவராவர். நிலம், பெயரளவிற் குடியானவனுக்குச் சொந்தமே யாயினும், அவனுக்குச் சுதந்திரமுமில்லை, சந்தோஷ முமில்லை. கிறிஸ்தவத் திருச்சபையிலோ, மேலதிகாரிகள் பரி தானம் வாங்கினர் ; அத்தியட்சர், பிஷப்பாண்டவராதிய உய ரிய பதவிகளைப் பிரபுக்களே வகித்தனர். திருச்சபையின் கீழ்த் தர உத்தியோகத்தர்களிற் பெரும்பகுதியோர் குடியானவர் வகுப்பினரே ; இவர்கள் அநேகமாய் அறியாமை படைத்தவர் கள் ; தஞ்சீடர்களான பொதுமக்களிடம் பரிவு பூண்டவர் ; எனவே இவர்களுக்கும் உயர்தரக் குருமாருக்கு மிடையே மன வொற்றுமை யிருப்பதில்லை. நடுத்தர வகுப்பினர் பெரும்பாலும் கூரிய புத்தியும் கல்வியறிவுமுடையவர். அவ்வகுப்பிலிருந்தே அரசாங்கத்திலுள்ள மிக்க திறமை வாய்ந்த உத்தியோகத்தர் கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனல் பிரபுக்களோ இவர்களை யவமதித்து வந்தனர். மிக உயர்ந்த வேதனமளிக்கும் உத்தி யோகங்களை—இவ்வுயர்ந்த உத்தியோகங்களுக்கு வேலை யொன்றும் இல்லை ; இருந்தாலும் மிகச் சொற்பமாகும்—இந் நடுத்தர வகுப்பினர் பெறமுடியாது தடுக்கப்பட்டிருந்தனர். இம் மட்டோ ! இவர்கள் பாரதூரமான வரிகளையுஞ் செலுத்த வேண்டி யிருந்தனர். புரட்சிக் கலகத்தை யுண்டாக்கும் மன நிலை இந்நடுத்தர வகுப்பினரிடைத்தான் தோன்றியது.

அரசாங்க மகாசபை. 1789-ம் ஆண்டளவிலே, தேவை

யான பணத்தைப் பெறுத லெங்கனமெனத் தெரியாது அர சாங்கத்தார் திகைத்தனர். இனிமேலும் கடன் கொடுப்பவரு மில்லை; குடிகளை நெருக்கி இன்னமும் வரி அறவிடுத்த லென் பதும் இயலாத காரியமாயிற்று. நிலைமை இவ்வாறிருக்க அர சாங்க மகாசபை கூட்டுதல் நன்றென 16-ம் லூயி மன்னனுக்கு அவனுல் அழைக்கப்பட்ட சுவிஸிய வங்கி முதலாளியாகிய நெக்கரால் புத்திசொல்லப்பட்டது. பிராஞ்சிய அரசாங்க மகா சபை, ஒருவகையிற் பிரித்தானியப் பாராளுமன்றத்தைப் போன் றது. ஆனுல் வலிமை படைத்த அரசர்கள் அரசாங்க விஷ யங்களிற் றங்குடிகள் தலையிடுவதை விரும்பாமையினுலே, நூற்றெழுபதாண்டு காலமாக அச்சபை கூடவில்லை. அது முப்பிரிவு கொண்டது. முதற்பிரிவு, பிரபுக்களையும், இரண் டாம் பிரிவு, குருமாரையும், மூன்றும் பிரிவு, நியாயவாதிகள், வைத்தியர், வணிகர் போன்ற நடுத்தர வகுப்பினரையும் அங்கத் தினராகக் கொண்டது. தொகையளவில், மூன்றும் பிரிவினர், ஏனைய இருபிரிவினருக்குஞ் சமமானவராயும், ஒவ்வொருவருஞ் சீர்திருத்தத்தை நாடுபவராயு மிருந்தனர். பன்நெடுங்கால மாக இச்சபை கூடாதமையால் என்ன செய்வதென்பது ஒரு வருக்குந் தெரியவில்லை. ஆரம்பத்திலே முப்பிரிவினருந் தனிப்படக் கூடிவந்தன ரெனினும், சீர்திருத்தத்தில் உறைந்து விடாப்பிடியாய் நின்றவர் பலர், மூன்று பிரிவினரும் ஒன்று கூடியே ஆலோசிக்க வேண்டுமென நிச்சயித்தனர். மூன்றுவது பிரிவினர் ஒருங்குகூடி மாற்றங்கள் கொண்டு வந்தல்லாமல் வெளியேறுவதில்லை யென்று சத்தியப் பிரமாணஞ் செய்து கொண்டனர். இப்பிரமாணம் 'டெனிஸ்' விளையாட்டு மைதானத்தில் செய்து கொண்டமையால் 'டெனிஸ் கோட் சத்தியம்' என்றும் வழங்கப்படும். இவ்வாறு சிறு சச்சரவின் பின் ஒன்றுகூடின சபை, **தேசீயசபை** எனப்பட்டது. கீழ்த் தரக் குருமாரும் ஆதரவளித்தமையினுலே, சீர்திருத்தக்காரரின் தொகை அதிகமாயிருந்ததென்க. தொடக்கத்திலே, அரசன் இவர்களிடம் அநுதாபங் காட்டினுன்; பிரபுக்களும் தம்முரிமை களிற் பெரும்பகுதியை இட்டப்பட்டுத் தாமாகவே கை விட்டனர். ஆனுல், மகாசபைகூடின இருமாதங்களுக்கப்பால்,



பாரிசு நகரத்தார் பஸ்தீலைத் தாக்குதல் [*Picture Post Library*

இன்னுமொரு சக்தி இந்த அரசியல் ஆட்டத்தில் வந்து கலப்ப தாயிற்று. அதுதான் பாமரசனக்குழு எனப்படும் மகா பயங் கரமான சக்தி. பரீசிலுள்ள தொழிலாளிகள் எக்காலத்திலும் வறுமை வாய்ப்பட்டவராயும் கலகச் செயல் புரிதற் கஞ்சாத வர்களாயு மிருந்தனர். அரசனும் பிரபுக்களும் அந்தரங்க விசுவாசமாய் நடந்து கொள்ள வில்லையென எண்ணியவர் சிலரால் தூண்டப்பட்ட இவர்கள், பல நூற்றுக்கணக்காக ஒன்றுகூடி, பரீசுப் பட்டினத்தின் மத்தியிலிருந்த **பஸ்தீல்** என்னும் பயங்கரமான பழைய சிறைக்கூடத்தைத் தாக்கி அதனைக் கைப்பற்றித் தகர்த்து அழித்துவிட்டனர். இச்சிறைக் கூடம், அரசனது சினத்துக்கு ஆளானவரை யாதொரு விசாரணையு மின்றியும் பெரும்பாலும் ஆயுட்கால முழு வதிற்கும் அடைத்துவைத்திருக்கும் இடமாயிருந்தது. இத் தகைய கட்டடம் அழிபட்ட செய்தி, பிராஞ்சியரையும் ஐரோப் பாவில் ஏனைய நாட்டவரையும் குதூகலங் கொள்ளச் செய்தது; இதுகாறும் உலகத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளுள் இதுவே மிகவும் அரிய பெரிய சம்பவமென உண்மையான உரிமை விரும்பியான பொக்ஸ் என்பவரால் இங்கிலாந்திலே பாராட் டப்பட்டது.

அரசியற்புரட்சி பரவுதல். வன்மையுள்ள கருவியொன் றைக் கண்டுபிடித்த புரட்சித் தலைவர்கள் அதனை மென் மேலு முபயோகிக்கத் தீர்மானித்தனர். அக் கருவி, பரீசு நகரத்து முரட்டுச் சனங்களின் கூட்டமேயாம். இவர்கள் பசி பட்டினியினல் விசர்கொண்டு திரும்பவும் கலகஞ் செய் தெழும்பி, வேர்சேல்சுக்குச் சென்று, அங்கிருந்த அரசனை யும், அவன் குடும்பத்தினரையும் தேசீய சபையாரையும் பரீசுக்கு இழுத்துவந்தனர். குடும்ப சகிதமாகப் பட்டினத் துக்கு அரசன் வந்ததினலே தமக்கு உணவுப் பொருள்கள் கிடைக்குமென நம்பின இவர்கள், "சோற்றுக் கடைக்காரனை யும் அவன் மனைவியையும் மகனையும் கொண்டு வந்து விட்டோம்" என்றுரவாரித்தனர். நாட்டுப்புறங்களிலுங்கூட, வலோற்காரச் செயல்கள் நடைபெறலாயின. குடியானவர் கள் தமக்குப் பெரும்பாரமாயிருந்த பிரபுக்களினுரிமைகளை

நிராகரித்துத் தள்ளிக் குழப்பஞ்செய்து நின்றதோடு, சில இடங்களிற் பிரபுக்களின் மாளிகைகளையுந் தீக்கிரையாக்கினர். பிரபுக்கள் பலர் நாடு துறந்தோடினர். 'எமிகிறேஸ்' என்று கூறப்பட்ட இவர்கள் (அதாவது நாட்டை விட்டு வெளியேறியவர்) காலக் கிரமத்தில் பெருங் குழப்பத்திற்குக் காளாயினர். மகாசபை கூடிய ஈராண்டுகளுக்கப்பால், லூயி மன்னன் இரகசியமாய்த் தப்பியோட முயன்றபோது வழியிற்கண்டு பிடிக்கப்பட்டு, பரீசுக்குப் பலவந்தமாகக் கொண்டு வரப்பட்டான். நல்லெண்ணங் கொண்டிருந்தானென்று அவனுக்கு இதுவரைக்கு மிருந்த நற்பெயரையும் இப்போது அவன் இழந்தான். குடியரசு முறையைத் தாபிக்கலாமென மக்கள் வெளிப்படையாகப் பேசலாயினர். தற்காலிகமாக, பெயரளவிலே மாத்திரம் அரசனைத் தலைவனாகக் கொண்டு, அவனுக்குள்ள அதிகாரமனைத்தினையும் நீக்கி அரசாங்கமொன்றை ஏற்படுத்தினர்கள். அப்போது இராணியினாலும் நாட்டை விட்டோடின பிரபுக்களாலும் இரகசியமாகத் தூண்டப் பெற்றப் பிருஷ்ய, ஆஸ்திரிய மன்னர்கள் பிரான்சின் மேற் படையெடுப்பதாக் அச்சுறுத்தினர். இச்செய்கை பிரான்சியரின் ஆண்மையையும் வீராவேசத்தையுங் கிளப்பியது. பெருஞ் சேனைகள் புதிதாகத் திரட்டப்பட்டு விரைவிலே நாட்டினெல்லைகளுக் கனுப்பப்பட்டன. இராணியின் விருப்பத்துக் கிணங்க அரசன் நடந்தபடியினாலே, பரீசில் ஒருவரும் அவனை நம்பவில்லை. புதிதாக ஏற்படுத்தப்பட்ட அரசாங்கசபை பலவந்தமாக நீக்கப்பட்டது; அதற்குப் பதிலாக மிக உக்கிரமான முறைகளைக் கைக்கொள்ளும் ஓர் இராணுவ அரசாட்சியைப் புரட்சித் தலைவர்கள் ஏற்படுத்தினர். இவர்கள் எல்லாரும் நடுத்தர வகுப்பினர். இவரிற் சிலர் ''ஜிரொன்டினர்'', ஆர்வமுள்ள இளம் குடியரசுவாதிகள்; இன்னும் சிலர் ''ஜேக்கோபினர்'', இவர்கள் தீவிரவாதிகள். எவ்விதமாயினும் பிரான்சில் புரட்சியை நிலைநாட்ட உறுதியாயிருந்தனர்.

பயங்கர ஆட்சி. 1792-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் புதிய பிராஞ்சியப் படைகள் தமக்கே ஆச்சரிய முண்டாக்கக்கூடிய வகையிலே பிரான்சின்மீது படையெடுத்தோரை

நாட்டினெல்லைக் கப்பாற் துரத்தி விட்டன. இ∴திங்ஙனமாக, பரீசிலும் ஏனைய பெரும்பட்டினங்களிலும், பழைய அரசாட்சி முறைக்குச் சார்பானவர்களெனக் கருதுதற் கிடமான்னவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் ; பரீசில் மாத்திரம் 1400 பேர் மாய்ந்தனர். முரட்டுச் சனக்கூட்டத் தலைவர்களுடைய அதி காரம் படிப்படியாக அதிகரித்தது. அவர்களுட் பிரசித்தி பெற்றவர், ஒருகால் வைத்தியராக இருந்த மாரு என்பவரும், முன்பு நியாயவாதியாக இருந்தவரும், குரூரச் செயல்களைப் புரிய அஞ்சாவிடினும் திறமை வாய்ந்தவராயும் உண்மைத் தேசாபிமானியாகவுமிருந்த டாந்தன் என்பவரும், ஒருகால் மாகாண நீதிபதியாயிருந்தவரும், இம் மூவருள் திறமை வாய்ந்தவரும், நன்மை தீமை யென்றும் பாவம் புண்ணிய மென்றுங் கருதாதவருமான ரொபீஸ்பியர் என்பவருமாவர். பிரான்சினெல்லைப் புறங்களிலே பிராஞ்சியப் படைகள் வெற்றி யடைந்து, அயல் நாட்டவரிடையே குடியரசுக் கொள்கைகளைப் பரப்பி வரும்போது, இம்மூவரும் மிகக் கடினமான தண்டோ பாயத்தைக் கைக்கொண்டு தமக்கு விரோதமான கிளர்ச்சியை யெல்லாம் மடக்கி யடக்கி வந்தனர். வரிசை வரிசையாகப் பலர் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர் ; அவர்களுள் முதன் முதலில் அகப்பட்டவரில் 16-ம் லூயியும் ஒருவனவன்.

இச் செயல் ஐரோப்பாவி லிருந்தோ ரனைவரையும் திகி லடையச் செய்தது. பிரான்சுடன் போரிடப் பிரித்தானியாவும் ஒல்லாந்தும் ஒன்று சேர்ந்தன. ஆனாற் புதிய பிராஞ்சிய படைகளின் ஆர்வம், படைத்தலைவர்களின் திறமை, ஜேக்கேபி னரின் கண்டிப்பு என்பவற்றின் முன்னே எதுவும் நிற்கமுடிய வில்லை. பொதுசனச்சேம நிர்வாகசபை என்பது ஒன்று தோன்றி, அரசாங்க விஷயங்களை நடத்தி வந்தது ; குரூர நெஞ்சு படைத்தவர்களைக்கொண்ட புரட்சிக் கட்சியினரின் நீதி விசாரணைச்சபை, தமக்குச் சதிசெய்வோரெனச் சமுசய மானவரெவருக்கும் இரக்க மென்பதின்றி மரணதண்டனை விதித்து வந்தது. புரட்சிக்காரர்களாயிருந்தபோதிலும் ஜிரொன் டினரே இரக்கமற்ற ஜெக்கோபினரால் கொல்லப்பட்டனர். ஆனால், பயங்கரமான இங்ஙனெ நெடுங்கால மிருக்கவில்லை.

1794-ம் ஆண்டளவிலே எல்லைப்புறத்தில் ஏற்பட்ட அபாயம் நீங்கியது. பிராஞ்சியப் படைகள் நாட்டைக் காத்தற்குப் பதிலாகத் தாமே முன்சென்று எதிரிகளைத் தாக்கலாயின. மாரு தனது இரத்த வெறி காரணத்தால் சாளற்கோடே என்ற இளம் பெண்ணினுல் குத்திக் கொல்லப்பட்டார். ரெபீஸ்பியரின் அழுக்காற்றுக்கு டாந்தன் இறையானுர். ஜெக்கோபின் கட்சியினருள் ஏனையோரது பொருமைக்காளாகி ரெபீஸ்பியரும் மடிய, பயங்கர ஆட்சி முறையும் முடிவடைவ தாயிற்று. பயங்கர ஆட்சிக்குக் கருவியாயிருந்த பரீசு நகரத்து முரட்டுச்சனக் கூட்டத்தினருட்பட மாந்தரனைவரும் கொலை வெறி நீங்கி மனது சமநிலை யடையப்பெற்றுர்கள். புதியதும் முன்னிலும் மிகசாந்தமான அரசியற் கொள்கை களைத் தழுவியதுமான அரசாங்கந் தாபிக்கப்பட்டது. இது குடியரசு முறையைத் தழுவியதே எனினும் குரூரமானதன்று. பரீசு நகரத்து முரட்டு சனங்களின் தலைவர்களது இச்சைப்படி யெல்லாம் அடங்கி நடப்பதன்று.

1795-ல் திரும்பவும் இப்புரட்சிக்காரர் உக்கிரங்கொண் டனர். இவர்கள் அரசாங்கத்தால் உதவிக்கு அழைக்கப்பட்ட இளந்தளகத்தன் நெப்போலியன் பொனப்பார்ட்டின் கருத்துப் படி பீரங்கிப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இது ''கொத்துக் குண்டுப்புகை'' யென சில நேரங்களில் வழங்கப்படு கிறது. சரித்திரத்தில் இது இவ்வீரனின் இரண்டாம் தோற்றம்.

உதவிக் குறிப்புக்கள்

. இவ்வத்தியாயத்தின் முதற்பகுதியில், பிரான்சில் பண்டைச் சமுதாய அரசியலமைப்புக்கு எதிராகப் புரட்சி யேனேற்பட்ட தென்பது விளக்கப்பட்டுள்ளது. பின்னர், புரட்சி நடைபெற்ற வரலாறும் அதனுண்மையான நோக் கங்கள் எவ்வளவு விரைவில் நிறைவேறின வென்பதும் கூறப்பட்டுள்ளது; ஐரோப்பாவிலுள்ள எதேச்சாதிகாரிகளின் எதிர்ப்பு நிலையானது, பிராஞ்சியரின் தேசீயவுணர்ச்சியைக் கிளப்பி, அந்நாட்டு அரசியலதிகாரத்தை அமிதவாதிகளுக் களித்த தென்பதும், இவ்வமிதவாதிகள் போர் மூளுமென்ற பயத்தினுலும் புரட்சியின் பயன்களைக் கைவிடாதிருக்கவும்

பழைய நிலைமை மீளாதிருக்கவும் கோரமான குரூரச்செயல் களையும் புரிந்தன ரென்பதும், இவ்வத்தியாயத்தில் விவரிக்கப் பட்டுள்ளன.

சில பிரதான நிகழ்ச்சிகள்

1715.	14-ம் லூயியின் மரணம்.
1778-1783.	பிரித்தானியருடன் போரிட்ட அமெரிக்கக் குடியேற்றக்காரருக்குப் பிராஞ்சியர் உதவி செய்து, சுதந்திரத்தைப்பற்றிச் சிறிது அறிந்தனர்.
1789.	மேமீ. மகாநாடு கூடுதற்கான கட்டளை. ஜூலைமீ. 'பஸ்தீல்' அழிக்கப்பட்டது. ஒக்டோபர்மீ. வேர்சேல்சுக்குச் செல்லுகை.
1791.	16-ம் லூயி தப்பியோடுதற்காக செய்த முயற்சி தடைபடல்.
1792.	பிரான்சின்மீது படையெடுத்தமை வால்மிப் பீரங்கிச் சண்டையாற் றடைப்படுதல்.
1793.	16-ம் லூயியின் சிரச்சேதம். "பயங்கர ஆட்சி" யினாரம்பம்.
1794.	டாந்தனினதும் (ஏப்பிரல்), ரொபீஸ்பியரினதும் (ஜூலை) வீழ்ச்சி. பயங்கர ஆட்சியின் முடிவு.
1795.	"கொத்துக்குண்டுப் புகை."

3. கைத்தொழிற் புரட்சி

இயந்திரங்களின் உற்பத்தி. 18-ம் நூற்றாண்டினாரம் பத்திலே, மேற்கு ஐரோப்பியர் பெரும்பான்மையோர் கம வேலை செய்பவராயிருந்தனர். இக்காலத்தில் பெரும்பாலார் பட்டணங்களிற் தொழிற் புரிந்துகொண்டு அங்கேயே வதி கின்றனர் ; கை வேலையாற் பொருள்களை உண்டாக்குவதற்குப் பதிலாக அவர்கள் யாதானு மொரு இயந்திரத்தை உப

யோகப் படுத்துகின்றனர். பொதுவாக இவ்வியந்திரம் அவர்களுடைய முயற்சியினுல் இயக்கப்படுவ தன்று, மற்று, நீராவி. மின்சாரம், எண்ணெய் என்னும் இவைபோன்ற ஒரு பொருள் உண்டாக்குஞ் சக்தியினு லியக்கப்படுகிறது. இதனுல், மனிதர் சாதாரண கருவிகளேக்கொண்டு தமது சுய பலத்தினுல் செய்யக்கூடியதினும் பார்க்க, மிகக் கூடின அளவு வேலே செய்யக்கூடியவர்களாகின்றனர். உலகத்தில், இவ்வியந்திர சக்தியே, ஆண், பெண், குழந்தைகள் என்பவ ரது இயற்கைத் தன்மைகள் ஒழிந்த ஏனேயவற்றின் தன்மை களேயெல்லாம் மாறச்செய்து வருவதாகும். இனி, இப் பெரிய மாறுதல்களேற்பட்டவாறு எங்ஙனமென ஆராய்வோம்.

பண்டைக் காலத்தில் பரந்த காணி பூமிகளேயுடையவரே பெருஞ் செல்வராயிருந்தனர்; பிரதானமாக வியாபாரத்தால் பொருள் ஈட்டக்கூடியவர்களும், சேமித்து வைக்கக் கூடியவர் களும், படிப்படியாகத் தோன்றினர். இப்பணம் முக்கியமாக அவர்கள் தொழிலேப் பெருக்குவதற்கு உபயோகிக்கப்பட்டது. ஆனுல் இப்பணம் அரசாங்கத்துக்கும், தேவைப்பட்ட தனிப் பட்டவர்களுக்கும் கடனுகத்தரப்பட்டது. ஆனுல், இயந்திரங் கள் உற்பத்தி செய்யப்பட்ட பின்னர் விலேயுயர்ந்த அவற்றைச் செய்வித்தற்கான பெருஞ்செலவிற்கும், அவற்றை இயக்கி வேலே செய்யும் நூற்றுக்கணக்கான தொழிலாளிகளின் வேத னத்திற்கும், இலாபந்தரும் வகையிலே பொருள்களேத் தொகை யாக உண்டாக்குதற்குத் தேவையான மூலப்பொருள்கள் வாங் குஞ் செலவிற்கும் ஆகிய பணத்தை, இவர்கள் கொடுக்கத் தக்கவர்களாக இருந்தார்கள். இவர்கள் "முதலாளிகள்" என்று அழைக்கப்பட்டார்கள். இவர்களில் சிலர் உண்மையில் பெரும் செல்வர்களானுர்கள். சாதாரண சம்பவங்களின் காரணங்களே அறிதலில் முனேந்து நின்று முயற்சி செய்த விஞ்ஞான விற் பன்னர்களும், சாதாரண பொருள்களுக்குப் புதிய உபயோகங் களேக் கண்டு பிடிப்பதிற் பெருஞ் சிந்தனே செலுத்திய மனிதர் களுமே, சக்தியாலியக்கப்படும் இயந்திரங்கள் உற்பத்தியாவ தற்கு முதற்காரணர்களாக இருந்தனர். சேர் ஐசாக் நியூட்டன் பல பிரதான கணிதமுறைகளேக் கண்டு பிடித்தார். இவைகளி

லொன்று, மரத்திலிருந்து அப்பிள் விழுந்ததைக் கவனித்ததால் அவர் மனதில் பழங்கீழே விழுந்தது ஏன் என்ற வினவை கேட்க வைத்து, புவி ஈர்ப்பு என்ற நியதியைச் சிந்திக்கச் செய்தது. கேத்தலின் மூடியை நீராவி மேலே உயர்த்தக்கண்டு வியப்படைந்த உவாட் (Watt) என்பவர் பெரிது மாலோசித்துப் பல சோதனைகள் புரிந்து, அவற்றின் பயனாக் நீராவியாலியக் கப்படும் ஓர் இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். இவ்வியந் திரத்தி னுதவியால் சுரங்கங்களிலிருந்து நீரை வெளியே இறைத்தார்கள். இதை முதன்முதற் செய்தவர் இவர் அல்லவ ராயினும், இதில் அனுகூலமடைந்தவர் இவரே. 18-ம் நூற் ருண்டி னிறுதியளவிலே பலர் மிகப் பிரதானமான பல காரி யங்களைக் கண்டுபிடித்தார்கள். அது முதலாக, எண்ணிறந்த வேறு பல இயந்திரங்கள் புதிது புதிதாக அமைக்கப்படலாயின. ஆயிரக்கணக்கான இயந்திர நிபுணர்கள் அவற்றையெல்லாம் மேலும் மேலுந் திருத்தஞ்செய்து வந்தனர். இங்ஙனமாக நூதனம் நூதனமாக இயந்திரங்களை ஆக்குதலும், அவற்றை மேலும் மேலுந் திருத்தி யமைத்தலும் வரவரத் தீவிரமாக நடை பெற்றுக்கொண்டே யிருக்கின்றன. இந்த வேகம் குறையுங் காலம் எப்போது வருமோ வென, நாம் ஆச்சரியப்பட வேண் டியவராயிருக்கின்றோம். அவை ஏராளமானதால் பிரதான மான சிலவற்றைக் கூறுவதேயொழிய எல்லாவற்றையுங் கூற முடியாது.

கமச்செய்கையில் ஏற்பட்ட மாறுதல்கள். ஆரம்பத்திலே, புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரக் கருவிகள் பிரித்தா னியாவிற்குன் முதன் முதலாக உற்பத்தியாயின. ஆனால், இதற்கு முன்பாகவே, தொழில் முயற்சி எல்லாவற்றுள்ளும் மிகச்சிறந்ததென்று அக்காலத்து மதிக்கப்பட்டிருந்த கமத் தொழில் முறையில் திருத்தங்கள் பல ஏற்படலாயின. இதில் வழிகாட்டிகளாயிருந்தவர் டச்சர். 18-ம் நூற்ருண்டின் முற் பகுதியிலே ஆங்கிலேயரும் இத்துறையில் பல நன் முயற்சிகள் செய்தனர். உழுதல், விதைத்தல், சதுப்புநில நீரை வற்றச் செய்தல் ஆதியனவற்றில் பல புதுமுறைகள் ரல் என்னும் விவசாயியினால் போதிக்கப்பட்டன. கால்நடைகளுக்கு முன்

னிலுஞ் சிறந்த உணவு அளித்தற்காகச் சீமை முள்ளங்கி, புல் வகைகள் என்பன புதிதாகப் பயிரிடப்பட்டன. முன்னிலுமதிக மான இறைச்சி யளிக்கும்படி ஆடுமாடுகள் நல்லினங்களாக ரொமஸ் பேக்வெல் என்பவரால் விருத்தி செய்யப்பட்டன. இதன்பின், நீராவிக் கலப்பை, கதிரடிக்கும் இயந்திரம், இவை போன்ற புதிய இயந்திரங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. இவ் வியந்திரங்களைக் கொண்டு செலுத்திப் பெரு முன்னேற்றமேற் பட்டது அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கனடாவிலும் உள்ள பரந்த பெரும் வயல்வெளிகளிலேயாகும். இதனாலே பல நூற் றுக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமான வயல் நிலத்தை உழு தும் அருவி வெட்டியும் முடித்தல் சாத்தியமாயிற்று. அதன் பயனாக, அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் விரைவாகப் பல் கிப் பெருகிவரும் பெருந்தொகையான குடிசனங்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதாயிற்று. இப்போது உலக மெங் கும் தொழிற்சாலையாட்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை விளைவிப்பதில் மாந்தர் ஈடுபட்டுழைக்கின்றனர். உணவுகளைத் தகரங்களிலடைப்பதும், பனிக்கட்டியிலிட்டு வைப்பதும் கண்டு பிடிக்கப்பட்டமை அவற்றை நெடுங் காலத் துக்கு அழிவின்றி வைத்திருக்கவும், நெடுந்தூரத்திலுள்ள இடங்கட்குக் கொண்டுபோகவும் சாத்தியமாக்குகின்றது. உதா ரணமாக, உஷ்ணப் பிரதேசங்களிற் பயிராகும் கொப்பரு வேறு நாடுகளுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே செயற்கை வெண்ணெயாக மாற்றப்பட்டு உலகமெங்கும் அனுப்பப்படு கின்றது.

கைத்தொழிற்கான இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட் டமை. கைத்தொழிலைப் பற்றின வகையில் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட மிக முக்கியமான இயந்திரங்கள், பருத்திப் புடவைகளையும் கம்பள வஸ்திரங்களையும் நெய்தற்காக அமைக் கப்பட்டவையேயாம். ஹாகிறீவ்ஸ் 'நூல் நூற்கும் ஜென்னி' என்ற இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். நீரால் இயங்கும் ருட் டையை கண்டுபிடிக்கப் பெரிதுங்காரணமாக விருந்தவர் ஆக் றைற். 'மியூல்' என்னும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் குரொம்ரன். மிக மெல்லிய நயமான நூல்களை அதிகமாக

நூற்க இந்தப் புதிய இயந்திரங்களுதவின. நீரினுலியக்கப்படும் ஒரு நெசவு யந்திரம் காட்டறைற் என்னும் போதகூரால் புதி தாய்க் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வியந்திரங்களே மேன்மேலுந் திருத்திப் புதுக்கியதினுலே இங்கிலாந்தின் வடபாகம், பருத்திச் சீலே, கம்பளச்சீலேகளே யுண்டாக்குவதில் உலகத்திலே மிகப் பிரதானமான நாடாயது. நீராவி யந்திரம் கண்டுபிடிக்கப்பட் டமை இதனிலும் பார்க்க விசேடமான நன்மையை உலகத்துக் குப் பயப்பதாயிற்று. இதன் இயங்கக்கூடிய 'மாதிரி' இயந் திரம் ஜேம்ஸ் உவாட்டினுல் முதன் முதலாகச் செய்யப்பட்டது. வேலே செய்யக்கூடிய நீராவி யந்திரம் ஒன்றை முன்மாதிரியாக ஜேம்ஸ் உவாட் என்பவனே முதன் முதலாகச் செய்தான்; பஞ்சாலே யந்திரங்களே ஓட்டுதற்கு நீராவி உபயோகிக்கப் பட்டது.

இயந்திரங்களே இயக்குஞ் சக்தியைப் பெறுதற்கான புதிய வழிகள். நீராவியினு லியங்கு மியந்திரங்களுக்கு, நீரைச் சூடாக்க நிலக்கரியும், இயந்திரத்தைச் செய்தற்கேற்ற பொரு ளான இரும்பும் அத்தியாவசியமானவை. வட இங்கிலாந்தில்



நூல்நூற்கும் ராட்டினம்.

பெரிய நிலக்கரிப்படலங்களும், இரும்பு கலந்த மண் படலங் களும் அடுத்தடுத்திருக்கப் பெற்றது மிக வாய்ப்பாயிற்று. சுரங்கங்களிலிருந்து இவற்றை வெட்டி யெடுத்தற்கு முன் னிலும் சிறப்பான முறைகள் கைக் கொள்ளப்பட்டன. இதற்



இக்காலத்து நூல் நூற்கும் இயந்திரம்

குத் தேவையான இரும்பை யுண்டாக்குவதில் பல்வகைச் சீர் திருத்தங்கள் செய்யப்பட்டன. 19-ம் நூற்றாண்டில் உருக்கே இரும்புக்குப் பதிலாகப் பெரிது முபயோகிக்கப்பட்டது. அதே காலத்தில் இரும்பை உருக்காக்கும் முறை பெஸெமர் என்ற ஆங்கிலேயராலும், இங்கிலாந்திற் குடியேறிய சீமென்ஸ் என்ற ஜெர்மானியராலுங் கண்டுபிடிக்கப்பட்டது. இயந்திரங்கள் செய்தலே பிரித்தானியாவிற்குரிய ஒரு பெரிய கைத்தொழி லாகியது; இயந்திரங்களே உருவாக்குவோர் முயற்சித்து, இயந் திரத்தின் பாகங்களே அதிநுட்பமாக ஆக்கிக் கொள்வதெப்படி என்று ஆராய்ந்தறிந்தார்கள். அயல் நாடுகளுக்குப் பெருந் தொகையான இயந்திரங்க ளேற்றுமதி செய்யப்பட்டன.

இங்ஙனம், ஏனைய நாடுகள் எவற்றினும் பார்க்கப் பிரித் தானியா மிக முன்னதாகவே கைத்தொழில் முறையிலிறங்கி, 19-ம் நூற்றாண்டிலே உலகமுழுதிலும் பெரிய கைத்தொழில்

நாடாகத் தலைமை பூண்டு விளங்கியது. ஆனால், இதன் பின்னர், மற்றநாடுகள், பிரதானமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஜெர்மனியும், வெகு அண்மையில் சோவியெற் நாடும், தொழில் முன்னேற்றத்தில் பிரித்தானியாவுக்கு நிகராகவோ அல்லது வென்றேவிட்டது எனலாம். இயந்திரங்களை யியக்க வுதவும் வேறு பொருள்கள், சிறப்பாக மின்சாரம், எண்ணெய், அணுவைப் பிளப்பதனல் பெறப்படும் அபாரமான அணுசக்தி என்பன கண்டுபிடிக்கப்பட்டன. நீரின் சக்தியினல் மின்சார முண்டாக்குதல் சிறந்தவொரு வழியாகும். சுவிட்சர்லாந்து, வட இத்தாலி போன்ற நாடுகள் இவ்வகை மின்சார முண்டாக்க இயற்கை வசதிகள் பெற்றுள்ளன. மண்ணெண்ணெய் யூற்றுக் கிணறுகளுக்காக, மாந்தர் உலக முழுவதும் ஆராய்ந்து தேடுகின்றனர். இயற்கையான மண்ணெண்ணெ யூற்றுக்கள் கிடைக்கப்பெற்ற நாடெதற்கும் அவ்வெண்ணெய் ஒரு பெரிய விலையேறப்பெற்ற ஆஸ்தியாகும். இன்று கொம்முனிஸ்ட் நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகள் அத்தனையிலும் உள்ள எண்ணெய்க் கிணறுகள் யாவும் அமெரிக்க அல்லது பிரித்தானிய கம்பனிகளின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கின்றன.

அணுசக்தி வெகு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. தொழில்முறைப் பாவிப்புக்கும் வெகு அண்மையில்தான் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய நாடுகள் அணுசக்தியின் பயங்கர ஆற்றலை ஒருவருக்கொருவர் எதிராக உபயோகிக்காது, சமாதான வழிகளில் உபயோகிப்பார்களானல், இயந்திரங்களை இயக்குவதிலும் பிற வழிகளிலும் அணுசக்தி உண்டாக்கக் கூடிய முன்னேற்றம் எல்லை இல்லாததாகும். ஆனால் இச்சக்தியை நாடுகள் யுத்தமுறையில் உபயோகிப்பார்களானல், சடுதியான, பயங்கரமான முடிவுக்கு உலகம் முழுவதையும் இலகுவாகக் கொண்டுவர முடியும்.

இம்மாறுதல்கள் காரணமாக சனசமுதாயத்தில் நேர்ந்த பயன்கள் :—நாட்டிற் பெரும்பான்மையோர் கமத்தொழில் வாழ்க்கை முறையை விட்டுக் கைத்தொழில் வாழ்க்கையிலீடுபடின், அப்போது பெருங்குழப்பம் ஒன்று ஏற்படுமென்பது திண்ணம். இக்குழப்பம் தனி மனிதர்களை மாத்திரமன்றி, மக்க

ளுள் முழு வகுப்பினரையும் பாதிக்குமியல்பினது. இந்த மாற்றங்கள் அதி விரைவாய் நிகழ்ந்த அக்காலத்திலேயே நெப்போலியனுக்கு எதிராக நீண்ட போர் நடத்தியமையால், இக்குழப்பங்கள் பிரதானமாகப் பிரித்தானியாவில் அதிகமிருந்தன. தொழிலாளிகள், முன்போலத் தங்கள் தங்கள் வீட்டிலாவது, சிறு தொழிற்கூடங்களிலாவது பொருட்களை ஆக்குவதை விட்டு, ஒரு பெரிய ஆலையிலாவது கைத்தொழிற்சாலையிலாவது ஒன்றுகக் கூடி வேலை செய்தனர். ஆரம்பத்தில் இயந்திரங்களை நீரிஞலியக்க வேண்டியிருந்தமையினுல் இவ்வாலைகள் முதலில் ஆற்றங்கரைகளி லமைக்கப்பட்டன. ஆனுல் நீராவி யுபயோகத்துக்கு வந்தபின்னர், ஆலைகளைப் பட்டணங்களிலமைப்பது வசதியாக இருந்தது. எனவே, பெரிய பட்டணங்கள் புதிதாகத்தோன்றின. இவற்றில் ஏற்ற ஒழுங்கு, அரசாட்சிமுறை, தொழிலாளிகளின் உடனலத்துக்கேற்ற ஏற்பாடு என்பன இல்லாதிருந்தன. இயந்திரங்களை இலகுவிற் கவனிக்க்கூடிய தொழிலாளிகளில் அநேகர் பெண்மக்களும் குழந்தைகளும் ஆவர். அவர்களுடைய வேதனம் அநேகமாய் உழைப்புக்குப் போதியதன்று. அவர்கள் அளவுக்கு மிஞ்சி வெகு நேரம் வேலை செய்யும்படி கடுமையாய் நெருக்கப்பட்டார்கள். தோட்டங்களில் வேலை செய்யும் அடிமைகளினும் பார்க்க மிக இழிவாய் நடத்தப்பட்டார்கள். அதோடு, அவர்கள் சுகாதார முறைக்கிணங்காத சூழ்நிலையில் சீவித்தும் வேலை செய்தும் வந்தனர். எனினும் சென்ற நூற்றுண்டின் 20-ம் வருடங்களின் பின் நல்லவர் பலர் அவர்களின் வாழ்க்கை நிலைமையைச் சீர்ப்படுத்த முயன்றனர். அன்றியும் தொழிலாளர் தாமே தம் நிலையைச் செம்மையாக்க தொழிற்சங்கங்களிற் சேர்ந்தார்கள். அவர்கள் இம்முயற்சியில் சித்தியடைந்தது வருகிற அத்தியாயம் ஒன்றில் கூறப்படும். பெரும் தொழில் ஸ்தாபனங்களை நிறுவி நடத்துவதற்கு பணம் தருவோருக்கும், அதாவது திறமையுள்ள, திறமையற்ற தொழிலாளர்களை ஆலைகள், சுரங்கங்கள், கந்தோருகள், கடைகள் முதலிய இடங்களில் வேலைக்கு வைத்திருப்போருக்கும், தொழிலாளிகளுக்கும் இடையில் பெரும் பிளவுக்குக் காரணம், முதலாளிகளின் தன்மையே.

தொழில் புரட்சியின் ஆரம்ப நாட்களில் பெரும்பாலான முதலாளிகள் தனிப்பட்டவர்களே. இவர்களில் சிலர் தொழிலாளிகளாக இருந்து உயர்ந்தவர்கள். ஆனல் காலப்போக்கில் சிறப்பாக இந்நூற்றாண்டில், நூறு, ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் வேலைசெய்யும் தொழில் நிலையங்கள், கம்பனிகளாலும், கூட்டுறவு இயக்கங்களாலும் நடத்தப்பட வேண்டியனவாயிற்று. இவைகளை உண்டாக்கி நடத்தவேண்டிய பணம், பலரால் தாங்கள் சேமித்த பணத்தில் பங்குப்பணமாகத் தரப்படுகிறது. இது பொருள் முதலீடு — அதாவது, பணத்தைக் கடனுகக் கொடுத்தல். ஸ்தாபனத்தை நடாத்தும் பொறுப்பு, வேதனம் பெறும் டரக்டர்களுக்கும், மாதச் சம்பளம் பெறும் முகாமைக்காரர்களுக்குங் கொடுக்கப்படுகிறது. கம்பனி லாபகரமாக நடந்தால் பங்குக்காரர்கள் கம்பனி லாபத்தில், தங்கள் பங்குப்பணத்திற்கு வட்டி பெறுவார்கள். கம்பனி லாபம் காட்டாவிட்டால் தங்கள் பங்குப்பணத்திற்காக யாதும் பெறமாட்டார்கள். கம்பனி நட்டப்படுமானல் தங்கள் பணம் முழுவதையும் அல்லது ஒரு பகுதியை இழப்பார்கள். இன்று, 'முதலீடு' செய்யப்படும் பணத்தில் பெரும் பகுதி, வங்கிகளாலும், வேறு பணம் உதவக்கூடிய கம்பனிகளாலும் தரப்படுகிறது. மக்கள் தம் சேமிப்புப் பணத்தையும், இன்சுவறன்ஸ் முதலிய கம்பனிகள் தம் பணத்தையும் அங்கு போடுவதனல், வங்கிகள் பெரும் பணம் பெற்று முதலீடு செய்யக்கூடியனவாயிருக்கின்றன.

இக்காலத்தில் சில நாடுகளில், ஒரு சில பெரும் தொழில் ஸ்தாபனங்கள் அரசாங்கத்தாரால் நடாத்தப்படுகின்றன. இவைகள் அரசாங்க ஸ்தாபனங்கள் என்றும் நாட்டுச் சொத்து என்றும் கருதப்படுகின்றன. பிரித்தானியாவில் நிலக்கரிச் சுரங்கங்களும், மின்சார சக்தி வினியோகமும் அரசாங்க ஸ்தாபனங்களாகிவிட்டன. பிற தேசங்களில் முதலாவதாக, ருஷ்யா அல்லது சோவியெற் ஐக்கிய நாடுகள் என்று வழங்கப்படும் ஐக்கிய சோவியெற் சோஷலிஸ்ட் குடியரசு நாடுகளில், பெரும் தொழில் ஸ்தாபனங்களை அரசாங்கமே சொந்தமாக நடாத்தி வருகின்றது.

போக்குவரவுச் சாதனங்கள். மிக முக்கியமான ஒரு காரியத்திலே பெரு முன்னேற்ற மேற்பட்டுள்ளது. இது யாதெனில், பொருட்களும் ஆட்களும் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு இலகுவாகவும் விரைவாகவும் கொண்டுபோகப்படுவதாம். இதனையே **போக்குவரவு வசதி** யென்பர். மூலப்பொருட்களைச் செப்பஞ்செய்து உபயோகத்துக்கேற்ற பண்டங்களாகத் தொழிற்படுத்துவதற்கு அவற்றை உலகினெல்லாப் பாகங்களிலிருந்தும் தொழிற்சாலைகளுக்குக் கொண்டு வரவேண்டும். தொழிற்பட்ட பண்டங்களைத் தொழிற்சாலையிலிருந்து அவற்றைத் தேவைப்படுவோர் இருக்குமிடங்களுக்குக் கொண்டு போக வேண்டும். பண்டைக் காலத்திலே பண்டங்களைப் போக்குவரத்துச் செய்வதற்கு ஒரேயொரு சாதனந்தானிருந்தது. அது, வண்டிகளிலோ அல்லது பொதி மிருகங்கள் மீதோ அவற்றையிட்டுச் செப்பமற்ற பாதையாகிய புல்நிலத்துச் சுவடு வழியாகக் கொண்டுபோதலாம். பண்டை ரோமர் அமைத்த வீதிகள் மாத்திரம் நெடுநாள் உபயோகத்திற்கு ஏற்றவை. ஆறு, கடல் என்பவை மூலமாயும் சிறு தோணிகளிலும் வள்ளங்களிலும் போக்குவரத்து நடந்தது.

வீதிகளும் கால்வாய்களும். 18-ம் நூற்றாண்டு முடியுமளவிலே பிரான்சிலே பல தெருக்கள் நன்கமைக்கப்பட்டன; இங்கிலாந்திலும், தெருக்கள் பலவழிகளிற் திருத்தப்பட்டன. யோன் மெட்கால் குருடராயிருந்த போதிலும் இங்கிலாந்தின் வடபகுதியிலுள்ள தெருக்களை பெரிதும் சீராக்கினர். ரெல்போட் பாலங்களை அமைத்தார். பரற்கற்களையும் மண்ணையுமிட்டுச் செப்பமாய்த் தெருவமைக்கும் இக்காலப் பழக்கம் முதன்முதலாக மக்கடம் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. சீக்கிரத்திலே, இத்தெருக்கள் வழியாகத் தபால் வண்டிகள் மிக விரைவாக ஓடத்தொடங்கின. நூற்றுக்கணக்கான பொதிவண்டிகள் புதிய தொழிற்சாலைப் பொருள்களை ஏற்றிக்கொண்டு சென்றன. பாரமான சுமைகள் வள்ளங்களிலேற்றப்பட்டுக் கால்வாய்கள் வழியாகக் கொண்டு போகப்பட்டன. சீக்கிரத்தில் இங்கிலாந்திலே கால்வாய்கள் குறுக்கு நெடுக்குமாக வலைப்பின்னல் போன்று அமைக்கப்பட்டன.



ஜார்ஜ் ஸ்திவன்சன் நிருமாணித்த "ரொக்கெட்" நீராவி யியக்க வண்டி.

இக்காலத்துப் புகைரத வண்டி

இவற்றை அமைப்பதில் படிப்பில்லாத பிறின்ட்லியாலும் பிறராலும் சிறந்த பொறியியற் சாதனைகள் செய்யப்பட்டன. தற்போது பெருந் தொழிலாக விளங்கும் பெறியியற் கலையை முதன்முதல் ஆரம்பித்தவர்கள் இவர்கள் போன்றவர்களே. உலகமெங்கும் பாலங்களும் தெருக்களுங் காணப்படாத விடங்களிலெல்லாம் இவர்களைப் போன்றவர்கள் அவற்றை யமைத்தார்கள். இந்தியாவிலும் பிரித்தானிய சாம்ராச்சியத்திலுள்ள குடியேற்ற நாடுகளிலும் இவர்கள் பகிரங்க வேலை இலாக்காக்களில் சேர்ந்து பெரும்பாலும் வியக்கத்தக்க பொறியியற் சாதனைகளைச் செய்துள்ளார்கள்.

புகைரத வீதிகள். தபால் வண்டிகள், பொதி வண்டிகள், கால்வாய் வழியாய்ச் செல்லும் படகுகள் ஆதியன தேவையின்றிக் குறைந்து போகும்படியாக, சாமான் பெட்டிகளையும், பிரயாணிகள் ஏறிய வண்டிகளையும் நீராவியந்திரம் இழுத்துச் செல்வதாகிய புகைரதம் போக்குவரவுக்குப் புதிய ஒரு சாதகமாகத் தோற்றியது. இதற்கு முன்னரே, அறிவாளிக்கள் சிலர், தண்டவாளம், இருப்புப்பாதை என்பவை அமைத்துச் சோதனை செய்துவந்தனர். இப்பாதைகளில் நன்ருயோடக்கூடிய நீராவி யந்திரம் ஒன்றை 1830-ம் ஆண்டிலே ஜோஜ் ஸ்தீவன்சன் என்பவர் முதன்முதல் செய்து உலகுக்குக் காட்டினர். அவ்வாண்டிலே அவர் நிருமாணித்த "ரொக்கட்" என்னும் யந்திரவண்டி மணி யொன்றுக்கு முப்பது மைல் வீதமாக மாந்தர் அதுவரையிற் கேட்டுமிராத அத்துணை வேகத்துடனோடி, பிரசித்த பந்தயத்திற் பரிசு பெற்றது. அது முதலாக, புகைரத வீதிகள் அதிசயிக்கத்தக்கவிதமாக உலகத்திற் பல்வேறிடங்களி லமைக்கப்பட்டன. வட அமெரிக்காவில் நாகரிகம் மேற்குப் பகுதியை நோக்கிப் பரவிச் சென்றதற்கு மூல காரணம் புகைரத வீதியேயாம். இதன் மூலமாகத்தான், சனநெருக்கமுள்ள ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளியேறி வந்த தொகையான குடியேற்றக்காரரால் வட அமெரிக்காவின் பரந்த பிரதேசங்களை நிரப்புதல் சாத்தியமாயிற்று.

நீராவிக் கப்பல்கள். இதற்கு முன்பே, நீராவியந்திரத்தினால் இயக்குவிக்கும் முறை கப்பல்களோடச் செய்வதிலு

முபயோகிக்கப்பட்டது. நீராவியா லியக்கப்படும் கப்பலும், சமீபகாலத்தி லேற்பட்ட எண்ணெயினு லியக்கப்பெறும் கப்பலும் பழைய பாய்க்கப்பலைப் படிப்படியாக நீக்கிவிட்டன. இக்காலத்தில், பிரயாணிகளை ஏற்றிச்செல்லுங் கப்பல், பாய்க் கப்பலினும் பார்க்க அபாயமற்றதும் கூடின விரைவுடனேடக் கூடியதும் நம்பிக்கையுடன் பயணஞ் செய்யத்தக்கதும் ஆகும். இன்று பாய்க்கப்பல்கள் சாமான் ஏற்றவும் உல்லாச பிரயாணத் திற்கும் உபயோகப்படுகின்றன. சாமான் ஏற்றும் கப்பல் களிலும் அநேகம் நீராவியினுல் அல்லது எண்ணெயினுல் இயக்கப்படுவனவாம். சண்டைக் கப்பல்களை இயக்க நீராவி தான் சிறந்ததென்று விரைவில் அறியப்பட்டது. மேலும் கப்பல்கள் மரத்தினுலன்றி இரும்பினுலும் செய்யப்படலாயின. அவை இரும்பினுலுஞ் செய்யப்படலா மென்று முதலிற் சொன்ன போது அதை வெறும் மூடத்தன மென்று சனங்கள் கருதினர்கள். நீராவிக் கப்பல்களும் இரும்புக் கப்பல்களும் முதன் முதலாகப் பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலுந்தான் செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்டன.

மோட்டார்களும், ஆகாய விமானங்களும். இருபதாம் நூற்றுண்டினாரம்பத்துக்குச் சற்று முன்பே இயந்திரங்களை யியக்கும் இன்னெரு சக்தி புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டது. இது "உள்ளெரி எஞ்சின் (யந்திரம்)" எனப்படும்; அதாவது, பெற்ரோலியம் போன்ற சில எண்ணெய்கள் வாயுவாக மாறும்போதேற்படும் வெடிக்குஞ் சக்தியால் ஓட்டப்பெறும் "யந்திரம்" என்றறிக. இவ்வித யந்திரம் பலவகைகளி லுபயோகப்படும்; கப்பல்களை இயக்க மேலும் மேலும் நீராவிக் குப்பதிலாக எண்ணெய் உபயோகிக்கப்படுகிறது. நீர்மூழ்கி கள் எண்ணெயில் இயங்குவதால் கடலுக்குக் கீழே ஓடக்கூடிய தாயிருக்கிறது. மிகப் பிரதான உபயோகம், நிலத்திற் செல்லும் மோட்டார் வண்டிகள், 'பஸ்'கள், சாமான் வண்டி (லொறி) கள் ஆதியவற்றையும் ஆகாயத்திற் பறக்கும் வானூர்திகளையும் ஓட்டுவதாகும். 1896-ம் ஆண்டிலே ஜெர்மானியனை டேம்லர் ஆல் பெட்ரோல் யந்திரமும் மோட்டார் வண்டியும் நிருமாணிக்கப்பட்டன. இ த ற் கு

ஏழாண்டுகளுக்குப் பின், உவில்பர் றைட் என்னும் அமெரிக்கன் ஆகாயவிமானத்திற் பறப்பதில் முதன் முதலாகச் சித்தி பெற்றான். இதனால் ஏற்பட்ட பலவாய மாற்றங்களும் உலகத்து மனிதர்களுக்குப் பழக்கமாய் விட்டன. 1939-ஆம் ஆண்டிலேயே மோட்டார் வண்டிகளே ஓட்டுவதும் ஆகாயத்திற் பறப்பதும் சாதாரணமாய் விட்டன. அக்காலம் தொடங்கி யந்திர சாதனங்களாலும் ஆகாய விமானங்களாலும் யுத்த முறைகளிலேயே ஒரு புரட்சி ஏற்பட்டதுமல்லாமல், முன்னேற்றமும், பெருக்கமும் உண்டாகி இருக்கின்றன.

தந்தி, ரெலிபோன், கம்பியில்லாத்தந்தி. மின்சாரத்தினுபயோகத்தினால் மக்கள் ஒருவரோ டொருவர் தூரமான இடங்களிலிருந்து மிகச் சொற்பநேரத்தில் பேசி, செய்தியறிந்துகொள்ள உதவும் கருவிகளே, மனிதன் கண்டு பிடித்த புதுமைகளுள் மிக அதிசயமானவை என்னலாம். 1840-49-ம் ஆண்டுகளிலே மின் (சாரத்) தந்தி கண்டுபிடிக்கப்புட்டது; பின்னர், அதற்கெனச் சிறப்பாக அமைக்கப்பட்ட தந்திக் கம்பி வடங்கள் கடலிலிடப்பட்டன. இவற்றின் மூலமாக ஒரு கண்டத்தில் வதிவோர் இன்னொரு கண்டத்திலுள்ளவர்களுக்கு விரைவிற் செய்தி யனுப்புதல் கூடும். அடுத்தபடியாக, கம்பிகளின் வழியாய் மனிதரின் பேச்சைச் செலுத்தக்கூடிய ரெலிபோன் அமைக்கப்பட்டது. பிரித்தானியாவில் உவீற்ஸ்டனும், அமெரிக்காவில் மோர்சும், அதே காலத்தில் மின்சாரத் தந்தியைக் கண்டு பிடித்தார்கள். முப்பது வருஷத்திற்குப் பின்பு அமெரிக்காவில் வாழ்ந்த பெல் என்ற ஸ்கொத்லாந்தியர் ரெலிபோனைக் கண்டு பிடித்தார். 19-ம் நூற்றாண்டி னிறுதியிலே மார்க்கொனி யென்னு மித்தாலியன் கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்தான். மனிதக்குரல் ஒலியையும் வேறு ஒலிகளையும் இது மூலமாகப் பரப்புதலுங் கூடுமென்பது வெகு சமீபகாலத்தில் கண்டுபிடிக்கப் பட்டது; இதனாலே, உபந்நியாசக ரொருவர் ஓரிடத்திலிருந்தவாறே பல மைல் தூரத்திலுள்ள ஆயிரம் அல்லது இலட்சக்கணக்கான மாந்தர் கேட்குமாறு பிரசங்கஞ் செய்தலியலுகின்றது. சில இடங்களில், தூர

தரிசினி மூலமாய் உண்மையாக அவரை ஒரு திரையிற் காணக்கூடியதாயு மிருக்கின்றது.

மாறுதல்களின் பயன்கள் சில. இதுகாறும் விவரித்த வழி வகைகள் எல்லாவற்றுலும் பல நாட்டு மக்களும் முன்னரிலும் பார்க்க மிக நெருங்கின வகையில், அவர்கள் விரும்பினுலென் விரும்பாவிட்டாலென், ஒருவரோடொருவர் தொடர்பு படுத்தப்பட்டனர். ஒரேவிதமான சீவியத்தை நடாத்தவும், ஒருவரைப்பற்றி மற்றவர் படித்தறியவும், ஒருவர் மற்றவரது படங்களைப் பார்க்கவும், பொதுவாய் ஒருவரோடொருவர் பழகி மேலும் அறியவும் வாய்ப்பு மிகுந்தவராய் இருக்கின்றனர். இவைகளே கைத்தொழிற் புரட்சியின் பயன்களாகும். இவைகளால் பற்பல சாகியத்தினரிடமும் வெவ்வேறு சாதியினரிடமும் கூடுதலான நட்பும் கூட்டுறவுந் தோன்றுமென்று புலனுகின்றது. இதுவே நாகரிகம் படைத்த மக்கள் யாவரும் குறிக்கோளாகக் கொள்ளவேண்டியதாகும் என்பதற்கு ஐயமில்லை. எனினும், புதிய புதிய காரியங்களைக் கண்டு பிடித்ததனுல் முழுவதும் நன்மைதான் வந்தடைந்ததென்று கூறுவதற்கில்லை. இப்புதிய சக்திகளும் புதிய யந்திரங்களும் அழிவுக்குரிய கருவிகளை உண்டாக்குவதற்கும் உதவுவவாயின. விஞ்ஞான சாத்திர அறிவின் பயனைப் பெறக்கூடிய உபாயங்களெல்லாம் மக்கள் ஒருவரை யொருவர் மிக எளிதிற்கொன்று தொலைப்பதாகிய கொலைக் கருவிகள் கண்டு பிடிப்பதில் உபயோகப்படுவனவாயின என்பதை இரண்டு உலகயுத்தங்களிலும் கண்டோம். நூற்றுக்கணக்கான மைல் தூரத்தையெல்லாம் சில நாட்களுக்குள்ளேயே படைகள் கடந்து முன்னேறிச் செல்லக்கூடும். கிராமங்கள், பட்டினங்கள், நகரங்கள் யாவும் சில மணித்தியாலயங்களுக் கிடையிலேயே அழித்தொழிக்கப்படலாம். அல்லாமலும், பயங்கரமான ஜலவாயுக்குண்டினுல் சில வினுடிகளிலே அழிக்கப் படவுங்கூடும்.

கைத்தொழிற் புரட்சி மாந்தரின் வாழ்க்கையைப் பெரிதும் மாற்றியதென்பது தெளிவு. ஆனுல், சில நாடுகள் வேறு சில நாடுகளிலும் பார்க்கக்கூடிய அளவுக்கு மாற்றமடைந்தன

வென்பது உண்மை. சிறப்பாக இப் புரட்சி முதன்முதலாகப் பிரித்தானியாவிலே தோன்றியதினாலே, அந்நாடு மற்றைய நாடுகளிலும் பார்க்க வெகு துரிதமாக "கைத்தொழிலாக்கம்" பெறக்கூடியதாயிருந்தது. ஆனால், இந்தக் "கைத்தொழிலாக்க" முயற்சி உலகமெங்குமே பரவிவிட்டது. தற்காலத்திலே தொழிற்சாலைகளுள்ள பெரிய நாடுகள் பலவுள. இவற்றுட் பெரும்பாலானவை உணவுப் பொருட்களையோ மூலப்பொருட் களையோ உண்டு பண்ணியவைகளாயும் இப்பொழுதும் உண்டு பண்ணுபவைகளாயும் திகழ்வதுடன் செழித்தோங்கி வளரும் தொழில்களையும் பெற்றுள்ளன. எனினும், தனக்குத் தேவை யான பொருட்களையெல்லாம் தானாகவே உண்டாக்கிக் கொள்ள எந்த நாட்டுக்கும் இயலாது. மற்று அநேகமாய் எல்லா நாடுகளும் ஏனைய நாடுகளுடன் வியாபாரஞ் செய்யப் பேராவல் கொண்டுள்ளன. இந்நாடுகளையெல்லாம் சமாதான மாக வியாபாரஞ் செய்யும்படி விட்டால் ஒவ்வொரு நாடும் தனக்குத் தனக்குத் தேவையானவற்றையெல்லாம் இவ்வழியிற் பெற்றுக்கொள்ளலாம். பெரும் போர் மிகக்கேடு விளைக்கும் சம்பவமாவதற்கு இது ஒரு காரணமாகும். பொருட்களை உற் பத்தியாக்குவோர் யுத்தத்துக்கு வேண்டிய பொருட்களை ஆக்கிக் கொடுப்பதிலே கண்ணுங் கருத்துமாயிருப்பர். எனவே, தாம் உண்டும் உபயோகித்தும் வந்த உணவுப் பொருள்களும் பிற பண்டங்களும் பெற்றுக் கொள்ள முடி யாது. சக்தியால் இயக்கப்படும் எந்திரங்களின் பயனை சகல மக்களினது வாழ்க்கையும் — அவர்கள் விரும்பினாலென், விரும்பாவிட்டாலென் — திட்டமாக மாற்றிக்கொண்டு வரு கிறது. நன்மைக்கோ தீமைக்கோ கைத்தொழிற் புரட்சி உலகத்தில் மாறுதல்களை விளைவித்துக்கொண்டேயிருக்கின்றது. இரண்டாவது உலகப் பெரும் போரிலிருந்து சிறுகச் சிறுகத் தலை தூக்கி வரும் இக்கால சந்ததியாரும், வரவிருக்கும் பிற் கால சந்ததியாரும் அது நன்மைக்கே எனக் கொள்ள வேண்டும்; அல்லாவிடில், சரித்திரம் தொடங்கிய காலந் தொட்டு நடைபெற்ற சம்பவங்களுள் அதுவே மிகக் கேடு விளைத்ததொன்றுகக் கருதப்படவேண்டும்.

உதவிக் குறிப்புக்கள்

கைத்தொழில்களிலும் போக்கு வரவுக்கான சாதனங்களிலும் இப்புத்தகத்தில் கூறப்படும் ஒன்றரை நூற்றாண்டுகளாக, உண்டான மாற்றங்கள் சிலவற்றை கூறி, அவற்றாலேற்பட்ட பலாபலன்களை மதிப்பிடுவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும். சீவியத்துக்கு இன்றியமையாத பொருட்களை உண்டாக்குவதற்கும் அவற்றைப் பல்வேறிடங்களுக்குக் கொண்டு போவதற்குமான வழிவகைகளைச் சீர்திருத்தியமைக்க, சாஸ்திரீய முறைகளைப் பின்பற்றினதினால் ஏற்பட்ட பயன்களே இம்மாற்றங்களாகுமென்க. இவற்றினாலே சாதாரண மக்களின் சுகநிலைமையும் நாகரிகமும் மிக மேம்பட்டன; ஆனால், சில தீமைகளும்—விசேடமாகப் பட்டண வாழ்க்கையிலும், முன்னிலும் திறமையுடன் நாசஞ்செய்யும் முறைகளிலும்—தோற்றின. இக்காலத்திலே, தொழில்களும் வியாபாரமும் பல நாட்டவருக்கும் உரிமையனவாகி உலகு முழுவதும் பரவின. எனவே, இது காறும் யாம் விவரித்த மாறுதல்கள், செயலளவில் உலகத்தினரனைவருக்கு முரியன என்பதை நாம் உணருதல் அவசியமாகும்.

சில பிரதான நிகழ்ச்சிகள்

1705. நியூகோமனது "நீராவியந்திரம்" (எஞ்சின்).
1733. கே என்பவனது "விசை நாடா".
1761. பிரிண்ட்லியின் "பிரிஜ்வாட்டர் கால்வாய்".
1765. ஹாகிறீவ்ஸின் நூல் நூற்குமியந்திரம்.
1776. வாட்-இன் நீராவியந்திரம்.
1779. குறேம்டனின் நூற்குமியந்திரம்.
1785. கார்ட்றைட்டின் நெசவு யந்திரம்.
1815. மக்கடமின் பாதை போடுமுறை.
1829. ஸ்தீவன்சனின் "ரொக்கெட்" புகைரத யந்திரம்.
1837. மின்சாரத் தந்தி.

1876. ரெலிபோன்

1885. உள்ளெரி யந்திரம்.

1895-7. மார்க்கொனியின் கம்பி யில்லாத் தந்தி.

1908. றைட் சகோதரர்கள் வெற்றிகரமாக ஆகாய விமானத்திற் பறந்தனர்.

4. ஐரோப்பியப் பெரும் போர்களும் அவற்றின் விளைவும்

எல்லைக் காப்பு. பிராஞ்சிய அரசியற் புரட்சியின் போது ஏனைய ஐரோப்பிய வல்லரசுகள் அதிற் தலையிட்டதையும், அவ்வாறு செய்தமை, "பயங்கர ஆட்சி" என்றழைக்கப்பட்ட கடுமையான இராணுவமுறை ஆட்சியைப் பிரான்சில் தோற்றுவித்ததையும் இரண்டாம் அத்தியாயத்திற் கண்டோம். இதன் பலனாக நேர்ந்த போர்கள் இருபத்து மூன்றாண்டு காலம் நடைபெற்றன. அக்காலத்து நிகழ்ச்சியின் போக்கும் சாரமும் எல்லாம் **நெப்போலியன் பொனப்பார்ட்** என்னும் மகா புருஷனைக் காரண கர்த்தாவாகக் கொண்டு விளங்குவனவாகும். உலக சரித்திரத்தில் இவனே மகா அதிசய பேர்வழி எனலாம்.

1792-ம் ஆண்டில் பிற நாட்டினர் பிரான்சின் மீது படையெடுத்தமை, பிரான்சிற் பெருந் தேசீயக்கிளர்ச்சியையும் உற்சாகத்தையு முண்டாக்கியது. படையெடுத்தோரைப் புறங்காட்டி யோடச் செய்தற்குப் போதுமான யுத்தவீரர் போர் முனைக்குச் சென்றனர். ஆனால் அதனுடன் ஆபத்து முடிவு பெறவில்லை. ஏனெனில், அடுத்த வாண்டில், பிரித்தானியா, ஸ்பெயின், ஒல்லாந்து என்பன ஆஸ்திரியாவுடனும் பிருஷ்யாவுடனும் சேர்ந்து கொண்டு மீண்டும் பிரான்சைத் தாக்கின. ஆனாற் பிராஞ்சியரோ பயந்தவராகக் காணப்படவில்லை. பதிலாக, தங்கள் புரட்சிக் கருத்துக்களை தம்புகை நாடுகளிற் பரப்புவதுமன்றி "சுதந்திரம் தேடிய எந் நாட்டவருக்கும் உதவி புரிய"த் தீர்மானித்தனர். திடகாத்திரம் பொருந்திய எந்த ஆண்

மகனும் யுத்த சேவை புரியவேண்டுமெனப் பொதுசனச் சேமநிருவாக சபையினர் ஒரு கட்டளை பிறப்பித்தனர். முதன் முதல் இச்சபைக்கு ஊக்கங் கொடுத்தவர் டான்தன். 750,000 ஆட்கள் கொண்ட படையொன்று திரட்டப்பட்டு அதன் அமைப்பு ஆற்றல் மிகுந்த கார்னே என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் இவ்வீரர்களை மிக்க சாதுரியத்துடன் பயிற்றி ஆயுத பாணிகளாக்கினர். இவர்களின் யுத்த முறைகள் எதிரிகளின் முறைகளிலும் பார்க்க மிகவும் சிறந்தவை. சமர் செய்த நாடுகளியே தமக்கு வேண்டியவைகளை யெல்லாம் பெற்றனர். இளவயதினரான படைத்தலைவர்கள் நியமிக்கப்பட்டனர்; அவர்களிற் பல அசகாய சூரர்களாக விளங்கினர்; பிழை செய்த சேனாதிபதிகள் தலைவாங்கப் படுவரென்னும் அச்சமுமிருந்தது. இவற்றின் பயனாக, பிரான்சின்மேற் படையெடுத்து வந்த சேனைகள் துரத்தப்பட்டன. பிரான்சிய எல்லையைப் பிரான்சிய படைகள் கடந்து ஒல்லாந்தையும், றைன் நதிக்கு மேற்கிருந்த ஜெர்மானியப் பகுதியையும் பிடித்தன. அந்தப் பிரதேசம் **''பத்தேவியக் குடியரசு''** என்னும் புதுப் பெயருடன் ஒரு குடியரசு நாடாக்கப்பட்டது. இங்ஙிகழ்ச்சிகளின் பயனாகப் பிரித்தானியா, டச்சுக் குடியேற்ற நாடுகளான நன்னம்பிக்கைமுனை நாட்டையும் இலங்கையையும், பிரான்சின் நெருங்கின நண்பர்களிடம் சிக்காவண்ணம் தானே பிடித்துக்கொண்டது.

ஆனாற் பிரான்சிய கப்பற் படைகளை சீர்திருத்த கார்னே போன்றவரில்லாமையால், அவை, பிரித்தானியக் கப்பற் படைக்கு எக்காலத்தும் சமமாக இருந்ததில்லை; எனவே பிரான்சு, தன் குடியேற்ற நாடுகளனைத்தையு மிழந்தது. கப்பற் படையிற் சேவை புரிந்த வயது சென்ற உத்தியோகத்தரனை வரும் அரச வமிசத்தவரிடம் பற்று பூண்டவர்; மாலுமிகளிற் பெரும் பகுதியோரும், பிரித்தனிபோன்ற இராசபக்தி மிகுந்த பகுதிகளிலிருந்து வந்தவர்; மேலும் கப்பற் படையிற் புதிதாய்ச் சேர்ந்தவரைப் பயிற்ற போதிய தொகையினரான பழைய மாலுமிகளுமில்லை. 1793-ல் மத்தித்தரைக் கடலிலுள்ள கடற் படைத்தளமாகிய ரூலோனையும் பிரித்தானியர் பிடிக்கமுடிந்தது. அங்கிருந்து இளம் கோர்சிக்கத் தளபதி நெப்போலியன்

பொனப்பார்ட்டால் சாமர்த்தியமாக நிர்மாணிக்கப்பட்ட பீரங்கிப் படையினால் பிரித்தானியர் துரத்தப்பட்டனர். இதுவே நெப்போலியனின் முதற் சரித்திரத் தோற்றமாகும்.

இத்தாலியின் மீது படையெடுப்பு. 1795-ம் ஆண்டளவில் ஐரோப்பாக் கண்டத்தி னெப்பகுதிக்கும் போர்க்கோலத்துடன் செல்லவும் தமது அரசியற் புரட்சிக் கொள்கைகளைப் பரப்பவும் ஆர்வங்கொண்ட பிராஞ்சியப் படைகள், பிரான்சின் எல்லா எல்லைப்புறங்களிலும் சித்தமாய் நின்றன. பிருஷ்யாவும் ஸ்பெயினும் பிரான்சுடன் சமாதானஞ் செய்துகொண்டன; பிரித்தானியாவும், ஆஸ்திரியாவும், சார்டினியா வென்னும் வட இத்தாலிய ராச்சியமும் மாத்திரமே பிரான்சின் வைரிகளாயிருந்தன. வீழ்ச்சி யடைந்த பழைய போலந்து இராச்சியத்தைத் தம்மிடையே பிரிப்பதாகிய கேவலச் செயலில் ருஷ்யாவும் பிருஷ்யாவும் ஈடுபட்டிருந்தன. 1796-ம் ஆண்டிலே சார்டினியாவுடன் சமர் விளைத்தற்கான "இத்தாலியப்படை"யின் தலைமை, பொனப்பார்ட்டுக்கு அளிக்கப்பட்டது. அப்போது அவனடைந்த வெற்றிகள் கேட்போரை பிரமிக்கச்செய்தன; அவன் வட இத்தாலி முழுவதையும் வென்றதோடு, ஆஸ்திரியாவையுந் தாக்கி அதுகாறு மொருவருக்குங் கீழ்ப்படாது செருக்குற்றிருந்த அந்நாட்டைச் சமாதானஞ்செய்யத் தூண்டினான்; இச் சமாதானவுடன்படிக்கை செய்வதில் பொனப்பார்ட் பரீசிலிருந்த அரசாங்கத்தை அதிகங் கவனிக்கவில்லை. இத்தாலியில் மூன்று குடியரசு நாடுகளும் சுவிட்சர்லாந்தில் ஹெல்வெட்டியக் குடியரசும் ஏற்படுத்தப்பட்டன; இவ்வாறு பிரான்சின் தலைமையின் கீழ் அதனெல்லைப் புறங்களிலெல்லாம், குடியரசு நாடுகள் ஏற்பட்டன. பழைய வெனீசிய பெருமக்கள் குடியரசு, நட்டஈடாக பொனப்பார்ட்டால் ஆஸ்திரியாவுக்குக் கொடுக்கப்பட்டது. பிரித்தானியா மாத்திரமே அதன் வைரியாக எஞ்சி நின்றது. 1797-ம் ஆண்டு, பிரித்தானியாவுக்குக் கஷ்டகாலமாயிருந்தது; ஏனெனில், ஸ்பானிய, டச்சுக் கப்பற் படையினுதவியையும் பிரான்சியர் பெற்றிருந்தனர். சென்ற்வின்சென்ற் என்னுமிடத்திலும், ஒல்லாந்தின் கடற்கரைக் கருகே காம்பர்டௌன் என்னுமிடத்திலும் பிரித்தானியர் மிகத்

திறமையுடன் கடற் போரிட்டு பெற்ற வெற்றிகள் மாத்திரமே பிரித்தானியாவைப் பிராஞ்சியரிடமிருந்து தப்புவித்ததென லாம்.

எகிப்தின் மீது படையெழுச்சி. பொனப்பார்ட், பேராசை பிடித்தவன். பழைய மொகலாய வீரர்கள் ஜெங்கிஸ்கான், ரிமூர் போலத் தானும் கீழ்த்திசை நாடுகளை வெல்ல வேண்டு மென்னும் அவா அவன் மனதிற் குடிகொண்டது. 1798-ம் ஆண்டில் எகிப்துக்குச் சென்ற அவனது தரைப் படைக்குக் காவலாகப் பிராஞ்சிய கடற்படையுஞ் சென்றது. ஆனால் 1796-ம் ஆண்டில் மத்தியதரைக்கடலை விட்டுச் சென்ற பிரித் தானியக் கடற்படை, திறமைவாய்ந்த நெல்சனின் தலைமையிற் திரும்பி வந்தது. நெல்சன் பிராஞ்சிய படையைத் தொடர்ந்து **அபுக்கீர்** விரிகுடாவில் அதனை அழிக்கவே, எகிப்துக்குச் சென்ற பிராஞ்சிய படைக்குத் துணைபுரிய எவர் வருவதற்கும் வழியிராது போயிற்று. ஆனால், பொனப்பார்ட், வியக்கத்தக்க வகையில் போர் செய்து வெற்றிகள் அடைந்து, பலஸ்தீனுவி னூடே பிரான்சுக்குத் திரும்பி வர முயன்றான். **சேர்சிட்னி** ஸ்மித்தின் கீழிருந்த பல போர்க்கப்பல்களிற் சேவை செய்த மாலுமிகளின் உதவி கொண்டு ஏக்கர் பட்டினத்துத் துருக்க வீரர் திடமாக அவனை எதிர்க்கவே, அவன் முன் செல்வது தடைப்பட்டது. இவ்வாறு சிட்னி ஸ்மித்துத் தன்னைத் தடை செய்ததை நெப்போலியன் எக்காலத்தும் மறக்கவில்லை. ''அம் மனிதனே யான் அடையவேண்டிய இலக்கை அடைய விடாது தடுத்தான்'' என நெப்போலியன் அடிக்கடி கூறுவ துண்டு. சிறிது காலத்துக்கெல்லாம் அவன் தன் சிறந்த சேனை யைப் பிரித்தானியர் தோற்கடிக்கவும் சிறைப்பிடிக்கவும் விட்டு, பிரான்சுக்குத் தப்பியோடினான். இப்படை எழுச்சியுடன் பல அறிஞர்கள் சென்று எகிப்தில் பூர்வகால நாகரிகத்தின் பல பொருள்களைக் கண்டு பிடித்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

பிரான்சின் உள்நாட்டுக் கருமங்கள். சனங்களிற் பெரும் பகுதியோர் தம்மை வெறுக்கும்படியான வகையில் அரசாட்சி யார் நடந்துகொள்கின்றனர் என்பதை பொனப்பார்ட் கேள்வி யுற்றுப் பிரான்சுக்குத் திரும்பி வந்தான். பிரான்சிய சேனைகள்

முதலிற் தோல்வியடையினும் அநேகமாய் உடனேயே வெற்றி பெற்றன. சனங்களின் மனதை வசீகரித்த நெப்போலியன் அரசாட்சியாரைப் பலாத்காரத்தினுலே நீக்கி, **கான்சுலேட்டு*** என்னும் ஆட்சி முறையை ஏற்படுத்தி, தன்னையே "**முதலாம் கான்சுல்**" ஆக நியமித்துக் கொண்டான்; அதோடு சர்வாதிகாரத்தையும் தன் வசமே வைத்துக் கொண்டான். இதற்கடுத்த எட்டு வருடங்களில் அவன் அற்புதச் செயல்கள் பல புரிந்தான்.

நெப்போலியன்.

சாமர்த்தியமுள்ள எவனும் அரசாங்க சேவையை நாடும்படியாக அவன் அரசாட்சியின் எல்லாப் பிரிவுகளையுஞ் சீர்திருத்தினன். முதலாம் கான்சுல் ஆகிய நெப்போலியனே பின்னின்று தாம் வேலை செய்வதைக் கவனிப்பது போலவே ஒவ்வொருவனும் எண்ணி, அளவிலா ஊக்கத்துடனும் திறமையுடனும் உழைத்தனன். குடியரசின் அரசாட்சியாருடன் எதிரிட்ட

* "கான்சுலேட்டு"—"கான்சுல்" என்பவரி னுட்சிமுறை. "கான்சுல்" என்பது, பண்டைக்காலத்து உரோமாபுரியில் தனி முதல்வனுக நகரத்தை ஆள, சனங்களாற் தெரிவு செய்யப்பட்டவனின் உத்தியோகப் பெயராம். அவனுக்கு அரசாட்சியில் சர்வாதிகாரமும் இருந்தது.

பாப்பரசருடன் அவன் சமாதானஞ் செய்துகொண்டு அவ் வழியே கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்தவரும் பிரதான மாகக் கிராமவாசிகளுமான கமக்காரருக்குத் திரூப்தியளித் தான். அவன் நல்ல வீதிகளை அமைத்து, கைத்தொழில்களும் வியாபாரமும் ஓங்குமாறு உற்சாக முண்டாக்கினன். அவன் பிராஞ்சிய வங்கியையுந் தாபித்தான். தலைசிறந்ததாக, அவன் நீதிச் சட்டங்களைத் தொகுத்து "கோட் நெப்போலியன்" என் னும் பெயரிய சட்டமுறையை ஏற்படுத்தினன்; இதில் நாட் டுக்கு இன்றியமையாத சட்டங்கள் எல்லாந் தொகுக்கப்பட் டிருந்தன. இந்நூலைப்பற்றி அவன் பெருமை கொண்டான். "வருங்காலத்தில் என் சட்ட புத்தகத்திலேயே சரித்திரக்காரர் என்னை நினைவு கூறுவர்" என அவன் கூறினன். 1804-ம் ஆண்டின், "சக்கரவர்த்தி" என்னும் பட்டப்பெயருடன் அவன் முடிசூட, பிரான்சுக்குட்பட்டிருந்த குடியரசுகள் அவ னுக்குக் கீழ்ப்பட்ட இராச்சியங்களாயின. தன் குடும்பத்தில் ஒருவரையோ அல்லது திறமைவாய்ந்த படைவீரரிற் சில ரையோ, அவ்விராச்சியங்களி னரசர்களாக அவன் நியமித் தான்.

பத்து வருடங்களுக்குமுன் பீரங்கிப்படையில் உத்தியோ கத்தனாக இருந்த நெப்போலியன் இவ்வரும் பெருஞ் செயல் களைப் புரிந்தானென்பது நம்மைத் திகைப்புறச் செய்யக்கூடி யதே. அவன் ஆட்சி பலாத்காரத்தையும் படைபலத்தையும் ஆதாரமாகக் கொண்டிருந்ததென்பது உண்மை. ஆனால், திறமையான அரசாட்சி முறைக்கும் போரினாலேற்படுங் கீர்த் திக்கும் குடியரசின் சுதந்திரத்தைப் பறிகொடுக்க ஆயத்தமா யிருந்த பிராஞ்சியரே அவனுக்கு மூலபலமா யிருந்தனர்.

ஒற்றுமைபூண்ட நாடுகள். அபுக்கீர் விரிகுடாவில் நெல் சனின் பெரும் வெற்றியால்பொனப்பார்ட் வெளியேறமாட்டா மல் தடைபட்டமையால் திரும்பவும் பிரான்சுக் கெதிராகப் பல நாடுகள் ஒற்றுமை பூண்டன. ஆஸ்திரியாவும், ருஷ்யாவும், வேறு மூன்று தேசங்களும் பிரித்தானியாவுடன் சேர்ந்து போர் தொடுத்தன. பிரான்சியர் தோல்வி யடைந்து இத்தாலியை இழந் தனர். ஆனால் பொனப்பார்ட் திரும்பி வந்ததும், ஆஸ்திரியரை

வெளியே துரத்தி இத்தாலியை மறுபடியும் பெற்றான். பிரித்தானியாவுடன் ஒற்றுமை பூண்ட தேசங்களைத் தந்திரமாக பிரித்தானியாவுக்கு எதிராகக் கூடும்படி செய்தான். அவை "போர்க்கோல நடுநிலை" பூண்டு, பால்டிக் கடலுக்குள் பிரித்தானியக் கப்பல்களைப் போகவிடாமல் மறிக்க, நெல்சன் கொப்பென் ஹேகன் கடற்போரில் அவற்றின் கப்பல்களைத் தகர்த்து, பிரித்தானியக் கப்பல்கள் தடையின்றிப் போகவரச் செய்தான்.

1801-ல் ஆஸ்திரியா சரணடைய எல்லா நாடுகளும் சமாதானமாயின. ஆனால் சமாதானம் கனகாலம் நிலவவில்லை. போர் மீண்டும் மூள, கூடுமாயின், இங்கிலாந்தின்மீது படையெடுக்க நெப்போலியன் எண்ணிப் பெருந்தொகையான சேனை ஒன்றைப் பிரான்சின் வடகடற்கரையில் திரட்டினான். ஆனால் விழிப்புள்ள நெல்சனினின்றும் பிரித்தானியக் கப்பற் படையினின்றும் அவனைத் தப்பமுடியவில்லை. அவர்கள் சிறிது காலத்துக்குப் பின், 1805-ம் ஆண்டில் திரபால்கரில் திரண்டிருந்த பிராஞ்சிய-ஸ்பானியக் கப்பற் படைகளை அழித்து விட்டனர். இஃதிங்ஙனமாக, நெப்போலியனுக்கெதிராக, பிரித்தானியர், ஆஸ்திரிய, ருஷ்ய, சுவீட நாட்டவருடன் சிநேக உடன்படிக்கை செய்து கொண்டனர். நெப்போலியனோ, பிரான்சின் கடற்கரையை விட்டகன்று, மின்னல்போல விரைந்து சென்று ஆஸ்திரியரைத் தாக்கி அவர்களை அல்ம் என்னுமிடத்தில் தோற்கடித்ததோடு, அவர்களையும் ருஷ்யரையும் ஆஸ்தர்லீட்சு என்னுமிடத்தில் முறியடித்துப் பெரும் வெற்றியடைந்தான். பின்பு அவன் பிருஷ்யாவைத் தன்னுடன் போரிடத் தூண்ட, அது ஜீனவில் பெரு நட்டத்துடன் முறியடிக்கப்பட்டது. 1807-ம் ஆண்டளவில் அவன் ருஷ்யாவுடன் சமாதானமும் உடன்படிக்கையுஞ் செய்து கொண்டான்.

ஐரோப்பாக்கண்ட வியாபாரக் கட்டுப்பாடும் குடா நாட்டுப் போரும். பிரித்தானியாவின் மீது படையெடுத்தல் இயலாதெனக் கண்ட நெப்போலியன் அதன் வியாபாரத்தை யழிக்க முயன்றான். (அ-து) அந்நாட்டுப் பொருட்களைத் தன் நண்பர்களான நாட்டவர் எவரும் இறக்குமதி செய்தல் கூடாதெனக்

கட்டளை யிட்டான். இது 'ஐரோப்பாக்கண்ட வியாபாரக் கட்டுபாடு' எனக் கூறப்பட்டது.

நெப்போலியனுடைய பிரித்தானியப் பகிஷ்கார ஏற்பாட்டுக் கிணங்க போர்த்துகல் மறுக்கவே, பிராஞ்சியப் படைகள் அதன் மீது படையெடுத்தன. நெப்போலியன் சூழ்ச்சி செய்து ஸ்பானிய அரச குடும்பத்தை அந் நாட்டினின்றும் அகற்றி, தன் சகோதரனை அந் நாட்டதிபனுக்கினன்.

அச் செய்கையே, தன் வீரத்தினுல் கீழான பதவியிலிருந்து மேனிலையடைந்து ''சக்கரவர்த்தி'' யான நெப்போலியனின் வீழ்ச்சியின் ஆரம்பத்தைக் குறிப்பதாகும். கைத்தொழிற் புரட்சி யேற்பட்டதினுலே பிரித்தானியா, பொருட்களை மலிந்த விலைக்கும் பெருந்தொகையாகவும் உண்டு பண்ணக்கூடிய நிலைமையிலிருந்தது. கடலாதிக்கம் பெற்றிருந்ததினுலே, ஐரோப்பா நீங்கலாக ஏனைய கண்டங்களிலிருந்து வரும் பொருட்களை ஐரோப்பிய நாடுகளுள் நுழையாது தடுக்கும் வன்மையும் அதற்கிருந்தது. எனவே பிரித்தானியப் பொருட்களின்றிக் காலங்கடத்தல் பெருங் கஷ்டமென நெப்போலியனுடைய நண்பர்கள் கண்டனர். ஆதலினுல் தருணம் வாய்த்தவுடனே கூடிய விரைவில் அவனுடைய கட்டுப்பாட்டை ஒழிக்க அவர்கள் காத்திருந்தனர்.

இதுகாறும் ஏற்பட்ட எதிர்ப்புக்கு மாருன எதிர்ப்பை அவன் ஸ்பெனியிற் கண்டான். ஜெர்மனியிலும் இத்தாலியிலுமிருந்த பல்வேறு சாதியினர் நெப்போலியன் புகுத்திய அரசியற் புரட்சிக் கொள்கைகளையோ, அன்றேல், திறமையான அரசியல் முறையையோ அநேகமாய் நல்வரவேற்றினர். தம்மை முன்னராண்டவர்கள் ஒழிந்ததைப்பற்றி அவர்கள் விசேடமாக வருத்தப்படவில்லை. ஆனுல், ஸ்பானியரோ அந்நியராளுகையைப் பகைத்து, போர்க்களத்தில் தஞ்சேனைகள் தோற்கடிக்கப்பட்டபோது, நாட்டிலிருந்த பிராஞ்சிய சேனைகளுக்குத் தேவையான உணவையும் போர்க் கருவிகளையும் ஏனைய பொருட்களையும் பறிமுதல் செய்தும், படைக் கூட்டத்திலிருந்து வழி தவறினவரைக் கொன்றும் அல்லது சிறைபிடித்தும் இடைவிடா இடுக்கண் விளைத்து 'கெறில்லாப்'


1810-ம் ஆண்டில்
ஐரோப்பா
மாஸ்கோ
போரோடினோ
அயர்லாந்து
இங்கிலாந்து
கோப்பனேகன்
பிரிட்டிஷ் கால்வாய்
பிரஷ்யா
பொலின்
வார்சா
ஜெர்மன்
ரஷ்யா
வாட்டர்லூ
பாரிஸ்
பிரான்சு
ஆஸ்திரியா
கருங்கடல்
மாட்ரிட்
ஸ்பெயின்
போர்த்துகல்
லிஸ்பன்
கோர்சிகா
சார்டினியா
சிசிலி
0 100 200 300 400 500 மைல்கள்
பிராஞ்சிய ஏகாதிபத்தியம்
கீழுள்ள நாடுகள்
நட்பு பூண்ட நாடுகள்
ரைன் சமஷ்டி யெல்லை
மொஸ்கோவுக்கு நெப்போலியன் சென்ற பாதை (1812)

போர் புரிந்தனர். மேலும், ஸ்பானியரின் எதிர்ப்பு, தேசீய எதிர்ப்பாக இருந்தது. இதுவே ஏற்ற தருணமெனப் பிரித்தானியர் அறிந்தவராய் ஸ்பெயினுக்குப் படைகளை அனுப்பினர். ஒரு பிரித்தானிய சேனை நெப்போலியனுலேயே ஸ்பெயினிலிருந்து ஓட்டிவிடப்படினும், சேர் யோன் மூரின்கீழ் சாதுரியமாய்ப் பின்வாங்கியதால் தப்பிக்கொண்டது. இன்னொன்று, பிற்காலத்தில் **வெலிங்டன் பிரபு** என்னும் பட்டப்பெயர் சூடின கீர்த்தி வாய்ந்த **சேர் ஆத்தர் உவெலஸ்லி** என்பவன் தலைமையில் இங்கிலாந்திலிருந்து போர்த்துகலுக்கு வந்து பிராஞ்சியப் படையைத் தடுத்து நின்றது; அதோடு 1812-ம் ஆண்டில் பிராஞ்சியப் படையைப் பின்வாங்குமாறு துரத்தத்தொடங்கியது. இந்நிகழ்ச்சிகளைப்பற்றி நெப்போலியன் பின்னொரு காலத்திற் பேசியபோது, "ஸ்பானியப் பிளவையே* என்னை அழித்துவிட்டது" என்று கூறினன்.

ருஷ்யாவிலேற்பட்ட பெரு நட்டம். பிரித்தானியப் பொருட்களைப் பகிஷ்காரஞ் செய்வதிற் களைப்படைந்த ருஷ்யாவுடனும் மனத்தாபம் ஏற்பட்டுவந்தது. நெப்போலியன் விதித்த கடும் நியமங்களினுல் மனம் நொந்து, பழிவாங்கக் காத்திருந்த பிருஷ்யா, தற்கால முறைப்படித் திறமையாகச் சீர்திருந்தி வந்தது. 1812-ம் ஆண்டில் நெப்போலியன் ஐரோப்பாவில் ஒரே ஒரு சாம்ராச்சியம் மாத்திரம் நிலவவேண்டுமெனத் தீர்மானித்து ருஷ்யாவுடன் போர்தொடுத்தான். ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட படைவீரர்கொண்ட பெருஞ்சேனையை அவன் திரட்டி,—அவரில் மூன்றில் ஒரு பங்குதான் பிரான்சியர்—அந்நாட்டினுட் புகுந்தான். ஆனுல் அங்கே அவன் செய்த பிழைகள் பல; விசேடமானது அவன் மாரிகாலத்திற் புறப்பட்டமையாம். ருஷ்ய குளிர்காலப் பனியில் அப்பெரும்படை மிகவும் இம்சைப்பட்டு நொருங்குண்டதனுல் எஞ்சி வெளியேறியவர் சிலரே. அவன் ருஷ்யாவின் புராதனத் தலைநகரான மொஸ்கோ வரையிற் சென்றபோது, ருஷ்ய சேனைகள் அவனை யெதிர்க்கா

* பிளவை—பிளவை நோய். இது கொடுமையானது. பீடித்தவரை வருத்தி, பொறுக்கொணு நோய்க்கு ஆளாக்கி நாளாவட்டத்திலே கொல்லுந் தன்மையது.

மலே பின்வாங்கின. அந்நகரம் அவன் கண் முன்னரே தீக்கிரை யாக்கப்பட்டது; அதனால் அவனுடைய திரண்ட சேனைக்கு உணவளித்தல் இயலாத காரியமாயிற்று; எனவே வரும் போதே அழிக்கப்பட்ட பாதைவழியே திரும்பி வருதல் அவசிய மாயிற்று. இதிற் பயங்கரமான கஷ்டங்க ளேற்பட்டன. நெப் போலியன் தன் சேனையை யிழந்தான்; அவன் தம் நாட் டெல்லைகளைத் தாண்டினவுடனே பிருஷ்யாவும் ஆஸ்திரியாவும் பிற ஜெர்மனிய நாடுகளும் அவனை யெதிர்த்தெழுந்தன.

விடுதலைப் போர். நெப்போலியன் மீண்டுமொருசேனை திரட்ட விரைவுடன் பிரான்சுக்கு வந்தான். திரட்டினனெனி னும், மிகவுங் கொடூரமாக விதிக்கப்பட்ட கட்டாய ராணுவ மாகிய 'ரத்ததானம்' பிரான்சியருக்கு வெகு வெறுப்பைக் கொடுத்தது. ஆனால் அவனுடைய பெருஞ்சேனையை ருஷ்யர் பின்தொடர்ந்தனர். புதிய பிருஷ்ய, ஆஸ்திரிய சேனைகளும், நெப்போலியனின் பழைய தளபதிகளிலொருவனான பேர்ண டோற் என்பவனின்கீழ், சுவீடனின் சேனையும் ஒன்று சேர்ந் தன. அதே சமயத்தில் உவெலிங்டன் ஸ்பெயினிலிருந்து பிராஞ்சியரை ஓட்டிப் பிரான்சின் தென்றிசை யெல்லையையும் தாக்கினன். நெப்போலியனும் முன்னைய நெப்போலியனாக இல்லை. நட்பு பூண்ட நாடுகளின் படைகள் ஒன்று கூடுவதை அவனால் தடுக்கமுடியவில்லை. எனவே, அவர்கள் அவனை 1813-ம் ஆண்டில் **லீப்சிக்கு** என்னுமிடத்தில் நடந்த **பல்சாதி யினரின் போரில்** நன்கு தோற்கடித்தனர். அடுத்த ஆண்டில், அவன், பிரான்சுட்புக வந்த தன்னெதிரிகளை நுழைய விடாது பெரும் வீரத்துடன் போரிட்டுத் தடுத்தான்; ஆயினும், இறுதி யில் அவன் அவர்களிடம் சரண்புகுந்து தன் சிங்காதனத்தை யிழக்கவேண்டியதாயிற்று.

வியன்னா மகாநாடு; நூறு நாளாட்சி. முன்பு எதிரிகள் பன்முறை சமாதானம் செய்யக்கோரியபோது புத்தியீனமாக நெப்போலியன் அதற்குச் சம்மதிக்கவில்லை. இப்போது நெப் போலியன், இத்தாலியக் கடற்கரையிலிருந்து சிறிது தூரத்தி லுள்ள **எல்பா**த்தீவுக்குக் கடத்தப்பட்டான். நட்பு பூண்ட நாட் டினர் ஐரோப்பாவின் குழம்பிய நிலைமையினாலேற்பட்ட பிரச்

சினைகளைக் கவனிக்க வியன்னாவில் ஒரு மகாநாடு கூட்டினர். இதில் இவர்கள் கவனத்தைச் செலுத்தி வரும்போதே, நெப்போலியன் எல்பாவிலிருந்து தப்பியோடிப் பிரான்சை யடைந்தான். பழைய படை வீரர் அவனைச் சூழ, வெல்லுதற்கரிய ஒரு சேனையை அவன் திரட்டினான். ஆனால் நட்பு பூண்ட நாட்டவரின் படைகள் அவன் படையினும் கூடின வன்மை கொண்டிருந்தன. பெல்ஜியத்திலிருந்த பிரித்தானியரும் பிருஷ்யரும், தம்முதவிக்கு ஆஸ்திரியரும் ருஷ்யரும் வரு முன்னரே அவனைத்தாக்கினர். தன்னை யெதிர்த்த இருவகைப் படைகளும் (பிரித்தானியர், பிருஷ்யர்; ஆஸ்திரியர், ருஷ்யர்) சந்திக்காது தடுப்பதில் நெப்போலியன் அநேகமாய்ச் சித்திபெறினும் பூரணவெற்றி பெறவில்லை. இதனாலே, **வாட்டர்லூப்** போர்க்களத்தில் அவன் சேனை தோல்வியடைந்தது. நெப்போலியனுடைய ஆசைகளும் நாசமாயின. எல்பாவிலிருந்து தப்பியோடிய ஏறக்குறைய நூறு நாட்களுக்குப்பின் அவன் தன் பகைவர்களிடஞ் சரண்புக, அவர்கள் அவனை அத்லாந்திக்குச் சமுத்திரத்தில் ஆப்பிரிக்காவுக்கு நெடுந்தூரத்திலே உள்ள சென்ற் ஹெலனா என்னுந் தனிப்பட்ட தீவுக்குக் கடத்தினர்; ஆருண்டுகளுக்குப்பின் அங்கு இறந்தான்.

இப்பெரும் போர்களின் பயன்கள். போரினாலுங் குழப்பத்தினாலும் ஏற்பட்ட முதல் விளைவுகளை வியன்னா உடன்படிக்கை விதிகளிற் காணலாம். இவை அடுத்த அத்தியாயங்களில் எடுத்தாளப்படும். ஐரோப்பாவில் அடுத்த நூற்றாண்டில் நிகழ்ந்தவை பெரும்பாலும் அதன் பெறுபேறாகும். ஆனால் இங்கு சில பொது விஷயங்களைக் கவனிப்போம். பண்டையரசியல் முறைகளும், சமூகப் பழக்க வழக்கங்களும் அழிந்தன. உரிமையுள்ள ஒரு வகுப்பினர் ஏனைய வகுப்பினரை எதிர்ப்பின்றி நெருக்குதல் இனி இயலாத காரியமாயிற்று. "**சுதந்திரம்**" என்பது கொள்கை மாத்திரமாயிராது செயலளவில் வன்மை பூண்டது. இதுகாறும் நெருக்கப்பட்டு வந்த வகுப்பினர் சமத்துவம் கொண்டாடினர். தன்கீழ்சேவை புரிந்த எவனும் திறமையுள்ளவனுயின் உத்தியோக உயர்ச்சி பெறுதற்கு இடமுண்டென நெப்போலியன் தெளிவாக்கினான். இதுவே

''**சமத்துவம்**'' அல்லது ''சமதருணமளித்தல்'' ஆகும். இவ் விரு கொள்கைகளும் ''குடியரசு'' அல்லது ''குடிகளின் விருப் பத்துக்கியைந்த அரசு'' என்பதற்கு மூலாதாரமாகும். நெப் போலியனின் சீவியத்திலுற் பெரிதுந் தூண்டப் பெற்ற இன் னெரு கொள்கை ''**தேசீய உணர்ச்சி**'' யாகும். தம் நாட்டி னெல்லைக் காப்புக்காக ஒன்று சேர்ந்த பிராஞ்சியரும், நெப் போலியனுடைய படையெழுச்சிக்குப் பயந்து ஒற்றுமை பூண்ட பிரித்தானியரும், பிராஞ்சியரால் தோற்கடிக்கப்பட்ட போதும் மனந்தளராது போரிட்ட ஸ்பானியரும், ''தேசீய உணர்ச்சி'' யென்னும் இக்கொள்கையை நல்வரவேற்றனர். இந்நாடுக ளெல்லாம் நெடுங்காலமாக **ஒருவர்** ஆட்சிக்குட்பட்ட இராச் சியங்களாகும். ஆனால் ஜெர்மனியும் இத்தாலியுமோவெனில், பல நூற்றாண்டுகளாக ஐக்கிய மற்றே இருந்தன. இத்தாலி யும், ஓரளவுக்கு ஜெர்மனியும், நெப்போலியனின்கீழ் ஒற்றுமை பூண்டிருந்தன. இரண்டும் தம் சுய அரசர்களின்கீழ் பிறநாடு களின் தடையின்றி தேசீய நாடுகளாய் இருக்க வேண்டுமெனக் கருதலாயின. இதற்காக அவை முயன்றமை மிகப் பிரதான மான விஷயமே.

தீமைகள் பலவற்றை முதிசமாக வைத்து நெப்போலியன் சென்றான். பிராஞ்சியப் படைகளை ஐரோப்பா வெங்கணும் ஓடி யாடச் செய்த ஏகாதிபத்திய எண்ணமும், ஒருநாடு வேறுநாடு களை வலுவிற்போருக்கிழுத்து வெற்றிபெற எண்ணுவதும், இப் போது தோற்றின. இவை, பிற் காலத்தில் ஜெர்மனியரையும் ஜெர்மனியத் தலைவர்களையும் பெரிதும் தாக்கின என்பதற்கு ஐயமில்லை. இதற்கு வழி வகைகளுமிருந்தன. அவையாவன ; நாட்டவரனைவருக்கும் போர்க்கோலம் பூணுவித்தலும் ஆண் மக்களனைவரையும் படையிற் சேரச் செய்வதுமாம். இதனை யாம் ''சர்வப் போர்ச்சேவை'' எனக்கூறலாம். அக்காலம் தொடங்கியே இவை எல்லையற்ற பல குழப்பங்களுக்கு இடங் கொடுத்ததுமல்லாமல் இரண்டு உலகப் பெரும் போர்களை உண்டாக்கும் காரணங்களாயும் அமைந்தன. இப்படியான பெருந்தீங்குகள் இனிமேலும் ஏற்படாமற்காத்துக் கொள்ளுவது வெற்றி பெற்ற ஐக்கிய நாட்டினர் மேற்பொறுத்த கடனுகும்.

பிற நாடுகளின் மேற் படையெடுக்கும் அவாசார்ந்த தேசீய வுணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டும். படைகளைக் குறைத்து அல்லது அடியோடு ஒழித்துக் கொள்ளவேண்டும். மக்களும் சாகியத்தவர்களும் தத்தம் அயலவருடனும் அயல் நாட்டவருடனும் அன்பும் அறமும் உடையவராக வாழ்வதற்குக் கற்பிக்க வேண்டும்.

உதவிக் குறிப்புக்கள்.

புதிய பிராஞ்சியக் குடியரசின் படைவீரர், தமது அரசியற் புரட்சிக் கொள்கைகளை ஏனைய நாடுகளிலும் வாலோற்கார முறைகளினாற் பரவ முயன்றமை இவ்வதிகாரத்திற் கூறப்பட்டது. பிராஞ்சியப் படைகள், தேசீய உணர்ச்சியினூர்வத்தினாலும், புதிய போர் முறைகளைத் தழுவியதினாலும், திறனுள்ள படைத்தலைவர்களின் கட்டளைகளுக்குட்பட்டு, பண்டை முறைகளைத் தழுவிய தலைவர்களை எங்கும் தோற்கடித்துச் சித்திபெற்றன. பிரித்தானியா மாத்திரம் கடலாற் சூழப்பட்டதனாலும், தனது கடற்படை வன்மையினாலும் இவற்றை எதிர்த்து நிற்க முடிந்தது. இப்போர்கள் நெப்போலியன் பொனப்பார்ட் எனும் அதியூகியான போர் வீரனை முன்னணிக்குக் கொண்டுவந்தன. இவன் தனது இயற்கையான அதிகார தோரணையினாலும் அதிசயமான வெற்றிகளினாலும், பிராஞ்சியர் தன்னைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும்படி செய்தான். இதன் பிராஞ்சிய அரசாட்சி முறையையும், சட்ட முறையையுஞ் சீர்திருத்தியதோடு சக்கரவர்த்தியாவதிலும் சித்தியடைந்தான். ஆனால் எப்போது தன் பேராசைகளை அடக்க வேண்டுமென்பதை அவன் அறியவில்லை; அவன் செய்த பல பெரும் பிழைகள், அவன் போர்க்களத்திற் தோல்வியுறவும் உயர் பதவியை இழக்கவுஞ் செய்தன. அளவு கடந்த அவனுடைய பேராசைக்காக மேன்மேலுங் கஷ்டப்பட பிராஞ்சியர் ஒப்பவில்லை. ஐரோப்பிய விஷயங்களிற் தலையிட்டதினாலே, அவன் பிராஞ்சியரை அத்துணை சித்தி பெறச் செய்த **தேசீய உணர்ச்சியே** தனக்கு எதிரிடையாக இருக்குமாறு செய்துகொண்டான்; இத்தேசீய உணர்ச்சியே, மக்களை ஊக்குவித்து நெப்போலியன் போரிற்ரோல்வியடையவும் பதவி நீங்கவும் பெரிதுங் காரணமாயது. ஜெர்மனியிலும் இத்தாலியிலும் இத் தேசீய உணர்ச்சி தோற்றினமை பிற

காலத்திலே எவரும் எதிர்பாராத ஆச்சரியமான நிகழ்ச்சி களுக்குக் காரணமாயது.

சில பிரதான நிகழ்ச்சிகள்

1796-7. இத்தாலியில் நெப்போலியன் நடாத்திய போர்.

1798. நெப்போலியன் எகிப்தின் மீது படையெடுத்துச் சென்றமை. அபுக்கீரிற் கடற்போர்; நெல்சனின் கப்பற்படைவென்றது.

1899. நெப்போலியன் முதலாம் கான்சுலானான்.

1804. 1-ம் நெப்போலியன் பிராஞ்சிய சக்கரவர்த்தி யானான்.

1805. திரபால்கர் சண்டை; நெல்சன் பிராஞ்சியக் கப்பற் படையை யழித்தான்.

1806. ஆஸ்தர்லிட்சுச் சண்டை. ஆஸ்திரியரும் ருஷ்யரும் தோற்கடிக்கப்பட்டனர்.

1807. ஜீனச்சண்டை; பிருஷ்யர் நசுக்கப்பட்டனர்.

1808. பிராஞ்சியர் ஸ்பெயினின் மீது படையெடுத்தனர்.

1808.-14, "ஸ்பானியப் புண்."

1812. பெருநட்டம் விளைத்த ருஷ்யப்போர்.

1813. லீப்சிக்கிற் "பலசாதி"யினரின் போர்.

1814. நெப்போலியன் முடிதுறந்தான்.

1815. வியன்னா மகாநாடு.
"நூறு நாட்களும்" வாட்டர்லூவும்.

5. ஐரோப்பாவிலுள்ள எதேச்சாதிகார நாடுகள்

மகா நாடுகள் மலிந்த காலம். வியன்னா மகா நாட்டிற் பிரதானமாய் விளங்கியவர் ருஷ்ய சாரான 1-ம் அலெக் சாந்தரும், ஆஸ்திரிய அரசியல் நிபுணனான மெட்டர்நிக்கு மாவர். முன்னவன் சர்வாதிகாரி எனினும், சிறிதளவுக்குத் தாராளக் கொள்கைகளையுடையவன். மற்றவன், தன்னை

லியன்றவரையில் ஐரோப்பாவைப் பழைய அரசியல் நிலைக்குக் கொண்டுவரவும் புரட்சிகரமாகத் தோன்றிய இயக்கங்கள் எவற்றையும் அடக்கவும் தீர்மானித்திருந்தான். காலஞ் செல்லச் செல்ல, மெட்டர்நிக்கின் கொள்கைகளே சரியென அலெக்சாந்தரும் கருதுவானுயினுன். ஆனல், பிரித்தானியப் பிரதிநிதியாக மகாநாட்டுக்குச்சென்ற **காசில்றீ**,

மெட்டர்நிக்

முதலில் அவனுடன் ஒத்துப்போவது போல் இருந்தபோதிலும், காலகதியில் இதற்கு மாருன கொள்கைகளேயே அதிகந் தழுவுவானுயினுன். 1815—1822-ம் இடையில் வியன்ன மகாநாட்டின் பின் நிகழ்ந்த நான்கு மகாநாடுகளிலும் இது தெளிவாகும். கடைசியாகக் கூடிய மகாநாட்டின் பின் இவை மெட்டர்நிக்கின் பிற்போக்கான கருத்துக்களே வளர்க்கவே ஏதுவாயின என்றெண்ணி பிரித்தானியா பிரிந்தது.

1815-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், ருஷ்யா, ஆஸ்திரியா, பிருஷ்யா என்பவற்றுக்கிடையே கிருஸ்தவக் கொள்கைகளே ஆதாரமாகக் கொண்ட **"பரிசுத்த ஒப்பந்தச் சங்கம்"** என்னும் சங்கத்தை ஏற்படுத்துவதாக அலெக்சாந்தர்

பிரசித்தஞ்செய்தான். ஆனல் காசில்ரீயோ அவன் கூறுவதை ''குப்த வித்தையும் வீண் வார்த்தையுங் கலந்த பேச்சு'' எனக் கூறினன். எனவே இச்சங்கத்திற் பிரான்சு சிறிது காலஞ் சேர்ந்திருந்த போதிலும் பிரித்தானியா சேர மறுத்து விட்டது. இவ்வொப்பந்தச் சங்கம் ''வெற்றுப் பேச்சே'' எனத் தனிமையில் மெட்டர்நிக் கூறினபோதிலும், தாராளக் கொள்கைகளைத் தண்டப் பிரயோகத்தினுலடக்க இவ்வொப்பந்தம் உதவுமாறு செய்வதில் அவன் படிப்படியாகச் சித்தியடைந்தான். வியன்ன உடன்படிக்கையின் அடிப்படையில் ஐரோப்பிய சமாதானத்தைக் காக்க ''நால்வர் உடன்படிக்கையில்'' பிரித்தானியா சேர்ந்ததாயினும், 1822-ல் அதிலிருந்து விலகியது.

ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகள் இதுவரையில் இரகசியமாக அரசியற்றந்திரத்தினுலும் வெளிப்படையாகப் போரினுலும் வாதத்துக்கிடமான விஷயங்களைத் தீர்த்து வந்ததற்குப் பதிலாகக் குறிப்பிட்ட ஓரிடத்திற்கூடி நட்பு முறையிற் கலந்தாலோசிப்பது, உலக சமாதான இயக்கத்தில் ஒரு படி முன்னேற்றம் ஏற்பட்டதைக்காட்டுகின்றது. நெப்போலியனை எதிர்க்க ஒப்பந்தம் செய்து கொண்டவர்களோடு இப் புதுமுறை தொடங்கியது. அவனைப்பற்றின பயம் நீங்கின. பின்னர், அவனை யெதிர்க்க முன்னே ஒன்று கூடி ஒப்பந்தஞ் செய்தவர்களே மீண்டும் பிராஞ்சிய மன்னனுக வந்தவனின் பிரதிநிதிகளுடன் சமாதான நிபந்தனைகளைத் தீர்மானித்தனர். அது முதலாக, முக்கியமான அரசியல் விஷயங்களை மகா நாடுகளின் மூலம் முடிவுசெய்தல் கூடுமென்னுங் கொள்கை நீடித்து நின்றது. அங்ஙனமே, 19-ம் நூற்ருண்டில் தலைசிறத்த பிரச்சினைகளை முடிவு செய்தற்கு, முதலில் யுத்தமுறைகளே கையாளப்பட்டபோதினும், பல பெரிய மகா நாடுகள் கூட்டப்பட்டன. கடந்த நூருண்டுகளாக நிகழ்ந்த போர்களிடையே நிலவிய ''ஐரோப்பிய கூட்டுறவுக்'' கொள்கை முதலாமுலக யுத்தத்தின் (1914-1918) பின் கூட்டப்பட்ட வேர்சேல்ஸ் மகா நாட்டில் விரிவடைந்து சர்வதேச சங்கம் என்ற பெயருடன் உருவானது. இது இரண்டாவது உலக யுத்தத்தின்பின் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமாக்கப்பட்டது.

தம் ஆலோசனைக்குந் தீர்ப்புக்கும் வந்த பல பிரச்சினைகளை நியாயமான வழியிலே வியன்னு மகாநாடு தீர்மானித்தது. ஆனல் இருபெரும் சூக்கும விஷயங்களை—அதாவது, தாராள மனப்பான்மை, தேசீய உணர்ச்சி—என்பவற்றை அது அலட்சியஞ் செய்தது. மெட்டர்நிக் இவ்விரு கொள்கைகளையும் வெறுத்தான். அலெக்சாந்தர் இவைகளுக் கிடையிடையே சாதகமாகத் தோன்றிய போதிலும், பல இன எதேச்சாதிகார நாட்டின் தனியரசனுக இருந்தமையால் இறுதியில் இக்கொள்கைகளைக் கைவிட நேர்ந்தது. இனி, பல்வேறு நாடுகளைப் பற்றித் தனித்தனியாக வாசிப்பதினுலே இம்மகா நாட்டிற் செய்யப்பட்ட ஏற்பாடுகளை நன்கறியலாம்.

ருஷ்யாவும் போலாந்தும். 1792—1795-ம் ஆண்டுகளுக் கிடையே புண்டைய ராச்சியமான போலாந்து, ருஷ்யா, ஆஸ்திரியா, பிருஷ்யா என்பனவற்றினுற் சிறிது சிறிதாகச் சங்கையீனமான வழியிற் பிரித்துக் கொள்ளபபட்டது. இச் செய்கையில் ருஷ்யா பெரும் பங்கு பெற்றது; இதற்குப் பிரதான காரணம், மற்றைய இருநாடுகளின் சேனைகள் பிரான்சினெல்லைப் புறத்திற் போர் செய்துகொண்டிருந்தமையாம். இதனுலே, மானமே பெரிதெனக் கருதுபவரும் அடங்காத் துணிவுள்ளவருமான போலாந்தினர், பிராஞ்சியப் படையை நல்வரவேற்றனர்; நெப்போலியனுடைய படைகளுள் போலாந்தின் குதிரைப்படை மிகச் சிறந்தவொரு பகுதியாகவிருந்தது. அவன் காலத்திற், போலாந்து மீண்டும் "உவார்சா ஜமீன்" என்னும் பெயருடன் ஒற்றுமை பூண்டு, அவன் நண்பனை சாக்சனியரசனுல் ஆளப்பட்டு வந்தது. ஆனல், பிருஷ்யாவும் ஆஸ்திரியாவும் தாம் வலோற்காரமாக முன்னே பிடித்துக் கொண்டவற்றிற் பெரும் பகுதியைத் தமக்கு வியன்னு மகாநாட்டில் அளிக்கப்பெற்றன. எஞ்சியதை ருஷ்யா பிடித்துக் கொண்டது. ஆரம்பத்திற் சுதந்திர ஆட்சி ஓரளவுக்குப் போலாந்துக்குக் கொடுக்கப்படடது; ஆனல் காலஞ் செல்லச் செல்ல அலெக்சாந்தர் தாராளக்கொள்கைகளைக் கைவிட, சுதந்திரமென்பது மறைந்தது. அவனுக்குப் பின் முடி சூடிய சார், 1830-ம் ஆண்டில் போலாந்தினர் வெளிப்படையாகக்

குழப்பஞ் செய்யுமளவுக்கு அவர்களைக் கடுமையாக நடத்தினான். இக்குழப்பம் ஈவிரக்கமின்றி அடக்கப்பட்டது. இதற்கு 33 ஆண்டுகளுக்குப் பின் இத்தகைய கலகமேற்பட அதுவும் முன்போலவே நசுக்கப்பட்டது. இதற்கப்பால், போலாந்தை ஒரு ருஷ்ய மாகாணமாக்கி, அந்நாட்டினர்க்குத் தேசீய உணர்ச்சி இல்லாது செய்ய தம்மாற் கூடினவரையில் ருஷ்ய அரசாங்கத்தினர் முயன்றனர். அப்படியிருந்தும் போலாந்து நாட்டினருடைய தேசீய உணர்ச்சி அணைந்து போகாமலிருந்தது. 1919-ல் வேர்சேல்ஸ் மகாநாடு போலாந்துக்கு நெடு நாளாகக் காத்திருந்த சுயராச்சியம் அளித்தது. இருபது ஆண்டுகளின் பின்னதாக, ஜெர்மனி அந்த நாட்டினை மிருகத்தனமாகத் தாக்கியதால் இரண்டாம் உலகப் பெரும்போர் தொடங்குவதாயிற்று.

ருஷ்ய மக்கள் சென்ற சில ஆண்டுகள் வரை ஐரோப்பாவிலேயே பிற்போக்கானவர்களாய் இருந்தார்கள். பிரான்சியப் புரட்சியிற் பிறந்த கொள்கைகளைப்பற்றி ஒன்றுமே தெரியாதவராயிருந்தனர். விடுதலை பற்றிய சிந்தனைகள் அந்த அகன்ற நாட்டில் பலவருடங்களாகச் செறிந்த தெனவும் கூறுமாறில்லை. ருஷ்யாவைப் பற்றிப் பின்பு இன்னொரு அதிகாரத்திற் கூறப்படும்.

ஜெர்மனியில் ஆஸ்திரியாவும் பிருஷ்யாவும். ஜெர்மனியின் பெரும் பகுதி பிருஷ்யாவையும் ஆஸ்திரியாவையும் தலைமையாகக் கொண்டு, நெப்போலியன் ருஷ்யாவிற் பெருந் தோல்வியடைந்தபின் அவனுக்கெதிராகப் புரிந்த விடுதலைப் போரில் சேர்ந்தது. இக்காலத்தில் ஜெர்மானியரிடையே தேசீய உணர்ச்சி தோற்றியது. 1789-ம் ஆண்டுக்கு முன் முந்நூறுக்கு மேற்பட்ட நாடுகள் —சில பெரியவை, சில நகைத்தற் கிடந்தருமளவுக்குச் சிறியவை—ஜெர்மனியிலிருந்தன ; ஆனால், நெப்போலியன் அவற்றை யெல்லாம் அறவே யொழித்துத் தன்னேற்பாட்டின்படி சீர்திருத்தியமைத்தான். தாம் விடுதலைப் போரில் காட்டிய வீரத்தை யிட்டு பெருமைகொண்ட ஜெர்மானியர், தமக்குள் உண்டான பொதுத் தேசிய உணர்ச்சியை வளர்த்து, எல்லா ஜெர்மானியரையும் செயலளவில் ஒற்றுமை

பூணச்செய்தல் கூடுமோவெனச் சிந்திப்பாராயினர். மேலும், மேற்கிலிருந்த ஜெர்மானியருக்கு நெப்போலியனளித்த திறமையான ஆட்சியை அவர்கள் மறக்காததோடு, பண்டைய ஆட்சி முறையை மீண்டும் பெற விரும்பவில்லை. ஆனால் ஜெர்மானியர் அனைவரின் ஒற்றுமை ஆஸ்திரியாவைப் பிரித்துவிடும்; ஏனெனில் அங்கே ஆட்சி செய்தவர் ஆஸ்திரிய ஜெர்மானியரே எனினும், பல்வேறு சாதியினரிருந்தனர். எனவே ஆஸ்திரிய இராஜதந்திரியாகிய மெட்டர்நிக்கே வியன்னா மகாநாட்டில் மிகத்திறமை வாய்ந்தவனுகையால் அத்தகைய ஒற்றுமையேற்படாதிருக்க, தன்னாலியன்றதைச் செய்ய முயல்வனென்பது தெளிபு. தம்மரசன் நீங்கலாக வேறெவனுக்குங் கீழ்ப்படிய விரும்பாத பிருஷ்யரின் ஆதரவை அவன் பெற்றிருந்தான். ஆனாலும், புத்துணர்ச்சியைத் திருப்தி செய்ய யாதேனுஞ் செய்ய வேண்டியது அவசியமாகவே பழைய இராச்சியங்கள் பல உயிர்ப்பிக்கப்படவில்லை. அவை 39 இராச்சியங்களாகக் குறைக்கப்பட்டு, 'புன்ட்' (Bund) எனும் சமஷ்டி முறையான அரசியலிற் சேர்க்கப்பட்டன. இச் சமஷ்டியின் தன்மை, உண்மையான ஐக்கியம் அல்லாமல் வேறெருரு எதிரியினுற் தாக்கப்பட்ட இராச்சியத்துக்கு மற்ற நாடுகள் உதவிபுரிய வேண்டுமென்னும் ஒப்பந்தமளவில் நின்றது. இதிற் பிரதான நாடு ஆஸ்திரியாவே. அங்குள்ளவர் பெரும்பாலார் ஜெர்மானியர் அல்லாதார். இச் சமஷ்டி நாடு ஒற்றுமை யுணர்ச்சியுள்ளவரைக் கொண்டிராது, புல சிறு இராச்சியங்களின் ஐக்கியமாகவே இருந்தது. இங்ஙனம் மெட்டர்நிக்கின் விருப்பப்படியே எல்லாம் நடைபெற்றதோடு ஓரளவுக்குப் பழைய நிலைமை மீண்டு மேற்பட்டது. எனவே இந் நிலைமையில் தாராளக் கொள்கையுமில்லை, தேசீய உணர்ச்சியும் அதிகமில்லை. ஆனால் ஜெர்மானியர் பலரினுள்ளத்தில், தாராள மனப்பான்மையும் தேசீய வுணர்ச்சியும் அழியாது உறைந்து வந்தன. தம்மனோரதம் பூர்த்தியாதற்கு ஆஸ்திரியாவே பிரதான தடையென அவர்கள் இப்போது கருதினர்.

நிற்க, பிருஷ்யா, பூரண ஜெர்மானிய நாடென ஜெர்மானியர் கருதிவந்ததினுலே, அவர்கள் அதனையே தமதியற்கை


வியன்ரு ஏறபாட்டின்படி
ஐரோப்பா
(1815)
மைலகள்
0 50 100 200 300 400 500
ஜெர்மானிய சமஷ்டி யெல்லை
பிருஷ்யப் பிரதேசம்
ஆஸ்திரியப் பிரதேசம்
ஐரோப்பியத் துருக்கி யெல்லை
நோர்வே
சுவீடன்
பிரித்தானியத் தீவுகள்
வட கடல்
டென்மார்க்கு
பால்டிக் கடல்
போலந்து
ரஷ்யா
பிரான்சு
ஸ்பெயின்
போர்ச்சுகல்
மத்திய தரைக் கடல்
ஆப்பிரிக்கா
அல்ஜியர்சு
துருக்கி
கருங்கடல்
ஏகாதிபத்தியம்
சிசிலி
சார்டினியா
வாலேச்சியா
பல்கேரியா
மொல்தாவியா
கிரேக்கம்
சைப்பிரசு

யானத் தலைமைநாடெனக் கருதுவராயினர். அதுவுமன்றி, பிருஷ்யப் பெரும் போர்வீரன் இரண்டாம் பிரடெறிக்கையும் மறக்கவில்லை. எனவே, ஜெர்மானிய சமஷ்டிக்குப் பிருஷ்யாவேயன்றி ஆஸ்திரியா தலைமை பூணுதல் கூடாதெனப் பிருஷ்யத் தலைவர்கள் சீக்கிரமே தீர்மானித்தனரேனும் அவர்களும் ஆஸ்திரியரைப் போன்று தாராளக்கொள்கைகளை விரும்பவில்லை. பிருஷ்யா, ஆஸ்திரியாவைப்போலன்றி, நல்லாட்சி பெற்றிருந்தது; குடிசனங்களும் கல்வியறிவுள்ளவர்; ஓரளவுக்குச் செல்வர்கள். ஒவ்வொரு ஜெர்மானிய நாடும் அதுவரையில் விதித்துவந்த சுங்க வரிகளை நீக்கி, அவ்வழியே பொதுவாக ஜெர்மனியின் செல்வ நிலைமையை மேம்படுத்தப் பிருஷ்யர் ஏற்பாடு செய்தனர்; அதன்படி, அவர்கள் 1833-ம் ஆண்டில் 'சொல்வறேன்' (Zollverein) என்ற **சுங்கவரி ஐக்கியச் சங்கம்** ஒன்று தாபிப்பதில் அநேகமாய் மற்றைய நாடுகளையெல்லாம் பிருஷ்யாவோடு சேரச் செய்தனர். ஆஸ்திரியாவில் ஜெர்மானியரல்லாதார் பெருந்தொகையினராக இருந்ததினால் அந்நாடு இவ்வைக்கியச் சங்கத்திற் சேருதற்கில்லை. ஆகவே, பிருஷ்யாவின் நோக்கங்கைகூடிவந்தது. வியாபார விஷயங்களில் சிறிய ஜெர்மானிய நாடுகள் பிருஷ்யாவையே பின்பற்றின. அதோடு, ஜெர்மனியிலும் கைத்தொழிற் புரட்சி உண்டாகியது. ஆரம்பத்திலேயே புகைரத வீதிகளை ஜெர்மனியில் அமைத்தமை அந்நாட்டவரிடையே ஒற்றுமையை முன்னிலும் நெருங்கின விதமாக உண்டாக்கியது. சுங்கவரிச் சங்கத்தினரிடையே செல்வம் வளர்பிறைச் சந்திரன் போன்று அதிகரித்தது; ஆனால் ஆஸ்திரியாவிலோ அவ்வாறில்லை.

இத்தாலியில் ஆஸ்திரியாவும் சார்டினியாவும். வியன்னை ஏற்பாட்டின்படி ஆஸ்திரியா அதிகமான நிலப்பிரதேசம் பெற்றது; அது தனக்கு அதிகம் பிரயோசனப்படாத நெதலாந்திய தேசங்களைக் கொடுத்து, பதிலாக சிறந்த மலை நாட்டுக்காட்சியுள்ள **தைரோல்** உட்பட, ஜெர்மானியப் பிரதேசத்திற் சிறிதும், செழுமை வாய்ந்த லொம்பார்ட்டிச் சமவெளியும், பண்டைய வெனிசியக் குடியரசுக்குரிய பிரதேசங்களுட்பட, வட இத்தாலியிற் பெரும்பாகமும், அட்ரியடிக் கடலின் கீழ்க்கரையில் நீண்ட

தொரு பிரதேசமும் பெற்றது. இதற்கு முன்னரே அது, செக்க, மாகியக் குடிசனங்களுள்ள ஹங்கரியையும் பொகீமியாவையும், கலீசியா, போலாந்து என்பவற்றிற் சில பகுதிகளையும் (இவற்றி லிருந்த மாந்தர் ருஷ்யரைப் போன்று சிலாவசாதியினர்) அடைந்திருந்தது. ஆஸ்திரியாவிலிருந்த ஜெர்மானியரற்ற மாந்தரின் தொகையுடன் அதிலிருந்த ஜெர்மானியரின் தொகையை ஒப்பிடின், ஜெர்மானியர் சிறு பகுதியினரே யென் பது தெளிபு.

இத்தாலியிலே நெப்போலியனுட்சிப் பொதுவாக நல் வர வேற்கப்பட்டது. தாங்கள் ஒரு நாட்டினரே யென்பதை இத்தாலியர் அப்போதறிந்தனர்; அவனுட்சியிலே வட, மத் திய-இத்தாலி ஓரிராச்சியமாகவே யிருந்தது. ஆனல் வியன் னுவிற் கூடிய இராஜ தந்திரிகள் இவ்வொற்றுமை உணர்ச் சிக்கு மாருயிருந்தார்கள். பல நூற்ருண்டு காலமாக இத் தாலியானது பல இராச்சியங்களிடையே பிரிக்கப்பட்டிருந் தது. மெட்டர்நிக் சொன்னவாறு அது ஒரு 'பூமி சாஸ்திரப் பதம்' அன்றி ஒரு நாடாயிருக்கவில்லே. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னும் அது மீண்டும் பல பகுதிகளாகப் பிரிக் கப்பட்டது. வடக்கிற் பெரும் பகுதியை ஆஸ்திரியா பெற்றது; மத்திய இத்தாலியிற் பாப்பரசருக்குரியன வாயிருந்த பிரதேசங் கள் மீண்டு மவருக்கே அளிக்கப்பட்டன. தென்திசையில், சீர்கேடான நிலேமையிலிருந்த நேப்பிள்சு—சிசிலி ராச்சியம் இது முன்பு நெப்போலியனல் மூருவுக்களிக்கப்பட்டது—அதன் முந்திய ஸ்பானிய பூர்பனிய அரசர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. பாப்பரசருக்கும் ஆஸ்திரியருக்கும் உரித்தான பிரதேசங்களுக் கிடையே, தஸ்கனி, பர்மா, மோடனு ஆகிய மூன்று பிரபுத்துவ நாடுகள் ஆஸ்திரிய வமிசத்துச் சுயேச்சாதிகார சிற்றரசர்களுக் குட் பட்டிருந்தன. வட கீழ்ப்பிரதேசத்தில் மாத்திரம் பண்டைய பிரபுத்துவ நாடான சவோய், உண்மையான இத்தாலிய நாடாக இருந்தது; இதனுடன், சார்டினியப் பெருந்தீவும் பீட் மந்து என்னும் பெயரிய வட இத்தாலியச் சமவெளியின் மேற்குப் பகுதியும் சேர்ந்து, இப்போது "சார்டினிய ராச்சியம்" என்றழைக்கப்பட்டன. இந்நாடுகளிலும், ஆஸ்திரியருக்குரிய

பிரதேசங்களிலும், தாராளக் கொள்கைகளும் தேசீய உணர்ச்சியும் கொடிய முறைகளினால் அடக்கப்பட்டன.

ஸ்பெயின், போர்த்துகல். பிராஞ்சியர் துரத்தப்பட்டவுடனே, பழைய அரசவமிசத்தினர் நாட்டுக்குத் திரும்பி வந்து அரசாட்சி செலுத்துவாராயினர். இது சனங்களுக்குப் பெருமகிழ்ச்சி யளித்தது. ஆனால் திரும்பி வந்த அரச குடும்பத்தினர் தாம் அனுபவித்த கஷ்டங்களின் பயனாய் யாதொரு புத்திமதியும் பெறவில்லை; தமது பண்டைய விருப்பு வெறுப்புக்களையும் மறக்கவில்லை. எனவே, அவர்கள், முந்திய எதேச்சாதிகார ஆட்சி முறையை உயிர்ப்பிக்க முயல, ஸ்பானியர் மனமுறிவடைந்தனர். 1820-ம் ஆண்டில், சீர்திருத்த முறைகளைப் பின்பற்றுமாறு ஸ்பானிய தாராளக்கட்சியினர் தம்மரசனை வற்புறுத்தியபோது ஏனைய ஐரோப்பிய எதேச்சாதிகார வல்லரசினர்—சிறப்பாக, ஒருசில ஆண்டுகளாக எதேச்சாதிகார அரசரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பிரான்சு—ஸ்பானியக் கருமங்களில் தலையிட விரும்பினர்; ஆனால் பிரித்தானியத் தலைவர்கள், தடுக்க ஸ்பானியர் தம்விருப்பப்படி செய்ய விடப்பட்டனர். ஸ்பானியர் பழமை விரும்பிகளாகையால் புதிய கொள்கைகளைப் பெரிதும் விரும்பவில்லை. எனவே 1823-ம் ஆண்டில், ஒரு பிராஞ்சியப்படை ஸ்பெயினுள் புகுந்து சீர்திருத்தங்களை ஒழித்துவிட்டது. ஆனால் இதே நிலைமையிலிருந்த போர்த்துகலில், அயலார் தலையிடுவதைப் பிரித்தானிய மந்திரி கான்னிங் தடுத்தார். பின்பு ஸ்பெயினில் தாராள மனப்பான்மைக் கொள்கைகளுக்குச்சார்பான ஓரரசி பட்டத்திற்கு வந்தாள். ஆனால் உள்நாட்டுக் கலகம் ஆரம்பித்து பல வருஷங்கள் நிலைத்தது. போர்த்துகலிலும் தாராள மனப்பான்மையுடைய அரசி ஆண்டாள். இந்த இரு நாடுகளிலும் பிறநாடுகள் தலையிடுவதை பிரித்தானியர் தடுத்தனர்.

இ∴தெங்ஙனமாயினுஞ் சரி, இவ்விருநாடுகளில் ஒன்றிலாயினும் அரசாட்சி, திறமைவாய்ந்ததாக இல்லை. இதற்குப் பின் பல புரட்சிகளும் குழப்பங்களும் உண்டாயின. பிரேசில் தவிர தனக்கிருந்த ஏனைய குடியேற்ற நாடுகளை இன்றும் போர்த்துகல் வைத்திருக்கிறது. ஸ்பெயின் தென்னமெரிக்கா

வில் தனக்கிருந்த எல்லா நாடுகளையும் இழந்தது. இது அடுத்த அத்தியாயத்தில் கூறப்படும். மேற்கிந்திய தீவுகளிற் சிலவற்றை றையும் கிழக்கிந்திய தீவுகளில் பிலிப்பைன்களையும் வைத்திருந்தது. ஆனல் அந்த நூற்றாண்டினிறுதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் புரிந்த போரின் பயனக அவற்றை இழந்தது. இந்நாடுகள் முன்னிருந்த தம்பெருமையை பின்னென்றும் பெறவில்லை.

வியன்ன ஏற்பாடு முறிவுபட்டது. எதேச்சாதிகாரிகளிடையே நெருங்கின நட்பு நீடிக்கவில்லை. பத்தாண்டுகளுக்குள் அவர்களிடையே மனத்தாபமேற்பட்டது; "பரிசுத்த உடன்படிக்கை" யென்பது படிப்படியாக அரசியல் விஷயங்களிலிருந்து மறைந்துவிட்டது. பின்னர், மகாநாடுகள் அவ்வப்போது கூடினபோதிலும் பிறநாடுகளிற்றலையிடும் பொருட்டுக் கூட்டுக்கருமமொன்றும் நடைபெறவில்லை. தாராளக் கொள்கைகளையும் தேசீயவுணர்ச்சியையும் நசுக்குதற்கு செய்யப்பட்ட முயற்சி, போர்த்துகலிலும், பின்னர், தென்னமெரிக்க நாடுகளிலும் அதற்கப்பால் பிரான்சிலும், பயன்படாதொழிந்தது. பண்டைய எதேச்சாதிகார வல்லரசர்கள், புதுக்கொள்கைகளுக்கும் உணர்ச்சிக்குமிடந்தந்து, ஒரு தனி மனிதனே, அல்லது பிரபுத்துவ வகுப்பினரோ ஆட்சிபுரிதலென்னும் புராதன அரசாட்சி முறைகளை மாற்ற வேண்டியிருந்தது. இதனை இனி வரும் அத்தியாயங்களிற் காண்போம். வியன்ன ஏற்பாட்டிற் பெரும் பகுதி மாற்றப்பட வேண்டியிருப்பினும், 19-ம் நூற்றாண்டு முழுவதிலும், அதுவே ஐரோப்பிய ராச்சியங்களின் ஆதாரமாயிருந்தது.

உதவிக் குறிப்புக்கள்.

புரட்சிகள் சம்பந்தமாகவும் நெப்போலியன் சம்பந்தமாகவும் ஏற்பட்ட போர்களை முடிவுசெய்த வியன்ன உடன்படிக்கையின் தன்மையையும் அதனிபந்தனைகளும் இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளன. ஏற்பாடுகள் நியாயமானவையே; ஆனல் மாந்தரிடையே தாராளக் கொள்கைகள், தேசீயவுணர்ச்சி, என்னு மிரண்டும் வேரூன்றி நின்றதை அரசியல் நிபுணர்கள்

வேண்டுமென்றே கவனியாது விட்டது பெரும் பிழையாகும். அக்காலத்து ஐரோப்பாவை இரண்டாகப் பிரிக்கலாம். (1) எதேச்சாதிகார அரசாட்சிமுறைகளை மாற்றாதுவைத்திருந்த அல்லது மீண்டுந் தாபித்த இராச்சியங்கள்; (2) அரசியலமைப்பில் ஓரளவுக்குச் சுதந்திரம் அளித்த இராச்சியங்கள். (1)-ம் பிரிவைச் சார்ந்த நாடுகளைப்பற்றி விசேடமாக, ருஷ்யா, ஆஸ்திரியா, பிருஷ்யாவைப்பற்றி இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது. இவையே, சமாதான நிலைமையையும் கிறிஸ்தவ சமயத்தையும் பாதுகாத்தற்கென ஏற்பட்டு, ஆனால் பிறகு விரிவான தாராளக் கொள்கைகளை நசுக்குங்கருவியாக அமைந்த ''பரிசுத்த உடன்படிக்கையில்'' கையொப்ப மிட்டவற்றுள் பிரதானமானவை. அடிக்கடி மகாநாடுகள் கூடுவதால், சமாதானத்தை நிலைக்கச் செய்யவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஆன முயற்சிகள் நல்வழிகளிற் பிரயோகிக்கப்படவில்லை; சித்தியும் பெறவில்லை; என்றாலும், உலக சமாதான மென்னும் இலக்கை யடைதற்கு அருமையான படிகளில் அது ஒன்றாயிருந்தது.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1815. பரிசுத்த நட்புடன்படிக்கையும் நால்வர் உடன்படிக்கையும்.

1818. ஏலாஷெப்பல் மகாநாடு.

1820. திரோப்பா மகாநாடு.

1820-23. பிராஞ்சியப் படைகளினால் ஸ்பானியக் கலகம் அடக்கப்பட்டது. 1823.

1821. லேபாக் மகாநாடு.

1822. வெரோனா மகாநாடு. இதற்குப் பின் பிரித்தானியா எதேச்சாதிகார நாடுகளோடு சேராது பிரிந்து விட்டது.

1830. போலாந்திற் கலகம் சித்திபெறவில்லை.

1833. ''சொல்வறேன்'' என்னும் சுங்கவரி ஐக்கியச் சங்கத்தைப் பிருஷ்யா ஏற்படுத்தியது.

6. ஐரோப்பியச் சுதந்திர நாடுகள்

பிரித்தானியா. பிரத்தானிய பிரிதிநிதி காசில்ரீ வியன்னு உடன்படிக்கையில் பெரும்பங்கு எடுத்துக்கொண்ட போதிலும், பிரித்தானியாவுக்கு அதனால் மாற்றங்கள் அதிகம் ஏற்பட வில்லை. நெப்போலியனுடைய குற்றத்திற்காக பிராஞ்சிய மக் கள் துன்பமடையலாகாது எனப் பெரிதும் விரும்பினர். ஆகை யால் பிரான்சிய குடியேற்ற நாடுகள் அநேகமாக எல்லாம் திரும் பக் கொடுக்கப்பட்டன. வியன்னு ஏற்பாட்டின்படி, பிரித்தா னியா மோரிஷிஸையும், ஒரு தொகையான பணத்தைக் கொடுத்து ஒல்லாந்தர் வசமிருந்த ஆப்பிரிக்கமுனைக் குடியேற்ற நாட்டையும் இலங்கையையும் பெற்றதோடு, ஐரோப்பாவிலே மால்ட்டாவையும், எலிகோலந்தையும் (இது 1890-ல் ஜெர்ம னிக்குக் கொடுக்கப்பட்டது), அயோனியத் தீவுகளையும் (இது பின்பு புதிய கிரேக்க ராச்சியத்திற்குக் கொடுக்கப்பட்டது) பெற்றது. இதன்பின், உலக வியாபாரத்தின் பெரும்பகுதியைப் பிரித்தானியா பெற்றதோடு, கடல்வன்மை மிகுந்ததும் பெருங் குடியேற்ற நாடுகள் கொண்டதுமான ஒரு வல்லரசாக விளங் கியது என்பது குறிப்பிடத்தக்கது.

பார்லிமெந்து மகாசபை சீர்திருத்தப் படவேண்டு மென் னுங் கூக்குரல், போர்கள் முடியுமுன்னரே ஏற்பட்டது. கொபெற் என்ற எழுத்தாளரைத் தலையாகக் கொண்ட பலரி டம் பிரான்சியப் புரட்சிக் கொள்கைகள் செல்வாக்குப் பெற்றன. அரசியலதிகார முழுவதையும் பெரிய நிலச்சுவான்தாரரிடமே ஒப்படைக்கும் பழைய கொள்கைக்கு மாறுக, அரசியலதிகாரத் திற் பங்குபெற ஏனைய வகுப்பினரையுஞ் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனப் பலர் கருதினர். சிலர் மத்திய வகுப்பினருக் கதிகாரம் கொடுத்தாற் போதும் என்றெண்ண வேறுசிலர் பாராளுமன்றத் தேர்தல் மூலம் அனைவருக்கும் அரசாட்சியிற் பங்களிக்க வேண்டு மென்றனர். போர் முடிந்த பின்னர் கைத் தொழில்கள் எங்கும் நிலைகுலைந்தன. பிரித்தானிய வர்த்தகர் கள் வியாபாரப் பெருக்கத்தை எதிர்பார்த்திருந்தனர். ஆனால் ஒரு பெரிய வியாபார வீழ்ச்சி ஏற்பட்டது. பெரும்பொருள்

செலவிட்டு நடத்தப்பெற்ற போர்களுக்குப் பின் ஐரோப்பாக் கண்டத்தவர் தமக்குத் தேவையான பொருட்களை வாங்க இயலாத அளவுக்கு வறுமைவாய்ப் பட்டமையினாலே, வாணிபங் குறைந்தது. அரசாங்கத் தலைவர்கள், சிறப்பாக வட இங்கிலாந்தின் புதிய பெரும் பட்டிணங்களில் வலுப்பெற்று வந்த இந்த சீர்திருத்த இயக்கங்களுக்கு மிகப்பயந்தனர். ஆகையால் இதைத் தடுக்க மிகவும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்தனர். நல்ல வேளையாக, சீர்திருத்த இயக்கத் தலைவர்கள் பொதுவாய் மிதவாதக் கொள்கைகளைப் பின்பற்றினர்; இதனாலே நாட்டின் எப்பகுதியிலும் தொழிலாளர் பலருக்கு வேலையில்லாத் திண்டாட்டமும், அளவிடற்கரிய கஷ்டமும் காணப்படினும் சிறிதளவுக்கே வலோற்காரமான அல்லது கொடுமையான செய்கைகள் காணப்பட்டன. வேலையற்ற தொழிலாளரின் சார்பாகத் தாராளக் கட்சித் தலைவர்களான பெருங்காணிக்காரர் பாடுபடலாயினர். 1830-ம் ஆண்டில் இவர்கள் கிறேறஸ்ஸெல் இருவர் தலைமையின் கீழ் அதிகாரபதவி யடைந்த போது, சீர்திருத்தச் சட்டத்தைப் பார்லிமெந்து மகாசபையிற் கொண்டுவந்தனர்; இது மக்கள் அனைவராலும் ஆதரிக்கப் பட்டது. பிரபுக்கள் மன்றம் இதை நிராகரித்தபோது பெருங் குழப்பம் ஏற்படலாயிற்று. முக்கியமாக பிரிஸ்டல் நகரில் மேயர் வீடும் பிஷப்பாண்டவர் வீடும் எரிபட்டன. 1832-ல் ஒரு புதிய மசோதா, அதை எதிர்த்தவர்கள் வாக்குக் கொடாதிருக்க, பிரபுக்கள் மன்றத்தின் அங்கீகாரம் பெற்றுச் சட்டமானது. இது நடுத்தரமாந்தருக்கு*—அதாவது உத்தியோகத்தர், வணிகர், வியாபாரிகள், கமக்காரர் என்போருக்கு வாக்குரிமை யளித்தது; ஆனால் அவ்வுரிமை, பட்டிணங்களிலும் நாட்டுப்புறங்களிலுமிருந்த தொழிலாளிகட்கு அளிக்கப்படவில்லை. அனேக 'பெரு'த் தொகுதிகளிடமிருந்து, முன்பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதிகளை அனுப்பிய உரிமை எடுக்கப்பட்டு, அண்மையில் வளர்ந்த பெரிய தொழிற் பட்டிணங்க

* நடுத்தரமாந்தர்: சனங்களை அவரவருக்குள்ள செல்வத்திற்கேற்ப, செல்வர், நடுத்தரவகுப்பினர், எளியவர் என்று பிரிக்கும்போது நடுத்தர நிலையிலுள்ளவர்.

ளுக்குக் கொடுக்கப்பட்டது. நாட்டுப்புறப் பெருமக்கள் பலர் இச்சட்டம் பிரித்தானியாவைப் பாழ்படுத்தும் என நம்பினர். ஆனால் அவர்களின் அச்சம் ஆதாரமற்றதாயிற்று. 1832-க்கு முன் வேறு சில சீர்திருத்தங்களுஞ் செய்யப்பட்டன. இன்னும் பல அடுத்த பதினேந்து ஆண்டுகளில் சட்டமாயின. சில பின் வருமாறு :—மறியற்கூடங்கள் சீர்திருத்தப்பட்டன ; கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்த கிருஸ்தவருக்கும், புரொட்டெஸ்டண்டுகளாயிருந்தும் ஆங்கிலத் திருச்சபையைச் சாராத கிருஸ்தவருக்கும், ஆங்கிலத் திருச்சபையினரின் உரிமைகள் அளிக்கப்பட்டன. பிரித்தானியருக்குரிய பிரதேசங்களிலெல்லாம் எவரும் அடிமைகளை வைத்திருக்கக் கூடாதென விதிக்கப்பட்டது. நகரங்களின் தலத்தாபன ஆட்சி முற்றுகச் சீர்திருத்தப்பட்டது. இறுதியாக, தானியத்தின் மீதும் வேறு பல பொருட்களின் மீதும் விதிக்கப்பட்ட இறக்குமதிச் சுங்கவரிகள் நீக்கப்பட்டன. இதனால் ஒருசில பொருட்கள் நீங்கலாக ஏனையவை சுங்கவரி செலுத்தாமலே நாட்டில் இறக்குமதியோ ஏற்றுமதியோ செய்யப்படலாம் என விதிக்கப்பட்டது.

இவ்வியக்கத்தை " விரிநிலைக் கொள்கையினர் இயக்கம்" என்றும் சிலர் கூறுவர். பிரித்தானிய அரசியற் பெருங் கட்சிகள் இரண்டினுள் ஒன்று மென்மேலும் சீர்திருத்தங்களை செய்ய வேண்டுமென நம்பினமையினாலே, அது பிற்காலத்தில் "விரிநிலைக்கட்சி" என்றழைக்கப்பட்டது. ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளில் இவ்வகைச் சீர்திருத்தங்களை நாடியவரிடமும், தம் நாட்டை அன்னியராட்சியினின்றும் விடுவிக்க வேண்டுமென்று விரும்பினவரிடமும், பொதுவாகப் பிரித்தானியர் அனுதாபங்கொண்டனர். பிறதேசங்களின் உள்நாட்டுக் கருமங்களில் தலையிடாதிருப்பதையே பிரித்தானிய அரசாங்கத்தார் ஒரு பொது விதியாக கொண்ட போதிலும், ஐரோப்பாவில் விரிந்த நோக்க முடையவர்களும் தேசீய இயக்கத் தலைவர்களும் தமக்குப் பிரித்தானியரின் அனுதாபம் எப்போதுங் கிடைக்கும் என நம்பினர்.

பிரான்சு. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர், 16-ம் லூயியின் சகோதரரான 18-ம் லூயி அரசனுக்கப்பட்டான்.

(16-ம் லூயியின் அதிஷ்டம் கெட்ட மகன்தான் 17-ம் லூயி. இவன் ஒருபோதும் பட்டத்திற்கு வரவில்லை.) காசில்ரீ, பிரான்சிய இராஜதந்திரி ரல்லிருன்ட் என்ற இருவரின் முயற்சியால் வியன்னா மகாநாட்டில் பிரான்சு கடுமையாகத் தண்டிக்கப்படவில்லை. அது போரில் வென்ற நாடுகளனைத்தையும் இழந்ததோடு நட்ட ஈடாகப் பணமும் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் அது, பிருஷ்யா பெரிதும் விரும்பிய அல்சேசையும் லொறேனையும் றைன் பிரதேசத்தையும் இழக்கவில்லை.

இ.·.திங்ஙனமாயினும், முந்திய அரசாட்சி முறைகள் உயிர்ப்பிக்கப்படவில்லை; நெப்போலியனின் சீர்திருத்தங்களில் பெரும்பாலானவை பின்பற்றப்பட்டன. பார்லிமெந்து போன்ற ஒரு சபை அமைக்கப்பட்டது. ஆனால் பிறநாடுகளிலிருந்து திரும்பிய பிரபுக்களுக்கு இது திருப்தி அளிக்கவில்லை. யோக்கியமென்பது எள்ளளவேனு மில்லாதவனனலும் புத்திக்கூர்மையுள்ள ரல்லிருன்டை விலக்கியது மல்லாமல், நெப்போலியனைத் திரும்பிச் சேர்த்த குற்றத்திற்காக 'ருஷ்ய பின்வாங்கலிற்' புகழ் பெற்ற மார்ஷல் நா எனும் வீரனுக்கும் இவர்கள் மரண தண்டனை விதித்தனர்.

இவர்கள் எவ்விதப் புரட்சிகளையும் எதிர்த்து நாட்டைப் பழைய நிலைமைக்குக்—இதுதான் புரட்சிக்கு மாறுன 'பிற்போக்கு' எனப்படும்—கொண்டுவர எல்லா வழிகளிலும் முயன்றனர். இத்தகையோரை அடக்கி யாண்டுவந்த 18-ம் லூயி, 1824-ம் ஆண்டிலிறந்தபோது, பின்னேக்கக் கட்சியினரின் தலைவனன அவன் தம்பி 10-ம் சால்சு என்னும் பட்டப் பெயருடன் முடிதரித்தான். அவனும் அவனைச் சார்ந்தவரும் எல்லைமீறி நடந்தமையினால், பொது சனங்களின் ஆதரவு பெற்ற சிறு புரட்சி ஒன்று 1830-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் உண்டாயது; இதனால் அவன் சிங்காதனத்தினின்றும் நீங்கினான்; அவன் கட்சியினரும் அதிகார பதவியிலிருந்து அகற்றப்பட்டனர். பின்பு அவனது ஒன்றுவிட்ட சகோதரன் ஓர்லியன்ஸ் பிரபு, லூயி பிலிப்பு 'பிராஞ்சியரின் அரசன்' என்னும் நாமம் பூண்டு சிங்காதனமேறினான். தாராளக் கொள்கைகளை ஆதரிப்பதாக வாக்களித்த இவன் ஆட்சி "ஜூலைமாத ஆட்சி"

எனப்படும். நிற்க லூயி பிலிப்பு, ஒரு சூழ்ச்சிக்காரன். பத்தாண்டு காலத்துக்குப் பிராஞ்சியர் இவன் ஆட்சியைப் பொறுத்துப் பார்த்தனர். இங்கிலாந்துடன் நட்பு கொண்டிருப்பதை அரசியற்றந்திரமாக இவன் கொண்டிருந்ததோடு, வட ஆப்பிரிக்காவிலுள்ள அல்ஜீரியாவை வெல்லுதற்கு முந்திய அரசன் செய்த ஏற்பாட்டையும் விரைவுப் படுத்தினன். ஆனால் இவனுக்குப் பிறரை வசியப்படுத்துஞ் சக்தியில்லை. உண்மையிலே நீண்ட கன்ன வீசை கூடிய இவன் பார்ப்போர் நகைக்கும் தோற்ற முடையவனு யிருந்தான். மேலும் பிராஞ்சியர் எளிதில் எதனேயும் பரிகசிக்குந் தன்மையர். அவர்களிற் பலர் தமது கஷ்டங்களனேத்துக்கும் நெப்போலியனே காரணம் என்பதை மறந்து, அவன் போரிற் பெற்ற கீர்த்தியையும், வசீகரத்தோற்றத்தையும் நினேந்து, அவன் தம்மையாண்ட காலமே சிறந்த காலமெனக் கருதுவாராயினர். சிலர் எவ்வகையிலும் புதிய அரசியலும் சமுதாயம் அமைக்கப்படுமென எதிர் பார்த்தனர்; இவர்கள் "சோஷலிஸ்டுகள்" எனப் பட்டனர். 1840-ம் ஆண்டுக்குப் பின்னர், ஜூலை ஆட்சி மென்மேலும் குடிகளின் நன்மதிப்பை இழக்கலாயிற்று. இறுதியாக 1848-ம் ஆண்டில், லூயி பிலிப்புக்கு ஆதரவளிக்கும் பிராஞ்சியர் எவரும் இல்லை. சிறுசச்சரவொன்று, பாரீசு நகர வீதிகளிற் கலகமாகப் பெருத்து, விரைவிற் புரட்சியாக மாறி, லூயி பிலிப்பை அரசிருக்கையினின்றும் நீக்கியது. 1848 புரட்சிகள் மலிந்த வருடம். பிரான்சு பழைய ஆட்சி முறைகளுக்கு மாருகத் திட்டமாகத் தீர்த்து, ஐரோப்பிய சுதந்திர நாடுகளில் ஒன்றுகியது.

பிராஞ்சிய அரசனை லூயி பிலிப்பு

ஒல்லாந்தும் பெல்ஜியமும். பெல்ஜியம் எக்காலத்தும் சுதந்திரம் பெற்றிருக்கவில்லை. அது, ஒன்றன் பின்னொன்றாக, ஸ்பெயின், ஆஸ்திரியா, புரட்சிகாலத்துப் பிரான்சு ஆதியவற்றுக்குக் கீழ்ப்பட்டிருந்தது. நெடுங்காலமாக ஒரு வகைக் குடியரசாட்சி பெற்றிருந்த ஒல்லாந்தை, அரசனுளும் நாடாக்க வியன்னா மகாநாடு தீர்மானித்தது. அதாவது, குடியரசின் தலைவனான ஓரஞ்சுச்சிற்றரசனே அரசனுக் முடிசூடவும், ஒல்லாந்தோடு பெல்ஜியத்தையும் அவன் ஆளவும் வேண்டுமென அம்மகாநாடு தீர்மானித்தது. தென்னப்பிரிக்காவையும் இலங்கையையும் ஒல்லாந்து இழந்ததற்காக நட்டஈடாக இது இருக்கட்டும் என்று இந்த மாற்றத்திற்குப் பிரித்தானியா உடந்தையாயிருந்ததெனக் கருதப்பட்டது. இதனால், பிரான்சின் எல்லைப்புறத்தில் அதன் ஆக்கிரமித்தலுக்குத் தடையாக வன்மையுள்ள ஒருநாடு ஏற்படும் என்பதே அதன் நோக்கமாம். இவ்வேற்பாட்டினால், பிரதானமாக, சுவாதீனம் விரும்பிய பெல்ஜியர் நீங்கலாக ஏனையோர் திருப்தியடைந்தனர். பெல்ஜியரோ, கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்தவர்; ஆனால் ஒல்லாந்தர் புரொட்டஸ்தாந்திய திருச்சபையைச் சார்ந்தவர். இதனிலும் பிரதானமான இன்னொரு விஷயம், பெல்ஜியர், தாம் தனிப்பட்ட சாதியினர் என்னும் தேசீய வுணர்ச்சி பெற்றதாம். அவர்களரசனும் டச்சனுமான உவில்லியம், அவர்களை மதியாகத்துடன் ஆளவில்லை. பிராஞ்சியர் 1830-ம் ஆண்டில் தம்மரசனை எதிர்த்தெழுந்தனரென்பதைப் பெல்ஜியர் கேட்டவுடனே, தாமும் பிராஞ்சியர் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி, டச்சருக்குட்படுவதில்லையெனப் பிரசித்தப்படுத்தினர். அப்போது, டச்சரசன் போர்க்கோலம் பூண்டு படையுடன் வந்து பெல்ஜியக்கலகக்காரரைத் தோற்கடித்தனன். ஆனால், பிரான்சின் புதிய அரசனும் பிரித்தானியரும் பெல்ஜியருக்குப் போர்க்கருவிகளை உதவ முன் வருவதாக அச்சுறுத்தவே, டச்சர் விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. அந்தப் புதிய நாடு ஜெர்மானிய பிரபு சாக்ஸ் கோபேர்க்கை அரசனுகக் கொண்டது. அந்த நாட்டை மற்ற ஐரோப்பிய நாடுகள் அங்கீகரிக்க சிறிது காலம் எடுத்தது. 1839-ம்

ஆண்டில், பிரித்தானியா, பிரான்சு, ஆஸ்திரியா, ருஷ்யா, பிருஷ்யா ஆகிய ஐந்து நாடுகளும் ஒன்றுகூடி, புதிதாகத் தோன்றிய பெல்ஜிய ராச்சியத்தைத் தாம் அங்கீகரிப்பதாகவும், அந்நாட்டின்மீது வேறெவரும் படையெடுக்க விடுவதில்லை என்றும், அதாவது, அதன் நடுநிலையை ஏற்றுக்கொள்வ தென்றும், உறுதி கூறின. அன்ட்வேர்ப்பை நெப்போலியன் ஒருகாலம் அரண் செய்யக் கருதினான். அப்படிச் செய்திருந் தால் அது "இங்கிலாந்தின் தலைக்கு நேரே நீட்டப்பட்ட துப்பாக்கி"யாக விருந்திருக்கும் என்றும் சொன்னான். பிராஞ்சியர் மீண்டும் பெல்ஜியத்தைப் பிடித்தல் கூடுமெனப் பிரித்தானியர் கருதினதினாலே இவ்வாறு செய்யப்பட்ட தென்க. ஆயின், அவர்கள் ஒருபொழுதும் அதைப் பிடிக்க முயன்றதில்லை. 1914-ம் ஆண்டில் முதலாவது உலகப் பெரும்போர் தொடங்கிய காலத்தும், பின்பு 1940-ம் ஆண்டி லும் பெல்ஜியத்தினுடைய நடுவுநிலைமை ஜெர்மனியாற் தகர்க் கப்பட்டது.

பெல்ஜியம் ஒரே அரசனால் பலவாண்டுகாலம் ஆளப் பட்டு, செல்வம் ஓங்கப்பெற்றது. கைத்தொழிற் புரட்சியின் பயனாய், அந்நாட்டிலுள்ள நிலக்கரியும் இரும்பும் அதனைச் சீக்கிரமே மாறுதலடையச் செய்தன. பெரிய கைத்தொழிற் சாலைகள் தாபிக்கப்பட்டன ; இதனால் நன்மை தீமைகள் பல விளைந்தன.

ஆனால் ஒல்லாந்தோ, பிராஞ்சியப் போர்களுக்கு முன் னிருந்ததுபோன்று அத்துணை பெரிதாகவோ, அல்லது பிரதான மாகவோ இருக்கவில்லை. டச்சர் போர்களிலே தலையிட்டுக் கொள்ளாமல், பிரதானமாகத் தமது பெருங்குடியேற்ற நாடு களுடன் வியாபாரம் நடத்திக் கொண்டு தம்மியல்புக்கு ஏற்ற படியே அமைதியாக முன்னேற்ற மடைந்து கொண்டிருந்தார் கள். ஆனால், இரண்டாவது உலகப் பெரும்போர் ஏற்பட்டதும் காத்திராப் பிரகாரமாக அவர்களும் போரினுள் இழுக்கப் பட்டதும் அதிசயமும் கலக்கமும் நிறைந்த காரியமாகும். 1940-ம் ஆண்டில் ஜெர்மனி காரணம் யாதுமின்றிப் போருக் கெழுந்து அவர்களுடைய நாட்டினையும் கைப்பற்றிக்

கொண்டது. இரண்டு ஆண்டுகளுக்குப்பின் ஆசியாவில் அவர்களுக்கிருந்த குடியேற்ற நாடுகளும் யப்பானுற் கைப் பற்றப்பட்டு யுத்தத்தின் முடிவில், இக்குடியேற்ற நாடுகள் பிரிந்து, சுதந்திர இந்தோனேசீயக் குடியரசாகின.

தென்னமெரிக்கா. போர்த்துகீச அரச குடும்பத்தினர் நெப்போலியனுடைய சேனைகளினுற் பிடிக்கப்படுவதினின்றும் தப்பிக் கப்பலேறி, தமக்குரிய "**பிரசீல்**" என்னும் பரந்த நாட்டை அடைந்தனர். தென்னமெரிக்காவின் எஞ்சிய பகுதியில் வடகரையிலுள்ள பிரித்தானிய, பிரான்சிய, டச்சகியானுக்கள் தவிர்ந்த நிலப்பரப்பும், மத்திய அமெரிக்காவில் பெரும் பகுதியும் ஸ்பானியருக்கிருந்தது. ஆனல் அங்கேயுள்ளவர் ஸ்பெயினும் போர்த்துக்கலும் தமக்களித்தகுறைவான ஆட்சியை விரும்பவில்லை. குடாநாட்டுப் போர் நிகழ்ந்த கஷ்டமான காலத்தில் யோசேப் பொனப்பார்ட்டை அவர்கள் தம்மரசனுக ஏற்றுக்கொள்ளாமல் தங்களைத் தாமே ஆண்டனர். சுயராச்சியம் வேண்டி நின்றவர்க்கும் ஸ்பானிய அரசனுடைய அதிகாரத்தை ஆதரித்த அரசகுடும்ப விசுவாசிகளுக்குமிடையில் அதிகம் குழப்பம் நடந்தது. 1812-ல் தன் தாய் நாட்டை அங்கியர் ஆளுகையினின்றும் விடுவிக்கப் பொலிவர் என்பான் தீர்மானித்தான். அவன் 1818 வரையும் பல இடுக்கண்களுக்கும் தோல்விகளுக்கும் ஆளாகி, 1821-ல் கொலொம்பியாக் குடியரசைத் தாபித்தான். இம் முன்மாதிரியை தென், மத்திய, அமெரிக்காவின் ஏனைய பாகங்களிலிருந்தவர்களும் பின் பற்றினர். அனேக பிரித்தானியர் பொலிவருக்காகப் போர்புரிய அமெரிக்காவுக்குச் சென்றனர். பிரித்தானிய அரசாங்கமும் அனுதாபங் காட்டியது. 1823-ல் ஸ்பானிய அரச வம்சத்தினருக்கே பிரான்சியர் உதவி புரிவதைத் தடுத்தற் பொருட்டு, பிரித்தானிய பிரதம மந்திரி கான்னிங் புதிதாக தாபிக்கப்பட்ட நாடுகளை பிரித்தானியா உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கிறது எனப் பிரகடனப் படுத்தினன். இதனல் 1830-ல் தென், மத்திய அமெரிக்காவிற் பெரும் பாகத்திலிருந்தும் ஸ்பானிய அதிகாரம் மறைந்து விட்டது. 1822-ம் ஆண்டில், போர்த்துக்கீச அரச

வம்சத்தவன் ஒருவனே பிரசீல் மன்னனைக் கொண்டு சுதந்திர நாடாகியது. பல வருடங்களாக ஓரளவு சிறப்பாக ராச்சியம் நடந்ததாயினும், ஈற்றில், 1889-ல் குடியரசு நாடாக மாறியது.

19-ம் நூற்றாண்டில் பதினாறு தென், மத்திய அமெரிக்கக் குடியரசுகளின் சரித்திரம் குழப்பங்களையும் திருப்தியற்ற நிலை மையையும் கூறுவதாகும். பெருஞ் சிரமத்தின் பயனாய்ப் பெற்ற சுதந்திர அரசியல் முறைகளைத் தக்க முறையிலுப யோகிக்க, அப்போது அவர்கள் சக்தியற்றிருந்தவரெனத் தோற்றுகின்றது. கைக்காசு வாங்கியும் எதேச்சாதிகாரஞ் செலுத்தியும் வந்த தலைவர்களிடம் அதிகாரமிருந்தது. தேவை யற்ற போர்களும் புரட்சிகளும் உண்டாயின. ஆனால், சமீப காலத்திலே இவற்றுள் பல குடியரசு நாடுகள் படிப்படியாகச் சமாதான நிலையை யடைந்து வருகின்றன வென்று கூற லாகும். மக்கள் பெருஞ்செலவைத் தரும் யுத்தங்களில் ஒருவ ரோடொருவர் ஈடுபடாமல், கடுமையாக உழைத்துத் தென்ன மெரிக்காவிலுள்ள இயற்கை வளங்களை விருத்தி செய்வார் களானால் நாடு வருங்காலத்தில் பெருஞ்செல்வத்தை அடை யும் என்பதில் சந்தேகமில்லை.

உதவிக் குறிப்புக்கள்

வியன்னா மகாநாட்டுக்குப் பிந்திய ஆண்டுகளிலே, ஐரோப்பாவில் ஓரளவுக்குக் கூடின சுதந்திரம் பெற்றிருந்த நாடுகளின் முன்னேற்றம் இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டது. பிரித்தானியாவில் சீர்திருத்த இயக்கத்தினாலும், பிரான்சில் ஜூலைப் புரட்சியினாலும் நடுத்தர வகுப்பினருக்கு அதிகார பதவி கிடைத்தது; இவ்விரு இயக்கங்களும் தாராளக் கொள் கைகள் பரவியதைக் காட்டும். 1830-ம் ஆண்டில் பிரான்சிலும் பெல்ஜியத்திலும் புரட்சிகள் உண்டான வரலாற்றிலிருந்தும், அதற்குச் சற்று முன்பாகத் தென்னமெரிக்காவிலிருந்த ஸ்பா னிய, போர்த்துகீச குடியேற்ற நாடுகளில் கலகஞ்செய்த சரித் திரத்திலிருந்தும் வியன்னா ஏற்பாடு முறிவடைந்ததென்பது தெளிவாம். 1830-ம் ஆண்டு முதலாக, சிறு நாடுகளான ஒல் லாந்தும், சுவிட்சர்லாந்தும், ஸ்காந்திநேவிய நாடுகளும் ஒழுங்

காகவும் கிரமமாகவும் முன்னேற்றமடைந்து வருவதோடு, நெருக்கடியான உள்நாட்டுக் கஷ்டங்களிலும், பலதேசச்சிக்கல் களிலும் பெரும்பாலும் அகப்பட்டுக் கொள்ளாது வந்துள்ளன. 1940-ஆம் ஆண்டில், ஜெர்மனியர் ஒல்லாந்தையும், டென் மார்க்கையும், நோர்வேயையும் எதிரிடைக் காரணங்கள் யாது மின்றி வலோற்காரமாகக் கைப்பற்றிக் கொடூரமான முறை களால் அடக்கி யாண்டனர்.

சில பிரதான நிகழ்ச்சிகள்

1812-1830. தென்னமெரிக்கக் குடியரசுகளின் இரட்சகனை பொலிவரின் சிறந்த காலம்.

1823. மன்ரோக் கொள்கையை அமெரிக்க ஐக்கியநாடு தழுவியது.

1823-24. தென்னமெரிக்கக் குடியரசுகளின் சுதந்தரத்தைப் பிரித்தானியா அங்கீகரித்தது.

1830. பிரான்சிற் புரட்சி. "பிராஞ்சியரினரசனை" லூயி பிலிப்பு.

ஒல்லாந்திலிருந்து பெல்ஜியம் பிரிந்தது.

1832. பிரித்தானியாவில் முதலாஞ் சீர்திருத்தச் சட்டம் பாராளு மன்றத்தினு லங்கீகரிக்கப்பட்டது.

1826-1846. பிரித்தானியாவிலே பல சீர்திருத்தச் சட்டங்கள் பாராளுமன்றத்தினு லங்கீகரிக்கப்பட்டன.

1840-1848. "ஜூலை அரசு" பிரான்சிலே தாழ்நிலை யடைந்தது.

7. தாராளக் கொள்கைகளும் புரட்சியும்

1830-ம், 1848-ம் ஆண்டுப் புரட்சிகள்: பிரான்சிய புரட் சியும் பெரிய யுத்தங்களும் பல பகுதிகளில் தாராளக்கொள்கை களுக்கு எதிர்ப்பை உண்டுபண்ணின. இதைப் பல ஐரோப்பிய அரசாங்கங்கள் தங்களுக்கு வாய்ப்பாக்கிக்கொண்டன. ஆனல் இவ்வரசாங்கங்கள் கையாண்ட கடும் முறைகள் தாராளக் கொள்கைக்கிருந்த எதிர்ப்பை மாற்றி அனுதாபங்கொள்ளச் செய்தது. அதனல் அடுத்த இருபது வருடங்களில் தாராள

இயக்கம் பெரிதும் வளர்ந்து, மேலும் மேலும் ஏதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து, தங்கள் அரசாங்கத்தில் தாம் பங்குபற்ற வேண்டுமென்று பொதுமக்கள் பெரிதும் விரும்பினர். பிரித்தானியாவில் மாத்திரமன்றி, பிரான்சிலும் பெல்ஜியத்திலும் இந்த மாற்றங்களின் விளைவுகளை ஏற்கனவே கண்டோம். இதே உணர்ச்சி ஜெர்மனியிலும் இத்தாலியிலும் வலுவடைந்து, தேசிய உணர்ச்சியுடன் கலந்து, பெரும்பாலும் இரத்தக் களரியிலும் புரட்சியிலும் முடிவடைந்த குழப்பங்களை உண்டாக்கியது.

மிகப்பிரதானமான சில புதுக்கொள்கைகள் 1831—39-ம் ஆண்டுகளுக்கிடையே தோன்றின. இவை பொதுவாக "**சோஷலிஸ்ட் கொள்கைகள்**" என்று கூறப்படும்; துவக்கத்தில் இக்கொள்கையினர் மித மிஞ்சி நடந்தனர்; வலோற்காரவழிகளைத் தூண்டி வந்தனர். எவரும் எதிலும் சமமாயிருக்கவேண்டும் என்பதே இவரின் முக்கிய நோக்கம். இக்கொள்கைகள் முதன் முதலாகத்தோற்றியபோது, எவருக்கும் உடமையான பொருள் இருத்தல் கூடாதென இக்கட்சியினர் கருதி, உடமையுள்ள வரை விசேடமாக எதிர்த்தனர். பழைய சோஷலிஸ்டுகள் இதை ஆதரிக்கவில்லை. பொருளை, அதனை உடையவரிடமிருந்து வலோற்கார முறைகளினூற் பெறவேண்டுமென அவர்கள் வாதித்தமையினால் உடமையுள்ளவருக்கு இவ்வியக்கம் அருவருப்பாயிருந்தது. ஆனால் உடமையற்ற ஒரு சிலர் இக்கொள்கையைப் பெரிதும் விரும்பினர். இத்தகையாரின் கடுஞ் சொற்களும், சில சமயங்களில் அவர்களின் செய்கைகளும் ஐரோப்பாவிலுள்ள அரசாங்கத்தவர் அனைவருக்கும் பெருந் திகிலை விளைத்தன. இவ்வியக்கத்தின் உண்மையான தாபகன் **ரொபட் ஓவன்** என்னும் ஆங்கிலேயத் தொழிற்சாலை முதலாளி; இவன் பிரித்தானியத் தொழிலாளியின் கஷ்ட நிலைமையைக்கண்டு மனக்கொதிப்படைந்தான்; ஆனால் கடுங் கொள்கைகளும் உக்கிரமான வழிகளும் சில பிராஞ்சிய, ஜெர்மானியச் சோஷலிஸ்டுகளால் பிரசாரஞ் செய்யப்பட்டன; இவர்களுள் மிகப் பிரசித்தி பெற்றவன் கா(ர்)ல் மா(ர்)க்ஸ் என்பவன். இவன் இயற்றிய "**முதற் பணம்**" என்னும் நூல் பலர் சிந்தனையில்

பெரும் செல்வாக்குடையதாகவும், 'கொம்முனிஸ்டுகள்' என்று கூறப்படும் பொதுவுடமைவாதிகளின் கருத்துகளுக்கு ஆதாரமாகவும் இன்று இருக்கிறது. 1867-ம் ஆண்டு இது வெளியிடப்பட்டது. சோஷலிஸ்டுகளும், இக்காலத்துச் சன சமூகவமைப்பை அவசியமானபோது ஈவிரக்கமின்றி அழிக்க வேண்டுமெனக்கூறும் "ஆட்சியழிப்பு வாதி" களும் தம்முள் வேறுபட்ட கொள்கையினரானபோதிலும், இரு கட்சியினரையும் ஒரு கொள்கையுடையவர் எனவே 19-ம் நூற்றாண்டில் மாந்தர் கருதினர். இரு கட்சியினரையும் சன சமூக வைரிகளெனவே அரசாளும் வர்க்கத்தினர் கருதினர்.

ஜெர்மானிய தாராளக் கட்சியினர். சுயராச்சிய இயக்கம் விசேடமாக ஜெர்மனியில் வன்மை பூண்டிருந்தது. தேசீய ஒற்றுமைக்கு ஜெர்மானியர் பேராவல் பூண்டிருந்ததை யாம் முன்னரே கூறியுள்ளோம். ஏறக்குறைய நாற்பது தனிப்பட்ட ராச்சியங்களே எதேச்சாதிகாரிகள் ஆள்வதினும் பார்க்க, சுதந்திரம் பெற்ற ஓரிராச்சியத்தை தாபிக்க ஜெர்மானியர் பலர் விரும்பினர். ஆனல், சுதந்திர இயக்கத்தைப்பற்றிப் பிருஷ்ய, ஆஸ்திரிய அரசாட்சியார் வேறுபட்ட கருத்துக் கொண்டிருந்தனர். இருவரும் சுயராச்சிய அரசியலமைப்பை விரும்பவில்லையெனினும், பிருஷ்யர், பிருஷ்யத் தலைமையில் ஜெர்மானிய ஒற்றுமையை விரும்பினர். ஆனல், ஆஸ்திரியரோ, எவ்விதத் தேசீய வுணர்ச்சியையும் எதிர்த்தனர். புரட்சி மலிந்த 1848-ம் ஆண்டில் இந்நிலைமை உச்சம் பெற்றது. பிரான்சிற் புரட்சி தோன்றியவுடனே, தம்நாட்டிலும் பாராளுமன்ற முறைப்படியான ஆட்சிவேண்டுமென ஜெர்மானிய தாராளக் கட்சியினர் கிளர்ச்சிசெய்தனர். ஒவ்வொரு அரசனும், தன் பதவியை இழக்க நேரிடுமெனப் பயந்து, இவ்வாட்சி முறைக்கிணங்க வேண்டியதாயிற்று. வயதில் முதிர்ந்த மெட்டர்நிக்கை முதன் மந்திரியாகக் கொண்ட ஆஸ்திரிய சக்கரவர்த்தி மாத்திரம் இதற்கு இணங்கவில்லை. வியன்னா மக்கள் புரட்சி செய்தார்கள். மெட்டர்நிக் பதவியை விட்டு ஓட, மக்கள் கோரிக்கைகள் தீர்க்கப்பட்டன. பேர்லினிலும் கலகம் உண்டாக பிருஷ்ய அரசனும் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.

சுதந்திர ஆட்சிமுறை பெற்றபின்னர், ஜெர்மானியச் சிறு நாடுகளனைத்தையும் ஓராட்சிக்குட்படுத்துவதற்காக ஒரு மகா நாட்டை ஜெர்மானிய தாராளக் கட்சியினர் கூட்டினர். இம்மகா நாடு விருங்க்வர்ட்டிற் கூடி, பல விஷயங்களைப்பற்றி முடிவு செய்ததோடு ஜெர்மானியரை அதிகமாயுடையதும் சில நூற் ருண்டுகளாக டேனியரால் ஆளப்பட்டு வந்ததுமான சிலெஷ் விக்கு-ஒல்ஸ்டீன் மாகாணங்களை டேனியரிடமிருந்து பிடுங்க வேண்டுமெனத் தீர்மானித்தது. இதன் பொருட்டுத் திரட்டி யனுப்பப்பட்ட படை தோல்வியடைய, அது விருங்க்வர்ட்டு மகாநாட்டுக்கு அபகீர்த்தியுண்டாக்கியது. உடனே பிருஷ்ய அரசன் தான் அநுமதித்த சுதந்திர அரசியலமைப்பை நீக்கி விட்டான். ஆஸ்திரிய அரசனும் அவ்வாறே செய்ய எத்தனிப் பதற்குமுன் உள்ளக்கிளர்ச்சியைத் தூண்டும் பல சம்பவங்கள் நிகழ்ந்தன.

ஆஸ்திரிய நாட்டுப் புரட்சி : நிகழ்ச்சிகள் பல தலைநக ராகிய வியன்னாவிலும் ஆஸ்திரிய ராச்சியத்தின் ஏனைய பகுதி களிலும் சீக்கிரத்திற் கிளர்ச்சியுண்டாக்கின. பொகீமியா விலும், ஹங்கரியிலும், விசேடமாக இத்தாலியிலும், இக் கிளர்ச்சி தேசீயப்புரட்சியாயது. இந்நாடுகளிலுள்ள மக்கள் நீண்டகாலமாக ஆஸ்திரியர் ஆளுகையைப் பகைத்தனர். எனவே, அவர்கள் இதனை ஏற்ற தருணமெனக் கொண்டனர். இவர்களின் வெற்றி ஆஸ்திரியா-ஹங்கரியைத் துண்டாக்கி விடும்எனப் பயந்து, ஆஸ்திரியச் சக்கரவர்த்தி தன் படைகளை அனுப்பினன். ஆனால் பொகீமியாவில் செக்க குழப்பம் விரை வில் அடக்கப்பட்டது. மற்று, ஹங்கேரியில், மாகியக்குழப்பமோ பெருங் குழப்பமாயிருந்தது. ஏனெனில் அந்நாட்டில் எல்லா வகுப்பினரும், ஹங்கரி சுதந்திரத்துடன் துலங்கிய நாட்களைப் பெருமையும் விசனமுங் கலந்த கருத்தினராய் நினைந்து மனம் நொந்தனர். **லூயி கோசத்து** எனும் பெயரிய பெருந்தேசாபி மானி அப்புரட்சிக்குத் தலைமை பூண்டான். 1849-ம் ஆண்டில் அவர்கள் தமது சுதந்திரத்தைப் பிரசித்தஞ் செய்தனர். அவர் களைத் தோற்கடிக்கக்கூடிய வன்மை ஆஸ்திரிய சேனைக்கு இராமையினால், புதிதாக முடி சூடிய பிரான்சிஸ்

யோசேப்புச் சக்கரவர்த்தி, ருஷ்ய சாரைத் தன் உதவிக்கு வரும்படி வேண்டினான். சார், தேசீய இயக்கம் போலரிடையும் பரவுமெனப் பயந்து, உதவி செய்ய பூரண விருப்பத்துடன் முன்வந்து ஒரு சேனையை அனுப்பினான்; ஜெலாசிக்கு என்னும் பெயர் பூண்ட சிலாவிய பிரசை ஒருவனுடைய உதவியும் பிரான்சிஸ் யோசேப்புக்குக் கிடைத்தது. வியன்னைவைப் பிடிக்கவிருந்த மாகியர் இப்போது தோற்கடிக்கப்பட்டனர்; அவர்களுடைய கலகம் பெருங் கொடுமையுடன் அடக்கப் பட்டது. இதற்குப் பதினெட்டாண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் அதிகமான சுதந்திரம் பெற்றனரெனினும், பிரான்சிஸ் யோசேப்பின் பிரசைகளாகவே யிருந்தனர். இத்தாலியில் நடந்தவற்றையும், இறுதியில் இத்தாலியர் எவ்வாறு பூரண சுதந்திரம் அடைந்தார்கள் என்பதையும் இன்னொரு அத்தியாயத்தில் காண்போம். இதுகாறுங் கூறியவற்றிலிருந்து, ஆஸ்திரியப் பிரதேசங்களைப் பற்றினமட்டில் தாராள கட்சியினரியக்கமும் தேசீய இயக்கமும் சித்திபெறாது போயினவென்பது தெளிவாம். ஆஸ்திரிய அரசாங்கம் தேசீய இயக்கத்திற்கு மாறுக இருந்தமையால் அடிக்கடி குழப்பங்கள் ஏற்பட்டன. 1914—18-ல் நிகழ்ந்த முதலாமுலக யுத்தத்தின் போது ஆஸ்திரிய சாம்ராச்சியம் சின்னப்பட்டது.

பிராஞ்சிய புரட்சியும், பின் விளைவும். பிரான்சிலிருந்து லூயி பிலிப்பு ஓடிவிட்ட பின்னர், குடியரசாட்சி தாபிக்கப் பட்டது. ஆனால், சோஷலிஸ்டுகள் பெருந் தேசீய தொழிற் சாலைகளைத் தாபிப்பாராயினர். சீரான வகையில் இது நடைபெறவில்லை. தொழிலாளிகள் வேலை செய்யாமலே சம்பளம் பெற அங்கே வந்தனர். செலவு கூடியதும் பயனற்றதுமான இப்புதுமுறையை அதிகாரிகள் நிறுத்த, உடனே பாரீசு நகரத்துச் சோஷலிஸ்டுகள் கிளர்ச்சி செய்தெழுந்தனர். கலகங்கள் நிகழ்ந்தன. உடமையுள்ளோர் அச்சங்கொண்டு, மகா நெப்போலியனின் மருமகனான லூயி நெப்போலியன் பொனப்பார்ட் என்பவனைத் தன் தலைவனாகத் தெரிவு செய்தனர். இவன் இதற்கு முன்னரே லூயி பிலிப்புவை அதிகார பதவியிலிருந்து வீழ்த்த இருமுறை முயன்றவன்;

நெப்போலியனுடைய சக்கராதிபத்தியத்தைத் தாபிக்க வேண்டியது தன் ஊழ்வலியென்று பூரணமாக நம்பினவன்; இவன் பல வழிகளிற் சாதுரியமுள்ளவனுகவும், சிறந்த கொள்கைகள் பல உள்ளவனுகவும் இருந்தாலும் தனது பெரிய தந்தை, நெப்போலியன் இடத்தை நிரப்பக் கூடியவனுயில்லே. எனினும் இயன்றதைச் செய்தான். குடியரசாட்சிச் சபையுடன் சில தகராறுகளின் பின்னர் இவன் 1852-ம் ஆண்டில் சக்கரவர்த்தியாக முடிசூடினன். தெரிவுச் சீட்டுகளின் மூலம் தன்னைச் சக்கரவர்த்தியாகத் தெரிவு செய்யும்படி அவன் பிராஞ்சியரை வரையும் விண்ணப்பித்துக்கொள்ள, பெரும்பாலார் அவனைத் தெரிவு செய்தனர். பின்பு, முடிசூடாதிறந்த தன் பெரிய தந்தை மகனை இரண்டாவது நெப்போலியனுகக் கருதி அவன் "3-ம் நெப்போலியச் சக்கரவர்த்தி" என்னும் பெயருடன் முடிசூடினன்.

விசுவாசம் நிறைந்த கத்தோலிக்கனுகையால் அவன் வலிய கத்தோலிக்கக் கட்சியினரிடமிருந்து பேராதரவு பெற்றன். அவன் எதேச்சாதிகார முறையில் ஆட்சி செய்த போதிலும், குடிகள் நன்னிலையிலும் திருப்தியுடனிருப்பின், அரசியலமைப்பைப்பற்றிக் கவலே கொள்ளாரென்றெண்ணிப் பல நற் சீர்திருத்தங்களைத் தொடங்கினன். வியாபாரத்தை ஊக்குவித்தான்; பெரிய வீதிகளையும் புகைரதப் பாதைகளையும் அமைத்தான். பாரீசு நகரத்தின் தற்காலத்து உன்னத நிலைமைக்கு அதிகமாகப் பாடுபட்டான். ஆனல், தன் னரசாட்சியைக் கண்டனஞ் செய்யும் முயற்சிகளை எல்லாம் உக்கிரத்துடன் அடக்கினன். புதினப் பத்திரிகைகளும் பாடசாலேப்போதனையும் தன் பிரியப்படியே நடைபெறவேண்டுமெனக் கட்டளேயிட்டான். இயன்றவழிகளிலெல்லாம் 1-ம் நெப்போலியனின் நினைவைப் பெரிதும் புகழ்ந்தான். இதனல் அவ்வேளேக்கேனும் பிராஞ்சியர் இவ்விரண்டாம் சக்கராதிபத்தியத்தை அங்கீகரிக்க ஒப்பினர்.

ஆனல், அவனலும் அவன் பிரசைகளிற் பலராலும், முதலாம் சக்கராதிபத்தியம் இருந்தபோது நிகழ்ந்த பெரும் போரின் வீரச்செயல்களை மறக்க முடியவில்லே. எனவே,

தக்க காரணங்கள் எவையுமின்றி அவன் ருஷ்யாவுக்கு எதிராகக் கிரிமீயப் போரில் தலையிட்டான். இதில் ஓரளவு வெற்றி பெற்றான். ஆஸ்திரியாவுக்கு விரோதமாய் தேசீயக் கட்சியினர்க்காக இத்தாலியிற்றலையிட்டு வெற்றி பெற்றான். போரில் ஆஸ்திரியரை வென்று இத்தாலியருக்குப் பல நன்மைகள் செய்த போதிலும், இத்தாலியருடன் முரண் பட்டுப் பொதுவாகத் தன் கௌரவத்தை யிழந்தான். இறுதி யில் அவன் பிருஷ்யாவுடன் போர்தொடங்க. அதுவே அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயது.

பிரித்தானியத் தீவுகளில் நிகழ்ச்சிகள். ஐரோப்பாக் கண்டத்து நிலப்பரப்பிலிருந்தவரினும் பார்க்கப் பிரித்தானியர் கூடிய சுதந்திரமுடையவர்கள் எனினும், தொழிலாளி களிடையே, 1832-ம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டம் போது மென்றுவது, கஷ்ட சீவியம் நடத்தும் நிலைமை போது மென்றுவது திருப்தி கொண்ட கட்சியினர் இருக்கவில்லை. 1837-ம் ஆண்டளவில் "உரிமைப்பத்திர இயக்கம்" தோன் றியது. இவ்வியக்கத் தலைவர்கள் நன்மை பயக்கும் ஆறு உரிமை களை ஒரு பத்திரத்தில் எழுதிக்கொண்டதினாலே இப்பெயர் கொடுக்கப்பட்டது. இவ்வுரிமைகள் பின்வருமாறு:—(1) ஆண் மக்களுக்கு வாக்குரிமை—அதாவது 21-ஆண்டுக்கு மேம்பட்ட ஆண்பிள்ளை எவனும் வாக்குரிமை பெறவேண்டும். (2) பாராளுமன்ற அங்கத்தவருக்கு வேதனந் தரவேண்டும். (3) எவனும் தனக்குநம்பிக்கையுள்ள ஒருவனுக்கே தெரிவுச் சீட்டை யளிப்பதால் நட்டமடையாதிருக்க, தன் தெரிவுச் சீட்டை இரக சியமாகச் சமர்ப்பிக்க உரிமைவேண்டும். (4) வாக்குரிமையாளன் எத்துணை எளியவனாயினும், அவனும் சனப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுதற்பொருட்டு, பாராளுமன்ற அங்கத்தவர் உடமையுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று அதுகாறு மிருந்த நியமத்தை நீக்கவேண்டும். (5) வாக்குரிமையாளர் பிரிவுகள்—அதாவது: ஒரு பிரதிநிதியைத் தெரிவுசெய்யும் எந்தப் பிரிவும்—சமதொகையான வாக்காளர்களைக் கொண் டிருக்கவேண்டும். (6) பாராளுமன்றம் ஒவ்வோராண்டும் தெரிவு செய்யப்படவேண்டும். இவ்வாறு உரிமைகளுள் முதல்

நான்கும் பிற்காலத்தில் சட்டபிரமாணங்களாகச் செய்யப்பட்டன. ஐந்தாவதையும் அமுலாக்க பலமுறையும் எத்தனிக்கப் பட்டது.

இவ்வியக்கத்தினருக்குச் செல்வாக்கில்லை; இயக்கத் தலைவர்கள் அறிவாளிகளுமல்லர். நிற்க, தொழிலாளரின் நிலைமை படிப்படியாகத் திருந்திவந்தது. சனங்கள் "தடையற்ற வியாபார" த்தில் ஊக்கமெடுப்பாராயினர். நாட்டினுள் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின்மீது—விசேடமாகத் தானியங்களின்மீது—சுங்கவரி விதித்தல் கூடாதென மாந்தர் கூறினர். "தடையற்றவியாபார" இயக்கம்சிலவாண்டுகாலம்நடைபெற, 1845-1846-ம் ஆண்டுகளில், தானியங்களின் மீது சுங்கவரி விதிக்கக்கூடாதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனல் இக்காலப் பகுதிக்குப் "பசிப்பிணிக்காலம்" என்னும் பெயரளித்த நாட்டின் சீர்கேடான செல்வநிலை, உரிமைப்பத்திர இயக்கத்தை 1848-ம் ஆண்டிலே உயிர்ப்பித்தது. 1839-ம் ஆண்டுக்குப்பின் அவ்வியக்கம் இறந்து பட்டது போலத் தோற்றியது. 1848-ம் ஆண்டிலே உரிமைப்பத்திரக்காரர் பெரியதொரு விண்ணப்பந் தயாரித்து, அதனைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப் பெருங்கூட்டமாக ஊர்வலஞ் செய்யப்போவதாகப் பிரசித்தஞ் செய்தபோது ஊர்வலம் கூடாதென அரசாங்கத்தார் கட்டளையிட்டனர். அவ்விண்ணப்பம் பரிசோதிக்கப்பட்டபோது, கைச்சாத்துக்கள் பல கள்ளக்கைச்சாத்துக்க ளென்பது தெளிவாயிற்று. எனவே அது நகைப்புக்கிடமாகி இயக்கத்தைத் திட்டமாகத் தடுத்துவிட்டது. இவ்வியக்கம் மாத்திரமே பெரிய பிரித்தானியாவின் அமைதியின்மைக்கு உண்மையான அறிகுறியாகும். ஆனல் அயர்லாந்தின் நிலைமை வேருயிருந்தது. அங்கே சில தேசீயவாதிகள் குழப்பஞ்செய்ய முயன்றனர். தமது தனிப்பட்ட பாராளுமன்றத்தை இழக்கக் காரணமாயிருந்த ஐக்கியச் சட்டம் (1800) பல ஐறிஷ்யருக்குத் திருப்தியளிக்கவில்லை; அச்சட்டத்தை நீக்குதற்காக செய்யப்பட்ட முயற்சிகள் அநேகமாய் வலோற்கார முறையைத் தழுவின. ஆனல் அம் முயற்சிகள் முற்ருகத் தவறிவிட்டன; அதற்குப்பின் சிறிது காலத்



1848-ம் ஆண்டில் ''பிளாக்விரியர்ஸ் பிரிஜ்'' என்னுமிடத்தில் கூடிய ''உரிமைப் பத்திர இயக்க''த்தினரில் ஒரு பகுதி.

துக்குத் தேசீய இயக்கம் முன்னிலும் சாந்தமான முறையையே தழுவியது.

தாராளக் கட்சியினரின் இயக்கம் சித்திபெருமை. 1850-ம் ஆண்டளவிலே பின்னேக்கக்கட்சியினர் சித்தியடைந்தனர் போன்றே தோற்றியது. பலநாடுகளிலும் இருந்த புரட்சி யியக்கத் தலைவர்கள் பொதுவாக உலக அறிவில்லாதவர்கள். அன்றேல் போதிய அனுபவமில்லாதவர்கள்; கொள்கைகளும் நாட்டவரின் மனத்தைக் கவராத அளவுக்கு ஆடம்பரமானவை யாயிருந்தன. எனினும், அவர்களின் முயற்சிகள் பயனற்றுப் போகவில்லை. சிறிது காலத்துக்குள் ஆஸ்திரியாவுட்பட, எல்லா ஜெர்மானிய நாடுகளும், பிரஜைகளுக்குக் குறைந்த அளவுக்கே அதிகார மளிப்பினும் அவர்களுக்கு வாக்குரிமை யளிக்கும் அரசியல் முறையை ஏற்படுத்தின. சிறு கமக்காரர் கேவலமான அடிமை நிலைமையிலிருந்து விடுபட்டு, சுதந்திரம் பெற்ற குடியானவர்களாயும், பெரும்பாலும் சிறுபரப்புள்ள காணிகளையுடைய கமக்காரராயும் அமைந்தனர்.

மேலும் தாராள இயக்கம் சித்திபெறுததுபோல் தோற்றிய போதிலும் தேசீய இயக்கமும் அவ்வாறெனக் கூறமுடியாது. 1848-ல் மூட்டப்பட்ட தீ அடக்கப்பட்ட மக்களின் உள்ளத்தில் தணியாதிருந்து, 1914-ல் சுவாலித்தெழுந்த போர் வரையும் இங்கும் அங்கும் எரிந்துகொண்டே வந்தது. போர் முடிவில் ஐரோப்பிய மக்களின் தேசீய உணர்ச்சிக் கிணங்கவே சமாதான ஏற்பாடுகளைச் செய்தவர்கள் நடந்து கொண்டார்கள் என்பதைப் பின்னறிவோம்.

உதவிக் குறிப்புகள்.

வியன்னை ஏற்பாடு முறிந்துபோன வரலாறு இவ்வத்தியாயத்திற் தொடர்ச்சியாகக் கூறப்பட்டுள்ளது. "சோஷலிஸ்ட் இயக்கத்தின் ஆரம்பமும், பிராஞ்சில் 1848-ம் ஆண்டிலேற்பட்ட புரட்சியில் அவ்வியக்கத்தின் பயன்கள் காணப்பட்டமையும் இங்கு குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளன. 1848-ம் ஆண்டிற் பல புரட்சிகள் உண்டாயின; இவை, தாராள இயக்கமும் தேசீய இயக்கமும்—விசேடமாக ஜெர்மனியில்—கலந்தனவாயிருந்தன. இத்தாலியிலும் ஹங்கரியிலும் உண்டான புரட்சி

கள் அநேகமாய்த் தேசீயமாயும், பிரான்சிலும், ஆஸ்திரியாவிலும் உண்டானவை பெரும்பாலும் தாராளக் கொள்கை தழுவினவையாயும் இருந்தன ; ஆனல் யாதானுமொரு காரணத்தினல் அப்புரட்சிகள் சித்திபெருது போயின. அது முதலாகத் தேசீய இயக்கங்களும் தாராளக் கொள்கையினரின் இயக்கங்களும் ஒன்றற்கொன்று பிரிந்துபோகுந் தன்மையவாயின. பிராஞ்சியற் தேசீய உணர்ச்சி பொனப்பார்ட்டைப் போற்றும் மனப்பான்மையை யுண்டாக்கியது ; கீர்த்தி வாய்ந்த நெப்போலியனின் பெருமக னொருவன் சக்கரவர்த்தியானன்.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1830. பிரான்சில் " ஜூலை மாதப் புரட்சி ".

1830-1848. பிராஞ்சியர் அரசனை லூயி பிலிப்பின் ஆட்சி.

1848. இத்தாலி, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கரி என்பவற்றிற் புரட்சிகள்.

இங்கிலாந்திலே உரிமைப்பத்திரக்காரரின் " மகத்தான விண்ணப்பப் பத்திரம் "

2-ம் பிராஞ்சியக் குடியரசின் தலைவனக லூயி நெப்போலியன் தெரிவு செய்யப்பட்டான்.

1849. பிருங்வர்ட் பாராளுமன்றம் நற்சித்தி பெருமை. ஹங்கேரியப் புரட்சி அடக்கப்பட்டது.

1852. லூயி நெப்போலியன் பிராஞ்சியச் சக்கரவர்த்தியானன்.

1867. " முதற்பணம் " என்னும் நூலின் முதற்பாகத்தைக் கா(ர்)ல் மா(ர்)க்சு பிரசுரித்தான்.

8. விக்ரோரியா ராணி காலத்திற் பிரித்தானியாவின் நிலைமை

பொது விஷயங்கள். ஐரோப்பாக் கண்டத்தின் பெரு நிலப்பகுதியிலிருந்த நாடுகள் பெரும்பாலாக நெருக்கடியான நிலைமையிலிருக்கையில், பிரித்தானியா சுபிட்சமும் அமைதியுங் கொண்டிருந்தது. கிரீமிய யுத்தத்தையும் இந்தியக் குழப்பத்தையும், தனது பரந்த நிலப்பரப்பில் நிகழ்ந்த ஏனைய சண்டைகளை

விக்ரோரியாராணி காலத்திற் பிரித்தானியாவின் நிலைமை 93

யுந் தவிர, 1950-59 வரையும் வேறு யுத்தங்களில் பிரித்தானியா கலவாமையால் பெரும்படை திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்வில்லை. பிரித்தானியர் வியாபாரத்திற் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். முந்திய நூற்ருண்டின் இறுதியில் தொழிற்சாலைகளிற் பொருட்களை உண்டு பண்ணுவதிலும் வாணிபத்திலும் தலைசிறந்த நாடெனத் தான் பெற்ற நிலைமையைப் பிரித்தானியா கைவிடாதிருந்தது. ஐரோப்பா நீங்கலாக உலகத்தின் ஏனைய பாகங்களில் பிரித்தானியா அதிசயிக்கத் தக்க வகையிற் பெருக்க மடைந்தது. இதைப்பற்றிப் பிறிதோர் அத்தியாயத்திற் காண்போம். 19-ம் நூற்ருண்டின் பெரும் பகுதியில் பிரித்தானியரின் சீவியம், எண்ணம், அவர்கள் மனத்தைக் கவர்ந்த பொருட்கள் ஆதியவற்றையும், படிப்படியாக ஏற்பட்ட அற்புத மாறுதல்களையும் ஆராய்வதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

அரசபதவி. 1820-ம் ஆண்டில் 3-ம் ஜோஜ் இறக்க, அவன் பிணிவாய்ப்பட்டிருந்த காலத்தில் '' அரசப்பிரதிநிதி '' என்னும் பட்டப்பெயருடன் சிறிது காலம் ஆட்சிபுரிந்த அவன் மகன், 4-ம் ஜோஜ் என்னும் பெயருடன் முடிசூடினன். பிந்தியவனின் குணமும் நடத்தையும் குடிகள் அவனை அதிகமாக வெறுக்கச்செய்தன. அவன் மரணத்துக்குப்பின், அவன் தம்பி 4-ம் உவில்லியம் அரசனானன். முந்திய அரசனைப் போன்ற அளவுக்கு சனங்கள் இவனை வெறுக்கவில்லை. ஆனல் '' அரசனின் ஆட்சி ''யைப் பிரசைகள் அதிகமாக விரும்பவில்லை ; பெயர் நீங்கலாக, வேறெவ்வழியிலும் குடியரசாக இருந்த பிரித்தானியா, சண்டை சச்சரவின்றிக் குடியரசு நாடாக மாறலாம் என்றும் பலர் கருதினர். இவ்விரு மன்னர்களுக்குப்பின், அவர்கள் மருகியும் இளங்கன்னிகையுமான **விக்ரோரியா** சிம்மாதனத்தமர்ந்தார். அவர் அறுபத்து மூன்ருண்டுகாலத்துக்கு ஆட்சி புரிந்தார். நீண்ட இக்காலத்தில், அவர், நற்குண நற்செய்கைக்கும் மட்டுமரியாதைக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்கினர். அவரின் முதற் பிரதம மந்திரி, மெல்போன் பிரபு, ஒரு சுதந்திர நாட்டை ஆளும் அரசனின் நிலை எத்தகையதென்பதை அவருக்குக் கற்பித்தார். அவரும் தான் கற்றதை

கூடியவரையும் செயற்படுத்த முயன்ருர். அநாவசியமாக அவர் அரசாட்சியின் எப்பகுதியிலுந் தலையிடவில்லை; ஆனல் அரசாட்சியில் நடைபெறுவதெதுவும் தமக்கு அறிவிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தினர். தேவைப்படின் தம் மந்திரிகளைக் கண்டிக்கக் கூடியதிறமையும் அவருக்கிருந்தது. அவர் தமக்கு அத்தான் முறையுள்ள "அல்பட்" இளவரசரை மணந்தார்; அல்பட் இளவரசரின் மாசற்ற குணமும் நற்போதனையும் விக்ரோரியா ராணிக்கு எப்போதும் பேருதவியாயிருந்தன. தமது ஆட்சியின் இறுதிக்காலத்தில் சாம்ராச்சியம் முழுவதிலும் இராணியார் நேசிக்கப்பட்டார். "அவர் ஐக்கிய உணர்ச்சியையே உருக்கொண்டு வந்தவராகத் தோற்றினர்" என அழகாக ஒருவர் இராணியை வருணித்துள்ளார். மேலும் "அரசியல் அமைப்புக் கிணங்க அரசு புரிதல் எவ்வாறு?" என்பதற்கு அவர் ஒரு முன்மாதிரியாக இருந்தனர். அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே அவரது பிற்சந்ததியார் நடந்தனர்.

விக்ரோரியா ராணி

பிரபுக்கள், நடுத்தர வகுப்பினர். 1832-ம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டத்துக்குப்பின், பண்டைய வமிசத்துப் பிரபுக்கள் அரசியல் விஷயங்களில் தமக்கிருந்த அதிகாரத்திற் பெரும் பகுதியைக் கைவிட்டனர். ஆனல், பிரதான அரசாங்க பதவிகளை இதன் பின்னும் பல ஆண்டுகாலத்துக்கு அவர்கள் ஏற்று வந்தனர். இதற்கு நடுத்தர வகுப்பினர் யாதொரு தடையுங் கூறுதிருந்ததோடு, பிரபுக்களையே தந் தலைவர்களாகக் கொண்டனர்; மேலும், இப்பிரபுக்கள் சமூகத்தலைவர்களாகவுங் கருதப்

பட்டனர். பொதுவில் இராணியின் ஆஸ்தான சபை, இவர் களுக்கு நல்ல முன்மாதிரியாக இருந்தமையினால் இத்தகை மையைப் பிரபுக்கள் பெற்றனரென்க. நடுத்தர வகுப்புச் செல் வர்களைப் பிரபுக்கள் மேன்மேலும் அதிகமாகத் தம் வகுப்பிற் சேர்த்துக்கொண்டனர். எனவே, 19-ம் நூற்றாண்டின் முடி வளவில் பிரபுக்கள் அநேகர் நடுத்தர வமிசத்தினரே. இதனாற் சமூகத்தலைவர்கள் பண்டைய வமிசத் தோன்றல்களாயிராது, செல்வர்களாகவே இருந்தனர். 19-ம் நூற்றாண்டு, பிரித்தா னியா மேம்பாடடைந்திருந்த காலம்; ஆகையினாலே, அவ் வகுப்பைச் சார்ந்த உத்தியோகத்தர், தொழிற்சாலை முதலாளி கள், வியாபாரிகள், என்பவர்களே முக்கியஸ்தர்களாக இருந் தனர்.

நடுத்தர வகுப்பினர் வியாபாரத்தைப்பிரதானமாகக்கவனிப் பினும், சமய அரசியல் விஷயங்களிலும் ஊக்கங் கொண்டனர். இவை நீங்கலாக, இவர்கள் மனத்தை முக்கியமாகக் கவர்ந்த விஷயம் விளையாட்டுகளாம். விளையாடுதலும் பந்தயங்களிற் பங்கு பெறுதலும் மக்களின் உடல்வன்மை விருத்தியடையப் பெரிதும் உதவியதோடு, பொதுவாக மாந்தருக்கு நியாயமான மனப்பான்மையையும், பழக்க வழக்கங்களை யனுசரித்து நடக் குந் தன்மையையும் உண்டாக்கின. ஆனால் அழகுகலைகளும் அறிவு வளர்ச்சிக்கான விஷயங்களும் குறைந்த அளவுக்கே கருதப்பட்டன. நடுத்தரவகுப்பினரிற் பெரும்பகுதியோர் மந்த புத்தியும் ஆடம்பரத்தில் ஆசையும் உள்ளவர்களாய் இருந் தனர்.

நிற்க, கல்வித் துறையில் அதிகமான முன்னேற்றம் ஏற் பட்டது. செலவு செய்யக்கூடிய உயர்தர, நடுத்தர வகுப்பின ரின் மக்களின் பொருட்டுப் பல பிரசித்த பாடசாலைகள் இதே காலத்தில் தாபிக்கப்பட்டன. இப்பாடசாலைகள் ஆங்கிலே யரின் சமுதாயவாழ்க்கையின் தன்மையைப் பெரிதும் மாற்றின. தொழிலாளரின் பிள்ளைகளுக்காக இலவச பாடசாலைகளமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பழைய சர்வகலாசாலைகள் சீர் திருத்தப்பட்டு, ஆங்கிலேய திருச்சபையினரல்லாதவருக்கும் அங்கு இடம் அளிக்கப்பட்டது. புதுச்சர்வகலாசாலைகளும்

தாபிக்கப்பட்டன. மிகச் சிறந்த ஆங்கில இலக்கிய நூல்கள் இதே காலத்தில் இயற்றப்பட்டன வென்பதை நாம் அறிதல் வேண்டும். டிக்கன்ஸ், தாக்ரே, தெனிசன், பிரௌனிங் என்னும் நூலாசிரியர்களின் பெயர்களே இதற்குச் சான்றும். பழைய சீவியமுறைகளையும் ஆராய்ச்சி வழிகளையும் அநேகமாய் முற்றுக மாற்றிய பல்வகை விஷயங்களை பிரித்தானிய நூலறிஞர்கள் கண்டுபிடித்தனர்.

சமய விஷயங்களில் ஆங்கிலக் கிறிஸ்தவத் திருச்சபையில் இரண்டு புத்துயிர்க் கிளர்ச்சிகள் தோன்றின. ஒன்று, விவிலிய வேதாகமத் தொடர்புடையது. மற்றது '' ஆக்ஸ்வர்ட் இயக்கம் '' என்று கூறப்படுவது. இரு இயக்கங்களும் ஒன்றற்கொன்று முரண்பட்டமை ஒரு துக்கமான விஷயம். இதனற் பெரும் மனக்கொதிப்பு முண்டாயது. அரசாட்சியாரின் பாடசாலைகள் தாபிக்கப்படுமுன், கல்வி அநேகமாய் சமயத் தாபனங்களின் அதிகாரத்துக் குட்பட்டிருந்தமையினால் இவ்விருதாபனங்களுக்கிடை யேற்பட்ட பகை, கல்வியின் முன்னேற்றத்தைத் தடுப்பதாயிருந்தது ஒரு துக்கமான விஷயமே. விஞ்ஞான விற்பன்னர்கள் எடுத்துக் கூறிய சில புதுக் கருத்துக்களுக்கு எதிராகவும் இவ்வியக்கங்கள் இருந்தமையினால் ஏற்பட்ட வாதங்கள் சாதாரண சனங்களின் மனத்தைக் குழப்பித் தீமையே விளைத்தன. இந்நூற்றாண்டில் நாம் கவனித்தற்கான ஒரு பிரதான விஷயம், கிறிஸ்து சமய பிரசாரகர்கள் பிரித்தானியாவிலும் பிறநாடுகளிலும் சமய பிரசாரத்திற் காட்டிய ஆர்வமாகும். ஏனைய நாடுகளில் நடைபெற்ற கிறிஸ்து சமயப் பிரசாரகத்தொண்டு, பிரித்தானிய அரசியல் நிபுணர், பிறநாடுகளிலும், குடியேற்ற நாடுகளிலும் பின்பற்றிய அரசியல் முறையைப் பெரிதும் பாதித்தது.

மாந்தருக்கு அரசியல் விஷயங்களிலிருந்த ஆர்வம் இரு வழிகளில் வெளிப்பட்டது. பிரதானமான ஒரு வழி, சமூகச் சீர்திருத்தமாம்; அதாவது வகுப்புரிமைகளுள் எஞ்சியவற்றை நீக்கவும், வாழ்க்கையை, எவர்க்கும், முக்கியமாக வறியவர்க்கும் அநாதைகட்கும்—முன்னிலும் சகிக்கக்கூடியதாக்கவும்

முயற்சிகள் செய்யப்பட்டன. விக்ரோரியா ராணி காலத்தவர் பலர், "தன்கையே தனக்குதவி" என்பதைத் திடமாக நம்பி, குடிகளின் விஷயத்தில் அரசாட்சியார் அளவுக்கு மிஞ்சித் தலையிடுதல் கூடாதெனக் கருதினர்; ஆனால், மாந்தரின் ஈவும் இரக்கமும் இத்தகைய மனோபாவத்தை நீக்கின; ஏழைகளின் வறுமையையும் துன்பத்தையும் மாற்றப் பெருந் தொண்டு ஆற்றப்பட்டது. தாராளக் கட்சியினர், நிகழ்நிலைக் கட்சியினர் —ஆகிய வன்மை மிகுந்த இரு அரசியற் கட்சிகளிடையே ஏற்பட்ட பெரும்போர் இன்னொரு வழியாகும். ஆங்கிலேய நிகழ்நிலைக் கட்சியினர் சீர்திருத்தங்களுக்கு உடன் பட்டவர்களாக இருந்தமையால் அங்குள்ள தாராளக் கட்சியினர் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள தாராளக் கட்சியினர் போலிருக்கவில்லை. 'தடையற்ற வியாபாரம்' செய்வதென்பது தீர்மானிக்கப்பட்டவுடன் அரசியலானது பெரியவொரு விளையாட்டுப் பந்தயம் போலவே பிரித்தானியப் பொதுசனங்களுக்குத் தோற்றியது. இவர்களின் பிரசித்திபெற்ற தலைவனொருவன் தாராளக் கட்சியினரின் தலைவனான **கிளாட்ஸ்டன்** என்பவனும்; மற்றவன், நிகழ்நிலைக் கட்சியினரின் தலைவனான **டிஸ்றேலி** என்பவனும். இவ்வரசியற் கட்சிப் பந்தயம், பிரித்தானியரின் வேறு பந்தயங்களைப் போன்று முழுமனத்துடன் கவனிக்கப்பட்டது.

தொழிலாளர் வகுப்பினர். 19-ம் நூற்றாண்டில் தொழிலாளிகளின் நிலைமையில் அதிசயிக்கத் தக்கச் சீர்திருத்த மேற்பட்டது. தொழிற் புரட்சியால் நிகழ்ந்த கேடுகளை முன்கண்டோம். உழைப்புக் கேற்ற ஊதியம் தொழிலாளர்களுக்குக் கொடுபடவில்லை. சுகாதாரமற்ற பட்டணங்களில் நெருங்கி வாழ்ந்து, அநியாயத்திற்கும் அடக்க முறைகளுக்கும் ஆளாயினர். கைத்தொழிற் புரட்சிக்கு முன் அவர்கள் மிகவும் நல்ல நிலைமையிலிருந்தனர் என்பதற்கில்லை; ஆனால் சாதாரணமாக அவர்கள் நற்பவனத்தையும் வெளிச்சத்தையேனும் பெற்றனர். அவர்களுடைய நிலைமையிலேற்பட்ட சில சீர்திருத்தங்களுக்குக் காரணம், பாராளுமன்றம் விதித்த சமூகச் சீர்திருத்தச் சட்டங்களே. தொழிலாளர் தஞ்சுய

முயற்சிகளினுலேயே தம்நிலேமையை இரு வழிகளில் மேம் படுத்திக் கொண்டனர். முதலாவதாக, ஒரு தொழிலேப் புரிபவர்கள் தமக்கென ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொண்டனர். இச்சங்கம் "தொழிலாளர் சங்கம்" எனப்படும். சங்கத்தினர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், சம்பள உயர்ச்சிக்கு உழைக்க உபயோகப்படுத்தவும் சந்தா வசூலித்து ஒருநிதி சேர்த்தனர். 19-ம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் இச்சங்கங்கள் புரட்சிக் கொள்கைகளேப் போதிப்பனவாகக் கருதப்பட்டு, அக் காரணத்தினுற் பன்முறை அடக்கப்பட்டன. ஆனுல் தொழிலாளரோ விடாமுயற்சியுடன் அநேகமாய் நியாயமான முறைகளேப் பின்பற்றிக் குழப்பஞ் செய்தனர். இறுதியில், இச்சங்கங்கள் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டன. தொழிலாளரின் பிரதான போர்க்கருவி "வேலே நிறுத்தமே". தொழிலாளரின் தலேவர்கள் முதலாளிகளுடன் ஒப்பந்தஞ் செய்து கொண்டு முன்னிலும் பார்க்க நன்னிலேபெற விரும்பினர்; ஆனுல் வேலே நிறுத்தத்தினுலொழிய வேறெவ்வழியிலும் தொழிலாளிகள் சங்கங்களே முதலாளிகள் அங்கீகரிக்க அல்லது வேதனங்களே உயர்த்த, செய்வது முடியாத காரியமாயிருந்தது. 19-ம் நூற்ருண்டினிறுதியில் அந்நூற்ருண்டின் ஆரம்பத்திற் போன்று புரட்சி செய்யும் மனப்பான்மை தொழிலாளிகளிடையே காணப்பட்டது. ஏனெனில், தொழிலாளிகளின் முன்னேற்றத்திலேற்பட்ட மந்தகதி அவர்களுடைய தலேவர்களுக்கு அதிருப்தியளித்தது. பலர் சோஷலிஸ்ட்

பெஞ்சமின் டிஸ்ரேலி (1804—81)

கொள்கைகளினால்—புரட்சிக்கொள்கைகளினாலுங்கூட—தூண்டப்பட்டனர்.

தொழிலாளர் தமக்குத்தாமே உதவி செய்துகொண்ட இரண்டாம் வழி, கூட்டுறவுச் சங்கங்களினாலென்க. இங்கிலாந்தின் வடபகுதியிலுள்ள லங்காஷைர் பிரிவில் ரொக்டேல் என்னுமிடத்திலிருந்த சில தொழிலாளர் தாம் சேமித்துவைத்த சிறு தொகைகளை ஒன்று கூட்டிப் பெருந்தொகை பெற்றனர். பிறகு அவர்கள் கடையொன்று வைத்து, பொருள்களை மொத்தமாக வாங்கி, அவற்றை நட்பு விலையிலும் சிறிது குறைந்தாலும் தமக்குச் சிறிது இலாபங் கிடைக்குமாறு விற்றனர். இந்த லாபத்தில் ஒரு பகுதியை அவர்கள் தம் முயற்சிகளைப் பரப்புவதற்கும் மற்றப் பகுதியை முதற்பங்காளிகளுக்கு பங்கீடு செய்வதற்கும் உபயோகித்தனர். இவ்விதம் சிறிய அளவிற்ருபிக்கப்பட்ட இவ்வியக்கம் மிகப் பெரிதாகி விட்டது; சீக்கிரத்தில் பிரித்தானியாவிலுள்ள ஒவ்வொரு பெரிய நகரத்திலும் ஒரு கூட்டுறவுக் கடை இருந்தது. இவற்றுட் சில மிகப் பெரியவையாயின; சில பொருட்களை உண்டாக்கி அல்லது தொழிற்படுத்திவிற்றன. உதாரணமாக ஒரு கூட்டுறவுச் சங்கக் கடைக்கு இலங்கையிற் தேயிலைத் தோட்டங்கள் உண்டு. "நட்புச் சங்கங்கள்" மூலமாகவும் தொழிலாளிகள் சுய உதவி செய்து கொண்டனர். இச்சங்கத்தவர் ஒவ்வொருவரும் சிறிய சந்தாத் தொகை செலுத்திவந்து, தாம் நோயுற்றபோது அல்லது வேலையற்றபோது பண உதவி பெற்றனர். பழைய தொழிலாளர் சங்கங்களிற் சிலவும் இவ்வகை முயற்சிகளி லீடுபட்டன.

கூலித் தொழிலாளர்கள் வகுப்பினருக்கு உதவும்படியான சட்டங்களை யேற்படுத்தியதினாலும், சுயமான சீர்திருத்த முயற்சியினாலும் அவர்களின் சீவிய, உழைப்பு நிலைமையில் மிகப் பெருஞ் சீர்திருத்தமேற்பட்டது. பிரித்தானியாவில் தொழிலாளர் சங்கங்களில் (ஆண், பெண்) அங்கத்தவரின் தொகை ஒரு கோடிக்கு மேலாயது. தொழிலாளர்க்காகச் செய்ய வேண்டியன இன்னும் அதிகமுண்டு; வியாபாரம் துர்ப்பிட்சம் அடையின் பல்லாயிரஞ் சனங்களுக்குப் பெருங் கஷ்டம்

உண்டாகும். ஆனால் பிரித்தானியாவில் தொழிலாளியின் குடும்பத்தின் தற்கால நிலைமைக்கும் ஒரு நூறுண்டு காலத்துக்கு முன்னே இருந்த தொழிலாளியின் குடும்பத்துக்கும் யாதொரு ஒப்புவமையுங் கூறுதலியலாது. பலர், மிக வறிய நிலைமையிலிருந்து தஞ்சுய முயற்சிகளினால் மேனிலை யடைந்து கோடீசுவரர்களாயினர்; அரசியற் றலைவர்களாயும் அமைந்தனர்; இன்னுஞ் சிலர் கல்வியறிவில் மேம்பட்டுப் பெரும் கல்விக் களஞ்சியங்களாக விளங்கியுள்ளனர். இவையனைத்தும் விக்ரோரியா ராணியின் காலத்தில் நிகழ்ந்த முயற்சிகளின் பயனாகும்.

வாக்குரிமைக்காரரின் தொகையைக் கூட்டல். அரசியலதிகாரமும், உயர்தர, நடுத்தர வகுப்பினரைவிட்டுத் தொழிலாளரை யடைந்தது. நடுத்தர வகுப்பினர் 1832-ம் ஆண்டுக்குப்பின் செய்தது போன்று, அரசியல் விஷயங்களிற் தலைமையையும், அதற்கான வழிவகைகளையும் தொழிலாளிகள், உயர்தர, நடுத்தர வகுப்பினரிடம் ஒப்புவித்துத் திருப்தியுடனிருந்தனர். 1867-ம் ஆண்டில் நிகழ்நிலைக் கட்சித் தலைவனான டிஸ்றேலி, பாராளுமன்றத்துக்கு அங்கத்தவரைத் தெரிவு செய்யும் உரிமையைப் பட்டண வாசிகளான குடித்தனக்காரருக்குக்—இவர்களிற் பலர் தொழிலாளர்—கொடுக்கத் தன் கட்சியினரை யிணங்கச்செய்தான்; இதற்குப் பதினேழாண்டுகளுக்குப் பின்னர் இவ்வுரிமையை நாட்டுப்புறத்திலுள்ள கமத்தொழிலாளர்களுக்கு அதே நியமங்களுக்கிணங்க, கிளாட்ஸ்டனும் தாராளக் கட்சியினரும் அளித்தனர். வாக்குரிமையானது விக்ரோரியாவின் கால முடியும் வரையும் இந்நிலைமையிலே இருந்தது. இறுதியாக 1918-ம், 1928-ம் ஆண்டுகளில் இவ்வுரிமையானது 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு மாத்திரமன்றிப் பெண்களுக்கும் அளிக்கப்பட்டது. வாக்குரிமை இவ்வாறு அதிகமான பேருக்கு அளிக்கப்பட்டபோது நடுத்தர வகுப்பினர் பலர் பயந்தனர்; வாலோற்கார முறைகளைத் தழுவின புரட்சி உண்டாகுமென எண்ணினர்; ஆனால் இதுகாறும் அவர்களுடைய பயத்துக்கு யாதொரு ஆதாரமும் இல்லை.

கைத்தொழில்களில் பிரித்தானியாவின் தலைமை முடிவடைந்தமை. 19-ம் நூற்றாண்டின் பெரும்பகுதியில் பிரித்தானியா உலகத்திலுள்ள ஏனைய நாடுகளினும் பார்க்க வியாபாரத்திலும் கைத்தொழில்களிலும் முன்னின்று, செல்வம் நிறைந்த நாடாக இருந்தது. இந்நிலைமை பிரித்தானியருக்குப் பெருந்திருப்தியளித்தது. பிரித்தானியப் பொருட்கள் அநேகமாய்ச் செப்பமாயும் நேர்மையுடனுஞ் செய்யப்பட்டவையாதலின், உலகத்தின் பல்வேறிடங்களிலும் அவையே எப்போதும் பெருமிதமாக விற்கப்படுமெனப் பிரித்தானியர் நம்பினர். இந்த மனத்திருப்தியே விக்ரோரியா ராணி காலத்தவரின் மனப்பாங்காகும். ஆனால் அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறநாட்டினரும் இயந்திரங்களை உபயோகிக்க அறிந்து கொண்டனர்; சிறப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டினரும் ஜெர்மானியரும் உலகத்தின் பல்வேறு வியாபாரத் தலங்களில் பிரித்தானியருடன் போட்டியிட்டு விரைவில் அவர்கள் சென்ற விடங்களிலெல்லாம் தாமுஞ் செல்வராயினர். இது விக்ரோரியா ராணியின் காலத்தில் உணரப்படவில்லை; எனவே அக்காலத்தியப் பிரித்தானியர் தாமே சிறந்தவரென்னும் நம்பிக்கையைத் திடமாகக் கொண்டிருந்தனர். ஆனால் இந்நூற்றாண்டு முதலாக, தற்கால நிலைமையைப் பிரித்தானிய வியாபாரிகளும் தொழிற்சாலைக்காரரும் உணர்வாராகித் தம் நிலைமையை அழியாது வைத்திருக்கப் பெரு முயற்சிகள் செய்துள்ளனர்; 1914-ம் ஆண்டில் ஐரோப்பியப் பெரும் போர் ஆரம்பிக்கும் வரையில் அவர்களுடைய முயற்சி சித்திபெற்றே வந்தது. கைத்தொழில்களால் ஏற்பட்ட வலிமையினாலும் செல்வத்தினாலுமே போரினாலேற்பட்ட கடுஞ்சுமையின் பெரும் பகுதியைப் பிரித்தானியா தனக்காகவும் தன் நட்பாளர்களுக் காகவும் ஏற்று, கடைசியில் வெற்றிபெற முடிந்தது. ஆனால் இதற்கான முயற்சி பெரும்பாடாக முடியாத கஷ்டந் தந்தது; ஐரோப்பியப் பெரும் போரில் அமெரிக்க ஐக்கியநாடு பிறருக்குப் பிந்தியே நுழைந்தமை, அதனுடன் வியாபாரத்திற் போட்டியிட்டவர்கள் தற்காலிகமாக வலிமையற்றிருந்த காரணத்தினால் அதற்கு ஏராளமான இலாபம்

1851-ம் ஆண்டில் நடந்த பெரும் பொருட்காட்சிசாலையின் உட்புறத் தோற்றம்.

அளித்தது. இரண்டாவது உலக யுத்தத்தின் இறுதியில் ஐக்கிய அமெரிக்கா உலகில், தலைசிறந்த கைத்தொழில் நாடாகியது என்பதில் சந்தேகமில்லை.

உதவிக் குறிப்புக்கள்

இவ்வத்தியாயத்தில் விக்ரோரியா ராணியின் ஆளுகையும், அப்போதிருந்த சமுதாயத்தின் பலவகை வகுப்பினரின் நிலைமையும் மனநிலையும் கூறப்பட்டுள்ளன. இக்காலப் பகுதி, சிறப்பாக நடுத்தர வகுப்பினர் செல்வாக்கு பெற்றிருந்த காலம் ஆகும். ஆனால் விக்ரோரியா ராணியின் ஆட்சிக்காலத்தில் தொழிலாளரின் நிலைமையிலும், அரசியலதிகாரத்தை உபயோகிப்பதில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தருணத்தை உபயோகிப்பதிலும் அதிகமான சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி முதலில் உண்டானதினாலும், ஐரோப்பாக் கண்டத்துப் பல தேசவாசிகள் நெப்போலியனுடன் போரிடுவதில் முனைந்திருந்ததினாலும் கைத்தொழிற் தலைமை என்னும் பந்தயத்தில் பிரித்தானியா ஏனைய நாடுகளுக்கு முன்னதாகவே புறப்பட்டதினால் முதற்ருனம் பெற்று, அத்தானம் என்றும் நிலைத்திருக்குமென நினைத்தது. ஆனால் காலஞ் செல்லச் செல்ல, ஏனைய நாடுகள் அதன் தானத்தை அடைவதாக இருந்தன.

சில பிரதான நிகழ்ச்சிகள்

1832-1846. பிரித்தானியாவிற் பல சட்டங்கள் ஏற்படுத்தப் பட்ட காலம். அரசாட்சி முறையையும் சமூக நிலைமையையும் சீர்திருத்த, பல சட்டங்களுண்டாக்கப்பட்டன.

1837. விக்ரோரியா ராணி முடிசூடினர்.

1845-6. தானியச் சட்டங்கள் நீக்கப்பட்டன; இங்கிலாந்து 'தடையற்ற வியாபாரஞ்' செய்யும் நாடானது.

1851. லண்டன் நகரத்துப் பெருங்காட்சி. (விக்ரோரியா ராணி காலத்து உச்சநிலை.)

1867. 2-ம் சீர்திருத்தச் சட்டம் பாராளு மன்றத்தாலங்கீகரிக்கப்பட்டது.

1884-5. 3-ம் சீர்திருத்தச் சட்டம் பாராளு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

9. இத்தாலி சுதந்திரம் பெற்ற வரலாறு

யெளவன இத்தாலி. வியன்னு மகாநாட்டினுலே இத்தாலி இன்னெரு முறை பிரிக்கப்பட்டதென்பதையும், பிராஞ்சிய புரட்சிக்கு முன்னிருந்த குழப்ப நிலைமையை அது மீண்டும் அடைந்ததுபோலத் தோற்றியதென்பதையும் நாம் முன்னரே படித்தறிந்தோம். ஆனல் உண்மையிலே பெரிய மாற்றம் ஏற்பட்டிருந்தது. நெப்போலியனல் இத்தாலி ஒன்று சேர்க்கப்பட்டது; அதன் பின்னர் தேசீய வொற்றுமை என்னும் எண்ணம் அழியவில்லை. பிராஞ்சியப் புரட்சிக் கொள்கைகளும் பரவின; சுதந்திர ஆட்சிவேண்டுமென்னும் அவா பெருந் தீ போன்று பல இத்தாலியர் மனத்திற்கொழுந்து விட்டெரிந்தது. தாராள தேசியக் கொள்கைகளுக்கு விரோதமானதும், இத்தாலியில் அந்நிய ஆட்சி புரிவதுமான ஆஸ்திரியாவே இத்தாலியின் பிரதான எதிரியாகும். இந் நிலைமையை ஆஸ்திரியர் நன்குணர்ந்து, இவ் வெண்ணங்களை யடக்கத் தம்மாற் கூடிய வழிகளில் முயன்றனர்; இவர்களை ஏனைய இத்தாலிய ராச்சிய அதிபர்களும் பின்பற்றினர்.

ஆனல் ஆரம்பத்திலே சுதந்திரக் கொள்கைகள் ஒரு இரகசிய சங்கத்தினுல் மெள்ள மெள்ளப் பரவலாயின. பல இரகசிய சபைகள்—இவற்றுட் பிரபலமானது "கரியெரிப்பவர் சங்கம்"—எதேச்சாதிகாரிகளுக்கு எதிரிடையாக உழைக்கலாயின. 1820-ம் ஆண்டிலே நேப்பிள்சிலே கிளம்பிய புரட்சி ஆஸ்திரியர் உதவியுடன் நசுக்கப்பட்டது; என்றாலும் 1830-ம் ஆண்டில் இரகசிய சபைகள் இன்னமும் கஷ்டந்தரலாயின. அடுத்தவாண்டில் இளைஞனை மஸ்ஸினி என்பான் "**யெளவன இத்தாலி**" யென்னுஞ் சங்கத்தைத் தாபிக்க, விரைவிலே அச் சங்கத்தில் இத்தாலிய தீபகற்பத்தினெப்பகுதியிலிருந்தும் பலர் சேர்ந்து கொண்டனர். இச்சங்கத்தின் நோக்கம், எல்லா இத்தாலியரையும் ஒற்றுமை பூணச்செய்வதும் நாட்டைச் சுதந்திரம் பெறச் செய்வதுமாம். அங்கத்தினர் சிலர் அதிகாரிகளால் துரத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர்; ஆனல் அவர்க

ளுடைய மரணம் அங்கத்தினருக்கு அச்சந்தராது, ஆர்வமே யளித்தது ; எவரும் தடுக்கக் கூடாத அளவுக்குஉற்சாக மளித் தது. சார்டீனியாவின் புது மன்னனை **சால்ஸ் அல்பட்** இச்சங் கத்துக்காக உழைத்தான் ; எனவே '' புரட்சியாண்டு '' ஆன 1848-ம் வருடத்தில் இத்தாலியரே சுதந்திரப் போரை தொடங் கினர் ; சுதந்திரத்துக்கான இப்போர் மக்களுக்கு உற்சாக முண் டாக்கித் தேசீய வெறியைக் கிளப்பியது.

1848-ம் ஆண்டுப் புரட்சியும் அது சித்தி பெருமையும். குழப்ப முண்டாக்குதற்கான தூண்டுதல் உண்மையிலே எதிர் பாராத வோரிடத்திலிருந்துண்டாயது. 1846-ம் ஆண்டிலே பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட 9-ம் பையஸ் ஆர்வ மிகுந்த ஓர் இத்தாலியர் ; விரிவான நோக்கமுடையவர். எனவே தாம் நாடிய தேசியத் தலைவர் அவரே என இத்தாலிய தேசீயவாதிகள் எண்ணினர். ஆனால் பாப்பரசர் இத்தாலியை ஆள்பவராக மாத்திரமிராது, ரோமன் கத்தோலிக்கத் திருச் சபை முழுவதற்கும் தலைமை பூண்டவர் என்பதை இவர்கள் மறந்தனர். ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை இத்தாலியரை மாத்திரமன்றி ஆஸ்திரியரையு மடக்கியிருந்தது ; எனவே பூரணத் தேசீய இயக்கமாக மாத்திரம் இருக்கும் ஒரியக்கத் துக்குப் பாப்பரசர் தலைவராவது இயலாத காரியம். ஆனால் சுதந்திர இயக்கம் தொடங்கிவிட்டது ; சிசிலியில் ஏற் பட்ட குழப்பம் நேப்பிள்சின் மன்னனுக்கு விருப்பமில்லாத போதிலும், சுதந்திர அரசியலமைப்பை அளிக்கச் செய்தது. ஆனால் மிகப் பிரதான சம்பவங்கள் சார்டீனிய அரசனின் நாடாகிய பீட்மொன்டில் நிகழ்ந்தன. இத்தாலிய ஐக்கியம் தனக்கு விருப்பமென சால்ஸ் அல்பட் கூறினான். அதோடுஅவன் தன் ஆலோசகர் கவூர் பிரபுவின் தூண்டுதலின்படி சுதந்திர அரசியலமைப்பை அளித்து, லொம்பாடியிலும், வெனிசியா விலும் ஆஸ்திரியரை எதிர்த்தெழுந்த இத்தாலியருக்கு உதவப் போர் புரியலானான்.

ஆனால் இம்முயற்சி சித்திபெறுதென்பது திட்டமே. நற் றலைவர்களைப் பெற்று, பலமான கோட்டைகளில் இருந்த ஆஸ் திரிய சேனை, போர்த்திறமையின்றி வெறும் உற்சாக மாத்திரம்

உள்ளவரால் வெல்லக் கூடியதாக இல்லை. இத்தாலிய தேசீயக் கட்சியினரிடையும் ஒற்றுமையில்லை. ஏனெனில் மஸ்ஸினி இத்தாலியிற் குடியரசு தாபிக்கப்பட வேண்டுமென்னக் கூறினான். எனவே, **கஸ்தோசா, நோவரைச்** சண்டைகளிற் சால்ஸ் அல்பட் தோல்வியுற்று முடிதுறக்கும் படியானதோடு, அவன் மகன் விக்டர் எமானுவல் பெருஞ் சிரமத்துடன் சமாதானஞ் செய்யும்படியுமாயது. ஆனற் குடியரசு கட்சியினர் மஸ்ஸினியினால் ஊக்குவிக்கப்பட்டு, பல நாடுகளிற் போரிட்டவனும் பிரசித்தி பெற்றவனுமான **கரிபால்டியைத்** தந்தலைவனாகக்கொண்டு சமர்புரிந்து வந்தனர். அவர்கள் சடுதியில் ரோமாபுரியில் கலக மூட்டினர். அப்போது பக்தி நிறைந்த கத்தோலிக்கனும், அரசாட்சியிற் கத்தோலிக்கரின் ஆதரவை நாடியவனும் பிராஞ்சியச் சக்கரவர்த்தியுமான லூயி நெப்போலியன் பாப்பரசருக்கு உதவிபுரிய, பிராஞ்சிய படைகளை அனுப்புவித்தான். கரிபால்டி வியக்கத்தக்க வகையில் போரிட்டு எதிரிகள் நகரத்துட் புகுவதைத் தடுக்க முயன்ற போதிலும், புரட்சிக்காரர் ரோமாபுரியினின்றும் துரத்தப்பட்டனர். **தானியேல்மனின்** என்பான் வெனிசில் ஆஸ்திரியரை வீரா வேசத்துடன் எதிர்த்து நின்றான். ஆனல், இங்கும், போர்ப்பயிற்சியும் ஒழுங்கு முள்ள படைகளை வெறுந் தீரமாத்திரமுள்ளவர் எதிர்த்துப் போரிடுவது பயன்தரவில்லை.

இத்தாலியின் பெருந்தலைவர்கள். மஸ்ஸினி இத்தாலியினின்றுந் தப்பியோடினான்; சுதந்திர இயக்கந் தொடங்குதற்குப் பெரிதும் பாடுபட்ட அவன் இதன்பின் முன்னின்று செயலளவில் ஒன்றும் செய்ய முடியவில்லை. கரிபால்டி ரோமாபுரியினின்றும் வெளிப்பட்டுத் தொண்டர்கள் வேண்டுமெனப் பின்வரும் அரியமொழிகளிலே வேண்டுதல் செய்தான்; "வேதனமோ, தங்க இடமோ, உணவுப் பொருள்களோ நான் கொடுப்பதாகக் கூறவில்லை; ஆனல், பசி, தாகம், கட்டாயப் பயணம், போர், மரணம் இவற்றையே அளிப்பேன்; வாய்ப் பேச்சினல் மாத்திரமன்றி, முழுமனத்துடன் தன்னுட்டை நேசிப்பவன் மாத்திரமே என்பின் வரட்டும்." வீரம் பொருந்திய தன் மனைவியும் சில தோழர்களும் உடன்வர, அவன் ஆபத்து நிறைந்த ஆஸ்

திரியப் பிரதேசத்தினூடே பயணம் செய்து அட்ரியட்டிக் கடலையடைந்து, தப்பியோடினன். வழியிலே அவன் மனைவி இறந்துவிட்டாள். நாட்டின் சுதந்திரத்துக்காக மஸ்ஸினி செய்த ஏற்பாடும் கரிபால்டியின் துணிவான செயல்களும் இத்தாலியர் அனைவர் மனத்திலும் ஆழ்ந்து பதிந்தன. ஆனல் உண்மைத் தொண்டு கவூரினர் செய்யப்பட்டது; அவன் விக்டர் எமானுவேல் அரசனின் மனமார்ந்த அங்கீகாரத்துடன் 1852-ம் ஆண்டில் சார்டினியாவின் பிரதம மந்திரியானன்.



கரிபால்டி

வட இத்தாலி சுதந்திரம் பெற்றமை. கவூர் திறமையாளன்; முன் நோக்குந் தன்மையன். 19-ம் நூற்றாண்டில் மிகச் சிறந்த அரசியல் நிபுணன் அவனே எனக் கூறலாம். அவன் தெளிவாக உணர்ந்த விஷயங்களிரண்டு : முதலாவது, சார்டினிய அரசனின் தலைமையிற்ருன் இத்தாலியின் ஒற்றுமை ஏற்படக்கூடும்; இரண்டாவது, ஆஸ்திரியரை தொலைக்க ஒரே வழி, ஓர் அயல் நாட்டு வல்லரசினுதவி கொண்டே. எனவே அவன் நன்காய்ந்தமைக்கப்பட்ட சீர்திருத்தங்களை விசால நோக்கத்துடன் செய்து, இராச்சியத்தைக் கூடினவரையில் பெலமும் திருப்தியும் செல்வமும் கொண்டதாக்கினன். அவன் குடியரசுக் கொள்கைகளை ஆதரிக்காவிடினும் இரகசியமான சூழ்ச்சிகளினுல் இத்தாலியின் ஏனைய பகுதிகளில் ஐக்கிய, தேசீய வுணர்ச்சியைத் தூண்டினன். இதற்காகப் பின்பற்ற வேண்டிய வழியைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. ''நாட்டின் பொருட்டு நாம் செய்வதை, சுயகருமத்துக்காகச் செய்தோமானல், எத்துணை அயோக்கியர்களாக நாமிருக்க வேண்

டும்?'' என்று அவனே ஒருசமயங் கூறினன். ஆனல் அவன் கருமங்களனேத்தும், ஐக்கியமும் சுதந்திரமும் பெற்ற இத்தாலியைத் தோற்றுவித்தல் என்பதையே இலக்காகக் கொண்டிருந்தன.

பிரித்தானியாவின் அனுதாபத்தை பெறக்கூடுமாயினும் அந்நாட்டுப் படைவீரரின் உதவியை பெறுதல் இயலாதென்பதை அவனுணர்ந்து, பிரான்சிலிருந்தே படையுதவி பெற வேண்டுமெனத் துணிந்தான். பிரான்சும் பிரித்தானியாவும் கிரிமீயப்போரில் ருஷ்யாவுடன் போரிடும்போது, அவற்றுக்குச் சார்டீனியப் படையை யுதவி அந்நாடுகள் சார்டீனியாவுக்கு நன்றி பாராட்டுமாறு செய்தான். மேலும் ஆஸ்திரியாவினற் சார்டீனியா தாக்கப்படின், அதற்குதவ வருவதாக மூன்ரும் நெப்போலியன் ஓரிரகசிய உடம்படிக்கை செய்யும்படி செய்தான். தன்னுட்டை (இத்தாலியை) ஆஸ்திரியா தாக்கும்படி செய்வதே இப்போது கவூரின் நோக்கமாயிருந்தது; இதனே அவன் திறமையுடன் செய்ய, ஆஸ்திரியரே இத்தாலியரை வீண் போருக்கழைப்பது போற்ரேற்றியது. இதனுலே 1859-ம் ஆண்டில் ஆஸ்திரியர் சார்டீனியாவின்மீது போர் தொடுக்க நெப்போலியன் தன் நண்பர்களுக்குதவி புரிய உடனே முன்வந்தான். வெற்றி கிடைக்குமென்னும் பேரெண்ணத்துடன் இத்தாலியர் ஆஸ்திரியரை எதிர்த்து எங்கும் எழுந்தனர். ஆஸ்திரியரைப் பிராஞ்சியர் மஜெந்தாவிலும் சோல்பெரினுவிலும் தோற்கடித்தனர். இப்போரிலே கரிபால்டி பங்கு பெற்று, ஆஸ்திரியப் படைகளின் வலது பக்கத்தை ''ஆல்ப்ஸ் வேடுவர்'' என்னும் பெயர் பூண்ட சிற்ரூயுதப் படையினரைக் கொண்டு திறமையுடன் தாக்கியதினுலே பெருங் கீர்த்தி பெற்ரூன்.

ஆனல், இத்தாலியரனேவருக்கும் பெருங் கோபமும் ஆசாபங்கமுண்டாக்கும் வகையிலே நெப்போலியன் போரிலிருந்து பின்வாங்கி ஆஸ்திரியருடன் சமாதானஞ் செய்துகொண்டான். அதன்படி லொம்பாடி சார்டீனியருக்குக் கொடுக்கப்பட, ஆஸ்திரியர் வெனிஷியாவை வைத்திருக்க வேண்டும்; இத்தாலியோ பாப்பரசரின் தலேமையில் இலேசாக ஒற்றுமை பூண்ட சமஷ்டி நாடாக வேண்டும். ஆனல் தஸ்கனி, பார்மா,

மோடனு என்னும் மூன்று பிரபுத்துவ நாட்டுக்குடிகளும் தம் மரசர்களை விலக்கி, சார்டீனியாவுடன் சேரத் தீர்மானித்தனர். தானுதவியதற்குப் பரிசாக 3-ம் நெப்போலியன், சேவோய் என்னும் சிறு பிரதேசத்தையும் நைஸ்பிரிவையும் வேண்டி நின்ருன். மூன்று பிரபுத்துவ நாடுகளிலும் நிகழ்ந்தவற்றை நெப்போலியன் ஏற்றுக்கொள்வதற்காக, பலர் மாருக விருந்த போதிலும், கவூர் அவன் கோரிக்கைகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. 1940-ம் ஆண்டில் பிரான்சு இத்தாலியாற் கைப்பற்றப்படுமட்டும் சேவோய், நைஸ் ஆகிய இரு இடப் பகுதிகளும் பிராஞ்சியரிடமே இருப்பதாயிற்று. 1945-ம் ஆண்டில் நேசதேச வெற்றியின்பின் அவையிரண்டும் திரும்ப வும் பெறப்பட்டன.

1860-ல் கவூரின் இரகசிய உதவியுடன் கரிபால்டி ஆயிரம் பேர் கொண்ட சிறு படை திரட்டி அவர் களுக்கு ஆயுதமளித்துப் போரிடப் பழக்கினுன் ; அவர்கள் சிவப்புநிற உட்சட்டைகளைப் போர்க் கோலமாக அணிந்தனர். 1860-ம் ஆண்டு, மே-மாதத்தில் இப்படையினர் எவரும் எதிர் பாராத வகையில் சிசிலிக்குக் கப்பலேறிச் சென்று தம்மை எதிர்த்தவரைத் தோற்கடித்தனர். செப்டம்பர் மாத அளவில் சிசிலி அவன் கையில் சிக்கியது. அவன் தன் செஞ்சட்டை வீரரை மெசினு நீரிணையைத் தாண்டச் செய்து, நேப்பிள்சு மன்னனுக்கு இத்தாலியப் பெரு நிலப்பரப்பில் உரியனவா யிருந்த இராச்சியங்களையும் வென்ருன். தன்படை வீரருடன் ரோமாபுரியைத் தாக்க அவன் எண்ணியிருக்கும்போது, விக்டர் எமானுவல், சார்டீனியப் படையுடன் பாப்பரசரின் பிரதேசத் தின் மீது படையெடுத்து அவரின் சேனைகளைத் தோற்கடித் தான். பின்பு நேப்பிள்சினரசன் ஓடியொளித்த கேயிற்ருக் கோட்டைக்கு இச்சார்டீனியா மன்னன் செல்ல, அங்கே கரிபால்டியையும் வெற்றியாளரான அவனது செஞ்சட்டை வீரரையுந் தரிசித்தான். அப்போது கரிபால்டி, கவூர் கூறியது சரியென்றும், சுதந்திரமும் ஐக்கியமும் பெற்ற இத்தாலி என் னும் கனவு, விக்டர் எமானுவலை மன்னனுகக் கொண்ட போதே நனவாகுமென்றும் கண்டான். எனவே அவன்தான்

பெற்ற வெற்றியின் பயனே—அதாவது தான் பிடித்த பட்டணத்தை, கைமாறு எதையும் மறுத்து, அரசனுக்களித்து விட, அச்செய்கை, நேப்பிள்சிலும் சிசிலியிலுமுள்ள பெரும் பாலாரின் வாக்குரிமையினால் உறுதிப்படுத்தப்பட்டது. ஐக்கிய இத்தாலியின் முதலாம் பாராளுமன்றம் 1861-ம் ஆண்டு பீட்மொண்டின் தலைநகரான தூரினிற் கூடியது. ரோமாபுரியும் வெனிசுந் தவிர ஏனைய இத்தாலியனைத்துக்கும் விக்டர் எமானுவல் அரசனானான்; இத்தாலிய தேசாபிமானிகளுக்கு முயற்கொம்பு போலிருந்த ஆசைகள் நிறைவேறின.

இத்தாலிய ஐக்கியம் பூரணமடைதல். முதலாம் இத்தாலியப் பாராளுமன்றம் கூடின மூன்று மாதங்களுக்குப்பின் அறிவாளியான கவூர் இறந்தான்; அவனுக்குப் பிந்தியவர் அவனுடைய திறமைபெற்றிருக்கவில்லை. பிராஞ்சியப்படையினர் ரோமாபுரியை இன்னமுங் காத்து வந்தனர்; இத்தாலியின் தலைநகர், **பிளாரென்சு**—ஆக இருக்க வேண்டியிருந்தது. இதனாலே இத்தாலி 3-ம் நெப்போலியனுடன் விரோதப்பட்டு, ஆஸ்திரியாவுடன் போரிட நினைத்திருந்ததும், தனக்குப் பேருதவி புரியுமென்று கண்டதுமான பிருஷ்யாவைத் தனக்குகந்த நட்புநாடாகக் கொண்டது. ஆஸ்திரியாவுடன் தான் செய்யவிருக்கும் போரில் இத்தாலிய உறவு பெரும் நன்மை பயக்குமென பிருஷ்ய இராஜதந்திரி, பிஸ்மாக் கண்டான். போர் 1866-ம் ஆண்டில் மூண்டது. ஆஸ்திரியக் கடற்படையும் தரைப்படையும் இத்தாலியரைத் தோற்கடிப்பினும், ஆஸ்திரியரின் பிரதான படைகள் பிருஷ்யாவினால் நன்கு தோற்கடிக்கப்பட, பண்டைத் தலைநகரமாய் விளங்கிய விசித்திரமான **வெனிசைக்** கொண்ட வெனிஷியா, இறுதியாக இத்தாலிக்களிக்கப்பட்டது. ஆனாலும் திரியஸ்தி துறைமுகத்தையும் மலைச்சாரலான திரந்தினோவையும் ஆஸ்திரியா தனக்கென வைத்துக் கொண்டது. இவை 1914—18-ம் போரிறுதிவரையும் இத்தாலியைச் சேரவில்லை. "மீட்கப்படாத இத்தாலி" என்று கூறப்பட்ட இவற்றை மீட்கவே, ஜெர்மனிக்கும் ஆஸ்திரியாவுக்கும் எதிராக, இத்தாலி நேசநாடுகளுடன் சேர்ந்தது.

இத்தாலியின்
ஐக்கியம்
(1859)
ஆண்டுகள் ஐக்கியத்திற் சேர்ந்த
ஆண்டைக் காட்டும்.
லொம்பாடி ... 1859-க்கு முன்
ஆஸ்திரியரது.
வெனிஷியா ... 1866-க்கு முன்
ஆஸ்திரியாது.
மைல்கள்
0 10 20 40 60 80 100
ஆஸ்திரியா
சுவிட்சர்லாந்து
பெருன்
லொம்பாடி
(1859)
வெனிஷியா
(1866)
பீட்மாந்து
பார்மா
(1860)
மொடினா
(1860)
லுக்கா
(1860)
தஸ்கனி
(1860)
எல்பா
கோர்சிகா
(பிர.)
சார்டினியா
காகலியாறி
மார்சால
கலாட்டமி
சிசிலி
(1860)
சரகூசு
ஆப்பிரிக்கா
சற்கால இத்தாலிய ராச்சியம்
(சேவோய் வமிசம்)
மால்ட்டா
(பிரி.)
போஸ்னியா
அங்கோனு
பெஸ்காரா
நேப்பிலத்
பாரி
பிரின்டிசி
ஒராந்தோ
மெஸ்பிரமோந்தே
ஹெர்கியோ
திருச்சபை
நாடுகள்
தைரீனியன்
கடல்
மத்திய தரைக் கடல்
அட்ரியாடிக் கடல்

[எமரி வாகர் லிமிடெட்

அடுத்த ஆண்டில் (1867), எப்போதும் தீரமிகுந்தவனும், ஆனால் உலக அறிவில்லாதவனுமான கரிபால்டி, படைகளைத் திரட்டி, பாப்பரசரின் நிலங்களின் மீது படையெடுத்தான். இத்தாலிய அரசாட்சியார் அவனுக்குதவி புரிய மறுத்தனர்; அவனைச் சார்ந்தவர் பிராஞ்சியப் படையினால் தோற்கடிக்கப் பட்டனர். இந்நிகழ்ச்சி, இத்தாலியருக்கும் 3-ம் நெப்போலியனுக்கும் இதுகாறுமிருந்த மனத்தாங்கலை அதிகமாக்கியது. கடைசியில் 1870-ம் ஆண்டில் ஐக்கிய ஜெர்மனியின் புதிய வல்லமையினாலே பிரான்சு நசுக்குண்டபோது, ரோமாபுரிக்குள் இத்தாலியர் தங்குதடையின்றி நுழைந்தனர்; இங்ஙனம், சரித்திரத் தொடர்பு பெற்றதும் பெருங் கீர்த்தியுள்ளதுமான அந்நகரத்தை இத்தாலி தன் தலைநகராகப் பெற்றது. இதனாலேற்பட்ட ஒரேவொரு விசனிக்கத்தக்க நிகழ்ச்சி, பாப்பரசருடன் மனத்தாப முண்டானமையாம்; இது பல வாண்டு காலத்துக்கு நீடித்திருந்தது. சமீப காலத்திற்றான் (1929) இப்பிணக்கு ஓரொப்பந்தத்தினால் தீர்க்கப்பட்டது. அதனால், ரோமாபுரியின் நடுப்பகுதியில் ஒரு சிறு பிரிவு—வத்திக்கன் நகர்—பாப்பரசர் ஆட்சிக்குள் நிலவுகின்றது. இங்ஙனமாக இத்தாலிய ஒற்றுமை பூரண மடைந்ததாயிற்று.

உதவிக் குறிப்புக்கள்

இத்தாலியர், ஐக்கியமும் சுயராச்சியமும் பெற நெடுங் காலம் போரிட்டு இறுதியில் வெற்றிபெற்ற வரலாறு இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது: பூரண ஒற்றுமையேற்பட ஒரு நூற்றாண்டுக்கு மேற் சிறிதுகாலம் பிடித்தது; இதற்கான வேலையிற் பெரும்பகுதி 1859-1871-ம் ஆண்டுகளுக்கிடையில் செய்யப்பட்டது. இதற்கெல்லாம் காரணமாய் நின்ற பெருமை கவூருக்கே உரியது; ஆனால் அரசனான விக்டர் எமானுவல், புரட்சியியக்கங்களை உண்டாக்கிய மஸ்ஸினி, போரே தொழிலாகக்கொண்டு அலைந்து திரிந்த கரிபால்டி என்போரும் இவ்வியக்கத்தில் அழியாப் புகழ்பெற்று விளங்குகின்றனர். ரோம சக்கராதிபத்திய கால முதலாக இத்தாலி ஒரேயொரு அரசாங்கத்துக் குட்பட்டிருக்கவில்லை யெனினும், ஒற்றுமை பூண்ட நாடென்னும் ஐதிகம் முற்றுக மறந்து போகவில்லை; இதற்கு

1-ம் நெப்போலியன் அளித்த வேகம், கொழுந்து விட்டெரியும் தேசீய உற்சாகமாக மாற, அதனை எவராலும், எவ்வித அடக்குமுறையாலும் தடுக்க முடியவில்லை.

சில் பிரதான நிகழ்ச்சிகள்

1831. மஸ்ஸினி "யௌவன இத்தாலி" என்னும் இயக்கத்தைத்தாபித்தான்.

1846. "விசால நோக்கங்கொண்ட" 9-ம் பையஸ் பாப் பரசராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1848. ரோமாபுரியிலும் இத்தாலியின் ஏனைய பகுதிகளிலும் புரட்சி.

1849. சார்டினிய அரசனை சால்சு அல்பட் முடிதுறக்க வேண்டியிருந்தது. 2-ம் எமானுவல் முடிசூடினான். புரட்சியியக்கஞ் சித்திபெறாது போயிற்று.

1852. கவூர், விக்டர் எமானுவலின் பிரதம மந்திரியானான்.

1859. ஆஸ்திரியாவுடன் போர்: மஜெண்டா, சோல்பரினோ சண்டைகள்.

1860. கரிபால்டி சிசிலியையும் நேப்பிள்சையும் பிடித்தான்.

1861. "இத்தாலிய ராச்சியம்" பிரசித்தப்படுத்தப்பட்டது.

1866. பிருஷ்ய நட்பினாலே வெனிஷியா பெறப்பட்டது.

1870. ரோமாபுரி பிடிக்கப்பட்டது.

1919. "மீட்கப்படாத இத்தாலி" ஆஸ்திரியாவிடமிருந்து பெறப்பட்டது.

1929. இத்தாலிய அரசனும் பாப்பரசரும் சமாதான உடன் படிக்கை செய்து கொண்டனர்.

10. ஜெர்மனி ஒற்றுமைபூண்ட வரலாறு

1848-ம் ஆண்டுப் புரட்சியின் விளைவு. சுங்கவரிச்சங்கத்தினாலே, ஜெர்மானிய ராச்சியங்களுட் பிருஷ்யா தலைமை பெற்றதையும், தேசாபிமானிகளான ஜெர்மானியருக்கு, நாட்டி னொற்றுமை யேற்படக்கூடியது பிருஷ்யாவின் மூல மாகவே யெனத் தோற்றியதையும் நம் முன்னரே கண்டோம். நடுத்தர வகுப்பினரின் தலைமையிலேற்பட்ட சுதந்திர அரசிய

லமைப்பை ஆதாரமாகக்கொண்டு திறமைவாய்ந்த ஐக்கிய நாட்டை ஏற்படுத்த தாராளக்கொள்கை தழுவிய பிருஷ்யர் முயன்றதையும் நாம் கண்டோம். ஆனல் இம்முயற்சிகள், முற்ருகச் சித்திபெருதுபோயின. 1849-ம் ஆண்டில் புதிதாகத் தோன்றிய ஐக்கியத்திற் சேர ஆஸ்திரியா மறுத்து விட்டது; பின்னர், தேசீய மகாநாட்டினர் தாராள மனப்பான்மை தழுவிய அரசியலே யேற்படுத்தி, பிருஷ்ய அரசனை 4-ம் பிரடெறிக் உவில்லியம் என்பானே ஜெர்மானியச் சக்கரவர்த்தி யாக அமரும்படி வேண்டினர். ஆனல் இவ்வேண்டுகோள் தாராளக் கொள்கையினரிடமிருந்து வந்தமையினலே இதற் கிணங்க அவன் மறுத்து விட்டான். பிருஷ்யச் செல்வாக்கை ஜெர்மனியின் மற்ற பகுதிகளில் கூட்டுதற்கும் சில முயற்சிகளே அவன் அரைமனதுடன் செய்தான். ஆஸ்திரிய மந்திரியான ஷிவாசன்பெர்க், நாட்டின் கலவர நிலையை சாதகமாகக் கொண்டு ஆயுதபாணிகள் சிலரின் குழப்பங்களே வலோற்கார முறைகளால் அடக்கி, பின்னர் பழைய 'புன்ட்' ஐக்கியத்தை உயிர்ப்பித்தான். இதற்கு பிரடெறிக் உவில்லியம் அரை மனதுடன் அநுமதிக்க, அவனுடைய நற்கீர்த்தி பெரிதுங் குறைந்தது. அந்த வேளேக்கு ஆஸ்திரியா வெற்றியடைந்தது போலும் ஜெர்மானிய தாராள இயக்கம் முற்ருக அழிந்தது போலுந் தோற்றியது. அனேக ஜெர்மானியர் தாராளக் கொள்கைகளே வாஞ்சையுடன் வளர்த்தனரெனினும் பிற் போக்குக் கொள்கைகள் எங்கும் தலேதூக்கின.

பிருஷ்யாவின் உயர்ச்சி. 4-ம் பிரடெறிக் உவில்லியத் துக்குப்பின் 1861-ம் ஆண்டில் அவனிலும் திறமைவாய்ந்த அவன் சகோதரனை 1-ம் உவில்லியம் முடிசூடினன். இவனுக்கு ஜெர்மனியின் ஐக்கியத்தில் நம்பிக்கை உண்டு; ஆனல் அந்த ஐக்கியம், பிருஷ்யா தலேமை பெற்றிருப்பத னலும் படையின் வன்மையினலுமே பெறப்படுமெனத் திட்டமாய் நம்பினன்; திறமைவாய்ந்த வோன்றூன் என் பவன் உதவிகொண்டு பிருஷ்ய சேனேயிற் பரந்த மாறுதல் களே உண்டாக்கினன். பழைய துவக்கத்துக்குப் பதிலாக, புது மாதிரியான "ஊசித்துவக்கை" வழக்கத்துக்குக் கொண்டு

வந்தது புது மாறுதல்களிலொன்றுகும். இப்புதுத் துவக்கினுல் முன்னிலும் விரைவுடனும் திட்டமாகவும் சூடுதல் கூடியதாயிருந்தது. இன்னமும் கூடுதலான சீர்திருத்தங்களைப் பிருஷ்ய மகா சபை கேட்டபோது அவற்றையளிக்க 1-ம் உவில்லியம் மறுத்துவிட்டான். அதிவிசேடத்திறமை வாய்ந்த பிருஷ்யப் பிரபுவான **பிஸ்மாக்** என்பவனைத் தன் பிரதான மந்திரியாக நியமித்து அவன் உதவியினுல் மகாசபையின் எதிர்ப்பை மேற்கொண்டான். இதன்பின் பிஸ்மாக், பிருஷ்யத் தலைமையில் ஜெர்மனி ஐகியம் பெறுதற்கு முயற்சிக்கலானுன். அவன் பின்பற்றிய முறை, பிரசித்திபெற்ற ஒரு பிரசங்கத்திற் அவனே கூறியது போன்று, பிரசங்கங்களினுலும் தீர்மானங்களினுலுமன்று; மற்று, "இரத்தத்தினுலும் இரும்பினுலுமே." தன் நோக்கம் சித்திபெற, அவன் மானமென்பதை முற்றுக மறந்து, உண்மை, நேர்மை ஆதியவற்றை அலட்சியஞ் செய்து, தன் இராஜதந்திரத் திறனையும், பின் வருவனவற்றை முன்னமே யூகித்தறியும் ஆற்றலையும் உபயோகித்தான். தன் இலட்சியம் சிறந்ததாகையினுல், நியாய மீறி நடத்தல் சரியென்றெண்ணினுன். முதன் முதலாகச் செய்யவேண்டியது, ஆஸ்திரியாவின் செல்வாக்கைப் பூரணமாக அழிப்பதே என்பதை அவன் உணர்ந்து கொண்டான். எனவே, ஜெர்மானிய 'புன்ட்' ஐக்கியச் சுங்கமுறையைச் சீர்திருத்துதற்கான ஏற்பாடுகளை ஆஸ்திரியா எடுத்துக்கூறியபோது, பிருஷ்யா அதற்

பிஸ்மாக்

கிணங்க மறுத்துவிட்டது. நிற்க, இயன்றவரையிற் பிருஷ்யச் சேனையின் தொகையையும் திறமையையும் கூட்டுவதில் எடுக்கப்பட்ட சிரமத்துக்கும், செலவான தொகைக்கும் அள வில்லை; பிருஷ்யரும் வியாபார விருத்திக்கு நேர்முகமாக ஏற் பட்ட தூண்டுதலினுல் செல்வம் பெருகப்பெற்றுத் திருப்தியுட னிருந்தனர். எனினும், பிருஷ்யர் பலர், பிஸ்மாக்கின் முறை களை எதிர்த்தனர். போர்ப்பெருமையும் பெருஞ்செல்வமும் தேசாபிமானமும் உண்டான பின்னரே, பிருஷ்ய தாராளக்கட்சி யினர் ஒருவாறு வாளாவிருந்தனர்.

டேனிய ஆஸ்திரியப் போர்கள். பிஸ்மாக்கின் முதற் செயல் களிலொன்று, பிருஷ்யாவுக்குக் கிழக்கே அதனை யடுத்திருந்த வன்மை மிகுந்த ருஷ்யாவுடன் போலாந்தைப் பற்றி ஓரேற்பாடு செய்துகொண்டதாம். போலாந்திலுண்டான கலகத்தை யடக்க சாருக்கு அவன் உதவிபுரிந்தான். இவ்வேற்பாடு பிற்காலத் தில் உதவியது.

பின்னர், 1863-ம் ஆண்டிலே ஷிலெஸ்விக்-ஓல்ஸ்டீனைப் பற்றின கேள்வி மீண்டுங் கிளம்பியது. தாற்காலிகமாகப் பிஸ் மாக் ஆஸ்திரியாவுடன் ஓருடன்படிக்கை செய்துகொள்ள, இரு நாடுகளுஞ் சேர்ந்து ஷிலெஸ்விக்-ஓல்ஸ்டினின் மீது படை யெடுத்து, டென்மாக்கைத் தோற்கடித்தன. புதுக்கூட்டாளி களான இவ்விருவரும் டேனிய மன்னனுக்கு இம்மாகாணங் களின் மீதிருந்த ஆதிக்கத்தை நீக்காமலே பதினேழாண்டு களுக்குமுன் ஓருடன்படிக்கைசெய்து சிக்கலான இவ்விஷ யத்தை முடிவு செய்திருந்தபடியினுல் இச்செய்கை ஐரோப்பிய சுதந்திர நாடுகளுக்குப் பெருஞ் சினமூட்டியது. ஆனுல் ஒருவ ரும் தலையிடவில்லை. ஷிலெஸ்விக்கும்-ஓல்ஸ்டீனும் பிருஷ்யா வுடனும் ஆஸ்திரியாவுடனுஞ் சேர்க்கப்பட்டன.

இனி, ஆஸ்திரியாவுக்கு வெளியாருதவி ஏற்படாத வண் ணம் அதனைப் பிஸ்மாக் தனிப்படுத்த வேண்டியிருந்தது. புதிய வல்லரசான இத்தாலியுடன் அவன் ஒப்பந்தஞ்செய்து கொண்டு, 3-ம் நெப்போலியனை நடுநிலையிலிருக்குமாறு மயக் கினன். ருஷ்யாவுடன் முன்னரே இரகசியமான ஏற்பாடு செய் திருந்தான். பிரித்தானியா தலையிடாதென அவன் எண்ணியது

உண்மையாயது. வேறு சில ஜெர்மானிய இராச்சியங்களே ஆஸ்திரியாவுக்குச் சாதகமாயிருந்தன. இப்போது அவன் ஆஸ்திரியாவைப் போருக்கிழுக்க ஒரு காரணந் தேடினான். இதொரு கஷ்டமான கருமமன்று. போர், முதலில் ஷிலெஸ்விக்கு-ஓல்ஸ்டீனைப்பற்றி மூண்டு, இறுதியாக, ஆஸ்திரியாவை முற்றுக நீக்கி, ஜெர்மானிய 'புன்ட்' ஐக்கியத்தைப் பூரணமாகச் சீர்திருத்தப் பிருஷ்யா கூறியனதைக் காரணமாகக் கொண்டது. 1866-ம் ஆண்டிற் போர் தொடங்கியது. அது நீடிக்குமென்றும், அனேகமாய் இறுதியில் ஆஸ்திரியா வெற்றிபெறுமென்றும், பிருஷ்யாவுக்கு வெளியிலுள்ள பலர் எண்ணினர். ஆனாற் பிருஷ்யருக்குப் பலவிதங்களிலும் உதவியிருந்தது அவர்களின் தலைவன் ஆற்றல் மிகுந்த வோன் மோல்க் என்பவன். மிகப் பூரணமாகச் செய்யப்பட்ட ஏற்பாட்டை உடனுக்குடன் நிறைவேற்றக்கூடிய திறமையுள்ள உத்தியோகத்தரின் கீழ் அவன் படையை ஆயத்தமாக வைத்திருந்தான். ஆஸ்திரிய காலாட்படையினரின் துவக்கினும் சிறந்த ஊசித்துவக்கும் பிருஷ்யரிடமிருந்தது. படைகளும் **வோன்ரூன்** என்பவனால் முற்றுகத் திருத்தி யமைக்கப்பட்டன. ஏழுவாரங்களில் ஆஸ்திரியப் பிரதேசமான பொகீமியாவின்மீது பிருஷ்யச் சேனை படையெடுத்துச் சென்று பிரதான ஆஸ்திரியச் சேனையை சடோவாவில் (Sadowa) பூரணமாக முறியடித்து விட்டது.

உடனே பிஸ்மாக், ஆஸ்திரியாவுக்குத் துணைபுரிந்த தென் ஜெர்மானிய நாடுகளுடனும், ஆஸ்திரியாவினுடனுங் கூட, தீவிரமாகச் சமாதானஞ் செய்துகொண்டான். வெனிஷியாவை ஆஸ்திரியா இழந்தது; பிருஷ்யத் தலைமையில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வடஜெர்மானிய சங்கத்தினின்றும் அது விலகப்பட்டது. பிருஷ்யாவுடன் பவேரியா, பேடன், வுர்ட்டம்பர்க், ஹெஸ்ஸி-தாம்ஸ்டட் என்னும் ஜெர்மானிய நாடுகள் உடன்படிக்கை செய்துகொண்டன. இவற்றைச் சங்கத்திற் சேர்த்துக்கொண்டு, அதில் நெருங்கிய ஐக்கியம் பூண்டதாகச் செய்வதே பிஸ்மாக்கின் நோக்கமாயிற்று.

3-ம் நெப்போலியனும், பிஸ்மாக்கும். இவ்வாறு அத்துணை இலேசான நிபந்தனைகள் கூறி ஆஸ்திரியாவுடன் ஜெர்

மனி சமாதானஞ் செய்துகொண்டதற்கு ஒரு காரணம், 3-ம் நெப்போலியன் ஆண்ட பிரான்சின் நிலைமையாம். நெப்போலியன் ருஷ்யாவுடனும் ஆஸ்திரியாவுடனும் போரிட்டு, பிரான்சைப் பிரதான ஐரோப்பிய வல்லரசாக்கினனென்பதை யாம் முன்னரே கண்டோம். ஆனல், இவ்விரு போர்களில் ஒன்றேனும் அவனுக்கு, அன்றேல் அவனுடைய நாட்டுக்கு, நன்மையளிக்கவில்லை. ரோமாபுரியைப்பற்றின விஷயத்தில் அவனுடைய நடத்தையானது அவனெதிர் பார்த்தவாறு பிராஞ்சியக் கத்தோலிக்கரின் ஆதரவை அவனுக்களிக்கவில்லை; அதோடு, இத்தாலியருக்கு அவனிடமிருந்த நன்றியறிதலை இல்லாது செய்துவிட்டது. பிரான்சில் குடியரசுக் கட்சியினர் தமது செல்வாக்கைப் பூரணமாக எக்காலத்தும் இழக்கவில்லை. பிரசித்த நூலாசிரியர் பலர் தமது வெளியீடுகளினுலே மாந்தர் அவனை வெறுக்கச்செய்தனர். பிராஞ்சியருக்கே, அவனிடமிருந்த நம்பிக்கை படிப்படியாகக் குறைந்து வந்தது; மெக்சிக்கோவிலே அவன் முன் யோசனையின்றித் தலையிட்டு, சித்தி பெருது போகவே, நம்பிக்கை இன்னமும் அதிகமாகக் குறைந்தது. (அ-து, அவன் ஆஸ்திரியச் சக்கரவர்த்தியின் சகோதரராஞன மக்ஸ்மிலியனை மெக்சிக்கோவின் சக்கரவர்த்தியாக்கி, பின்னர் ஒத்தாசை செய்யாது பின்வாங்க, அதிர்ஷ்டமற்ற அந்த மக்ஸ்மிலியன் தன் அரசியற் பகைவராற் சுட்டுக் கொல்லப்பட்டான்.)

ஆஸ்திரியாவுக்கும் பிருஷ்யாவுக்கும் போர் மூளுமென்பதை நெப்போலியன் கண்டபோது, வலிமைபூண்ட இவ்விரு நாடுகளும் ஒன்ருடொன்று போர்செய்தால் இறுதியில் தனக்கு நயம் உண்டாகக் கூடியவகையில் பிரான்சு தலையிடக் கூடுமென்று நினைத்து மகிழ்ந்தான். ஆனல் பிருஷ்யாவின் வெற்றி அவனுக்குச் சினமும் பெரும் பயமும் உண்டாக்கியது. இதன் முன்பும் ஆஸ்திரியாவுக்காகத் தலையிட ஆலோசித்தமையால்தான் பிஸ்மாக் விரைவாகச் சமாதானம் செய்துகொண்டான். ஐரோப்பாவிலே பிரான்சின் தலைமைத்தானத்தை நீக்கக்கூடிய ஒரு புதிய வல்லரசு தோன்றியதென்பது தெளிவாயிற்று. இதனைப் பிரான்சிய படைத்தலைவன் ஒருவன்


வட கடல்
டென்மார்க்கு
சுவீடன்
பால்திக் கடல்
ரஷ்யா
மெக்லன்பர்க்கு
பொல்லின்
போலாந்து
ஹனோவர்
பிரமன்
ஹேஸ்
கொலோன்
துருங்கியா
சாக்சனி
கோனிக்கிராட்சு
பவேரியா
பிரான்சு
சுவிட்சர்லாந்து
மியூனிச்சு
ஆஸ்திரியா
1870-ம் ஆண்டில்
ஜெர்மானிய சக்கராதிபத்தியம்
0 50 100 200 மைல்கள்
பிருஷ்யப் பிரதேசம்
அ.= அனுல்டு. பி.= பிருன்ஸ்விக்கு
லி.= லிப்பி. வா.= வால்டெக்

[எமரி வாகர் லிமிடெட்

" சடோவாவிற் ரேற்கடிப்பட்டது பிரான்சே " என்று குறிப் பாகக் கூறினன்.

இதன்பின், நெப்போலியனையும் அவனுடைய மந்திரிகளை யும் பார்க்கிலும் அதிவிவேகியாகப் பிஸ்மாக் விளங்கினன். ஆஸ்திரியப் போரில் பிரான்சு கலந்து கொள்ளாமல் நடுநிலை தாங்கியதற்காகவும், பிருஷ்யா பெற்ற புதிய நாடுகளுக்கு ஈடா கவும், தங்களுக்குப் புதிய நாடுகள் வேண்டுமெனப் பிராஞ்சி யர் வற்புறுத்தினர். தம் வேண்டுகோளை எழுத்து மூலமாகத் தெரிவிக்கும்படி அவன் கேட்க, அவர்கள் தங்களுக்கு றைன் நதியின் எல்லைப் பிரதேசமோ, அல்லது பெல்ஜியமோ வேண்டு மெனக் கூறினர். இதற்கு பிஸ்மாக் இணங்காது, நெப்போலி யன் தம் நாட்டில் ஒரு பகுதியைத் தனக்களிக்க வேண்டுமெனக் கூறினனெனத் தென் ஜெர்மானிய நாடுகளுக்கு அறிவிக்க, அவர்கள் பெரிதுஞ் சினங்கொண்டனர். பின்பு, பிரான்சியர் லக்ஸம்பேர்க் எனும் சிறிய நாட்டைத் தரும்படி கேட்க, இது ஜெர்மானியருக்கு மேலும் சினமூட்டியது. இதன் பயனாக, பிருஷ்யா தென் ஜெர்மானிய நாடுகள் எல்லாவற்றுடனும் போர்ச் சம்பந்தமாக உடன்படிக்கைகள் செய்துகொள்ள முடிந்தது.

1867-ம் ஆண்டில் ஆஸ்திரியச் சக்கரவர்த்தியான பிரான் சிஸ் யோசேப் தன் ஹங்கேரியக் குடிகளுடன் ஓரேற்பாடு செய்து கொண்டான்; அதன்படி, பலவகைப்பட்ட தன் சக்கரா திபத்தியத்தில் ஆஸ்திரியாவுடன் ஹங்கரிக்கும், செயலளவில் சமத்துவம் அளித்தான். அவனுடைய சக்கராதிபத்தியத்திலே ஹங்கேரியரே, ஜெர்மானியரல்லாத சாதியினருள் கூடிய வலிமையுடையவர்களா யிருந்தனர்; ஆகையினால் அவன் அவர்களினும் பார்க்கப் பலம் குறைந்த ரூமேனியர் போன்ற பல சிலாவிய சாதியினரின் உரிமைகளைப் புறக்கணித்து ஹங் கேரியரைச் சாமாதானப் படுத்தினன். இது ஜெர்மனியின் தலைமைக்காகப் பிருஷ்யாவுடன் ஆஸ்திரியா இன்னமும் எதி ரிடாதென்பதையும், ஆஸ்திரியாவின் ஆசைகளெல்லாம் ஐரோப்பாவின் தென் கீழ்த்திசையிலிருந்தன வென்பதையும் காட்டியது. இவ்வேற்பாடும் இப்பேராசையும், சிலாவிய சாதி

யினருக்கு அதிருப்தியும் பயமும் உண்டாக்கி, 1914-ல் மூண்ட உலகயுத்தத்திற்குப் பெருங்காலாயின.

பிராஞ்சிய-பிருஷ்யப்போர். புதிய சமஷ்டியைப் பங்தப் படுத்தவும் ஏனைய ஜெர்மானிய நாடுகளையும் சேர்த்து, இன்னமும் பெரிய சமஷ்டி ராச்சியமுண்டாக்கவும் சிறந்த மார்க்கம் போரே என பிஸ்மாக் கருதினன். பிருஷ்யா உயர்நிலையடைந்ததினுலே ஐரோப்பிய அரசியல் விஷயங்களில் தானிழந்ததாகத் தோற்றிய முந்திய பிரதான நிலைமையை மீண்டுங் தாபித்துக்கொள்ள நெப்போலியன் யாது செய்வனே என அவன் கவலை கொண்டிருந்தான். இந்நிலைமையை இன்னமுஞ் சீர்கேடாக்க இருதரத்தினரின் பத்திரிகைகளும் தம்மாலான வரையில் உதவின. கடுஞ் செயல்களைச் செய்யத் தன் வாசகர்களைத் தூண்டுவதிற் பத்திரிகைகள் யாது செய்யக் கூடுமென்பதற்கு இதுவொரு பிரசித்தியான உதாரணமாகும். போர் மிக அற்ப விஷயத்தினுல் ஏற்பட்டது—அதாவது, 1870-ம் ஆண்டில் ஸ்பானிய முடிக்குரியவர் யாரென்பதைப் பற்றின வாதமே காரணமாம். இதனைப் பற்றிக் கலந்து பேசி, இலகுவாக முடிவு செய்திருக்கலாம். ஆனல் இரு கட்சியினரும் போரிடத் தீர்மானித்திருந்தனர்.

தென் ஜெர்மானிய நாட்டினர் தன் பக்கம் சேருவரென்று 3-ம் நெப்போலியன் எதிர்பார்த்தான்; ஆனல் அவர்களோ, அவன் றைன் நதியின் எல்லைப் பிரதேசங்களை முன்னர் கேட்டிருந்ததினுல் கோபங்கொண்டிருந்தனர்; அவன் ஆஸ்திரியா தன் கட்சியைச்சேரும் என்றெதிர்பார்க்க, பிஸ்மாக் ருஷ்யாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் இவ்விஷயத்தில் உதவியது; எவ்வாறெனில், பிரான்சுக்குதவிசெய்ய ஆஸ்திரியா முன்வரின், பிருஷ்யாவுக் குதவிபுரிய தான் முன்வர நேரிடுமென்று ருஷ்யா ஆஸ்திரியாவுக்கு அறிவித்தது. ரோமாபுரியிற் பிராஞ்சியக் காவற் படைகளிருப்பதினுல் தமக்கேற்பட்டிருந்த ஆத்திரத்தை இத்தாலியர் மறக்கவில்லை. அதோடு, வெனிஷியாவைப் பெற இத்தாலியருக்குப் பிருஷ்யா உதவியதினுலும் அவர்கள் பிருஷ்யாவினிடம் நன்றிபாராட்டினர். பெல்ஜியம் தனக்களிக்கப்பட வேண்டுமென நெப்போலியன் எழுதிக்

கொடுத்த பத்திரத்தைப் பிஸ்மாக் இப்போது வெளியிட்டான்; இதன் பயனாக, நெப்போலியனிடம் பிரித்தானியருக்கிருந்த அநுதாபம் மாறியது. முடிவாக இப் பிருஷ்ய இராஜதந்திரியின் திறன்மிக்க சூழ்ச்சியால் பிரான்சுக்கு உதவுவார் ஒருவருமில்லை.

சுத்த வீரர்களெனப் பிராஞ்சிய படையினர்களுக்குப் பெருங் கீர்த்தியுண்டு. அவர்களுடைய புதிய துவக்கு, பிருஷ்யரின் ஊசித்துவக்களவுக்குச் சிறந்ததெனவே கருதப்பட்டது. தமது காலின் தோற்கவசத்தின் கடைசித்தெறி இருக்கும் வரையிலுங்கூடப் போரிட ஆயத்தமாயிருப்பதாக அவர்களின் சேனைத் தலைவனொருவன் பெருமை பேசினான். ஆனால் அது உண்மைக்கு நேர்மாறென்பது விரைவில் தெளிவாயது. ஜெர்மானியப் படைகள் மிகத்திறமையுடன் பழக்கப்பட்டிருந்தன; படைத்தலைவர்களும், படைவீரரும் தங்கடமைகள் இவையிவையெனத் திட்டமாக அறிந்திருந்தனர். பிராஞ்சியப் படைகளோவெனில், ஓரளவுக்கே சீர்திருந்தியிருந்தன; வோன் மோல்க் என்னுஞ் சிறந்த ஜெர்மானியத் தலைவரின் போர் ஏற்பாட்டுக்கு சரியாகத் தக்க யுத்த அமைப்பைப் பிராஞ்சியத் தலைவர்கள் செய்யவில்லை. ஜெர்மானியப் படைகளோ முதலில் ஆயத்தமாயிருந்தது. ஒன்றன்பின்னொன்றுகப் பல் பெரும் போர்களிலே தம் பகைவர்களைத் தாக்க, பெரிய பிராஞ்சியப் படையொன்று பிரிக்கப்பட்டு, மெட்சு அரணில் முற்றுகையிடப்பட்டது. சக்கரவர்த்தி நெப்போலியனோடு வந்த இன்னொரு பெரும்படை முற்றுகையிடுவோரைத் துரத்த முயல, அவனும் அவன் படைகளும் எதிரிகளாற் சூழப்பட்டு, (இது வரையிற் பிராஞ்சியர் பெற்ற தோல்விகளுள் இது மிகக் கேவலமானது) செடான் சண்டையில் முற்றுக முறியடிக்கப் பட்டனர். இவையெல்லாம் ஆறு வாரங்களில் நிகழ்ந்தன.

இதன் பின்னர், ஜெர்மானியர் பரீசை நோக்கி விரைந்து சென்றனர்; இங்கே புரட்சி தோன்றி, சக்கராதிபத்திய முறையை நீக்கிக் குடியரசு முறையைத் தாபித்தது. குடியரசினர் சமாதானஞ் செய்ய முயன்றதற்குப் பிஸ்மாக் இணங்கவில்லை. பேரூக்கங் கொண்டவனும் இளவயதினனுமான **கம்பற்ரு** என்னும் குடியரசுவாதியின் தலைமையிற் பிராஞ்சியர்

புதிய படைகளைத் தயாரித்து, திறமையுடன் ஜெர்மானியரை எதிர்த்தனர்; ஆனால் நன்கு பயிற்றப்பட்ட ஜெர்மானியப் படைகள் இவர்களினும் பலசாலிகள். எனவே 1871-ம் ஆண்டின் தொடக்கத்திலே, 1870-ம் ஆண்டு செப்டம்பர் மாத முதலாக முற்றுகையிடப்பட்ட பாரீசு எதிரிகள் (ஜெர்மானியர்) வசமாயிற்று.

போரின் பயன்கள். பிஸ்மாக் பிரான்சைக் கடும் நிபந்தனைகளுக் குட்படுத்தினன். அதாவது, போருக்கு நட்ட ஈடாகப் பெருந்தொகையையும், எல்லைப்புற மாகாணங்களான அல்சேசு-லொறேனையும் பிரான்சு பிருஷ்யாவுக்குக் கொடுக்க வேண்டுமெனக் கூறினன். இவற்றை யிழந்ததினால் மனம் நொந்த பிராஞ்சியர் ஜெர்மானியரை எக்காலத்தும் மன்னிக்க வில்லை. போர் நடைபெற்றபொழுது ஏற்பட்ட மூன்றாவது பிராஞ்சியக் குடியரசு 1875-ஆம் ஆண்டில் நிரந்தரமானதாய் அமைக்கப்பட்டது. அது 1940-ஆம் ஆண்டில் பிராஞ்சு ஜெர்மனியராற் கைப்பற்றப்படுமட்டும் நின்று நிலவுவதாயிற்று.

இப்போது பிருஷ்யரின் ஆசைகள் பூர்த்தியாயின. வார்சேலிலுள்ள பிராஞ்சிய வேந்தரின் பழைய மாளிகையில் பிருஷ்ய அரசனை 1-ம் உவில்லியம், ஜெர்மானியச் சக்கரவர்த்தியாகவும், பிஸ்மாக் அவனுடைய சக்கராதிபத்திய மந்திரியாகவும் பிரசித்தஞ் செய்யப்பட்டனர். ஆஸ்திரியா நீங்கலாக ஏனைய ஜெர்மானிய நாடுகளனைத்துஞ் சேர்ந்த ஒரு அரசியல்முறை அமைக்கப்பட்டது. போரிற் சிறந்த பிருஷ்யாவின் தலைமையிலே ஜெர்மானியச் சக்கராதிபத்தியம் என்னும் ஒரு புதிய வல்லரசு தோன்றியது. ஜெர்மானியர் ஒற்றுமையடைந்தனர். ஆனால் இவ்வைக்கியம், 1848-ஆம் ஆண்டில் சித்திபெறுத ஜெர்மானிய தாராளக் கொள்கையாளரின் எண்ணங்களுக்கு மாறான வழியிலுண்டானது.

உதவிக் குறிப்புகள்

இவ்வத்தியாயத்தில், பிருஷ்யத் தலைமையில் ஜெர்மனி ஒற்றுமை பூண்டமை கூறப்பட்டுள்ளது. முதன் முதலாக, வெற்றிப் போரினாலே ஜெர்மானிய விஷயங்களிற் பங்கு

பெருதபடி ஆஸ்திரியா நீக்கப்பட்டது; பின்னர், இவ்வாறே 1870-1871-ம் ஆண்டுப் பிராஞ்சிய ஜெர்மானியப் போரினலே ஏனைய ஜெர்மானிய நாடுகள் ஒற்றுமை பூணுமாறு செய்யப் பட்டன. "இரத்தமும் இரும்பும் சொரியும்" முறைகளையும் "சாம பேத தான தண்டம்" என்னும் தந்திரங்களையும் சிறப் புடன் உபயோகித்து ஜெர்மானிய ஒற்றுமையை யுண்டாக்கிய பிஸ்மாக்கின் இராச்சிய தந்திர முறையைத் தொடர்ச்சியாகக் கவனித்தல் மனங்கவருஞ் செயலாம். ஜெர்மானியச் சக்கராதி பத்தியத்தின் தன்மையானது அதனை ஏற்படுத்துதற்குப் பின் பற்றப்பட்ட முறைகளினால் பெரிதும் மாறியது; சில ஆண்டு களுக்குப் பிருஷ்யா தலைமை பெறுமென்பது உறுதிப்படுத்தப் பட்டது.

சில பிரதான நிகழ்ச்சிகள்

1833. ஜெர்மானியச் சுங்க ஐக்கியச்சங்கத்தைப் (சொல் வறேன்) பிருஷ்யா தாபித்தது.

1848-9. ஜெர்மானிய "தாராளக் கொள்கையினரின் புரட்சி" சித்திபெறவில்லை.

1861. 1-ம் உவில்லியம் பிருஷ்யாவின் அரசனானன்.

1862. பிஸ்மாக், பிரதான பிருஷ்ய மந்திரியாக நியமிக்கப் பட்டான்.

1863. டேனிய—பிருஷ்யப் போர்; இதன் பயனாக டென் மாக் ஷிலெஷ்விக்கு—ஓல்ஸ்டீனை இழந்தது.

1866. ஆஸ்திரியாவுடன் "ஏழு வாரப் போர்."

1867. வடஜெர்மானிய ஐக்கியம் (சமஷ்டி) ஏற்பட்டது.

1870. பிராஞ்சிய-ஜெர்மானியப் போர்.

1871. பரீசு பட்டினத்தின் வீழ்ச்சி. சமாதானம் வேண்டி நின்ற பிரான்சுக்கு நிபந்தனைகள் விதிக்கப்பட் டன. வார்சேலிலே ஜெர்மானியச் சக்கராதி பத்தியம் பிரசித்தஞ் செய்யப்பட்டது.

11. 1914-ம் ஆண்டுவரையில் ருஷ்யாவின் சரித்திரம்

சாரின் இராச்சியம். 1815-ல் நடந்த வியன்னு மகாநாட்டின் பின் விசாலமான தேசமாகிய ருஷ்யா ஐரோப்பிய விவகாரங்களில் அதிமுக்கிய இடம் பெற்றது. உலகபடத்தை நோக்கின், ஐரோப்பாவிலேயுள்ள ஏனைய இராச்சிய மெதனிலும் ருஷ்யா மிகப் பெரிதென்பது தெளிவாகும்; ஐரோப்பாவுக்குக் கீழ்த்திசையிலே அதனிலும் மிகப்பரந்த ருஷ்யப பிரதேசம் ஆசியாவின் வடபாகத்தில் பசிபிக்குச் சமுத்திரம் வரையிற் பரவியிருப்பதை நாம் காண்போம். இப்பரப்புள் ளிருந்தவருட் பெரும் பகுதியினர், முன்னரும், இப்போதும் சிலாவிய சாதியினரே. இதோடு ருஷ்யச் சக்கரவர்த்தி, வேறெருரு சாதியினர் வசித்த பின்லாந்தையும், சிலாவியராயினும் அவர்களிற் பெரும்பாலாரைப் போன்று கிரேக்க வைதிகக் கிருஸ்தவ திருச்சபையினராயிராது, ரூமன் கத்தோலிக்கராய் வாழ்ந்த போலாந்தினர் நாட்டையும், ஆண்டு வந்தான்; பின்லாந்தினரும் போலாந்தினரும் ருஷ்யாவின் ஆதிக்கத்தை முற்றுக வெறுத்தனர். 19-ம் நூற்றுண்டில், ஆசியாவில், ருஷ்யர் தம் ராச்சியத்தினெல்லையைத் தென் கீழ்த்திசையில், துருக்கி, பாரசீகம், ஆப்கானிஸ்தான் என்பவற்றின் எல்லைகளைத் தொடும் வரைக்கும் விசாலிக்கச் செய்து வந்தனர்; அதாவது அவர்கள் காக்கேசிய மலைவாசிகளையும், துருக்கிஸ்தானத்து மங்கோலியத் தார்த்தாரியரையும் ஆண்டனர். ருஷ்ய ராச்சியம் இவ்வாறு பரவியமை, இந்தியாவிலிருந்த பிரித்தானியருக்குப் பெருங்கவலை யளித்ததோடு அந்நூற்றுண்டிலே அன்னவர் நாட்டுக்கும் ருஷ்யாவுக்கு மிடையே யேற்பட்டிருந்த மனத்தாங்கலை அதிகரித்ததற்குக் காரணமாயுமிருந்தது.

இந்நாடுகளையும் அவற்றிலுள்ள பலவகை மாந்தரையும் "சார்" என்னும் பட்டப்பெயர் பூண்ட ருஷ்யச்சக்கரவர்த்தி எதேச்சாதிகாரியாய் ஆண்டு வந்தான். பிரபுக்கள் அவனையே முற்றுக நம்பியிருந்தனர்; ருஷ்ய உத்தியோகத்தரில் பெரும் பகுதியோர் பிரபு வகுப்பினரே. இவர்களிலதிகப்படியானோர்

மத்திய அரசாங்கத்துக்கு நெடுந்தூரத்திலிருந்தனர்; மிகப் பரந்த அந்த இராச்சியத்தில் போக்குவரத்து மெதுவாகவும் கஷ்டத்துடனுமே நடைபெற்று வந்தது; இதன்பயனாக, பல

[இ. என். ஏ.

ருஷ்ய உழவன்

பகுதிகளில் அரசாங்கம் சீர்கேடுற்றுக் கடுமையாயிருந்தது. உத்தியோகத்தரல்லாத பிரபுக்கள் தமது தோட்டநிலங்களிற் தங்கியிருந்தனர்; தம் உழவரின் மீது அவர்களுக்குப் பேரதிகாரமிருந்தது. இவ்வுழவரிற் பெரும்பான்மையோர் அடிமைகள்; அந்தந்த நிலத்துக்குரியவரென நியமிக்கப்பட்டவர்; இத்தாழ் நிலைமையிலிருந்து ஆங்கில உழவர்கள் ஏறக்குறைய மத்திய காலத்திலேயே விடுவிக்கப்பட்டனர். ருஷ்ய உழவர்கள்

அறியாமையிலாழ்ந்திருந்தனர்; அவர்கள் கல்வியறிவற்றவர்கள்; பிரபுக்களை எதிர்க்காமலே பல கஷ்டங்களையும் கொடுமைகளையும் சகித்து வந்தனர். கிரேக்க வைதிகத் திருச்சபையினிடம் அவர்களுக்குப் பெரு நம்பிக்கையுண்டு. இத்திருச்சபையும் அதிகமாக சாரின் அதிகாரத்துக்குட்பட்டிருந்தது. ஏனைய ஐரோப்பிய நாடுகளில் பொதுசன விஷயங்களிற் பிரதானமாய் விளங்கிய நடுத்தர வகுப்பினர், ருஷ்யாவில் மதிக்கப்படவில்லை. வியாபாரிகள் அநேகமாய் அந்நியர்; அன்றேல் யூதஜாதியினர். இவர்களைச் சனங்கள் பகைத்தும் அவமதித்தும் வந்தனர். உத்தியோக வர்க்கத்தினரும் அதிகமாக இல்லை; இருப்பவர் மிகக் குறைந்த அளவுக்கே கல்வி பயின்றிருந்தனர்.

ருஷ்யாவும் ஐரோப்பாவும். பேரரசி 2-ம் கதறின் காலத்தில் ருஷ்யா, துருக்கரைப் பின்வாங்கச்செய்து, கருங்கடற் கரையிலே ஓரிடம் பெற்றிருந்தது. தென்மேற்குத் திசையில் தனக்குரிய பிரதேசத்தை இன்னமும் பெருப்பிக்க அது பேராவல் கொண்டிருந்தது; துருக்கியின் ஐரோப்பியப் பிரதேசங்களை (பிரதானமாகக் கொன்ஸ்தாந்திநோப்பிலைப்) பேராசையுடன் நோக்கியது. இதற்குப் பல காரணங்களிருந்தன. முதலாவதாக, கொன்ஸ்தாந்திநோப்பில் அதன் வசமிருப்பின், கடல் வழியே மத்தியதரைக் கடலுக்குத் தங்கு தடையின்றி செல்லுதலியலும். இரண்டாவதாக, பண்டைக்காலங்களில், கொன்ஸ்தாந்திநோப்பில் கிரேக்க வைதிக சமயத்தின் மத்தியத்தானமாக இருந்தது. இன்று அவர்களின் சிறந்த சென்ற் சோபியாத் தேவாலயம் துருக்கிய பள்ளிவாசல் ஆகிவிட்டது. மூன்றுவதாக பால்க்கன் தீபகற்பத்தில் சனத்தொகையிற் பெரும் பகுதியினர் சிலாவிய சாதியினரும் கிரேக்க வைதிகத் திருச்சபையைச் சார்ந்தவருமாவர். இவர்களைத் துருக்கர் சிற்சில சமயங்களிற் பெரிதுந் துன்புறுத்தினர். இவர்களுடைய ஆட்சியும் சீர்கெட்டிருந்தது. இவ்வாறு நெருக் குண்டவருடன் ருஷ்யர் மிக்க அநுதாபங்கொண்டனர்; இவர்களைப பாதுகாக்க வேண்டுமென சார் கவலை கொண்டிருந்தான்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் ஐம்பதாண்டுகளிலே, மேலே கூறியவாறு ருஷ்யச் செல்வாக்கைத் தென்

மேற்குத் திசையிற் பரப்புவதே சாரின் அரசியல் தந்திரத்தின் பிரதான நோக்கமாயிருந்தது. ஆனால், இது ஏனைய ஐரோப்பிய நாட்டினரால் எதிர்க்கப்பட்டது; ஆஸ்திரியாவுக்குப் பால்க்கன் தீபகற்பத்தில் பற்றுதலான விஷயங்களிருந்தன; அது பல சிலாவோனியக் குடிகளை ஆண்டமையினால், அவர்களுடன் ருஷ்யா அநுதாபங்கொள்வதைக் கவலையுடனேயே கவனித்தது, ருஷ்யா, கீழ்த்திசையிற் பரவுவதைக் கண்ட பிரித்தானியா அச்ச மடைந்தது. பிரதானமாக, அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் சுவேஸ்கால்வாய் திறக்கப்பட்ட பின்பு, இந்தியாவுக்குத் தான் செல்லும் பாதையை ருஷ்யா தடை செய்யக்கூடும் என்றும் பயந்தது. பல காரணங்களினாலே பிரான்சு பிரித்தானியாவை ஆதரித்தது. எனவே ருஷ்யா பால்க்கன் தீபகற்பத்தில் துருக்கியின் தானத்தைப் பெற ஆவல் கொண்டமை பொதுவாக எவருக்கும் விருப்பமில்லை. ருஷ்யாவின் செல்வாக்கினாலுண்டான அழுக்காறே 1854-55-ம் ஆண்டுகளிற் பிரித்தானியாவும் பிரான்சும் கிரீமியப்போரிற் றலையிடச்செய்தது. இப்போர், இருதரத்தினராலும் பெரும் வீரத்துடன் நடத்தப்பட்டது; ஆனால் அதிக போர்த்திறமை காணப்படவில்லை. கருங்கடலில் ருஷ்யத் துறைமுகமாகிய **ஸெபாஸ்தபோல்**, முற்றுகையிடப்பட்டதும், அதனை நீக்க ருஷ்யர் செய்த முயற்சிகளுமே இப்போரின் பிரதான நிகழ்ச்சிகளாம். இப்போரை முடிவுக்குக் கொண்டுவந்த உடன்படிக்கையினால் உண்மையாகத் தீர்க்கப்பட்ட ஒரேயொருவிஷயம், ருஷ்யா கருங்கடலில் கப்பற்படையொன்றை வைத்திருக்கக் கூடாதென்பதேயாம். ஆனால் 1870-ம் ஆண்டிற் பிரான்சு பிருஷ்யாவினால் நசுக்கப்பட்டபோது, ருஷ்யர், பிஸ்மார்க்குடன் தாங்கள் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி, கருங்கடலைப்பற்றின ஏற்பாட்டை நிராகரித்தனர். நிற்க, கிரிமீயப் போரினாலேற்பட்ட உண்மைப் பயனெல்லாம், துருக்கப் பிரதேசத்தில் ருஷ்யச் செல்வாக்கைச் சிறிதுகாலத்துக்குத் தடுத்து, ஆசியாவிற்றங்கள் இராச்சியத்தைப் பெருப்பிக்கும்படி அவர்களுடைய கவனத்தைத் திருப்பியதேயாகும்.

1870-79-ம் ஆண்டுகளில் ருஷ்யா மீண்டுந் தன் கவனத்தைத் துருக்கியின்பாற் செலுத்தியது. "**சகல சிலா**

வியர்'' இயக்கத்துக்கு உற்சாகமுண்டாக்கப் பத்துப் பன்னிரண்டாண்டுகளாக அது தன்னுற்கூடியனவற்றை யெல்லாஞ் செய்துவந்தது. சிலாவோனிய சாதியினரின் சாதிப் பற்றைப் பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாம். இதனுல் பால்க்கன் தீபகற்பத்திலிருந்த சிலாவரிடையே பெருங்கிளர்ச்சி யுண்டாக, அதனையடக்கத் துருக்கர் கடுமுறைகளைப் பின்பற்றினர். ருஷ்யா இதனைக் கண்டித்து, இறுதியாக 1877-ம் ஆண்டில் துருக்கியுடன் போர்தொடுத்தது. துருக்கர் வீராவேசத்துடன் எதிர்த்தனர். இதனை ருஷ்யர் கடுமுறைகளினு லடக்கி உடன்படிக்கைக்கான நியமங்களை விதித்த பின்னர், ஐரோப்பிய ''வல்லரசுகள்'' தலையிட்டு, அந்நியமங்களை பெர்லினில் கூட்டப்பட்ட ஒரு மகாநாட்டிற் புதிப்பித்தன. பால்க்கனிற் சுயராச்சிய நாடுகளினபிவிருத்தி தூண்டப்பட்டு அவ்வழியே ருஷ்யரின் செல்வாக்கு தடுக்கப்பட்டது; ஏனெனில் இச்சுயராச்சிய நாடுகள், ருஷ்யாவினுலாளப்படுவதினும் பார்க்க, சுதந்திரத்தையே நாடி நின்றன. ருஷ்யர் திரும்பவும் மத்திய ஆசியாவிற் றம் மிராச்சியத்தைப் பெருப்பிப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கலாயினர்; ஆனுல் இச்செய்கை, இதுகாறும் பிரித்தானியாவுடனேற்பட்டிருந்த மனத்தாபத்தை அதிகரிக்கவே செய்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதி முழுவதிலும் ஐரோப்பிய நாடுகளுள் ருஷ்யாவே தமக்கு விரோதியெனப் பிரித்தானிய அரசியல் நிபுணர்கள் கருதிவந்தனர். ருஷ்யா இவ்வாறு விரிவு அடைந்தமையால் 1904-ல் யப்பானுடன் போர் புரிந்து, அதில் பெருந்தோல்வியடைய நேர்ந்தது.

ருஷ்யாவின் உள்நாட்டுக் கருமங்கள். கிரிமீயப்போர் நிகழ்ந்த காலத்திலே இறந்த 1-ம் நிக்கொலஸ் என்னும் ருஷ்யச் சக்கரவர்த்தி (சார்) கடுமையுடன் எதேச்சாதிகாரஞ் செய்து வந்தான்; சீர்திருத்தத்துக்கான எல்லா முயற்சிகளையும் அவன் அடக்கிவிட்டான். ஊக்கமுள்ளவனுக இருந்தபோதிலும் ருஷ்ய உத்தியோகத்தரின் திறமையற்ற தன்மையையும் பரிதானம் பெருங்குணத்தையும் அவனுல் நீக்கமுடியவில்லை. கிரிமீயப் போரின்போது பிராஞ்சியரும் ஆங்கிலேயரும்

ருஷ்யரினும் பார்க்க மிகக் குறைந்த தொகையினர் கொண்ட படையை யனுப்பிய போதிலும், அதனைத் தோற்கடிக்க முடியாதபோது இவ்வுண்மை நன்கு விளங்கியது. தோல்வி ருஷ்யாவிற் பெரும் அதிருப்தியை யுண்டாக்கியது; புதிய சாரான 2-ம் அலெக்சாந்தர் நிலைமையைச் சீர்திருத்தத் தீர்மானித்தான். அவனது முதற்செயல், அடிமைகளை விடுவித்து, அவர்களை நிலத்துக்குரிமையுள்ள கமக்காரர்களாக ஆக்கியதே. இது பெருந்தன்மையான காரியமே. ஆனால் இதனாலேற்பட்ட பயன்கள் நன்மை பயக்கவில்லை. விடுதலை பெற்ற அடிமைகள் பலர்—அநேகமாய் யூதர்களிடம் ஏராளமாகக் கடன் பட்டனர்; இதனாலே யூதர்களுக்கு விரோதமான குழப்பங்கள் பல உண்டாயின; அவர்களிற் பலர் படுகொலை செய்யப்பட்டனர். அநேகமாய் அத்தருணத்திலேயே, பின் னேற்றமடைந்திருந்த ருஷ்யாவிற் கைத்தொழிற் புரட்சியின் பயன்கள் மெள்ளப் பரவின; பட்டணங்களும் விருத்தி பெறலாயின. ஆனாற் புதிய கைத்தொழிற்சாலைகளில் உழைத்த தொழிலாளிகளின் நிலைமை மிகச் சீர்கேடடைந்திருந்தது; கைத்தொழிற்சாலைப் பட்டணங்களிலிருந்த ஆட்களிற் பெரும் பாலோர் பெரிதுந் திருப்தியற்றவர்களாயிருந்தனர். 1860-69-ம் ஆண்டுகளிடையே ஓரளவுக்குத் தலசுயவாட்சி கொடுக்கப் பட்டது; சனங்கள் தெரிவு செய்த பிரதிநிதிகள் கொண்ட "செமிஸ்தவ்" என்னுந் தல ஆட்சிச் சபைகள் மொத்தத்தில் ஒருவாறு நற்சித்தி பெற்றன. ஓரளவுக்குக் கல்விக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது; ஆனாற் கல்வி கற்றவர் முன்னிலும் மதிகமாக அதிருப்தியடைந்தனர்; அவ்வதிருப்தி அவர்களுடைய மனத்திலும் தொழிலாளிகளின் மனத்திலும் புரட்சிக்கான எண்ணங்களையே தோற்றுவித்தது. வெளிப் படையாக இவ்வெண்ணங்கள் தோற்றியதை அரசினர் மிகக்கடுமையுடன் அடக்கினர்; புரட்சிக்காரனென ஐயப் படுதற்கிடந் தந்த எவனும் நெடுந்தூரத்திலுள்ள சைபீரியாவுக்குக் கடத்தப்பட்டான்; அவ்வாறு கடத்தப்பட்டவன் எவனும் திரும்பி வந்ததில்லை. இச்செய்கை இன்னும் அதியுக்கிரமான வழிகளை புரட்சிக்காரர் கைப்பற்றுமாறு

தூண்டியது; அவர்கள் "நிகிலிஸம்" ("Nihilism") அல்லது **பிரசா சுவதந்திரம்** என்னு மியக்கத்தை யுண்டாக்கினர்; இவ்வியக்கத்தினேக்கம், அக்காலத்தில் வழங்கிய பல துறைகளிலுமுள்ள பழக்கவழக்கங்களே அறவே யொழிப்பதாம்; ஏன் எனில், சீர்திருத்தக் கூடாத அளவுக்கு அவை சீர்கேடான நிலைமையிலிருப்பதாக அவர்களுக்குத் தோற்றின. உத்தியோகத்தர் பலர் வெடிகுண்டுகளினலும் குத்துவாட்களினலுங் கொல்லப்பட்டனர்; 1861-ம் ஆண்டில் இவ்வியக்கத்தைச் சார்ந்த வொருவன் 2-ம் சார் அலெக்சாந்தரையே (அவன் இன்னமுஞ் சீர்திருத்தங்களேச் கொண்டு வர முயன்று வந்த போதிலும்) கொன்றன். இக்கொலே முன்னேற்றத்தைத் தடுத்துப் பின்னேற்ற முறைகளே விருத்தி செய்தது; 3-ம் அலெக்சாந்தரினதும், 2-ம் நிக்கொலசினதும் ஆட்சி, கடுமையாயும் அரசனிட்டதே சட்டமெனவும் பல வாண்டுகளுக்கு நடந்து வந்தது.

யப்பானியப் போரிலேற்பட்ட தோல்வி, ருஷ்யப் போர்த் தலைவர்களினதும் போர்ப்பகுதி யுத்தியோகத்தினரிதும் திறமையின்மையினலேயே பெரிதுமேற்பட்டது; இத்தோல்வி, சனங்களிடையே அதிருப்தியை மீண்டும்உண்டு பண்ணியது. 1905-ம் ஆண்டிற் சென்ற் பீற்றஸ்பர்க்கிலே கைத்தொழிற் சாலே வேலேயாட்களனேவரும் வேலே நிறுத்தஞ் செய்தனர். இது அடக்கப்பட்டது; ஆனல் இரத்தஞ் சிந்தும்படி நேரிட்டது. சார் 'டூமா' எனப்படும் ஒரு பாராளுமன்றத்தை தாபித்தான்; ஆனலச்சபைக்கு உண்மையான அதிகாரங்களொன்றுங் கொடுக்கப்படவில்லே; செயலளவிலே அது ருஷ்ய அரசாங்கத்தை ஒரு சிறிதும் மாற்றவில்லே. உலகப் பெரும்போர் துவங்கும் வரையும் ருஷ்யா இந்நிலேயிலே இருந்தது. இப் போரில் ருஷ்ய அரசாங்கம் விருப்பமில்லாமல் கலக்கவில்லே. குறை கூறிவந்த மாந்தரின் கவனம் தங்கள் கஷ்டங்களேப் பற்றி நினேப்பதற்குப் பதிலாகப் போரிலும் அதன் சம்பந்தமான கருமங்களிலும் செல்லுமெனவும் பெரும் வெற்றிகள் ருஷ்ய அரசியல் நிபுணரின் கீர்த்தியைத் திரும்பவும் நிலைநாட்டுமென வும் ருஷ்ய அரசாட்சியார் கருதினர். ஆனல் அங்குள்ள

எதேச்சாதிகார முறைகளெல்லாம் வீழ்ச்சி அடைந்து அற்றுப் போனதே இப்போரின் இறுதி விளைவாகும்.

நாகரிகத்துக்கும் பொருளாதாரத்துக்குமான் கருமங்கள். 1914-ம் ஆண்டுக்கு முந்திய ஐம்பதாண்டுகளிலே, ருஷ்யா நாகரிகத்திலே பெரு முன்னேற்றமடைந்து, கமக்காரர், பொதுவாக வறியவர், அறிவில்லாதவர், என்பதுண்மையே; ஆனல் மத்திய வகுப்பினரும் பிரபுக்களும் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினர். இவ்வகுப்பிலிருந்தே புரட்சிக்காரர் பலரும் சிறந்த நூலாசிரியர் பலரும் தோற்றினர். அவர்களுள் சிறந்தவர் பெரும் புகழ் வாய்ந்த ரொல்ஸ்ரோய் ஆவர். இவரது கருத்துக்கள் கற்றோர் மனதில் பெரும் இடம் பெற்றது.

பிரதான வியாபாரத்துறைகள் பல, அங்கியரிடையே—விசேடமாக ஜெர்மானியரிடையே—இருந்தபோதிலும், கைத்தொழில் முயற்சிகள் பல, அநேகமாய் அரசாட்சியாரின் நேர் முகமான ஆதரவுடன் தொடங்கப்பட்டன. உலகத்திற் கோதுமையை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளுள் ருஷ்யாவும் ஒன்றாயது. புகைரத வீதிகளும், தந்திப் போக்கு வரத்தும் தூரத்திலுள்ள இடங்களுக் கமைக்கப்பட்டன; இவற்றுட் பிரதானமானது "திரான்சு-சைபீரியப் புகைரத வீதி" ஆகும்; இது ஆசியாவின் வடக்குப் பாகத்திலே மேற்குக் கிழக்காக ஐரோப்பாவிலிருந்து பசிபிக்கு சமுத்திரக் கரை வரைக்கும் ஓடுகின்றது. இதிற் பெரும் பகுதி அரசாட்சியார்ரா லமைக்கப்பட்டது. அரசாட்சியார் மதுபான வியாபார உரிமையைத் தமக்கே வைத்துக் கொண்டார். இது அரசாட்சியாருக்கு அதிக ஊதியந் தருவதாயிற்று.

ருஷ்ய ராட்சிக்குட்பட்ட சனங்கள். இதுகாறும் விவரித்த நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலத்திலே ருஷ்யராட்சிக்குட்பட்ட சனங்கள் பெரிதுங் கஷ்டப்பட்டனர். அவ்வரசாட்சியாரின் இராச்சிய தந்திரம் குறுகிய தேசீய நோக்கங் கொண்டிருந்தது; தம்மாட்சிக்குட்பட்ட சனங்களே பலாத்கார முறைகளினல் ருஷ்யர்களாக்குவதாயிருந்தது. இம்முயற்சி, பின்லாந்து, போலந்து—வாசிகளினலும், பால்திக் கடலின் தென் கீழ் மூலையிலிருந்த எஸ்தோனியா, லட்வியா, லித்துவேனியா

என்னும் மூன்று சிறு நாட்டினராலும் வைராக்கியத்துட னெதிர்க்கப்பட்டது. இந்த ஐந்து நாடுகளும் முதலாவது உலகப் பெரும் போரின்பின் சுதந்திரம் பெற்று, இரண்டா முலகப் போரில் சிக்கும் வரையும் செழிப்புற்றிருந்தன.

உதவிக் குறிப்புக்கள்.

ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் தொடர்புண்டாக்கு மொரு நாடாகவே ருஷ்யா இருக்கின்றது; இருந்தும்வந்தது 1-ம் பீற்றரையும், 2-ம் கத்தரீனாையும் போன்றவர், மிருகங் களைப் போன்று அரைவாசி இருந்தமாந்தரை ஐரோப்பிய முன் மாதிரியைப்பின் பற்றச் செய்தனர்; நெப்போலியப் போர் களும் அந்நாட்டை ஏனைய ஐரோப்பா நாடுகளுடன் மிக நெருங்கின விதமாகத் தொடர்பு பூணச் செய்தன. முன்னே கூறிய சிறந்த ஆட்சியாளர்க்குப் பின் ஒரு நூருண்டு காலத்துக்கு ஆட்சிபுரிந்த எதேச்சாதிகாரிகளின் சரித்திரத்தை யும்; அவர்கள் துருக்கிக்குரிய பிரதேசங்களை—விசேடமாகக் கொன்ஸ்தாந்திநோப்பிலை அடைய எவ்வாறு இச்சித்தனரென் பதையும்; பெரும் சிலோவோனிய வல்லரசாகிய ருஷ்யாவுக்கு உட்படாமலே பால்க்கன் தீபகற்பத்திலுள்ள சிலோவோனி யரைச் சுதந்தரம் பெற வசதியளித்து, ருஷ்யாவின் பேராசை யைப் பூர்த்தி பெற விடாது ஏனைய ஐரோப்பிய நாடுகள் குறுக் கிட்டு நின்றதையும்; ருஷ்யருள் அறிவிற் சிறந்தோர் எதேச் சாதிகார மன்னரையும் சீர்கேடான அரசாட்சியைப் பகைத் ததையும்; அதனையெதிர்த்தபோது அவர்களுடைய முயற்சி கள் வீணுயினதையும்; இவ்வத்தியாயம் கூறுகின்றது. ஏனைய அத்தியாயங்கள் இவ்வெதேச்சாதிகார ஆட்சிமீட்டற்கரிய வகையிலே எவ்வாறு ஒரு முடிவுக்குக் கொண்டுவரப் பட்ட தென்பதை விளக்கும்.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1772-1795. ருஷ்யா, ஆஸ்திரியா, பிருஷ்யா என்பவற்றுக் கிடையே போலாந்து மூன்று முறை பங்கீடு செய்யப்பட்டது.

1788-1792. துருக்கியுடன் வெற்றிகரமான போர்.

1815. வியன்னு ஏற்பாட்டினுலே ருஷ்யராதிக்கத்தின் பெருக்கம்.

1854-5. பிரான்சுடனும் பிரித்தானியாவுடனும் கிரிமீயப் போர்; ருஷ்யா தென்மேற்குத் திசையிற் பரவுதல் தடுக்கப்பட்டது.

1856. அடிமைகள் விடுவிக்கப்பட்டனர்.

1877. துருக்கியுடன் போர்.

1878. பெர்லின் மகாநாடு: ருஷ்யர் தென்மேற்குத் திசையிற் பரவினமை மீண்டுந் தடுக்கப் பட்டது.

1881. சாரான 2–ம் அலெக்சாந்தரின் கொலை.

1904-5. யப்பானுடன் போர் புரிந்ததில் ருஷ்யாவின் தோல்வி.

1906. "டூமா" (ருஷ்யப் பாராளுமன்றம்) தாபிக்கப் பட்டது.

12. ஐரோப்பாவின் புரட்சிக்களம்

பால்க்கன் நாட்டுச் சாதியினர். பதினைந்தாம் நூற்றாண்டிலே துருக்கர் கொன்ஸ்தாந்திநோப்பிலைக் கைப்பற்றி, ஐரோப்பாவிலே தம்மைத் திடமாகத் தாபித்துக்கொண்டனர்; பால்க்கன் தீபகற்பத்திலிருந்த பல சாதி மாந்தரும் இன்றைக்கு நூறாண்டு வரையில் அவர்களுக் குட்பட்டிருந்தனர். போஸ்னியாவிலும் அல்பேனியாவிலுமிருந்த அநேகர் இஸ்லாமிய சமயத்தைத் தழுவி இன்னமும் முஸ்லிம்களாயிருந்தபோதிலும், பெரும் பகுதியோர் கிறிஸ்தவர்களாகவே இருந்தனர். தென் பகுதியிலே, பண்டைய கிரேக்க மொழித் தொடர்புள்ள ஒருவகை மொழி பேசிய கிரேக்கரிருந்தனர்; ஆனால் இவர்கள் சிலாவியப் படையெழுச்சிக்காரருடன் இரத்தக் கலப்புடையோராயிருந்தனர். வடகீழ்ப் பகுதியிலே—மொல்டேவியாவிலும் வாலேச்சியாவிலும்—ருமேனியர் வசித்தனர்; இவர்கள் பிரஞ்சு, இத்தாலிய மொழிகளுடன் தொடர்புள்ள ஒருவகை லத்தீன் மொழி பேசினர். ஓரளவுக்கு மங்கோலியக் கலப்புள்ள பல்கேரியர் கீழ்ப்பகுதியிலும், கலப்பற்ற சிலாவியரான சேர்பியர் மேற்குப் பகுதியிலும் இருந்தனர். சேர்பியரைப் பெரிதும் ஒத்த மோந்தநீகிரினர், துருக்கர் எப்போதும்

வெல்லாத ஒரு சிறு மலைப்பிரதேசத்திலிருந்தனர்; இதே சாதியினரான போஸ்னியர் வடமேற்கு மூலையிலும், அவர்களுக்கு வடக்கே குரோட்டியருமிருந்தனர்; இந்தக் குரோட்டியர் ஆஸ்திரிய மன்னர்களின் குடிகளாயினர். இவ்வாஸ்திரிய மன்னர்கள், ஹங்கரிய அரசர் என்னும் முறையினாலே, காரப்பேத்திய மலைகளின் தென் கீழ் மூலையிலிருந்த திரான்சில்வேனியாவையும் ஆண்டனர். இங்கு நிலத்துக்குரிமையுள்ள பிரபுக்கள் ஹங்கேரியராயினும் கமக்காரரிற் பெரும்பான்மையோர் ருமேனியரே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே பல்வேறு சாதியினரு மிருந்த வகை இதுவே.

துருக்கராட்சி, பரிதானம் பெருவதாயும் திறமையற்றதாயு மிருந்தது; ஆனால் மிகக்கொடுங்கோன்மையானதன்று. சிற்சில சமயங்களிலே மாத்திரம் சுல்தான்கள் தங்களதிகாரத்தைக் காட்ட முயல்வர்; இது பன்முறைகளில் பலசனக் கொலையாக முடிந்தது. சுல்தான்கள் சின்ன ஆசியா முழுவதையும் சீரியா, மெசபொட்டேமியா, அரேபியா என்பவற்றையும், கருங்கடலின் கீழ், வடகரைகளையொட்டியிருந்த பிரதேசங்களையும் (பத்தொன்பதாம் நூற்றாண்டு முடியு முன்னரே இதிற் பெரும் பகுதியை ருஷ்யாவுக்குக் கொடுக்க வேண்டியிருந்தது). ஆப்பிரிக்காவின் வட கடற்கரையையும் (இதனையவர்கள் சிறிது சிறிதாக இழந்தனர்) ஆட்சிபுரிந்தனர்.

பால்க்கன் மாந்தரின் விழிப்பு. துருக்கரின் வலிமை குறைந்து வருவதை ருஷ்யர் ஆஸ்திரியா ஆகிய இருசாதியினருமுணர்ந்தனர். நாளுக்குநாள் அதிகரித்த பலவீனத்தைத் துருக்கருக்குட்பட்ட மாந்தரும், மாகாணங்களிலாட்சி செய்த துருக்க உத்தியோகத்தர்களான "பாஷா" என்னும் பட்டப் பெயர் பெற்றவர்களும் உணர்ந்தனர். 1804-ம் ஆண்டில் சேர்பியர் கலகஞ் செய்தெழுந்து நெடும் போருக்குப்பின் தம்மரசரால் ஆளப்படும் சுதந்திரம் பெற்றனர்; ஆனால், அவ்வரசர்கள் சுல்தானின் ஆதிக்கத்தை அங்கீகரித்தனர். அதே தருணத்தில் ஜானினுவைச் சேர்ந்த **ஆலி** என்பான் கொள்ளைக் கூட்டத் தலைவனுகத் தன் வாழ்க்கையை ஆரம்பித்தவனுயினும், சுயேச்சாதிகாரியாவதில் அநேகமாய்ச் சித்தி பெற்றுன்.



கிரேக்கரும் கலகஞ்செய்து ஓரளவுக்கு வெற்றி பெற்றனர்; ஆனல் இவ்வெற்றி, செயலளவிற் சுயேச்சாதிகாரம் பெற்றிருந்த எகிப்தின் பாஷாவைத் தனக்குதவ வருமாறு சுல்தான் அழைக்குமட்டுந்தான் நீடித்தது. இப்பாஷா, கிரேக்கரின் கலகத்தை மிகக் குரூரத்துடன் அடக்கினனெயினும் பண்டைச் சிறப்புள்ள கிரீசின் மீது ஏனைய ஐரோப்பிய நாடுகளிலே பெரு மனுதாபம் உண்டாயது. தொண்டர்கள் பலர் கிரேக்கருக்குதவி செய்யக் குழுமினர். இவர்களுள் ஒருவர் அங்கிருந்த புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர், பைறன். இறுதியாக, 1827-ம் ஆண்டிலே, ருஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா என்பனவெல்லாந் தலையிட, அவற்றின் கப்பற்படைகள் நவாரினே விரிகுடாவில் துருக்கக் கப்பற்படையை அழித்துவிட்டன. அத்துடன் பிரித்தானியா விலகருஷ்யா துருக்கியின்மேற் படையெடுத்துச் சென்று அதின்



தெற்கிலுள்ள கிரேக்கருக்கு சுதந்திரமும், தம்மரசனைத் தெரிவு செய்யு முரிமையும் கொடுக்கும்படி அதனைக் கட்டாயப்படுத்தியது. 1881-ல் இரண்டாம் பேர்லின் உடன்படிக்கை தெசலி எனும் நிலப்பரப்பை இந்த இராச்சியத்திற்கு அளித்தது. 1897-ல் புரட்சி செய்த கிறீற் தீவுக்காக கிரேக்கர் போர் செய்து பெரும் தோல்வியடைந்தனர். 1912-ல் கிறீற் சுதந்திரம் பெற்று கிறிசுடன் இணைந்தது. கிரேக்க அரசியல் ஞானி வெனிசேலஸ் இத்தீவில்தான் தோன்றினர்.

1830—39-ம் ஆண்டுகளுக்கிடையே துருக்கியிலே ருஷ்யரின் செல்வாக்கு ஓங்கியது. பால்க்கனின் வன்மையுள்ள நாடுகளின் தாபனத்துக்குதவிபுரிவதினும் பார்க்க, தமது செல்வாக்கை அழியாது வைப்பதே மேலானவழியாகு மென ருஷ்யருக்குத் தோற்றியது. ஆனற் கொன்ஸ்தந்திநோப்பிலைத் தமக்குரியதாக்க எண்ணியப் பண்டைப் பேரவாவை அவர்களால்

மறக்க முடியவில்லை. 1840-49-ம் ஆண்டுகளுக்கிடையே சார், துருக்கியை "ஐரோப்பாவின் நோயாளி" எனக்கூறி, துருக் கப்பிரதேசங்களைப் பிரித்தானியாவும் ருஷ்யாவும் பிரித்துக் கொள்ளலாமென ஒரு யோசனை கூறினான். ஆனாலிதற்குப் பிரித்தானியர் இணங்க மறுத்தனர்; இவ்வேற்பாட்டை எதிர்த் தமையே இறுதியில் இவர்களைக் கிரீமியப் போரிற் புகுத்தியது. சென்ற அத்தியாயத்தில் கண்டபடி இப்போது துருக்கியில் ருஷ்ய செல்வாக்கை அற்றுப்போகச் செய்து, பால்க்கன் நாடுகளில் ருஷ்ய ஆதரவில் இருந்த சிலாவோனிய நாடுகளுக் குப் பதிலாக சுதந்திர நாடுகளை உருவாக்க ஏதுவாயிருந்தது.

1829-ம் ஆண்டின் ருஷ்யத்துருக்கப் போரை முடிவுக்குக் கொண்டுவந்த சமாதான உடன்படிக்கை, டானியூப் நதியின் கழிமுகத்துள்ள மோல்டேவியா, வாலேச்சியா என்னும் சிறு நாடுகளுக்குச் செயலளவில் சுயேச்சாதிகாரம் அளித்தது. கிரீமிய யுத்தத்திற்குப்பின், டானியூப் நதிக்கு வடபகுதியிலுள்ள பெசரேபியா என்னும் மாகாணத்தின் ஒரு பகுதி மோல்டே வியாவுடன் சேர்க்கப்பட்டு, 1878-ம் ஆண்டில் ருஷ்யாவுக்குக் கொடுக்கப்பட்டது. முதலாவது உலகப் பெரும் போர் (1914-1918) முடிந்ததும் திருப்பிப்பெறப்பட்டது. பின் 1940-ம் ஆண்டில் அதற்கே மறுபடியும் திருப்பிக் கொடுக்கப்பட்டது. 1860-69-ம் ஆண்டுகளில், மோல்டேவியா, வாலேச்சியா என் னுமிரண்டும் ருமேனியா என்னும் பெயருடன் ஒன்றுகி, ஜெர் மனியச் சிற்றரசனொறுவனைத் தம்மரசனாகக் கொண்டன. 1877-ம் ஆண்டிலே துருக்கியுடன் நேர்ந்த போரிலே, ருமே னியா ருஷ்யாவுடன் சேர்ந்து கொண்டது. ஆயினும், பெர்லின் மகாநாடு பெசரேபியாவை ருஷ்யாவுக்குக் கொடுத்தது; பதி லாகத் தெற்கில் நாட்டைப்பெற்ற போதிலும், ருமேனியாவுக்கு வெறுப்பாயிருந்தது. பெர்லின் மகாநாடு ருமேனியா எவ்வழி யிலும் துருக்கிக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை யெனக்கூறி, அதற்குப் பூரண சுயராச்சிய மளித்தது. ருஷ்யா பெசரேபியா வையும், ஆஸ்திரியா திரான்சில்வேனியாவையும், பெற்றது. ருமேனியாவுக்கு நித்தமும் மனக்கசப்பைக் கொடுத்தது. தெற் கில் பல்கேரியருடனும் சச்சரவு செய்து கொண்டது.

துருக்கியராற் தோற்கடிக்கப்படுமுன், மத்திய காலத்தில் பல்கேரியா வன்மை மிகுந்த வொரு நாடாக விளங்கியது. அதன் குடிகள் மங்கோலிய வமிசத்தினராயிருக்கலாமெனினும் பல நூற்றாண்டுகளாகத் தம்மைச் சிலாவியரெனவே கருதி வந்தனர். ஏனைய பால்க்கன் சாதியினரிடையினும் பார்க்கப் பிந்தியே தேசீயவுணர்ச்சி அவர்களிடை தோன்றியது : துருக்கரும் அவர்களைப் பிறரினும் பார்க்க மேலாக நடத்தி வந்தனர். எனினும், ருஷ்யரின் தூண்டுதலும் ஆதரவும் பெற்ற பல்கேரியர், துருக்கருக்கு எதிராக 1876-ம் ஆண்டிலெழ, துருக்கர் இவ் வெழுச்சியை மூர்க்கத்துடன் அடக்கினர். இது ஐரோப்பாவிலே பெரும் கோபத்தை, சிறப்பாக, பிரித்தானிய இராஜதந்திரி கிளாடஸ்டனித்தே, உண்டாக்கியது. சேர்பியரும், மோந்த நீகிரோவருங்கூட துருக்கரை யெதிர்த்தனர்: அடுத்த ஆண்டில் ருஷ்யர் பால்க்கன் பிரதேசத்தின்மேற் படையெடுத்தனர். ஆனால் பிளவினுவில் ஒஸ்மன் பாஷா வீரத்துடன் அவர்களுடைய சேனைகளைத் தடுத்து நின்றான்; காலக்கிரமத்திலே அவர்களித் தடையை மேற்கொண்டு கொன்ஸ்தாந்திநோப்பில் வரைக்குங்கூட வந்துவிட்டனர். பின்னர் அவர்கள் பல்கேரியாவை ஜெர்மானியச் சிற்றரசனுலும் பெரிய சுதந்திர நாடாகச் செய்வதை ஒரு நியாயமாகக் கொண்ட சமாதான உடன்படிக்கை யேற்பட வேண்டுமெனக் கட்டளையிட்டனர். இந்நிலைமையிலே ஏனைய ஐரோப்பிய நாடுகள் தலையிட்டு, 1878-ஆம் ஆண்டில் ஒரு மகாநாட்டைப் பெர்லினிற்கூட்டின; இதன் பயனுகப் புதிய பல்கேரிய ராச்சியம் அளவிற் பெரிதுங் குன்றந்து விட்டது. இதே மகாநாட்டில் போஸ்னியா-எர்சகொவினுவைப்பற்றி ஒரு விநோத ஏற்பாடு செய்யப்பட்டது. அதாவது—அந்நாடு துருக்கரினுதிக்கத்திலிருக்க வேண்டும்; ஆனால் அரசாட்சி ஆஸ்திரியா-ஹங்கரியினுல் நடத்தப்படவேண்டும். பிரித்தானிய பிரதிநிதி டிஸ்றேலி சுல்தானுக்கு உதவிபுரிய உடன்பட்டு, கைமாருக சைப்பிறசின் ஆட்சியைப் பெற்றான். சுவேஸ் பகுதியில் தாங்கள் அதிகாரத்தை வலுப்படுத்தும் என எண்ணினுன்.

பால்க்கன் சங்கம்; பால்க்கன் போர்கள். புதிதாக ஏற்

பட்ட நாடுகள் எவ்வகையிலும் அமைதியோடாவது திருப்தி யோடாவது இருக்கவில்லை. ஒவ்வொன்றும் தனக்கு அதிக மான பிரதேசம் அளிக்கப்பட்டிருக்கவேண்டுமெனக் கருதியது; அயலாரினுட்சிக்குட்பட்ட தஞ்சாதியினர், சுதந்திரம் பெற்ற புதிய நாட்டிலுங்கூட உண்டென்று ஒவ்வொரு நாடுங் கருதி யது. உதாரணமாக, ருமேனியரால் பல்கேரியர் சிலர் ஆளப் பட்டனர். மசிடோனியாவிலே, பல்கேரியரும் கிரேக்கரும் இன் னமுந் துருக்கராட்சிக்குட்பட்டிருந்தனர். அப்துல் அமீது என் னுஞ் சுல்தான், பெருந் தந்திரசாலி; அரசியல் நிபுணன்; பால்க்கன் நாடுகளொவ்வொன்றிடையேயும் அழுக்காறு தோன்ற அவன் தூண்டிவந்தான்; அவனுல் ஒரு சமயத்தில் பல்கேரியாவுக்கும் சேர்பியாவுக்கு மிடையே கூடப் போர் மூண் டது. பெர்லின் மகாநாட்டில் தான் வாக்களித்தபடி சீர்திருத் தங்களை அனுட்டானுத்துக்குக் கொண்டுவர அவன் யாதுஞ் செய்யவில்லை. மேலும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை அளித்தான். துருக்கராண்டு வந்த மசிடோனியாவிலும் பால்க் கன் தீபகற்பத்தின் ஏனைய பகுதிகளிலும் அரசாட்சி மிகவுஞ் சேர்கேடாயிருந்தது. 1908-ம் ஆண்டிலே, ஒரு பகுதி துருக்க ராணுவ உத்தியோகத்தர் கலகஞ்செய்து, சுல்தான் பதவியி னின்றும் அப்துல் அமீதை நீக்கினர். ஆனலவர்களுடைய அர சாட்சி சுல்தானுடையதினும் பார்க்கத் திறமை வாய்ந்ததா யினும், அவனுடையதைப் போன்றே குடிகளை நெருக்குவதாக இருந்தது. 1878 தொடக்கம் தாம் ஆட்சி செய்து வந்த போஸ் னியா-எர்சகொவினவைத் தம் நாட்டுடன் சேர்த்துக்கொள்ளு தற்கு ஆஸ்திரியர் இப்புரட்சியைத் சாதகமாகக்கொண்டனர். இதனற் சேர்பியர் வெகுசினங்கொண்டனர். பல்கேரியச் சிற் றரசனை பெர்டினந்து இதே தருணமெனக் கொண்டு தான் "பல்கேரிய சார்" என்றும், தன்னுடு துருக்கிக்கு இனி உட் படாது என்றும் அது முற்றுக சுயேச்சாதிகாரம் பெற்ற தென் றும் பிரசித்தஞ் செய்தான்.

வெனிசேலஸ் என்னும் திறமை வாய்ந்த கிரேக்க அர சியல் நிபுணனின் தலைமையிலே கிரீசு, பல்கேரியா, சேர்பியா ஆகிய மூன்று நாடுகளும் இப்போது தமது பரஸ்பர அழுக்

காற்றை மறக்கவும், போர்தொடர்பான உடன்படிக்கை செய்து கொள்ளவும் ஒத்துக்கொண்டன; இவற்றோடு மிகச் சிறு இராச்சியமான மோந்தநீகிரோவும் சேர்ந்துகொண்டது; ஐரோப்பிய வல்லரசுகள் எச்சரிக்கை செய்தபோதிலும், மோந்தநீகிரோ செவிசாய்க்காது 1912-ம் ஆண்டில் துருக்கியின்மீது போர் தொடுத்தது. ஏனைய மூன்று நாடுகளும் அதனுடன் சேர்ந்தன; இம்மூன்று நாடுகளும் துருக்கியை நன்கு முறியடித்து, கொன்ஸ்தாந்திநோப்பில் நீங்கலாகப் பால்க்கன் தீபகற்பத்தின் ஏனைய பிரதேசங்களினின்றும், துருக்கப்படையை முற்றுக ஓட்டிவிட்டன. ஆனால் வெற்றிபெற்ற கூட்டாளிகளுக்குள் ஒற்றுமையில்லை. கிரீசும் சேர்பியாவும் பல்கேரியாவுடன் சச்சரவிட, போர்மூண்டது. ருமேனியா முதலிரண்டு நாடுகளுடன் சேர்ந்து கொண்டது; தமக்குரிய பிரதேசத்தைப் பெருதற்கு வாய்ப்பானசமயம் இதுவேயெனத் துருக்கர் கொண்டனர். பல்கேரியர் தோல்வியடையவே, இறுதியான ஏற்பாடு அவர்களுக்கு பெரிதும் நட்டம் விளைப்பதாயிருந்தது. எனவே அவர்கள் தம் பழைய நண்பர்களிடம் ஆழ்ந்த உட்பகை கொண்டிருக்கலாயினர்.

பால்க்கன் போர்களிலே, பால்க்கன் பிரதேசத்துக்குப் புறம்பாயிருந்தும் அந்தப்பிரதேசத்தின் கருமங்களில் பெரும் ஊக்கம் கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகளைப்பற்றி இதுவரையினும் யாம் ஒன்றுங் கூறவில்லை. ஆனால் இந்நாடுகளின் பொருட்டு ஐரோப்பியர் அநேகமாய் தம்முள் போரிடுவதாயிருந்தனர்; ருஷ்யா, சேர்பியாவுக்கு ஆதரவாய் நின்றது; ஆஸ்திரியா, ஜெர்மனியின் ஆதரவுடன் துருக்கியுடன் சேர்ந்து கொண்டது. ஆஸ்திரியாவுக்கும் சேர்பியாவுக்கு மிடையேயிருந்த எரிச்சல், அடுத்தாண்டிலேயே பெருந்துக்கரமான முதலாமுலகப் போர் நிகழ்ச்சிகளை உண்டுபண்ணக் காலாக இருந்தது.

உதவிக் குறிப்புக்கள்.

ஐரோப்பாவின் தென்கீழ் மூலையிலிருந்த நாடுகளை, அந்நாட்டுக் குடிகளுடன் யாதொரு தொடர்பும் பெருத ஆனால் எதேச்சாதிகாரம் செலுத்திய ஆஸ்திரியா, ருஷ்யா என்னு

மிரண்டும் ஆண்டு வந்தன; ஆனால் அங்கெல்லாம் பல சாதியினரும் கலவர நிலையுண்டாக்கின மையினாலே, தேசீய வுணர்ச்சி நன்கு பரவினவுடனே இடர்க்கண் விளையுமென்பது திண்ணமே. இவற்றைப்பற்றியே இவ்வத்தியாயத்திற் பெரிதுங் கூறப்பட்டுள்ளது; உக்கிரமான தேசீய உணர்ச்சி கொண்ட சிறுநாடுகள் தோன்றினமையும் இங்கு கூறப்பட்டுள்ளது. 19-ம் நூற்றாண்டிலே அவதானித்தற்கானதும் மனங் கவருவதுமான ஒரு விஷயம் இப்பிரதேசங்களில் ருஷ்யா செல்வாக்கு பெற்று அவற்றின் கருமங்களிற் றலையிட்டமையாம். இவையெல்லாம், துருக்கிக்கு விரோதமாகப் பால்க்கன் நாடுகள் நட்புபூண்டு அதனுடன் போர்புரிந்து வெற்றிபெறுவதும், வெற்றி பெற்றோர் சச்சரவிட இரண்டாம் போர் மூள்வதுமாக முடிந்தன. ஐரோப்பாவில் இப்பகுதியிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் முக்கியமானவை; ஏனெனில் 1914-ம் ஆண்டில் அக்கண்டத்தில் எங்கும் போர் மூண்டதற்கு இவையே நேர்முகமான காரணங்களாம்.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1804. சேர்பியர் துருக்கரை யெதிர்த்தெழுந்தனர்; ஓரளவுக்குச் சுதந்திரம் பெற்ற சிற்றரசனே சேர்பியா அடைந்தது.

1821–9. கிரேக்கரின் சுதந்திரப் போர்.

1827. நவாரினைச் சண்டை.

1829. துருக்கியும் ருஷ்யாவும் செய்துகொண்ட அட்ரிய நோப்பில் உடன்படிக்கையினால் மோல்டேவியாவும் வாலேச்சியாவும் ஓரளவுக்குச் சுதந்திரம் பெற்றன.

1861. ருமேனியா என்னும் பெயருடன் மோல்டேவியாவும் வாலேச்சியாவும் ஒன்றுதல்.

1876. துருக்கியை எதிர்த்துப் பல்கேரியர் குழப்பஞ் செய்தனர்.

1877-8. ருஷ்ய-துருக்கிப்போர்.

1878. பெர்லின் மகாநாடு, பல்கேரியா, சேர்பியா, ருமேனியா என்பவை சுதந்திரம் பெற்றன.

1908. "யௌவனத் துருக்கி"யின் புரட்சி. போஸ்னியா-எர்சகொவினு, ஆஸ்திரியா, ஹங்கரியினுற் கைப்பற்றப்பட்டன.

1912. முதலாம் பால்க்கன் போர்.

1913. இரண்டாம் பால்க்கன் போர்.

13. பொதுநல நாடுகள், பொதுநல நாடுகளின் சுய ஆட்சி செய்யும் டொமினியன்கள்

(1) கனடா

பிரித்தானியப் பொதுநல நாடுகள். இவ்வுலகத்தின் நிலப்பரப்பில் ஐந்திலொரு பாகமும், சனத்தொகையில் நான்கிலொரு பாகமும் "பிரித்தானியப் பொதுநல நாடுகளுக்"குரியன. அவை இன்று "பொதுநல் நாடுகள்" என்று மட்டுமே வழங்கப்படும். அண்மை வரையில், உத்தியோக ரீதியில் "பிரித்தானிய சாம்ராச்சியம்" எனப் பெயர் பெற்றிருந்தன. இவற்றிற் பெரும்பாகம் பிரித்தானிய ஆளுகையின்கீழ் வந்தது 19-ம் நூற்றுண்டில் என்பதை எல்லாரும் அறியார். அதிலடங்கியவை மேல்வருமாறு :—(1) பொதுநல நாடுகளிலே சமபங்காளிகளாகச் சுயராச்சியம் பெற்றவை; பெரிய பிரித்தானியாவும் வட அயர்லாந்தும் கூடிய ஐக்கியராச்சியம், கனடா, ஆஸ்திரேலியா, நியூசீலாந்து, தென்னப்பிரிக்க ஐக்கியநாடு, இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை ஆகியனவும், 1957-ல் காணவும் (முன்பு, பொற்கரை), (2) உலகத்தின் எல்லா இடங்களிலும் பெரியனவும் சிறியனவுமான பல நாடுகள். இவற்றுட் சில நைஜீறியா, மலேயா, கெனியா போன்று அதிக தன்னுட்சி உரிமை பெற்றிருக்கின்றன. இவற்றுடன் "பாதுகாப்பு நாடுகள்", "பொறுப்பாட்சிப் பிரதேசங்கள்" என்பனவுஞ் சில வுள ; இவற்றுட் பெரும்பாலானவை சுயராச்சியத்தகைமை பெறவில்லை. "பொதுநல நாடுகள்" என்னும் பெயரே, இப் பெரும் கூட்டுறவு நாடுகளை ஆள்பவரின் நோக்கங்கள் எவையெனக் காட்டும் ; பொது நல நாடுகளினங்கத்தவர் ஒவ்

வொருவருக்கும், தகைமை உண்டானவுடனே சுயராச்சிய மளிக்க வேணடுமென அவர்கள் (ஆள்பவர்கள்) கருதுகின் றனர். சில நாடுகள் சுயராச்சியம் பெற்றுவிட்டன. சில விரை வில் பெற இருக்கின்றன. இன்னும் சில பெறுவதற்கு நெடு நாளாகலாம். பிரித்தானியாவின் ஆதிக்கத்தின்கீழ் இருந்து, 1956-ம் ஆண்டின் முடிவு வரையும் பூரண சுய ஆட்சி உரிமை பெற்ற பொதுநல நாடுகள் ஏழில் நான்கின் சரித்திரத்தைப் பற்றிக் கூறுவதே இதனதும் இதற்கு அடுத்த அத்தியாயத்தின தும் நோக்கமாகும். இந்த நான்கு நாடுகளும், தங்கள் சொந்த நாட்டு விவகாரங்களில் பூரண அதிகாரம் இருந்தும், தங்கள் நாடுகளின் அரசியாக ஐக்கியராச்சியத்தின் மகாராணியை ஏற்று, தங்கள் ஒற்றுமையின் சின்னமாக அவரை மதிப்பது பொருத்தமானது எனக் கருதுகின்றன. இந்தியா, பாக்கிஸ் தான், இலங்கை, காளை ஆகியவற்றின் சரித்திரம் பின்வரும் அத்தியாயங்களிற் கூறப்படும். ஆனல் இவைகள் சம உரிமை யுடைய பங்காளிகளாகவும், பாராளுமன்றக் குடியாட்சி அரசை ஏற்றுக்கொண்டவைகளாகவும், சமாதானமே பொதுவான நோக்கமாகக் கொண்டவைகளாகவும் இருக்கின்றன. இவற் றின் முதலாமுலகப்போரின் பிந்திய சரித்திரம் இப்புத்தகத்தின் இறுதி அத்தியாயத்திற் காணலாம். இச் சமஸ்லே சமீப காலத் தில் உண்டாயது; இதெவ்வாறு மெள்ளமெள்ள ஏற்பட்ட தென்பதை நாம் இனி ஆராய்ந்தறிதல் வேண்டும்.

பிரித்தானியச் சாம்ராச்சியம். முதலாம் எலிசபேத் ராணி யின் காலத்தில் இங்கிலாந்து 40 இலட்சம் குடி சனங்களைக் கொண்ட ஒரு சிறு நாடாக இருந்தது. அயர்லாந்து நீங்கலாக, அதற்குரிய நாடுகளொன்றும் வெளியிடங்களிலில்லை. இங் கிலாந்தும் ஸ்கொத்லாந்தும் சம உரிமையுள்ள நாடுகளாக 1603-ல் ஒரு குடையின்கீழும், ஒரு நூற்றாண்டின்பின் ஒரே பாராளுமன்றத்தின்கீழும் ஒன்று சேர்க்கப்பட்டதே பொதுநல நாடுகளின் உண்மையான ஆரம்பமாகும். ஆங்கிலேயரின் கப்பலோட்டுந் திறமையும் கடற்போர்த் திறமையும் வட அமெரிக்காவின் கீழ்த்திசைக் கடற்கரையிலே குடியேற்ற நாடு களைத் தாபிக்கவும், கிழக்கிந்திய மேற்கிந்தியத் தீவுகளிலும்

ஏனைய இடங்களிலும் வியாபாரத் தாபனங்களை யேற்படுத்தவும் செய்தன ; ஆரம்பத்திலிருந்தே இக்குடியேற்ற நாடுகள் அதிக சுயராச்சியம் உடையனவாயிருந்தன. ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டினிறுதியிலே, வட அமெரிக்காவிலிருந்த குடியேற்ற நாடுகளிற் பதின்மூன்று, தந் தாய்நாட்டினின்றும் பிரிந்து "**அமெரிக்க ஐக்கிய நாடு**" என்னும் பெயருடன் முழுச்சுதந்திரம் பெற்ற சமஷ்டி நாடாக அமைந்தன ; இவை தாய் நாட்டினின்றும் பிரிந்ததற்குக் காரணம் ஓரளவுக்கு மதியற்ற மூன்றாம் ஜோஜ் மன்னனுடனும் அவன் மந்திரிகளுடனும் ஏற்பட்ட ஒரு மூட சச்சரவேயாம். இந் நிகழ்ச்சியை "**முதலாம் பிரித்தானியச் சாம்ராச்சியத்தினழிவு**" எனச் சிலர் கூறுவர். ஆனால் பிரித்தானியரின் துணிவான கருமங்களும், அவர்களின் பெருமெதிரிகளான பிராஞ்சியரை வட அமெரிக்காவினின்றும் இந்தியாவினின்றும் துரத்துதற்குக் காரணமான அவர்களின் சிறந்த கடற்போர்த் திறமையும் இந்நட்டத்தை ஓரளவுக்கு ஈடுசெய்தனவென லாம். இதன் பின்னர் தாய்நாடும், சுய ஆட்சி டொமினியன்களும் கொண்ட "இரண்டாம் பிரித்தானியச் சாம்ராச்சியம்" வளர்ந்து வந்தது ; இது முதலாவதைப் போன்று பூரணமாகப் பிரித்தானியரையே குடிகளாகக் கொள்ளவில்லை ; மற்று, ஆரம்பத்திற் கனடா பெரும்பாலும் பிராஞ்சியக் குடிகளைக் கொண்டிருந்தது ; தென்னப்பிரிக்காவில் டச்சரே அதிகமாக இருந்தனர். ஆஸ்திரேலியாவும் நியூசீலாந்தும் மாத்திரமே தொடக்கத்திலிருந்து பிரித்தானியரைப் பூரணமாகக் குடியேற்ற நாட்டுக்காரராகக் கொண்டிருந்தன.

கனடா சுயராச்சியம் பெற்ற வரலாறு. பிரித்தானியர் தமது வலிமை மிகுந்த கப்பற்படையினாலும், வட அமெரிக்காவிலிருந்த எண்ணிறந்த குடியேற்றக்காரரி னுதவியினாலும் பிரான்சிய ரதிகாரத்தைக் கனடாவிலிருந்து நீக்கினர். ஏறக் குறைய 60,000 பிரான்சியர் பெரும்பாலும் மோண்றீலையும் குவிபெக்கையுஞ் சார்ந்த பிரதேசத்திற் றங்கினர். பதின் மூன்று குடியேற்ற நாட்டினர் இங்கிலாந்திலுட்சியினின்றும் விலகியபோது, அவர்களுடன் சேர்ந்துகொள்ள மேலே குறித்த

பிரான்சியக்கனேடியருக்கு விருப்பமில்லை; பிரித்தானியக் குடியேற்ற நாடுகளான நியூபௌண்லாந்து, நோவாஸ்கோஷியா, பிரின்ஸ் எட்வேட் தீவு என்பன பிரித்தானியச் சாம்ராச்சியத்துக் குட்பட்டேயிருந்தன. அமெரிக்கச் சுதந்திரப்போரின் காலத்திலே பிரித்தானியச் சாம்ராச்சியத்துக்கு விசுவாசத்துடனிருந்து, அக்காரணத்தினுலே கேவலமாய் நடத்தப்பட்ட 60,000 குடியேற்றக்காரர் தெற்கேயிருந்த தம் மில்லங்களினின்றும் நீங்கி, "ஐக்கிய சாம்ராச்சிய விசுவாசிகள்" என்னும் பெயருடன் இப்போது ஒந்தேரியோ என வழங்கும் மாகாணத்தில் அதிகமாய்த் தங்கலாயினர். 1812-ல் பிரித்தானியாவுக்கும் அ. ஐ. நாட்டுக்கும் துர்அதிஷ்டவசமாகப் போர்மூண்ட பொழுது இவர்கள் பிரித்தானியத் துருப்புகளின் உதவியோடு ஐக்கிய அமெரிக்காவின் படைகளைப் பின்னிடச் செய்தனர்.

1791-ம் ஆண்டிலே, கனடாச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, கனடா, ஆங்கிலம் பேசப்படும் மாகாணமான "மேல்" கனடா ஆகவும் (இது இப்போது ஒந்தேரியோ எனப்படுகின்றது), பிரஞ்சுமொழி வழங்கும் மாகாணமான "கீழ்" கனடா ஆகவும் பிரிக்கப்பட்டது. இரு மாகாணங்களுக்கும் பிரதிநிதி சபை யளிக்கப்பட்டது; அதாவது, அவை பிரதிநிதித்துவ அரசாட்சியைப் பெற்றன. ஆனல் அரசாட்சி செய்யும் உத்தியோகத்தரை யடக்கியாளும் அதிகாரம் அச்சபைக்குக் கொடுக்கப்படவில்லை—அதாவது "பொறுப்புள்ள அரசாட்சி" அளிக்கப்படவில்லை. இவ்வாட்சிமுறை எல்லா மாகாணங்களிலும் நாற்பது வருடங்களாக நிலவியும் நன்கு நடைபெறவில்லை. தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி சபைகளுக்கும் நிருவாக சபைக்கும் இடைவிடாது சச்சரவுகளேற்பட்டுக் கொண்டிருந்தன. 1837-ம் ஆண்டிலே மேல், கீழ், கனடா ஆகிய இரண்டிலும் சனங்கள் ஆயுதபாணிகளாய்க் குழப்பஞ்செய்தனர். அப்போது டரும் பிரபுவைப் பிரித்தானிய அரசாட்சியார் அனுப்ப, அவர் பிரித்தானியச் சாம்ராச்சிய சரித்திரத்தில் மகப் பிரதானமானவொரு அறிக்கையை வரைந்தனர். அதிற் கூறியபடி, "எவரிடம் பிரதிநிதித்துவ அங்கத்தினருக்கு நம்பிக்கையுண்டோ அவர்களைக் கொண்டே அரசாட்சியை நடாத்த அர


கனடா
மைல்கள்
0 100 200 400 600 800
1 = நியூ பிருன்சுவிக்
2 = பிரின்ஸ் எட். தீவு
3 = நோவ ஸ்கொட்டியா
அலாஸ்கா
ஆர்க்டிக் சமுத்திரம்
யுக்கோன்
வ. மே. மாகாணங்கள்
ஹட்சன் விரிகுடா
லாபிரடோர்
நியுபௌண்-லாந்து
பசிபிக் சமுத்திரம்
பிரிட். கொலம்பியா
வன்கூவர் தீவு
வன்கூவர்
கல்கரி
எட்மன்டன்
சஸ்கச்வான்
மனிட்டோபா
குவிபெக்
வின்னிபெக் ஏரி
வின்னிபெக்
சுபீரியர் ஏரி
மோன்ட்ரீல்
குவிபெக்
சென்ற் லோரன்ஸ்
ஒட்டாவா
சென்ற் லோரன்ஸ்
ஒன்ரேரியோ ஏரி
மிச்சிகன் ஏரி
ஈரி ஏரி
அலிவக்ஸ்
அத்லாந்திக் சமுத்திரம்
ஐக்கிய நாடுகள்
கோதுமை விளையும் பிரதேசம்

சர் இணங்கவேண்டும்''. அதாவது, பிரித்தானியச் சாம்ராச்சியத்தினுள்ளே பிரித்தானியர் பின்பற்றிய பொறுப்பாட்சி முறையைக் கனடாவுக்கு அளிக்க வேண்டும். பிரான்சியக் குடிகள் பிரித்தானியருடன் கலந்து ஒன்றுதற்பொருட்டு மேல், கீழ், கனேடிய மாகாணங்கள் சேர்க்கப்படவேண்டுமெனவும் அவ்வறிக்கை விசேடமாய் எடுத்துக் கூறியது. ஆனால் இவ்வாறு இரு மாகாணத்தவரும் கலத்தற்கான முயற்சி சித்திபெறவில்லை; அதற்கு அடிப்படையான கொள்கையுங் கைவிடப்பட்டது. இது நல்லதிர்ஷ்டமே; ஏனெனில், பொதுநல நாடுகளில் இப்போது எல்லாச் சாதியினரும் பங்குபெற இடமுண்டு. 1840-ம் ஆண்டில் பாராளுமன்றத்தின் சட்டத்தின்படி இரு மாகாணங்களும் ஒன்றுசேர்க்கப்பட்டன; அதன்பின் ஏறக்குறைய ஏழாண்டு காலத்தில் வட அமெரிக்க மாகாணங்களுக்கெல்லாம் பொறுப்பான ஆட்சி அளிக்கப்பட்டது.

கனடா டொமினியன். இதற்கடுத்த இருபதாண்டுகளிலே எல்லா மாகாணங்களும் ஒருவகையான ஐக்கிய அரசியல் முறையிற் சேர வேண்டுமென்னு மெண்ணம் கனடாவிலே விருத்தியடைந்து வந்தது. ஆனால் ஒந்தேரியோவுங் குவிபெக்கும் இருமாகாணங்களாகவே இருக்கவேண்டும் என்று கருதப்பட்டது. இதற்காகத் திறமை வாய்ந்த பலர் உழைத்து வந்தனர். ஒந்தேரியோவுக்கு மேற்கே குடிசனமற்றிருந்த பரந்த பிரதேசத்தை ஐக்கியநாடு தனதாக்கிக் கொள்ளலாமென அவர்கள் பயந்தனர். மொண்றீல், குவிபெக் என்பவற்றைப் போன்று மாரிகாலத்திலே பனிக்கட்டியினால் மூடப்படாதவையும், நோவாஸ்கோஷியாவையும் நியூபிருன்சுவிக்கையும் சார்ந்தவையும் ஆன ஹலிவக்ஸ், சேன்ற்யோன் என்னுந் துறைமுகங்களை யுபயோகிக்கவும் அவர்கள் விரும்பினர். இந்த ஐக்கிய அரசியல்முறை ஓரளவுக்கு அமெரிக்க ஐக்கிய நாட்டைப்போன்று ஒருவகை சமஷ்டி முறையைத் தழுவியதாயும், ஆனால் மத்திய அரசாட்சியாருக்குக் கூடின அதிகாரம் அளிப்பதாயும் இருத்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. விரிவான அரசியல்முறையொன்று தயாரிக்கப்பட, அது 1867-ம் ஆண்டிலே **பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம்** என்னும்

பெயருடன் பிரித்தானியப் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப் பட்டது. முதலில் ஒன்தேரியோ, குவிபெக்கு, நோவாஸ் கோஷியா, நியூபிருன்சுவிக்கு என்னும் நான்கு மாகாணங் களே கனடா ராச்சியமாக அமைந்தன. பசிபிக்குக் கடற்கரை யிலிருந்த பிரித்தானியக் கொலம்பியா 1871-ம் ஆண்டிலும், பிரின்ஸ் எட்வேட்டுத் தீவு 1873-ம் ஆண்டிலும் கனடா ராச் சியத்திற் சேர்க்கப்பட்டன. இதன் பின், ஒன்தேரியோவுக்கு மேற்றிசையிலிருந்த பிறேரிச் சமவெளிகள், மானிட்டோபா, சஸ்கெச்சுவான், அல்பெட்டா என்னும் மூன்று மாகாணங் களாக அமைக்கப்பட்டன; இவையும் கனடா சமஷ்டியிற் சேர்ந்துகொண்டன. நியூபௌண்லாந்து பல வருடங்களாகச் சேராதிருந்து 1949-இல் சேர்ந்துகொண்டது. ஒவ்வொரு மாகாணமும் தனிப்பட்ட பிரதிநிதிச் சபையும் நிருவாகப் பகுதி யுங் கொண்டுள்ளது; சில அரசாங்க அதிகாரங்களையும் பெற் றுள்ளது. ஒவ்வொரு மாகாணமும், குறிக்கப்பட்ட அங்கத் தவர்களை டொமினியன் பாராளுமன்ற மேற் சபைக்கு அனுப் பியது. ஏனைய விஷயங்களெல்லாம் மத்திய அரசாங்கத்தின்



வோட் உவில்லியம் என்னுமிடத்திலுள்ள தானியச் சேமிப்பிடங்கள்

அதிகாரத்துக்குட்பட்டவை. பாராளுமன்றக் கீழ்ச்சபை அங்கத்தவர்கள் சனத்தொகை வாரியாகவே தெரியப்பட்டனர். மந்திரிகள், மக்கள் சபையில் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து தெரியப்பட்டார்கள். இவர்கள், இங்கிலாந்திற் போல பாராளுமன்றத்துக்குப் பொறுப்புள்ளவர்களாக இருந்தார்கள். மகாதேசாதிபதியை நியமித்தல், டொமினியன் நீதிமன்றங்களில் இருந்துவரும் அப்பீல்களை பிறிவிக் கவுன்சில் விசாரித்தல், அரசியல் திட்டத்தைத் திருத்தல்—இது கனடாவின் வேண்டுகோள் இன்றி நடப்பதில்லை—,வெளிநாட்டுக் கொள்கை, யுத்தம், சமாதானம் என்னும் இவற்றை பிரித்தானிய அரசாங்கம் தனது உரிமையாகவே வைத்திருந்தது. கடைசியாகக் கூறப்பட்ட மூன்றும் நடைமுறையிலிருந்து மறைந்துவிட்டன.

கனடாவின் அரசியல் அமைப்பு பொதுநல நாடுகளின் சுய ஆட்சி நாடுகளுக்கு ஒரு 'மாதிரியாக' இருக்கின்றது. ஆனல் நியூசீலாந்து, சமஷ்டி அரசாகத் தொடங்கினலும் பெரிய பிரித்தானியாவைப் போல், ஒற்றை ஆட்சி நாடாகியது.

கனடா விசாலமடைந்த வரலாறு. 1670-ம் ஆண்டள விலேயே ஹட்சன் விரிகுடாவின் கரையிலே மிருகங்களின் மயிர்த்தோற்போர்வை வியாபாரம் நடத்துதற்காக ஒரு வியாபாரச் சங்கம் தாபிக்கப்பட்டது ; கனடாவுக்கு வடக்கேயுள்ள பிரதேசங்களை ஆராய்ச்சி செய்த பெருமை அவர்களுடையதே. 1867-ம் ஆண்டளவிலே, கனடாவின் சனத்தொகை 15 இலட்சத்துக்குமேற்பட்டது ; அதன்பின், இயற்கையா யேற்பட்ட அபிவிருத்தியினலும் வெளிநாட்டவர் குடியேறினமையினலும் சனத்தொகை அதிகரிக்க, இப்போது அது ஒரு கோடிக்குக் கிட்டியதென்க. ஆனல், அபிவிருத்திக்குப் போதுமான இடமுண்டு ; செல்வத்திலும் பெருமையிலும் கனடா ஓங்குமென்பது திண்ணம். இவ்வபிவிருத்தியிற் பெரும் பகுதி இக்கண்டத்தைக் கிழக்கு மேற்காகக் கடக்க உதவும் பெரிய புகைரத வீதிகளை—பிரதானமாகக் கனேடிய பசிபிக் புகை ரத வீதியை—அமைத்ததினல் உண்டாயிற்றெனலாம். கனேடிய பசிபிக் புகையிரத வீதி முடிவடைதற்குப் பெரிதுங் காலாக இருந்தது, கனேடிய சரித்திரத்திற் புகழ்பெற்ற பிரபு

ஸ்ராத் கோனுவின் பிரையாசையே. பிரித்தானிய கொலம்பியா இதன் மேற்கு முனையில் இருக்கிறது. இம்மாகாணம் சிறந்த சீதோஷ்ணமுடையது. பழங்கள் உற்பத்தியிலும் பிரதான இடமாகும். ரொக்கி மலைகளின் கிழக்குப் பகுதியில் மாபெரும் கோதுமை வயல்கள் உண்டு. இங்கிருந்துதான் பெரிய பிரித்தானியாவுக்கு தானியங்கள் அனுப்பப்படுகின்றன. அலாஸ்கா எல்லையில் காணப்படும் பொற்சுரங்கத்துடன், இங்கே தாதுப் பொருள்கள் மிகவும் உண்டு. அல்பட்டாவில் எண்ணெய் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டதுமன்றி அங்கே, வேறெங்கேயுங் காணப்படாத அளவில், யூறேனியம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. யூறேனியத்திலிருந்து அணுசக்தி பெறப்படுகிறது. அங்குள்ள அளவற்ற சலசக்தியினுல் பிரதானமான கைத்தொழில், உணவு உற்பத்தி நாடாகக் கனடா மாறியது. ஏற்றுமதியாகும் மரம், கடுதாசி செய்யும் மரப்பித்து, செயற்கைப்பட்டு முதலியன இங்குள்ள வேறு தொழில்களாகும்.

பல வழிகளில் கனேடியர்கள் அமெரிக்கரை ஒத்திருக்கின்றனர். இவர்கள் முன்னேற்றமும் அப்படியே. கனடாவின் மேற்குப் பக்க வளர்ச்சி ஐக்கிய அமெரிக்காவின் வளர்ச்சியைப் போன்றது. வடமேற்குக் குதிரைப் போலீஸ் படையின் செயலால் இவ்வளர்ச்சி மிக ஒழுங்காக நடந்தது. இப்படையின் சரித்திரம் விசித்திரமான கற்பனைக்கதை போன்றது. கனடா ஐக்கிய அமெரிக்காவுடன் சேரலாம் என்றும் கருதப்பட்டது. ஆனுல் சுயேச்சையாக இருக்கவேண்டும் என்ற உணர்ச்சியும், பிரித்தானிய அரசில் விசுவாசமும் கனடாவில் என்றும் நிலவியது. கனடாவை தென்பக்கத்து அயல்நாட்டுடன் இணைக்க எடுத்துக்கொண்ட முயற்சி, 1911-ல் லிபறல் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகியது. இதன்பின் கொன்சவேட்டுகள் ஆட்சி செய்தனர். ஆனுல் லிபறல் கட்சி 1935 தொடக்கம் ஆட்சி செய்தது.

முதலாமுலகப்போர் மூண்டபோது அதைக் கனேடியர் எவ்வாறு ஏற்றுக்கொண்டனர் என்பது மேல்வருவன வற்றுல் தெரிகிறது. ஆயிரக்கணக்கில் கனேடியர் படையில் சேர்ந்து கொண்டே வந்தனர். 1915-ல், 10,000-க்குமேற்பட்ட கனேடியர்

பிரான்சில் போர் செய்தார்கள். போர் முடிவில் 62,000 பேர் உயிர் துறந்தனர். துருப்புகளைக் கூட்டுவதற்காக 1917-ல் கனடா அரசாங்கம் கட்டாய ராணுவ சேவையை அமுலாக்கியது.

வேர்சேல்சில் நடந்த சமாதான மகாநாட்டுக்கு கனேடிய பிரதிநிதிகளும் அனுப்பப்பட்டனர். பிரித்தானிய பொதுநல நாடுகளுடன் கனடாவும் சர்வதேச சங்கத்திற் சேர்ந்தது.

உதவிக் குறிப்புக்கள்.

"பிரித்தானியச் சாம்ராச்சியம்" என்று பிரசித்தம் பெற்றிருந்த சக்கராதிபத்தியமானது தற்போது, "பொதுநல நாடுகள்" எனப்படும். இப்பெயர் இதனை ஆள்பவரின் இலட்சியங்களை, அதாவது சுயராச்சியம் பெற்ற நாடுகளின் சம உரிமைகளைக் குறிக்கின்றது. முதலாமுலகப் போரின் முடிவு வரையில் பூரண சுயராச்சியம் பெற்ற நாடுகளில் அத்தகைய ஆட்சி முறை யபிவிருத்தியடைந்ததை விளக்குவதே இவ்வத்தியாயத்தினதும் இதற்கடுத்த அத்தியாயத்தினதும் நோக்கமாம். இவ்வத்தியாயம் "பொதுநல நாடுகளில்" அடங்கியுள்ள பல்வகை அரசியல் முறைகளைப்பற்றிப் பொதுவாகவும், பொதுநல நாடுகள் உண்டான வரலாற்றை விசேடமாகவுங் கூறுகின்றது. பின்பு, சுயராச்சியம் பெற்றவற்றுள் முதலாமிராச்சியமான கனடாவின் சரித்திரம் விவரிக்கப்படுகின்றது. "டரும் அறிக்கையி"னுற் சுயராச்சிய மளித்த லென்னுமெண்ணம் திட்டமாயிற்ற தென்பதும் முதன் முதலாகக் கனடாவே "டொமினியன் பதவி" யடைந்ததென்பதும் விளக்கப்பட்டுள்ளது. கனடா ராச்சியத்தின் ஆட்சிமுறைக்கு ஆதாரமான சமஷ்டி அரசியல் முறை நாம் கவனித்தற்கேற்றது. கனடா, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய இரண்டின் அபிவிருத்தியிலுங் காணப்படும் ஒத்த தன்மைகள் நாம் ஆராயத்தக்கவை.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1763. கனடா பிரான்சியரால் பிரித்தானியருக்களிக்கப் பட்டது.

1783. முதலாம் பிரித்தானியச் சாம்ராச்சியத்தை ஆங்கிலேயர் இழந்தனர்.

1791. "பிட்" இயற்றிய "கனடாச் சட்டம்."

1839. "டரும் அறிக்கை"
1840. கனடாவின் இரு பிரிவுகளையும் ஒன்ருக்குஞ் சட்டம்.
1867. பிரித்தானிய வட அமெரிக்கச்சட்டம்.
1885. கனேடிய பசிபிக்குப் புகைரதவீதி பூரணமாக அமைக்கப்பட்டது.

14. சுய ஆட்சி உரிமை பெற்ற டொமினியன் நாடுகள். ஆஸ்திரேலியா, நியூசீலாந்து, தென் ஆப்பிரிக்கா

ஆஸ்திரேலியா. தீவு வடிவங்கொண்டதும் பரப்பினுற் கண்டமெனக் கூடியதுமான **ஆஸ்திரேலியா** என்னும் ஒரு நிலப்பரப்பு உண்டென்பது 17-ம் நூற்ருண்டில் டச்சருக்குத் தெரிந்திருந்த போதிலும், 1770-1779-ம் ஆண்டுகளுக்கிடையே பிரித்தானியக் கப்பற்படை யுத்தியோகத்தனை கப்டன் குக் என்பானின் யாத்திரைகளுக்கு முன், அக்கண்டத்தின் கரையோரம் நன்கு ஆராயப்படவில்லை. அக்காலத்தில் ஆஸ்திரேலியா வாசிகள் 'பூர்வீகக் குடிகள்' எனப்பட்டனர். அவர்கள் சிறு தொகையினராகவும் மிகப் புராதன வாழ்க்கை வாழ்பவராகவும், பலர் நாட்டின் வரண்ட உட்பாகங்களில் வசிப்பவர்களாகவும் இருந்தார்கள். ஆஸ்திரேலியா மிகப் பெரிய தேசம் எனவே, பிரித்தானியர் குடியேற்றம் இப் பூர்வீக குடிகளைப் பாதிக்கவில்லை. கப்டன் குக்கினுல் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இக்கண்டத்தினுல் ஆரம்பத்தில் யாதொரு பயனும் விளையவில்லை ; ஆனுல் 1787-ம் ஆண்டில், தீவாந்திர சிட்சைபெற்ற சில குற்றவாளிகளை இப்புதுநாட்டுக்கு அனுப்ப வேண்டுமெனப் பிரித்தானிய அரசாட்சியார் தீர்மானித்தனர். 1788-ம் ஆண்டில் அதற்கென நியமிக்கப்பட்ட கப்பல்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட குற்றவாளிகளை ஆஸ்திரேலியாவின் கீழ்க் கரையிலுள்ள **போற்றனிகுடா** என்னுமிடத்துக்குக் கொண்டு வந்தன. ஆனுல் அக்குற்றவாளிகள் இப்போது **சிட்னி** யெனப் படும் பெரு நகரமுள்ள இடத்துக்குச் சிறிது காலத்துள்

கொண்டுபோகப்பட்டனர். அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்திலே குற்றவாளிகள் மாத்திரமன்றி சாதாரண மாந்தரும் வந்து குடியேறுவராயினர். இக்காலத்திய ஆஸ்திரேலியரிற் பெரும்பகுதியார் சுயேச்சையாய் வந்துக் குடியேறியவரின் வழித்தோன்றல்களே.

நாட்டினுட்புறம் ஆடுகளை வளர்த்தற்கு விசேட நல்வளம் பொருந்தியதென்பது சீக்கிரமே கண்டறியப்பட்டது. எனவே 1821-ம் ஆண்டளவில் நியூ சௌத் உவேல்சு என்னும் புதுக் குடியேற்றநாட்டிற் றங்கினவருக்கு 2,50,000 ஆடு மாடுகளிருந்தன. இதேகாலத்தில் ஆஸ்திரேலியாவுக்குத் தென் றிசையிலிருப்பதும் இப்போது தஸ்மேனியா எனப்படுவதுமான தீவில் 10,000 குடியேற்றக்காரரிருந்தனர். சுயேச்சையாய்க் குடியேறுபவர் இடைவிடாது வந்துகொண்டிருந்ததினாலே நாட்டின் உட்பாகங்கள் அதிகம் ஆராயப்பட்டதுமன்றி, தேசமும் அபிவிருத்தியடைந்தது. இக்குடியேற்றக்காரரின் நிர்ப்பந்தமான வேண்டுகோளின்படி, தீவாந்திர சிட்சை பெற்ற குற்றவாளிகளை யனுப்புவது 1840-ம் ஆண்டிலே நிறுத்தப்பட்டது. 1828-ம் ஆண்டில் மேற்காஸ்திரேலியாவிலே இன்னொரு குடியேற்றநாடு தாபிக்கப்பட்டது ; இது ஆரம்பத்தில் செழிப்புடன் வளரவில்லை; எனவே, தங்களுக்கு உழைப்பதற்காகத் தீவாந்திர சிட்சை பெற்ற குற்றவாளிகளை அனுப்ப வேண்டுமெனக் குடியேற்றக்காரர் பிரித்தானிய அரசாட்சியாரை வேண்டினர் ; ஆனால் 1848-ம் ஆண்டுக்குப் பின்னர் அத்தகையோர் அனுப்பப்படவில்லை. 1836-ம் ஆண்டில் தென் ஆஸ்திரேலியாவில் புதிய குடியேற்ற நாடொன்று தாபிக்கப்பட்டது. இப்பிரதேசம் குற்றவாளிகளின் குடியேற்றத் தாபனங்களின்றியே இருந்தது ; 1841-1848-ம் ஆண்டுகளிற் தேசாதிபதியாக இருந்து சிறந்த தொண்டு புரிந்த சேர் ஜோஜ் கிறே என்பவரின் திறமையான ஆட்சியினாலே இது பெரிதும் முன்னேற்ற மடைந்தது. 1850-ம் ஆண்டில் விக்ரோரியாவும், 1859-ம் ஆண்டில் குவீன்ஸ்லாந்தும் நியூ சௌத் உவேல்சிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனிப் பகுதிகளாக்கப்பட்டன. ஆஸ்திரேலியாவில் ஆறு மாகாணங்கள் தோற்றியவகை இதுவே ; இப்போதும் அவை இவ்வாறேயுள.

ஒவ்வொரு பிரிவும் மாந்தர் குடியேறுத பெரும் பரப்புகளினுல் மற்ற பிரிவுகளினின்றும் பிரிக்கப்பட்டுள்ளது; ஆனுல் தஸ் மேனியாவோ சமுத்திரத்தினுற் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ் வொரு மாகாணமும் தன்போக்கில் வளர்ச்சி பெற்றது.

'புஷ்ரேஞ்ஜர்களால்' இடைக்கிடை விளைந்த சச்சரவு களைத் தவிர வேறு கலம்பகம் எதுவுமின்றி ஆஸ்திரேலியா வளர்ந்திருக்கின்றது. 1850-ம் ஆண்டுவரையிலும் புதியக் குடியேற்ற நாடுகளின் வளர்ச்சி மெதுவாகவே நடைபெற்றது. ஆனுல் அவ்வாண்டில், பொன், வெள்ளி, செம்பு என்பவை அங்கு ஏராளமாகக் கண்டு பிடிக்கப்பட்டன; சிறிது காலத்துக் குப்பின் நிலக்கரி நிறைந்த சுரங்கங்களும் இருப்பதாக அறியப் பட்டது. உடனே பல்லோர் அந்நாட்டிற் குடியேறினர்; இதனுலே ஐந்தாண்டு காலத்திலே விக்ரோரியா மாகாணத்தின் சனத்தொகை 70,000-லிருந்து, 3,33,000 ஆகக் கூடிவிட்டது. கனிஜத்தொடர்புள்ள தொழில்கள் பிரதானமெனினும், உலகத் திலே கம்பள வியாபாரத்துக்காக ஆடுகளை வளர்த்தலே ஆஸ் திரேலியாவின் பிரதான தொழிலாகும்.

1856-ம் ஆண்டில், நியூசௌத் உவேல்சு, விக்ரோரியா,

ஆஸ்திரேலியாவில் ஆட்டுப்பட்டி

தென் ஆஸ்திரேலியா, தஸ்மேனியா என்பவற்றுக்குப் பொறுப் பாட்சி யளிக்கப்பட்டது; அடுத்த பதினேந்தாண்டுகளில் இவ் வாட்சிமுறை மற்ற இரு குடியேற்ற நாடுகளுக்கும் தரப்பட்டது. இந்நாடுகள் ஒன்றற்கொன்று நெடுந்தூரம் பிரிக்கப்பட்டும், அழுக்காறுகொண்டுமிருந்தமையினால், அவற்றுக்குத் தம்முள் ஐக்கியம் பூண விசேடமான விருப்பம் பலவாண்டுகளுக்கு இல்லை. 1880-89-ம் ஆண்டுகளிலே ஆங்கிலேயரன்றி, வேறு ஐரோப்பிய வல்லரசுகளும் தென் பசிபிக்குச் சமுத்திரத்திலே தோற்ற, தம்மவரனைவருக்கும் பொதுவான விஷயங்களுக்கு இடர் விளையுமென்றெண்ணிய ஆஸ்திரேலியா நாடுகள் பல வும் நெருங்கிய உறவு கொண்டாடத் தொடங்கின. ஐக்கியப் பிரச்சனையானது சனங்களனைவரின் வாக்குரிமையின்படி தீர் மானிக்கப்பட்டபின், சமஷ்டி முறைப்படியான ஓரரசியல் தயா ரிக்கப்பட்டது; இவ்வரசியலமைப்பு 1900-ம் ஆண்டில் பிரித் தானியப் பாராளுமன்றத்தினங்கீகாரம் பெற்று சட்டமாயது. ''ஆஸ்திரேலியப் பொதுநல நாடு'' கனேடிய முன்மாதிரியை பின்பற்றிய சமஷ்டி முறையே; ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டைப்போல, திட்டமான சில அதிகாரங்கள் மத்திய அர சாட்சியாருக்கும், ஏனைய அதிகாரங்கள் சமஷ்டி ராச்சியத்தி லடங்கிய மாகாணங்களுக்கும் அளிக்கப்பட்டன. ஆஸ்திரே லிய தலைநகரமாக 'கன்பேரு' என்னும் ஒரு புத்தம்புதிய நகர் கட்டப்பட்டிருக்கின்றது.

இப்புதிய பொதுநல நாடு பெரும் வெற்றியுடன் நடை பெற்றுவருகின்றது. ஆஸ்திரேலியத் தொழிலாளர் வன்மை பொருந்தியவர்; ஒழுங்கான அமைப்பு பெற்றவர்; அவர் களுக்கு நன்மையளித்தற் பொருட்டுப் பல சட்டங்கள் ஏற் படுத்தப்பட்டுள்ளன; ஆனால் துரதிருஷ்டவசத்தினாலே, பெரும் பண நட்டமுண்டாக்கிய தொழிலாளரின் சச்சரவு களும் தொழில் நிறுத்தங்களும் நடைபெற்றுள்ளன. தங்கள் சம்பளம் குறைக்கப்படின் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்குமோ வெனப் பயந்த ஆஸ்திரேலியத் தொழிலாளிகள், பிறர் தம் நாட்டிற் குடியேறுவதைக் கண்டு அஞ்சுகின்றனர். வழக்க மான சம்பளவீதத்தினும் குறைந்த வீதப்படி பெற இணங்கும்

ஆசியத் தொழிலாளரைத் தம் நாட்டுள் புக விடுதற்கு அவர்கள் விரும்பாமைக்கு இதுவே காரணமாகும்.

முதலாம் உலகப் போர் நிகழ்ந்தபோது பிரித்தானியா அரசரில் ஆஸ்திரேலியருக்கிருந்த இராசபக்தி தெள்ளிது தோற்றிற்று. அப்போது அவர்களின் படைவீரர் திரள்திர ளாய்ப் புறப்பட்டுச் சென்று, தம் எதிர்ப்புத் திறனே யாவருங் கண்டு பிரமிக்க வைத்தனர். கனடாவில் போருக்கு ஆட்களே வலுவிற் றிரட்ட நேர்ந்தது போல இங்கு நிகழவில்லை. சுயேச் சையாகவே மக்கள் போருக்கு ஏராளமாகச் சென்றனர். சமா தான மகாநாட்டில் கனடாவைப் போலவே ஆஸ்திரேலியாவும் பங்குபற்றியதுடன் சர்வதேச சங்கத்திலும் அங்கத்துவம் வகித் தது. நியூகினித் தீவில் முன்பிருந்த ஜெர்மானிய ஆட்சிப் பிரதேசம், சர்வதேச சங்கத்தின் ஆணைப்பிரகாரம் பொதுநல நாட்டின் பொறுப்பின்கீழ் ஒப்படைக்கப்பட்டது.

நியூசீலாந்து. 1769-ம் ஆண்டிலே கப்டன் குக் நியூசீ லாந்தைத் தரிசித்து அதனை இங்கிலாந்துக் குரியதாக்கினான்; ஆனால் அதன்பின் அறுபதாண்டு காலத்துக்கு அதிற் சனங் களைக் குடியேற்றுதற்காக உண்மையான முயற்சி யாதுஞ் செய்யப்படவில்லை. அங்கு சென்ற ஐரோப்பிய வியாபாரிகளும் பாதிரிமாரும் அங்கே "மயோறிகள்" எனப்படும் அறிவாளி களான சுதேசிகள் சிறு தொகையினராக இருப்பதைக் கண்ட னர். ஒரு குடியேற்றத் தாபனத்தைத்தக்க ஏற்பாடுகளுடன் உண்டாக்குவதின் பொருட்டு 1839-ம் ஆண்டளவிலே "நியூ சீலாந்து சங்கம்" தாபிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் மயோறிகளுடன் நிலவுரிமையைப்பற்றின சச்சரவேற்பட்டது; இது திருப்திகரமாகத் தீர்க்கப்படுமுன் இரு போர்கள் நடைபெற்றன. முதற்போர், சேர் ஜோஜ் கிறே என்பவரால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது; இவர் தேசாதிபதியாக இருந்தபோது, தென் ஆஸ்திரேலியாவிற் போன்றே இங்கும் வெற்றிகரமாக ஆட்சி புரிந்தார். இரண் டாம் போர் 1870-ம் ஆண்டுவரையில் ஒருவாறு நடை பெற்றது; அதன்பின் அநேகமாய்ப் பிரித்தானியக் குடியேற் றக்காரருக்கான நியமங்களின்படியே மயோறிகளுக்கும்

நாட்டில் பிரத்தியேக அரசியலுரிமைகளை அளிக்கும் சமாதான ஏற்பாடு செய்யப்பட்டது; அது முதலாக இவ்வேற்பாடு சிறப்புடன் நடைபெற்று வருகின்றது; 1856-ம் ஆண்டிலே பொறுப்பான ஆட்சி, முதல் சமஷ்டியும், பின் ஒற்றை ஆட்சியும், அளிக்கப்பட்டது. பொதுவாக கூறுமிடத்து இதுகாறும் திருப்தியுடனும், செல்வாபிவிருத்தியுடனும் இருந்துவரும் சனங்களின் நன்மையின் பொருட்டுச் சட்டங்களை யமைப்பதில் நியூசீலாந்தின் அரசாட்சியார் முயற்சித்து, சித்தியும் பெற்றுள்ளனர். இந்நாட்டின் பிரதான தொழில் செம்மறியாடுகளை வளர்த்தலாம். ஆனல் நியூசீலாந்து, கமத் தொழில் செய்வதற்கு வாய்ப்புள்ள நாடாகவும், சிறப்பாக மாட்டுப் பண்ணை உற்பத்திக்கு உகந்த நாடாகவும் இருக்கிறது. ஆஸ்திரேலியாவையும் கனடாவையும் போல் நியூசீலாந்து முதலாம் உலகப் போருக்குத் துருப்புகளை அனுப்பியது. சமாதான மகாநாட்டில் ஜெர்மானிய உடைமையான சமோவாத்தீவு பொறுப்பாட்சி நாடாக அதற்குக் கொடுக்கப்பட்டது. பிரித்தானியச் சாம்ராச்சியத்தி லடங்கிய சுயராச்சியங்களுள் நியூசீலாந்தே மிகச்சித்தியுடன் ஆளப்பெறும் நாடெனக் கூறுதல் மிகையாகாது.

தென்னப்பிரிக்கா. ஆஸ்திரேலியா, நியூசீலாந்து போலல்லாமல், தென்னப்பிரிக்கா சமாதான மற்ற சரித்திரமுடையது. 17-ம் நூற்றாண்டில், கீழ் நாடு செல்லும் தமது கப்பல்களில் வேலை செய்வோருக்குப் புதிய உணவு அளித்தற் பொருட்டு டச்சர் நன்னம்பிக்கை முனையில் சிறு குடியேற்றத் தாபனமேற் படுத்தினர். 14-ம் லூயி அரசனல் தம் நாட்டினின்றுந் துரத்தப் பட்ட சில பிராஞ்சிய புரொட்டெஸ்தாந்து கட்சியினரும் அங்கே குடியேறினர்; ஆனல் 18-ம் நூற்றாண்டினிறுதியளவில் அக்குடியேற்றத் தாபனத்தில் 15,000 ஐரோப்பியர் மாத்திரமே இருந்தனர். டச்சு கிழக்கிந்திய கம்பனி முந்நாள் நோக்கத்தைவிட்டு, வேறேதும் அபிவிருத்தி செய்ய விரும்பவில்லை. தென்னப்பிரிக்காவின் பூர்வ குடிகள் 'புஷ்மென்' (Bushmen), 'கொற்றென்றொற்ஸ்' (Hottentots) என்ற இரு சாதியினர். இவர்கள் மிகவும் சீர்திருத்தமற்ற வாழ்வே வாழ்ந்தனர். இன்று இவர்களில் ஒரு சிலரே மிஞ்சியுளர். நெப்போலி

யப்போரின் காலத்திலே அது பிரித்தானியராட்சிக்குட்பட்டது ; 1815-ம் ஆண்டில், பிரித்தானியர் பெருந்தொகையளித்து அதனைத் தம்து கப்பற்படை தங்குதற்கான இடமாக வைத்துக் கொண்டனர்.

அச்சமயத்திலே, தென்னப்பிரிக்காவிலே அந்நியர்மீது படையெடுக்கும் இருசாதியினர்—தெற்கேயிருந்து ஐரோப்பியர், வடக்கேயிருந்து பாந்துக்கள் என்போர்—இருந்தனர்; பிந்திய வருள் பிரசித்தி பெற்றவர், காப்பிரிகளும் போர்ப் பிரியங் கொண்ட சுலுக்கூட்டத்தினருமாவர். பல பாதிரிமாருட்பட தொகையான பிரித்தானியர் முனைக்குடியேற்ற நாட்டிற் குடி யேறினர். பாதிரிமார், அடிமை வியாபாரத்தையும் அடிமை களைத் தொண்டு புரியச் செய்யும் வழக்கத்தையும் ஒழிக்கப் பேரார்வங் கொண்டிருந்தனர். ஆனல் இது (அடிமைகளை விடுவித்தல்) "போயர்கள்" என்னும் ஒல்லாந்தக் கமக் காரராற் பெரிதும் வெறுக்கப்பட்டது. பிரித்தானியருக்குரிய பிரதேசங்களிலெல்லாம் அடிமைகள் இருத்தல் கூடாதென 1833-ம் ஆண்டில் விதிக்கப்பட்டபோது, போயர்கள் அதிருப்தி யடைந்தனர் ; மூன்றாண்டுகளுக்குப்பின் 10,000 போயர்கள் முனைக்குடியேற்ற நாட்டினின்றும் புறப்பட்டுத் தாம் முன் பின்னறியாத உள் நாட்டை நோக்கிச் சென்றனர். இவ்வாறு இவர்கள் சென்றமை "பெருந்திரக்கு" (The Great Trek) அல்லது "பெரும்பயணம்" என்று கூறப்படும். இவ்வாறு சென்றவர்களிற் சிலர், சுலுக்களால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டபோதிலும், ஏனையோர் அவர்களைத் தோற் கடித்து (இப்போது) நேட்டால் எனப்படும் பிரதேசத்திற் குடியேறினர். பாந்துச் சாதியினருடன் சச்சரவு விளையா திருத்தற் பொருட்டுப் பிரித்தானிய அரசாட்சியார் நேட்டாலைத் தமக்குட்படுத்தத் தீர்மானித்தனர். அப்போது சில போயர் குடியேற்றக்காரர் இன்னமும் நாட்டின் உட்புறம் நோக்கிச் சென்று **திரான்ஸ்வால்**, **ஓரஞ்சு சுயராச்சியநாடு** என்னுமிரு குடியரசுகளைத் தாபித்தனர். 1853-ம் ஆண்டில் முனைக் குடியேற்ற நாட்டுக்குப் பிரதிநிதி அரசாட்சி முறை யளிக்கப் பட்டது. அதனை நன்காரம்பித்தற்காக, நியூசீலாந்திலிருந்து

சேர் ஜோஜ் கிறே தேசாதிபதியாக வந்தனர். போயரின் குடியரசுகளை அடக்கிய ஒரு சமஷ்டி முறையை ஏற்படுத்த அவர் நினைத்தார். ஆனல், இவ்வேற்பாட்டை இங்கிலாந்திற் பிரித்தானிய அரசாட்சியார் எதிர்த்ததே பெருங்காரணமாக, அச்சமஷ்டி முறை தாபிக்கப்படவில்லை.

1869-ம், 1871-ம் ஆண்டுகளிலே போயர் குடியரசுகளுக்கு முறையே தெற்கிலும் கிழக்கிலும் வசித்து வந்த வரும் பாந்துச் சாதியினருமான பசுது, கிரீக்குவர் என்னும் இரு கூட்டத்தார், பிரித்தானியரைத் தம்மைப் பாதுகாக்கும்படி வேண்டிக்கொண்டனர். கிரீக்குவருக்குரிய நிலங்களில்தான் விலைகூடின வைரச்சுரங்கங்கள் பிற்காலத்திற் கண்டுபிடிக்கப் பட்டன. இரகசியமாக, திரான்ஸ்வாலிலே உள்நாட்டுச் சச்சரவுகள் அதிகமிருந்தன. அதற்கயலிலிருந்த ஓரஞ்சு சுயராச்சிய நாட்டில் அவ்வாறில்லை. திரான்ஸ்வாலிலுள்ளவர் சுலுக்களுடன் சருவ, நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. இதனற் பிரித்தானிய அரசாட்சியார் தலையிட்டு, 1877-ம் ஆண்டில் திரான்ஸ்வாலைத் தமதாக்கிக்கொண்டனர். இச் செயல் சுலுக்களின் படையெடுப்புகளைத் தடைசெய்யவே, 1878-ம் ஆண்டில் அவர்களுடன் போர் மூண்டது. ஆரம்பத்திற் சில பிரித்தானியப் படைகள் பெரும் இடுக்கண்களுக்காளாயின. தம்மிலும் பன்மடங்கு கூடிய சுலுக்கள் தாக்கின போது, மிகச் சிறு தொகையினரான பிரித்தானியப் படையினர் ரூர்க்ஸ் கடவையைக் காத்து நின்றனர். இது பிரித்தானியப் படையினரின் சரித்திரத்தில் பெருஞ் சிறப்புள்ள நிகழ்ச்சிகளுள் ஒன்றாகும். சுலுக்களின் பூரண தோல்வியுடன் போர் முடிவடைய, 1887-ம் ஆண்டில், சுலுலாந்து என்னும் பிரதேசம் பிரித்தானியருக்குரிய தாக்கப்பட்டது. சுலுக்களைப் பற்றின பயம் நீங்கினவுடனே, திரான்ஸ்வாலிலிருந்த போயர்கள் சுயராச்சியமடைய விரும்பி மீண்டும் போர் செய்தனர். பிரித்தானியப் படைகள் சில தோற்கடிக்கப்பட்டன ; பின்னர், போயர்கள் வேண்டியதைப் பிரித்தானியா, அளித்தது; ஆனல் திரான்ஸ்வாலின் பிற நாட்டுக் கருமங்கள் பிரித்தானியருக்குட்பட்டிருக்க வேண்டுமென நியமித்தது.


பெல்ஜியன் கொங்கோ
அங்கோலா (போர்த்துகீசர்)
ரொடீசியா
தென் ரொடீசியா
தெ. மே.
பெச்சுவானலாந்து
காப்புநாடு
ஆப்பிரிக்கா
திரான்ஸ்வால்
ஆரஞ்சு
நன்னம்பிக்கை முனை
இந்து சமுத்திரம்
மைல்கள்
0 50 100 200 400
பிரித். தென்னபிரிக்காவி. னெல்லை:-
பிரதான புகைரத வீதிகள்

[எமரி வாகர் லிமிடெட்

இதற்குச் சிலவாண்டுகளுக்குப் பின்னர், தென்னப்பிரிக் காவிலே பிரித்தானியரின் செல்வாக்குப் பரவத் தொடங்கி யது ; இதற்குப் பெருங்காரணம், திறமைவாய்ந்த **செசில் ரோட்சு** என்பனுவன். முனேக்குடியேற்ற நாட்டில் உள்ள ஆங்கிலேயருக்கும் போயருக்கும் இடையில் நேசத் தொடர்பு ஸ்தாபிக்கப்பட்டது. திரான்சுவாலுக்கு வடக்கேயுள்ள பிரதே சத்தின் வியாபாரத்தை விருத்தி செய்தற்கு அவன் பிரித் தானியத் தென்னப்பிரிக்க வர்த்தகச் சங்கத்தைத் தாபித்தான்; இது, போர்ப்பிரியரான மாட்டபெலக் கூட்டத்தினரின் அரசனுன "லொபங்குலன்" என்பவனுடன் செய்து கொண்ட ஏற்பாட்டின்படி தாபிக்கப்படினும், லொபங்குலன் தான் செய்த ஏற்பாட்டிற்காக மனவருந்தி, புதுக்குடியேற்றக் காரருடன் போரிட்டுத் தோல்வியடைந்தான். இப்புதிய பிரதேசத்துக்கு "ரொடீசியா" என்னும் பெயரளிக்கப்பட்டது; இதன் வடபாகம் மத்திய ஆப்பிரிக்காவில் நெடுந்தூரம் பரவியுள்ளது.

ரொடீசியா இவ்வாறு விசாலித்து, திரான்ஸ்வாலிலுள்ள போயர்களேப் பரவவிடாது நாற்புறமுஞ் சூழ்ந்து கொண்டது. 1886-ம் ஆண்டில் அவர்களுக்குரிய பிரதேசத்தில் செழுமை யான பொன்வினே நிலங் கண்டுபிடிக்கப்பட்டது ; எனவே சுரங்க வேலேக்காரர் ஐரோப்பாவின் எல்லா பாகங்களிலிருந் தும் வந்து அங்கு குழுமினர் ; யோகான்ஸ்பர்க்கு என்னும் பெரும் பட்டணமும் விரைவிற்ரோன்றி விருத்தியடைந்தது. வெளியார் தம்விஷயங்களிற் றலேயிடுவதைப் பகைத்த போயர்களுக்கு இவை யெல்லாம் பெரும் வெறுப்பை உண் டாக்கின. எனவே அவர்கள் தம் குடியரசுக்குப் "பவுல் குரூகர்" என்பவனேத் தலேவனுகக்கொண்டு, அரசியலதிகார முழுவதையும் தம்மிடமே வைத்திருந்தனர் ; அந்நியருக்கு யாதொரு அதிகாரமுந் தரவில்லே. இவ்வந்நியரோ, இதனுற் சினந்து ஆயுதபாணிகளாய்க் கிளர்ச்சி செய்யத் தீர்மானித் தனர். இச்சமயத்திலே முனேக்குடியேற்ற நாட்டுக்குப் பிரதம மந்திரி யாயிருந்த ரோட்சு, இவர்களுக்கு இரகசியமாக ஆதர வளித்தான். 1872-ம் ஆண்டில் முனேக்குடியேற்ற நாட்டுக்கு

பொறுப்பாட்சி அளிக்கப்பட்டமையினாலே இச்செயலைப் பிரித்தானிய அரசாட்சியார் அறிந்திலர். ஒரு கட்சியினர் ஆயுத பாணிகளாக எல்லை கடந்து திரான்ஸ்வாலுக்குள் நுழைந்த போது பிடிக்கப்பட்டனர். இதனால் ரோட்சு தன் பதவியினின்றும் தானாகவே விலகவும், முனைக்குடியேற்ற நாட்டுப் போயரின் நட்பை இழக்கவும் வேண்டியிருந்தது. பின்னர் முனைக்குடியேற்ற நாட்டிலிருந்த போயர்கள், "ஆப்பிரிக்காந்தர் போண்ட்" என்னும் செல்வாக்கு மிகுந்த ஒரு சங்கத்தை ஏற்படுத்தினர். அந்நியர் ஆயுதபாணிகளாய்த் திரான்ஸ்வாலுக்குள் நுழைந்தமை அவர்களுக்கும் ஓரஞ்சு சுதந்திர நாட்டினருக்கும் பெருஞ் சீற்றமுண்டாக்கியது. அதனாலே, தலைவனான குரூகர் பிரித்தானியாவுடன் போர் செய்யவும், சுதந்திரம் பெற்ற டச்சத் தென்னப்பிரிக்க நாடொன்றைத் தாபிக்கவும் தீர்மானித்தான். 1899-ம் ஆண்டிலே போர் மூள, ஓரஞ்சு சுதந்திர நாடு திரான்ஸ்வாலுடன் சேர்ந்துகொண்டது. ஆனால், "ஆப்பிரிக்காந்தர் போண்ட்" இந்தப் போரில் சேரவில்லை. போயர்கள் வியக்கத்தக்க வீரத்துடன் பிரித்தானியரை எதிர்த்து நின்றனர்; அவர்களைத் தோற்கடித்தற்குப் பிரித்தானியப்படை முழுவதும் வேண்டியிருந்ததெனலாம். கனடாவும் ஆஸ்திரேலியாவும் தொண்டர் படைகளை அனுப்பியது குறிப்பிடத் தக்கது. இறுதியாக, 1902-ம் ஆண்டிலே, இரு குடியரசு நாடுகளும் பிரித்தானியரின் ஆதிக்கத்தை அங்கீகரித்தன.

தென்னப்பிரிக்க ஐக்கிய நாடு. இப்போர் முடிந்த போது செய்யப்பட்ட சமாதான உடன்படிக்கையின் நியமங்கள் கடுமையாக இல்லை. போயர் தலைவரிற் பலர் டச்சர் தென்னப்பிரிக்காவிற் பூரணமாகத் தலைமை பெறுதலியலாதென்பதையுணர்ந்து பிரித்தானியரின் நண்பர்களாக ஒத்துழைக்கலாயினர். இவர்களுள், பிரித்தானியருக்கு எதிராகப் போர் செய்த **போத்தா, ஸ்மட்ஸ்** என்னுமிரு படைத்தலைவர்களும் மிகப் பிரதானமானவர். பிரித்தானிய அரசாட்சியாரும் அவர்களுக்கு அரைவாசி இணங்கினர். 1907-ம் ஆண்டில் இருகுடியரசு நாடுகளுக்கும் பூரண பொறுப்பாட்சி அளிக்கப்

பட்டது. 1893-ம் ஆண்டிலேயே நெட்டாலுக்கு அதேமுறை யான அரசாட்சி யளிக்கப்பட்டிருந்தமையினால் தென்னப்பிரிக் காவிலே, மூன மாகாணத்துடன், (முன்பு மூனக்குடியேற்ற நாடு) நான்கு சுயராச்சிய மாகாணங்களிருந்தன. தமக்குப் பொதுவான விஷயங்களிருந்தனவென்பதை இவை சீக்கிரமே கண்டு 1909-ம் ஆண்டில் மிகநெருங்கின முறையிலே சகல அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்துக்கு உள்ள சமஷ்டி ராச் சியந் தாபிக்கத் தீர்மானித்தன. இத்தென்னப்பிரிக்க (சமஷ்டி) ஐக்கிய நாட்டின் முதற் பிரதம மந்திரி, முன்னே போயர் படைச் சேனாதிபதியாக விளங்கிய **போத்தா** என்பவனேயாம். 1914-ம் ஆண்டில் முதலாவது உலகப் பெரும்போர் மூண்ட போது இவ்வைக்கியத்தின் பலம் சோதிக்கப்பட்டது. எவ் வாறெனில், ஒரு சில போயர்கள் கலகஞ்செய்ய, ஏனைய போயர்கள் அவர்களை யடக்கிவிட்டனர். ஐக்கிய நாட்டுப் படைகள் ஜெர்மானியருக்குரிய தென்மேற்காப்பிரிக்காவின் மீது படையெடுத்து அதனைப்பற்றினதோடு, ஸ்மட்சின் கீழ்ஜெர் மானியக் கிழக்காப்பிரிக்காவிற் போர் செய்தன; தொகை யான வீரரும் பிரான்சிற் போரிடுதற்கனுப்பப்பட்டனர்.

உதவிக் குறிப்புக்கள்.

இவ்வத்தியாயம் முன்னத்தியாயத்தின் தொடர்ச்சி யாகும்; பிரித்தானியச் சாம்ராச்சியத்தின் ஏனைய மூன்று சுய ஆட்சி டொமினியன்களைப்பற்றிக் கூறும். அநேகமாய் ஆங்கில வமிசத்தவர்களினாலேயே ஆஸ்திரேலியாவும் நியூசீலாந்தும் விருத்தி செய்யப்பட்டதை ஏனைய குடியேற்ற நாடுகளின் விருத்தியோடு ஒப்பிடும்போது, இது தங்கு தடையின்றியும் சமாதானமாகவும் நடைபெற்றதெனலாம். பல்வேறு சாதி யினரும், ஒரே சாதியினராயினும் வெவ்வேறு தேசத்தவரு மான டச்சரும் ஆங்கிலேயரும் இருக்கப்பெற்ற தென்னப் பிரிக்காவின் அபிவிருத்திக்கும், ஆஸ்திரேலியா, நியூசீலாந்து என்பனவற்றின் அபிவிருத்திக்கும் பெரும் வேறுபாடு உண்டு. மனங்கவரும், ஆனற் கடினமான பிரச்சினைகள் தென்னப்பிரிக் காவிலே உண்டு.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1769–79.	குக் பிரயாணஞ் செய்தபோது ஆஸ்திரேலியாவையும் நியுசீலாந்தையும் கண்டு ஆராய்ந்தான்.
1815.	இறுதியாகப் பிரித்தானியா முனைக் குடியேற்ற நாட்டை தனதாக்கிக் கொண்டது.
1836.	தென்னப்பிரிக்கப் போயர்களின் "பெரும் பயணம்".
1856.	நான்கு ஆஸ்திரேலிய நாடுகளுக்கும் நியுசீலாந்துக்கும் பொறுப்பாட்சி அளிக்கப்பட்டது.
1877.	திரான்ஸ்வாலைப் பிரித்தானியர் தமதாக்கிக் கொண்டனர்.
1881.	முதலாம் போயர் சண்டை.
1886.	திரான்ஸ்வாலில் "இராண்ட்" இல் பொன் னிருப்பிடங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.
1899-1902.	இரண்டாம் போயர் சண்டை.
1900.	ஆஸ்திரேலிய சமஷ்டிராச்சியம் தாபிக்கப்பட்டது.
1909.	தென்னப்பிரிக்க ஐக்கியம் ஏற்பட்டது.

15. இந்திய உபகண்டம்—1919 வரை

இந்தியப் பெரு நிலபரப்பு. இந்திய உபகண்டத்தைப் பற்றின மிக வதிசயமான விஷயம் யாதெனில், அங்கு பலசாதியினரும், பல மொழிகளும், கல்விமான்களும் அனேகமாய்ப் பேரறிவாளருமான உயர்சாதிப் பிராமணர் முதல், கையில் வில்லும் அம்புங்கொண்டு வேட்டையாடி வயிறு வளர்க்கும் அநாகரிகக் காட்டு மனிதர் ஈறுக, நாகரிகத்தின் பல படிகளிலும் மாந்தர் காணப்படுவதேயாம். தனக்குரிய நீண்ட சரித்திர காலத்தில் இவ்வுபகண்டம் தனி மன்னனின்கீழ் இடையிடையே ஒன்றுபட்டிருந்த தெனினும், இந்தநிலை நீடித்திருக்கவில்லை. இது 19-ம் நூற்றாண்டின் முதற் பகுதியிலிருந்து 20-ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரையும் பிரித்தானியர் ஆட்சியிலிருந்து, பெரும்பகுதி பிரித்தானிய இந்தியா வென்று அழைக்கப்பட்டு, பிரித்தானிய நேரடி ஆட்சியின்கீழ் இருந்தது.

சிறுபகுதி 600 சமஸ்தானங்களாக இந்திய அரசர்களின்கீழ் இருந்தது. பெரிதும் சிறிதுமாகிய இச்சமஸ்தானங்கள் பிரித்தானிய அரசின் பிரதிநிதியாகிய 'வைஸ்ரேய்க்கு' பொறுப்புள்ளனவாக இருந்தன. பிரித்தானிய அரசர், அல்லது அரசி, இந்தியச் சக்கரவர்த்தி என்ற பட்டமும் உடையவராஞர்.

இவ்வுபகண்டத்தில் பலநூற்ருண்டுகளாக இருபிரதான மதங்கள் உள. 1939-ல் இந்து மதத்தைப் பின்பற்றிய பெரும்பாலான இந்திய மக்களின் தொகை ஏறக்குறைய 24 கோடி எனலாம். அடுத்த பிரதான மதம் இஸ்லாம். 7 கோடி முஸ்லிம்கள் இம்மதத்தைப் பின்பற்றினர்கள். இதைவிட, கிறீஸ்தவர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் முதலியோர் 3 கோடி எனலாம். வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுவோர் கலப்பு மணம் செய்துகொள்வது அருமை. இவர்கள் வாழ்க்கை முறைகளும் சமூகக் கட்டுப்பாடுகளும் மிகவும் வேறுபட்டனவாம்.

19-ம் நூற்ருண்டுக்கு முன் இந்தியாவின் நிலைமை. பெரும் அரசர்களான புத்த சக்கரவர்த்தி அசோகனும் இந்து சக்கரவர்த்தி சந்திரகுப்தனும் இந்தியா முழுவதையும் முந்நாளில் ஆண்டனர். இவர்கள் இருவரைவிட இந்தியா முழுவதையும் ஆண்ட அரசர்கள் இந்தியர் அல்லர். 18-ம் நூற்ருண்டின் தொடக்கத்தில், இந்தியாவை வென்ற முஸ்லிம்களான முகலாய சக்கரவர்த்தியின் ஆட்சி முடிவடையும் நிலையிலிருந்தது; நாடு மீண்டும் பெருஞ் சீர்கேடான நிலைமையையடைந்தது. இந்துக்களான மராட்டியர் சர்வாதிகாரமும் பெறுவரோவென ஒரு காலத்திற்ருேற்றியது; ஆனல் அவர்களில் பெரும் அரசன் சிவாஜி காலத்தின்பின் அவர்களிடையே ஒற்றுமையில்லை; ஆட்சிபுரியவும் அவர்கள் விரும்பவில்லை; மற்று ஏனைய இந்திய ராச்சியங்களைச் சூரையாட, அன்றேல் சிற்றரசர்களிடமிருந்து கப்பம் பெற மாத்திரமே, அவர்கள் விரும்பினர்.

16-ம் நூற்ருண்டின் முற்பகுதி முதலாக ஐரோப்பிய வியாபாரிகள் (விசேடமாகப் பிரித்தானியரும் பிரான்சியரும்), இந்தியக் கடற்கரையில் வியாபாரத் தலங்களைத் தாபித்தனர்,

18-ம் நூற்றாண்டில் பிரித்தானியாவும் பிரான்சும் போரிட்டன; இப்போர்கள் வியாபார விருத்தியை நோக்கமாகக் கொண்டே பெரிதும் நடைபெற்றன. இந்தியாவுடன் வாணிபஞ்செய்த இரு நாட்டவரும் போட்டி வியாபாரச் சங்கத்தினராக அமைந் திருந்தமையால் இடைவிடாது போரிட்டனர். அவர்களுடைய சிறிய வியாபாரத் தலங்கள் ஆங்காங்கு ஆண்ட சிற்றரசர் களுடன் உடன்படிக்கை செய்து கொள்வதினால் சாதாரண மாகப் பெறப்பட்டன. பிரித்தானியரின் மூன்று பிரதான வியாபாரத்தலங்கள், கல்கத்தா, பம்பாய், சென்னப்பட்டினம் (மதராஸ்) என்னும் மூன்று பெரும் பட்டினங்களாக விருத்தி யடைந்தன. போட்டியிட்ட இரு வியாபாரச் சங்கங்களின் சச்சர வுகளில் இரு சங்கத்தினரும் அங்கங்கிருந்த சிற்றரசர்களினுத வியைப் (பிரதானமாகக் கர்நாடகம், வங்காளம் என்பவற்றை யாண்டவரினுதவியை) பெற முயன்றனர். இச்சிற்றரசர் களிடம் இவர்களுக்குப் பெரும்செல்வாக்கும் உண்டு. 1763-ம் ஆண்டளவில், பிராஞ்சியரைத் துரத்துவதில் பிரித்தானியர் சித்தி பெற்றனர்.

இதுவரையில், பிரித்தானியக் கிழக்கிந்திய வியாபாரச் சங்கம் அநேகமாய் வியாபாரத்திலேயே கண்ணுங்கருத்துமா யிருந்தது. ஆனல் 1765-ம் ஆண்டில் அரச அதிகாரம் குறைக்கப் பட்ட முகலாய சக்கரவர்த்திக்கும் வங்கநாட்டதிபர்களுக்கும் உபகாரச் சம்பளம் அளிக்க இவ்வியாபாரச் சங்கத்து அதிகாரி கள் ஒப்புக் கொண்டனர்; அதற்குப் பதிலாக, வங்க மாகா ணத்தின் அரசிறையை அறவிடும் உரிமை பிரித்தானிய வியா பாரச் சங்கத்துக்கு அளிக்கப்பட்டது. அதனல் அப்போது, **இவ்வியாபாரச் சங்கம்** ஒரு பெரிய மாகாணத்தின் அதிகாரி யானதோடு, இந்திய அரசியல் விஷயங்களிலும் தொடர்புற வேண்டுமெனக் கண்டது. இந்திய விஷயங்களே அவ்வியாபாரச் சங்கத்தார் நடாத்தும் முறையைச் சீர்படுத்துவதற்காகப் பிரித் தானிய அரசாட்சியார் 1773-லும், 1784-லும் பாராளுமன்றத் தில் சட்டங்களே ஏற்படுத்தினர். பிரித்தானியாவில் நியமிக்கப் பட்ட பிரதம தேசாதிபதி கல்கத்தாவில் வாசஞ் செய்தனர். தொடக்கத்தில் சங்க உத்தியோகத்தர்கள் கேவலமாக ஆண்ட


1805-இல் பிரித்தானியருக்குரிய பிரதேசம்
1805-1858-இற் பெற்றவை
1858-க்குப்பின் ,,
சுதேசமன்னரின் ராச்சியங்கள்
பாரசீகம்
காபூல்
ஆப்கானிஸ்தானம்
காசுமீரம்
சிந்துபாஞ்சாலம்
பலூசிஸ்தானம்
டெல்லி
இராசபுதனம்
ஆஜமீர்
நேபாளம்
பிரம்மபுத்திரா நதி
அசாம்
வங்காளம்
மான்டலே
மத்திய மாகாணங்கள்
பீரார்
பம்பாய்
அரபிக் கடல்
நிஜாம் ராச்சியம்
வங்காள
விரிகுடா
இரங்கூன்
கோவை (போர்த்துகீசர்)
மைசூர்
சென்னைப்பட்டினம்
குடகு
புதுச்சேரி (பிர.)
அந்தமான் தீவுகள்
திருவிதாங்கூர்
இலங்கை
நிக்கோபார் தீவுகள்
இந்தியா
(பிரித்தானியராட்சியின் வளர்ச்சியைக் காட்டுவது)
மைல்கள்
0 100 200 300 400 500

(எமரி வாகர் லிமிடெட்).

னர். ஆனல் தேசாதிபதி உவாறென் ஹேஸ்றிங்ஸ் ஆட்சியில் அதிக திருத்தங்கள் செய்தார். 1858-ம் ஆண்டுவரைக்கும் இருவகை யாட்சி—அதாவது பிரதம தேசாதிபதி மூலம் பிரித்தானிய அரசாட்சியார் அரசியல் விஷயங்களே அடக்கி யாளுதல்; வியாபாரச் சங்கத் தலைவர்கள் வியாபார விஷயங்களேக் கவனித்தல்—நடைபெற்று வந்தது. பிற்காலத்திய பிரதம தேசாதிபதிகளிற் பெரும்பாலார், வெறும் வியாபாரத்தினும் பார்க்கப் பிரசைகளின் நன்மையே பெரிதெனக் கருதி அதற்காகப் பாடுபட்டனர். 1833-ம் ஆண்டளவில் இந்தியாவுடன் வியாபாரஞ் செய்யும் விசேட உரிமை இவ்வியாபாரச் சங்கத்தாருக்கு மாத்திரமில்லே. ஏனெனில் ஏனேய வியாபாரிகளும் வாணிபஞ் செய்ய அநுமதிக்கப்பட்டனர். ஆனல், குடியேறுதற்கு அல்லது காணிகளேச் சொந்தமாக வாங்குதற்கு அவர்களுக்கு அநுமதி கொடுக்கப்படவில்லே.

ஆங்கில ஆட்சி பரவின வரலாறு. மைசூர் அரசன் திப்பு சுல்தானுடனும் வலுமிக்க மறுட்டியருடனும் விருப்பமின்றியே கோண்வாலிஸ் தேசாதிபதி போராட நேர்ந்தது. நெப்போலிய யுத்தங்கள் தொடங்கியதாலும், நெப்போலியன் இந்தியாவில் கண் வைத்ததினுலும், பிரான்சியரின் சூழ்ச்சியினல் இவை நிகழ்ந்தன. உவெல்லெஸ்லிப் பிரபு தேசாதிபதியாக இருந்த காலத்தில் சங்கத்தின் நிலப்பரப்பு அதிகரித்தது. மறுட்டியரின் சூரையாடலே அடக்கி நிறுத்துவித்தான். இந்தியாவிலுள்ள போர்ப்பிரியமுள்ள சாதியினருக்கு மேனுட்டு போர் முறையை ஐரோப்பியப் படைத்தலேவரைக் கொண்டு பயிற்றுவித்தால் பெருந் தொகையினர் கொண்ட மிகச் சிறந்த படைகளே யுண்டாக்குதல் கூடுமெனப் பிராஞ்சியர் கண்டு கொண்டனர். அவர்களுடைய முன்மாதிரியைப் பிரித்தானியரும் பின்பற்றிப் பெருஞ் சித்திபெற்றனர்; பிரதானமாக, வர்த்தகச் சங்கத்தாரின் இந்தியப் படைகளேக்கொண்டே, (பிரித்தானியப் படைகள் சிலவற்றினுதவியுடன்) கிளேவும் உவெல்லெஸ்லியும் வெற்றிகள் பல பெற்றனர். சில இந்திய அரசர்கள் பிரித்தானியருடன் போரிட, அவர்களேத் தோற்கடித்த பின்பு அவர்களுடைய இராச்சியங்களேப் பரிபாலிக்கும் பொறுப்பை வர்த்த

கச் சங்கத்தார் ஏற்றனர். ஏனைய அரசர்களோடு அவர்கள் நிரந்தர உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு அவ்வரசர் களின் நிலங்களைச் சில நியமனங்களுக் கிணங்கப் பெற்றனர். பொதுவாக இந்நியமனங்கள் மேல் வருமாறு : எல்லா வெளி நாட்டு விஷயங்களும் பிரித்தானியர் அதிகாரத்துக் குட்பட் டிருக்க வேண்டும்; அரசரின் நாடுகள் நியாயமாக ஆளப்பட வேண்டும் ; இதன்பொருட்டு அவர்கள் சபையிற் பிரித்தானிய ஸ்தானீக ரொருவர் இருப்பர். சில சுதேச அரசர்களோடு மான்ய உடன்படிக்கைகள் செய்யப்பட்டன; அதாவது அவ் வரசர்களின் படைகள் வர்த்தகச் சங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்டும் அவர்களுடைய படைத்தலைவர்களுக்குட்பட்டு மிருக் கும்; ஆனல் அவர்களுடைய செலவுக்கான பணம் சுதேச அர சர்களாற் கொடுக்கப்பட வேண்டும். இத்தகைய இராச்சியங் களிற் சில, ஐதராபாக்கத்தைப் போன்று மிகப் பரந்தும், சில, மிகச் சிறு பரப்பேகொண்டும் உள.

1825-ம் ஆண்டளவில், ஆங்கில வர்த்தகச் சங்கமானது கங்கையாற்றின் படுகை முழுவ்வதையும், அநேகமாய்த் தென் னிந்தியா வனைத்தையும், மத்திய இந்தியாவில் மராட்டியருக் குரிய பிரதேசத்திற் பெரும் பகுதியையும், ஆட்சி புரிந்தோ, அல்லது தன்னதிகாரத்துக்குள் வைத்தோ வந்தது. இந்திய எல்லைக்குள், பாஞ்சாலமும் சிந்துப் பிரதேசமுமே பூரண சுதந் திரத்துடனிருந்தன. 1843-ம் ஆண்டில் இவ்வர்த்தகச் சங்கத் தார் வேண்டுமென்று புரிந்த ஒரேயொரு கொடிய போரின் பயனக சிந்து இவர்களுக் குரித்தாயது. அயல் நாடுகளுடன் வீண் போரிடுவதைத் தடுத்த அறிவாளியான இரஞ்சித் சிங் அரசனின் பின்னர், பாஞ்சால நாட்டு சீக்கியர் ஆப்கானிஸ் தானத்தவருடன் காரணமின்றிப் போரிட்டனர். இதனலே குழப்பங்களுண்டாக, செல்வம் நிறைந்த இந்நாடு 1846-ம் ஆண்டிலே பிரித்தானியராற் தமது ஏனைய பிரதேசங்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இந்தியாவின் கீழ்த் திசையிற் (வங்காளத்தின் எல்லைப் புறங்களில்) பர்மியர் சூறையாடுவது வழக்கம். இதனற் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில், இரு போர்களிட்ட பின், பிரித்தானிய வர்த்தகச் சங்கத்தார் பர்மியக்

கடற்கரையிலுள்ள மாகாணங்களைப் பிடித்துக்கொண்டனர். 1886-ம் ஆண்டில், பர்மாவைப் பிராஞ்சியர் பிடிக்கக் கூடாதென்னும் பிரதான நோக்கத்துடனேயே வடபர்ம ராச்சியம் பிடித்துக் கொள்ளப்பட்டது. நிர்வாகக் காரணங்களுக்காக பர்மா இந்தியாவோடு சேர்க்கப்பட்டது. 1937-ல் அதிக சுய ஆட்சி உரிமைகளோடு புது அரசியல் திட்டத்தின் கீழ் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது. இதுகாறும் இந்திய நிர்வாகத்தின் கீழிருந்த ஏடின் துறைமுகமும், தென் அரேபியாவிலுள்ள ஏடின் பாதுகாப்பு நாடும் இந்திய அரசாங்கத்தினின்றும் பிரிக்கப்பட்டு, குடியேற்றக் கந்தோரின் பார்வையில் விடப்பட்டன.

வர்த்தகச் சங்கத்தார் இந்தியாவை ஆண்டமை. இந்தியரின் வாழ்க்கைக்குக் கமமே எப்போதும் ஆதாரமாக இருந்தது; சனங்களிற் பெரும்பாலோர் "ரயத்து"க்கள் எனப்படும் கமக்காரரே. இந்தியக் கமக்காரன், சிறு பரப்புள்ள காணியிற் பயிர் செய்தான். விளைவிலொரு பகுதியை அரசனுக்கு அல்லது அரசாட்சியாருக்கு அளித்த பின்னர், தனக்கும் தன் குடும்பத்துக்கும் போதுமான அளவுக்கு விளைவுண்டாகும்படி அவன் பயிர் செய்தான். அரசாட்சியாருக்கு அவனளிக்கும் பங்கு "அரசிறை" (இந்தியாவில் "தீர்வை" அல்லது "வரி") எனப்பட்டது. இன்றைக்குச் சிறிது காலம் வரையில் இதுவே அரசாட்சியாரின் பிரதான வருவாயாக இருந்தது. முற்காலத்தில் அரசிறையைச் சேகரிக்கும் உரிமையை அதிகாரிகள் தம் கீழுத்தியோகத்தர்களுக் களித்தனர். முகலாயர் காலத்தில் அறவிடு முரிமையை இவ்வாறு அளித்தமை ரயத்துக்குப் பெருங் கஷ்டம் விளைத்தது. புடை யெழுச்சிக்காரரும் வழிபறி திருடரும் கொள்ளைக்காரரும் அவன் பொருளைச் சூரையாடினர்; நோய்கள் அவனைப் படுத்தின; மழைவளம் தேவையான காலத்தில் இல்லாமையினுலே பயிர்கள் பயன் தராதொழிந்தன. இவையெல்லாம் கமக்காரன் சகிக்க வேண்டிய வேறு கஷ்டங்களாம். இவற்றைக் கூடினவரையில் நீக்கவேண்டியதே எந்த அரசாட்சியாரினதும் பிரதான பிரச்சனையாகும். ஆனல் தற்காலத்திலே, வேறு நாடுகளிலுள்ள அரசாட்சியார் கவனிக்கும் பிரச்சனைகள் இந்தியாவில் இல்லை. ஏனெனில் ஒவ்வோ

ரிந்தியனும் ஒரு குடும்பத்தை அல்லது சாதியைச் சார்ந்தவன். அதனைச் சார்ந்தவருள் நோய்வாய்ப்பட்டவரை அல்லது முதுமையடைந்தவரை அக்குடும்பத்தவர் கவனித்து வந்தனர். அநேகமாய் ஒருவனுடைய தொழில் அவனுடைய சாதி, அல்லது குலத்தொழிலேயாகும். உதாரணமாக, பிராமணசாதியில் ஒருவன் பிறந்தால் அவன் பிராமணன்; சூத்திர அல்லது தீண்டாத சாதியில் பிறந்தால், அவன் முறையே சூத்திரன் அல்லது தீண்டாதவனைக் கருதப்படுவன். இந்துக்களைப் பற்றினவரையில், எவனும் தொட்டிற் பருவ முதல் இடுகாடு வரையில் சாதிக்கட்டுப்பாட்டுக் கிணங்கவே ஒழுக வேண்டியிருந்தது. அவன் சாதி அவன் சமயத்தையே ஆதாரமாகக் கொண்டது. இந்திய ரயத்துக்கள் என்றும் கொடிய வறுமை வாட்ட வாழ்ந்தார்கள் என்பதே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது.

பிரித்தானியர் ஆட்சி புரிந்த இடங்களிலெல்லாம் அவர்களளித்த நன்கொடைகள் நாகரிக வாழ்க்கைக்கு மூலாதாரமான நல்லொழுங்கும் பாதுகாப்புமேயாகும். இவற்றை இந்தியாவிற்ருபிக்க நெடுங்காலமாயிற்று. ஆனல், 1858-ம் ஆண்டளவில், சங்க ஆட்சி முடிவடைய இங்கிலேயேற்பட்டதென ஒருவாறு கூறலாம். இதன் பின், ரயத்து கவலேயின்றி உழைக்க முடிந்தது; ஆனற் சனத்தொகை அதிகமானதினலும் கடன் வாங்கும் வழக்கத்தை நீக்குதல் முடியாததினலும் அவனுடைய வறுமை குறையவில்லே. அடிமைகளே வைத்திருத்தல், நரபலி, சதி (சகமனம் அல்லது உடன் கட்டை யேறுதல்), ஆதியவற்றையும், தமக்குக் குரூரமாயும் அநாகரிகமாயுந் தோற்றிய வேறு சில பழக்க வழக்கங்களேயும் பிரித்தானியர் தடுத்துவிட்டபோதிலும், இந்தியரின் பண்டை நீதிச் சட்டங்களிலும் பழக்கவழக்கங்களிலும், கூடிய வரையில் அவர்கள் தலேயிடவில்லே. ஆனல், வர்த்தகச் சங்கத்தாரின் ஆட்சி முடியுமுன்னரே, பிரித்தானியர் சில புது விஷயங்களே—மேனுட்டுக் கைத்தொழில்கள்; உயர் வகுப்பினருக்கு மேனுட்டுக் கல்வி; கிறிஸ்தவ மதத்தைப் பரப்புதல்; திறமையான அரசாட்சி முறை என்பவற்றை—இந்தியா

வுக்குக் கொண்டுவந்தனர். ஆனால், வங்காளத்தில் காணி களை நிரந்தரமாக அமைத்ததும், இந்திய கலாச்சாரத்தின் பெருமையை விளங்காததும் அவர்கள் விட்ட குறைகளாகும்.

1857-ல் நடந்த எழுச்சி. 1848-ம் ஆண்டு முதலாக 1856-ம் ஆண்டு வரையிற் பிரதான தேசாதிபதியாக இருந்த டல்லெளசி என்பார் இந்தியாவில் மேனாட்டு நாகரிகத்தை மேன்மேலும் பரப்ப மிகவும் ஆத்திரப்பட்டார். அவர் புகை ரத வீதிகளையும் தந்தி முறையையும் இந்தியாவி லேற்படுத் தினர். "பிரித்தானியரின் கீர்த்தி இந்தியரின் மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்க" இவ்வாறு செய்வதாக அவர் கூறினர். ஆனால், துரதிர்ஷ்ட வசத்தினால், புது விஷயங்களைப் புகுத்துவதி லேற்பட்ட சில பிழைகள் 1857-ம் ஆண்டிற் புரட்சியை யுண்டாக்கின; புரட்சிக்காரர் ஆயுத பாணிகளாயிருந்தனர்; விசேடமாக இவர்கள் பிரித்தானிய வர்த்தகச் சங்கத்தாரின் இந்தியப்படைகள்; குரூரச் செயல் கள் பல நிகழ்ந்தன. இப்புரட்சி கடுமையுடன் அடக்கப் பட்டது; விசனிக்கத் தக்க பல பயன்களுண்டாயின. 1833-ம் ஆண்டில் மேனாட்டுக் கல்வியானது திட்டமாக இந்தியாவிற் போதிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு அவ்வாறே நடைப்பெற்றது; இதற்கு ஒரு காரணம், (பின்னொரு காலத்திற் கூறப்பட்டபடி), இந்திய அரசாட்சியின் ஒவ்வொரு பகுதியிலும் "இந்தியரை மேன்மேலும் அதிகமான பங்கு பெற ஏற்பாடு செய்யவேயாம்." ஆனால் 1857-ன் எழுச்சி யால், இந்தியர் அரசாட்சியிற் பங்கு பெறுவது திட்டமாகப் பல தலைமுறைகளுக்குத் தள்ளி வைக்கப்பட்டது. எனினும் இதனாலேற்பட்ட ஒரு நற்பயன், இந்திய அரசாட்சியானது, பிரித்தானியக் கிழக்கிந்திய வர்த்தகச் சங்கத்தாரும் இந்திய அரசாங்கமும் இணைந்து செய்த 'இரட்டை ஆட்சி'யினின்று நீக்கப்பட்டு பிரித்தானிய அரசரின் நேர்முகமான ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. 1858-ம் ஆண்டில், விக்ரோரியா ராணி யார் "இந்திய சக்கரவர்த்தினி" எனப் பிரசித்தஞ் செய்யப் பட்டார். பிரசித்தப் பத்திரத்திற் கூறப்பட்டுள்ள விசேடமான சில வாக்கியங்கள் பின்வருமாறு :—"இந்தியரின் பண்டை

உரிமைகளும் பழக்க வழக்கங்களும் நன்கு மதிக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடுகிறோம்.'' '' இந்தியாவில் சமாதான முறைகளைப் பின்பற்றிய தொழில்களை ஊக்குவிக்கவும், பொது நன்மைக்கும் நாட்டின் அபிவிருத்திக்குமான வேலைகளைத் தொடங்கவும் எமது இந்தியக் குடிகள் அனைவரின் நன்மைக்குமாக அரசாட்சி செய்யவும் எமக்கு மனமார்ந்த விருப்பம். அவர்களின் நற் சுகமே எமது பலம்; அவர்களுடைய திருப்தியே எமது நற்காவல்; அவர்களுடைய நன்றி மறவாமையே எமது பரிசு. எமக்குத் தற்காலம் உரிய இராச்சியத்தைப் பெருப்பிக்க நாம் விரும்பவில்லை; எமது ராச்சியத்தின் மீது படையெடுப்பதையோ அன்றேல் எமது உரிமைகளைப் பிறர் கவர முயல்வதையோ நாம் தண்டிக்காமல் விடோம்; ஆனால் பிறர் இராச்சியத்தை அல்லது உரிமைகளை அபகரிக்கவும் நாம் சம்மதியோம். (இந்திய) சுதேச மன்னர்களின் உரிமைகளையும், கௌரவத்தையும், நற்பெயரையும் எமது போன்றே பாதுகாப்போம். அவர்களும் எமது சொந்தப் பிரசைகளும், நாட்டின் சமாதானத்திலும் நல்லாட்சியினலுமாத்திரமே ஏற்படக்கூடிய நிலையான செல்வாபிவிருத்தியையும் சமூக முன்னேற்றத்தையும் அடைய நாம் வேண்டுகின்றோம்.''

ஆங்கில மன்னரின் ஆட்சி. '' இந்தியன் சிவில் செர்விஸ்'' என்னும் '' இந்திய உயர்தர உத்தியோகச் சேவை'' யில், அதற்கென நடத்தப்பெறும் விசேட போட்டிப் பரீட்சையிற் சித்தியடைந்த எவரும் சேரலாமென 1853-ம் ஆண்டிற் பிரசித்தப்படுத்தப்பட்டது; பிரித்தானியச் சருவ கலாசாலைகளிற் படித்த திறமைவாய்ந்த இளைஞர் சிலர் இதிற் சேர்ந்தனர். இவர்கள், இந்தியரின் பொருள் நிலைமையை விருத்தியடையச் செய்வதில் இந்திய அரசாட்சி கூடின திறமையுடனிருக்கப் பெரிதும் பாடுபட்டனர். '' **பொது சேவைகள்**'' பல புரியப்பட்டன. அதாவது: வீதிகள், வெட்டாறுகள், புகைரத வீதிகள் என்பன அமைக்கப்பட்டன; பஞ்ச காலத்திலுதவி புரிய தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன; நீர்ப்பாய்ச்சல் வசதிகள் உண்டாக்கப்பட்டன. நல்ல துறைமுகங்கள்



அரசாட்சியார் மாளிகை, டெல்லி

அமைக்கப்பட்டன. புதுப்பயிர்களான சணலையும், பருத்தியையும் ஏராளமாகப் பயிரிடுதலும், தேயிலை நடுதலும் அரசாட்சியாரின் சட்டத்துக்குட்பட்டு நடைபெற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டன; ஆட்சி முறையையும் குடிகளினிலைமையையும் சீர்திருத்துதற்கு வேறு பல கருமங்களுஞ் செய்யப்பட்டன. இந்நூற்றாண்டில், சாஸ்திரீய முறைப்படிக் கமஞ் செய்தல், "ரயத்துக்களின் குடிவாரம்" முதலியனவற்றை ஸ்திரப்படுத்துதல், ஐக்கிய நாணயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துதல் எனபவற்றினால், அரசாட்சியார் கமக்காரரின் நிலைமையை சீர்திருத்த முயன்றுள்ளனர். இதற்கெல்லாம் பெருந்தொகைகள், அநேகமாய்ப் பிரித்தானியரிடமிருந்து, கடனாகப் பெறப்பட்டன. அரசிறை முறையும் முன்னினும் பார்க்கத் தீர்மானமாயும் நேர்மையுடனும் இருக்குமாறு சீர்திருத்தப்பட்டது. சருவ கலாசாலைகளுக்காகப் பெருந்தொகை செலவழிக்கப்பட்ட போதிலும் ஆரம்பக் கல்விக்காகப் போதுமான பணம் செலவழிக்கப்படவில்லை. சுயேஸ் கால்வாயின் அமைப்பும் நீராவிக் கப்பல்களின் சீர்திருத்தமும் இந்தியாவை ஐரோப்பாவுக்கு முன்னிலு மண்மையிற்கொண்டு வந்தது. வியாபாரமும் விரைவில் விருத்தியடைந்தது. இந்தியர் பலர் அறியாமலே பெருநிலப் பரப்பாகிய இந்தியா ஒற்றுமை பூண்டு வந்தது.

நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம் இந்தியா

வின் பாதுகாப்பாகும். அதாவது, இந்தியாவுக்கு வடமேற்கி லுள்ள பிரதேசங்களிலிருந்தும் கடல் வழியேயும், குறைந்தள வுக்கு வடகிழக்கிலிருந்தும், வருபவரால் இந்தியா தாக்கப் படலாமென்பதாம். பகைவரின் கப்பல்களிலிருந்தும் கடற் கொள்ளைக்காரரிடமிருந்தும் இந்தியக் கடற்கரையைப் பிரித் தானியக் கடற்படை காப்பாற்றியது. இந்தியச் சமவெளி களிற் கொள்ளையடிக்கும் பொருட்டு வடமேற்கெல்லைப் புறத்தி லிருந்து படையெடுக்க எப்போதுஞ் சித்தமாயிருந்த, வலிமை யும் மூர்க்கமும் நிறைந்த சாதியினரிடமிருந்து நாட்டைக் காப்பதே பெரும் பிரச்சனையாக இருந்தது. இந்திய பாது காப்புக்காக அரசாங்கம் பலுக்கிஸ்தானைச் சேர்த்துக்கொண்டது மன்றி, அப்கானிஸ்தானுடனும் எல்லைப்புறச் சாதியினருடனும் சில போர்கள் புரிந்தது. இவ்வெற்றிகள் பாஞ்சால விவசாயி கள் துன்பமின்றி வாழ்வதற்கு ஏதுவாயிருந்தன.

இந்தியத் தேசிய உணர்ச்சியும் சுய ஆட்சியின் விருத்தி யும். மேனாட்டுக் கல்வியைப் பல ஆண்டுகளாகப் பயின்ற இந்தியர்களின் மனத்தில் தெளிவான மாற்றங்கள் பல உண் டாயின. வழக்கறிதல், வைத்தியம், பொறிஇயல், அரசாங்க சேவை முதலியவற்றில் மேனாட்டுக் கல்வியறிவுள்ள இந்திய மக்கள் பலர் ஈடுபடலாயினர். மேனாட்டு முறைகளின்படி நடாத்தப்பட்ட கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் அளிக்கப்பட்ட இக் கல்வியானது, பெரிய பிரித்தானியாவி லுள்ளன போன்ற சுய பரிபாலன ஸ்தாபனங்கள் இந்திய நாட்டிலும் அமைக்கப்படவேண்டுமெனக் கருதும்படி செய்து விட்டது. இந்தியர்களே சிவில் செர்விஸிலும், சட்டசபை களில் மந்திரிமாராகவும் அங்கத்தவராகவுமிருந்து உயர்ந்த பதவிகளை வகித்துத் திறம்பட நிர்வகிக்கக் கூடுமெனவும் காட்டிவிட்டது. மேனாட்டு நாகரிகமும் ஆங்கிலக் கல்வியும் இந்தியாவுக்குத் தீமைபயப்பதன்றி நன்மை பயப்பதொன்றல்ல வென்றும், பூர்வீக இந்திய தத்துவ சாத்திரங்களையும் நாகரிகத் தையும் கலைப் பண்பையும் வளர்ப்பதே மேலானதென்றும் அவர்களுள்ளே பலர் வற்புறுத்திக் கூறினர்கள். அதுவு மல்லாமல் எண்ணிக்கையற்ற பெரிய சமூகச் சிக்கல்கள் பல

நிலவுவதையும் அவற்றை நீக்கவேண்டுவதன் அவசியத்தையும் கவனித்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெரிய சமய இயக்கங்களும் எழுந்தன. அவற்றுள் பிரம்மசமாசம், ஆரிய சமாசம் ஆகிய இரண்டும் மிக முக்கியமானவை. இவைகள் எல்லாம் சேர்ந்து தங்களே ஒன்று படுத்துவதற்கும் பெரிதும் உதவியாயிருந்ததை இந்திய மக்களும் உணர்ந்தனர். இந்தியநாடு மிகப் பரந்ததாயிருப்பதால் மக்களிடமிருந்து பொது நல சேவையைப் பெரிதும் எதிர் பார்க்க வேண்டியிருந்தது. அச் சேவையானது கல்வி ஞானம் மிகப் பெற்றவர்களாலே செவ்வனே செய்யப்பட வேண்டியிருந்தது. அல்லாமலும், சகல பொதுசன காரியங்களும் பிற கைத்தொழில் வியாபாரங்களும் பெரும் பாலும் பிற நாட்டவர்களாலேயே நிர்வகிக்கப் படுகின்றனவென எதிர்த்தனர்.

இந்த உணர்ச்சிகள் மிகுந்ததன் பயனாக 1885-ஆம் ஆண்டில் "இந்தியத் தேசீய மகாநாடு" (இந்தியன் நாஷனல் காங்கிரஸ்) ஆரம்பிக்கப்பட்டது. அக்காலம் தொடங்கி ஒவ்வொரு ஆண்டிலும் அம் மகாநாடு கூடி சுயாட்சி திகழ்வதற்குச் சீர்திருத்தங்களும் சுதந்தர அதிகாரங்களும் பெறுவதற்கு வாதாடுகின்ற பலத்த அரசியல் ஸ்தாபனமொன்றை அமைப்பதாயிற்று. முதலாவதாக, அவர்கள் பகிரங்க சேவையில் உயர்ந்த உத்தியோகங்களிலெல்லாம் இந்தியர்களுக்கு இடம் கொடுக்கப்படல் வேண்டுமென்றும், பாராளுமன்ற ஸ்தாபனங்கள் அமைத்துக் கொடுக்கப்படல் வேண்டுமென்றும் வேண்டி நின்றார்கள். ஆயின், அதற்கு இணங்குவதில், இந்தியாவில் மட்டுமல்ல இங்கிலாந்திலுமே, பிரித்தானிய அரசாங்கம் காலந் தாழ்த்திக்கொண்டு வந்தது. அரசியல் சம்பந்தமான ஞானம் போதியளவுக்குப் பெற்றுக் கொள்ளாது கொள்கையளவிற்கூட மாறுபட்டிருக்கும் நாட்டுக்கு "பரோபகார ஏகாதிபத்தியம்," தான் உகந்தது என்று முன்னணியில் நின்ற அறிஞர்கள் சிலர் கருதினர்கள். கடைசியாக, இவ்வாதார விதிகளிரண்டையுமே அமைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதை அமைப்பதில்

காலந் தாழ்த்தப்பட்டதால் இந்தியர்களுட் பலருக்குப் பலமான அதிருப்தியுண்டாயிற்று. எனவே தீவிரவாதிகள் மகாநாட்டில் வன்மையும் ஆதிக்கமும் பெற்றவர்களானார்கள். தலைவர்களிற் பெரும்பாலானோர் பிரித்தானிய அரசாட்சியின் பயனாக இந்தியா பெற்றுக்கொண்ட பயனிலும் பார்க்க அது அடைந்த நஷ்டம் அதிகமென்று கருதினார்கள். ஆனால், சிலர் நயமும் ஏற்பட்டதென்பதை ஏற்றுக் கொண்டார்கள். அப்படிக் கூறியவர்களில் கோக்கலேயும் பனர்ஜியும் பிரசித்தி பெற்றவர் கள். திலகர் மேலும் தீவிரமான கொள்கைகளைப் பரப்புவ தற்குக் காரணராகத் திகழ்ந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பருத்தித் தொழிற்சாலைகள், இரும்பு உருக்குத் தொழில்கள், நிலக் கரிச் சுரங்கங்கள் யாவும் இந்தியாவிற் பரவத் தொடங்கின. இலன்காசையரிலிருந்து வரும் பிரித்தானிய பருத்திப் புட வைகள் இந்தியாவில் நன்கு விலையாயின. கைத்தொழில் புரிவோர், பிரித்தானிய அரசாங்கம் "தடையிலா வாணி பம்" செய்வதையே சார்ந்து நிற்கும் கொள்கையினைத் தீவிர மாக எதிர்த்து, இந்தியாவில் வளர்ந்து கொண்டிருக்கும் பருத்தி விருத்தியில் இலன்காசையர்ப் போட்டி ஏற்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுத்தார்களில்லையெனக் குறை கூறினார்கள். தொழிற்சாலைகளிலும் எந்திரசாலைகளிலும் வேலை செய்வோர் நியதிகள் பெரும்பாலும் தாழ்ந்த நிலையி லிருந்ததும் வருத்தத்திற்குரிய காரியமேயாகும்.

1892-ஆம் ஆண்டில் ஓரளவுக்கு அரசியற்றிருத்தம் அளிக் கப்பட்டது. 1909-ம் ஆண்டில் மோர்லி மின்ரோவின் திருத்தங் களின்படி மேலும் திருத்தங்களும் அதிகாரங்களும் அளிக்கப் பட்டன. ஆயின், அவற்றுள் எவையும் பொதுநோக்காளருக் குக் கூடத் திருப்தியளிக்க வில்லை. கோக்கலே முதலியோர் இன்னும் மிகுதியான திருத்தங்களுக்காக வாதாடினர். தீவிர வாதிகளின் தலைவரான திலகர் தமது கட்சியிலுள்ள இளைஞர் சிலர் வங்காளத்திற் செய்த அக்கிரமங்களைச் செய்யாதபடி அடக்கியாளவில்லை. 1914-ம் ஆண்டில் முதலாவது உலகப் பெரும் போர் தொடங்கியதும் இந்தியா முழுவதும் நேச தேசத்

தினர் கட்சியிற் சேர்ந்து போராடினர். காலாட்படை, பணம், பொருள் யாவற்றையும் போர் முயற்சிக்காகத் தாராளமாகக் கொடுத்துதவினர். பிரான்சு, மெசபொட்டேமியா, கிழக்காப் பிரிக்கா ஆதியா மிடங்களில் இந்தியப் படைகள் சென்று போராடின. இந்தியருட் பலர் இதன் பயனுகச் சுய ஆட்சி விரைவில் ஏற்படுமென்று எதிர்பார்த்திருந்தனர். ஆயின், 1919-ம் ஆண்டில் இந்திய அரசாங்கச் சட்டத்திற் கூறப்பட்ட



மகாத்மா காந்தி

"மொன்ரேகு-செம்ஸ்போர்ட்" திட்டம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுச் சட்டமாகும்வரை அவர்கள் எதுவும் பெற் றிலர். ஒவ்வொரு மாகாணத்திலும், அரசாட்சியாரின் பிரிவு கள் சில, மாகாணச் சபையின் அங்கத்தவரான இந்திய மந்திரி களிடம் ஒப்புவிக்கப்பட்டன. இவை, "மாற்றப்பட்ட அரசாட் சிப் பிரிவுகள்" எனப்பட்டன. ஏனைய "ஒதுக்கப்பட்ட"

பிரிவுகள் நிரந்தர உத்தியோகத்தர்களின் மேற்பார்வைக்குட் பட்டவை. ஆனல், அடக்குமுறைச் சட்டங்களும் சேர்ந்திருந் தமையால் இது காங்கிரஸ்காரருக்குத் திருப்தியளிக்கவில்லே. ஆகவே, புதியதாக இன்னெரு கிளர்ச்சி ஏற்படுவதாயிற்று. இந்தக் கிளர்ச்சியின் காரணகர்த்தாவாயிருந்தவர் " மகாத்மா காந்தி " எனப்படும் உலகம் போற்றும் உத்தமராவர். 1919-ம் ஆண்டில் பஞ்சாப் மாகாணத்தின் பகுதியிலுள்ள அமிர்தசாரி என்னும் இடத்தில் கிளர்ச்சி அதிகப்பட்டவுடனே அது கடு முறைகளால் அடக்கப்பட்டது. அடக்குமுறை தீவிரமாக இருந் தமையால் பலரிடையே கடுமையான ஆத்திரத்தை உண்டாக் குவதாயிற்று. தென்னப்பிரிக்கா, கெனியா முதலிய இடங்களி லிருந்த ஐரோப்பியர்கள் அவ்விடத்துக் குடியேறிய இந்தியச் சனங்களுடன் நடந்துகொண்ட முறை இதனே இன்னும் பலப் படுத்துவதாயிற்று.

மகாத்மா காந்தியின் இயக்கம் அஹிம்சையையே அடிப் படையாகக் கொண்டது. அதாவது சத்தியாக்கிரக முறையி லமைந்த சட்டமறுப்பு இயக்கமாகும். மதிப்பிட முடியாத தெய் வத்தன்மையும் தூய்மையும் சேர்ந்த அவருடைய தலேமையி லேயே காங்கிரஸின் ஆதிக்கம் நாடெங்கும் விரைவாகப் பரவு வதாயிற்று. இந்திய தேசிய இயக்கம் என்று கூறப்படும், மகாத்மா காந்தியும் தொண்டர்களும் செய்த தொண்டின் வெற்றி இப்புத்தகத்தின் இறுதி அத்தியாயத்தில் கூறப்படும்.

உதவிக் குறிப்புக்கள்.

இந்திய சரித்திரம் மிகப் பழமை வாய்ந்ததென்ப துண் மையே. இவ்வத்தியாயத்தில் அந்நாட்டின் சரித்திரத்திற் பிர தானமான விஷயங்கள் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறப் பட்டுள்ளன. ஐரோப்பியர் அங்கு முதன் முதலாக வந்தபோது அந்நாடு இருந்த தன்மையும் அதனேப் பிரித்தானியர் ஆட்சி புரிவதும் அதனுலேற்பட்ட அதிசயமான விளேவுகளும் விவரிக் கப்பட்டன. அந்நாடு, ஏறக்குறைய ஒரு நூருண்டு காலத் துக்கு ஒரு வியாபாரச் சங்கத்தினரின் ஆளுகைக்குட்பட்டிருந் தது. ஆனல் உண்மையில் 100 வருடங்களாகப் பிரித்தானிய அரசாட்சியார் தேசாதிபதிகளே இந்தியாவுக்கு அனுப்பியுள்ள

னர். நீதிச் சட்டத்தையும் ஒழுங்கான நிலைமையையும் ஏற் படுத்தலும், பொருளபிவிருத்திக்கான எண்ணிறந்த மாறுதல் களை உண்டாக்குதலும் பிரித்தானியரின் தொண்டாகவிருந் தது; அவர்கள் தம்மையுமறியாது, தேசீய உணர்ச்சியையும் சுயராச்சிய தாகத்தையும் உண்டாக்கினர். அரசாட்சி முறை யும் பிரித்தானிய உத்தியோகத்தர் ஆள்வதை வெறுப்புடன் கருதப்பட்டமையும் சுருக்கமாகக கூறப்பட்டுள்ளன.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1600. கிழக்கிந்திய வர்த்தகச் சங்கத்தாருக்கு வியாபார உரிமைப் பத்திரம் அளிக்கப்பட்டது.

1763. பிராஞ்சியர் இந்தியாவிற் தமக்குரிய பிரதேசங் களிலிருந்து துரத்தப்பட்டனர்.

1765. பிரித்தானியரின் இராச்சியம் இந்தியாவில் விசால மடையத் தொடங்கியது. (வங்காள டீவானி).

1784. "பிட்" என்பவர் ஏற்படுத்திய "இந்திய சட்டம்". "இரட்டையதிகார" முறை.

1833. மேனாட்டுக் கல்விமுறைப்படி இந்தியாவிற் படிப் பிக்கத் தொடங்கினர்.

1857. இந்திய எழுச்சி.

1858. கிழக்கிந்திய வர்த்தகச் சங்கம் நீக்கப்பட்டது. பிரித் தானிய அரசர் இந்தியாவை ஆளும் முழு உரி மையைப் பெற்றனர்.

1885. "இந்திய நாஷனல் காங்கிரஸ்" ("இந்தியத் தேசீய மகாநாடு") தொடங்கப்பட்டது.

1919. சுயராச்சியம் ஓரளவுக்குக் கொடுக்கப்பட்டது. "இரட்டையாட்சி" முறை.

16. ஐரோப்பியரின் செல்வாக்கு பரவினமை

உலகத்தில் 1815-ம் ஆண்டுக்குப்பின் பிரித்தானியாவின் தானம். நெப்போலியப்போர் முடிவடைந்த காலத்தில் ஐரோப்பாவுக்கு வெளியிற் பிரித்தானியாவே வல்லரசுகளுட் தலைமைபெற்று விளங்கியது. அதற்குரிய பிரதேசங்கள், வட அமெரிக்காவிலும், இந்தியாவிலும், மேற்கிந்தியத் தீவுகளிலும், ஆப்பிரிக்க, ஆஸ்திரேலியக் கடற்கரைகளிலும் இருந்தன. நெப்போலியப் போர் நிகழ்ந்த காலத்தில், ஒல்லாந்தருக்குரிய குடியேற்ற நாடுகளைப் பிரித்தானியா பிடித்துக்கொண்ட போதிலும், 1815-ம் ஆண்டில் முனைக்குடியேற்ற நாடு, இலங்கை நீங்கலாக, ஏனையவற்றை அது ஒல்லாந்துக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டது. குடியேற்ற நாடுகள் பழைய முறைப்படியே சிறிது காலம் ஆளப்பட்டு வந்தன. ஆனால், அடிமைகள் விடுதலை பெறுவதென்றும், தடையற்ற வணிகம் நடத்துவதென்றும் தீர்மானித்த பிறகு "தாய்நாட்டின் நன்மைக்காகவே குடியேற்ற நாடுகள்" என்னுங் கொள்கை கைவிடப்பட்டது. ஐரோப்பிய வமிசத்தவர் குடியேறிய நாடுகள், கனடாபோன்று சுயராச்சிய நிலைபெறும் வரையில்தான் அவை பிரித்தானிய சாம்ராச்சியத்திற் சேர்ந்திருந்து பின்னர் சமாதானமாகப் பிரிந்துப்போகும் எனப் பலர் கருதினர். இலங்கை, முனைக்குடியேற்ற நாடு, ஜிப்ரால்தர்போன்ற சில குடியேற்ற நாடுகள், இந்தியாவைக் கடற்படை காத்ததற்குப் பிரதானமானவை ; மற்றவை பிரயோசனமான வியாபார அல்லது கடற்படை ஸ்தானங்கள். ஒரு காலத்தில் மிகப் பிரதானமெனக் கருதப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் தமது உயர்ந்த செல்வ நிலைமையைத் தீவிரமாக இழந்தன. பிரித்தானியச் சாம்ராச்சியத்தை இன்னமும் பெருப்பிக்காமலிருப்பதே அந்நாட்டரசியல் நிபுணரின் பெருங் கவலையாக விருந்தது.

பிரித்தானியப் பொருட்களை ஐரோப்பாவுக்குப் புறம்பான இடங்களில் விற்பதற்கான இடங்களைப் பிரித்தானிய வியாபாரிகள் தேடினர் ; அப்பொருட்களை ஆக்குதற்குச் செப்ப

னிடப் பெருத மூலப் பொருட்களைப் பிரித்தானியத் தொழிற் சாலைகளின் முதலாளிகள் தேடினர்; இக்காரணங்களினால் பிரித்தானியச் சக்கராதிபத்தியம் விரைவில் விருத்தி யடைந்தது. இவ்வாறே ஏனைய ஐரோப்பிய நாடுகளுமென்க.

ஆப்பிரிக்காவில் ஐரோப்பியர் புகுந்தமை. 1820-30-ம் ஆண்டுகளுக்கிடையே, ஆப்பிரிக்காவின் வடகரையிலுள்ள அல்ஜீரியாவின் கருமங்களிலே **பிரான்சு** இழுபட்டு, 1848-ம் ஆண்டளவில் அந்நாடு முழுவதையும் தன தாக்கிக்கொண்டு இறுதியில் அதனை ஒரு பிராஞ்சிய மாகாணமாக்கிவிட்டது. ஐரோப்பாவில் தன்னுதிக்கத்தைப் பெருப்பிக்க அது கொண்டிருந்த பேரவா, பிராஞ்சிய ஜெர்மானியப் போரிலேற்பட்டத் தோல்வியினால் தடைபட, பிராஞ்சியர் குடியேற்ற நாடுகளைத் தாபிப்பதில் ஊக்கங்கொள்வாராயினர். பிராஞ்சிய வியாபாரிகளும் ஆராய்ச்சியாளரும், அல்ஜீரியாவிலிருந்தும் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையிலிருந்த தம் பழைய வியாபாரத் தானங்களிலிருந்தும் விரைவுடன் உள்நாடு சென்று, அங்கங்கிருந்த சுதேசச் சிற்றரசர்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டு, வடமேற்காப்பிரிக்காவின் பெரும் பகுதியைப் பிராஞ்சியராட்சிக் குட்படுத்தினர். 1881-ம் ஆண்டில், அல்ஜீரியாவுக்குக் கிழக்கிலுள்ளதும், பெயரளவுக்கே துருக்கிக் குட்பட்டிருந்ததுமான தூனிசை அவர்கள் பிடித்துக் கொண்டனர். இதை இத்தாலியர் மிகவும் வெறுத்தனர். இதற்கு ஈராண்டுகளுக்குப் பின்னர், அவர்கள் மடகாஸ்கர் என்னும் பெருந்தீவு தம் பாதுகாப்புக் குட்பட்டதெனக் கூறி, 1896-ம் ஆண்டில் அதனையும் பிடித்துக் கொண்டனர்.

பனை யெண்ணெய் போன்ற உஷ்ணப் பிரதேசப் பொருட்களைப் பெறுதற்கு ஆப்பிரிக்க நாடுகள் பிரதானமென்பதை ஜெர்மானிய வியாபாரிகள் உணர்ந்து, மிகப் பரந்த பிரதேசங்களைத் தமதாக்கிக் கொண்டனர். இதனைப் பிரித்தானிய அரசாட்சியார் அநுதாபத்துடன் கவனித்தனர்; ஆனால் பிரித்தானியரும் பிரித்தானிய வியாபாரிகளும், பொதுசன ஆதரவுடன் ஆப்பிரிக்கப் பெருநிலப் பரப்பினுள்ளே தம்மவரும் புகவும் அந்தப் பிரதேசங்களை தமக்குரியனவாக்கவும் பிரித்தானியத் தலைவர்களைக்


போர்த்துகல்
லிபியா
அரேபியா
எகிப்து
பிர். மே. ஆப்பிரிக்கா
ஆங்கில-எகிப்திய சூடான்
அபிசீனியா
நைஜீரியா
காமரூன
பிர. பிரதேசமாய்பிரிக்கா
பெல்ஜியன் கொங்கோ
காபின்டா
அங்கோலா
ரொடீசியா
தே.மே. ஆப்பிரிக்கா
நன்னம்பிக்கை முனை
மடகாஸ்கர்
பிரித்தானிய
பிரா.
போர்த்து.
ஸ்பே.
பெல்ஜிய
இத்தாலிய
சுயராச்சிய
ஆப்பிரிக்கா
மைல்கள்
0 500 1000 1500 2000

[எமரி வாகர் லிமிடெட்.

கட்டாயப்படுத்தினர். ஆரோக்கியமான உணவைத் தகரங் களிற் கொண்டுபோகக் கூடுமென்பதும் வைத்திய சாத்திரத் தின் அபிவிருத்தியும் நெடும் பயணங்கள் செய்தலைக் கூடுமான தாக்கின. கீர்த்திபெற்ற **லிவிங்ஸ்டன்** என்ற பாதிரி, ஆங்கி லேய-அமெரிக்கன் ஸ்டான்லி, பேக்கர், ஸ்பீக் ஆகியோர் அது காறும் ஐரோப்பியருக்கு நூதனமாயிருந்த அக்கண்டத்தின் உள்நாட்டுப்பகுதிகளைப்பற்றி யாராய்ச்சி செய்து தாமறிந்தவற் றைத் தெரிவிப்பதில் அருமையான ஆரம்பவேலை செய்தனர். ஆப்பிரிக்காவின் கிழக்கு, மேற்கு, தென்மேற்குப் பகுதிகளிலே உள்ள சில பிரதேசங்களை ஜெர்மனி தனக்குக் கீழ்ப்படுத்தியது. மத்திய ஆப்பிரிக்காவிலே பிரித்தானியர் பரந்த பிரதேசங்களைப் பெற்று, மேற்குக்கடற்கரைத் தாபனங்களிலிருந்து நைஜீரியா வரையிலும். கிழக்குக் கரைத் தாபனங்களிலிருந்து கேனியா, யுகாந்தா வரையிலும் உள்நாடு நோக்கிச் சென்றனர்.

பிராஞ்சியரின் முயற்சியினலே 1869-ம் ஆண்டிற் சுயேஸ் கால்வாய் வெட்டப்பட்டது. இது இந்தியாவுக்குப் புதிய, கிட் டிய, பாதையாகையினல் அதனை யடைதற்கு மிகப் பிரதான மானவொரு பாதையாக இருந்தது. எகிப்தையாண்ட **கேடிவ் இஸ்மேல்** என்பான் நாட்டைச் சீர்கேடான முறையில் ஆண்டு, மனம்போனபடி பணத்தைச் செலவழித்ததினல் 1876-ம் ஆண் டில் தான்பட்ட கடனை இறுக்கச் சக்தியற்றவனனன். அப் போது, சுயேஸ் கால்வாய்ச் சங்கத்தில் அவனுக்கிருந்த பங்கு களைப் பிரித்தானிய அரசாட்சியார் விலைகொடுத்து வாங்கினர். இந்தக் கேடிவ் பெருந்தொகைகளைக் கடனகப் பெற்றிருந்தமை யினல், எகிப்திய நிகழ்ச்சிகளிற் பிரித்தானியரும் பிராஞ்சிய ரும் தலையிடவேண்டியதாயிற்று. 1879-ம் ஆண்டில் பெயரள வில் எகிப்தின் மேலதிகாரியான துருக்க சுல்தான், இஸ்மேலைக் "**கேடிவ்**" பதவியினின்றும் நீக்கி, அவன் மகனும் இளவரச னுமான தியூபிக்கைக் "கேடிவ்" ஆக நியமித்தான். இதற்கு மூன்ருண்டுகளுக்குபின், எகிப்திய படை அராபி பாஷா என் பவனைத் தலைவனகக்கொண்டு, குழப்பஞ் செய்தது ; பிற நாட் டினர் பலர் கொலை செய்யப்பட்டனர். அப்போது பிராஞ்சியர் எதுவும் செய்ய மறுத்துவிட்டனர் ; ஆனற் பிரித்தானியர் ஒரு

படையனுப்ப, அப்படை அராபி பாஷாவைத் தோற்கடித்தது ; அராபி பாஷா இலங்கைக்கு ஒரு கைதியாக அனுப்பப்பட்டான். புதிய கேடிவுக்குப் புத்தி கூறுதற்கு **சேர் எவலிங் பேரிங்** (பின்பு குரோமர் பிரபு) என்பவர் பிரித்தானிய அரசாட்சியாரின் பிரதான தூதனுக எகிப்துக்கு அனுப்பப்பட்டார். இவர், பிரித்தானிய உத்தியோகத்தர்களின் உதவிகொண்டு எகிப்தின் அரசாட்சி முறையை முற்றுகச் சீர்திருத்தினர் ; எகிப்திய படைகளும் சீர்திருத்தியமைக்கப்பட்டன. இது நிற்க, எகிப்திற்குத் தெற்கேயுள்ளதும் அந்நாட்டவரால் வெல்ல முடியாததுமாகிய ''சூடான்'' இல், 1881-ம் ஆண்டில், 'மாதி' என்னும் சமயப்பித்தனொருவன் இஸ்லாமியக் கிளர்ச்சி உண்டாக்கினன். அங்கிருந்த எகிப்திய காவற்படைகளை அழைத்து வருதற்கனுப்பப்பட்ட கோடன் என்னும் ஆங்கிலப் படைத்தலைவர் 1885-ம் ஆண்டில் காட்டூமில் கொல்லப்பட்டார் ; இதன்பின், 'மாதி'யின் இரக்கமற்ற ஆட்சிக்குச் சூடான் விடப்பட்டது. அதன் சனத்தொகையில் ஆறில் ஐந்து பங்கு கொலையினுற் குறைந்தது. ஆனுல் எகிப்தைப்பற்றினமட்டில் அது வறுமைக்கும் நீதி பிறழ்ந்த அரசாங்கத்துக்கும் இரையாகாது தப்பியது. அரசாட்சியாரின் வரவு செலவுக் கணக்குகள் ஒழுங்காயிருந்தன ; படை, திறமையுடனும் நற்றலைவர்களின் கீழுமிருந்தது. நைல்நதியின் நீரைத் தக்கபடி சேமித் துபயோகித்தமையினுலும், பருத்தி விளைவினபிவிருத்தியினுலும், செல்வம் வளர்பிறைச் சந்திரன்

செசில் ரோட்சு

போல நாளுக்கு நாள் அதிகரித்தது. போர்த்துகீசரும் நெடுங் காலமாகத் தமக்குட்பட்டிருந்த கடற்கரைப் பிரதேசங்களே உள் நாட்டில் பெருப்பித்து வந்தனர்; ஆப்பிரிக்காவின் நடுவிலுள்ள கொங்கோ நதி பாயும் பரந்த பிரதேசம், பெல்ஜிய அரசனான லியோப்போல்டு மன்னனின் ஆட்சிக்களிக்கப்பட்டது.

எனவே, அநேகமாய் ஆப்பிரிக்கா முழுவதும் ஐரோப்பிய ராட்சிக்குட்பட்டதெனக் கூறலாம். இந்தப் பங்கீடு, சமாதான முறைகளினூற் பல மாநாடுகளிற் செய்யப்பட்டது.

அடிமைகளின் கூட்டப் பயணம்

குரூரமான அடிமை வியாபாரத்தை நிறுத்தப் பிரித்தானியர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் முயன்று வந்தனர். 1890-ம் ஆண்டளவில் இதற்குதவிபுரிய ஏனைய ஐரோப்பிய வல்லரசுகள் எல்லாம் ஒத்துக்கொண்டன; ஒரு காலத்தில் ஆப்பிரிக்காவிலெங்கும் பெருந்துயர் விளைத்ததும் மானிட சாதியினருக் கொவ்வாததுமான இவ்வியாபாரம் இதன்பின் அநேகமாய் இல்

லாது போயிற்று. சுதேசக் கூட்டத்தினரிடையே போர்கள் நடைபெறுவதும் நின்றுவிட்டது; பல இடங்களில்—அநேக மாய்ப் பிரித்தானிய ராளுமிடங்களில் பாடசாலைகள் ஸ்தாபிக் கப்பட்டன. ஜெர்மானியர் தங்குடியேற்ற நாடுகளைக் கொடுங் கோன்மையுட னுண்டுவந்தனர். முதலாமுலகப் போரின்பின் அவைகள் சர்வதேச சங்கத்தின் அதிகாரத்தின்கீழ் 'பொறுப் பாட்சி நாடுகளாக' வேறு தேசங்களுக்குக் கொடுக்கப்பட்டன. லியோப்போல்டு மன்னன், கொங்கோ பிரதேசத்தைத் தன் சுயநன்மைக்காக ஆண்டுவந்தான்; சுதேசிகள் பல அநீதி களுக்காளாயினர். அவன் 1908-ம் ஆண்டிலிறந்தபோது, கொங்கோவினுட்சியைப் பெல்ஜிய அரசாட்சியாரே ஏற்றனர்; அதன்பின் பெருஞ் சீர்திருத்தம் ஏற்பட்டதெனலாம். குடி களைப் பிராஞ்சியப் பிரசைகளாக்குவதே பிரான்சியர் பின்பற் றும் முறை; என்ருலும், நாகரிகமற்ற சில சாதியினரைப் பற்றின மட்டில் அவ்வாறு செய்தல் அநேகமாய் இயலாத காரியமே.

பிரித்தானியர் முறையோ வேருனது; பிரித்தானிய உத்தி யோகத்தரின் மேற்பார்வையிலே கூடியவரையில் சுதேச பழக்க வழக்கங்களுக்கேற்க சுதேசச் சிற்றரசர்மூலம் ஆளுவதே அவர் கள் வழி. பிரித்தானியர் வீதிகளையும் புகைரதப் பாதைகளையும் திறந்தார்கள். பொதுசன சேவைக்குரிய வேறு கருமங்களைச் செய்தார்கள்; வட ஆப்பிரிக்காவிற் கொக்கோ, கேனியாவிற் கோப்பி, எண்ணெய்ப்பனை ஆதியனவற்றின் விளைவையும் வேறு பல வியாபார விஷயங்களையும் விருத்திசெய்ய அவர் கள் அதிகம் முயன்றுள்ளனர். பொதி சுமக்கும் பிராணிகளைக் கடித்து அவற்றை மாய்க்கும் நஞ்சுள்ள ''ற்ஸெற்ஸி'' ஈக்கள் நிறைந்த நிலப்பிரதேசங்கள் இங்கேயுண்டு. புகைரத வீதிக ளமைப்பது கஷ்டமே யெனினும், அவை யமைக்கப்பட்டன. உள்நாட்டுப் பொருட்களை கடற்கரைக்குக் கொண்டுவருவதைப் புகைரத வீதிகளும், சாதாரண வீதிகளும் சாத்தியமாக்கின; துறைமுக வசதிகள் அப்பொருட்களைத் தொழிற்சாலைக்கார ருக்கு அனுப்ப உதவின. இத்தகைய பொதுசன சேவைகளுக் குத் தொகையான பணந்தேவை; அது பிரித்தானிய முதலி

னுல்—அதிகமாக, அரசினர் கடன் கொடுப்பதினுற்—பெறப் பட்டது.

ஆப்பிரிக்காவின் பெரும் பகுதியில், மக்கள் காட்டுமிராண்டி களாகவும் அறியாமை இருள் படிந்தவர்களாகவும் இருந்தார் கள். ஆனல் எகிப்தில் இப்படி இல்லே. 1896-1898-ம் ஆண்டு களுக் கிடையே பிரித்தானிய எகிப்தியப் படைகள் சூடானே மீண்டும் வென்று, அதனே சமய வெறிபிடித்தவர்களினின்றும் மீட்டன. அது முதலாகச் சூடான் சனத்தொகையிலும் பொரு ளிலும் விருத்தியடைந்து வருகின்றது. சுயராச்சியம் வேண்டி நின்ற ஒரு கட்சி எகிப்திலே தோன்ற, முதலாவது உலகப் பெரும் போர் நடந்த காலத்திலே, எகிப்து துருக்கியின் அதி காரத்துக் குட்பட்டதில்லேயென்றும், மற்று, பிரித்தானியரின் பாதுகாப்புக்குட் பட்டதென்றும் பிரித்தானியா பிரசித்தப்படுத் தியது. ஆனுற் சமாதானஞ்செய்யப்பட்ட பின்னர், அந்நாட்டி னின்றும் படிப்படியாக விலகவும் அரசாட்சியை எகிப்தியரே நடத்தவிடவும் பிரித்தானிய அரசாட்சியார் தீர்மானித்தனர்.* இதனுற் கஷ்டமேற்பட்டபோதிலும் அவ்வாறே செய்யப்பட் டது. 1922-ம் ஆண்டில் உடன்படிக்கை யொன்று செய்யப் பட்டபோதிலும் எகிப்திய தேசீயவாதிகளுக்கு அது முற்றிலும் திருப்தியளிக்கவில்லேயாதலால் பிரித்தானியருக்கு எதிரான இயக்கமொன்று நிலவுவதாயிற்று. 1937-ம் ஆண்டில் பிரித் தானியர் சுயேஸ் கால்வாயில் படைகளே நிறுத்தி வைக்கும் உரிமையுடன் கூடியதாய் ஓரளவுக்குத் திருப்திதரும் உடன் படிக்கையொன்று செய்யப் படுவதாயிற்று. 1939-ம் ஆண்டில் யுத்தம் தொடங்கியபோது எகிப்தை ஜெர்மனியரும் இத்தாலி யரும் தாக்கவிடாமல் பிரித்தானியர் காப்பாற்றினர். அம் முயற்சியில் எகிப்திய அரசாங்கமும் போதிய அளவுக்கு உதவி யாயிருந்தது.

பின்வரு மத்தியாய மொன்றில் எடுத்தாளப்பட விருக்கும் சில சம்பவங்களின் நிமித்தம் பிரித்தானியர் சுயேஸ் கால்வாய்ப் பிரதேசத்தை வைத்திருப்பதோடமையாது அங்குள்ள பட்டாள

* இப்போது எகிப்து பூரண சுயராச்சியம் பெற்றுள்ளது.

சேவையையும் பெலப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது; அங்நியப் படையினரைத் தம் நாட்டில் மேலுமினி வைத்திருக்க வேண்டிய அவசியம் முடிவுறு காலத்தை ஆவலுடன் எதிர் நோக்கியிருந்த எகிப்தியருக்கு இது வெகு ஆத்திரத்தை மூட்டி விட்டது. எனவே 1951-ல் பெருங் கலக மேற்பட்டு சில பிரா ணபத்துக்களும் நிகழ்வுறலாயிற்று. இதையடுத்து விரைவில் எகிப்தியர் தம் மன்னர் பரூக்கைப் பதவி நீக்கி, அரசரைப் பதவியினின்றும் துரத்திய நேகுவிப் தளாதிபதியின் தலைமை யின் கீழ் எகிப்தை ஒரு குடியரசாக்கி, அவரையே நாட்டின் ஜனதிபதியு மாக்கினர். சுயேஸ் கால்வாய்ப் பிரதேசத்தைப் பற்றியும் சுடானைப் பற்றியும் பிரித்தானியருடன் ஒரு சமரச தீர்மானத்திற்கு வர இவர் முயற்சித்தனர். சுடான் பிரச்சனையை இரு திறத்தினரும் சமரசமாய்த்தீர்த்துக் கொண்டனர். சில வருட எல்லையுள் சுடானியர்கள் தம்மலுவல்களைத் தாமே கையாண்டு, அவர்கள் தாம் விரும்பியவாறு எகிப்துடன் சேரவோ, விடவோ, அவர்களுக்குப் பூரண சுதந்திரம் வழங் கப்பட வேண்டுமென இரு பாலரும் இசைந்து கொண்டனர். எனினும் 1952-ன் முடிவிலும் சுயேஸ் கால்வாய்ப் பிரச்சனை தீர்த்துக்கொள்ளப்படவில்லை.

ஆசியாவில் ஐரோப்பியக் குடியேற்ற நாடுகள். பத்தொன் பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திற் பிரித்தானியர் இந்தியா வையும் இலங்கையையும், சீனத்துடன் கிழக்கிந்திய வர்த்தகச் சங்கம் செய்துவந்த வியாபாரத்தைப் பாதுகாத்தற் பொருட்டு சிறுதீவுகளான சிங்கப்பூரையும், ஹொங்கோங்கையும், தம் வசம் வைத்திருந்தனர். ஹொங்கோங், வியாபாரம் தீவிரமாக நடை பெறு மொரு துறைமுகமாயிற்று. 1939-ல் இத்தீவும், 1898-ல் குத்தகையாகப் பெற்றுக்கொண்ட சீன நிலப் பரப்புகளும் 850,000 மக்களைக் கொண்டிருந்தன. 1941-ன் இறுதியில் பிரித்தானியருடன் யப்பான் போர் செய்தபோது ஹொங்கோங் தீவை விரைவிற் பிடித்தது. ஆனால் யப்பான தோற்கடிக்கப் பட்டபோது திருப்பிக்கொடுக்க வேண்டியதாயிற்று. யுத்தத் தின் பிறகு பல்லாயிரக்கணக்கான சீனர், சீனத்திலுள்ள புதிய கொம்முனிஸ்ட் அரசாங்கத்துக்குப் பயந்து இத்தீவுக்கு ஓடினர்.

இதனால் 1956-ன் முடிவில் இதின் சனத்தொகை 25 இலட்ச மாகியது. சிங்கப்பூரும் மிகப் பிரதானமாயிற்று. நிற்க, மலய சாதியினர் கடற்கொள்ளையையே வழக்கமான தொழிலாகக் கொண்டிருந்ததினால் அதனை ஒழிக்கவேண்டியிருந்தது. இது பெருந்தொல்லை விளைத்தது; ஆனால் இறுதியில், மலய தீபகற்ப அதிகாரிகளே பிரித்தானியரைத் தம்மைப் பாதுகாக்குமாறு வேண்டினர்; 1895-ம் ஆண்டில் "ஐக்கிய மலய நாடுகள்" என்னும் பெயருடன் அந்நாடுகள் ஒன்று சேர்ந்தன. அது முதலாகப் பேரபிவிருத்தி யேற்பட்டுள்ளது. ஊதியம் அளிக்கவல்ல தகரச் சுரங்கங்களில் வேலை நடைபெறுகின்றது; பரந்த றப்பர் தோட்டங்கள் அமைக்கப்படலாயின. சோம்பேறிகளான மலாயர்கள் செய்ய விரும்பாத தொழில்களைச் செய்வதற்காக ஆயிரக்கணக்கான இந்தியரும் சீனரும் வந்து சேர்ந்தனர். "நாங்கள் செல்வம் சேகரித்தற்கு வசதியாக, பிரித்தானியராகிய நீங்கள் இங்கு வந்திருத்தல் எங்கள் அதிர்ஷ்டமே" என்று சீனன் ஒருவன் கூறியதாகச் சொல்லப்படுகின்றது. இத்தீபகற்பம் திறக்கப்பட்டதும் பல அபாயங்களும் கஷ்டங்களும் வந்தெய்தின வெனினும் அவையாவும் மேற்கொள்ளப்பட்டன. 1942-ஆம் ஆண்டில் யப்பானியர் திடுமெனப் போர் தொடுத்துக் கைப்பற்றுமளவும் மக்கள் செவ்விய முறையிலே செல்வமும் சீரும் பெற்று வாழ்ந்து கொண்டிருந்தார்கள். யுத்தத்தின் போது மலாயா யப்பானால் பிடிக்கப்பட்டது. ஆனால் பிரித்தானியர் உதவியுடன் ஓர் எதிர்ப்பு இயக்கம் சீனக் கொம்முனிஸ்டுகளால் காட்டுப் பிரதேசங்களில் இருந்தது. யுத்தத்தின் முடிவில் சீனம் கொம்முனிஸ்ட் நாடாகியது. இந்த எதிர்ப்பு இயக்கம் றப்பர் உற்பத்தி, தகரச் சுரங்கம் என்னும் பெரிய தொழில்களை நடத்துவதற்காகத் திரும்பிய பிரித்தானியருக்கு எதிராக மாறியது. பிரித்தானிய அரசாங்கம் பெரும் படைகளை அனுப்பிய போதினும் இவ்வியக்கம் நடந்துகொண்டேயிருந்தது. ஆனால் 1956-ன் இறுதியில் மலாயாவின் பல பாகங்களிலும் அதனால் விளையும் அபாயம் குறைந்துவிட்டது. சட்ட ஒழுங்கையும் அது அவ்வளவு பாதிக்கவில்லை.

போர்க்காலத்தில் யப்பானியர் மலாயாவைக் கைப்

பற்றிக் கொண்டனர் எனினும், பிரித்தானியரின் உதவியுடன் அங்குள்ள தூர காட்டுப் பிரதேசங்களில் சீன பொதுவுடமைவாதிகளால் நிகழ்த்தப் பெற்ற எதிர்ப்பு இயக்கத்தை அடக்க இவர்களுக்கு ஒரு போதும் முடியவில்லை. போர் முடிவுற்றதும் சீனு ஒரு பொதுவுடைமை நாடாகினமையால் மலாயாவின் றப்பர், தகரத் தொழில்களை நடாத்த அங்கு வந்துள்ள பிரித்தானியருக் கெதிராக இவ்வெதிர்ப்பியக்கம் மாறிற்று. பிரித்தானிய அரசாங்கம் இதற் கெதிராய்ப் பல துருப்புக்களை அனுப்பிற்றெனினும், இவ்வெதிர்ப்பு தொடர்ந்திருந்துகொண்டே வந்தது. 1956-ன் முடிவில் இவ்வெதிர்ப்பு முன்னெயிலும் மிகவாய் ஆபத்துக் குறைந்து சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் குந்தகம் விளைக்கும் இயக்கமாக இருப்பது நின்று விட்டது.

பிரித்தானியர், டச்சரிடமிருந்து அழகான இலங்கைத் தீவைக் கைப்பற்றிய போது, தீவின் மத்தியில் மலைகளின் நடுவே இருந்த சுயேச்சையான கண்டிராச்சியத்தை ஒழிந்த பகுதிகளெல்லாம் தம்வசம் இருப்பதை அறிந்தனர். தீவின் நடுவில் மலைகளின் மத்தியிலிருந்த கண்டிராச்சியம் 300 ஆண்டுகளாக தன்னைக் கைப்பற்ற முனைந்த போர்த்துக்கீசரையும் டச்சரையும் வெற்றிகரமாக எதிர்த்தது. இருந்தும், 1815-ல் கண்டிப் பிரபுக்களுடன் செய்து கொண்ட உடன் படிக்கையின்படி, கண்டி அரசனை நாட்டை விட்டு ஓட்டி, கண்டியைப் பிரித்தானியர் கைப்பற்றிக் கொண்டனர். அக் காலம் தொடக்கம், ஒன்றிரண்டு புரட்சிகளைத் தவிர, இலங்கையின் சரித்திரம் குழப்பமற்றதாகும். இலங்கையில் வசிக்கும் பெரும்பான்மை இனமாகிய சிங்களரும் தமிழரும் பிரித்தானிய ஆட்சியில் திருப்தி கொண்டவர்போற் காணப்பட்டார்கள். பிரித்தானியர் முதலில் கோப்பி உற்பத்தியையும், இது ஒரு பூச்சியினற் சிதைவுற்றபோது, இதற்குப் பதிலாக உயர்ந்த மலைகளில் தேயிலை உற்பத்தியையும், பின்பு பதிவான மலைச்சாரல்களில் றப்பர் உற்பத்தியையும் கொண்டு வத்தார்கள். இலங்கையின் வருவாயின் பெரும்பகுதி தேயிலையில் இருந்துதான் கிடைக்கிறது. சிங்களர் தோட்டங்களில் வேலை

செய்வதில் அக்கறை எடுக்காதபடியால், தமிழ் தொழிலாளிகள் தென் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டார்கள். இத்தொழிலாளிகள் 10 லட்சம் இங்கு உள்ளார்கள்.

இலங்கை மக்கள் புத்திக் கூர்மையுடையவர்களாக இருந்தால் மேல் நாட்டுக் கல்வி பயில்வதில் ஆர்வம் காட்டினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் உண்டானது போல, ஆனால் அங்கிருந்த கசப்பு இல்லாமல், கற்றவர்கள் மத்தியில், தங்கள் நாட்டு அரசியலில் அதிக பங்கு தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற இயக்கம் வளரத் தொடங்கியது. இரண்டு உலக யுத்தங்களுக்கு மிடையில் இவ்வியக்கத்துக்கு பிரித்தானிய அரசாங்கம் இசைந்தது. தன் ஆட்சிப் பொது நல நாடுகளில் பூரண சுதந்திரம் உள்ள நாடாக இலங்கை முன்னேறிய வரலாறு இப்புத்தகத்தின் இறுதி அத்தியாயத்தில் இடம் பெறும்.

இந்து சமுத்திரத்திலே உள்ள துறைமுகங்களில் சிறந்த இரண்டாகிய கொழும்பும் திரிகோணமலையும் இலங்கையில் உள. திரிகோணமலை ஒரு இயற்கைத் துறைமுகமாகும். இதனால்தான் பிரித்தானியர் இலங்கையைக் கடற்படைத் தளமாக வைத்திருக்க விரும்பினர். கொழும்பு ஒரு சிறந்த செயற்கைத் துறைமுகம். இலங்கையில் பொருட்கள் இங்கிருந்துதான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஐரோப்பாவிலிருந்து சுவேஸ் கால்வாய் மார்க்கமாக ஆஸ்திரேலியாவுக்கும் தூர கிழக்குத் தேசங்களுக்கும் செல்லும் கப்பல்களுக்கு கொழும்பு ஒரு பிரதான தங்கு துறையாகும்.

19-ம் நூற்றாண்டில் இன்னும் கிழக்கே பிரான்சியர் இந்தோசீனத்தைக் கைப்பற்றினர். தாய்லாந்து எனப்படும் சையம் மட்டுமே தப்பியது. டச்சுர் தெற்காசியாவிலுள்ள ஜாவா, சுமாத்திரா முதலிய தீவுகளைப் பத்திரப்படுத்திக் கொண்டனர். றப்பர், தேயிலை, இன்னும் பல தொழில்களை அங்கே ஆரம்பித்து, பெரும் பொருள் ஈட்டி, இத்தீவுகளை மிக முன்னேற்றினர். இரண்டாம் உலக யுத்தத்தின்போது, டச்சரும் பிரான்சியரும் தங்கள் குடியேற்ற நாடுகளை யப்பானுக்குப் பறி கொடுத்தனர். இவற்றைத் திரும்பிப்

பெற்ற போதும் நிலைமை முன்போல் இருக்கவில்லை. யுத்தத் தின் பின் சில ஆண்டுகளாக கம்போடியா, லேயோஸ், வியெற்னும் நாடுகளை பிரான்சிய ஐக்கியத்திற்குள் அடங்கிய "கூட்டுறவு நாடுகளாக" பிரான்சியர் வைத்திருந்தனர். ஆனால் வியெற்னமில் உண்டாகிய மும்முரமான கொம் முனிஸ்ட் இயக்கமும் அன்னியருக்கு எதிரான தேசிய இயக்கமும் யுத்த நிலையை நீடித்தன. இந்த நிலை மாற்றப் பட்டபோதும், நாடு கொம்முனிஸ்டுகளுக்கும் கொம்முனிஸ்டு களுக்கு எதிரானவர்களுக்கும் இடையில் பிரிந்து கிடக்கிறது. பிரான்சியர் தூரகிழக்கு நாடுகளிலிருந்து வெளியேற முடிவு செய்து விட்டார்கள். எனவே அவைகள் தற்போது சுதந்திர நாடுகளாகிவிட்டன. டச்சர் தங்கள் குடியேற்ற நாடுகளைப் பத்திரப்படுத்த முடியாதென்பதை இன்னும் விரைவில் உணர்ந்து, நியூகினியில் தங்கள் பகுதியைத் தவிர எல்லாவற் றையும் விட்டுவிடத் தீர்மானித்தனர். இந்த நாடுகள் இந்தோ னேசியா என்ற புதிய தேசமாக உருவெடுத்தன. பரந்த நிலப் பரப்பின் காரணமாக இந்தோனேசியா ஒழுங்கை நிலைநாட்டு வது கடினமாக இருக்கிறது; முந்திய குடியேற்ற நாடுகளைத் தொடர்ந்து வைத்திருத்தல் முடியாக் கருமமென உணர்ந்த மையால் நியூகினியாவின் அரைப் பகுதியை வைத்துக் கொண்டு மீதிப் பிரதேசங்கள் யாவற்றையும் கை நெகிழ்வ தெனத் தீர்மானித்தனர். இப்பகுதிகள் யாவும் தற்போது இந்தோனேசியாவெனும் ஒரு புதிய இராச்சியமாகத் திரண் டுள்ளன. ஒன்றுக்கொன்று தூரத்தில் பரவியுள்ள இவ்விராச் சியப் பரப்புக்களில் ஒழுங்கை நிலைநாட்டுவது வெகு கடின அலுவலாய்த் தோன்றியுள்ளது.

பசிபிக் பிரதேசம். சவர்க்காரமும், செயற்கை வெண்ணெ யும் செய்தற்குபயோகப்படும் அருமையான பொருளும், உஷ்ணப் பிரதேசங்களிற் கிடைப்பதுமான கொப்பரை, பல வருடங்களாக பசிபிக்கு சமுத்திரத் தீவுகளின் பிரதான வியாபாரப் பொருளாகும். 1880-89-ம் ஆண்டுகளிலே ஜெர்மனி இத்தீவுகளின் மீது தன் கவனத்தைச் செலுத்தி, சமோவாவிலும் நியூகினியிலும் சில பாகங்களுரிமைப்பட, சில

தீவுகளைப் பிடித்துக்கொண்டது. ஆஸ்திரேலிய அரசாங்கத் தின் தூண்டுதலால், பிரித்தானிய அரசாட்சியார் நியூகினி யின் மற்றப் பகுதியையும் பல சிறு தீவுகளையும் கைப்பற்றினர். அமெரிக்க ஐக்கிய நாட்டினர், ஹாவாய்த் தீவையும் சமோவாவி னெரு பகுதியையும், ஸ்பெயினுடன் ஒரு போர் செய்தபின் பிலிப்பைன் தீவுகளையும் தமதாக்கிக் கொண்டனர். முதலாவது உலகப் பெரும் போருக்குப்பின், ஜெர்மனிக்குரியன வாயிருந்த பிரதேசங்கள், பிரித்தானியா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா என்பனவற்றிடம் '' கட்டளைப் பிரதேசங்கள் '' ஆக ஒப்புவிக்கப்பட்டன. யப்பானியர் முன்னதாக உடன் பட்டுக்கொண்ட கட்டளை நியதிகளுக்கு முரண்பாடாக, தாம் பெற்றுக்கொண்ட தீவுக்கூட்டங்களைக் கடற்படைக்கும் ஆகாயப் படைக்கும் தளங்களாய் நன்கு அரண் செய்து கொண்டார்கள். 1931-ம் ஆண்டில் யப்பான் சர்வதேச சங்கத்தை விட்டு விலகியபோது, அத்தீவுக் கூட்டங்களைத் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டது. பின், 1942-ம் ஆண்டில் யப்பான் இரண்டாவது உலகப் பெரும் போரிலே புகுந்த பொழுது, தென்கிழக்கு ஆசியாவில் சிறியனவும் பெரியனவு மாக எஞ்சியிருந்த தீவுகளைக் கைப்பற்றி, 1945-ம் ஆண்டில் நேச தேசத்தினரால் முறியடிக்கப்படுமளவும், ஆட்சி செலுத்தி வருவதாயிற்றெனினும் தோர்வியின் பின்பு அவற்றைத் திருப்பிக் கொடுக்க வேண்டி நேர்ந்தது.

ஐரோப்பாவும் உலகமும். 1939-ம் ஆண்டு வரையில் ஐரோப்பிய, அமெரிக்க செல்வாக்கு உலக முழுவதும் பரவி விட்டது. ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்க ஐக்கிய நாடு களும் கவனிக்காதபடி உலகத்தின் எந்த மூலையிலும் எக்கரும மும் நடைபெறுதலியலாது. எந்த நிகழ்ச்சியும் தந்தி, அல்லது கம்பியில்லாத் தந்தி மூலம் உடனே பிரசித்தமடைகிறது ; அதனைப்பற்றி அனைவரும் புதினப் பத்திரிகைகளிற் படித்தறி கின்றனர். புகைரதங்களும், விரைவிற் செல்லுங் கப்பல் களும், பிராணிகளையும் பொருட்களையும் தேவையான இடங் களுக்குக் கொண்டு போகின்றன. அதிசயமான இக்கருமம், பிரித்தானியா, பிரான்சு, ஒல்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு

கள், ஜெர்மனி என்னும் ஒரு சில நாடுகளின் வேலையாகும். இவற்றிற் சில அதிக சுங்கவரி விதித்துத் தங்கள் கைத் தொழிற் பொருட்களைக் காப்பாற்ற முயன்றனர். ஆனல் டொமினியன் நாடுகளும் இம்முறையைக் கையாண்ட போதிலும், பிரித்தானியா 1932 வரையும் தடையற்ற வியாபார நாடாயிருந்தது. தொழிற் பட்ட பொருட்கள் அநேக மாய் அவற்றை வாங்குவதற்கான பொருட்களையுடைய எந்நாட்டிலும் இப்போது கிடைக்கும். இது ஒரு நூற்ருண்டுக்கு முன்னிருந்த நிலைமைக்கும் மிக வேருனது; ஏனெனில், அப்போது உலகத்தின் பெரும்பாலான பிரதேசங்களில் ஒரு நாட்டிலுள்ளவர் —ஒரு கிராமத்திலுள்ளவருங்கூட—தமக்கு வேண்டிய பொருட்களனைத்தையுந் தாமாகவே ஆக்கிக் கொண்டனர். சுருங்கக் கூறின், பொருட்களைப் பற்றின வகையில் உலகம் முழுவதும் ஒன்று பட்டிருக்கிறதென்றே கூறலாம். இம்மாறுதல், உஷ்ணப் பிரதேச மாந்தரின் நாளாந்த சீவியத்தைப் பெரிதும் பாதிக்கின்றது; அவர்கள் தம் நாட்டுப் பொருட்களை அல்லது தம் உழைப்பின் கூலியைத் தொழிற்சாலைகளுள்ள நாடுகளிற் தயாரிக்கப்படும் பொருட் களுக்குப் பதிலாகக் கொடுத்து, தாம் வாங்கின பொருட் களை உபயோகிக்கக் கற்றுக்கொள்கின்றனர். தங்கள் வியாபாரம் அதிகரிக்க அதிகரிக்க, அவர்கள் தம் பண்டைப் பழக்க வழக்கங்களை மேன்மேலுங் கைவிட்டுப் புதியனவற்றைக் கைக்கொள்கின்றனர். தொழிற்சாலைகளிற் றயாரிக்கப்பட்ட பொருட்களைப் புத்திசாலித்தனத்துடனும் நல்வழியிலும் உப யோகித்தற்கும், அவற்ருல் ஏனையோரை யழிக்காது நன்மை புரிவதற்கும் அறிந்துகொள்ளுமாறு தக்க கல்வி பெறவேண்டி யது மிகவும் அவசியமாகும். ஆப்பிரிக்காவின் சில பகுதி களிற் போன்று, நீதிச்சட்டத்தையும் ஒழுங்கையும் சனங்கள் பின்பற்ற வேண்டுமெனப் பிறநாட்டு வல்லரசுகள் இப்பிரதேசங் களில் பலவாண்டுகளுக்கு வற்புறுத்த வேண்டியிருக்கலாம். ஆனல், பிற்போக்கான நாகரிகமுள்ள மாந்தரின் உரிமைகள் பாதுகாக்கப் படவேண்டுமென்பதும், தமது சுயகருமங்களின் பொறுப்பை இறுதியிற் தாமே அக்கருமத்துக்குத் தகுதிவாய்ந்

தவர்கள் என நிரூபித்துக் காட்டினால், ஏற்றுக் கொள்ளுமாறு அவர்களுக்குக் கல்வி புகட்ட வேண்டு மென்பதும், இவ் வல்லரசுகள் வெளிப்படையாகப் பிரசித்தப்படுத்திய நோக்கங் களாகும். இரண்டாம் உலக யுத்த முடிவிலிருந்தும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டதிலிருந்தும், மேற்கூறிய சிறந்த நோக்கம் எவ்விதம் நடைமுறை செய்யப்படுகிறது என்பதை இப்புத்தகத்தின் இறுதி அத்தியாயத்தில் படிக்க லாம். ஜெர்மனி, இத்தாலி, யப்பான் யுத்தத்தில் வெற்றி பெறலாம் என்றும் கருதப்பட்டது. அப்படி இவை வெற்றி அடைந்திருந்தால், மக்கள் உரிமை காக்கும் நோக்கம் நிலவு வது சந்தேகமே. ஏனெனில், இவர்கள் பிறர்மீது அதிகாரம் பெற்ற போதெல்லாம் மிக்க கொடுமையுடையவர்களாகக் காணப்பட்டனர்.

உதவிக் குறிப்புக்கள்.

ஐரோப்பியச் செல்வாக்கு பரவியதின் முதலாம் படியின் பயனாக ஸ்பானியரும் போர்த்துகீசரும் தென்னமெரிக்காவிற் குடியேறினர். இரண்டாம் படியிலே, உலகத்திற் சமசீதோஷ்ண முள்ள பிரதேசங்களில் டச்சர், பிராஞ்சியர், பிரித்தானியர் என் போர் குடியேற்ற நாடுகளைத் தாபித்தனர்; இவை யெல்லாமும், இந்திய உபகண்டமும், பிரித்தானியரின் கடல் வன்மை காரண மாக அவர்கள் வசமாயின. மூன்றும் படி, சமீபகாலத்தில் இரண்டாம் படியிற் கிடைத்த தாபனங்களிலிருந்துண்டாயது. இதன் பயனாக, சீனம், யப்பான், ஐரோப்பாவுக்கும் ஆசியா வுக்குமிடையிலும் எல்லைப்புறங்களிலுமுள்ள இஸ்லாமிய நாடு கள், சிறு அளவுக்கே பிரதானமான ஒன்றிரண்டு நாடுகள் என் பவை நீங்கலாக, உலகத்தின் ஏனைய பகுதிகளை ஐரோப்பிய நாடுகள் தமக்குரியனவாக்கிக்கொண்டன. கடைசியான இந் நிகழ்ச்சி நாகரிகமற்ற மாந்தர் வதியும் உஷ்ண நாடுகளில் தான் அநேகமாக நடைபெற்றது. இந்த இறுதிப்படியில் நிகழ்ந் தவையே இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளன. ஐரோப்பிய ரின் செல்வாக்கு இவ்வாறு பரவினமைக்குப் பிரதான கார ணம், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள கைத் தொழில் நாடுகளுக்கு உஷ்ணப்பிரதேச நாட்டுப் பொருட்கள் தேவைப்பட்டமையேயாம்; தற்காலத்தில் விஞ்ஞான சாத்

திரம் முன்னேற்ற மடைந்தமையினுல்தான் இப்பரவுதல் ஆப் பிரிக்காவிலே மிக அதிகமாக நடைபெறினும், ஆசியாவிலும், பசிபிக்குச் சமுத்திரத் தீவுகளிலும் கூட நடைபெற்றதென்க. இதனுலேற்பட்ட பயன்கள் இன்னமும் திட்டமாக விளங்க வில்லை யெனல் தகும்.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டபடி ஐரோப்பியர் சிறிது சிறிதாகவே பிறநாடுகளிற் புரவினமையினுல் பிரதான நிகழ்ச்சி கள் நடைபெற்ற ஆண்டுகள் இவையிவையெனத் திட்டமாகக் கூறுதல் கஷ்டமான காரியம்; எனினும் மேல்வருவன ஓரள வுக்கு உதவலாம்.

1815. இலங்கையைப் பிரித்தானியர் தமதாக்கிக் கொண் டனர்.

1819. பிரித்தானியர் சிங்கப்பூரைத் தாபித்தனர்.

1830-1839. அல்ஜீரியாவைப் பிராஞ்சியர் வென்றனர்.

1869. சுவேஸ் கால்வாய் திறக்கப்பட்டது.

1881-1890. ஆப்பிரிக்காவை ஐரோப்பிய நாடுகள் பகிர்ந்து கொண்டன.

1884. ஜெர்மனி குடியேற்ற நாடுகளைப் பிடிக்கத் தொடங் கியது.

1898. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஹாவாய்த் தீவுகளைத் தமக் குரியனவாக்கிக்கொண்டன.

1919. சர்வதேச சங்கத்தின் மேற்பார்வையிலே ''கட்டளை முறை ஆட்சி'' தொடங்கியது.

17. தூர கிழக்கு நாடுகள்

பண்டைக் காலத்திற் சீனம். உலகத்தின் ஏனைய பகுதி களிலிருந்து, சமுத்திரம், பாலைவனம், மலை ஆதிய பெருந் தடைகளினுற் பிரிக்கப்பட்டவரும் அற்புதமான நாகரிகம் வாய்ந்தவருமான மாந்தர் பண்டைக்காலத்தில் ஆசியாவின் கீழ்த்திசையில் மேலோங்கி வந்தனர். புத்தமதமொன்றே பிற நாட்டிலிருந்து சீன நாகரிகத்திற் கலந்ததாகும். நாற்பதுகோடி

மக்களைக்கொண்ட இப்பெரு நிலப்பரப்பு ஆதிகாலத்திலேயே ஒரு சக்கரவர்த்தியின் குடைக்கீழ் இருந்தது.

சீனர், உலகத்திலுள்ள ஏனைய நாட்டவரை மனதார அவமதித்தனர்; பொதுவாக அவர்கள் அந்நியரை நாட்டினுட் பிரவேசிக்க விடவில்லை; பிற நாட்டவரை மிக நெருக்கடியான நியதிகளுக்குட்பட்டே சில துறைமுகங்களுள் நுழைய அனுமதித்தனர். எனவே, 16-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய வியாபாரிகள் முதன்முதலாகச் சீனத்துக்கு வந்தபோது, தாம் "காட்டுமிராண்டிகள்" என்று கருதிய ஐரோப்பியர்களிடமிருந்து பொருட்களை வாங்கச் சீனர் சிறிதும் ஆசைப்படவில்லை. தம்மிடம் மேலதிகமாக இருந்த தேயிலை, பட்டு ஆதியவற்றையே விற்க அவர்கள் விரும்பினர். இதுவே 19-ம் நூற்றாண்டின் முதற்பகுதியிலிருந்தநிலைமை.

சீனத்துள் பிறநாட்டினர் புகுதல். இந்தியாவிலிருந்த பிரித்தானிய வியாபாரிகள் கள்ளத்தனமாகச் சீனருடன் அபினி வியாபாரம் நடாத்திவந்தனர். 1839-ம் ஆண்டிலே இவ்வியாபாரிகளுக்கு எதிரிடையாக அவர்கள் எதிர்பாராத வகையில் சீன அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டனர். இவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு; ஆனால் பிரித்தானிய வணிகர்களை அவர்கள் அளவு மீறிக் கடுமையுடன் நடத்தினர். இது பிரித்தானிய அரசாட்சியாருக்குப் பெருஞ்சினத்தை யுண்டாக்கி, சீனருடன் போரிடத் தூண்டியது; இப்போரில் பிரித்தானியர் வெற்றி பெற்றனர். இதன் பயனாக, 1842-ம் ஆண்டிலே ஒருடன்படிக்கை செய்யப்பட்டது; அதன்படி, பிரித்தானியருக்கு ஹொங்கோங் தீவு அளிக்கப்பட்டதோடு, தென்சீனத்தில் சில துறைமுகங்களில் வியாபாரஞ் செய்யுமுரிமைகளும் அளிக்கப்பட்டன. இதன் பின்னர், வேறு நாடுகளுடனும் உடன்படிக்கைகள் செய்யப்பட்டன. சிறிது காலத்துக்குப்பின் பிறநாட்டுத் தூதர்களை வரவேற்கவும், வியாபாரிகளையும் கிறிஸ்தவப் பாதிரிமாரையும் நாட்டினுட்புறஞ் செல்லவிடவும், பிறநாட்டினர் தொடர்புள்ள வழக்குகளை விசாரித்தற்குப் பிறநாட்டினர்கொண்ட விசேட நீதி ஸ்தலங்களை ஏற்படுத்தவும், சீனச் சக்கரவர்த்தி ஒப்புக்கொண்டான்.

யப்பானுள் பிறநாட்டினர் புகுதல். சீனக் கடற்கரைக்குச் சிறிது தூரத்தில் இரு பெருந்தீவுகளும் பல சிறு தீவுகளுமுள ; இத்தீவுக்கூட்டம் "யப்பான்" எனப்படும். புராதன காலந் தொட்டு இத்தீவுகள் "மிக்காடோ" என்னும் பட்டப்பெயர் பூண்ட யப்பானிய அரசர்களால் ஆளப்பட்டு வருகின்றன. பதினைரும் நூற்றாண்டளவிலேயே ஐரோப்பிய வியாபாரிகளும் பாதிரிமாரும் இந் நாட்டைத் தரிசித்தனர் ; ஆனால் கிறிஸ்தவ சமயம் பரவியது யப்பானியருக்குத் திகில் விளைத்தது. 1636-ம் ஆண்டு முதலாக ஒரு சில ஒல்லாந்த வியாபாரிகள் நீங்கலாக வேறெவரும் அங்கு பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை ; கிறிஸ்தவ சமயமும் தலைதூக்காதபடி அடக்கப்பட்டது. "மிக்காடோ" பெயரளவுக்கு மாத்திரமே அரசனாக இருந்தான் ; உண்மையதிகாரம் "ஷோகுன்" என்னும் பெயர் பூண்ட மந்திரியினிடமும் "தைமியோ" என்னும் பெயரிய தலைவர்களைக்கொண்ட சில பிரபுக்களிடமுமிருந்தது ; இப்பிரபுக்களின் ஏவலாட்கள் "சமுராய்" எனப்பட்டனர்.

1853-ம் ஆண்டில், பெரி என்னும் பெயர் பூண்ட அமெரிக்கக் கப்பற்றலைவன், பிறநாட்டவர் யப்பானுக்குள் நுழைதற்கு ஷோகுனை இணங்கச் செய்தான். பல அந்நிய நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்யப்பட்டன; வியாபாரிகள் சில துறைமுகங்களுட் பிரவேசித்து வியாபாரஞ் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இத் தருணத்தில், தைமியோக்களிற் சிலர், ஷோகுனுடைய அதிகாரத்தை நீக்கத் தீர்மானித்தனர். அவ்வாறே அவர்கள் 1867-ம் ஆண்டிற் செய்து மிக்காடோவுக்கு முழு அதிகாரமும் அளித்தனர். அதே ஆண்டில் முத்சுயிட்டோ என்னும் பெயரிய மிக்காடோ முடிசூடினான். அவனும் அவனுடைய மந்திரிகளும் ஐரோப்பிய நாடுகளின் வல்லபத்தைக்கண்டு, அவற்றைப் போலவே தம் நாட்டையும் பெலமுடையதாக்கத் தீர்மானித்தனர். தைமியோக்களும் சமுராய்களும் செலுத்திய அதிகாரம் முற்றாக நீக்கப்பட்டது ; ஆனால் இவ்வாறு செய்யுமுன் பெருஞ் சண்டை உண்டாயிற்று. யப்பானும் மேற்றிசை முறைப்படி சீர்திருத்தியமைக்கப் படலாயிற்று. பாராளுமன்ற முறைப்படியான அரசாட்சி

தாபிக்கப்பட்டது ; இயந்திரங்கள், புகைரதங்கள், மேஞ்ட்டு விஞ்ஞான சாத்திரம் என்பன கொண்டுவரப்பட்டன ; ஐரோப்பிய மாதிரிப்படி, வன்மையுள்ள தரைப்படையுங் கப்பற்படையும் அமைக்கப்பட்டன. ஐரோப்பிய விஷயங்களைப் பின்பற்றற் பொருட்டு பிரதான யப்பானியர் சிலர் அங்கு சென்று, ஐரோப்பிய முறைகளைக் கற்பிக்க ஐரோப்பியரையே அழைத்து வந்தனர். சிறிது காலத்துக்குள்ளே, பிரபுக்கள் சாதாரண பிரசைகள் ஆகிய இருவகையினரும் இராசபக்தி மிகுந்தவர்களாய் மிக்காடோவுக்கு ஆதரவாக நின்றனர். அரசனைத் தெய்வாமிசம் கொண்டவனைக்கொண்டாடுவதே யப்பானியர் சமயமும் மரபும். அச்சமயம் இப்போது புத்துயிர் பெற்றது ; யப்பானியர் தீவிர தேசியவாதிகளாயினர். அரசியல் நிபுணர் பலர் மிக்காடோவுக்குதவி புரிந்தனர் ; அவர்களுட் சிறந்தவன் மார்க்குவிஸ் இட்டோ என்பனும்; அவன் ஐரோப்பாவைத் தரிசித்து வந்து, யப்பானியப் படையையும் அரசாட்சி முறையையும் ஜெர்மனியின் முன்மாதிரிப்படி அமைக்கும் பெரும்

[போட்டோ : இ. என். ஏ.

பண்டைச் சமுராயரின் உடைதரித்த யப்பானியர்

பொறுப்பெடுத்தான். கடற்படை, பிரித்தானியப் படையை முன்மாதிரியாகக் கொண்டது. எதுவும், கூடின அளவுக்குத் திறமையுடன் செய்யப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டது.

யப்பான், சீனம், கோறியா. தமக்கடுத்த நாடான கோறியத் தீபகற்பத்து விஷயங்களில் யப்பானியர் எப்போதும் பெருங் கவனஞ் செலுத்தி வந்தனர். 1876-ம் ஆண்டில் கோறியாவில் இரு துறைமுகங்களில் தாம் வியாபாரஞ் செய் வதற்கு அனுமதிக்கும்படி அவர்கள் கோறியரைக் கட்டாயப் படுத்தினர். ஐரோப்பிய நாட்டவரும் அங்கு சென்றனர். நிற்க, கோறியா பெயரளவில் சீனத்துக்குட்பட்டிருந்த போதி லும் சில உடன்படிக்கைகளுக்குப் பின் சீனமும் யப்பானும் அதனைச் சுதந்திரம் பெற்ற நாடாக மதிக்கத் தீர்மானித்தன. ஆனால் கோறியாவோ சீர்கேடானவகையில் ஆளப்பட்டு வந்தது ; நாட்டிற் கலவரமே காணப்பட்டது. 1894-ம் ஆண் டில், அங்கு நன்னிலைமை யேற்படுத்தத் தனக்குதவிபுரியு மாறு கோறியவரசன் சீனரை வேண்டினன். சீனப்படைகள் அனுப்பப்பட்டன; யப்பானிய அரசாட்சியாரும் உதவி செய் தனர். இதனைப் பற்றி சீனருக்கும் யப்பானியருக்கும் சச்சர வுண்டாகிப் போர் மூண்டது. தரைப் போர், கடற் போர், இரண்டிலும் யப்பானியர் வெற்றி பெற்றமை உலகத்தின ருக்குப் பேராச்சரியம் விளைத்தது. யப்பானின் புதிய கடற் படையினமைப்பும் தரைப்படையினமைப்பும் இவ்வாறு சோதிக்கப்பட, அவற்றின் திறமை வெளியாயிற்று. சீனம் சமாதானம் நாடியபோது, அது கோறியச் சுதந்திரத்தை யங்கீ கரிக்கவும், யப்பானியருக்குப் பெருந் தொகை கொடுக்கவும், சீனத்திற் குற்றஞ் செய்த யப்பானியரை யப்பானியரே விசா ரித்தற் கிணங்கவும், சில பிரதேசங்களை அவர்களுக்களிக்கவும் சீனர் இணங்கவேண்டியதாயிற்று. இவ்வாறு கொடுக்கப் பட்ட பிரதேசங்கள் **போர்மோசா** வென்னும் பெருந் தீவும், **பெஸ்கடோர்சு** என்னுந் தீவுக்கூட்டங்களும் சீனப் பெரு நாட்டில் பிரதானமான **லியோதுங்குத் தீபகற்பமுமாம்.**

சீனமும் பிறநாட்டவர் ஆக்கிரமிப்பும். இப்போது சீனர் ஐரோப்பிய நாடுகளுடன் இரகசிய ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர். யப்பானுடன் சமாதானஞ் செய்தவுடனேயே, லியோதுங்கு தீபகற்பம் யப்பானுக்கு ஒப்புவிக்கப்படுவதைத் தாங்கள் ஆட்சேபிப்பதாக ருஷ்யாவும் பிரான்சும் ஜெர்மனியும் யப்பானுக்கு எச்சரிக்கை செய்தன; அப்போது யப்பானிய அரசாட்சியார் பெருஞ்சினங் கொண்ட போதிலும் இணங்கினர். ஆனால் இம்மூன்று ஐரோப்பிய நாடுகளும் தாம் இவ்வாறு தலையிட்டதற்காகச் சீனத்தினிடம் கைம்மாறு வேண்டின. பிரான்சியர் நெடுநாளாக இந்து-சீன தீபகற்பத்தின்மீது, விசேடமாக அன்னம் இராச்சியத்தின் மீதும், அதற்கடுத்ததும் தனக்குக் கீழ்ப்பட்டதெனச் சீனம் கூறியதுமான தோங்கின் மாகாணத்தின் மீதும், கண் வைத்திருந்தனர். 1885-ம் ஆண்டளவிலேயே சீனருடைய அனுமதியுடன் அவர்கள் இப்பிரதேசங்களைத் தமது பாதுகாப்பு நாடாகச் செய்து கொண்டதோடு 1894-ம் ஆண்டுக்குப் பின்னர், தென் சீனத்தில் வியாபார உரிமைகளையும் பெற்றனர். சீனக் கருமங்களில் ருஷ்யா நெடுங்காலமாகப் பெருங்கவலை கொண்டிருந்தது; 1858-ம் ஆண்டளவில் அது பசிபிக்குச் சமுத்திரக் கரையையடைந்து, சீனத்துடன் சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டது. இதன்படி ருஷ்ய-மஞ்சூரிய எல்லைகள் தீர்மானிக்கப்பட்டன; ருஷ்யா, விலாடிவோஸ்தோக் துறைமுகமுட்பட நீண்ட கடற்கரையோரமுள்ள பிரதேசத்தைப் பெற்றது; 1875-ம் ஆண்டளவில், கனிஜப் பொருட்கள் ஏராளமாய்க் காணப்படும், சாகாலீன் என்னும் பெருந் தீவும் தனக்குரியதென யப்பானை ருஷ்யா ஒப்பச் செய்தது. எல்லைப்புறத்திலிருந்த பரந்த மஞ்சூரியாவின்மீதும் ருஷ்யா அதிவிசேடமான கவனஞ் செலுத்தியது. 1894-ம் ஆண்டிற் சீனத்துக்குதவி செய்தபின், லியோதுங்குத் தீபகற்பம் தனக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்படவேண்டுமெனக் கேட்ட ருஷ்யா, அதனைப் பெற்றதோடு, மஞ்சூரியாவில் புகைரத வீதிகளை இன்னமும் அமைக்கும் உரிமைகளையும் பெற்றது. 1897-ம் ஆண்டில் இரு ஜெர்மானியப் பாதிரிகள் கொலை செய்யப்பட்டனர்; உடனே ஜெர்மனி, **கியோச்சௌ** என்னுங்

துறைமுகத்தைப் பற்றிக்கொண்டு அதனைத் தனக்குக் குத்த கைக்குக்கொடுக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்திப் பெற்ற தோடு, அத்துறைமுகமுள்ள மாகாணத்தில் புகைரதங்களைப் பற்றின வகையிலும் உரிமைகளையும் பெற்றது. ருஷ்யரின் முன்னேற்றத்தைக் கண்டு பிரித்தானியா மிகவும் கவலை கொண்டது; ஏனெனில், லியோதுங்குத் தீபகற்பத்திலிருந்த போட்டாதர் துறைமுகம் நன்கு அரணிடவும் கப்பற்படை தங்கு தற் கேற்றதாகச் செய்யவும் கூடியதாக இருந்தது. எனவே, ருஷ்யர் போட்டாதரைத் தம் வசம் வைத்திருக்கும் வரையில் சீனம் **வேய்காவை** என்னும் துறைமுகத்தைப் பிரித்தானியா வுக்குக் குத்தகைக்கு விட இணங்க வேண்டியிருந்தது. இவ் விதமாகச் சீனம் அந்நிய நாடுகளிடையே 'செல்வாக்குப் பிர தேசங்களாக' பங்கீடு செய்யப்படும்போலிருந்தது. ருஷ்யா மஞ்சூரியாவிலும், பிரான்சு தென்சீனத்திலும், ஜெர்மனி ஷான் துங்கிலும், பிரித்தானியா யாங்ரிசிக்கியாங் பள்ளத்தாக்கிலும், யப்பான் பூக்கியெனிலும் செல்வாக்குப் பெற்றனர். 1898-ம் ஆண்டில் அமெரிக்க ஐக்கியநாடு ஸ்பெயினுடன் போர் செய்து, அதனிடமிருந்து போர்மோசாவுக்குத் தெற்கே சிறிது தூரத்திலுள்ள **பிலிப்பைன் தீவுகளைப்** பற்றிக்கொண்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டினர் இங்கு செல்வாக்குப் பிரதேச மொன்றை ஏற்படுத்தவில்லை; ஆனால், வியாபாரத்தில் யாதொரு தடையும் விதிக்கக்கூடாதென அங்கு வந்த ஐரோப் பிய நாடுகளுக்கும் யப்பானுக்கும் திட்டமாக வற்புறுத்தினர். இதுவே, ''திறபட்டவாயில் முறை'' எனப்படும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும்பகுதியிலே, சீனர் பிறநாட்டவரை அவமதித்து நடத்தியும் அவர்களின் நாகரிகம் ஒழுங்கீனமானதென அங்கீகரியாமலு மிருந்தனர். ஆனால் யப்பானிய முன்மாதிரியைப் பின்பற்றுவதே நாட்டுக்கு நல மெனக் கருதிய கட்சி, சீனத்தில் விருத்தி யடைந்து வந்தது; 1898-ம் ஆண்டுக்குப் பின், இளைஞனை சீனச் சக்கரவர்த்தி இக்கட்சிக்கு ஊக்கமளித்தான். இதனைச் சீனர் பலர் விரும்ப வில்லை. அந்நியரனைவரையுஞ் சீனத்திலிருந்து துரத்துவதை நோக்கமாகக் கொண்டதும், தேசாபிமானமும், ஒற்றுமையும்

பொருந்தியதும் ''முட்டிச்சங்கம்'' என்னும் பெயரியதுமான சங்கமொன்று* தோன்றி விரைவில் விருத்தியடைந்தது. இளஞனன் சக்கரவர்த்தி தக்க வயதடையும் வரையில் சீனத்தை யாட்சிபுரிந்த அதிசயிக்கத்தக்க திறமைவரய்ந்த பழைய சக்கரவர்த்தினி, இச்சங்கத்துக்கு உற்சாகமூட்டியதோடு, சக்கரவர்த்தியையும் அரசிருக்கையினின்றும் நீக்கினள். 1900-ம் ஆண்டில் பிறநாட்டவர்—பிரதானமாகப் பாதிரிமாரும் சீனக் கிருஸ்தவரும்—அடிக்கடித் தாக்கப்பட்டனர். அவ்வாண்டிற் பீக்கிங்கில் ஜூன் மாதத்தில் ஜெர்மானிய தூதரும் ஒரு யப்பானிய உத்தியோகத்தரும் கொலை செய்யப்பட்டனர்; அப்பட்டிணத்திலிருந்த அந்நியரனைவரும் தம் வீடுகளிலேயே முற்றுகையிடப்பட்டனர். பிரித்தானியா, ருஷ்யா, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, யப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆதியன, முற்றுகையிடப்பட்டவரை விடுவித்தற்காகப் படைகளை யனுப்பியதோடு, சங்கத்துக்கு ஊக்கமளிக்காது அடக்கும்படி சீன அரசாட்சியாரையும் கட்டயாயப்படுத்தின. மேலே குறிப்பிட்ட நாடுகளுக்கிடையே சீனம் இறுதியாகப் பங்கீடு செய்யப்படுதற்கு இதுவே உதவி யிருக்கலாம். ஆனல் வல்லரசுகளோ சீனத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக ஓர் ஒப்பந்தம் செய்ய, ''திறபட்டவாயில் முறை'' இன்னமும் அதிகமாகப் பின்பற்றப்பட்டது.

யப்பானும் ருஷ்யாவும். மஞ்சூரியாவின்மீது பூரண அதிகாரம்பெற ருஷ்யா தீர்மானித்ததென்பது இப்போது தெளிவாயிற்று. இது கோறீயாவைப் பயமுறுத்துவதாக முடியும்; ருஷ்யா இவ்வதிகாரம் பெறுவது யப்பானுக்கும் பிரித்தானியாவுக்கும் திருப்தியளிக்காதென்பதும் தெளிவே. எனவே எவரும் எதிர்பாராத வகையில் 1902-ம் ஆண்டில் இவ்விரு நாடுகளும் ஓருடன்படிக்கை செய்துக்கொண்டன; அதன்படி, இரு நாடுகளிலொன்று ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளினுற் ருக்கப்படின், மற்ற நாடு அதற்குப் படை உதவவேண்டும். இதன்பின், ருஷ்யாவின் நண்பனை பிரான்சு தலையிடுமென்ற அச்சமின்றி, ருஷ்யாவின் ஆக்கிரமிப்பான நடத்தையைத்

*இது ''குத்துச்சண்டைக்காரர் சங்கம்'' என்றும் அழைக்கப்படும்.

தான் எதிர்க்கக் கூடுமென யப்பான் கருதியது. பிரித்தானியாவும், ருஷ்யாவுக்கும் யப்பானுக்கும் போர் மூண்டால், அது ஒரு ஐரோப்பியப் போராக மாறுதெனக் கருதியது. மஞ்சூரியாவைப் பற்றியும் கோறீயாவைப் பற்றியும் தாம் செய்த ஏற்பாடுகளை ருஷ்யர் கைவிடவில்லை ; இதனால், 1904-ம் ஆண்டில் யப்பான் தான் ருஷ்யாவுடன் போரிடுவதாகப் பிரசித்தப்படுத்தியது. யப்பானிய கப்பற்படையும் தரைப்படையும் மிகத் திறமை வாய்ந்திருந்ததினாலும், ருஷ்யர் தமக்கு வேண்டிய பொருட்களையும் படைகளையும் பெறக்கூடிய இடங்கள் நெடுந்தூரத்தி லிருந்தமையினாலும், ருஷ்யா மிக இலகுவாகக் கடலிலேயும், சிறிது கஷ்டத்துடன் தரையிலேயும் தோற்கடிக்கப்பட்டது ; போட்டாதர், யப்பானியராற் பிடிக்கப்பட்டது ; மஞ்சூரியாவிலே யப்பானியர் பெருஞ் சிரமப்பட்டு பல போர்களிற் சித்தி பெற்றனர். இறுதியில் ருஷ்யர் மஞ்சூரியாவிலிருந்து விலகி, கோறீயாவிலே யப்பானுக்கு விசேட உரிமைகளுண்டென அங்கீகரித்தனர்; லியோதுங்குத் தீபகற்பத்தின் குத்தகையும் சாகாலீனின் தென்றிசையி லரைவாசிப் பகுதியும் யப்பானுக்கு மாற்றப்பட்டன. இது முதலாகக் கோறீய விஷயங்களில் இடைவிடாது தலையிடுவதே யப்பானின் செய்கையா யிருந்தது ; இறுதியில் 1910-ம் ஆண்டில் யப்பான் அதனைத் தனதாக்கிக் கொண்டது. குழப்பம் மிகுந்த பழைய அராசக நிலைமை படை வலிமையினுதவியால் மாற்றப்பட்டு ஒழுங்கு நிலவுவதாயிற்று. கோறீயரிற் பலர் பிறருடைய ஆட்சிக்குட்பட்டு வாழவிரும்பவில்லை. யப்பான் தோற்கடிக்கப்பட்ட பின்பு முப்பத்தைந்து ஆண்டுகளாக நிலவிக்கொண்டிருந்த துன்பமும் ஒழிந்து போவதாயிற்று.

சீனத்திற் புரட்சி. குத்துச்சண்டைக்காரரியக்கம் சித்தி பெறுது போனபின், சீனத்தின் மாஜி சக்கரவர்த்தினி மேனாட்டு முறைப்படி சீர்திருத்தங்களைச் செய்ய ஆரம்பித்தாள். அவளுடைய மரணத்துக்குப் பின்னர், சீர்திருத்த இயக்கம் முன்னிலும் துரிதமாக நடைபெற்றது. 1911-ம் ஆண்டில் சீனர் அரச வமிசத்தினரை அதிகார பதவியிலிருந்து நீக்கினர். மேனாட்டுக் கல்வியிற் பயிற்சிபெற்ற கிருஸ்தவனை டாக்டர் சன்யாட்சன்

என்பவனைத் தலைவனாகக் கொண்ட **குவோமிந்தாங்கு** என்னுங் குடியரசுக் கட்சியினர் சீனத்திலேற்பட்ட புரட்சியிற் பிரதானம் பெற்றனர். சன்யாட்சன் சீனக் குடியரசின் தலைவனாகி, ஓராண்டுக்குப்பின், ஒருகால் அரசவை உத்தியோகத்தனாயிருந்த **யுவான்ஷிகே** என்பவன் சார்பாகத் தன் பதவியினின்றும் நீங்கினான். இவன் தன்னைச் சக்கரவர்த்தியெனப் பிரசித்தஞ் செய்துகொள்ள, அச்செயல் சன்யாட்சனுக்குப் பெருஞ் சினமுண்டாக்கியது; ஆனால் யுவான்ஷிகே 1915-ம் ஆண்டிலே இறந்தபடியினால் அவன் ஓர் அரசவமிசத்தைத் தாபிக்க வேனும், நாட்டிலொழுங்கான நிலைமையேற்படுத்த வேனும் போதிய காலம் பெறாது போனான்.

1914-ம் ஆண்டில் உலகப் பெரும்போர் தொடங்கின போது, ஜெர்மனிக்குரிய **ஷாந்துங்கை** யப்பானியர் பிடித்துக் கொள்வரென்பது எதிர்பார்க்கக் கூடியதே. ஐரோப்பிய நாடுகள் போரில் முழுகவனஞ் செலுத்தினதையும் சீனத்திலே ஒழுங்கின்மை யிருந்ததையும் சாதகமாகக்கொண்டு, யப்பான் ஆக்கிரமிக்கத் தீர்மானித்தது. 1915-ம் ஆண்டில் சீனக் கருமங்களில் தலையிடுதற்குப் பேரதிகாரமளிக்கும் இருபத்தொரு விஷயங்களை யப்பான் வேண்டி நின்றது; ஆனால் இவற்றுள் மிகக் கடினமானவை யப்பானியராலேயே பின்னர் நீக்கப்பட்டன. எனினும், 1919-ம் ஆண்டிற் செய்யப்பட்ட வார்சேல்சு உடன்படிக்கையிலே, பெரும் போரில் யப்பான் செய்த தொண்டுக்குப் பரிசு போன்று, சீனத்தில் யப்பானுக்கு விசேட உரிமைகளுண்டென்பது அங்கீகரிக்கப்பட்டது; கியாச்சௌவை அவர்கள் வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது. ஆனாலிது சீனருக்கு அதிகமான மனக்கொதிப்பை யுண்டாக்கியது.

அது முதலாக, சீன-யப்பானிய நிலைமை பூரணமாக மாறிவிட்டது. 1921-ம் ஆண்டில், ஆங்கில-யப்பானிய உடன்படிக்கை நீக்கப்பட்டது; அதற்குப் பதிலாக, பிரித்தானியா, பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள், யப்பான் ஆகிய நான்கு வல்லரசுகளும் ஒருடன்படிக்கை செய்துகொண்டன; சீனத்தின் சுதந்திர நிலைமையை உத்தரவாதஞ் செய்வதும் பசிபிக்குச் சமுத்திரத்திலும் அதனைச் சூழ்ந்த நாடுகளிலும் சமாதான நிலை

யுண்டாக்கி வைப்பதுமே இவ்வுடன்படிக்கையின் நோக்கங்களாம். சீனத்தில் தக்க அரசாட்சி யுண்டானவுடனே அந்நியர் சீனராலேயே விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனல், அதிர்ஷ்டவசத்தினுலே, தம்முள் போரிட்டும் நாட்டவரை இம்சித்துச் சீவித்தும் வந்த கலகக்காரப் படைத்தலைவரிடமே அதிகார மிருந்தது. சோவியெற் ருஷ்ய அரசாட்சியார் அந்நாட்டிற்குள் அளவு கடந்த ஆயுதங்களையும் தேவையான உபகரணங்களையும் வாரியனுப்பு வாராயினர்; எனினும், அந்நாட்டின் சமாதானத்தையும் ஒழுங்கான நிலைமையுங்கருதிய ஏனையநாடுகள்ருஷ்யாவைப்பின் பற்ற மறுத்துவிட்டன. 1925-ம் 1927-ம் ஆண்டுகளுக்கிடையே ருஷ்ய ஒற்றர்கள் சீனத்தில் அளவுகடந்த செல்வாக்கு செலுத்தினும், அடுத்த வாண்டில், குவோமிந்தாங்குக கட்சியினர் அவர்களை நாட்டினின்றுந் துரத்திவிட்டனர். 1927-ம் ஆண்டில், உடன்படிக்கையின் பயனுய்ப்பெறப்பட்ட பெருந் துறைமுகமாகிய ஷாங்கையில் அந்நியர் குடியிருக்குமிடங்களைக் காத்தற் பொருட்டுப் பிரித்தானியரும் பிறநாட்டவரும் தம் படைகளை அனுப்பும் படியான அளவுக்கு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. இறுதியாகப் புரட்சியினரம்பத்தில், குவோமிந்தாங்குக் கட்சியினர் தம்மதிகாரத்திற் பெரும் பகுதியை மீண்டும் பெற்றனர். யுத்தப் பிரபுக்கள் பலர் சீனவின் வெவ்வேறு பாகங்களிலும் தனித்தனியாகவிருந்து கொடுங்கோல் புரிந்தார்கள். 1927-ம் ஆண்டு வரையில் அவர்களில் ஒருவனன சியாங்கை ஷெக் என்பவர் மத்திய சீனவில் மிகுந்த பலமுடையவராகத் திகழ்ந்தார். அவரே "பொதுவுடைமை"க் கட்சியினரின் பலத்தைத் தகர்த்து நாங்கிங்கிலே சீனவை ஒன்று படுத்துவதற்குத் தன்னலியன்றளவுக்கு முயன்ருர். பொதுவுடமைக் கட்சி வலி குன்றியிருந்ததன்றி அடியோடு ஒழிந்து போகவில்லை. நாட்டின் நடுப்பகுதிகளிலெல்லாம் பல பெரிய பகுதிகளை அவர்கள் கொண்டிருந்தார்கள். மஞ்சூரியாவில் இன்னெரு யுத்தப் பிரபு சாங்சோலின் என்பார் தானுகவே பிறர்சார்பின்றி ஒரு நிலையுடையவராயிருந்தார். அவ்விடத்தில் யப்பானியருக்கும் அவருக்கு மிடையிலே ஒரு தகராறு ஏற்பட்டதால் சீனவின் தற்காலச்

சரித்திரத்திலே இன்னெரு கஷ்டமான அத்தியாயம் உண்டாவ தாயிற்று. இதைப் பற்றி, 27-ம் அத்தியாயத்திற் படிப்போம். இப்படி இவையிருக்க, சியாங்கைஷெக்கினுடைய அரசாங்கத் தைப் பிற நாட்டினரும் அங்கீகரித்துக்கொண்டார்கள். கஷ்டங் களுக்கும் பற்பல துன்பங்களுக்கு மிடைபட்டுக் கிடந்த நாட்டி னுக்கு ஓரளவுக்குச் செல்வத்தையும் சீரையும் உண்டாக்கிக் கொடுப்பாரென்று கூறும்படியிருந்தது. யப்பானியர் வந்து தாக்கிய பொழுது அவரே நாட்டின் தலைவராகினர். சீன மக் கள் மனந்தளராமல் பல இன்னல்களை எதிர்த்துப் போர் புரிந் ததை உலக மக்கள் மிகவும் மெச்சினர்.

உதவிக் குறிப்புகள்.

இந்தியாவைப்போன்று, சீனமும் யப்பானும், பண்டைக் கால முதலாக நாகரிகம் பெற்றுள்ளன. ஆனால், இவ்வத்தி யாயத்திற் காட்டப்பட்டவாறு, இரு நாடுகளும் மேனாட்டு நாக ரிகத்துடன், தொடர்பு கொண்டுள்ளன. யப்பான், மேனாட்டு நாகரிகத்தை ஆர்வத்துடன் தழுவியதோடு, மத்திய காலத்து வன்மையற்ற நாடாயிராது தற்காலத்து வல்லரசுகளிலொன் ருதற்காக மேனாட்டு முறைகளைப் பயன்தருவகையிற் பின்பற் றியது. சீனம், மேனாட்டு நாகரிக முறைகளை எதிர்த்து நிற்பி னும், அவ்வெதிர்ப்பு திறமையானதன்று ; அதன் பயனாக, பத் தொன்பதாம் நூற்றாண்டினிறுதியில், அந்நாடு ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே பிரிக்கப்பெறும் அபாய நிலையிலிருந் தது. ஆனால் தேசீய உணர்ச்சி தோற்றியமையினாலும், சீன ருள் செல்வாக்கு பெற்ற ஒரு பகுதியினர் மேனாட்டு முறைகளை யும் நாகரிகத்தின் ஒரு சில பகுதிகளையுந் தழுவினமையினாலும் இவ்வபாயம் நீக்கப்பட்டது. பண்டை முறைப்படி ஆட்சிபுரிந்த அரசனைக் கொண்டே யப்பான் பலமுள்ள அரசாட்சி முறை யை விரைவிற் தாபிக்க, சீனமோ, தக்க அரசியல் முறையேற் படுத்துவது அருங்காரியமெனக் கண்டது.

சில பிரதான நிகழ்ச்சிகள்

1839-42. அபினி வியாபாரத்தைப் பற்றிப் பிரித்தானியா சீனத்துடன் போரிடல்.

1842. ஹொங்கோங் பிரித்தானியருக் களிக்கப்பட்டது.

1853. நாட்டில் அயலாரைப் புகவிடும்படி ஓரமெரிக்கப்

போர்க்கப்பலால் யப்பானியர் கட்டாயப் படுத்தப் பட்டனர்.

1867. யப்பானிய மிக்காடோ மீண்டும் அதிகார் பதவியை யடைதல். முட்சுஇற்ரே சிங்காசனம் ஏறினன்.

1894. சீன-யப்பானியப் போர். சீனரின் தோல்வி.

1894-1900. சீன விஷயங்களில் ஐரோப்பியர் மிகவுமதிகமாகத் தலையிட்ட காலம்.

1900. சீனத்தில் குத்துச்சண்டைக்காரரியக்கம் அந்நிய நாட்டுப் படைகளினால் அழிக்கப்படுதல்.

1902. பெரிய பிரித்தானியாவுக்கும் யப்பானுக்குமிடையே நட்புடன்படிக்கை.

1904-05. யப்பானால் ருஷ்யா தோற்கடிக்கப்படல்.

1911. சீனத்திற் புரட்சி. மஞ்சு அரசவமிசத்தினர் துரத் தப் பட்டனர்.

1916. சன்யாட்சன் இறந்தமை.

1927. சியாங்கைஷெக் தலைவராகப் பிரசித்திபெறல்.

1931. மஞ்சூரியாவை யப்பானியர் தாக்குதல்.

18. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

பதின்மூன்று குடியேற்ற நாடுகளின் சமஷ்டி. 1776-ம் ஆண்டிலே சுதந்திர நாடுகளெனத் தம்மைப் பிரசித்தப் படுத் திக்கொண்ட வட அமெரிக்கக் குடியேற்ற நாடுகள், பிரான்சி னுதவியுடன் ஏழாண்டு காலத்துக்குத் தளர்வுறுதச் சித்தத்துடன் போரிட்ட பின்னர், சுதந்திரம் பெற்றன. இவை 150 ஆண்டு களுக்குள், உலகத்தின் ஏனைய நாடுகளினும் பார்க்கச் செல் வம் நிறைந்தும் வன்மை மிகுந்தும் விளங்கின. 1783-ம் ஆண் டில் அவற்றின் சுதந்திரத்தைப் பிரித்தானியா அங்கீகரித்த போது, அந்நாடுகளைப் பிணைத்து வைத்தது "**காங்கிரஸ்**" என் னும் மகா சபை யொன்றே. அப்பிரதிநிதி சபை முதலில் சுதந் திரப் போரை நடத்த மாத்திரமே ஒன்றுகூடியது. அங்கத்துவ மாகாணங்களின்மேல் அதற்கு அதிகாரம் இல்லை. ஒவ்வொரு நாடும் தன் சுதந்திரத்தைப் பெரிதும் பாராட்டியது ; அவற்றி

டையே சச்சரவுகளுமுண்டாயின ; ஒரு நாட்டிலிருந்து மற்ற நாட்டுக்கு அனுப்பப்பட்ட பொருள்களின் மீது சுங்க வரிகளும் அவை விதித்தன. மேலும், வட நாடுகளும் தென்னாடுகளும் இயற்கையாகவே தம் தன்மைகளில் வேறுபட்டிருந்தன. வடக்கே, வயல்களில் உழைக்கும் கமக்காரரும் தந்தொழில்களைப் புரியும் பட்டணவாசிகளுமிருந்தனர் ; வெகு சிலரே செல்வர்கள். ஆனால் தென் திசையிலே செல்வம் நிறைந்த தோட்டக்காரர் பலரிருந்தனர் ; இவர்கள் அடிமைகளைக் கொண்டு ஏராளமாகப் புகையிலையும் கரும்பும் பயிர் செய்து வந்தனர். அடிமைகள், ஆப்பிரிக்காவிலே பிடிக்கப்பட்டு தோட்டங்களில் உழைப்பதற்காக அமெரிக்காவுக்குக் கொண்டுவரப் பட்ட **நீகிரோவர்** ஆவர்.

பிற்காலத்தில் முன்னேற்றமடைதற்குச் சிறந்த வழி, ஐக்கியம் பூணுவதினாலேயே என்பதும், அன்றேல், அவர்களுடைய பலவீனமான நிலைமையும் பிரிவுபட்ட தன்மையும் ஐரோப்பிய நாடுகளைத் தலையிடச் செய்யுமென்பதும், அந்நாட்டுத் தலைவர்களனைவருக்கும் விரைவிற்றெளிவாயிற்று. 1787-ம் ஆண்டில் **பிலடெல்பியா** பட்டினத்தில் ஒரு மகாநாடு கூடி, எந்த நியமங்களுக்கிணங்க நாடுகள் ஐக்கியம் பூண வேண்டுமென்பதைத் தீர்மானித்தது. இதுவே பிரசித்திபெற்ற அமெரிக்க அரசியற் திட்டமாகும். இவ்வரசாட்சித் திட்டம் "சமஷ்டி" முறையெனப்படும் ; அதாவது ஒவ்வொரு நாடும் தன்னதிகாரத்தின் பெரும் பகுதியைத் தன்னிடமே வைத்துக்கொள்ளும் ; ஆனால் திட்டமாகக் குறிக்கப்பட்ட சில விஷயங்களில் அந்நாடுகளனைத்தையும் மத்திய அரசாட்சியார் அதிகாரஞ் செய்ய இடமுண்டு. அரசியலமைப்பின்படி, (மந்திரிகளை நியமனஞ் செய்யும் அதிகாரமுட்பட) பல உரிமைகளைப் பெற்ற ஜனாதிபதியும் உயர்தர நீதிமன்றமும், இருவகைச் சட்டசபைகளும்—ஒன்று, **செனற்** என்னும் பெயர் பூண்ட **உயரிய சபை** ; மற்றது, பிரதிநிதிகள் கொண்ட **கீழ்ச்சபை**—உண்டு. செனற் சபையில் ஒவ்வொரு மாகாணமும் இரு பிரதிநிதிகளைக்கொண்டது. இச்சபைக்குப் பெரும் அதிகாரம் உண்டு. கீழ்ச்சபையில் பிரதிநிதித்துவம் சனத்தொகை வாரியாகவே வழங்கப்பட்டது. "சமஷ்டி அர

சியல் முறை'' என்பது நூதனமான ஓர் அரசியல் முறை; இதனைப் பிற்காலத்தில் உலகத்திலே பல நாட்டவர் தமக்கு ஒரு முன்மாதிரியாகக் கொண்டனர். உதாரணமாக, ஜெர்மானிய சாம்ராச்சியம், கனடா, ஆஸ்திரேலியா விரிவான இவ்வதிகாரங்களைச் செலுத்தும் ஜனுதிபதியாக முதன் முதலாகத் தெரிவு செய்யப்பட்டவன், குடியேற்ற நாட்டுக் கலகப் படைகள் வெற்றி பெறுமாறு போர் நடாத்திய **ஜோஜ் உவாஷிங்டன்** என்னும் பிரசித்தி பெற்ற தளபதியே. இவரைப் போன்ற பெரியோருக்குள் தங்நலம் எள்ளளவேனும் இல்லாதவர் வேறெவரும் இல்லையெனலாம். புதிய குடியரசு நாட்டின் கஷ்டமான அரசியல் திட்டத்தை எட்டாண்டு காலத்துக்கு இவன் மிகச் சிறப்புடனே பின்பற்றினன்.

பிரித்தானியாவுடன் போர். மிகவும் சிக்கலானதும் பெருங் கவலையுடன் கவனிக்கவேண்டியதுமான வொரு நிலைமை சீக்கிரமே யுண்டாயது. இதனை விவரிப்பாம்: பிரான்சிலே அரசியற் புரட்சியுண்டான பின், அந்நாடு பிறநாடுகளுடன் போர் புரிந்தது. தாம் சுதந்திரமடைதற்குப் பெரிது முதவிய பிராஞ்சிய நட்பாளருக்குச் சார்பாக, அமெரிக்க ஐக்கிய நாட்டவரும் பிரான்சின் பகைவர்களுடன் போர் புரிவதாகப் பிரசித்தஞ் செய்ய வேண்டுமென்று பல அமெரிக்கர் விரும்பினர். ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டினருக்கு அமைதியான காலம் சிறிது வேண்டுமென்பதை உவாஷிங்டன் உணர்ந்தான்; எனவே பொதுசனங்கள் அவனை யெதிர்த்து அவதூறுகப்பேசின போதிலும், தன்னுடு போரிடுங்கட்சி யெதனையும் சேராது நடுநிலையிலிருக்க அவன் ஒருமனதுடன் பாடுபட்டான். நெப்போலியப் போர் நடந்தகாலத்திலே அமெரிக்கரைப்பற்றின மட்டில் உண்மையில் விளைந்த பிரதான பயன், 1803-ம் ஆண்டில் லூயிசயானுவைப் பிராஞ்சியரிடமிருந்து விலைக்கு வாங்கின தாகும். இதனால் மிஸிஸிப்பி மகாநதியின் கழிமுகத்திலிருந்து வடதிசை நோக்கிய 8 இலட்சம் மைல் பரப்புள்ள பிரதேசம் அமெரிக்க ஐக்கிய நாட்டினருக்குரியதாயிற்று; மேலும் அமெரிக்கர் அக்கண்டத்தில் மேற்றிசை நோக்கிப் பரவுதற்கும் பெருவசதியிருந்தது. ஆனால், பிரான்சும் பிரித்தானியாவும் தம்


ஐக்கிய நாடுகளும் அதனைச் சார்ந்த பிரதேசங்களும்
ஐக்கிய நாடுகளும்
சமஷ்டி நாடுகளும்
சமஷ்டி
1861-ம் ஆண்டு ஏப்பிரல் மீ
15-ந் தேதிக்கு முன்
பிரிந்த நாடுகள்
நாடுகள்
15-ந் தேதிக்கு முன்
பிரிந்த நாடுகள்
200 100 0 200 400 600 மைல்கள்
அடிமைகளிருந்த நாடுகள்
130
120
110
100
90
80
70
40
30
110 கிரீன்விச்சுக்கு மேற்கு

எதிரிகளுடன் வியாபாரஞ் செய்யும் அமெரிக்கக் கப்பல் களைப் பிடித்துக்கொண்டன ; எனவே, அமெரிக்க ஐக்கிய நாடு, இவ்விருநாடுகளுள் யாதேனு மொன்றுடன் போரிட நேரிடு மெனப் பன்முறை தெரிவித்தது. ஐரோப்பியத் துறைமுகங்களுள் பிறநாட்டுக் கப்பல்கள் புகாதபடி பிரித்தானியர் நன்கு தடுத்தமையாலும், பிரித்தானியக் கப்பற் படையினின்றுந் தப்பியோடிய மாலுமிகளை அவர்கள் அமெரிக்கக் கப்பல்களிற் பிடித்தமையாலும், 1812-ம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டினர் பிரித்தானியாவுடன் போரிட்டனர். ஆரம்பத்தில், தனிக்கப்பல்களின் போர்களில் ஓரளவுக்கு அமெரிக்கர் சித்தி பெற்றனர் ; அவர்கள் கனடாவின் மீதும் படையெடுத்துச் சென்றனர். ஆனால் பிரித்தானியரின் கடல் வன்மையும், பிரித்தானியப்படை வரும் வரையில் கனேடியப்படை இடங் கொடாதிருந்ததும், அமெரிக்கருக்கு அதிக வெற்றி யேற்படாது செய்தது. இங்நிலைமையில், 1815-ம் ஆண்டிற், சமாதானஞ் செய்யப்பட்டது. அது முதலாக அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் பிரித்தானியாவுக்கும் போர் மூளவில்லை. வாதத்துக் கிடமான எல்லா விஷயங்களும், நியாயப்படி சமாதான முறையில் தீர்மானிக்கப் பட்டுள்ளன.



ஆப்ரகாம் லின்கன்

மன்ரோக் கொள்கை. 1822-ம் ஆண்டில் ஒரு விசேட விஷயம் அமெரிக்காக் கண்டத்தில் நிகழ்ந்தது. தென், மத்திய அமெரிக்காவிலிருந்த ஸ்பானிய, போர்த்துகீசக் குடியேற்ற

நாடுகள் கலகஞ்செய்து தாம் அயலாருக்குட்படாத சுதந்திர நாடுகளெனப் பிரசித்தஞ் செய்தன. அப்போது அமெரிக்க ஐக்கிய நாட்டு மன்ரோ என்பான், பிரித்தானிய அரசாட்சியாரி னுதரவுடன் இவ்வறிக்கையை அங்கீகரித்ததோடு, இனிவருங் காலத்தில் குணகோளார்த்தத்தில் தமது அதிகாரத்தைப் பரப்ப விரும்பும் எந்த ஐரோப்பிய வல்லரசின் முயற்சியையும் அமெ ரிக்க ஐக்கியநாடு பலமாக எதிர்க்கும் எனவும் பிரசித்தஞ் செய் தான். இதுவே பேர்பெற்ற "**மன்ரோக் கொள்கை**" யாம் ; அக்காலத்திலே இக்கொள்கை, "**அமெரிக்க விஷயங்களி லெவரும் தலையிடுதல் கூடாது**" எனப் பொருள் தந்ததாயினும் இப்போது, அமெரிக்க விஷயங்களில் அமெரிக்க ஐக்கியநாடு கள் நீங்கலாக வேறெதுவும் அங்குள்ள "இலத்தீனக் குடியரசு" களின் விஷயத்திற் றலையிடுதல் கூடாதெனும் பொருள் தரு கின்றது.

அமெரிக்க ஐக்கியநாட்டின் வளர்ச்சி. கடற்கரையைச் சார்ந்த நாடுகளில் விருத்தியடைந்த கைத்தொழில்கள், மித மிஞ்சிய சுங்கவரிகளினால் பிறநாட்டவர் போட்டியினின்றும் காக்கப்பட்டன. தென்னாட்டுப் பயிர்த்தொழிலும் அதனை யாதாரமாகக்கொண்ட தொழில்களும் தீவிரமாக அதிகரித் தன. இவற்றுள் விசேடமானது, பருத்தி. பருத்திப்பஞ்சி லிருந்து விதைகளைப் பிரிக்கும் ஓரியந்திரம் 1793-ம் ஆண்டில் இயற்றப்பட்டது. இது, செப்பனிடப்பெறுத பருத்தியின் ஏற்று மதியை அதிகரிக்கச் செய்தது. இப்பருத்தியிற் பெரும்பகுதி, உலகத்திற் பருத்தித் தொழிலில் தலைமைப்பெற்ற இங்கிலாந்தி லுள்ள இலங்காஷைருக்கு அனுப்பப்பட்டது. பருத்தி யேற்றுமதி அதிகமாகவே தோட்டவேலை செய்பவர் அதிகமாக வேண்டி யிருந்தது. எனவே பருத்தி வயல்களில் உழைக்கக்கூடியவரும் கிடைக்கக் கூடியவருமானவர் நீகிரோவ அடிமைகளாதலினால் மெள்ள மெள்ள குறைந்து வந்த அடிமை வியாபாரம் மீண்டும் பிரதானமாயிற்று ; ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளை அமெ ரிக்காவுக்குக் கொண்டுவரக் கூடாதென 1808-ம் ஆண்டிலே கட்டளையிடப்பட்டது. ஆனால் அமெரிக்காவிலிருந்த நீக்கி ரோவர் வேலை செய்தற்கு போதிய அளவு தொகையிற் கூடி

யிருந்தனர். இவ்வடிமைகள் எப்பொழுதும் நன்முறையில் நடத்தப்படவில்லை.

வட, தென், மேற்குப் பிரதேசங்கள். 19-நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில், அமெரிக்க ஐக்கிய நாட்டின் வட, தென், மேற்குப் பகுதிகளிலிருந்த ஒவ்வொரு சிறு நாடும் தன் சுய கருமங்களில் மாத்திரம் கவனஞ் செலுத்தி வந்தது. வட நாடுகள் செல்வத்திலும் குடிசனத்திலும் மேம்பட்டு வந்தன. ஆயிரக்கணக்கான குடியேற்றக்காரர் ஐரோப்பாவிலிருந்து—விசேடமாக, இங்கிலாந்து, ஸ்கொத்லாந்து, அயர்லாந்து, ஸ்காந்திநேவியா, ஜெர்மனி என்பவற்றிலிருந்து புறப்பட்டு, அத்லாந்திக்குச் சமுத்திரத்தைக் கடந்து கூட்டங் கூட்டமாகக் குடியேறினர். அவர்கள் அமெரிக்க நகரங்களிலும், புதிய வழி களிற் செல்வம் பெறுதற்காக மேற்றிசைச் சென்று அங்குள்ள வயல்களிலுங் குடியேறினர். இவ்வடநாடுகளில் கைத்தொழிற் புரட்சியின் பயனாக, தொழில்கள் பெரு முன்னேற்ற மடைந் தன. பெருந் தொழிற்சாலைகள் தாபிக்கப்பட்டன. பிறநாட்டுப் பொருள்களின் மீது கூடுதலான சுங்கவரி விதிக்கப்பட்டதினால், உள்நாட்டுப் பொருள்கள் போட்டியினின்றுங் காக்கப்பட்டன. தென்னாடுகளில், செல்வம் நிறைந்த தோட்டக்காரப் பிரபுக் களும், சில வறிய வெள்ளையரும், தொகையான நீகிரோவ அடிமைகளும் இருந்தனர். இத்தோட்டக்காரர், குதிரை சவாரி செய்பவர்; அதிகாரஞ் செலுத்தி வந்தவர். இவர்கள் இறக்கு மதிச் சுங்கவரிகள் கூடியதை வெறுத்தனர்; குடியரசுக் கொள் கைகளைப் பெரிதும் போற்றிய வடக்கிருந்த மாந்தர், அடிமை வியாபாரங் கூடாதென்று கூறுவதையும் அவர்கள் விரும்ப வில்லை. மேலும், ஐக்கிய நாட்டினின்றும் பிரிந்துவிடல் நன் றென்றெண்ணு மளவுக்குத் தம் கருமங்களுக்கும் வடக்கிருந் தவர் கருமங்களுக்கும் தொடர்பில்லையெனக் கருதினர். எப் படியும் தம் நாடுகளிற் தம் விருப்பப்படி நடத்தற்கான சுதந் திரத்தை எதுவும் தடுக்கும்படி விடக்கூடாதென அவர்கள் தீர்மானித்தனர்.

ஆனால் நம்மனத்தைக் கவருவது மேற்றிசைப் பகுதியே. வியக்கத்தக்க வகையில், குடியேற்றக்காரர் இங்கு பரவினர்.

முதலிற் சென்ற குடியேற்ற வீரர், காடுவெட்டி, கொடும் விலங்குகளை வேட்டையாடி, நாகரிகமற்ற வனவாசிகளான செவ்விந்தியரைத் தம்முன் துரத்திச் சென்றனர். செவ்விந்தியர்கள் குடியேற்றக்காரரைத் தக்கபடி எதிர்க்கக்கூடிய தொகையினராகவேனும், போதிய ஆயுதங்களை உடையவர்களாகவேனும் இல்லை. குடியேற்றக்காரர், பொதுவாக முரட்டு குணமுடையவர்; இடைவிடாது சண்டை செய்பவர்; கஷ்டமான சீவியத்தை நடாத்துபவர்; ஆபத்தைத் துரும்புபோல் கருதுபவர். ஆனால் அவர்களுக்குப் பெருஞ் சகிப்பு குணமுண்டு; சிறந்த நற்குணங்கள் கொண்டவர். அவர்கள் மேற்றிசைச் செல்லச் செல்ல, அவர்களைக் குடியேற்றக்காரர் தொடர்ந்து, நிலங்களை வயல்களாக்கினர்; பாதைகளையும் பட்டணங்களையும் அமைத்தனர். 1848-ம் ஆண்டில் கலிபோர்னியாவிற் பொன் கண்டுபிடிக்கப்பட்ட விஷயம் அங்கு பொன் தேடுவோர் முதலிற் திரளுதற்கு இடந்தந்தது; மாந்தர் அதிவிரைவிற் குபேர சம்பத்துப் பெறவிரும்பி, உலகத்தினெல்லாப் பாகங்களிலிருந்தும் புறப்பட்டு, ஆயிரக்கணக்காகக் கலிபோர்னியாவை அடையலாயினர். பொற் சுரங்கங்கள் வேறு இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட, ஏராளமான மக்கள் அவைகளை நாடி விரைந்தனர். அவற்றில் பிரதானமானது தூர வடக்கிலுள்ள அலாஸ்காவில் கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கம். அலாஸ்காவின் மிகப்பெரிய நிலப்பரப்பு 1867-ல் ருஷ்யாவிடமிருந்து கொள்ளப்பட்டது. அவர்கள் புதிதாகக் குடியேறிய பிரதேசங்களில் புதிய நாடுகளேற்படுத்தப்பட்டு ஐக்கிய நாட்டுடன் சேர்க்கப்பட்டன. சில நாடுகள், மெக்சிகோவினிடமிருந்து பலவந்தத்தினுற் பெறப்பட்டன; சில ஒப்பந்தத்தினுற் பெறப்பட்டன. ஆனுற் பெரும்பாலான நாடுகள், முதலில் குடியேறியவர்களின்பின் பலர் குடியேறினமையாலேற்பட்டன. இதுகாறும் உலகத்தில் நடந்த உள்நாட்டுப்போர்களுள் மிகப் பெரியதுவடநாடுகளுக்கும் தென்னாடுகளுக்கு மிடையே மூண்டபோது, அமெரிக்க ஐக்கிய நாட்டினபிரிவுத்தியில் மேற்றிசைப் பிரதேசம் மிகப் பிரதானமாயிற்று.

அமெரிக்க உள்நாட்டுப் போர். 1850—1860-ம் ஆண்டுகளில், அடிமைப் பிரச்சனை மிக நெருக்கடியான நிலைமையை

யடைந்தது. அடிமைகளைப் பூர்ணமாக விடுவிப்பதை நோக்க மாகக் கொண்ட இயக்கம் வடநாடுகளில் வன்மை கூடியிருந்தது. "**தோம் மாமாவின் குடிசை**" ("Uncle Tom's Cabin") எனும் மனதை உருக்கும் பிரசித்தி பெற்ற கதையை அரியட் பீச்சர் ஸ்தௌ அம்மாள் 1852-ம் ஆண்டில் வெளியிட்டனர். இதிலே நீகிரோவ அடிமைகளின் துயரங்கள் எடுத்துக் காட்டப் பட்டன. இப்புத்தகம் தொகையாக விற்கப்பட்டதோடு சனங் களின் உள்ளத்தையும் உருக்கியது. ஆனல் தென்னுட்டினரோ தமது செல்வநிலை அடிமைகளின் உழைப்பையே முற்றிலும் ஆதாரமாகக் கொண்டிருந்ததென நம்பினர்; அடிமைகளை நீக்குவதினும் பார்க்க அவர்கள் தாங்கள் ஐக்கிய நாட்டினின் றும் விலகுவதாகப் பிரசித்தஞ் செய்தனர். கூடுமாயின் மேற் றிசையிற் புதிதாக ஏற்பட்ட நாடுகளிலே, அடிமைகளிருப்ப தைத் தவிர்க்க வேண்டுமென வடநாட்டினர் தீர்மானித்ததை அவர்கள் சினந்தனர். வடநாடுகளிற் குடிசனம் பெரிதுமதி கரிப்பதும், மேற்றிசையிற் புதிய நாடுகளின் தொகை கூடு வதும் சேர்ந்து அடிமைகளை விடுவிக்கும்படித் தங்களைக் கட் டாயப்படுத்தலாமென அவர்கள் பயந்தனர். எனவே, விருப்ப மானபோது ஐக்கிய நாட்டினின்றும் பிரிந்து போதற்குத் தமக் குரிமை யுண்டென அவர்கள் உறுதி கூறினர். 1859-ல் யோன் ப்றௌன் என்றொருவன் ஆயுதங்களைக் கைப்பற்றி அடிமைகளின் புரட்சியைக் கிழப்பினன். இவன் தூக்கில் இடப்பட்டான். ஆயினும், அடிமை ஒழிப்பு வாதிகளுக்கு இவன் செயல் ஓர் போர் அறையாயிருந்தது.

1860-ம் ஆண்டில், குடிநாட்டு ஜனதிபதித் தெரிவு செய் யப்பட்டபோது மேற்றிசை நாடுகளைச் சேர்ந்த **ஆபிரகாம் லின்கன்** என்பவன் தெரிவு செய்யப்பட்டான். அடிமைகளைத் தென்றிசை நாட்டினர் விடுவிக்க வேண்டுமென லின்கனுக்கு யாதொரு நோக்கமு மிராதபோதிலும் அந்நாடுகள் பிரிந்து போதற்கு விடப்படா என்பதற்கு அவனின் தெரிவு ஒரு அறி குறிபோலாயிற்று. தென்றிசைக் கோடியிலிருந்த பருத்தி விளையும் ஆறுநாடுகளே இவ்வாறு முதன் முதலாகப் பிரிந்தன. ஆனல் லின்கனே பெருந் தன்மை கூடியவன்; பலாபலன்

களைத் தீர ஆலோசித்து நடப்பவன். யாது நிகழினும் ஐக்கிய நாடு களின் ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டுமென அவன் தீர் மானித்து, சமஷ்டியினின்றும் பிரிதற்கு எந்நாட்டிற்கும் உரிமை யில்லையெனத் திட்டமாகக் கூறியதோடு, அவ்வாறு பிரிவதைத் தண்டோபாயத்தினாலும் தடுக்கத் தொண்டர்கள் வேண்டு மெனப் பிரசித்தஞ் செய்தான். இச்செய்கை, பரந்த வெர்ஜி னியா நாடுட்பட அடிமைகளுள்ள நான்கு நாடுகளை முன்னரே கலகஞ் செய்த ஆறு நாடுகளுடன் சேரச்செய்ய, உள்நாட்டுப் போர் தொடங்கியது. முதலில் தென்னாட்டினர் (' கொன் பெடரசி ') வெற்றி பெற்றனர் ; ஆனால் வட நாட்டினரோடு மேற்றிசையினருஞ் சேர, படைவீரரின் தொகை, செல்வம், படையமைப்பு என்பனவற்றின் மேலான நிலைமையினால் தென் னாட்டினர், விடாது எதிரிட்ட போதிலும், தோற்கடிக்கப்பட்ட னர். மேலும் வட நாட்டினரின் கப்பற்படை, தென்றிசையிற் பருத்தியை ஏற்றுமதி செய்யும் துறைமுகங்களுள் எவரும் நுழையவோ வெளியேறவோ விடவில்லை. ஏறக்குறைய 5 இலட்சம் வீரர்கொண்ட படையுந் திரட்டப்பட்டது. 1865-ம் ஆண்டளவில், தென்னாட்டுத் தலைவர்கள் வட நாட்டினருக்கு இணங்க வேண்டியிருந்தது. 1862-ம் ஆண்டிலேயே, எல்லா அடிமைகளுக்கும் விடுதலை யளிக்கப்பட்டதென்று லின்கன் பிரசித்தஞ் செய்தான் ; இதற்கும், ஐக்கிய நாட்டினின்றும் தாம் பிரிதற்குரிமையில்லை யென்பதற்கும் அவர்கள் ஒப்ப வேண்டியிருந்தது. சமாதான மேற்பட்ட ஐந்து நாட்களின்பின் லின்கன் படுகொலை செய்யப்பட்டிறந்தான். அவன் தன் கட்சியினரை ஒற்றுமை பூணச் செய்து, ஐக்கிய நாடு அழியா திருக்கப் பாடுபட்டு வந்ததில் புகழுக்குரிய தொண்டு புரிந்தா னெனலாம். **''ஆண்டவன் திருவருளினாலே இச்சாதி மீண்டும் சுதந்திரப் பேற்றை அடையவேண்டு மென்பதும், குடிசனங் களுக்காக, குடிசனங்களால் நடத்தப்பெறும் குடியரசானது இப் பூமண்டலத்திலிருந்து அழிந்துபோதல் கூடாதென்பதும் எனது உறுதியான தீர்மானம்''** என்று அவன் கூறியுள்ளான்.

அமெரிக்கருக்கு இப்போரி லேற்பட்ட கஷ்டநஷ்டங்களை நிவாரணஞ் செய்தற்கிராது லின்கன் இறந்துபோனது துரதிர்ஷ்

டமே. வெற்றிபெற்றகட்சியினர், முன்பு அடிமைகளின் சொந்தக்காரராயிருந்தவரை பெருக்கத் தொடங்கினர்; எனவே ஐக்கிய நாட்டினுெரு பாகமாயிருப்பது தமக்கு நன்மையே யென்று தென்னுடுகள் உணருதற்குப் பலவாண்டுகளாயின. உண்மை கூறுமிடத்து, வட, மேற்றிசை நாடுகள் செல்வத்திலுந் தொகையிலும் மிகத் தீவிரமாக விருத்தி யடைந்து வந்ததினுல், இதற்கு வெகு காலத்துக்கு முன்பே ஓரளவுக்குத் தென்னுடுகள் தம் பிரதான மிழந்துபோயின.

எல்லையைப் பற்றின பிரச்சனை. 1846-ம் ஆண்டில அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து கனடாவைப் பிரிக்கும் எல்லையைப்பற்றின ஏற்பாடு பிரித்தானிய அரசாங்கத்தாருடன் சமாதானமாகவே செய்யப்பட்டது. இவ்வேற்பாடு "**ஓரகன் உடன்படிக்கை**" எனப்படும். இது உலக சமாதானத்துக்கான செயல்களில் மிக விசேடமாகும். ஏனெனில், அதுமுதலாக, 'உலகத்திலே மிக நீண்டதும் தரை வழியே செல்வதுமான இவ் வெல்லையைக் காக்க யாதொரு காவற்படையும் வேண்டியிருந் ததில்லை. பிரித்தானியர் சாம்ராச்சியத்துக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் வாதங்களேற்படுவதுண்டு. ஆனுல் இவை யெல்லாம் போர் மூளாமலே எப்போதும் திருப்திகரமாகத் தீர்க் கப்பட்டுள்ளன.

செல்வ விருத்தி. அமெரிக்க ஐக்கிய நாடு குடிசனத்தி லும் செல்வத்திலும் விருத்தியடைந்தது. மேற்றிசையில் புதிய நாடுகள் ஏற்படுத்தப்பட்டு "ஐக்கிய நாட்டு"டன் சேர்க்கப்பட் டன; இதனுல் நாடுகளின் தொகை 48 ஆயிற்று. மேற்றிசை யில் கோதுமை விளையும் செழுமை வாய்ந்த சமவெளிகளைப் பலன்தரச்செய்வதில் புகைரதப் பாதைகளும், நீராவிக் கலப்பை, தானியங்களை உலர்த்து மியந்திரம் போன்ற கமத்தொழி லியந்திரங்களும் பெரிதும் பங்கு பெற்றன; அயல்நாட்டினர் பெருந்தொகையாக இந்நாட்டை யடையலாயினர். விசேட மாய் இவர்கள் தென், கீழ் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்; சீனர் யப்பானியர் பலரும் கலிபோர்னியாவை யடைந்தனர். தம் நாட்டில் அங்கிலோ-சாக்சன் சாதியாரே குடியேற விரும்பும் அமெரிக்கர், புதிதாக வந்த இவர்களைப் பெரும்

ஐயத்துடன்—வெறுப்புடன் கூட—ஏற்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டினுள் ஆசியர் புகுவதைத் தடுக்கக் கடும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. பெருங் கைத்தொழில்கள் நடைபெறுமிடங்களில், ஷிக்காகோ, டெட்ரூய்ட் போன்ற பெரிய நகரங்கள் அதிசயிக்கத்தக்க வகையிலே ஏற்பட்டன; உண்மையில் அமெரிக்க ஐக்கிய நாடு பலவகைக் கைத்தொழில்களில் தலைமைபூண்டு விளங்கியது. பலர் கோடீசுவரர்களாயினர்; சம்பளவிகிதம், பரும்படியாக ஐரோப்பாவில் கொடுக்கப்படுவதினும் கூடுதலாகவே இருந்தது. சிறிது சிறிதாக வளரும் நாட்டுக் கைத்தொழில்களை அபாரமான இறக்குமதி வரிகள் அந்நியரின் போட்டியினின்றும் காத்தன.

அமெரிக்காவுக்கப்பால் ஐக்கிய நாட்டினரின் அதிகார பரவின வரலாறு. அமெரிக்காவுக்குப் புறம்பான விஷயங்களிற் தலையிடாதிருப்பதே எப்போதும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொள்கையாக விருந்தது. ஆனால் 1897-ம் ஆண்டில் அந்நாட்டரசாட்சியார் பரந்த பசிபிக்குச் சமுத்திரத்தில் தமக்குள்ள கருமங்களின் பிரதானத்தை யுணர்ந்து சமோவாத் தீவி னெருபகுதியைத் தமதாக்கி, அடுத்த ஆண்டில் ஹாவாய்த் தீவுகளையும் பிடித்துக் கொண்டனர். அதே ஆண்டில் ஸ்பெயினுடன் போர் தொடுத்தனர்; அதன் பயனாய் வல்லரசாகிய ஸ்பெயின் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து இறுதியாகத் துரத்தப்பட்டது; அதோடு, அமெரிக்க ஐக்கிய நாட்டினர் பசிபிக்குச் சமுத்திரத்தில் பிலிப்பைன் தீவுகளிலிருந்தும் ஸ்பானியரைத் துரத்தி அவற்றையும் பிடித்துக் கொண்டனர். பசிபிக்குச் சமுத்திரத்திலே அமெரிக்க ஐக்கிய நாட்டினருடைய வன்மை அதிகரித்தமையும், அமெரிக்க ஐக்கிய நாட்டுள் யப்பானியர் குடியேறுவது தடுக்கப்பட்டமையும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் யப்பானுக்கும் மனத்தாங்கலுண்டாக்கியது; இந்தப் பகைமையானது நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருவதாயிற்று. இத்துடன் யப்பானியப் போர்த் தலைவர்கள் பசிபிக் சமுத்திரப் பகுதியிலே போர் தொடங்குதல் வேண்டுமெனக் கொண்டிருந்த எண்ணங்களும் சேர்ந்திருந்தன. அக் காரணத்தினாலேயே 1941-ம் ஆண்டு

டிசெம்பர் மாதத்தில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களை யப்பான் தாக்குவதாயிற்று.

தென்னமெரிக்காவைச் சுற்றிச் செல்லும்போது அங்குள்ள நீண்ட அபாயமான வழியை நீக்கக்கூடிய ஒரு கால்வாயை, மத்திய அமெரிக்காவிலுள்ள பனமா பூசந்தியில் வெட்டியதும் இன்னொரு மிக விசேடமான செய்கையாகும். இப் பிரதேசத்திலிருந்த மலேரியா நுளம்புகளை அழித்து அந்நோயை முற்றுக நீக்கினது விஞ்ஞான சாத்திரிகளின் பெரும் வெற்றிகளுள் ஒன்றுகுமென்க.

அமெரிக்க ஐக்கிய நாடுகளும் முதலாவது உலகப் பெரும் போரும். 1914-ம் ஆண்டில் ஐரோப்பாவிற் பெரும் போர் மூண்டபோது, அமெரிக்க ஐக்கிய நாட்டினரின்—விசேடமாக, மேற்கு பகுதியினரின்—கருத்து, அந்நிய விஷயங்களிற் றலையிடுதல் கூடாதென்னும் பழைய கொள்கைப் படியே நடக்கவேண்டு மென்பதாம். ஆனால் அமெரிக்கக் கப்பல்களை ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் தாக்கின; குடியரசுக் கொள்கைக்கே ஆபத்து விளையுமென மேன்மேலும் திடமாக நம்ப இடமிருந்தது. இவையே ஜெர்மனிக் கெதிராக ஆங்கிலேயருடனும் அவர்களின் நண்பர்களுடனும் குடியரசின் ஜனாதிபதியான உட்ரோ உவில்சனைச் சேரும்படித் தூண்டின. போரிடும் நாடுகளுக்கு யுத்தப் பொருட்களையும் ஏனையவற்றையும் கொடுத்துதவியதினால் ஐக்கிய நாட்டுக் கைத்தொழிற் சாலைகளின் முதலாளிகள் பேரூதியம் பெற்றனர்; போரிடுபவரும் போரினாலேற்பட்ட பொறுக்கொணாச் செலவுக்காகப் பெருந்தொகையை அமெரிக்காவிலிருந்துக் கடனாகப் பெற்றனர். 1917-ம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடும் இப் போரிற் பங்குபெற்றது; அவர்களின் கப்பற்படை உடனே உதவியது; ஆனால், ஓரளவுக்கு ஆங்கிலேயப் படைத்தலைவர்களாலும், சினேக வல்லரசுகளின் படைத்தலைவர்களாலும் பயிற்றப்பட்ட தரைப்படை அடுத்த ஆண்டு வரையில் திறமையுடன் உபயோகிக்கப்படவில்லை. அதன் பிறகு அப்படை மத்திய வல்லரசுகளை முற்றுக முறியடிப்பதில் பெரிதும் உதவியது. சமாதான நிபந்தனைகளைத் தீர்மானிப்பதில் உட்ரோ

உவில்சன் பெரும் பங்கு பெற்ருன். முக்கியமாய் அவனுடைய கருத்துப்படியும் அவன் முயற்சியினலுமே சர்வதேச சங்கம் தாபிக்கப்பட்டது. ஆனல் இதற்குப்பின், அமெரிக்கர் பிற நாட்டு விவகாரங்களிற் றலையிடுதல் கூடாதென்னும் அபிப் பிராயம் முன்போல மீண்டுங் தலையெடுத்தது; புதிய சமாதான ஏற்பாட்டில் தாங்கள் பங்கு பெறக்கூடாதென அவர்கள் தீர்மானித்தனர். இந்தப் போரின் பயனகவே 'உலக அரசியல்' விவகாரங்களுள் உலகத்திற் பலம் மிகுந்த தனி நாடு என அமெரிக்க ஐக்கிய நாடுகள் திரண்டு வருவனவாயின. இதற் குப்பின், சில காலமாக 'தனிமை நிலை'யினைச் சார்ந்து நின்ருலும், 1942-ம் ஆண்டில் மீட்டு மொருகால் விடுதலைக் காகப் போர் புரியவேண்டி நேர்ந்து விட்டது. ஜெர்மானியரும் யப்பானியரும் கொண்டிருந்த போர்ச் சன்னதத்தை முற்றிலும் இல்லாதொழிக்கு மட்டிலும் அவர்கள் ஓய்ந்திருக்கவேயில்லை.

இரண்டாவது உலகப் போரின்போது அமெரிக்க ஐக்கிய நாடுகள் புரிந்தனவற்றின் வரலாறும் போர் முடிவுற்ற பின்னர் இப்பெரிய நாடு உலகில் பெற்றுள்ள உன்னத பதவியைப் பற்றியவைகளும் இந்நூலின் இறுதி அத்தியாயங்களிலும் கூறப்படும்.

உதவிக் குறிப்புக்கள்.

உலகத்தேயுள்ள ஏனைய நாடுகளினும் பார்க்க அமெரிக்க ஐக்கிய நாடு செல்வத்திலும் வன்மையிலும் தலைசிறந்து தற்காலம் விளங்குகின்றது. அந்நாட்டவர் சுதந்திரம் பெற்றது முதலாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் இவ்வத்தியாயத்திற் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. அவை பிரித்தானியக் குடியேற்ற நாடாக இருந்த வரலாற்றையும், பிரித்தானியா வின் பூர்வீக சரித்திரத்தையும் இப்புத்தகத்தில் கூறுதல் இயலாது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் சரித்திரத்தில் பிரதான விஷயங்களாவன: அந்நாடு அமெரிக்காக் கண்டத்தில் மேற்றிசை நோக்கிப் பரவினமை: நாட்டின் ஐக்கியத்தைப் பற்றி இரு பிரிவினருமிட்ட மகத்தான உள்நாட்டுப் போர்; சனத்தொகை, செல்வம், கைத்தொழில் ஆதியவற்றி லேற் பட்ட தீவிர விருத்தி; அந்நாட் டரசியலமைப்பு—விசேடமாக, சமஷ்டி முறை—ஆகிய இவை நாம் கவனித்தற்குரியன. அந்

நாட்டவரின் நாகரிகமும் நாம் ஆராய்வதற்கான ஒரு முக்கிய விஷயமே ; ஏனெனில், அறிஞர் சிலர், உலகமுழுவதும், **" அமெரிக்க மயமாகின்றது "** எனக் கூறியுள்ளனர். பிற நாட்டரசியல் விஷயங்களைப் பற்றின மட்டில்—குணகோளார்த்தத்தைப் பற்றின விவகாரங்களில்—ஒதுங்கி நிற்க அமெரிக்கர் முயன்றுள்ளனர். ஆனால், அந்நிலைமை மென்மேலும் கஷ்டமான காரியமென அவர்கள் கண்டனர். மேலும், ஐக்கிய நாட்டவரின் நாகரிகம் [நீகிரோவர் நீங்கலாக] முற்றுக ஐரோப்பிய நாகரிகத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

சில பிரதான நிகழ்ச்சிகள்

1776. அமெரிக்க ஐக்கிய நாட்டின் சுதந்திரம் பிரசித்தஞ் செய்யப்பட்டது.
1783. இச்சுதந்திரம் பிரித்தானியாவினால் அங்கீகரிக்கப் பட்டது.
1787. அமெரிக்க அரசியலமைப்பு திட்டமாக்கப்பட்டது.
1812-13. பிரித்தானியாவுடன் போர்.
1822. " மன்ரோக் கொள்கை " பிரசித்தப்படுத்தப் பட்டது.
விஞ்ஞான சாத்திர விருத்தி ; சமுதாயச் சுகவாழ்வு 227
1846. பிரித்தானியாவுடன் " ஓரகன் " எல்லை தீர்மானிக்கப் பட்டது.
1861-65. வடநாட்டுப் பிரிவினருக்கும் தென்னாட்டுப் பிரிவினருக்கும் போர்.
1865. ஆபிரகாம் லின்கன் கொலை செய்யப்பட்டான்.
1867. ருஷ்யாவிடமிருந்து அலாஸ்கா விலைக்குவாங்கப் பட்டது.
1898. ஸ்பெயினுடன் போர்.
1917. அமெரிக்க ஐக்கிய நாடு உலகப் பெரும் போரில் தலையிட்டது.

19. விஞ்ஞான சாத்திர விருத்தி ; சமுதாயச் சுகவாழ்வு

விஞ்ஞான சாத்திர அறிவு விருத்தியடைந்த வரலாறு. சர்வ சாதாரணமான பொருட்களை உண்டாக்குவதிலும், நெடுந்தூரம் பிரயாணஞ் செய்வதிலும், தூரத்திலுள்ளவருடன்

தந்தி, தபால் தொடர்பு ஏற்படுத்துவதிலும் விஞ்ஞான சாத்திரக் கருத்துக்களைச் செய்கையிற் கையாண்டதினால் பல பெரிய மாறுதல்கள் உண்டாயின வென்பதை நாம் 3-ம் அத்தியாயத்திற் கண்டோம். 19-ம் நூற்றாண்டு முழுவதிலும் விஞ்ஞான அறிவு மென்மேலும் விருத்தியடைந்து வந்தது. இங்கு, "விஞ்ஞானம்" என்பது, கணித, பௌதிக, இரசாயன, இயந்திர, சீவிய—சாத்திரங்களை ஆதாரமாகக் கொண்ட அறிவே குறிக்கப்படும். ஒவ்வோர் ஐரோப்பிய நாட்டிலும், அமெரிக்க-ஐக்கிய நாட்டிலும், யப்பானிலும், விஞ்ஞானிகள் பல முக்கியமான விடயங்களைக் கண்டு பிடித்த தோடு, பெரிய மனதுடன் ஒருவருக்கொருவர் உதவியுஞ் செய்தனர். விஞ்ஞான சாத்திரம் ஒரேயொரு நாட்டினருக்கு அல்லது சமுதாயத்தினருக்கு மாத்திரம் உரியதன்று; மற்று, எவருக்குமுரியது; கூட்டுறவு முறையில் உழைத்தற் கேற்றது; மானிடரின் அடிப்படையான ஒற்றுமையைக் காட்டுவது—என்பனவற்றை நாம் மனத்திற் கொள்ளவேண்டும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்களிற் பல, வைத்தியம், சுகாதாரம், சுத்த உணவு ஆதியவற்றிற் போன்று, மானிடரின் நன்னிலைமையை விருத்தி செய்யப் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வோராண்டிலும் இன்னமும் மேலான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அற்பமே கண்டுபிடிக்கப்பட்டது, இன்னும் அதிகம் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது, இவைகளால் கணக்கற்ற நன்மாற்றங்கள் மக்கள் வாழ்வில் ஏற்படும், என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

வைத்தியமும் சுகாதாரமும். வைத்தியம் என்பது பிணிகளை அவதானித்தலும், அவற்றுக்குச் சிகிச்சை செய்து பிணி வாய்ப்பட்டவரைக் குணமடையச் செய்தலுமாம்; சுகாதாரம் என்பது நோய் வராமல் தடுக்கும் வழிகளாம். இவற்றைப் பற்றிக் கண்டறியப்பட்ட விஷயங்கள் எண்ணிறந்தவை; விரித்துக் கூறுதல் இயலாத செய்கை எனினும், பிரதான விஷயங்களைச் சுருக்கமாகக் கூறவாம்: ஜெர்மானியனான கோக் என்பவனும், பிராஞ்சியனும் விஞ்ஞான சாத்திரியுமான பஸ்டூர் என்பவனும், மானிட சரீரத்தினுட் கிருமிகள் இருப்ப

திலுல் நோய் சாதாரணமாக உண்டாகின்றதெனக் கண்டு பிடித்தனர். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இதனை, சத்திர சிகிச்சையில் பயன்படுமாறு **லிஸ்டர்** செய்தனர். சத்திர சிகிச்சைக்குபயோகப்படுபனவற்றைக் கிருமி நாசினிகளாற் சுத்தஞ் செய்து, அவ்வழியே நோய்க்கிருமிகளைக் கொன்று பலரை அவர் காப்பாற்றினர். **சிம்சன்** என்னும் ஆங்கிலேய வைத்தியர், '' குளோரோபாம் '' என்னும் மயக்க மருந்தினுப யோகத்தைக் கண்டுபிடித்தனர். இம்மருந்தை உபயோகித் தால் சத்திர சிகிச்சை செய்யும்போது நோயாளிக்கு உணர்ச்சி யிராது. இன்று பிற சிறந்த மயக்க மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ''ரேடியம்'', ''X கிரணங்கள்'' என்பவையும் வைத்தியஞ் செய்வதிற் பெரி தும் பயன்படுகின்றன. வருங்காலத்தில் அவை இன்னமுமதிக மாக உபயோகிக்கப்படு மெனலாம். வைத்தியர்கள், நோய் களை ஆராய்ந்து அவற்றை அகற்றவோ அல்லது குணமாக் கவோ தேவையான வழிவகைகளை இடைவிடாது தேடிவரு கின்றனர். கயம், பிளவை, மலேறியா என்பவற்றைத் தடுப்

லிஸ்டர் பிரபு

பதிலும் அவற்ருற் பீடிக்கப் பட்டோரைக் குணமாக்குவ திலும் பெருங் கவனஞ் செலுத்திவருகின்றனர். மென்மேலுமாராய்ச்சி செய் வதினுல் இந்நோய்களைக் குணமாக்குதற்கான மரு ந்துகளைக் கண்டுபிடித்தல் கூடுமென இவர்கள் பூரண நம்பிக்கை கொண்டுள்ள னர். நோயைத் தடுப்பதற் கான சிறந்த வழிகளும் ஆராயப்பட்டு வருகின்றன. நாகரிக முறையில் அர சாட்சி நடைபெறும் எந் நாட்டிலும் ஆண் பெண் இரு பாலாரும் கூடியவரையில்

சுகாதார விதிகளுக் கியைந்த இடங்களில் வாசஞ் செய்யவும் குழந்தைகளை வளர்க்கவும் இடைவிடா முயற்சிகள் செய்யப்படுகின்றன. சுத்தமான உணவு, நீர், குழந்தை பராமரிப்பு ஆதியவற்றைப் பற்றியும், ஏனைய சுகாதாரக் காப்புவிதிகளைப்பற்றியும் பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன. ஏனெனில், அவற்றை ஒவ்வொருவருங் கவனித்து அவற்றின்படி நடக்கக் கற்பிக்கப்பட வேண்டியதும் ; அவற்றைப்பற்றிப் போதிக்கத் திறமை வாய்ந்தவர்களை அரசாட்சியார் தங்கீழ் வைத்திருக்க வேண்டியதும் ; தக்க முன்னேற்பாடுகளைச் செய்து தமக்கும் பிறர்க்கும் சனங்கள் தீங்கு விளைவிக்காதவாறு சட்டங்களை உண்டாக்கி அவற்றின்படி அனைவரும் நடக்குமாறு திறமையாக ஏற்பாடுகள் செய்யவேண்டியதும் மிக அவசியமாகும். இவ் விஷயங்களில் நாமனைவரும் ஒத்துழைக்க வேண்டியது கடமையாம். அதற்கு இன்றியமையாதன இரண்டு. (1) தக்க அறிவு ; (2) இடைவிடா முயற்சி.

விஞ்ஞான சம்பந்தமான வேறு விஷயங்கள். உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளின் உண்மையான தன்மையையும் உபயோகங்களையும் கண்டறிதலே விஞ்ஞான சாத்திரத்தின் பெரு நோக்கமாம். பிரபஞ்சத்தி னியற்கை, உருவம், கோள்களி னசைவுகள் ஆதியவற்றைக் கூறும் **வான சாத்திரம், கோள சாத்திரம்** ; பூமியின் மேற்றளத்தினதும், உள்ளிருக்கையினதும் அமைப்பைக் கூறும் **பூமி நூல்; தாவர சாத்திரம்; விலங்கு சாத்திரம்** ; உயிரற்ற, உயிருள்ள பொருள்களினமைப்பைக் கூறும் **இரசாயன சாத்திரம்** ; இயற்கைச்சக்திகளின் செயல்களைக் கூறும் **பௌதிக சாத்திரம்** ; மானிடரின் நடத்தையைக்கூறும் **உள நூல்** ; மானிட வர்க்கத்தினரின் சரித்திரத்தையும் விருத்தியையுங் கூறும் **மானிட சாத்திரம், மானிட கண சாத்திரம்** ; இன்னும் இவைபோன்ற பல்வேறு விஷயங்களைப்பற்றின ஆராய்ச்சிகள் விஞ்ஞான முறைப்படி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட விஞ்ஞான விஷயமெல்லாம் எமது அறிவைப் பெருக்கியுள்ளன ; ஆனால் அவற்றை விவரிக்கப் பரிபாஷைச் சொற்களை உபயோகிக்க வேண்டியிருக்குமாகையினாலே இங்கு யாம் விரித்துக் கூறவில்லை.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்களுட் பல, மானிடரின் சுகத்தையும் நல்வாழ்க்கையையு மதிகரித்தற்குப் பயன்தரு வகையிற் பிரயோசனப்படுத்தப்பட்டுள. விஞ்ஞான முறைப்படி பசளை யிடுவதினால் காணிகளிலிருந்து கூடின விளைவைப் பெறுவதற்குக் கமசம்பந்தமான விஞ்ஞான சாத்திரம் உதவியுளது. மின்சாரமென்னும் பெருஞ் சக்தி பயன்தரும் பல்வகைக் கருமங்களிலும் உபயோகப்படுகின்றது. சீதள நிலையிற் பொருட்களைச் சேமித்ததால், அவற்றை நெடுந்தூரங் கொண்டு போகவும், தேவைப்படும்வரையில் கெடாதுவைக்கவும் இயலுகின்றது; தாவரங்களை அழிக்கும் புழுபூச்சிகளிற் பல பெரும் பாலுமாக அழிக்கப்பட்டுள்ளன. இரும்பும் சீமேந்துங் கொண்டு பலமுள்ள மிகப் பெரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதியாச்சரியமான நுட்பத்துடனும் திட்டத்துடனும் வேலை செய்யக்கூடிய இயந்திரங்களை அமைப்பதற்கு மிக விலையுயர்ந்த உலோகங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறுமிடத்து, விஞ்ஞான சாத்திர அறிவின் பெருக்கத்தினால் ஏற்படும் சீர்திருத்தங்களை கணக்கிட்டுக் கூறுதலியலாது.

பரோபகார முயற்சிகளும் அவற்றின் நல்விளைவும். இப்பூவுலக மாந்தரின் சீவிய நிலைமையை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட சிறந்த இயக்கங்கள் பல சென்ற நூற்றைம்பதாண்டுகளில் உண்டாயின. பிறர் பிணியால் வருந்துவதையும் பல இடுக்கண்களுக்குள்ளாவதையும் சனங்கள் இப்போது சகிக்கலாற்றாதவராய், அவற்றை நீக்க முயன்று வருகின்றனர். இத்தொண்டிலீடுபடுமாறு இக்காலத்தவர் அரசாட்சியாரையும் வற்புறுத்துகின்றனர். முன்னிலும் மேலான வாழ்க்கையை ஏற்படுத்துவதற்குப் புரியவேண்டுவன அதிகமிருப்பினும், இத்துறையிற் பெருந்தொண்டு செய்யப்பட்டிருப்பது நாம் கவனிக்க வேண்டியதே.

தொழில் முயற்சிகளில் முன்னேற்ற மடைந்துள்ள மேனாடுகள் தாம் பரோபகார முயற்சிகளிற் றலைமைப்பெற்று விளங்குகின்றன. மேனாட்டவர் பரோபகாரமாகச் செய்த முதற்கருமம், பெரிய தொழிற்சாலைகளுள்ள பட்டணங்களிற் சேரிவாசஞ் செய்யும் தொழிலாளிகளின் கீழான நிலைமையைக் கூடுமான

வழிகளிற்றிருத்தியதேயாம். குழந்தைகளைத் தொழில்புரியச் செய்யும் வழக்கம் சிறிது சிறிதாக நின்றுவிட்டது. தொழிற் சாலைகளும், முன்னேபோல் தொழிலாளிகளுக்கு எளிதில் அபாயம் ஏற்படாத வகையிலும் ஆரோக்கியத்துக்குகந்தனவா யும் இப்போது அமைக்கப்பட்டுள்ளன ; அவர்கள் வேலை செய்யும் நேரமும் குறைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, தொழிலாளிகள் நாடோறும் சில மணித்தியாலத்துக்குச் சுத்த பவனமுள்ள இடத்தில் இருத்தலும் இளைப்பாறுதலும் கூடும். அவர்கள் போதிய உணவின்மையாற் பசிப்பிணிக்காளாகி வருந்துவதை நீக்குதற்காக, அவர்களின் வேதனங்களை உயர்த் தப் பெருமுயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. தொழில் புரிகை யிற் காயமடைந்தவருக்கு நட்டஈடு அளிக்கப்படுகின்றது ; நோயுற்ற அல்லது வேலையற்ற தொழிலாளிகள், நன்கு குண மடையும் வரையிலோ அன்றேல் வேலை பெறும் வரையிலோ பணவுதவி பெறுதற்குத் தேசீய முறையிலே வீம முறைப்படி யான ஏற்பாடுகள் விரிவாகச் செய்யப்பட்டுள்ளன. பிணி யாளருக்கு இலவச சிகிச்சையளிக்க ஆசுபத்திரிகள் நிறுவப் பட்டுள்ளன. ஆதரவற்ற முதியவர்களுக்கு ஒரு சிறுதொகை உபகாரச் சம்பளமாக அளிக்கப்படுகின்றது. அநாதைகளுக்கு ஊண், உடை, இருப்பிடம், சிறுசெலவுக்கான பணம் ஆதியன பிரசித்த அநாதைச் சாலைகளில் அளிக்கப்படுகின்றன. விசேட மான நோய்களால் வருந்துபவருக்குச் சிகிச்சை யளிக்கவும் குழந்தைகளை தக்கவழியில் வளர்க்கு முறைகளைத் தாய்மாருக் குப் போதிக்கவும் வைத்தியசாலைகள் தாபிக்கப்பட்டுள்ளன. மாந்தர் களைப்பாறவும், தேகசுகந் தரும் விளையாட்டுகளிற் பங்குபெற்று மகிழ்ச்சியடையவும் பொதுப் பூந்தோட்டங்க ளமைக்கப்பட்டன ; இக்காலத்தில் குழந்தைகளுக்கெனப் பிரத்தியேகமான தோட்டங்களும் உண்டு. சுகாதார விதிக் கிணங்காத வீடுகள் இடித்து விடப்படுகின்றன ; கூடினவரை யில் சுகாதார விதிகளுக்கியைந்த வீடுகளே கட்டப்படுகின்றன. சமையலுக்கும் போசனத்துக்குமான அறைகள் துப்புறவாக வைக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கவனிக்கவுங்கூடப் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் ; இஃதேனெனில்,

அசுத்த உணவை உண்பதினாலேயே நோய்கள் பல உண்டாகின்றன வென்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுத்த நீரையும் பாலையும் அளிப்பது இதனிலும் முக்கியமாகும். பல பட்டணங்களிலும் பிரிவுகளிலும் அங்குள்ளோரே வேண்டிய சுத்தநீரைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைத் தாமாகவே செய்து கொள்கின்றனர்; இந் நீரைச் சுத்தமாக வைத்திருப்பதிற் பெருங் கவனஞ் செலுத்தப்படுகின்றது; ஆனால் சுத்தமான பால் கிடைப்பது கஷ்டமான வொரு விஷயம்; ஏனெனில், கறவைப் பசுக்கள் துப்புரவாகவும் நல்ல தேகசுகத்துடனும் வைத்திருக்கப் படவேண்டும்; இவற்றைப்பற்றி பசுக்கள் மேயும் காணிக் குரியவர்களும், பால்பண்ணைக்காரரும் விசேடமாகக் கவனிப் பதில்லை.

இதுகாறுங் கூறியவை மேனாடுகளிலேற்பட்டுள்ள பரோபகாரமான சீர்திருத்தங்களுக்கு ஒரு சில உதாரணங் களாம். இவற்றுட் சில, எளிய நாடுகளிலும் நாகரிகங் குறைந்த நாடுகளிலுங்கூட கையாளப்படுகின்றன. ஆனாலி வற்றைச் செய்யப் பெருந்தொகை செலவழிக்கவேண்டுமென்ப தையும், சமூக சேவைக்குப் போதுமான இத்தொகை கிடைத் தற்காக நாட்டினர் கஷ்டப்பட்டுழைத்தாலொழிய, சீர்திருத்தங் கள் செயற்படா என்பதையும் நாம் நினைதல் அவசியமாகும். எல்லா நாடுகளிலும் இச்சீர்திருத்தங்கள் அதிகமாக நடை பெறுமலிருப்பதற்கு மேற்கூறியதே காரணமாகும்.

கல்வி. பொதுவாக, பாடசாலைகளிற் கற்பிக்கப்படு வதையே "**கல்வி**" எனுஞ்சொல் குறிக்கும். குழந்தைக்குப் படிக்கவும், எழுதவும், சிந்திக்கவும் கற்பிக்கப்படாவிடின் அதனறிவு அதிகம் விருத்தியடையாது; அதோடு எண் கணித அறிவைப் பயிற்சியினாற் பெறவேண்டியிருக்கின்றது. இக் கல்வியை ஆதாரமாகக்கொண்டு மென்மேலும் அறிவை விருத்தி செய்துகொள்ளலாம். முற்காலத்திற்போன்று இவ் வாதாரக்கல்வி ஒரு சிலர்க்குமாத்திரமேயிராது அனைவருக்கும் வேண்டுமென்பதை மக்கள் 19-ம் நூற்றாண்டில் அறிந்து கொண்டனர். பல நாடுகளிலே, பிள்ளைகளைக் குறிப்பிட்ட வயதுவரையில் கல்வி கற்கச் செய்கின்றனர். நன்கு கற்கும்

பிள்ளைகள் இன்னும் சில ஆண்டுகள் படித்து, பிரதம பாடசாலையினின்றும் நீங்கின பிறகு, உயர்தரக் கல்வி பெறுகின்றனர். சிறுவர்கள் பாடசாலையினின்றும் நீக்கினபோது, அன்றேல், யுவர்களும் யுவதிகளும் தாம் தெரிவுசெய்த உயர்தரக் கல்விப் பகுதியைப் பூர்த்தி செய்தபோது, தாமே மேன்மேலும் படிக்கவும், வாழ்க்கையிற் தம் சீவனோபாயத்துக்கான தொழிலைப் பற்றி விவரமாக அறியவும், நாட்டின் நற்பிரசைகளாகவும், பயிற்றப்படுகின்றனர். பாடசாலைகளைத் திறந்து அவற்றை நடாத்தப் பெருந்தொகை வேண்டியிருப்பதினால், கல்வி பயிலுவதற்கான இத்தகைய ஏற்பாடு எல்லா இடங்களிலும் செய்யப்படவில்லை. ஆனால், பாலர் கல்வி பயிலுதற்கான பாடசாலைகளைத் தாபிப்பது தங்கடமையே என்பதை எல்லா அரசாட்சியாரும் ஒத்துக்கொள்கின்றனர்.

கல்வி, மக்கள் தம்மறிவை உபயோகித்தற்குக் கற்பிப்பதோடு, அவர்கள் தம்முடலையும் தக்கபடி பயன்படுத்துதலெவ்வாறெனப் பயிற்றுகின்றது. இக்காலத்தில் தேகப் பயிற்சிக்கான விளையாட்டுக்களிற் பங்குபெறுவதினால் உடலுக்கு உரமும் மனதிற்கு மகிழ்ச்சியும் உண்டாகின்றன. சீராக அமைக்கப்பட்ட கூட்டுப்பந்தயங்களும் விளையாட்டுக்களும் நெடுங்காலமாகப் பிரித்தானியாவில் நடைபெற்று வருகின்றன. ஏனைய ஐரோப்பிய சாதியினரும் அவற்றின் அருமையையும் இன்றியமையாத் தன்மையையும் இப்போது உணர்ந்து வருகின்றனர்.

பெண்களின் நிலைமையில் ஏற்பட்டுள்ள மாறுதல். சமீப காலத்தில் பெண்மக்களின் நிலைமையில் ஏற்பட்டுள்ள மாறுதலும் நாம் கவனித்தற்குரியது. விசேடமாக முதலாவது உலகப் பெரும் போருக்குப்பின் இம்மாறுதல் பல நாடுகளில் தெளிவாகக் காணக்கிடக்கின்றது. இதுகாறு மிருந்தவாறு பெண்கள் ஆண்களுக்குக் கீழான நிலைமையில் இராது, சமநிலை பெறும்படிச் சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன. சில நாடுகளில் அரசியற்றொடர்பான விஷயங்களில் அவர்களுக்கு சமவுரிமை அளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனில், அவர்களுக்கு வாக்குரிமையும் சட்டசபைகளிலும்

அரசாட்சியாரின் பல பகுதிகளிலும் அங்கத்தினராகு முரித்தும் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வுரிமைகளைப் பெறு தற்காக, செல்வாக்குள்ள "பெண்களின் இயக்கம்" பல நாடு களில் உண்டாயது. இவ்வியக்கம் உலகப் பெரும் போருக்குப் பின் அநேகமாய்ச் சித்திபெற்றது; அதன் பயனைப் பெண்கள் உரிமைகளைப் பெற்றனர். இதற்கு விலக்காயிருந்த நாடுகள் பிரான்சும் இத்தாலியும் மாத்திரமே என்க. செல்வமோங்கச் செய்தற்கான விஷயங்களிலும் சமுதாய விஷயங்களிலும் ஆட வருடன் பெண்டிரும் தீவிரமாகவே சமநிலை யடைந்து வருகின் றனர். அதோடு, அவர்கள் அநேக உத்தியோகங்களை வகிக்க வும், தொழில்களைப் புரியவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சில நாடுகளிற் பெண்கள் வழக்கறிஞர்களாகவும் மந்திராலோசனை சபையினங்கத்தவர்களாகவும் விளங்குகின்றனர். சமுதாய சீர் திருத்தத்துக்கான முயற்சிகளிற்பெண்மக்கள்முன்னணியில்நிற் கின்றனர். உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியை ஒழிப்பதற்கான சட்டமேற்படுதற்கு ஸ்திரீகளின் தெரிவுச் சீட்டு களே பெரிதுங் காரணமாய் நின்றன. விளையாட்டுக்களிலும் போட்டிப் பந்தயங்களிலுங்கூட அவர்கள் முனைந்து நின்றார்கள். பெண்கட் கெனப் போட்டிப் பந்தயங்களும் ஒலிம்பிக் விளை யாட்டுகளும் நடத்தப்பெறுகின்றன. 1930-ம் ஆண்டில் ஆமி ஜான்சன் என்னும் ஆங்கில மாது, பெருஞ் சிரமமானதும் உயி ருக்கு ஆபத்துவிளைக்கக்கூடியதுமான ஆகாயவிமானப்பய ணத்தை இங்கிலாந்திலிருந்து நெடுந் தொலைவிலுள்ள ஆஸ்தி ரேலியாவுக்குச் செய்தாள். துணைவர் யாருமின்றி அவள் செய்த இச்செயல், மாந்தரிடையே பெருங்கிளர்ச்சி உண்டாக்கியது. ஆண் பிள்ளைகளுக்குக் கல்வி இன்றியமையாதது போலவே பெண் பிள்ளைகளுக்கும் கல்வி அத்தியாவசியமென சனங்கள் இப்போது கருதுகின்றனர். புருஷரைப் பார்க்கப் பெண்கள் திட்டமாகத் தாழ்ந்தவ ரென்னுங் கருத்து பாரம்பரியமாய் வழங் கிய கீழ்த்திசை நாடுகளிலுங்கூட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவிலும், ஏனைய ஆசிய நாடுகளிலும், ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது; சர்வதேசப் பெண்களின் போட்டிப் பந்தயங்களில் ஆசியப்

பெண்களும் பங்கு பெறுகின்றனர். அரசியற்றுறையியக்கங்களிற் சீனப்பெண்கள் யப்பானியரின் தாக்குதலுக்கு எதிராக நின்று தமது நாட்டைக் காப்பதில் முக்கியமான பங்கெடுத்துக் கொண்டார்கள். இந்தியாவிலும் சீனத்திலும் பெண்கல்விக்குக் கூடுதலான கவனமளித்து வருகின்றனர்.

இரண்டாவது உலகப் பெரும்போர், முன்னெல்லாம் ஆண்கள் மாத்திரம் செய்வனவாக அமைந்திருந்த தொழில்களைப் பெண்கள் செய்வதையும் கண்டுவிட்டது. ஒருசில பெண்கள் போர்வீரர்களாகச் சேவைசெய்து வீரத்துடன் நின்று போரும் புரிந்தார்கள். பெண்களுடைய நிலைமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் பயன்கள் அளவற்றனவாயிருக்கும். அவைகளையெல்லாம் இவை யிவையென்று இப்போது கண்டு கொள்ள முடியாது. எப்படியென்றாலும், வருங்காலத்து உலக விவகாரங்களில் பெண்களது சேவை மிகவும் அதிகமாயிருக்கும் எனபதில் ஐயமேயில்லை.

கீழைத் தேசப் பெண்மணிகள் அரசியல் விஷயங்களிற் கூடுதலாகப் பங்குபற்றிக்கொள்ளுகின்றனர்; இவர்களிற் சிலர் பாராளுமன்ற அங்கத்தினராகவும் அமைந்துள்ளனர். கீழைத் தேசப் பெண்மணிகளின் தலைவரிடையே, சமூக நலத்தை வளர்ப்பதற்கான மாபெரும் இயக்கமொன்று நடைபெறுகிறது. இம்மகோன்னத கருத்துக்காய்க் கூட்டப்பெறும் உலக ஆலோசனைச் சங்கங்களிலெல்லாம் ஆசிய பெண்மணிகளும் தமக்குரிய சேவையிற் கலந்து கொள்வதைக் காணலாம்.

உதவிக் குறிப்புக்கள்.

இக்கால சரித்திரத்தில் நாம் அவதானிக்கக்கூடிய இரு பிரதான விஷயங்கள் இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளன; அவையாவன—விஞ்ஞான சாத்திர அறிவு நாம் வியப்புறும் வகையில் விசால மடைந்து வருகின்றது; உலக மாந்தரின் சேமத்தில் பல்வேறு நாட்டினரும் கருத்துக் கொள்கின்றனர்—என்பனவாம். மக்களின் சேமத்தைப் பெருப்பிப்பதற்கு விஞ்ஞான சாத்திர அறிவானது பெரிதும் உதவியுள்ளது; நோய்கள் உண்டாகாதும் அவை பரவாதும் செய்வதிலும், நோயாளிகளைக் குணப்படுத்துவதிலும் விஞ்ஞான சாத்திரம் உதவுகின்

றது. ஆரம்பத்திற் குறித்த இரு பிரதான விஷயங்களும் சர்வ தேசங்களுக்கும் பொருந்தும் ; பல நாடுகள் அரசியல் விஷயங் களில் மாறுபட்டும் எல்லைகளினற் பிரிக்கப்பட்டு மிருப்பினும் இவ்விஷயங்களில் மாத்திரம் ஒரே நோக்கமுடையவை. சுகா தார ஏற்பாடுகளை வற்புறுத்த அவ்வத்தேசத்து அரசாட்சியார் முயலவேண்டும் என்பதை மாத்திரம் ஈண்டு நாம் குறிப்பிடுதல் வேண்டும். முற்காலத்திற் சனங்கள் வாழ்ந்து வந்த வகை யைச் சரித்திர வாயிலாகப் படித்தறியு மெவனும், வறியவரின் நல்வாழ்க்கையைப் பற்றி முற்காலத்து மாந்தரும் அரசாட்சி யாரும் கொண்டிருந்த எண்ணங்களுக்கும் இக்காலத்து மாந்த ரும் அரசாட்சியாரும் கொண்டுள்ள எண்ணங்களுக்கு முள்ள வேறுபாட்டைத் தெள்ளிதில் உணர்வன். நாகரிகமடைந்துள்ள மாந்தரின் முதலாந் தேவை எவரும் கல்வி பயிலவேண்டியதே என்பதை யாவரும் ஒத்துக்கொள்வர்; பிள்ளைகளின் அறியா மையைக் கல்விமூலம் நீக்குதற்கான முயற்சிகள் ஒவ்வொரு கண்டத்திலுஞ் செய்யப்படுகின்றன. இவ்வாறு செய்தாற்றான் உலகத்தாரனைவரும் நாகரிகமடைதல் கூடும்; இதன் பயனைக் கல்விமான்களின் தொகை அதிகரிப்பதினாலே, இந்நூற்றாண் டினிறுதியில் சனசமுதாயமானது உலக சரித்திரத்தில் இது காறுங் காணப்பட்ட எச்சன சமூகத்துக்கும், முற்றிலும் அவற் றிக்கும் மாறாய், மேலான நிலையிலிருக்குமென்பதற்கைய மில்லை. ஆண் மக்களுக்குக் கீழ்ப்பட்டவரெனப் பல நூற் றாண்டுகளாகக் கருதப்பட்டு வந்த பெண்மக்கள் இப்போது உலகத்தினெப்பகுதியிலும் சமநிலையடைந்து வரும் பெறுமாறு தல் ஈண்டு இறுதியாக கூறப்பட்டுள்ளது. இவ்வத்தியாயத்திற் காணப்படும் பிரதான நிகழ்ச்சிகட்கு காலங்குறிப்பது கடினம்.

20. மூவர் ஒப்பந்தமும் மூவர் நட்பும்*

1870-ம் 1914-ம் ஆண்டுகளுக்கிடையில் ஐரோப்பாவி னிலைமை. துருக்கியின் வன்மை குறைந்ததினாலே ஐரோப்பாவி லேற்பட்ட சிக்கலான நிலைமையில் பல்வேறு நாடுகளும் ஆழ்ந்த கவனஞ்செலுத்தின வென்பதை நாம் முன்னரே படித்தோம். இவற்றிற்சில, உலகத்திற் பல்வேறிடங்களில் பரந்த பிரதேசங் களைப் பெற்றிருந்தன வென்பதையுங் கண்டோம். இவ்விரு

* The Triple Alliance and the Triple Entente.

விடயங்களிலும் நாடுகள் முரண்பட, மனத்தாபமேற்பட்டது. அதோடு பிரான்சிய-ஜெர்மன் போரினாலும் நெருக்கடியான நிலைமை யேற்பட்டது; செழுமைவாய்ந்த தமது அல்சேசு-லோறேன் மாகாணங்களை ஜெர்மானியர் பிடுங்கியதைப் பிரான்சியர் மறக்கவுமில்லை; ஜெர்மானியரை மன்னிக்கவுமில்லை; ஜெர்மானியரோ குடியேற்ற நாடுகளைப்பெறுவதிலும் அவற்றைப் பரப்பித்தலிலும் பிந்தியதனாலே, ஏனையோரிடம் அழுக்காறு கொண்டனர்; பிரான்சியர் குடியேற்ற நாடுகளைப் பெற்றிருப்பதைக் கண்டு பொருமையடைந்த ஜெர்மானியர், பிரித்தானியரின் குடியேற்ற நாடுகளைக் கண்டபோது முன்னிலுமதிகமான பொருமை கொண்டனர். இது போன்ற விஷயங்களினாலே, நாடுகளுக்கிடையே சிக்கலான விடயங்கள் பல தோன்றின. அவற்றை யெல்லாம் செவ்வென விளங்கிக்கொள்வதற்கு முதலாவது உலகப்பெரும் போரும் இரண்டாவது உலகப் பெரும் போரும் ஏற்பட்டதற்கான காரிய காரணங்களையும் அப்போர்களின் வரலாற்றினையும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். ஐரோப்பிய அரசியல் நிபுணர்களிற் பெரும்பாலார், அநேகமாய் எல்லா நாட்டினரும், சமாதான நிலைமையே வேண்டி நின்றனர்; ஆனல் அவசியமாயின் இறுதியாகப் போர்புரியவும் ஆயத்தமாயிருந்தனர். தம் நாட்டை போரிடச் செய்ய சில நாடுகளின் தலைவர்கள் விரும்பினர்: பேராவல் கொண்டிருந்தனர் எனினும் பொறுந்தும். வல்லரசுகள் தம்முள் போட்டியிட்டு, சமாதான நிலையை உடன்படிக்கைகள் மூலம் தாபிப்பதான "**சமபலக் கொள்கை**" முறை நிலையற்றதா யிருந்தது; போர்க்கட்சியினர் எந்நாட்டிலேனும் அதிகாரச் செல்வாக்குடனிருப்பின் இச்சமநிலை அழியக்கூடியதே. 1914-ம் ஆண்டுக்கு முன்னதாகவும், பின்னர் 1939-ம் ஆண்டில இரண்டாவது உலகப் பெரும்போர் தொடங்குவதற்கு முன்னதாகவும் இது நடைபெறுவதாயிற்று.

1870-ம் ஆண்டுக்குப்பின் ஜெர்மனியின் நிலைமை. பிஸ்மாக்கின் பிரதான கவலையெல்லாம் புதிய சமஷ்டி ராச்சிய அரசியல் முறையிற் புதிய ஜெர்மானிய சக்கராதிபத்தியம் பழகுதற்குப் போதுமான காலம் கொடுக்க வேண்டுமென்பதாம். இதற்

குச் சிறந்தவழி, ருஷ்யாவுடனும், ஆஸ்திரியா-ஹங்கரியுடனும் ஒருவகை யேற்பாடு செய்துகொண்டு, பிரான்சு தானிழந்த மாகாணங்களைப் பெற முயலாதவாறு மேலே குறிப்பிட்ட இரு நாடுகளுடன் அது உடன்படிக்கைகள் செய்ய முடியாதபடி தனிப்படச் செய்வதேயன்று அவனுக்குத் தோற்றியது. ஆஸ்திரியா-ஹங்கரியுடன் ஜெர்மனிக்குச் சிநேகப்பான்மை சீக்கிரத்திலேயே ஏற்பட்டது; ஆனால் ருஷ்யாவைப் பற்றினமட்டில் இது கஷ்டமாயிருந்தது. 1875-ம் ஆண்டில் பிரான்சைப் பிஸ்மாக் அச்சமுறுத்தியபோது, ருஷ்யச் சக்கரவர்த்தி அவனை எதிர்த்து நின்றான். மேலும் பெர்லின் மகாநாட்டில் பிஸ்மாக்கின் போக்கைக்கண்டு அவன் அதிருப்தியடைந்தான். 1879-ம் ஆண்டில் அவன் ஆஸ்திரியா-ஹங்கரியோடு ஒருடன்படிக்கை செய்துகொண்டதோடு, 1881-ம் ஆண்டில் ருஷ்யாவுடன் முன்போல்வே சிநேகம் பூண்டான்; இதில் ஆஸ்திரியாவும் பங்கு பெற்றது. இவ்வொற்றுமை 'சக்கரவர்த்திகள் மூவரின் சங்கம்' எனப்பட்டது. ஆனால், பால்க்கன் பிரச்சனையைப்பற்றி ருஷ்யாவும் ஆஸ்திரியா-ஹங்கரியும் எக்காலத்திலும் உண்மையாக ஒருமித்த எண்ணங்கொண்டதில்லை; ஏனெனில், ருஷ்யர், சிலாவிய சாதியருள் சிறந்தவர். ஆனால் ஆஸ்திரிய-ஹங்கேரியச் சக்கரவர்த்தியோ, தொகையிலும், பலத்திலும் சிலாவியர் பெருக்கமடைவதை விரும்பாததோடு, அவர்கள் பெருக்கமடையின் என்ன செய்வதெனவும் அஞ்சினான். ஆகவே இச் சங்கம் நெடுநாள் நிலைக்கவில்லை.

அதிகாரத்திற் பெரும் பகுதியைப் பிருஷ்ய மன்னர்களுக்களிக்குமாறு ஜெர்மனியின் புதிய அரசியல் முறை அமைக்கப்பட்டது. பிருஷ்ய மன்னன், ஜெர்மானியச் சக்கரவர்த்தியானான்; பிஸ்மாக்கே அவனுடைய பிரதமசக்கராதிபத்திய மந்திரி. சேனைகளின்மீது பூரண அதிகாரமும், செயலளவிற் பிற நாட்டரசியல் விஷயங்களிற் சர்வாதிகாரமும் இருவருக்கும் அளிக்கப்பட்டது. போர்ப்படைக் கட்சியின் தலைவர்கள் இவர்களை முற்றுக ஆதரித்தனர். ஆகவே பிருஷ்ய தளபதிகள் ஜெர்மானிய அரசாங்கத்தில் பெருஞ் செல்வாக்குடையராயிருந்தனர். என்றாலும் பிஸ்மாக் மந்திரியாயிருக்கும் வரை சகல அதி

காரத்தையும் தனதாக்கிக் கொண்டான். மக்கள் சபை (றீஸ்ராக்) சைனியத்திற்கு மேலதிகம் பணமுதவுவதை மறுக்கும் அதிகாரம் பேற்றிருந்தும், ஒற்றுமையீனத்தினாலும், பிருஷ்யாவின் செல்வாக்கினாலும், அது அவ்வதிகாரத்தைப் பயன்படுத்த முடியவில்லை.

ஜெர்மனி பெருப்பிக்கப்பட்ட வரலாறு. 1884-ம் ஆண்டு வரையில் ஜெர்மானியக் கப்பற்படையை வன்மையுடைய தாக்குவதிலோ அன்றேல் ''திரைகடலோடிக்'' குடியேற்ற நாடுகளைப் பெறுவதிலோ பிஸ்மார்க்கு அதிக கவனஞ் செலுத்தவில்லை. ஆனால் குடியேற்ற நாடுகளையடைய ஜெர்மானியருக்குப் பேரவா உண்டாயது; அப்படி யடையக்கூடிய குடியேற்ற நாடுகளைப் பிறரினின்றுங் காத்தற்கு வன்மையுள்ள கப்பற்படை அமைத்தலவசிய மென்பதும் தெளிவாயிற்று. இவ்வாறு ஜெர்மானியர் தமது கடற்படையை வலுப்படுத்தியது பிரித்தானியாவுடன் இருந்த உறவைப் பாதித்தது.

ஜெர்மானியச் சக்கராதிபத்தியத்திற் கவனித்தற்குரிய இன்னொரு விசேட விஷயம் வியாபாரத்திலும் கைத்தொழில்களிலும் ஏற்பட்ட ஆச்சரியமான அபிவிருத்தியாகும். இவற்றை விருத்தி செய்ய ஆர்வத்துடன் உழைக்கவும், வியாபாரத்துக்குத் திறமையான ஏற்பாடுகள் செய்யவும் அவர்கள் முன் வந்தனர். இம்முயற்சிகளில் அவர்களுக்கு அரசாட்சியாரின் நேர்முகமான ஆதரவுகிடைத்தது. இதன் பயனாக, ''ஜெர்மனியிற் செய்யப்பட்டது'' என்னும் குறி பொறிக்கப்பெற்ற பொருட்கள் உலகில் வியாபாரத் தலமெதிலும் காணப்பட்டன. இங்ஙனம் ஜெர்மனி, பிரித்தானியாவும் அமெரிக்க ஐக்கிய நாடும் நீங்கலாக ஏனைய நாடுகளெல்லாவற்றினும் பார்க்கச் செல்வத்திற் சிறந்து விளங்கியது; கைத்தொழில்களில் முதற் தானம் பெறுதற்கு அது போட்டியிட்டு அப்போட்டியில் விரைவிற் சித்திபெறும் போலிருந்தது.

வல்லரசுகளின் சம பல நிலை. 1882-ம் ஆண்டில் இத்தாலி ஜெர்மனியினுடனும் ஆஸ்திரியா-ஹங்கரியுடனும் தற்காப்புக்கான உடன்படிக்கை செய்துகொண்டது. இது ''மூவ

ருடன்படிக்கை'' எனப்படும். வட ஆப்பிரிக்காவிலிருந்த தூனி சைக் கைப்பற்ற இத்தாலி எண்ணியிருந்தபோது அதனைப் பிரான்சு பிடித்துக்கொண்டது; இச்செய்கை இத்தாலியருக்குப் பெருஞ் சினத்தை உண்டாக்கியது. இவ்வுடன்படிக்கையின் நியமங்களின்படி, மூவருள் ஒருவரை எவையேனும் வேறிரு நாடுகள் எதிர்ப்பின், உடன்படிக்கை செய்துகொண்ட மற்ற இரு நாடுகளும் அந்நாடுகளுடன் போர்புரிதல் வேண்டும்; ஆனல், இம்மூன்று நாடுகளுள் ஒன்று தானுகவே இன்னெரு நாட்டுடன் போர் செய்யின், அப்போது மற்ற இரு நாடுகளும் அதற்குதவிபுரிய வேண்டியது கடமையாகாது. இதன்படி ஜெர்மனியையேனும் இத்தாலியையேனும் பிரான்சு தாக்கினுல், உடன்படிக்கை செய்த மற்ற நாடுகள் உதவ முன்வரும். இவ்வுடன்படிக்கை தமக்கு விரோதமாகவே ஏற்பட்டதென்பதையும் தம் நோக்கங்களும் நிலைமையும் ஒன்றே யென்பதையும் பிரான்சும் ருஷ்யாவும் உணர்ந்தன. இதனுலே 1891—1895-ம் ஆண்டுகளுக்கிடையே இவ்விரு நாடுகளும் சமாதானப் பேச்சு நடத்தி அதன் பயனுக நெருங்கிய உடன்படிக்கை செய்துகொண்டன.

1888-ம் ஆண்டில் இளவரசனை உவில்லியம், பிருஷ்யா, ஜெர்மனி ஆகியவற்றுக்கரசனுக முடிசூடினன். ஜெர்மானியச் சக்கராதிபத்தியத்தின் கரை தரைப்படைகளைப் பெருப்பிக்க அவன் தீர்மானித்திருப்பதை முடிசூடினவுடனே அவன் செய்த பகிரங்கச் சொற்பொழிவுகள் தெளிவாக்கின. உவில்லியம் தானுகவே ஆட்சிபுரியத் தீர்மானித்து, ஈராண்டுகளுக்குப்பின் அரசியல் நிபுணனை பிஸ்மாக்கை மந்திரி பதவியிலிருந்து நீக்கினன். அவன் பல துறைகளிலும் பிஸ்மாக்கைப் போலவே அரசியற் கருமங்களை நடாத்திவந்தபோதிலும், அவனுக்கேனும் அவனுக்குப் புத்திகூறி வந்தவர்க்கேனும் மதியூகியான பிஸ்மாக்கின் திறமையிற் சிறிதுமில்லை. ஜெர்மானியச் சக்கராதிபத்தியத்திற் பிரசைகளுக்கு உண்மையிற் சிறிதளவுக்கே அதிகார மிருந்ததினுலும், படையின் பொருட்டுக் கட்டுப்பாடின்றி ஏராளமான தொகை செலவானதினுலும் அதிருப்தி உண்டாயது. ஆயினும், புதிதாகப் பெற்ற உயர் நிலையில் ஓரளவுக்குப் பெருமையும் அவ்வுயர் நிலை இன்னுமோங்க வேண்டுமென்னும்

பேரவாவும் அதே சமயத்திற் காணப்பட்டன. இது போன்ற எண்ணங்களே அரசாட்சியார் குடிகளின் மனதில் ஊக்குவித்தனர்; ஆசிரியர், பாடசாலைச் சிறுவர்களுக்கும் சர்வ கலாசாலை மாணவர்களுக்கும் சரித்திர பாடங்களைப் படிப்பிக்கும்போதும், சொற்பொழிவுகள் நிகழ்த்தும்போதும், கடுமுறைகளைக் கைக்கொண்டெழுகியேனும் ஜெர்மனியை அவர்கள் மேனிலைக்குக் கொண்டுவர வேண்டுமெனப் போதிக்குமாறு அரசாட்சியார் கட்டளை யிட்டனர். ''ஜெர்மானியக் கப்பற் படைச் சங்கம்'' போன்ற கழகங்கள் இதே நோக்கத்துடன் தாபிக்கப்பட்டன. ஜெர்மனி முழுவதிலும், தேசீய உணர்ச்சியும் சாதியபிமானமும் இராசபக்தியும் ஓங்குதற்கான பிரசாரஞ் செய்யப்பட்டு வந்தது. அரசாட்சியைக் கண்டனஞ் செய்வதும், சர்வதேச சோஷலிஸ்ட் கொள்கைகளைப் போதிப்பதும் மும்முரத்துடன் எதிர்க்கப்பட்டதோடு, சில சமயங்களில் அடக்கவும் பட்டன. இதே விதக் கல்விமுறை (இத்துணை உக்கிரமாக வன்றியெனினும்) பிரான்சிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் பின்பற்றப்பட்டது.

இரண்டாவது கைசர் உவில்லியம்

ஜெர்மனியும் பிரித்தானியாவும். இதுகாறும் கூறியவற்றிலிருந்து ஒன்றுக்கொன்று எதிரிட்டு நிற்கும் இரு கட்சிகள் உண்டென்பதும், ஒவ்வொரு கட்சியிலும் உடன்படிக்கையிற்பிணைக்கப்பட்ட வல்லரசுகள் உண்டென்பதும் தெளிவாகும். ஐரோப்பிய வல்லரசுகளுள் பிரித்தானியா மாத்திரமே இக்கட்சிகளிற் சேர வில்லை. பிரித்தானியத்தலைவர்கள் ஐரோப்பிய விஷயங்

களில் அநாவசியமாகத் தலையிட விரும்பவில்லை. இக்கொள்கையை "உன்னதத் தனிநிலை" என்று அவர்கள் கூறினர். ஐரோப்பாக் கண்டத்து நிகழ்ச்சிகளில் பிரித்தானியா தலையிடாதிருக்கலாம்; ஆனால் ஐரோப்பியரின் செல்வாக்கு உலகமுழுவதும் பரவியிருந்ததோடு, பிரித்தானியரின் கருமங்களும் நோக்கங்களும் ஏனைய ஐரோப்பியரினதோடு பலவழிகளில் தொடர்பும் பூண்டிருந்தன. பிரித்தானியர் சூடானை இரண்டாம் முறை வென்ற போது, பிரான்சுடன் வாதமேற்பட்டது. பிரித்தானியாவுக்கும் டச்ச குடியரசு நாடுகளுக்கும் தென்னப்பிரிக்காவில் போர்மூண்ட காலத்து, ஐரோப்பிய நாடுகள் பல (சிறப்பாக ஜெர்மனி) போயர்களிடம் விசேட அநுதாபம் காட்டின. இந்நிகழ்ச்சிகளின் பயனாக, பிரித்தானிய அரசியல் நிபுணர்கள், தாம் இதுகாறும் பின்பற்றி வந்த உன்னதத் தனி நிலையைக் கைவிட்டு, 1902-ல் முன்னேறிவரும் யப்பானிய வல்லரசுடன் நேச உடன்படிக்கை செய்தனர். முன்னரே ருஷ்யாவுடனும் ஜெர்மனியுடனும் ஒரு நேச உடன்படிக்கை செய்ய முயன்றும், அது முடியவில்லை. ஆகையால், பிராஞ்சியரே தமக்கு வப்பான நண்பர் எனக் கண்டனர். ஜெர்மானியர் தம் கப்பற்படையை விரைவிற் பெருப்பிக்கவும், திறமையுடைய தாக்கவும் தொடங்கினபோது, "எவரைத் தாக்க இக் கப்பற்படை சித்தஞ் செய்யப் படுகின்றது?" எனப் பிரித்தானியத் தலைவர்கள் ஆழ்ந்து யோசித்தபோது அப்படை தம்மைத் தாக்கவே என்னும் முடிவுக்கு வந்தனர். இதனால் பிரித்தானியா, பிராஞ்சுக்கும் தனக்கும் நெடுங் காலமாக வாதத்துக்கிடமாயிருந்த பல விஷயங்களை முடிவு செய்துகொண்டு 1904-ம் ஆண்டில் அதனுடன் "மனம் உவந்த நட்பு" ("Entente Cordiale") பூண்டது. திட்டமாக உடன்படிக்கை செய்துகொள்ளாவிடினும் இரு நாடுகளும் சிநேகப்பான்மையுடனிருந்தன. அதே சமயத்தில், வடகடலிலிருந்த கப்பற்படையை இரு நாட்டினரும் பலப்படுத்திக் கொண்டனர். இச்செய்கை ஜெர்மானியருக்குக் கலவர முண்டாக்க உதவியதெனலாம்.

போர்ப் பாசறை. இங்கிலேக்கு, குறிப்பாக யாதேனும் ஒரு நாடு அல்லது உடன்படிக்கையினால் ஒற்றுமை பூண்ட ஒரு சில

நாடுகள் மாத்திரமே, பொறுப்பாளிகள் எனக்கூறுதல் உண்மை யன்று. ஒவ்வொறு நாட்டுக்கும் முறைபாடுகள் உண்டென்பது தெளிபு. ஏனையவற்றினும் பார்க்க ஜெர்மனியும் ஆஸ்திரியா-ஹங்கரியும் பிறருடன் வலுவிற் போர் செய்ய சித்தமாயிருந் திருக்கலாம். மேலதிகமான ஜெர்மானியர் ஜெர்மனிக்குப் புறம்பாகக் குடியேறவும், ஆனல் அப்போதும் ஜெர்மனிக்கு உட்பட்டிருக்கவுமான பிரதேசங்களை அந்நாட்டவர் நாடினர்; அதோடு ஜெர்மனியிற் செப்பஞ் செய்தற்கான மூலப்பொருட் கள் உள்ள நாடுகளைப் பெறவும் ஜெர்மனி விரும்பி நின்றது. ஜெர்மனியின் ஆதரவுடன், பால்க்கன் நாடுகளுக்கு நட்டமுண் டாக்கித் தன் ராச்சியத்தைப் பெருப்பிக்க ஆஸ்திரியா-ஹங்கரி விரும்பியது. ஆனல் இரு நாடுகளும் ருஷ்யாவிடம் அச்சங் கொண்டிருந்தன. தாமிழந்த அல்சேஸ்-லொறேன் மாகாணங் களைப் பெறுதற்காகப் பிராஞ்சியரில் ஒரு பகுதியினர் போரிட வுஞ்சித்தமாயிருந்தனர். ஜெர்மானியக் கப்பற்படையினபி விருத்தியினலும், குடியேற்ற நாடுகளைப் பெறுதற்கு ஜெர்மனி செய்த முயற்சிகளினலும் பிரித்தானியா மென்மேலுங் கவலை கொண்டது. ஆனற் பொதுவாக ஏனைய நாடுகளினும் பார்க்கப் பிரித்தானியா, சமாதானத்தையே நாடி நின்றது. போரினல் அது பெறுதற்கான நற்பயன் யாதுமில்லை. ஆஸ்திரியா-ஹங் கரிக்கும் ஜெர்மனிக்கு மெதிராகப் பால்க்கனியச் சிலாவிய ருக்கு ஆதரவளிக்கவும், செல்வத்திலும் வன்மையிலும் கீர்த்தி யிலுங் குன்றிய ருஷ்ய சாரின் அரசாட்சிக்குக் கூடிய உதவி புரியவும் சித்தமாயிருந்த செல்வாக்குள்ள ஒரு போர்க்கட்சி ருஷ்யாவிலிருந்தது. இக்கட்சியைச் சார்ந்தவர்களும் போருக் குப் பெருங் காரணமாயிருந்தனர் என்று யாம் குறைகூற வேண்டி யிருக்கின்றது. உண்மை யாதெனில், எங்கும் அர சாட்சிமுறை பிழைபட்டிருந்தது. அந்தந்த நாட்டவர் கொண் டிருந்த கர்வத்தையும் அழுக்காறையும் அடக்க ஒன்றுமில்லை. போர், ஓரிராக்கதச் செயல், அருவருக்கத் தக்கது என்னு மெண்ணம் மாந்தரனைவரிடமுங் காணப்படவில்லை. எனவே, எல்லாச் சாதியினரும் போர்த்தொழில் பழகினர்; ஒவ்வொரு நாட்டின் படைத்தலைவர்களும் பிறநாடுகளின் மீது படையெடுத்

தற்கான ஏற்பாடுகள் செய்தனர். ஆயுதத் தணிக்கைக்குப் பெரும் எதிர்ப்பு எங்கும் இருந்தது. இக்காரணங்களினுலே ஐரோப்பா, பொருமையும் மனத்தாங்கலும் மென்மேலும் அதிகரித்து வருவதும் போர்கோலம் பூணுவதுமான ஒரு பாசறையாக இருந்து வந்தது. அந்நாடுகளில் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் பலர் சமாதானத்தை நிலைநாட்ட முயன்று கொண்டிருந்தார்கள். அவர்களுட் சிலர் அரைமனத்துடன் முயற்சி செய்தார்கள். சிலர் அதிதீவிரம் வாய்ந்தவர்களாயிருந்தார்கள். இவற்றைப்பற்றி ஒருவரும் நன்கு சிந்திக்கவில்லை. போரில் ஈடுபடும் நாடுகளில் வாழும் ஒவ்வொரு குடும்பத்துக்கும்—ஒவ்வொரு தனி மனிதனுக்கும்—தற்காலம் போர் யாது செய்யுமென்ற சிந்தனையோ உணர்ச்சியோ எவர்க்கும் செம்மையாகப் புலனுகவில்லை.

மூவர் நட்பு. பத்தொன்பதாம் நூற்றுண்டில் ருஷ்யாவின் நோக்கங்களைப் பற்றிப் பிரித்தானிய அரசியல் நிபுணர்கள் எப்போதும் கவலைகொண்டிருந்தனர். ஆனல் இந்நூற்றுண்டின் ஆரம்ப அளவில் ருஷ்யாவினலும் பார்க்க ஜெர்மனியினலேயே அபாயம் விளையும்போற் காணப்பட்டது. 1907-ம் ஆண்டில் இருநாடுகளுக்கும் பொதுவான விஷயங்களைப்பற்றிப் பிரித்தானியா ருஷ்யாவுடன் ஆலோசித்ததின் பயனக நட்புண்டாயது. இங்ஙனம், பிரித்தானியா, பிராஞ்சு, ருஷ்யா என்பவை உவப்புடன் நட்பு பூண்டன ; எனினும், பிரித்தானியா அவற்றுடன் திட்டமான உடன்படிக்கை செய்ததெனக் கூறுதலியலாது ; மற்று, அதன் நோக்கங்களும் மற்ற இரு நாடுகளின் நோக்கங்களும் பெரும்பாலும் அநேகமாய் ஒன்றெனவும், ஆனல் அதன் நோக்கங்களுக்கும், திட்டமாக உடன்படிக்கை செய்து கொண்ட மூன்று நாடுகளின் நோக்கங்களுக்கும் அத்துணைப் பொருத்தமில்லை யென்றுங் கண்டது. இவ்வித உவந்த நட்பினர் (ருஷ்யா, பிரான்சு, பிரித்தானியா), ஐரோப்பாவிற் சமநிலை கெடாதிருக்குமாறு செய்வதினுலே எவரும் வலுவிற் போர் செய்வதைத் தடுக்கக்கூடுமெனப் பிரித்தானிய அரசியல் நிபுணர்கள் பெரிதும் நம்பினர்.

உதவிக் குறிப்புக்கள்.

தேசீய நாடுகளான ஜெர்மனி, இத்தாலி ஆகிய இரண்டும் ஐரோப்பாவிலேற்பட்டதினுல் உண்டான நிலைமை இவ்வத்தியாயத்திலும் அடுத்த அத்தியாயத்திலும் கூறப்பட்டுள்ளது. வியன்னு ஏற்பாடு இறுதியாக முறிவடைந்த தென்பதற்கு இந்நாடுகளின் தாபனம் அத்தாட்சியாகும். தேசீய உணர்ச்சி மேலோங்கினதினுலே, பல நாடுகளுக்கிடையே ஏற்பட்ட மனத்தாபங்களைப் போர் மூளவிடாமலே அனைவருக்குந் திருப்தியளிக்குமாறு தீர்ப்பது எவ்வாறு என்பதே ஐரோப்பாவிற் பெரும் பிரச்சனையாக இருந்தது. 1870-1900-ம் ஆண்டுகளுக்கிடையில் பொதுவாகச் சமாதானமே நிலவிற்றுயினும், '' சமநிலை '' என்பதில்லாதிருந்தது. இதனை விளக்குவாம்: ஐரோப்பிய நாடுகளிற் பல, போருக்குச் சித்தமாயிருந்தன; அவற்றைப் போருக்கிழுக்க அதிகமான காரணந் தேவையில்லை. உலக சமாதானத்துக்காக, செல்வாக்குள்ள பல நாடுகள் பெரிதும் பாடுபட்டன; ஆனல் தேசீயவாதிகளுக்குப் பிறநாடுகளைப்பற்றியிருந்த அச்சமும் அழுக்காறும் இம்முயற்சிகளினும் வன்மை கூடியிருந்தன. ஐரோப்பிய நாடுகள் தம்முள் யாதொரு சச்சரவுமின்றி ஆப்பிரிக்காவை பகிர்ந்துகொண்டமை சமாதான நிலைக்குச் சாதகம்போல் தோற்றியது. ஆனல் இந்நூற்றுண்டினரம்பத்தில், ஐரோப்பா இரு கட்சிகளாகப் பிரிந்துவிட்டது. அவையாவன :—தம்முள் ஒப்பந்தஞ் செய்துகொண்ட மூன்று நாடுகள்; நட்புபூண்ட மூன்று நாடுகள் —என்க. ஐரோப்பாக் கண்டம், போர்க்கோலம் பூண்ட பாசறைபோன்று சமர்புரிய எப்போதுந் தயாராயிருந்ததெனச் சுருக்கமாகக் கூறுதல் உண்மையாகும்.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1879. ஜெர்மானிய, ஆஸ்திரிய-ஹங்கேரிய சக்கராதிபத்தியங்கள் உடன்படிக்கை செய்துகொண்டன.

1882. ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கரி, இத்தாலி ஆகிய மூன்றும் உடன்படிக்கை செய்துகொண்டன.

1888. 2-ம் உவில்லியம் ஜெர்மனியின் சக்கரவர்த்தியாக முடிசூடினன்.

1895. பிரான்சும் ருஷ்யாவும் திட்டமான உடன்படிக்கை செய்துகொண்டன.

1902. பிரித்தானியாவும் யப்பானும் நட்பாளர்களாக உடன் படிக்கை செய்துகொண்டன.

1904. பிரான்சும் பிரித்தானியாவும் மேற்கூறியவாறே உடன் படிக்கை செய்துகொண்டன.

1908. பிரித்தானியாவும் ருஷ்யாவும் நண்பர்களென்ற முறை யில் உடன்படிக்கை செய்துகொண்டன.

21. முதலாவது உலகப் பெரும் போரின் நிமித்த காரணங்கள்

உலக சமாதானத்துக்கான முயற்சிகள். பிரதான ஐரோப் பிய நாடுகள் ஒன்றற்கொன்று அஞ்சியும், போருக்குப் பெரி தும் தயாராகவு மிருந்தமையினாலே, பல நாடுகளுக்கிடையே யும் போர் எந்நிமிடத்திலும் மூளலாம் போலிருந்தது. ஆனால், சமாதானத்துக்காக உழைக்கும் சங்கத்தினர், அன்பர்கள், ஆதியோர் முற்றுகப் பயனற்றிருந்தனர் என நினைத்தல் கூடாது. தங்களுக்குள் ஏற்பட்ட வித்தியாசங்களை பேச்சு வார்த்தைகளினால் தீர்த்துக் கொள்வதற்கும் நாட்டுத் தலைவர் கள் பன்முறை முனைந்திருக்கிறார்கள். சமாதானநிலை யேற் படுத்துதற்கு நிரந்தரமான முறைகளை யேற்படுத்துதல் இயலு மாவெனக் காண்டற்கு 1899-ம் ஆண்டிலே சாரின் தூண்டு தலின்மேல் ஒல்லாந்திலே ஹேக் என்னுமிடத்திற் சமாதான மகாநாடொன்று கூடியது. வாதத்துக்கான விடயங்களைத் தீர்ப்பு செய்தற்கு மத்தியஸ்தர் சபையொன்று தாபிக்கப் பட்டது; ஆனால், துரதிர்ஷ்டவசமாக அது சித்தி பெறவில்லை. 1907-ம் ஆண்டில் ஹேக்கிலே இரண்டா முறையும் மகாநாடு கூடியது; ஆனால், முன்னிலும் திட்டமான பயன்களொன்று மேற்படவில்லை. அமெரிக்க ஐக்கியநாடு பிரான்சுடனும் பிரித் தானியாவுடனும் விசேட உடன்படிக்கைகள் செய்துகொண் டது; அதனால் இந்நாடுகளுக்கிடையே யெழும் வாதவிஷயங் களை "ஹேக் விசாரணை சபை" போன்று நடுநிலைமையுள்ள

ஒரு சபையின் தீர்ப்புக்கு விடவேண்டுமென அவை ஒப்புக் கொண்டன. உலக சமாதான மேற்படுவதில் இது உண்மை யான முன்னேற்றமே—ஆனல் இது போதியதன்று.

அல்ஜெசிருசும், அகடீரும். நெடும் காலமாகப் பிரான்சு அல்ஜீரியாவைப் பெற்றிருந்தது. அதனை யடுத்திருந்த மொரோக்கோ எப்போதும் அமைதியற்றிருந்தது; ஓரளவுக்கு அல்ஜீரியாவில் ஒழுங்கான நிலைமை யேற்படுத்துதற் பொருட்டுப் பிராஞ்சிய இராசதந்திரிகள் மொரோக்கோவிலும் தம் செல்வாக்கைச் செலுத்த விரும்பினர். ஸ்பெயின் தானும் மொரோக்கோவின் மீது நோக்கங்கொண்டிருந்தது. ஆனல், பிராஞ்சியரின் சூழ்ச்சிகளைப் பயன்பெறுது செய்ய ஜெர்மனி தீர்மானித்தது; எனவே மொரோக்கோ சுதந்திரம் பெற்றதும் பிறர்க்கடங்காததுமான நாடெனத் தான் கருதுவ தாகக் கூறவே இவ்விடயத்தை யாலோசிக்க ஒரு மகாநாடு கூட்டவேண்டுமென ஜெர்மனி வேண்டி நின்றது. இம்மகா நாடு 1906-ம் ஆண்டில் அல்ஜெசிருசிற் கூட, ஜெர்மனியர் சித்தி பெற்றனர். ஒப்பந்த மொன்று செய்யப்பட்ட போதிலும், ஐரோப்பாவில் அபாயகரமான நிலைமை யேற்பட்டிருப்பது அறிஞர்களுக்குத் தெளிவாயிற்று.

1908-ல் பால்க்கன் கருமங்களில் ஒரு நெருக்கடி ஏற் பட்டது. இது பின் கூறப்படும். இஃதிங்ஙனமாக, மொரோக் கோவில் உள்நாட்டுக் குழப்பம் வரவர அதிகமாயிற்று; இதனல் 1911-ம் ஆண்டில் கலகஞ் செய்யுங் கூட்டத்தினரை யடக்க உதவி புரியும்படி அந்நாட்டுச் சுல்தான் பிராஞ்சியரைக் கேட்டுக்கொண்டான். இதனைக் கேட்டவுடனே, மொரோக் கோவிலுள்ள ஜெர்மானியப் பிரசைகளுக்கும் ஜெர்மானிய விஷயங்களுக்கும் அபாய நிலை நேரிட்டதென ஜெர்மானியர் கூறி, அங்குள்ள **அகடீர்** என்னும் துறைமுகத்துக்கு ஒரு பீரங்கிக் கப்பலை அனுப்புவித்தனர். இச்செய்கை 1906-ம் ஆண்டிற் செய்யப்பட்ட ஒப்பந்தத்துக்கு நேர்விரோதமானதால் வேறும் ஒரு நெருக்கடியை உண்டாக்கியது. நிற்க, இத்தருணத் தில் பிரித்தானியா பிரான்சுக்கு நேர்முகமான உதவிசெய்ய, ஜெர்மனி மனக்கொதிப்புடன் விலகி நின்றது. நெருக்கடி

யான இங்கிலேமை இன்னமும் சீர்கேடாகியது ; எந் நிமிஷத்தி லேனும் ஏற்படக்கூடிய போருக்கு ஐரோப்பியப் பெருநாடு களெல்லாம் மும்முரமாக ஆயத்தஞ் செய்து வந்தன். அடுத்த வாண்டிலே, தத்தம் கப்பற் படைகளின் தொகை, பலம் என் பவற்றைத் தீர்மானிக்க ஜெர்மனியும் பிரித்தானியாவும் கலந்து பேசின போதிலும், முடிவேற்படா தொழிந்தது ; இம்முடி வின்மை ஜெர்மானியரின் கப்பற்படை சம்பந்தமான எத்தனங் களையும் ஏற்பாடுகளையும்பற்றிப் பிரித்தானிய இராஜ தந்திரிகள் முன்னிலும் அதிக சந்தேகங் கொள்ளச் செய்தது. இதன் பயனாக, மத்திய தரைக்கடலிலுள்ள கப்பற்படையைப்பற்றின விஷயங்களைப் பிராஞ்சியர் கவனிக்க விடுவதாகப் பிரித்தானி யர் பிராஞ்சியருடனும் ஓர் ஒப்பந்தஞ் செய்து கொண்டனர் ; பிரித்தானியக் கப்பற் படையிற் பெரும்பகுதி வட கடலில் கூட்டமாகக் கூடியிருந்தது.

சிதைந்துவந்த துருக்கியின் பலம். பால்க்கன் பிரதேசத்துச் சுதந்திர நாடுகளைப்பற்றி ஆஸ்திரியா-ஹங்கரி கொண்டிருந்த எண்ணம் முன்னரே கூறப்பட்டுள்ளது. அந்நாடுகளினதி காரம் கூடினால், ஆஸ்திரிய-ஹங்கேரியச் சக்கரவர்த்தியான விரும்சிஸ்யோசேப்பு ஆண்டுவந்த சிலாவியரிடையே கிளர்ச்சி யுண்டாகுமென்று கருதப்பட்டது. நிற்க, துருக்கிய விஷயங் களில் ஜெர்மனி நெடுங்காலமாகக் கவனஞ் செலுத்தி வந்தது. 1898-ம் ஆண்டில் கைசர் உவில்லியம் கொன்ஸ்தாந்திநோப் பிலையும் பலஸ்தீனுவையுந் தரிசித்தகாலை தானெப்போதும் முஸ்லீம்களின் விசேட நண்பனாயிருப்பதாகக் கூறியபோதே ஜெர்மனிக்குத் துருக்க விஷயங்களிலுள்ள ஊக்கம் உலகத் தாருக்கு வெளிப்படையாயிற்று. இலட்சக் கணக்கான முஸ் லிம்கள் பிரித்தானியர், பிராஞ்சியர், ருஷ்யர் என்போரினாட்சிக் குட் பட்டிருந்தமையினாலே, அந்நாட்டவர் கைசரின் சொற் பொழிவைப்பற்றிக் கேள்விப்பட்டபோது சினங்கொள்வ தியற்கையே. இதற்கு முந்தியே ஜெர்மானியர் துருக்கியில் அதிகமான செல்வாக்கு பெற்றிருந்தனர் ; ஜெர்மானிய வியா பாரிகளும் அங்கு பெருந் தொகையினராக வந்திருந்தனர். கொன்ஸ்தாந்திநோப்பிலுக்கு நேரெதிராக விருந்த ஸ்குட்டாரி

யிலிருந்து பக்டாட்டுக்கும் பாரசீகக் குடாவுக்கும் புகைரதவீதி யொன்றமைக்கவும், அப்போதே வியன்னாவுக்கும் பெர்லினுக் கும் புகைரதவீதி யமைக்கப் பெற்றிருந்த கொன்ஸ்தாந்தி நோப்பிலுக்கும் ஸ்குட்டாரிக்கு மிடையே தோணிப்பாதை யமைக்கவும் ஏற்பாடொன்று செய்யப்பட்டது. இவ்விதப் பாதை, சேர்பியா பல்கேரியா நீங்கலாக, ஜெர்மனிக்கு சிநேக மான நாடுகளினூடேயே முழுவதும் செல்லும். இவ்விருநாடு கள் எப்போதும் ஒன்றோ டொன்று போரிட்டேவந்தன; யாதேனுமொன்றை ஜெர்மனியின் செல்வாக்குக் குட்படச் செய்தல் கூடுமாயிருக்கலாம்.

1908-ம் ஆண்டிலே "யௌவனத் துருக்கப் புரட்சி" உண்டாகி அப்துல் ஹமீது என்னும் சுல்தானைச் சிம்மாதனத்தி னின்றும் நீக்கியது; அயலாருடைய செல்வாக்கு அல்லது விருப்பத்துக்குத் தாங்கள் உட்படாது சுதந்திரம் பெற்றிருக்க விரும்புவதாகப் புரட்சியின் தலைவர்கள் பிரசித்தமாகக் கூறி னமையினாலே, ஒரு சிறிது காலத்துக்கு இப்புரட்சி ஜெர்மனி யின் ஏற்பாடுகளைக் கலைத்துவிட்டது. இதற்குப்பின் வெகு சீக்கிரத்திலே பல்கேரியா வரசனை பெர்டினந்து, பல்கேரியா துருக்கிக்குக் கீழ்ப்படாத ஒரு சுதந்திரப் நாடெனப் பிரசித்தஞ் செய்தான். உடனே ஆஸ்திரியா, எர்சகொவினுவை நிலை யாகத் தன்னிராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டது. இப் போது, பிரான்சையும் பிரித்தானியாவையும் கவனிக்காமலே ருஷ்யா தலையிட முயன்றது. உடனே ஜெர்மனி தன் நண்ப னுக்குத் துணையாக ஆபத்துக்குதவும் அருமந்த நண்பனாக முன் வந்து நின்றது. தன் சிநேகிதர்களி னுதரவைப் பெருததினாலே ருஷ்யா விட்டுக்கொடுக்கவேண்டி யிருந்தது; இவ்விதம் மான பங்கம் அடையக்கூடிய நிலைமையில் தம்மை எக்காலத்திலும் வைத்துக்கொள்வதில்லையென ருஷ்யத் தலைவர்கள் தீர்மானித் தனர். போஸ்னியா-எர்சகொவினுவை ஆஸ்திரியா தன தாக்கவே, ஆஸ்திரியா இன்னமும் பெருக்கமடையுமோ வென்று சேர்பியர் பயந்தனர். ஆஸ்திரியா-ஹங்கரிக்குரிய பிரதேசங்களிலிருந்த சிலோவோனியரின் தேசீய உணர்ச்சி யைக் கிளப்ப அவர்கள் தம்மாலியன்றவரையில் முயன்றனர்.

இந்தப் பிரதேசங்களில் அநேகமாய்ச் சேர்பிய சாதியினரையே சார்ந்த 60 இலட்சத்துக்குக் குறையாத, தென்சிலாவிய ரிருந்தனர் (அவர்கள் யுகோ-சிலாவியர் என்றழைக்கப்பட்டனர்). இதிலிருந்து சேர்பியா, பெர்லின்—பக்டாட் பாதைக்கு ஒரு தடையென்பதும், அது ஆஸ்திரியா-ஹங்கரிக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய தென்பதும் தெளிவாயிற்று.

கெட்டித்தனமான ஒரு சூழ்ச்சியினுல் ஜெர்மானியர் தம் செல்வாக்கை முன்னிலும் உறுதியாகத் துருக்கியில் மீண்டுந் தாபித்துக்கொண்டனர். தேவையானபோது ஜெர்மனி துருக்கியின் உதவியைப் பெறக் கூடுமென்பது தெளிவாயது. ஜெர்மானிய ராதிக்கத்தில் பெர்லின்-பக்டாட் புகைரதவீதி கூடிய விரைவுடன் அமைக்கப்பட்டது; இதுவே பிரித்தானியாவுக்கும் ருஷ்யாவுக்கும் பெருந்திகில் விளைவித்தது; ஏனெனில், இது இவ்விரு நாடுகளுக்கு முரிய ஆசியப் பிரதேசங்களை யெதிர்க்கக்கூடிய நிலையை யுண்டாக்கியது.

இத்தாலியும் திரிப்போலியும். அகடீரில் நெருக்கடியான நிலைமை யேற்பட்டபோது, நெடுங்காலமாக ஆப்பிரிக்காவைப் பற்றப் பேராசை கொண்டிருந்த இத்தாலி, துருக்கியின்மீது போர் தொடுத்து, துருக்க மாகாணமான திரிப்போலியின் மீது படையெடுத்தது. இது ஜெர்மனிக்குக் கஷ்டமான ஒரு நிலையை யுண்டாக்கியது; ஏனெனில், இத்தாலி ஜெர்மனியுடன் உடன்படிக்கை செய்திருக்கவே, துருக்கியும் அதன் நண்பனுக இருந்தது. இதனுலே அது ஒதுங்கிநின்று இத்தாலியரை அவர்களிஷ்டபடி ஆடவிட்டது. 1912-ம் ஆண்டில் பால்க்கன் சங்கப்போர் மூண்டபோது திரிப்போலியையும் ஈஜியன் கடலிலிருந்த சில தீவுகளையும் துருக்கி இத்தாலிக்குக் கொடுக்கவேண்டி யிருந்தது. இச்சம்பவம், இத்தாலி நிஷ்காரணமாகப் போர் விளைவித்ததினுல் முற்ருக ஏற்பட்டது; மூவருடன்படிக்கையில் ஒரு பங்காளியை (இத்தாலியை) ஜெர்மனி நம்புதலியலாதென்பது இதிலிருந்து புலனுயது.

பால்க்கன் போர்கள். 1912-ம் ஆண்டில் பால்க்கன் பிரதேசத்திலிருந்த கிறிஸ்தவ நாடுகள் துருக்கிக்கு விரோதமாக ஒன்றுகூடி, துருக்கரைக் கொன்ஸ்தாந்திநோப்பிலும்

அதற் கருகாமையிலுமுள்ள நாடும் நீங்கலாக, பால்க்கன் தீபகற்பத்திலிருந்து துரத்திவிட்டனர். ஆனால், போரிற் பெற்ற பிரதேசத்தைப் பங்கிடுவதில் அவற்றிடையே சச்சர வுண்டாயது. ஐரோப்பிய வல்லரசுகள் இவ்வகையாய் யுத்தம் மூளும் என்று காத்திருக்கவில்லை. ஆகவே அதைப் பரவாமற் தடுக்க முயன்றன. இப்போரில் துருக்கி தோல்வியடைய, வல் லரசுகள் தலையிட்டுச் செய்த சமாதான ஏற்பாடுகள் பல்கேரியா வுக்கும் ஏனைய பால்க்கன் நாடுகளுக்கும் இடையில் மனத்தாங் கலை உண்டாக்கின. இதனாலே மீண்டும் போர் ஏற்பட்டு, ருமே னியா, சேர்பியா, கிறீஸ் ஆகிய மூன்று பால்க்கன் நாடுகளும், வல்லரசுகளை மேவாமலே சமாதான ஏற்பாடுகள் செய்தன. தோல்வியும் மனவருத்தமும் அடைந்த பல்கேரியா, துருக்கி யுடனும், அதன் நண்பனை ஜெர்மனியுடனும், ஆஸ்திரியா-ஹங்கரியுடனும் சேர்ந்துகொள்வதாக விண்ணப்பஞ் செய்து கொண்டது.

சேர்பியாவின் வெற்றி, பிரதானமாக ஆஸ்திரியா-ஹங் கரிக்கு மனக்கசப்பைத் தந்தது. ஏனெனில், இவ்வெற்றியினால் ஆஸ்திரியா-ஹங்கரியின் தென் பிரதேசங்களிலிருந்த யூக-சிலாவியரிடையே தேசீய உணர்ச்சி பெரிது மதிகரிக்குமென் பது தெளிபு. ஆனால், பெர்லின்-பக்டாட் புகைரத வீதியில் ஜெர்மனிக்கு முன்னிலுமதிகமான தடையாக சேர்பியா ஆன தையும், தன் பழைய விரோதியான துருக்கியுடன் நடத்திய போரில் சிலாவியநாடுகள் வெற்றி பெறுவதையும் கண்ட ருஷ்யா பெருஞ் சந்தோஷமடைந்தது. இரட்டையரசு நடை பெற்ற ஆஸ்திரியா-ஹங்கேரியின் தென்கிழக்கு மூலையி லிருந்த பல்லாயிரக்கணக்கான ருமேனியரின் நிலைமையைப் பற்றி ஆஸ்திரியா-ஹங்கரியுடன் ருமேனியாவும் சச்சரவிட்டுக் கொண்டது. 1912-ம் ஆண்டிற் செய்யப்பட்ட ஏற்பாட்டுடன் எந்தப் பால்க்கன் நாடும் திருப்தியடையாதபடியினாலே இன்ன முங் கஷ்டங்களேற்படுமென்பது திண்ணம்.

1914-ம் ஆண்டில் ஐரோப்பிய அரசியல் நிலைமை. சுருங்கக் கூறுமிடத்து, இச் சந்தர்ப்பத்தில் வல்லரசுகளும் அவர் களைச் சார்ந்த சிறு இராச்சியங்களும் கொண்ட இரு கட்சிக


பெரும்போர் தொடங்கியபோது
ஐரோப்பாவின் நிலைமை
மைல்கள்
0 50 100 200 300 400 500
ஜெர்மன் சக்கராதிபத்தியத்தினெல்லை
1866-முதலாக பிருஷ்யப் பிரதேசம்
ஆஸ்திரிய சக்கராதிபத்தியம்
ஐரோப்பியத் துருக்கியினெல்லை
அத்லாந்திக் சமுத்திரம்
பிரித்தானியத் தீவுகள்
வட கடல்
நோர்வே
கிறிஸ்தியானியா
ஸ்டாக்கோம்
டென்மார்க்
கோப்பனேகன்
ஹாலந்து
பெல்ஜியம்
பிரான்சு
பாரிஸ்
ஸ்பெயின்
போர்ட்டோ
மாட்ரிட்
கோர்சிகா (பிர)
சார்டினியா
மத்திய தரைக் கடல்
அல்ஜீரியா (பிரஞ்)
மொரோக்கோ (பிரா. செல)
ஆப்பிரிக்கா
ஜெர்மனி
பொகிமியா
ஹங்கரி
ருமேனியா
கருங்கடல்
துருக்க சக்கராதிபத்தியம்
கிரீட்டு
சைப்பிரசு (பிரித். இருப்பு)
ரஷ்யா

[எமரி வாகர் லிமிடெட்

ளிருந்தனவென்க. இதனை விவரிப்பாம்; ஒன்று மூவருடன் படிக்கையைச் சார்ந்த வல்லரசுகள், அதாவது, ஜெர்மனி, ஆஸ்திரியர்-ஹங்கரி, இத்தாலி (போர் மூளும் காலத்தில் எக் கட்சியினரும் இதனை நம்பியிருத்தலாகாது) என்பன; இவற் றோடு துருக்கியும் பல்கேரியாவும் சேர்ந்துகொண்டன. மற்றது மனமுவந்த நட்புபூண்ட மூவரசுகளாம்; இதிற் பிரான்சும் ருஷ்யாவும் நட்புடன்படிக்கை செய்து கொண்டன; இவற் றோடு பிரித்தானியா ஒப்பந்தங்கள் செய்து கொண்டது. அவற் றிலொன்று, பிரித்தானியாவுடன் கப்பற்படைகளைப் பற்றின இரகசிய ஏற்பாடாகும். ருஷ்யா சேர்பியாவுடன் நெருங்கின தொடர்பு பூண்டது; பெல்ஜியம், தன்னெல்லைப்புறத்தில் ஜெர் மனி செய்துகொண்ட ஏற்பாடுகளைக் கண்டஞ்சி, பிரான்சை யும் பிரித்தானியாவையும் நம்பியது. ருமேனியாவும் கிரீசும் முதற் கட்சியினும் பார்க்கப் பிந்தியதையே நம்பின. இரு கட்சி களிலொவ்வொன்றும் மற்றதற்கு அஞ்சினதினாலே, போர் மூண்டால் தம்மைக் காத்துக்கொள்ளுதற் பொருட்டுக் கடற் படையையும், நிலப்படையையும் மும்முரமாக விருத்தி செய்து வர, அதனாலே மனத்தாபம் மேன்மேலும் அதிகரித்துக் கொண்டே வந்தது. பிரித்தானியா தவிர்த்த வேறெந்த நாட் டிலும், போர் அவசியமானது, தள்ள முடியாதென்னும் எண் ணங்கொண்ட கட்சி யொன்றும் இருந்தது. இவ்வெண்ணம், பிரதானமாக ஜெர்மானியப் போர் வீரர்களிடையும், ஆஸ்திரிய-ஹங்கேரிய, ருஷ்ய, இராச்சிய தந்திரிகளிடையும் பெரிதுங் காணப்பட்டது. 1914-ம் ஆண்டிலே, வேறெந் நாட்டிலும் பார்க்கத் தங்கள் நாடு போருக் காயத்தமென அவர்கள் கருதி னர்; பால்திக்குக் கடலிலிருந்து வடகடலுக்கு மிகப் பெரிய சண்டைக் கப்பல்களும் செல்லக்கூடிய வசதியளித்த கீல் கால் வாய் திறக்கப்பட்டது; படைவீரரை, ஒன்றுசேர்த்துச் சண் டைக்கு ஆயத்தஞ் செய்தற்கான ஏற்பாடுகள் பூரணப்படுத்தப் பட்டன; ஆனால் பிரான்சோ தானெண்ணியபடி படைவீரரின் தொகையைக் கூட்டவில்லை; ருஷ்யாவின் போருக்கான ஏற் பாடு 1917-ம் ஆண்டுவரையிற் பூரணம் பெறவில்லை.

போர் மூண்டதற்கு உண்மைக்காரணம் பெரிய வல்லரசு

களின் அடக்கவொண்ணு ஆத்திரமான மனே நிலேமை யென் பது தெளிபு. ஒவ்வொரு நாட்டவரும் தந் தலேவர் சமாதானத் தைப் பூரண மனத்துடன் விரும்பினர் என்றும், ஆனுல் ஏனேய நாட்டுத் தலேவர்கள் உண்மையாகச் சமாதானம் நாடவில்லே யென்றும் நம்பினர் ; அதாவது, பயமே பல சாதியினரையும் போர் செய்யுமாறு தூண்டியது.

போர் மூளல். 1914-ம் ஆண்டு ஜூன் மாதத்திலே, ஆஸ் திரியா-ஹங்கேரிய இளவரசனும், அந்நாட்டுக் கருமங்களின் நடத்தையில் ஓரளவதிகாரத்தை சிலாவியப் பிரசைகளுக்கு அளிக்க விரும்பியவனுமான பிரான்சு-பெர்டினந்து என்பவன் தன் மனேவியுடன் போஸ்னியாவிற் பயணஞ் செய்தபோது, சேர்பியாவினிடம் பற்றுகொண்டிருந்த ஒரு போஸ்னிய இளே ஞனுல் செரஜெவோ என்னும் நகரத்திற்கொலே செய்யப்பட் டான். இக்கொடுங்கொலேக்குச் சேர்பிய அரசாங்கத்தினர் உடந்தையாயிருந்தனரென்று குற்றஞ்சாட்டி அவ்வழியே அக் கொலேயைத் தமது கருமங்களுக்குதவுமாறு செய்ய் ஆஸ்திரிய அரசியல் நிபுணர்கள் தீர்மானித்தனர். போரிடுமாறு சேர்பி யாவைக் கட்டாயப்படுத்த அவர்கள் தீர்மானித்தனர் ; இதில் அவர்கள் ஜெர்மானிய அரசாங்கத்தினரின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர்.

ஆஸ்திரியாவுக்கு விரோதமாகச் செய்யப்படும் எல்லாப் பிரசாரமும் ஆஸ்திரிய உத்தியோகஸ்தரி னுதவியுடன் அடக் கப்பட வேண்டுமென்றதோடு, ஆஸ்திரியா மானமுள்ளவர் இணங்கமுடியாத பல நிபந்தனேகளேயும் சேர்பியாவின் மீது விதித்தது ; இவற்றுக்கு இணங்குவதாக 48 மணி நேரத்துக் குள் சேர்பியா பதில் அனுப்ப வேண்டுமென்றும் அன்றேல் போர் தொடங்கப்படுமென்றும் ஒரு கடிதம் ஆஸ்திரியாவினுல் சேர்பிய அரசாங்கத்துக்கனுப்பப்பட்டது. இதற்குச் சேர்பிய அரசாங்கத்தினர் மிக நிதானமாகப் பதிலளித்தனர் ; ஆனுல், ஆஸ்திரியர் விதித்த நிபந்தனேகளுக்கெல்லாம் தாம் இணங் குதலியலாதெனக் கூறினர். சேர்பியாவின் சார்பாகத் தான் தலேயிட முன்வருவதாக ருஷ்யா கூற, ஜெர்மானிய அரசாங் கத்தார் சிறிது பின்வாங்கினர் ; ஆனுல், படைத் தலேவர்கள்

அரசியல் தந்திரிகளினும் பார்க்க வன்மை யதிகங் கொண்டிருந்தனர். எனவே, ஜூலை மாதம் 28-ந் திகதியன்று சேர்பியாவின்மேல் ஆஸ்திரியா-ஹங்கரி போர் தொடுத்தது; இதற்கிரண்டு நாட்களுக்குப் பின் ருஷ்யர் தம் படைகளைத் திரட்டலாயினர். ஆகஸ்ட் மாதம் முதலாந் திகதியன்று ஜெர்மனி ருஷ்யாவின்மேற் போர் தொடுப்பதாகப் பிரசித்தஞ்செய்தது. பிரான்சும் தன படைகளைத் திரட்டியது. ஆனால் ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி வரையில் ஜெர்மனி அதனுடன் போரிடுவதாகப் பிரசித்தஞ் செய்யவில்லை. பெல்ஜிய நாட்டின் நடுநிலைமையைப் பிரான்சு, ஜெர்மனி ஆகிய இரண்டும் காக்க வேண்டுமெனப் பிரித்தானிய அரசினர் கேட்டனர். பிரான்சு இதற்கிணங்கினும் ஜெர்மனி மறுத்துவிட்டது. ஜெர்மனியின் கப்பற் படைத்தாக்குதலினின்றும் பிரான்சின் கடற்கரையைக் காப்பதாகப் பிரித்தானியா முன்னரே ஒருடன்படிக்கை செய்திருந்தது. இனி, ஜெர்மனி பெல்ஜியத்தின் நடு நிலைமையைக் கவனியாது அதனுள் பிரவேசிப்பதா யிருந்ததென்பதும் தெளிவாயிற்று. இவ்வாறே ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதியன்று நடைபெற, தமக்குதவி புரியும்படி பெல்ஜியர் பிரித்தானிய அரசினரை வேண்டவே, ஜெர்மனியுடன் போர்புரிவதாக அன்றைய தினம் இரவு 12 மணிக்கு பிரித்தானியா பிரசித்தஞ் செய்தது.

உதவிக் குறிப்புகள்

ஒவ்வொரு நாடும் இன்னொரு நாடு தன்னுடன் வீண் போர் புரியுமென்று பயந்திருந்த பிரதான காரணத்தினாலே, எந்நிமிடத்திலேனும் பெரும்போர் தொடங்கலாமென்பது முந்திய அதிகாரத்தைப் படித்தவர் எவருக்கும் தெளிவாம். போர் மூளக்கூடிய நெருக்கடியான நிலைமைகள் பல ஏற்பட்ட பின்னர், 1914-ம் ஆண்டிலே எவ்வாறு போர் உண்மையாக மூண்டதென்பதை இவ்வதிகாரம் கூறுகின்றது. எவ்வழி நோக்கினும் மிக்க பயங்கரமான கொடும்போர் விளைதற்குப் போதுமான காரணங்களில்லையென்றே கூற வேண்டும். 1914-ம் ஆண்டுக்கு ஏறக்குறைய பத்து வருடங்களுக்கு முன்னே மக்கள் தமக்கேற்படவிருந்த அபாய நிலையை அறியாரென்பதை நாம் உணர்தலவசியமாகும்; மாந்தர் எல்லா விஷ

யங்களையும் அரசியற் றலைவர்களிடமும் இராஜ தந்திரிகளிட மும் ஒப்புவிப்பதுடன் திருப்தியடைந்தனர். இவ்வறியாமையே போர் மூண்டதற்குப் பெருங் காரணமா யிருந்தது. 1939-ம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலும் இது ஓரளவுக்கு உண்மையா யிருந்தது. அறிவிலும் கல்வியிலும் மேம்பட்ட பொதுசனங் களின் அபிப்பிராயம், பொது சனங்களின் சார்பாக நடக்கும் இராச்சிய தந்திரிகளையும் படைத்தலைவர்களையும் தன்னதிகாரத் தினுள் வைத்திருப்பதிலுலேயே வருங்காலத்திலும் இத்தகைய விபத்துக்களைத் தடுக்க முடியும் என்பது தெளிபு.

சில பிரதான நிகழ்ச்சிகள்

1899. முதலாம் ஹேக் மகாநாடு.

1906. நெருக்கடியான நிலைமைக்குப் பின் அல்ஜெசிராஸ் மகாநாடு.

1907. இரண்டாம் ஹேக் மகாநாடு.

1908. பால்க்கன் நெருக்கடி, போஸ்னியா-எர்ச கொவி னுவை ஆஸ்திரியா தனதாக்கிக் கொண்டது.

1911 அகடீரில் நடைபெற்ற சம்பவம். இத்தாலி துருக்கி யின்மேல் போர் தொடுத்தது.

1912-3. 1-ம் 2-ம் பால்க்கன் போர்கள்.

1914. ஜூன். ஆஸ்திரிய இளவரசனை பிரான்சு-பெர்டி னந்து செரஜெவோவிற் படுகொலை செய்யப் பட்டான்.

ஜூலை. சேர்பியாவுக்கு ஆஸ்திரியர் விட்ட கடும் கடிதம்.

ஐரோப்பாக் கண்டத்தில் போர் எங்கும் மூண்டது.

ஆகஸ்ட். பெல்ஜியத்தின் நடுநிலைமையை ஜெர் மனி அழித்தது. பெரிய பிரித்தானியாவும் போரிற் சேர்ந்துகொண்டது.

22. முதலாவது உலகப் பெரும்போர் 1914—1918

பொது நிலைமை. முதலாவது உலகப் பெரும்போரில் நிகழ்ச்சிகள் நிறைந்திருப்பதினுலே, உலக படங்களையும் ஐரோப்பாவின் தேசப் படங்களையும் பார்க்காது, அதனை விவரமாகக் கூறுதல் கஷ்டம்; தெளிவாக விளங்கிக் கொள்ளுதலும் இயலாதகருமம். பிரதான போர்க்களங்கள் ஐரோப்பாவி லிருந்தபோதிலும், சில, ஆசியாவிலும் ஆப்பிரிக் காவிலுமிருந்தன. கடற்பிரதேசங்களும், விசேடமாகப் பிரித் தானியாவுக்கும் ஜெர்மனிக்கு மிடையேயிருந்த வட கடலும், மிகப் பிரதானமான போர்க்களங்களாயிருந்தன. வழமையாக "மத்திய வல்லரசுகள்" எனப்படும் ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கரி, பல்கேரியா, துருக்கி என்பன, தம்மைச் சூழ்ந்திருப் பவையும் வழமையாக நேசதேசங்கள் எனப்படுவனவுமான பெரிய பிரித்தானியா, பிரான்சு, பெல்ஜியம், ருஷ்யா, சேர்பியா, இத்தாலி என்னும் ஆறு வல்லரசுகளுடன் போரிட்டன. இவற்றோடு சீனவிற் சிறு போர் நடத்திய யப்பானையும் சேர்க்க வேண்டும். இதன்பின், சிறு வல்லரசுகள் பல நேசநாடு களுடன் சேர்ந்து கொண்டன. 1917-ம் ஆண்டில், ருஷ்யா போரிலிருந்து விலகிக்கொண்டது; ஆனல், அதனிடத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளடைந்தன. பெரிய பிரித்தானியா வுடன் பிரித்தானியச் சாம்ராச்சியம் முழுவதுஞ் சேர்ந்து கொண்டது.

போரை ஒரே அடியில் வெல்லும் எண்ணத்துடன் ஜெர்மனி பெல்ஜியத்தினூடே சென்று பிரான்சின்மீது படை யெடுத்த செயலுடன் போர் தொடங்கியது. இப்படை யெழுச்சி சித்தி பெறவில்லை; ஆனல் ஜெர்மானியர் பிரான் சின் ஒரு பகுதியிலும் அநேகமாய்ப் பெல்ஜியம் முழுவதிலும் தங்கியிருந்தனர். போரின் ஏனைய பகுதி, மத்திய வல்லரசு களின் தரைப் படைகளையும் கடற்படைகளையும் நேசநாடுகளின் படைகள் முற்றுகை யிடுவதாக முடிந்தது. இதனை முறிப்ப தற்குப் பல முயற்சிகள் ஜெர்மனியால் செய்யப்பட்டபோதும்,

போர்க்களங்கள்
1. மேற்கில்.
2. கிழக்கில்.
3. இத்தாலிய.
4. பால்கன்.
5. காலி.
6. காகஸ.
7. மெசபொ.
8. எகிப்து முதலியன.
போர்க்களங்களைக்
காட்டும் படம்
மைல்கள்
0 100 200 300 400 500
பிரான்சு
ஸ்பெயின்
போலாந்து
ஜெர்மனி
ஆஸ்திரியா-ஹங்கரி
பல்கேரியா
துருக்கி
கருங்கடல்
மத்தியதரைக் கடல்
எகிப்து
பாரசீகம்
எருசலேம்
டமஸ்கஸ்
பாரசீக வளைகுடா
பாக்தாது
மெசபொட்டேமியா
எர்சரும்
கஸ்பியன் கடல்
வட கடல்
பால்டிக் கடல்
பெரிய பிரித்தானியா
டென்மார்க்கு
சுவிட்சர்லாந்து
பாரீஸ்
நீப்பர்
மோரா
சலோனிக்கா
கைபர்
யூப்பிரேட்சு
[எமரிவாகர் லிமிடெட்.

அவை ருஷ்ய எல்லையிற் றவிர வேறெங்கும் சித்திபெறவில்லை. இறுதியில் மத்திய வல்லரசுகளால் தம்மைக் காத்துக்கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம், நேசநாடுகள் போரில் ஓரளவுக்கு வெற்றி பெற்றமையும், கடல் தரை ஆகிய இரண்டிலும் மத்திய வல்லரசுகளை முற்றுகை யிட்டமையினுற் போர் நடத்துதற்குத் தேவையான பொருள்களையும், சாதாரண சனங்களைப் போஷித்தற்கு வேண்டிய பொருள்களையும். ஜெர்மனியும் அதன் நண்பர்களும் பெற முடியாமையுமாம். ஆனல் போர் முடியுமுன், யுத்த சம்பந்தமுள்ள அநேக நாடுகளில் போர் புரியக்கூடிய ஆண்மக்களனைவரையும் போர்ச் சேவை செய்யும்படிக் கட்டளையிட நேர்ந்தது. சோர்வுற்ற மத்திய வல்லரசுகளுக்கெதிராகப் போரிடக்கூடிய அதிக ஆள்வலி அமெரிக்க ஐக்கிய நாட்டில் உண்டென்பதும், பிரித்தானியப் படையின் முற்றுகை, மத்திய வல்லரசுகளுக்கு இன்றியமையாத பொருள்கள் கிடைப்பதைத் தடைசெய்ததென்பதும் இறுதியில் வெற்றியை நிச்சயமாக்கின காரணங்களாம்.

போரின் தொடக்கம். (1) மேற்றிசைப் போர்க்களம். ஜெர்மானியப் போர்த் தலைவர்களின் ஏற்பாடாவது : ருஷ்யத் தாக்குதலினின்றும் தங்களைக் காத்துகொண்டு, பிராஞ்சியப் படைகளின் இடது புறத்தைச் சுற்றிப் பெல்ஜியத்தினூடே பிராஞ்சியத் தலைநகரான பரீசுப்பட்டினத்துக்கு நேராகச் சென்று தாக்குவதேயாம். ஆனல், பெல்ஜியத்தின் நடுநிலைமை (அதாவது, போரிடுபவர் எவரும் அதனுள் நுழைதல் கூடாதென்பது) பிரதான ஐரோப்பிய வல்லரசுகளெல்லாங் கூடி கையொப்பமிட்ட ஒரு உடன்படிக்கையினுல் உத்தரவாதஞ் செய்யப்பட்டிருந்தது. ஜெர்மனியோ, இதனை மதியாது ஆகஸ்ட் தொடக்கத்தில் பெல்ஜியத்தின்மேற் படையெடுத்தது. இதனைப் பெல்ஜியப் படை லிபேஜ் அரணின் பின் நின்று பத்து நாட்களாக வீரத்துடன் எதிர்த்தது. இச்செய்கை, சேர் ஜோன் பிறெஞ்சின் கீழிருந்த பிரித்தானிய அவசரப்படை ஆங்கிலக் கால்வாயைத் தாண்டி, மோன்ஸ் என்னும் பெல்ஜியப் பட்டினத்தைச் சுற்றித் தம்முயற்சிகளை ஒன்றுபடுத்த உதவியது. பீரங்கிக் குண்டுகள் அபரிமிதமான சேத முண்டாக்கின



1914-ம் ஆண்டு செப்டம்பரில் ஜெர்மானியர் அதிகமாக முன் சென்றது
1914-ம் ஆண்டு அக்டோபர் முடிவில் ஜெர்மானியப் படைகளிருந்த இடம்
1918-ம் ஆண்டு மே - ஜூனில் படையெடுத்திருந்து ஜெர்மானியர் பெற்ற வெற்றிகள்
1918-ம் ஆண்டு ஜூலை மீ 18உயன்று தொடங்கிய பெரும்படையெழுச்சியின்போது நட்புச் சேனைகளின் நிலை
1918-ம் ஆண்டு நொவம்பர் மீ 11உயன்று போர் முடிவின்போது நட்புச்சேனைகளிருந்த நிலை

[எமரி வாகர் லிமிடெட்.

மையினூலே லீயேஜ் பட்டினத்தின் எதிர்ப்பு முறிவடைய ஜெர் மானியர் பெல்ஜியத்தினூடே வெள்ளம்போல் நுழைவாரா யினர். தம்மிடது புறத்தைச் சுற்றிவந்த ஜெர்மானியருடன் போர்புரியப் பிராஞ்சியரும் ஆயத்தமாயிருக்கவில்லை. எனவே அவர்கள் பரீசை நோக்கிப் பின்வாங்கினபோது, பிரித்தானி யரும் அவர்களுடன் செல்ல வேண்டி யிருந்தது; பெல்ஜி யரின் எஞ்சிய சேனை அந்த்வெர்ப்பு நகரத்துக்குப் பின்வாங்கி

யது. நிற்க, ஜெர்மானியர் பெல்ஜியரைத் தேவையற்ற கடுமையுடன் நடத்தினர். அழகிய புராதன நகரமாகிய லூவானையும் அதன் சர்வகலாசாலை நூல்நிலையத்தையும் அழித்ததும் பொதுமக்களைச் சுட்டுக் கொன்றதும் ஜெர்மானிய அட்டூழியங்களிற் சிலவாம்.

தன் படையினிடதுபுறத்தைச் சுற்றிவந்து தாக்கிய ஜெர்மானியரின் பலத்தினாலும் விரைவினாலும் பிராஞ்சிய தளபதியான யோவ்ரே திடுக்கிட்டான். ஆனாலும், ஜெர்மானிய தளபதி வோன்கிளக் விட்ட ஒரு பெரும் பிழையைத் தனக்குச் சாதகமாக்கி யோவ்ரே தாக்கினான். அதன் பயனாக பரீசுக்கு 20 மைல் அருகில் வந்த ஜெர்மானிய வலதுபக்கச் சேனை முழுவதும் பெரும் ஆசா பங்கத்துடன் திரும்பிப் போக வேண்டியிருந்ததோடு, மார்ன் ஆற்றிலிருந்து "ஏன்" ஆற்றுக்குப் பின்வாங்கவேண்டியுமிருந்தது. எனினும், ஜெர்மானியப் படைகள் ஒருங்கு திரண்டு ஏன் நதிக்குக் கிழக்குமேற்காக ஒரே வரிசையில் பலமான தானங்களில் இருந்தன. இப்போது இரு கட்சியினரும் ஆங்கில கால்வாயின் கரையிலிருந்த துறைமுகங்களைத் தம்வசத்தில் வைத்திருத்தற்பொருட்டு தம் மெதிரியின் காவலற்ற பக்கத்தினூடே சென்று வடதிசையடைய முயன்றனர். இதில் ஒருவரும் சித்தி பெறவில்லை. யுத்தகளமானது ஏன் ஆறு, ஒயிஸ் நதியுடன் சேருமிடத்துக் கருகிலிருந்து வடக்கு நோக்கி ஐம்பது மைல் தூரம் பரவியிருந்தது. இரு கட்சியினரும் அகழிகள் வெட்டினர்; இந்த அகழிகளிலே, அநேகமாய் யாதொரு மாறுதலுமின்றியே அபாயமும் அசௌகரியமும் விளையக்கூடிய நிலைமையில் இருபகைப் படைகளும் 1917-ம் ஆண்டு வரையிலும், யுத்தகளத்தில் வேறுசில பகுதிகளில் 1918-ம் ஆண்டு வரையிலும் இருந்தன. நீண்ட இப் போர்க்களத்தின் சில சிறு பகுதிகளிற் பெருங் கவனத்துடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுப் பல தொன் நிறையுள்ள வெடிகுண்டுகளும் துப்பாக்கிக் குண்டுகளும் சுடப்பட, இலட்சக் கணக்கான மாந்தர் உயிரிழந்தனர்; ஆனால் ஒரு படை மற்ற படையைத் தாண்டிச் செல்வதென்னும் முயற்சி சித்திபெறவில்லை.

(2) **கடற் போர்.** கடலிலே பிரித்தானியக் கப்பற்படை மிக வன்மையுட னிருந்ததினாலே, அதனைச் சந்தித்துப் போரிட ஜெர்மானியக் கப்பற்படை வெளிவரவில்லை. பல சிறு சண்டைகள் நிகழ்ந்தன ; நீர் மட்டத்துக்குச் சற்றுக் கீழேயிருந்து தம்மை ஒரு கப்பல் தாக்கினவுடனே வெடித்து நாசம் புரியக் கூடிய கடற்கண்ணிகளை ஜெர்மானியர் கடலிலெங்கும் விதைத்தனர். பிரித்தானியக் கப்பற்படை ஜெர்மானியத் துறைமுகங்களிலிருந்த ஜெர்மானியக் கப்பற்படைகளைத் தாக்கமுடியாதபடி இக் கண்ணிகள் விசேடமாக ஜெர்மானியக் கரையைச் சுற்றி விதைக்கப்பட்டன. உலகத்தின் வெவ்வேறு பாகங்களிலிருந்த ஜெர்மானியப் போர்க்கப்பல்கள் நேச வல்லரசுகளின் வியாபாரக் கப்பல்களுக்குப் பெருந் தீங்கு விளைத்தன ; எனினும் அவை பிரித்தானியக் கப்பல்களாற் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. அட்மிறல் வோன் ஸ்பீயின் கீழ் இயங்கிய ஒரு ஜெர்மானியக் கப்பற்படை அதனிலுஞ் சிறிய பிரித்தானியக் கப்பற்படையை யழிக்க, அந்த ஜெர்மானியப்படை தானும் பாக்லந்து தீவுகளுக்கருகே அட்மிறல் ஸ்ரோர்டியால் அழிக்கப்பட்டது. ஆனால், மத்தியத்தரைக் கடலிலிருந்து "கோபன்", "பிரஸ்லா" என்னும் இரு ஜெர்மானியப் போர்க் கப்பல்கள் கொன்ஸ்தாந்தி நோப்பிலுக்குத் தப்பியோட, அவை 1914-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலே மத்திய வல்லரசுகளுடன் சேர்ந்துகொண்ட துருக்கரால் நல் வரவேற்கப்பட்டன.

ஜெர்மனியின் பிரதான கப்பற் படை ஒரேயொரு முறைதான் வெளிவந்தது; அப்போது அது பிரித்தானியக் கப்பற் படையை வட கடலிற் சந்தித்தது. அதன் அதிர்ஷ்டமும் அது விரைவிற் பின்வாங்கினமையுமே அட்மிறல் ஜெல்லிக்கோவால் முற்றுக அழிபடுவதினின்றும் அதனைக் காப்பாற்றியது. அது பெரிதும் உடைபட்டுத் தான் புறப்பட்ட துறைமுகத்தை யடைந்த போதிலும், அதனுற் பல பிரித்தானியப் போர்க்கப்பல்கள் தாழ்க்கப்பட்டன; இதன் பின், அது துறைமுகத்தினின்றும் வெளியே வரவில்லை. அயல்நாட்டுப் பொருள்கள் கப்பல்மூலம் ஜெர்மனியினுள் நுழைவதையும் ஜெர்மானியக் கப்பல்கள்

வெளியேறுவதையும் தடுக்கப் பிரித்தானியக் கப்பற் படையினால் முடிந்தது; இவ்வாறு ஒவ்வோராண்டும் முன்னிலும் நன்றாகத் தடுக்க முடிந்தமை நேச வல்லரசுகளின் வெற்றிக்கு ஒரு பிரதான காரணமாயிருந்ததென்க.

(3) **கீழ்த் திசைப் போர்க்களம்.** ருஷ்ய சேனைகள் பிருஷ்யாவின் கீழ்ப்பாகத்தின்மேல் பெரும்படை யெடுத்துச் சென்று ஆகஸ்ட் மாதத்திலே அந்நாடு முழுவதிலும் தம்மிச்சைபோற் றிரிந்தன. இதன் கருத்து யாதெனின், ஜெர்மானியர் பரீசை நோக்கி அதனைப் பிடிக்கும் நோக்கத்துடன் தங்கு தடையின்றி செல்வதிற் கவனஞ் செலுத்துவதைத் தடுக்கவேயாம்; இதில் அவர்கள் ஓரளவுக்குச் சித்தி பெற்றனர். ஆனால் அம்மாத முடிவிலே, ஜெர்மானியர் ருஷ்யரை எதிர்ப்பாராயினர்; தானன்பர்க்குச் சண்டையிலே வோன்ஹிண்டன்பர்க்கு அவர்களைப் பூர்ணமாகத் தோற்கடித்துத் தம் நாட்டெல்லைகளை அடையும் படி செய்தான். ஆனாலிதற்குத் தெற்கே, ஆஸ்திரிய சேனைகளை எதிர்த்த ருஷ்யர் பெரும் வெற்றி யடைந்தன ரெனலாம். அப்போது சேர்பியாவும் ஆஸ்திரிய ரெதிர்ச்சியை வெற்றியுடன் எதிர்த்து நின்றது.

போர் நடபடிக்கை. (1) **ஜெர்மானியக் குடியேற்ற நாடுகள்.** மத்திய வல்லரசுகளின் சார்பாகத் துருக்கியும் பல்கேரியாவும், நேச வல்லரசுகளின் சார்பாக இத்தாலியும் தலையிட்டமையினால், 1919-ம் ஆண்டில் போர் ஐரோப்பாவின் மேற்றிசையிலும் கீழ்த்திசையிலு மாத்திரமன்றி ஏனைய இடங்களிலும் நடைபெற்றது. ஜெர்மனியின் பல குடியேற்ற நாடுகளுக்கும் படைகள் அனுப்பப்பட்டன. பசிபிக்குச் சமுத்திரப் பிரதேசத்தில் ஜெர்மனிக்குரியனவா யிருந்தவற்றை யப்பானியப் படைகளும் டொமினியன் படைகளும் பிடித்தன. தென்மேற்காப்பிரிக்காவிலிருந்த ரோகோலாந்தையும் கமறூன்சையும் ஆப்பிரிக்காவில் உள்ள நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின. ஆனால், ஜெர்மானியக் கிழக்காப்பிரிக்காவிலோ, லெட்டோவோன் வோபெக் என்னுந் தளபதியின் கீழிருந்த ஜெர்மானியப் படையினர், எவரும் புகழக்கூடிய வகையில் தம் பகைவர்களின் தாக்குதல்களைத் தடுத்து 1916-ம் ஆண்டு வரையில் இடங்


பால்டிக் கடல்
ஜெர்மனி
ஆஸ்திரியா-ஹங்கரி
கார்பேத்திய
மலைகள்
கோர்வாந்து
பிரஷ்யா
போலந்து
கிழக்கிசைப் போர்க்களம்
மைல்கள்
0 50 100 200
படைகள் ஏறக்குறைய இருந்த இடம்:
1915-ம் ஜூ. ஜனவரி மீ. 1ல்
1915-ம் ஜூ. ஜூன் மீ. 1ல்
1917-ம் ஜூ. மார்ச்சு மீ.
1918-ம் ஜூ. மார்ச்சு மீ.
வாலேச்சியா
மேபுக்காரெஸ்டு
கருங்கடல்
கான்ஸ்தான்ஸா

[எமரி வாகர் லிமிடெட்

கொடாதிருந்தனர்; ஆனால் பின்னர், ஒரு மூலை தவிர மற்றெல்லா இடங்களிலிருந்தும் அவர்கள் துரத்தப்பட்டனரென லாம். அடுத்த வாண்டில் அவர்கள் போர்த்துகீசிய கிழக்காப் பிரிக்காவினுட் பிரவேசித்து, போர் முடியும் வரையில் தம்மைக் தற்காத்து வந்தனர். வோபெக்கைத் தோற்கடித்த பெருமை ஸ்மட்சு தளபதியின் கீழ் சென்ற தென்னப்பிரிக்க ஐக்கிய நாட்டுப் படைகளுக்கே உரியதாகும்.

(2) **இத்தாலி.** மூவருடன்படிக்கையில் இத்தாலியும் ஒரு பங்காளியாக இருந்தது; ஆனால் தன் நயம் நேச வல்லரசுகளைச் சார்ந்தே இருந்தனவென அது கருதியது; உண்மையிலே, திரிப்போலியைப் பற்றின போரில் இத்தாலி ஜெர்மனியுடன் மனத்தாப மடைந்து விட்டது. 1915-ம் ஆண்டில் இத்தாலியர் ஆஸ்திரியாவின் மேல் போர் தொடுத்தனர். ஆனால் இத்தாலியின் எல்லைகளில் ஆஸ்திரியர் தாபித்திருந்த அரண்கள் பிடிக்கக்கூடாத அளவுக்குப் பலமாயிருந்ததினாலே, இத்தாலியப் படைகளால் ஆஸ்திரியாவினுள் நுழையமுடியவில்லை. 1917-ம் ஆண்டில் அதுகாறும் ருஷ்யாவுடன் போர்புரிந்து வந்த படைகளை ஜெர்மானியர் இவ்விடத்துக்கனுப்பி, இத்தாலியரைப் பெரு நட்டத்துடன் பின்வாங்குமாறு துரத்தினர். இத்தாலியருக்குதவியாகப் பிராஞ்சிய, பிரித்தானியப் படைகள் அனுப்பப்பட, அவர்களால் ஜெர்மானியரினதும் ஆஸ்திரியரினதும் தாக்குதல்களைத் தடுக்க இயன்றது; அடுத்தவாண்டில் அவர்கள் வெற்றிகரமாக முன் செல்ல முடிந்தது.

(3) **துருக்கியும் பல்கேரியாவும்.** 1915-ம் ஆண்டின் தொடக்கத்தில் டார்டினெல்சைக் கைப்பற்றி, கருங்கடலின் வழியே ருஷ்யாவுடன் போக்குவரவு செய்வதினாலே துருக்கிக்குப் பெருந் தோல்வியுண்டாக்க வேண்டுமென்று பிரித்தானியாவுக்கு ஓரெண்ண மிருந்தது; அல்லாவிடில் ருஷ்யாவுடன் போக்குவரவு செய்தற்கான வழி ஆர்க்டிக் கடல்மூலமாக கஷ்டமான பாதையேயாம். ஆனால் இவ்வேற்பாடு நன்காராய்ந்து செய்யப்படவில்லை. நீரிணையின் முகத்துக்குக் காவலாயுள்ள கல்லிப்போலித் தீபகற்பத்திலுள்ள கோட்டைகளின் மீது கப்பல்களிலிருந்து வெடிகுண்டுகளைப் பிரயோகித்ததினால் துருக்கர்

எச்சரிக்கப்பட்டனர். தரைப்படை இவற்றிற்குதவி கொடுக்க வில்லை. எனவே, பிரித்தானிய, பிராஞ்சியப் படைகள் பின்பு வந்தபோது, பலமான இடங்களிலிருந்துகொண்டு துருக்கர் தம்மெதிர்ப்பைத் தடுக்கத் தயாராயிருப்பதை அவை கண்டன. மெச்சத்தக்க வீரம் அவர்களுக்குத் தீபகற்பத்திலிறங்கவே இடந்தந்தது. ஆனாலதற்கு மேல் அவர்களால் செல்ல முடிய வில்லை ; பல்லாயிரர் இறந்தபின் கடைசியில் பின்வாங்க வேண்டி யிருந்தது. இங்குதான் ஆஸ்திரேலியாவிலிருந்தும் நியூசீலாந்திலிருந்தும் வந்த ''அன்சக்'' படை பகுதியும், பிரித் தானியாவிலிருந்து வந்த 29-ம் பகுதிப் படையும் கேட்போர் திகைக்கத்தக்க வகையிலே வீரப்போர் புரிந்தன.

இங்கே இவர்களடைந்த தோல்வியே, 1915-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலே பல்கேரியா மத்திய வல்லரசுகளுடன் சேர்ந்து போர் புரிதற்குக் காரணமா யிருந்தது. அதே மாதத் தில் கிறீசையும் நேச நாடுகளுடன் சேர்க்க வேண்டுமென, கிரேக்க இராஜ தந்திரி வெனிசேலஸ் எண்ணிய எண்ணம் அந்நாட்டரசனால் தடைபட்டது. இச்சமயத்தில், சேர்பியர் மக் கென்சனின் கீழ் போர் புரிந்த ஜெர்மானியப் படைகளினுற் பெரிதும் நெருக்குண்டனர் ; வலது புறத்திலிருந்து பல்கேரியர் தாக்க, நாட்டிலிருந்து சேர்பியர் துரத்தப்பட்டனர். ஆனால், நேச வல்லரசுகள், கிரேக்கத் துறைமுகமான சலோனிக்காவுக் குச் சில படைகளை யனுப்பி, தங்களை நன்கு காத்துக்கொள்ளக் கூடிய நிலைமையில் வைத்துக் கொண்டன ; பால்க்கன் தீபகற் பத்தின், மேற்குக் கரையிலிருந்து சேர்பியப் படைகள் மீண்டும் போர்க்கோலம் பூணுவிக்கப்பட்டு, போர்க் கப்பல்களி லேற்றப் பட்டு, சலோனிக்காவிலுள்ள நேச வல்லரசுகளுடன் சேர்ந் திருக்க அனுப்பப்பட்டன.

(4) பலஸ்தீனவும் மெசபொட்டேமியாவும். துருக்கிக்கு எதிராகப் பிரித்தானியர் இன்னமுமிரண்டு படை யெழுச்சிகளை நடாத்தினர். இந்தியாவுக்குச் செல்லும் கடற்பாதையிலுள்ள தும் எகிப்துக்கும் பலஸ்தீனவுக்குமிடையிலுள்ளதுமான சுயேஸ் வாய்க்காலையும், பிரித்தானியப் போர்க் கப்பல்களுக்கு எரி பொருளிற் பெரும்பகுதி பெற உதவும் மெசபொட்டேமியாவி

லும் பாரசீகத்திலும் உள்ள மண்ணெண்ணெய்க் கிணறுகளை யுந் தாக்குவதாகத் துருக்கப் படைகள் பயமுறுத்தின. ஈரி டங்களையும் காக்கப் படையனுப்ப, அச்செய்கை துருக்க மாகா ணங்களான பலஸ்தீனுவையும் மெசபொட்டேமியாவையும் தாக்குவதாக முடிந்தது ; இப்படை யெழுச்சியில் பல இந்தியப் படைகளும் பங்கு பெற்றன. மெசபொட்டேமியப் படை யெழுச்சி 1916-ம் ஆண்டில் நன்கு தடுக்கப்பட்டது ; பலஸ் தீனுப் படையெழுச்சியும், 1917-ம் ஆண்டில் அலன்பி என்னும் படைத்தலைவர் முன் சென்று எருசலேமைப் பிடிக்கும் வரை யில் மேலோங்காது தடுக்கப்பட்டது. அதே ஆண்டில் மோட் படைத்தலைவர் மெசபொட்டேமியாவில் பக்டாட்டைப் பிடித் தனர். 1918-ம் ஆண்டில் இவ்விரு படைகளும் எதிரியின் நாட்டினுள் மேன்மேலுஞ் சென்று, துருக்கரைப் பல இடங் களில் வென்றன.

(5) **கீழ்த் திசைப் போர்க்களம்.** ருஷ்ய எல்லைப்புறத்திலே போர் முன்னும் பின்னுமாக மாறி மாறி நடைபெற்றது. 1915-ம் ஆண்டில் ருஷ்யர் ஆஸ்திரியரைத் துரத்தின போதிலும், ஜெர் மனியிடம் இன்னெரு முறைத் தோல்வி யடைந்தனர். இத் தோல்வியிலிருந்து அவர்கள் தலைதூக்கவேயில்லை. கோடிக் கணக்கான போர் வீரருக்குப் போர்க் கருவிகளை அளிப்பதே ருஷ்யாவின் பெருங் கஷ்டமாக இருந்தது. இக்குறையை நீக்க நேச நாடுகள் தம்மாலானவரை முயன்ற போதிலும் முடிய வில்லை. அடுத்த வாண்டில் ருஷ்யா ஆஸ்திரியரைப் பெரியப் போரொன்றில் இன்னெரு முறை வென்றது ; இவ்வெற்றி சிறு நாடான ருமேனியாவை நேச வல்லரசுகளுடன் சேர்ந்து கொள்ளும்படித் தூண்டியது. ஆனால், 1917-ம் ஆண்டில் ருஷ்யாவில் புரட்சி யொன்றேற்பட, அந்நிகழ்ச்சியே இப்பெரும் போரிலிருந்து ருஷ்யா விலகியதைக் குறித்ததெனலாம். ருமே னியாவுக்குக் காவலில்லாததுபோக, அது ஜெர்மானியரின் படையெழுச்சிக்காளாகி, அவர்களை அவர்களின் நிபந்தனைப்படி சரணமடையும்படியாயிற்று.

(6) **கடற் போர்.** பிரித்தானியக் கப்பற் படையின் மேலான திறமையினுலே ஜெர்மானியப் போர்க்கப்பல்கள் கடற்கரையை

விட்டு நீங்காது அடைபட்டபோதிலும், அதன் நீர்மூழ்கிக் கப்பல்கள் வெளிப்பட்டு நேச வல்லரசுகளின் கப்பல்கள் வியாபாரத்தைப் பெரிதும் அழித்து விட்டன. ஜெர்மானியர், எச்சரிக்கையின்றியே வியாபாரக் கப்பல்களை தாழ்த்ததோடு, நாகரிக சாதியினர் பின்பற்றும் போர் முறைகளுக்கு விரோதமான பல செய்கைகளைப் புரிந்தனர். அவர்கள் கப்பல்கள் பலவற்றை நீரினு ளாழ்த்தியதினுலே, சிறிது காலம் இங்கிலாந்து உணவின்றிப் பட்டினி யிருக்கவரு மென்னும் பயமுமுண்டாகியது. உணவுக் கட்டுப்பாட்டினு லும், வியாபாரக் கப்பல்களுக்குத் துணையாகக் காப்புப் படைகளை அனுப்புவதினுலும் நீர்மூழ்கிக் கப்பல்களிருக்கு மிடத்தைக் கண்டறிந்து அழிப்பதற்கான பல்வேறு நுட்பமான இயந்திரங்களை உபயோகிப்பதனுலும், இப்பயம் நீக்கப்பட்ட தெனலாம். மேலும், ஜெர்மானியர், பல அமெரிக்கக் கப்பல்களையும் அமெரிக்கர் பிரயாணஞ் செய்த வேறு கப்பல் களையும் நீரினுள் ஆழ்த்தினர். எனவே, 1917-ம் ஆண்டு தொடக்கமாக, கண்ணிற்பட்ட கப்பல்களை யெல்லாம் எச்சரிக்கை யின்றியே ஆழ்த்தப் போவதாக ஜெர்மானியர் பிரசித்தஞ் செய்தபோது, அமெரிக்க ஐக்கிய நாடு ஜெர்மனி யுடன் போரிட வாரம்பித்தது.

மேற்றிசைப் போர்க்களம். பெல்ஜியத்தினும் பிரான்சி லுமே போர் முனை எப்போதும் பிரதானமாயிருந்தது. இங்கு தான், பிரான்சு, பிரித்தானியா, ஜெர்மனி என்பவற்றின் பிரதான படைகள் குழுமியிருந்தன. எக்கட்சி இங்கு வெற்றி யடைந்ததோ அதுவே, போர் முழுவதிலும் வெற்றிபெறு மெனலாம். தம் படைகளை ஒரு போர் முனையிலிருந்து இன் னெரு போர் முனைக்கு மாற்றக்கூடிய பெரிய அனுகூலம் ஜெர்மானியருக்கிருந்தது; மேலும் அவர்கள் ஒருவருடைய ஆக்கினைக்குட்பட்டுப் போரிட்டனர்; ஆனுல் 1918-ம் ஆண்டு வரையில் நேச வல்லரசுகள் அவ்வாறு செய்யவில்லை. கொடுஞ் சண்டைகள் பல நடைபெற்றன. இரு கட்சிகளிலும் இலட்சக்கணக்கான சனங்கள் கொல்லப்பட்டனர்; அல்லது படுகாயமடைந்தனர். பிரித்தானியாவில் சாதாரண நாட்களி

லிருந்த படையினரின் தொகை 2,50,000 ; நாட்டினுள் அவ்வப்பிரதேசங்களில் படையினராகச் சேர்க்கப்பட்டவரின் தொகை 3,00,000. போர் நடந்த காலத்தில், தாமாகவே படையிற் சேர விரும்பு மிளைஞரைச் சேர்ப்பதனலும், பின்னர், சனங்களைக் கட்டாயமாகப் படையிற் சேரச் செய்வதினலும் 50 இலட்சத்துக்கு மேற்பட்ட படைவீரராக இத்தொகை கூட்டப் பட்டது. இலட்சக் கணக்கான ஸ்திரீகளும் வயதானவர்களும் வெடிகுண்டு போன்ற யுத்த உபகரணங்களையும் தேவையான வேறு பொருட்களையும் உண்டாக்கப் பாடுபட்டனர். புதுப் படைகளைப் பயிற்றி அமைத்தவர் கிற்சினர் பிரபு.

1915-ம் ஆண்டில் நேச வல்லரசுகள் ஜெர்மானியரை **நூவ் ஷாப்பெல்** என்னுமிடத்தில் முதலிற்தாக்க, ஜெர்மானியர் இதற்குப் பதிலளிப்பதுபோல் **ஈப்பிறே** என்னும் பட்டினத்தைத் தாக்கினர் ; இங்குதான் மரணம் விளைக்கும் நச்சுக் காற்று முதன் முதலாக உபயோகிக்கப்பட்டது. 1916-ம் ஆண்டில் பிராஞ்சியர் வசமிருந்த வெர்டூன் கோட்டையைப் பிடிக்க ஜெர்மானியர் பிரம்மாண்டமான முயற்சி செய்தனர் ; நேச வல்லரசுகளும் எண்ணிறந்தோரைப் பலி கொடுத்து சோம் நதியில் முன் சென்றன. 1917-ம் ஆண்டின் ஆரம்பத்தில், ஜெர்மானியர் முன்னணியின் ஒரு பகுதியிலிருந்து பின் வாங்கினர் ; ஆனல் அது முன்னைய தானத்திலிருந்து பத்து முதல் இருபது மைல் தூரத்தில் முன்னிலும் பலமான தானங்களைக் கைப்பற்றவேதான் ; அதனைப் பிடிக்க, நேச வல்லரசுகள் தம் படைகளைப் பன்முறை அனுப்பினபோதிலும், அம் முயற்சிகள் வீணுயின.

போரின் முடிவு. அமெரிக்காவிலிருந்து வரும் இலட்சக் கணக்கான படைவீரர் தம்முடனிருந்து போர் புரிவர் என்பதை யறிந்ததும் நேச வல்லரசுகளுக்குப் பெரும் உற்சாக முண்டாயது. ஆனலவர்களை அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டுவருவதற்கு நெடுங்காலம் பிடித்தது. அதற்கிடையிலே, கீழ்த்திசைப் போர்க்களத்தில் ஜெர்மானியப் படையினருக்கு வேலையில்லாமையினல் அவர்கள் மிகத் தீவிரமாக ஏனைய களங்களுக்கு அனுப்பப் பட்டனர். அமெரிக்க படை

களைப் பயிற்றுவதற்காக நேச நாட்டு ராணுவ உத்தியோகத்தர் அனுப்பப் பட்டார்கள். பயிற்றப் பட்டபின் பிரித்தானிய, அமெரிக்க கடற்படைகளின் காவலோடு, அவர்களின் கப்பல் களில் கொண்டுவரப்பட்டனர். 1918-ம் ஆண்டு மார்ச்சு மாதத் திலே ஜெர்மானியர் முன்வந்து தம் மெதிரிகளைக் கடுமையாகத் தாக்கினர். நேச வல்லரசுகளின் முன்னணி பின்னேக்கித் தள்ளப்பட்டது ; ஆனல் அவர்களின் படை அதிசயிக்கத்தக்க விதமாகப் பகைவரின் எதிர்ப்பைத் தாங்கி நின்றதெனக் கூற லாம். பிரான்சிலுள்ள நேச வல்லரசுகளின் படைகளுக்கெல் லாம் தலைவனக நியமிக்கப்பட்ட பிராஞ்சிய தளபதியான போஷ் என்பான் ஜூலை மாதத்தில் மிகத் திறமையுடன் எதிரி களை தாக்கும் வரையில், ஜெர்மானியர் முன்சென்று தாக்கி வந்தனர். போஷின் எதிர்ப்பின் பின், ஜெர்மானியப் படை கள் அதைத் தாங்கவியலாது பின் வாங்கத் தொடங்கின. ஆகஸ்ட் மாதத்தின் இறுதியளவில், முன்னிழந்ததிற் பெரும் பகுதி மீண்டும் பெறப்பட்டது ; செப்டம்பர் மாதத்திலே நேச வல்லரசுகள் போர்க்களமெங்கு முன்செல்வாராயினர்.

இப்போது கிரேக்கரும் சேர, பல சாதியினர் கொண்ட நேச வல்லரசுகளின் படைகள் சலோனிக்காவிலிருந்து புறப்பட்டுப் பல்கேரியாவினுள் நுழைந்து போர் புரிய, செப் டம்பர் மாத இறுதியில், பல்கேரியர் சரண் புகுந்தனர். துருக்கி, தன் நேச வல்லரசுகளிலிருந்து பிரிக்கப்பட்டது. ஜெனெறல் அலன்பி கொன்ஸ்தாந்திநோப்பிள்—பக்டாட் புகைரதப் பாதை வரையும் சீரியாவினூடே செல்ல, அக்டோபர் முடிவில் துருக்கியும் போரினின்றும் விலகியது. அதே மாதத் தில், இத்தாலியர் ஆஸ்திரியரை வெல்ல, அவர்களும் எங்கும் சரண் புகுந்தனர். ஜெர்மனி மாத்திரமே தோல்வி யடையாது நின்றது. மேற்றிசையிலிருந்த ஜெர்மானியச் சேனைகள் தொடர்ச்சியாக நடந்த பெரும் போர்களிலே திட்ட மாகப் பின் தள்ளப்பட்டன. எனினும் ஜெர்மானியர் நேச வல்லரசுகளை நெடுங்காலம் எதிர்த்து நிற்கத் தீர்மானித்ததோடு, தம் கப்பற்படையையும் வெளிப்பரந்து போரிடுமாறு உத்தர விட்டனர். ஆனல் மாலுமிகள் இவ்வுத்தரவுகளைக் கீழ்ப்படிய



மேற்றிசைப் போர்க்களத்தில் ஒரு காட்சி

மறுத்து, புரட்சி செய்தனர்; இப்புரட்சி ஜெர்மனி முழுவதி லும் பரவியது; இன்னமும் போரிடுதல் பயனற்ற செய்கையா யிற்று. எனவே நொவம்பர் மாதம் 11-ம் தேதி நேச வல்லரசு கள் ஜெர்மனியின் எல்லைக்குள் பிரவேசிக்கும்போது, ஜெர்மா னியர் போர் நிறுத்தம் வேண்ட, அவ்வேண்டுகோள் அளிக்கப் பட்டது. சக்கரவர்த்தி யுட்பட, ஜெர்மனியிலிருந்த அரசர் களெல்லாரும் தம் பதவியினின்றும் வீழ்த்தப்பட்டனர்; புதிய ஜெர்மானியக் குடியரசின் பிரதி நிதிகளோடு போர் நிறுத்தத்திற் கான நிபந்தனைகள் தீர்மானிக்கப்பட்டன.

இக் காலப் போரின் தன்மை. முற்காலத்திலே போர், ஓரளவு ஆடம்பரத்துடனும், படாடோபத்துடனும் சிறிதளவு விசித்திர வாழ்க்கை கலந்தும் நடத்தப்பட்டு வந்தது. போர் கள் வழக்கமாகக் கோடை காலந்தவிர வேறு காலங்களில் நடாத்தப்படுவதில்லை. படை வீரர்கள் அழகான உடை களைத் தரித்தனர்; படைத் தலைவர்கள் படைக்கு முன்னே குதிரையேறிச் சென்றனர்; படை வீரரும் பெருந்தொகை யினரல்லர். இருபதாம் நூற்றாண்டு யுத்தமுறை, சிறப்பாகத் தரைப்படையில், மாறிவிட்டது. ஆகாயத்திலும் புதுவித யுத்தம் செய்யப்படுகிறது. எதிரிகளால் தாங்கள் காணப் படாமல் இருப்பதற்காக, வீரர்கள் மங்கிய நிற உடைகளை உடுக்க வேண்டியவரானார்கள். மாரிகாலத்திலும் பருவ மழை காலத்திலும் வாகனங்கள் சேற்றில் புதைந்து இடர் கொடுத்த போதிலும், வருடம் முழுதும் யுத்தம் நடைபெறும். பீரங்கிப் படையினர் பெரும் அழிவு செய்யக்கூடிய குண்டுகளை வெகு தூரத்துக்கு குறிப்பாக எறிவர். தங்கள் துருப்புகள் எதிரியின் முற்படையுடன் கைகலந்து கொண்டிருக்கும் போது, விமானங் கள் எதிரிகளின் பிற்படைகளின் மேல் குண்டுகளை வீசும். முன்போல் படைத்தலைவர்கள் குதிரைகளில் படைகளின் முன் செல்லாமல் பல மைல்களுக்குப் பின்னிருந்து எழுத்து மூலமும் டெலிபோன், உவயலெஸ் மூலமும் உத்தரவுகள் பிறப்பிப்பர். முதலாம் உலக யுத்தத்தின்போது, ஐரோப்பாவில் சண்டை செய்த போர் வீரர்கள் சேற்று அகழிகளிலும், ஆழமான கிடங்குகளிலும் அதிக காலம் கழித்தனர். இவர்கள் பெரும்

வசதி யீனத்தையும், எதிரிகளின் குறிதவரு ஆயுதங்களின் அபாயத்தையும் பொறுத்தார்கள். நச்சு வாயுகளும் உபயோகிக்கப்பட்டன. நிலத்தையே நச்சுப் படுதிய 'மஸ்ராட' வாயுவும் இவற்றில் ஒன்றாகும். இரண்டாம் உலக யுத்தத்தின் போது 'ராங்க்' எனப்படும் வலுவுள்ள ஆயுதம் தாங்கும் வாகன விருத்தியினால் படை விரைந்து செல்லக்கூடியதாற்று. ஆனால் யுத்த வாகனங்களையும் வீரர்களையும் நாசமாக்கக்கூடிய சுரங்கங்கள் நிலத்திற் புதைக்கப்பட்டன. என்னவென்றாலும், நச்சு வாயுகள் பாவிக்கப்படவில்லை.

கடலிலே, கண்ணுக்குத் தெரியாத தூரத்திலிருந்தே, யுத்தக்கப்பல்கள் ஒன்றோடொன்று சண்டைபுரியும். இரண்டாம் உலக யுத்தத்தில், விமானம் தாங்கிக் கப்பல்களிலிருந்து, குண்டு வீசும் விமானங்கள் போய் சண்டை செய்து, எதிரிகளின் கப்பல்களைப் பல மைல்களுக்கப்பாலேயே கடலுள் ஆழ்த்தின.

இலட்சக் கணக்கான மக்கள் யுத்தத்தில் ஈடுபடுவர். யுத்தம் செய்யும் தேசங்களின் சனங்கள் முழுதும், யுத்த தளபாடங்கள் செய்வதற்காக ஏற்படுத்தப்படுவர். இந்த நாடுகளின் உணவு வினியோகம் எப்பொழுதும் அபாயத்திலேயே இருக்கும். உதாரணமாக, முதலாம் உலக யுத்தத்தின்போது நேச நாட்டுக் கடற்படையின் முற்றுகையால் ஜெர்மனியின் முழுச் சனத்தொகையும் பட்டினி நிலையை எய்தினர். 1918-ல் ஜெர்மானியருடைய எதிர்ப்பு முறிவடைந்தமைக்கு இது ஒரு பிரதான காரணமாகும். இரண்டு உலக யுத்தங்களின் போதும், ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் உணவு ஏற்றி வந்த பல கப்பல்களை தாழ்த்திய காரணத்தால், பிரித்தானியர் பட்டினி கிடக்கும் அபாயத்துக்குள்ளானார்கள்.

இச்சனத் தொகைகள், ஓரளவு முதலாம் யுத்தத்திலும், பெரும்பாலும் இரண்டாம் யுத்தத்திலும், அபாயத்துக்குட்பட்டன. கொடிய வெடி பொருட்கள் கொண்ட குண்டுகளால், யுத்த களத்துக்கு ஒரு சில நூறு மைலுக்கப்பால் இருக்கும் மக்கள் கொல்லவுங் காயப்படுத்தவும் பட்டார்கள்; தப்பினால், வீடுகள் நாசமாக்கப்பட்டன. இரண்டாம் உலக

யுத்தத்தின் போது ஜெர்மனி பெரும் சேதமடைந்தது. ஆனால் பயங்கரமான அழிவு பிரித்தானியாவிலும் ஏற்பட்டது. இந்த யுத்தத்தின் இறுதியில், மிகக் கோரமான அணுக்குண்டு இரண்டே முறை உபயோகிக்கப்பட்டது. இதன்பின் இதிலும் பார்க்கக் கோரமான சலவாயுக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறது. ஆனால் இன்னும் உபயோகிக்கப்படுத்தப்படவில்லை. உபயோகிக்கப்பட்ட இரு அணுக்குண்டுகளும் யப்பானின் இரு பெரிய நகரங்களை அழித்து, தப்பியவர்களுக்கு பயங்கர மான நோய்களையும் கொடுத்தன. ஒரு சலவாயுக்குண்டு உலகில் உள்ள பெரிய நகர்கள் எவற்றையும், சுற்றியுள்ள பெரும் நிலப்பரப்பையும் அழிக்கக்கூடும். ஒரு சில சல வாயுக்குண்டுகள் வெடிக்கப்பட்டால் மனிதவர்க்கம் மட்டும் அன்றி உயிரினம் அத்தனையும் நாசமாகலாம்.

1956-ன் முடிவிலே அ. ஐ. நாட்டினதும் ருஷ்யாவினதும் (தற்போது, சோவியெற் ஐக்கியநாடு) ஆகாயப்படைகள்தான் சலவாயுக்குண்டுகளை வைத்திருந்தன. இவ்விருதேசங்களும் பிரித்தானியாவும் இக்குண்டுகளை ஆகாயவிமானங்களின் உதவியின்றி, ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால்அனுப்பிப் பரீட்சை பார்க்கின்றன. இந்த அழிவுதரும் ஆயுதத்தைப் பாவிக்கவோ, தம்மீது பாவிக்கப்படுவதையோ, எந்த நாட்டுத் தலைவர்களும் விரும்பமாட்டார்கள். இவைகளின் உபயோ கத்தைத் தடுப்பதற்கு ஒரேவழி, யுத்தம் செய்யும் நோக்கத்தை எல்லா நாடுகளும் அறவே ஒழிப்பதாம். இருந்தும், பெரும் தரை, கடல், ஆகாயப்படைகளைக் காண்கிறோம். சில சிந்தனையற்ற தலைவர்கள் தங்கள் எதிரிகளுடன் சண்டை செய்யவேண்டும் என்று கூறுவதையும் கேட்கிறோம். ஆனால் ஒரு சிறு சண்டை பெரும் யுத்தமாகி, சலவாயு வைத்திருக்கும், பாவிக்க விரும்பும் நாட்டையும் சேர்க்குமானால், அதை உலகி லுள்ள உயிரினங்களின் முடிவு என்றே கூறலாம். இதனால் தான் நேரு போன்ற தலைவர்கள் ஒரு தேசத்திற் கெதிராக இன்னொரு தேசம் பலாத்கார முறைகளை ஒருபோதும் உபயோ கிக்கக் கூடாது என வலியுறுத்துகின்றனர்.

உதவிக் குறிப்புக்கள்.

போரின் பயன்கள், பங்குபெற்றவரின் தொகை போரிற் பங்குபெற்ற சாதியினரின் ஆண்மக்களுள் போர் வீரரின் உயர்ந்த விகிதம், படைவீரரின் மொத்தத் தொகைக்கும், காயம் அல்லது மரணம் அடைந்தோருக்குமுள்ள விகிதம் என் பவற்றைக் கவனிக்குமிடத்து, இதுகாறும் நடைபெற்ற போர் களுள் 1914-1918-ம் ஆண்டுகளுக்கிடையே நடைபெற்ற போரே மிகப் பெரிதென்க. போர் நடைபெற்ற வரலாறு கூடியவரையில் மிகச் சுருக்கமாக இங்கு கூறப்பட்டுள்ளது ; இந்நூலாசிரியர் தமது சுய அனுபவத்திலிருந்தும் அவதானிப்பி லிருந்தும் கண்ட இக்காலப் போரின் பயங்கரத்தன்மை கடைசி யில் விவரிக்கப்பட்டுள்ளது. போரின் கடைசியாண்டிலே உலகத்திலுள்ள சாதியினரிற் பெரும் பகுதியோர் உண்மை யாகவோ அல்லது பெயரளவிலோ போர் செய்தனர் என்பதும், உலகின் பொருளாதார நிலை குலையாது அரும் பொருட்டாகத் தப்பியதென்பதும் நாம் விசேடமாய்க் கவனித்தற்குரியது. இரண்டாவது உலகப் பெரும்போர் நடைபெற்று முடிந்த பின்னும் இதன் அபாயம் மேலும் கூடியுள்ளது.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1914. போரின் தொடக்கம் : மா(ர்)ன், தானன்பர்க் என்னுமிடங்களில் நிகழ்ந்த பிரதான போர்கள்.

1914-1918. மேற்றிசைக் களத்தில் "இடம்" பெறுதற்காகப் புரிந்த போர்.

1915. நேச வல்லரசுகளை இத்தாலி சேர்ந்தது.

1916. யட்லந்து கடற்போர். ஜெர்மானியப்படை கடைசியாக வெளிவந்தமை.

1917. இத்தாலியப் படைகள் நாசமடைந்தன ; ருஷ்யப் புரட்சியினால் நேச வல்லரசுகள் அந்நாட்டின் உதவியைப் பெருதலியலாது போயிற்று. அமெரிக்க ஐக்கிய நாட்டினர் நேச வல்லரசு களின் பக்கம் சேர்ந்து கொண்டனர். பிரித் தானியர் எருசலேம், பக்டாட் பட்டினங் களைக் கைப்பற்றினர்.

1918. மேற்றிசைப் போர்க்களத்தில் நேச வல்லரசுகளைப் பிரிக்க ஜெர்மானியர் செய்த முயற்சிகள் பெருங் கஷ்டத்துடன் தடுக்கப்பட்டன.

நேச வல்லரசுகள் எல்லாப் போர்முனைகளிலும் வெற்றி பெற்று முன்னேறின.

மத்திய வல்லரசுகள் பின்வரும் முறைப்படி போரிடை யீட்டை வேண்டின: பல்கேரியா, துருக்கி, ஆஸ்திரியா-ஹங்கரி, ஜெர்மனி.

23. சமாதான உடன்படிக்கைகளும் சர்வதேச சங்கமும்

போரிடையீடு. போரை நிறுத்த இணங்கும்போதே மீண்டும் போர் மூளாதிருத்தற்கேற்ற நியதிகளுக்கு ஜெர்மனியை ஒப்பச்செய்ய வேண்டுமென நேச வல்லரசுகள் தீர்மானித்தனர். இந்நியதிகள் பதின்நான்கு விதிகளின்கீழ் அமெரிக்க ஐனுதிபதி உவில்ஸனால் ஆக்கப்பட்டு, மற்றய நேச நாடுகளினால் அனுமதிக்கப்பட்டன. இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் பேச்சுகளை நடத்த ஜெர்மானியத் தலைவர் எண்ணியிருந்தார்கள். ஆனால் போர் இடையீட்டு நியதிகள் கடுமையாகவிருந்தமையால் அவர்கள் பேச்சாட அதிகம் இடமிருக்கவில்லை. பிரதான நியதிகள் பின்வருமாறு:—ஜெர்மானியர், அல்சேசு-லொறேனையும், றைன் நதியின் இடது கரையையும் விட்டு நீங்கவேண்டும்; ஜெர்மானியக் கப்பற்படையின் பெரும்பகுதி, எல்லா நீர்மூழ்கிக் கப்பல்கள், போர்ப்பொருள்களிற் பெரும்பகுதி, கைதிகள்—எல்லாம் நேச வல்லரசுகளிடம் ஒப்புவிக்கப்படவேண்டும்; ஆனால் நேச வல்லரசுகளாற் சிறை பிடிக்கப்பட்ட ஜெர்மானியக் கைதிகள் உடனே விடுவிக்கப்படமாட்டார்; ஜெர்மனியில் வியாபார முற்றுகை உடனே நிறுத்தப்படாது; ருஷ்யாவும் ருமேனியாவும் ஒத்துக்கொண்ட கட்டாய உடன்படிக்கைகள் நீக்கப்படும். தோல்வி யடைந்த ஏனைய நாடுகளின்மீது இவ்வளவு கடுமையான நியமங்கள் விதிக்கப்படவில்லை.

சமாதான மகாநாடு. சமாதான நியமங்களிவையெனத் தீர்மானிக்கவும் அவற்றைத் தோல்வியுற்ற நாடுகளுக்குத் தெரிவிக்கவும் நேச வல்லரசுகளின் பிரதிநிதிகள் 1919-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பரீசிற் கூடினர். அநேகமாய் உலகத்தின் பெரும்பாலான நாடுகளிலிருந்து (மொத்தத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் உத்தியோகத்தர்களும்) கூடினர். அவர்களுள் மிகப் பிரதானமானவர்—அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைவரான உட்ரோ உவில்சன்; பிரான்சு, பிரித்தானியா, இத்தாலி ஆகியவற்றின் முறையே மந்திரிகளான கிளமென்சூ லோயிட், ஜோஜ், ஒர்லாந்தோ. முடிவான தீர்ப்புகள் இந்நால் வரையே பொறுத்திருந்தன ; ஆனற் பல கிளேச் சபைகளும், ஆராய்ச்சிச் சங்கங்களும் உடன்படிக்கைகளின் பல்வேறு பிரிவுகளே வரைந்தும், போரிடையீட்டு ஒப்பந்தத்தின் நியமங்கள் நிறைவேற்றப்பட்டனவோ வென்பதைக் கவனித்தும், பழையனவும் புதியனவுமான ஐரோப்பிய தேசங்களில் ஒழுங்கை நிலை நாட்டியும் வந்தன.

ஆஸ்திரியா, ருஷ்யா, துருக்கி என்னும் சக்கராதிபத்தியங்களின் சிதைவோடு புதிய நாடுகள் தோன்ற, அவற்றின் எல்லைகளேத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. சண்டை காலத்தில், நேச தேசங்கள் தாம் வெற்றியடைந்தால் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதுபற்றி இரகசிய ஒப்பந்தங்கள் செய்திருந்தன. உதாரணமாக அவை இத்தாலிக்கும் ருமேனியாவுக்கும் சாதகமான பல வாக்குறுதிகள் கொடுத்திருந்தன. ஜெர்மனியை (பிரதானமாக ஜெர்மனியின் போர்த்தலைவர்களே)த் தண்டிக்க வேண்டு

உட்ரோ உவில்சன்

மெனவும் பலமான அபிப்பிராயமிருந்தது. இதனால், நடுநிலை யுடன் இவ்விஷயங்களைத் தீர்க்கவேண்டுமென்று உட்ரோ உவில்சன் கொண்டிருந்த நோக்கம் மாற்றமடைந்தது. ஏனெனில் இவ்விஷயங்களில் அவனிலும் பார்க்க அநுபவம் வாய்ந்த மற்ற அரசியற் தந்திரிகள் அவனைத் தந்திரமாகத் தம்வழிக்குத் திருப்பிவிட்டனர்; ஆனால், பிரதானமான நால் வருள் அவனும் ஒருவனாக இருந்ததினால் சமாதான உடன் படிக்கைக்கான நியமங்களை இறுதியாகத் தீர்மானிப்பதில் அவன் பெரிய பங்கு பெற்றான்.

ஒப்பந்தத்தை உருவாக்கியோன் கடமைகளாவன: தேசீய இன உணர்ச்சிகளைத் தழுவியும், வென்றவரின் கோரிக்கைகளை மேவியும், ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளைப் புதிதாக நிர்ண யித்தலும், ஜெர்மானியர் கையிலும் துருக்கியர் கையிலும் இருந்த நாடுகளை என்ன செய்வது என்று தீர்ப்பதும், ஜெர்மனி யும் அதன் நேச நாடுகளும் செய்த பெரும் அழிவுக்காக எவ்வ ளவு நட்டஈடு இருக்கவேண்டும் என்று தீர்மானித்தலும், கடைசியாக, இன்றில்லாமல் என்றும் போர் மூழாதிருக்க வழி வகைகளைக் கண்டுபிடித்தலுமாம்.

ஒவ்வொரு நாட்டுடனும் வெவ்வேறு ஒப்பந்தங்கள் செய் யப்பட்டன. இவற்றுள் பிரதானமானது ஜெர்மனியுடன் செய் யப்பட்ட வேர்சேல்ஸ் உடன்படிக்கை. ஜெர்மானியப் பிரதிநிதி கள் உடன்படிக்கையிற் கூறப்பட்ட நியமனங்கள் பலவற்றுக் கிணங்க முதலில் மறுத்தபோதிலும், இறுதியில் மனக்கசப் புடன் இணங்கவேண்டியதாயிற்று. ஆஸ்திரியா, பல்கேரியா, துருக்கி ஆகியவற்றுடன் தனிப்பட்ட உடன்படிக்கைகள் செய்யப்பட்டன. ஆனால் துருக்கி அதற்கிணங்கமறுத்து எதி ரிட்டு நடந்தமையினால், 1923-ம் ஆண்டில் அதனுடன் புதி தாக உடன்படிக்கை செய்யவேண்டியதாயிற்று.

உடன்படிக்கையின் நியமங்கள். பிரான்சு ஐரோப்பா வில் அல்சேசு-லொறேனைப் பெற்றது; ஜெர்மானியர் அந் நாட்டிற் றங்கிய காலத்தில் பிராஞ்சிய நிலக்கரிச் சுரங்கங் களுக்குண்டான நட்டத்துக்கு ஈடாக, சார் பள்ளத்தாக்கி லிருந்த நிலக்கரிச் சுரங்கங்கள் பதினைந்தாண்டு காலத்துக்குப்



வேர்சேல்சில் சமாதான மகா நாடு.

பிராஞ்சியருக்களிக்கப்பட்டன. பெல்ஜியத்துக்கு அதனெல் லப்புறத்தில் மூன்று சிறு பிரிவுகள் அளிக்கப்பட்டன. திரியஸ்தி துறைமுகத்தையும், அதனைச்சார்ந்த பகுதியையும், இத்தாலிய சாதியினரை மாத்திரமன்றி இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட ஆஸ்திரியரையும் பெற்ற மலோநாடான தென்தைரோலையும், இத்தாலி பெற்றது. 1864-ம் ஆண்டுப் போருக்குப் பின் டென்மார்க்கிலிருந்து பிருஷ்யா அபகரித்த ஷெல்சுவிக்கின் நிலைமை குடிசனங்களின் தெரிவுச் சீட்டினுற் தீர்மானிக்கப் பட்டது. மத்திய ஷெல்சுவிக்கு ஜெர்மனியுடன் சேரத் தீர்மானித்தது; வடபகுதி, டென்மார்க்குக் குரியதாயிற்று. டான்சீக் குக்குச் செல்லும் வசதியுடன் போலாந்து மீண்டுஞ் சுதந்திர மடைந்தது. டான்சிக் "தடையற்ற துறைமுகம்" ஆக்கப்பட்டு, சர்வதேச சங்கத்தினுல் நியமிக்கப்பட்ட ஓர் "கமிஷனின்" அதிகாரத்தில் விடப்பட்டது. போலாந்துக்கு வடக்கே, எஸ்தோனியா, லட்வியா, லித்துவேனியா, வின்லாந்து என்னுங் குடியரசுகள் தோன்றின. இந்நான்கும் முன்னே ருஷ்யராட்சிக் குட்பட்டிருந்தன. பண்டைக்காலத்தில் இரு ஆஸ்திரிய மாகாணங்களாயிருந்த பொகீமியா, கலீசியா என்பவை ஐக்கிய மடைய, செக்கோசிலோவேக்கியா ஏற்பட்டது. முன்னே ஹங்கேரியாவின் ஒரு பிரிவாயிருந்த திரான்சில்வேனியாவையும், முன்பு ருஷ்யா அபகரித்த பெசரேபியாவையும் ருமேனியா பெற்றது. யூகோசிலேவியா என்னும் பெயருடன் செர்பியா விசாலித்து, மோந்தநீகிரோ, போசினியா, எர்சகொவினு, குரோஷியா என்பவற்றையும், தென் சிலாவியர் வசிக்கும் ஏனைய பிரிவுகளையும் தன்னுள் அடக்கியது. அல்பேனியா சுதந்திரம் பெற்றது; சின்ன ஆசியாவில், ஸ்மிர்னவைச் சார்ந்த சில பிரதேசங்களுட்பட விசாலமானவொரு பகுதியைக் கிரீசு துருக்கியினிடமிருந்து பெற்றது; ஆனல், பிற்காலத்தில், புதிய துருக்கக் குடியரசு, கிரீசை இப்பகுதியிலிருந்து துரத்திவிட்டது.

ஐரோப்பாவுக்கு வெளியே நிச்சயிக்க வேண்டிய இரு பிரச்சனைகளிருந்தன—(1) துருக்கிக்கு விரோதமாகப் புரட்சி செய்தெழும்பின, அல்லது துருக்கியினிடமிருந்து பிடிக்கப்

பட்ட பகுதிகளே யென்ன செய்வது? (2) முன்பு ஜெர்மானியக் குடியேற்ற நாடுகளாயிருந்தவற்றை என்ன செய்வது?

அராபியத் இராச்சியங்கள் :—இவற்றிற் பிரதானமானவை மேற்குக் கடற்கரையிலிருந்த ஹெஜாஸ், மத்தியில், இபின்சயது என்னுந் தலைவனுக்குட்பட்ட பிரதேசங்கள்—தமது சுதந்திரம் உறுதிப் படுத்தப் பெற்றன. எகிப்து, சீரியா, மெசபொட்டே மியா, பலஸ்தீனு, யோர்தான் நதிக்குக் கிழக்கிலுள்ள பிரதேசங் கள் என்பன வேறுவிதமாக நடத்தப்பெற்றன. ஜெர்மானியக் குடியேற்ற நாடுகளைப் போலவே, அவையும் சுயராச்சிய நிலைக் கான தகைமை பெறவில்லையெனக் கருதப்பட்டது. "பொறுப் பாட்சி நாட்டுமுறை" இவைகளுக்கு வழங்கப்படவேண்டு மென்று தீர்க்கப்பட்டது. இதற்குக் காலாயிருந்தவர் ஜெனெறல் ஸ்மட்ஸ். உலகத்தின் பல்வேறு பாகங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பல நாடுகளுக்கு அளிக்கப்பட்டது. பொறுப்பாட்சி மூன்று வகைப்படும் : (1) எகிப்து, பலஸ்தீனு, மெசபொட் டேமியா (இது இப்போது "இராக்" எனப்படும்), திரான்ஸ்-யோர்தனியா, என்பவற்றைப் பிரித்தானியா பரிபாலனம் செய்யவேண்டுமெனச் சர்வதேச சங்கம் கட்டளையிட்டது. ஆனால் 1922-ம் ஆண்டில், வெளிநாட்டு, ராணுவ விவகாரங் கள், சுவேஸ் கால்வாய், சூடான் ஆகியவற்றைப் பற்றிய சில நிபந்தனைகளுக்கு எகிப்து இணங்க, அதன் சுதந்திரத்தைப் பிரித்தானியா அங்கீகரித்தது. பிரான்சு, சீரியாவைப் பரி பாலனஞ் செய்தற்குக் கட்டளை பெற்றது. இவ்வாறு கட்டளை பெற்ற நாடுகள், தம் பரிபாலனத்திலுள்ள நாடுகளின் அர சாட்சியாருக்குப் புத்திமதியும், நாட்டில் ஒழுங்கை அமைக்க உதவியும் அளிப்பதன்றி அதிகமாக வேறென்றும் செய்வ தில்லையெனக் கருதப்படுகின்றது. (2) ஆப்பிரிக்காவிலே, முன் ஜெர்மனிக்குரிய குடியேற்ற நாடுகளாகிய ரோகோலாந்தும், காமறூன்சும் பிரித்தானியா, பிரான்சு, பெல்ஜியம் என்பவற் றுக்கு பொறுப்பாட்சிப் பிரதேசங்களாக அளிக்கப்பட்டன. ஜெர்மானிய கிழக்காப்பிரிக்கா பிரித்தானிய அதிகாரத்தின்கீழ் தங்கனுயக்கா என்ற பெயருடன் பொறுப்பாட்சி நாடாகியது. இப்பிரதேசங்களில், அந்நாடுகள் சில நியமங்களுக் கிணங்க

1920-ம் ஆண்டில்
மத்திய ஐரோப்பா
மைல்கள்
0 50 100 200 300
சர்வதேச எல்லைகள்
திருமானிக்கப்படாத எல்லைகள்
குடிவிரும்பறிந்தறகான பிரதேசங்கள்
வட கடல்
டென்மார்க்கு
சுவீடன்
பால்திக கடல்
ஜெர்மனி
போலாந்து
ரஷ்யா
பிரான்சு
பெல்ஜியம்
ஜேர்மன்
ஆஸ்திரியா
ஹங்கரி
சுவிட்சர்லாந்து
செக்கோ-சிலோவேக்கியா
ரூமேனியா
புக்காரெஸ்டு
பல்கேரியா
சோபியா
ஸ்பெயின்
மத்திய தரைக் கடல்
கோர்சிகா
(பிரான்சுக்கு)
சார்டினியா
(இத்தாலிக்கு)
அட்ரியாட்டிக் கடல்
துருக்கி
கருங்கடல்
[எமரிவாகர் லிமிடெட்

நேர்முகமான அதிகாரஞ் செலுத்துகின்றன. (3) தென்மேற் காப்பிரிக்கா, தென்னுப்பிரிக்க ஐக்கிய நாட்டுக்கும் ; சமோவா, நியூசீலாந்துக்கும் ; பசிபிக்கு சமுத்திரத்தீவுகள் பல, யப்பான், பிரித்தானியா, ஆஸ்திரேலியா என்பவற்றுக் கிடையும் பிரிவு செய்யப்பட்டன. இந்த ஐந்து பொறுப்பேற்கும் நாடுகளும் சர்வ தேச சங்கத்திற்கு வருடாந்த அறிக்கை இவற்றைப்பற்றிச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஜெர்மனி கடுமையாக நடத்தப்பட்டது. அதன் தரைப் படையும் கடற் படையும் திட்டமாகக் குறைக்கப்பட்டன. றைன் நதியினிருகரைகளிலும் ஐம்பது மைல் எல்லைக்குள் ஒரு கோட்டை தானுங் ஜெர்மனி கடக்க கூடாதெனவும் பதினைந்து ஆண்டுகளுக்கு அந்நதியை யடுத்த பிரதேசத்திற் நேச வல் லரசுகள் தங்க வேண்டுமெனவுந் தீர்மானிக்கப்பட்டது. (இது பின்பு மாற்றப்பட்டு, 1930-ல் அங்கே தங்கிய நேச தேசப் படைகள் அங்கிருந்து விலகின.) ஜெர்மானியப் படைகள் பிரான்சிலும் பெல்ஜியத்திலும், வேறு வழிகளிலும், செய்த அழிவுக்கு ஈடாக ஜெர்மனி எவ்வளவு என்று தீர்மானிக்கப் படாத பெருந்தொகை கொடுக்கவேண்டுமென விதிக்கப்பட் டது ; எண்ணிறந்த கப்பல்களையும் ஏராளமான நிலக்கரியையும் ஏனைய பொருள்களையும் ஜெர்மானியர் நேச வல்லரசுகளினிடம் ஒப்புவிக்கவேண்டியிருந்தது. இவ்விதமாக ஜெர்மானியப் '' போர் வெறியை '' முற்றுய் ஒழிக்கலாமென்று நம்பினர்கள். ஆஸ்திரியா, ஹங்கரி, துருக்கி என்பவற்றின்மீது இதனிலும் இலகுவான நியதிகள் விதிக்கப்பட்டன ; ஆனால், ஜெர்மனி யைப் போலன்றி அவற்றின் பரப்பு பெரிதும் குறைக்கப் பட்டது.

சமாதான ஏற்பாட்டில் இப்பகுதி, பின்பு பெரிதும் மாற்றப் படுவதாயிற்று. முதல் ஏற்பாடு கோபதாபங்கள் அதிகமாயும் விசேடமாகத் தம் நாடு அழிவடைந்த காட்சியைப் பிராஞ்சியர் கண்டபோது ஏற்பட்ட ஆத்திரத்தால் செய்யப்பட்டதாயுமிருந் தது. முதலாவது உலகப் பெரும் போரின் காரணமாக வெழுந்த சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ளத் தவறியதினால் ஏற் பட்ட இரண்டாம் உலகப் பெரும்போர், அங்ஙனம் தவறியதற்

கான நியாயங்கள் இவையிவைதான் என்று கூறுவதை இலகு வாக்கிவிடவில்லை. எப்படியெனினும், அரசுபுரிவோர் அந் நாட்டு மக்களின் துணையைக்கொண்டு "தேசீயக் கொள்கை யின் ஆயுதம்" எனப் போரினைக் கருதியிருக்குமளவும் உலகத் திலே பூரணமான சமாதானம் நிலவும் என்று எதிர்பார்க்க முடியாதென்பது தெளிவாகிவிட்டது. அல்லாமலும், நாடுகள் தம்முடைய சுய நலங்களை அவாவும் கொள்கைகளை உலக மக்களது கொள்கைகளுக் கெதிராகச் சமர்ப்பித்துக் கொண் டிருக்கும் வரை, அதற்காக அமைக்கப்படும் எந்த சங்கமும் திருப்திகரமாகத் தொழிற் படமுடியாதென்பதும் தெளிவாகி விட்டது.

சர்வதேச சங்கம் : சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவாவில் கண்களைக் கவரும் வனப்புவாய்ந்த கட்டடநிரை யொன்றுளது. அது இன்று வெறுமையாயிருக்கின்றது. சங்கத்தின் உறுப் பினர் தங்குவதற்கும், "சர்வதேச சங்கம்" என்னும் பெய ருடன் உலகம் முழுவதிலும் பூரணமான சமாதானத்தை உண் டாக்கி நிலைபெறச் செய்யும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட சங்கத்தின் கூட்டங்கள் நடைபெறுவதற்கு மெனத் தொடக்கத் தில் அது அமைக்கப்படுவதாயிற்று. உட்ரோ உவில்சன் தான் "பதினான்கு குறிப்புகள்" எனக்கொண்டுவந்து சமர்ப்பித்தவற் றுள்ளே, பதினான்காவதாக குறிப்பிடப் பட்டபடி, "அரசியற் சுதந்தரத்தையும் நாட்டினெல்லையையும் பரஸ்பரமாக உத்தர வாதஞ் செய்தற்பொருட்டு, தேசீய சாதியினரின் பொதுச் சங்கமொன்று ஏற்படுத்தவேண்டும்" என்னும் பேரெண் ணத்தை நடைமுறையிற் கொண்டுவரவேண்டுமென்று தீர்மா னித்துக்கொண்டு வேர்சேல்ஸ் மகாநாட்டுக்குச் சமுகஞ்செய் தார். அதையே சமாதான உடன்படிக்கையிலும் முக்கியமான தாக அவர் கருதினர். XXI-ம் அத்தியாயத்தின் ஆரம்பத்தில், 1914-ம் ஆண்டுக்கு முன்னதாகவே உலக சமாதானத்துக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை யெவையென்றும் அவை எங்ஙனம் போதாதென வாயினவென்றும் கண்டுகொண்டோம். ஆதலால், இப்போருக்குப்பின் மீண்டும் போர்கள் உண்டாவ தற்கான காரணங்களை இயன்றளவிற்குக் குறைப்பதற்காக ஒரு

ஸ்தாபனத்தை அமைத்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அவ் வேற்பாட்டின்படி, அந்த ஸ்தாபனத்துள் 'சர்வதேச சங்க'மும், 'சர்வதேச நீதிச்சபை'யும், 'சர்வதேசத் தொழிலாளர் சங்க'மும் அடங்குவனவாயின.

சமாதான மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களில் அமெரிக்காவிலும் பிரிட்டனிலுமிருந்து வந்தவர்களது சபையே இந்தப் பெரிய சமாதான ஸ்தாபனத்தை அமைப்பதாயிற்று. பிரிட்டனிலிருந்து வந்தவர்களில் லோர்ட் ரொபேர்ட் சீசிலும், ஜெனறல் ஸ்மட்சும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். அதற்கான விதிகளை வரைந்துகொள்வதில் பிராஞ்சில் போசுவாவும் பெரிய பங்கெடுத்துக்கொண்டவரானார். பிராஞ்சிய பிரதம மந்திரியான கிளெமான்சோ அதை எதிர்த்தாரெனக் குறை கூறப்பட்டது. எப்படியெனினும், தமது நாட்டிலே எதிர்காலத்தில் அபாயமின்மையை நிலைநாட்டுதற்கு அதை ஒரு முறையாகக் கொண்டார்.

ஜெனீவாவிலமைக்கப்பட்ட சர்வதேச சங்கத்தின் நோக்கம் வெவ்வேறு தேசங்களுக் கிடையில் ஏற்படும் சச்சரவுகளை மகாநாடுகள் கூட்டி விலக்கவும் சர்வதேசங்களுக்கிடையே ஏற்படும் சிக்கல்களைக் கூட்டு முயற்சியால் நீக்கிக் கொள்ளுதற்குமாக ஒரு ஸ்தாபனத்தை அமைத்துக் கொள்வதேயாகும். அது பதினொன்று நாடுகளின் பிரதிநிதிகளது ஆலோசனைச் சபை, மகாநாடு, நிரந்தர காரியாலயம் என மூன்று பிரிவுகள் கொண்டது. பெரிய பிரித்தானியா, பிரான்சு, இத்தாலி, யப்பான் ஆதிய தேசங்களுக்கு அச் சபையில் நிரந்தரமான இடம் கிடைப்பதாயிற்று. அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் ஒரு இடம் கொடுக்கப்பட்டது. ஆயினும், 1920-ம் ஆண்டில் அத்தேசம் சர்வதேச சங்கத்திற் சேருவதற்கு மறுத்துவிட்டது. 1926-ம் ஆண்டில் ஜெர்மனி சர்வதேச சங்கத்திற் சேர்ந்து அவ்வெற்றிடத்தை நிரப்பிக்கொண்டது. ஏனைய இடங்கள் மகாநாட்டினராலேயே தெரியப்பட்டு நிரப்பப்பட்டன. உலகத்திலுள்ள நாடுகளிற் பல சேர்ந்தன. எனினும் துருக்கி, பிரேசில், மெக்சிக்கோ ஆகிய நாடுகளும் அமெரிக்க ஐக்கிய நாடும் சேரவில்லை. ருஷ்யாவும் வெகுகாலம் வரை சேர்ந்துகொள்ளவில்லை.

ஒல்லாந்திலுள்ள ஹேக்கில் கூடிய சர்வதேச நீதிமன்றத் திற்கு வெவ்வேறு தேசங்களிலுமிருந்து திறமைமிக்க நீதிமான் கள் சர்வதேச சங்கத்தால் நியமிக்கப்பட்டார்கள். வெவ்வேறு நாடுகளுக்கிடையில் ஏற்படும் சண்டை சச்சரவுகள் தீர்க்கப் படுவதற்காக இச் சபைக்கே கொண்டுவரப்பட்டன.

சர்வதேசத் தொழிலாளர் சங்கமும் ஏறக்குறையச் சர்வ தேச சங்கத்து அங்கத்தவரையே தனது அங்கத்தவராகவுங் கொண்டுள்ளது. அச்சங்கத்தில் நிருவாக சபை யொன்றும், பொதுச் சபையொன்றும், உத்தியோகத்தரது நிரந்தர காரி யாலயமொன்றும் உண்டு. உலக மெங்கணுமுள்ள தொழில் முதலாளிகளதும் தொழிலாளர்களதும் விவகாரங்களை எடுத்து விசாரித்து இருபகுதியினரிடையிலும் கூடிய விளக்கத்தை உண்டாக்கவும் கூடுவதாயிற்று.

சர்வதேசத் தொழிலாளர் சங்கம் மட்டும் ஓரளவுக்குத் தவிர, முழுத்திட்டமும் 1939-ம் ஆண்டிலே யுத்தம் ஆரம்பித்த போது ஒழிந்துபோயிற்று. எனினும் அது நிலைத்திருந்த சிறி தளவு காலத்துள்ளேயே, பல நாடுகளுக்கிடையிலேற்பட்ட கலகங்களைச் சமாதானமாகத்தீர்த்தும், தீங்குவிளைவிக்கும் மருந்துவகை வியாபாரத்தைத் தடுப்பதற்கான வழிகளை அமைத்தும், பல காரியங்களைச் செய்வதாயிற்று. உலகத் திலுள்ள சகல தேசங்களும் முக்கியமாக அமெரிக்க ஐக்கிய நாடும் சேராததால் அல்லது சர்வதேச சங்கத்தி லிருந்து பயன்பெறத்தக்கபடி நடந்து கொள்ளாததால் அது தோல்வியுற்ற தெனக்கூறவியலாது. 1930-ம் ஆண்டு தொடக்கம் 1940-ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் அச்சங்கத்திலிருந்து விலகிய ஜெர்மனி, இத்தாலி, யப்பான் ஆகிய நாடுகள் தம்முடைய இராச்சியம் விசாலமடையவேண்டு மென்றும் தாம் புதிய நாடுகளைப் போர்புரிந்து கைப்பற்றிக் கொள்ளவேண்டு மென்றும் முனைந்து நின்றமையாற் சமா தானம் தொடர்ந்து நிலவ முடியவில்லை.

உதவிக் குறிப்புக்கள்.

உலகப் பெரும்போரை ஒருமுடிவுக்குக் கொண்டுவந்த ஏற்பாடுகளும், மாந்தரிடையே உலக சமாதானத்துக்கான

முயற்சியை ஊக்குவித்தற்கான சங்கத்தினமைப்பும் இவ்வத்தியாயத்திற் பிரதானமாகக் கூறப்பட்டுள்ளன. சமாதானத்துக்கான ஏற்பாடுகள், ஒரு நூற்றாண்டுக்குமுன் வியன்னாவிற் செய்யப்பட்டவற்றினும் மிக மேலானவை ; எனினும் அவை மிகச் சிறந்தவை எனக் கூறுதலியலாது. அவை பலவகைகளில் திருப்தியளிக்கவில்லை. சர்வதேசச் சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்ளலாமென்று அமைத்துக் கொண்ட ஸ்தாபனத்தின் முயற்சியும் வீணுயிற்று. ஆயின், பின்னதாக ஏற்பட்ட இரண்டாவது உலகப் பெரும் போரின்பின், எங்ஙனமாயினும் முந்தியதினும் பார்க்க அதிகாரங்கள் மிகுதியாகவுடையதாயும் "சமாதான விருப்பம்" அதிகமாகவுடையதாயும் ஒரு ஸ்தாபனத்தை அமைத்துக்கொள்ளுவது மிக அவசியமாயிற்று. சர்வதேச மக்களும் பிரதிநிதிகளும் அரசாங்கத் தலைவர்களுமாகச் சேர்ந்து தொடங்குகின்ற பரிசோதனையானது தவறிவிடாமல் அவர்கள் மிகுந்த கவனமெடுக்கவேண்டும். அவர்கள் பிறரது ஈடுபாடின்றித் தமது விருப்பத்தின்படி செய்யும் அதிகாரமான 'தேசீய அரசியலதிகாரத்தையும்' ஓரளவுக்குத் தியாகஞ் செய்ய மனங் கொண்டவர்களாய் இருக்கவேண்டும். அது மிகவும் அவசியமான தொன்றாகும்.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1918. நொவம்பர். ஜெர்மனி தனக்கு நட்டமான நியமங்களுட்பட்டுப் போரிடை யீட்டைப் பெற்றது.

1919. சர்வதேச சங்க ஒப்பந்தத்தை அங்கீகரித்த "சமாதான மகாநாடு" பரீசிற் கூடியது.

1920. ஜெனீவாவிற் சர்வதேச சங்க மகாநாடு முதன்முறை கூடியது.

1922. சர்வதேச நீதிச்சபை ஏற்படுத்தப்பட்டது.

1933. யப்பானும் ஜெர்மனியும் சர்வதேச சங்கத்தை விட்டு விலகின.

1934. சோவியெற் ருஷ்யா சர்வதேச சங்கத்தில் சேர்ந்து கொண்டது.

1938. இத்தாலி சர்வதேச சங்கத்தைவிட்டு விலக அறிவித்தல் கொடுத்தது.

24. போருக்குப்பின் உலக நிலைமை: போல்ஷிவிக்கரும் பாசிஸ்டுகளும்

ருஷ்யப் புரட்சி. 1917-ம் ஆண்டிலே ருஷ்யா நேச வல்ல ரசுகளின் கட்சியிலிருந்து விலகியதை உலகப் பெரும் போரைப் பற்றின அத்தியாயத்திற் படித்தோம். இதற்குப் பின் நடைப் பெற்ற ருஷ்ய நிகழ்ச்சிகள் கேட்போர் அஞ்சத்தக்கவை ; தம் சக்கராதிபத்திய அரசாங்கத்தாருடன் ருஷ்யர் அதிருப்தி கொண்டிருந்ததையும், அவர்களை அடக்க அரசாங்கத்தார் பின்பற்றிய முறைகளையும் அறிவோம். ருஷ்ய நாட்டவரின் முழு ஆதரவுடன் ருஷ்ய அரசாட்சியார் இப்போரிற் தலையிட்டனர். ஆனால் 1917-ம் ஆண்டளவில், சாரின் உத்தரவுப்படி அரசாட்சியார் சமாதானஞ் செய்ய விரும்புகின்றனர் என ருஷ்யர் பலர் ஐயுற்றனர்; ஆகவே அதே ஆண்டில் ஒரு புரட்சி உண்டாகி, அப்போதைய அரசாட்சியை முற்றுக நீக்கி, ஜன நாயக மயமான ஓராட்சியை நிறுவியது. தப்பியோடிய அல்லது துரத்தப்பட்ட ருஷ்யப் புரட்சிக்காரர், முன்னிலும் விசால நோக்குடைய புதிய அரசாட்சியாருக்குட்பட்டு வாழ விரும்பி, பிற நாடுகளிலிருந்து திரும்பினர்.

கடந்தவாண்டுகளிலே அரசாங்கத்தாரை எதிர்த்தமைக்காக நாடு கடத்தப்பட்ட சோஷலிஸ்ட் புரட்சிக்காரரின் அபிப்பிராயம் வெவ்வேறுக இருந்தது. ஒரு சிலர், பல வகுப்பினரின் ஒத்துழைப்புடன் படிப்படியாக மாறுதல்கள் செய்ய விரும்பினர். இக்கட்சியினர், **மென்ஷிவிக்கர்** எனப்பட்டனர். வேறு சிலர், ருஷ்ய உயர்குடிமக்களும் நடுத்தர வகுப்பினரும் முற்றுக ஒழிக்கப்பட வேண்டுமென்றும், அதிகாரம், தொழிலாளரிடையே இருக்க வேண்டுமென்றும் விரும்பினர். இக்கட்சியினர் ''போல்ஷிவிக்கர்'' எனப்பட்டனர். முதலில் அதிகார பதவியடைந்த மென்ஷிவிக்கர் சார் சக்கரவர்த்தியை நீக்கி, குடியரசு தாபித்து, சனநாயகத்தை ஆதாரமாகக் கொண்டதும் விசால நோக்க முடையதுமான பல சீர்திருத்தங்களைச் செய்தனர். நேச வல்லரசுகள் இவ்வாட்சியை நல்வரவேற்றன. ஒரு சோஷலிஸ்ட் தலைவர் கெரென்சிகியின் கீழ் இக்கட்சியி

னர் போரைப் புதுவலிமையுடன் நடத்த வாரம்பித்த போதிலும், ருஷ்யப்படைகளுக்கும், பொதுஜனங்களுக்கும் போர் போது மென்றுகிவிட்டது. தொழிலாளிகளும் படை வீரரும் சேர்ந்த சிறு சபைகள் "**சோவியெற்றுகள்**" என்னும் பெயர் பூண்டு இப்போது கிளம்பின. படைகளின் கட்டுபபாடும் ஒழுங்கும் தீவிரமாக அழிந்துவர, இந்நிலைமை ஜெர்மானியரால் நல்வர வேற்கப்பட்டது; அவர்கள் ருஷ்யாவிற் கலகம் விளைக்க நாடு துறந்து சுவிட்சர்லாந்திலே இருந்தவனும், போல்ஷிவிக்கரின் தலைவனுமான **லெனின்** என்பவனே ஜெர்மனியினூடே ருஷ்யா வுக்கு அனுப்பினர். லெனின் திறமையாளன்; சலியாத் தன் மையன்; நாட்டின் கலவர நிலைமையைத் தனக்கு முற்றுக நற் பலன் விளைக்கும்படி செய்து கொண்டான். அவன், நொவம் பர் மாதத்தில் மென்ஷிவிக்கரையும் அவர்களின் தலைவனை கெரென்சிகியையும் அதிகார பதவியினின்றும் வீழ்த்தி, கடின மான முறைகளைக் கையாண்டான். ஜெர்மனியுடன் சமாதா னஞ் செய்து கொள்வதாக அவன் கூற, அப்போது ஜெர்மானி யர் ருஷ்யாவின்மீது ஆற்றெணு நிபந்தனைகளை விதித்தனர். பிறெஸ்டுலிட்டோவிஸ்கு உடன்படிக்கையின்படி, ருஷ்யா தன் மேற்றிசைப் பகுதியில் ஐந்து லட்சம் சதுர மைல் கொண்ட பிர தேசத்தை இழந்தது; அதிற் பெரும்பகுதி தற்காலிகமாக ஜெர் மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட குடியரசுகளாகப் பிரித்தமைக பட்டது.

போல்ஷிவிக்கரின் ஆட்சி: போர் முடிந்த பினனர், போல்ஷிவிக்கரை அதிகார நிலைமையினின்றும் நீக்குதற்கான பல முயற்சிகளைப் பழைய பிரபுக்களின் தலைவர்கள் செய்தனர்; இவற்றுட்சில, பிராஞ்சியர் பிரித்தானியரின் ஆதரவைப் பெற் றிருந்தன. ஆனல் ருஷ்யரோ, பிறநாட்டவர் தலையிடுவதை வெறுத்தமையால் பழைய ஆட்சி முறையை உயிர்ப்பிக்க விரும்பவில்லை; எனவே அவர்கள் "வெள்ளை"* நிறப் பிற் போக்காளருக்கெதிராக, "சிவப்புப்" †புரட்சிக்காரருக்கு ஆதர வளித்தனர்; லெனின் எதிர்ப்பில்லாததனித்தலைவனனன். 'கெம் முனிஸமிலும்,' 'வர்க்கப் போரிலும்' முழுநம்பிக்கையுடையவன்.

* மென்ஷிவிக்கர் † போல்ஷிவிக்கர்

அவன் சர்வசன சமத்துவத்தைத் தாபிக்கவும், கூடியகடுமை யான முறைகளினுல், பிரபுக்களையும் நடுத்தர வகுப்பினரையும் அழிக்கவும் தீர்மானித்திருந்தான். பிராஞ்சியப் புரட்சி துவங் கியபோதேற்பட்ட ''பயங்கர ஆட்சி''யைப்போன்று, இச்''சிவப் புப் பயங்கர ஆட்சி''யும் போர்க்காலத்தில் அத்தியாவசிய மெனக் கருதப்பட்டது. மாந்தர் ஆயிரக்கணக்காகச் சுட்டுக் கொல்லப்பட்டனர்; அன்றேல், சிறையிலிடபட்டனர்; 1918-ம் ஆண்டிலேயே சார் சக்கரவர்த்தியான நிக்கொலசும் அவன் குடும்பத்தினரும் படுகொலைக் கிரையாயினர். கமக்கா ரர் எழும்பி, உயர்குல மக்களான பிரபுக்களின் நிலங்களைப் பறிக்க, பட்டினத் தொழிலாளிகள், தொழிற்சாலைகளைப் பிடித் துக் கொண்டனர். இவ்வளவு கொடூரமான செயல்கள் ஏற் படும் என்று லெனின் ஆரம்பத்தில் எதிர்பார்க்கவில்லை. எனினும் அவை தோன்றியபோது தன்னையும் தன் கட்சியையும் அவ்வியக்கத்தின் முன்னணியில் நிறுத்த வேண்டியவனு னன். 'சேக்கா' என்று கூறப்படும் இரகசிபப் போலீசு ஏற்படுத் தப்பட்டு, பிற்போக்குள்ளவரெனச் சிறிதேனும் கருதப்பட்டவ ரெவரும் சிறையிலிடப்பட்டு அநேகமாய்க் கொலை செய்யப் பட்டன ரெனலாம்.

சோவியெற் முறை. பரந்த சோவியெற் குடியரசுகள்‡ நான்கை லெனின் ஒரு சமஷ்டியிற் சேர்த்தான்; இக்குடி யரசுகளில் இரண்டு, தாமே சமஷ்டி நாடுகளாயிருந்தன. ஒவ் வொரு பட்டினத்திலும் ஒரு சபைக்குப் பல்வேறு தொழிலாள ரும் தம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தனர்; இச்சபையே ''சோவியெற்'' ஆகும்; நாட்டுப்புறங்களில் ஒவ்வொரு கிராமத் திலும் ஒரு ''சோவியெற்'' இருந்தது. ஒவ்வொரு சோவி யெற்று பெரிய பிரிவுகளில் தமது பிரதிநிதியாக ஒருவரைத் தம்மில் தெரிவு செய்தது. இவ்விதமே படிப்படியாக, பிரதிநிதி கள் சர்வ ருஷ்ய சோவியெற் மகாநாட்டுக்குத் தெரிவு செய்யப் பட்டனர். மகாநாட்டவரிடமிருந்து, மத்திய நிருவாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர். இச்சபையின் பிரதான அங்கத்தவ ருக்கு 'கொம்மிசார்' என்ற பெயருடன், முக்கிய நிர்வாக

‡ *பின்பு பதினைருகக் கூட்டப்பட்டுள்ளது.*

பதவிகள் அளிக்கப்பட்டன. அரசியலமைப்பு குடியரசுபோலத் தோற்றினும், செயலளவில் அவ்வாறில்லை. உண்மையான அதிகாரம் லெனினிடமும், கொம்முனிஸ்ட் கட்சியினரிடமுமிருந்தது; இவர்கள் தங் கட்சியினரன்றி வேறெவரும் சோவியெற் சபைகளுக்குத் தெரிவு செய்யாதபடி ஏற்பாடு செய்துவந்தனர்; தெரிவு செய்யப்பட்டவர் பெருங் கட்டுப்பாட்டுக்கடங்கி இருக்க



லெனின் (1870-1924)

வேண்டியிருந்தது—பிரதானமாக லெனினின் கட்டுப்பாட்டுக்கு. எனவே, அவன் தனது சர்வாதிகார ஆதிக்கத்தை நிலைநாட்டினான். இதை அவன் 'தொழிலாளர் வர்க்கச் சர்வாதிகாரம்' என்று கூறினான். ருஷ்யப் பாமர ஜனங்களிற் பெரும்பகுதியோர் கமக்காரர். கைத்தொழிற்றுறையில் எத்தனையோ படிகள் தாண்டப்பட்டு விட்டன. புதிய புதிய கைத்தொழில்கள்

தொடங்கப்பட்டதுமல்லாமல் புதிய கைத்தொழில் நகரங்களும் அமைக்கப்படுவனவாயின. பிரதான உத்தியோகத்தரனைவரும் கொம்முனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்; இக்கட்சியினங்கத்தின ராதல் அனைவருக்கும் இயல்வதன்று. கவனமாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலருக்கே அங்கத்தினராகு முரிமை அளிக் கப்பட்டது. புரட்சியின் ஆரம்பகாலத்திலே 60,000 பேர் மாத் திரம் அக்கட்சியிலிருந்தனர். 1939-ம் ஆண்டுக்கு முன் எங்ங னமாகவோ அக்கட்சியின் தொகை மிகப் பெருகுவதாயிற்று. கொம்முனிஸ்ட் இளைஞர் சங்கங்களிலிருந்து ஆண்களும் பெண்களும் கொம்முனிஸ்ட் கட்சிக்குச் சேர்க்கப்பட்டனர். எனவே, சார் சக்கரவர்த்திகளின் ஆட்சிக்காலத்திற் போலவே, ருஷ்யா இப்போதும் எதேச்சாதிகாரிகளால் ஆளப்படுவதா யிற்று. லெனினும் அவருக்குப் பின் ஸ்டாலினும் எதேச்சாதி காரிகளே. சோவியெற் முறையினை ஆதரிப்பவர்கள் ருஷ்யத் தொழிலாளருக்குப் 'பொருளாதாரச் சுதந்திரம்' உண்டென்பர். அதாவது, தொழிலாளிகளை முதலாளிகள் சுரண்டுவதில்லை.

நெடுங்காலமாக சார்களின் ஆட்சியில் இருந்த பரந்த தேசமாகிய ருஷ்யாவுக்கு, 'ஐக்கிய சோவியெற் சோஷலிஸ்ட் குடியரசு நாடுகள்' என்ற பெயர் கொடுக்கப்பட்டது. பின்வரும் அத்தியாயங்களில் இது 'ஐ. சோ. சோ. கு. நாடுகள்' என்று, அல்லது 'சோவியெற் ஐக்கிய நாடுகள் என்று வழங்கப்படும்.

கொம்முனிஸ்ட் கட்சியினராட்சியும் அது சித்தி பெறுமை யும். ஆரம்பத்தில் லெனின், ஜெர்மானிய சோஷலிஸ்ட் கார்ல் மாக்ஸ் வாதித்த நியமங்களுக் கிணங்க கொம்மு னிஸ்ட் கொள்கைகளைப் பின்பற்றி அரசாளத் தீர்மானித்தான். அரசாட்சியார், நாட்டிலுள்ள கைத்தொழிற்சாலைகள், காணி கள் ஆதியனவற்றை தமக்குரியனவாகச் செய்தனர். தொழிற் சாலைப் பொருட்கள் தொழிலாளிகளுக்குச் சமமாகப் பங்கீடு செய்யப்பட்டன. தாங்கள் பயிர்செய்த தானியத்துக்கும் ஏனைய காய்கனி ஆதிய வினைபொருட்களுக்கும் மாற்றுக் கமக்காரர் தொழிற்சாலை பொருட்களைப் பெறுவதெனத் தீர்மானிக்கப் பட்டது. ஏராளமான 'தாள்க்காசுகளை' அச்சிட்டு வெளியிட்ட மையால், நாணய வழக்கம் ஒழிந்தது. இத்தாள்க்காசுகள்

விலையில்லாமற்போயின. 1920-ல் ஒரு முட்டைக்குக் கொடுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு, யுத்தத்திற்கு முன்பு எட்டுப் பெரிய தேவாலயங்கள் கட்டியிருக்கலாம். ஆனால் இவ்வேற்பாடு முற்றுகப் பயன்தராது போயிற்று. கமக்காரர் தாம் விளைவித்த தானியத்தைச் சோவியெற்றுத்தியோகத்தரிடம் ஒப்புவிக்க மறுத்தனர். அது பறிமுதல் செய்யப்பட, அவர்கள் தம் தேவைக்கு மேலதிகமாகச் சிறிதும் விளைவிக்கவில்லை. தொழிற் சாலை வேலையாட்கள் முழுச் சோம்பேறிகளாயினர். இவற்றின் பயனாக, அநேகமாய் எல்லோரும் உணவின்றித் திண்டாட வேண்டி யிருந்ததோடு, நாடு முழுவதும் கடுங்கஷ்டத்துக் காளாயிற்று. கொம்முனிஸம், சோ. ஐ. நாட்டில் தொழிற்பட முடியவில்லை.

இதனால் 1921-ம் ஆண்டில் லெனின் ஒரு புதிய பொருளாதார முறையைப் பின்பற்றினான்; அதன்படி ஜனங்கள் தமது சொந்த பொருட்களைக்கொண்டு வியாபாரஞ் செய்யலாம், சிறிது லாபம்பெறலாம். பணம் மீண்டும் வழங்கியது; தொழிலாளிகளுக்குச் சம்பளம் அளிக்கப்பட்டது. பட்டினியினுலிறப்பதினின்றும் மாந்தர் தப்பினர்; எனினும் யாவரும் மிக வறியவர்களாக இருந்தனர். வியாபாரி ஒருவன் அதிக இலாபம் பெருவதாகக் காணப்படின், உடனே அவன் பிடிக்கப் பட்டு இலாபத்திற் பெரும் பகுதியை அரசாட்சியாருக்குக் கொடுத்துவிடும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டான். வியாபாரம் மெல்ல விருத்தியடைந்தது; 1929–ஆண்டளவில் தொழிற் சாலைகளின் உற்பத்தி அநேகமாய்ப் பெரும்போருக்கு முந்திய நிலையையடைந்தது. எனினும் பெருந்தொகைப் பணம் ராணுவத்திற்கும் போல்ஷிவிக் உத்தியோகத்தருக்கும் செலவிடப் பட்டமையால் நாடு செழிக்கவில்லை.

லெனின் 1924-ம் ஆண்டிலிறந்தான்; மொஸ்கோவிலுள்ள அவனுடைய சமாதிக்கு இப்போதும் விசேட மரியாதை செய்யப்படுகின்றது. போல்ஷிவிக்கருக்கிடையே கடும்போட்டி ஏற்பட்டு, முடிவில் ஸ்டாலின் நாட்டின் உண்மையான ஆட்சியாளனாகி, லெனினின் அதிகாரமனைத்தையும் பெற்றான். லெனினின் அதிகாரத்துக்கு உண்மையான ஆதாரம் நிலங்

களையெல்லாம் தமதாக்கிக்கொண்ட வறிய கமக்காரரே; லெனினின் புதிய பொருளாதார விருத்தி முறைப்படி, 'குலாக்கர்' எனப்பட்ட பணக்காரக் கமக்காரர்கள் நன்மை யடைந்து, பணத்தைப் பெருக்கி தொழிலாளிகளை வேலைக்கு வைத்திருந்தார்கள். 1928-ம் ஆண்டில் ஸ்டாலினும் அவருடைய ஆலோசனைக் குழுவுமாகச் சேர்ந்து 'ஐந்து வருடத் திட்ட'த்தினை அமைத்து நடைமுறையிற் கொண்டுவந்தார்கள். அத்திட்டத்தின் நோக்கம் ருஷ்யக் கைத்தொழிலினையும் கமத் தொழிலினையும் ஓரளவுக்குச் சோஷலிஸ்ட் வழியிற் பெருக்குவதேயாகும். அவன் குலாக்கரை அடியோடழித்தான். கமக்காரர் பெரிய தோட்டங்களையெல்லாம் நேரே அரசாங்கத் திற்குக் கட்டுப்பட்டோ கூட்டுறவு முறையிலோ செய்யும்படி ஒழுங்கு செய்யும் வண்ணம் ஸ்டாலின் திட்டம் அமைத்தான். கமக்காரர் இம்முறையினைத் தீவிரமாக எதிர்த்தனர். தம் முடைய மிருகங்களைக் கொன்று அழித்தனர். தமது தேவைக் குப் போதிய மட்டிலன்றி மேலதிகமான உணவுத் தானியங் களைப் பயிரிட மறுத்தனர். எனவே, ஸ்டாலின் அவர்கள் தாம் தமது தேவைகளுக்காக வைத்திருந்த தானியங்களை யெல்லாம் நகரங்களுக்கு விநியோகிப்பதற்கும் ஏற்றுமதி செய் வதற்கும் உபயோகப்படுத்து வித்தார். அதன் பயனாக நாட்டில் 1933-ம் ஆண்டிலே கொடிய பஞ்சம் ஏற்படுவதா யிற்று. கமக்காரரும் எதிர்க்க முடியாதவர்களாய் விட்டுக் கொடுக்கவேண்டியவராயினர். அவர்களுட் பலர் இறந் தொழிந்தனர்; பலர் தமது உடைமைகளைக்கூட இழந்தனர்.

இப்போது, ருஷ்யக் கமக்காரர்களுட் பெரும்பாலானோர் கூட்டுறவுத் தோட்டங்களிலே தொழில் செய்கின்றார்கள். ஸ்டாலினுடைய பொருளாதாரத் திட்டத்தின் பயனாகப் பல கைத்தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டன. ஐந்து வருஷத் திட்டமும் ஓரளவுக்குச் சித்தி பெறுவதாயிற்று. ஆனால் ஜெர் மானிய நாஜிகளின் அபாயத்திற்கு ஸ்டாலின் அஞ்சியமை யால், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் படைப்பெருக்கத்திற் கென்றே ஏற்படுத்தப்பட்டது. ருஷ்யாவில் வாழ்க்கைத்தரம் குறைவாயிருந்தது. தொழில் நியமங்களும் நன்றாயிருக்க

வில்லை. ஐ. சோ. சோ. கு. நாட்டுமக்கள் தங்களைத் தங்கள் பாட்டிலேயே வாழ விட்டால் தமது குழந்தைகள் தங்களிலும் பார்க்க நன்றாயிருப்பரென்று கருதினர். இதனைச் சாதிப்பதற்காக ருஷ்யத் தலைவர்கள் எல்லோருக்கும் கல்வியளிக்கும் திட்டமொன்றை அமைத்தனர். சோவியெற் வாழ்க்கை முறையினை ஆதரிப்பவர்கள் 1939-ம் ஆண்டுக்குமுன் அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் இருந்ததுபோல் தொழிலின்மையை வரவிடாது எனக் கருதியிருந்தனர். ஐ. சோ. சோ. கு. நா. பிரதானமாக ஒரு விவசாய நாடாதலின் இது ஓரளவுக்குப் பொருந்துவதாகும். அல்லாமலும், ருஷ்யாவின் ஆட்சியாளர் நாட்டின் இயற்கைப் பொருட்களை தொழிற்சாலைகளைப் பெருக்குவதற்காக உபயோகித்தனர். இவர்கள் மக்களைக் கடுமையாக வேலை செய்யச் செய்து, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை அ. ஐ. நாட்டு, மேற்கைரோப்பிய தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்திலும் குறைத்து வைத்திருந்தனர். ஆனால் நாட்டின் இளைஞர்கள் புதிய கைத்தொழிலில் பெரும் ஆர்வம் காட்டினர். சோவியெற் அரசாங்கமும், இவ்விளைஞருக்கு பொறியியலில் இயன்றமட்டும் பயிற்சி அளித்தது.

சோ. ஐ. நாடு இப்போது ஒரு சோஷலிஸ்ட் நாடெனக் கொள்ளலாமெனினும் கொம்முனிஸ்ட் நாடெனக் கூறுமாறில்லை. சார் காலத்திலிருந்ததினும் பார்க்கத் தொழிலாளர் நல்ல நிலைமையை யெய்தியுள்ளன ரென்பதை மறுக்க முடியாது. அவர்கள் கல்விபெற்றுப் பெரிதும் முன்னேற்றமடைந்து விட்டார்கள். பஞ்சமும் பசிப்பிணியும் இரத்தஞ் சிந்தலுமின்றியே இவற்றையெல்லாம் பெற்றிருக்கலாமென்பது சோவியெற் எதிர்க் கட்சியினர் கூற்றாகும்.

இன்னொரு பிரதானவிடயம் எவ்வகைச் சமய வழிபாட்டுக்கும் போல்ஷிவிக்கர் ஆரம்பத்திற் கொண்டிருந்த பகையாம். ருஷ்யாவிற் கிறிஸ்தவ திருச்சபையினர் பெரிதும் துன்புறுகின்றனர். திருவிழாக் கொண்டாடுதலும், இளைஞருக்குச் சமய போதனை செய்தலும் சட்டப்படி தவிர்க்கப்பட்டாலும் வணக்கங்கள் அனுமதிக்கப்பட்டன. எங்ஙனமெனினும் நகரங்கள் தவிர்ந்த பிற இடங்களிலெல்லாம் சமயப்பற்று மிகுந்

திருந்தது. அங்கிருந்த தீவிரமான எதிர்ப்பினைக் கண்டு பழைய எதிர்ப்பை அதிகாரிகள் அதிகமாக மாற்றிக்கொண்டனர். இளைஞருக்கும் வளர்ந்தவருக்கும் கொம்முனிஸ்ட் கொள்கைகளைக் கற்பிக்கப் பெருமுயற்சி எடுக்கப்படுகிறது. போல்ஷிவிக் கொள்கைகளைப் பரப்புவதற்காக பாடசாலைகள், பத்திரிகைகள், இலக்கியம், கலை, வேடிக்கை விளையாட்டுகள் கூட, உபயோகிக்கப்படுகின்றன. தங்கள் நாட்டின் புதுச்சீவிய முறைகளிலும், சோவியெற் ஐக்கிய தேசத்தின் வருங்காலச் சிறப்பிலும் செழிப்பிலும் முழுமனதாக நம்பியே இளைஞர் வாழ்ந்து வருகிறார்கள்.

1939-ஆம் ஆண்டிலே ஸ்டாலின் மிகுந்த ஆதரவும் சக்தியும் பெற்றிருந்தான். கமக்காரருடைய எதிர்ப்பினையும் தகர்த்துவிட்டான். லெனின் மிக முயன்றும் அதைச் சாதித்துக்கொள்ள இயலாதவனையினன். ற்ரொட்ஸ்கியும் தனது எதிரிகளாய பழைய போல்ஷிவிக் கட்சியரும் அவனை அதிகாரம் இழக்கச் செய்யும்படி முயன்றதும் பயன்படவில்லை. இரகசியப் பொலிஸ் படை முயற்சிகளையும் குறைப்பித்துப் பொதுவாக மக்களுக்குக் கூடுதலான சுதந்திரத்தையும் அளித்தான். அவனுடைய பொருளாதாரத் திட்டம் முற்றிலும் சித்தி பெறுவதாயிற்று. போக்கு வரத்தும் வீடுகளமைத்தலும் மாத்திரம் பூரணமாக ஒழுங்கு செய்து தீர்க்கப்படவில்லை. பல கைத்தொழில் நிலையங்கள் தேச வெல்லையிலிருந்து வெகுதூரத்தில் அமைக்கப்பட்டன. பழைய கைத்தொழில் நிலையங்களைத் தகர்த்து ஐ. சோ. சோ. கு. நாடுகளின் போர் முயற்சியைத் தீர்க்கமாக அழித்துவிடவேண்டுமென்று 1942-ஆம் ஆண்டில் ஜெர்மனியர் அந்நாட்டினைத் தாக்கியபோதுதான் இந்தப் புத்திக் கூர்மையின் பலன் வெளிப்படுவதாயிற்று.

ஐ. சோ. சோ. கு. நாடுகளின் வெளிநாட்டு விவகாரங்கள். கொம்முனிஸ்ட் புரட்சி ஒரு நாட்டில் மாத்திரம் ஏற்படின் அதிக பயன் விளையாதென்பது மாக்சின் கூற்று. அப் புரட்சி எல்லா நாடுகளிலும் பரவவேண்டும். மொஸ்கோவைத் தலைமைத் தானமாகக் கொண்ட 'கொமின்ரேண்' என்ற சங்கமொன்றுண்டு. முதலாளித்துவ நாடுகளில் எங்கும் புரட்சி

யைப் பரப்புவதே அதின் நோக்கம். அதே நோக்கங்கொண்ட சிறுக் கொம்முனிஸ்ட் கட்சிகள் அநேகமான நாடுகளில் உண்டு. சிலகாலமாகச் சோவியெற் ரரசாங்கம் அவற்றை ஊக்குவித்து வந்தது. விசேடமாகச் சீனத்திலும் இந்தியாவிலும் கல்வி கற்காத மக்களுக்குள் குழப்பங்களை உண்டு பண்ணுதல் இலகுவான காரியம். '' வர்க்கப்போரை '' மத்திய வர்க்கத்தவருக்கு எதிராக வளர்த்து, தனிச்சொத்தை அகற்றி, முதலாளித்துவ நாடுகளை அழிப்பதே கொமின்ரேணின் நோக்கம். ஸ்டாலின் கொமின்ரேணுக்கு அவ்வளவு ஆதரவு காட்டவில்லை. உள்நாட்டுப் பிரச்சனைகளில் தன் கவனத்தைச் செலுத்த விரும்பியதுமல்லாமல், சில முதலாளித்துவ நாடுகளின் நட்பையும் வேண்டியவனனன். 1941-ல் சோவியெற் ஐக்கிய நாடு சண்டையிற் கலந்த போது, அவன் கொமின்ரேணை அடக்கினன். பெரும் பொருளாதார வேலைகளை நடத்துவதற்காக சமாதானத்தை விரும்பினன் என்பதற்கு ஐயமில்லை. எனினும் போர்வரின் அதற்கு இயன்றளவும் ஆயத்தமாயிருக்கவேண்டும் என்று தீர்மானித்தான்.

ஜெர்மனியிலும் ஹங்கரியிலும் போல்ஷிவிக்கொள்கைகள். தாம் தோல்வியடைந்ததை மத்திய வல்லரசுகளின் பிரசைகள் 1918-ம் ஆண்டினந்தத்தில் அறிந்த போது தம் தலைவர்களுக்கு எதிராக குழப்பஞ்செய்தனர். ஜெர்மனியில் '' பெரும்பான்மைச் சோஷலிஸ்டுகள் '' என்பார் எப்போதும் வன்மையுடையவர் ; 2-ம் உவில்லியம், சிற்றரசர், குறுநில மன்னர் ஆதியோர் ஜெர்மனியில் முடிதுறந்தமைக்கு இவர்களே காரணமாவர். நிற்க, உண்மையான குடியரசு முறைகளைப் பின்பற்றின சமஷ்டி அரசியல்முறை அமைக்கப்பட்டது. இக் குடியரசின் முதலாந் தலைவன் ஏபெட் என்னும் கவனை செய்வோனும். ருஷ்யப் போல்ஷிவிக்கருடன் நெருங்கிய தொடர்பு பூண்ட '' சிறுபான்மை சோஷலிஸ்டு '' களும் இருந்தனர். இவர்கள் ஆயுதபாணிகளாய் எழுந்து புரட்சி செய்ய முயல அம்முயற்சி விரைவில் அடக்கப்பட்டது. இதனிலும் அதிகமான வெற்றியைப் போல்ஷிவிக்கர் ஹங்கரியிற் பெற்றனர். அங்கே அவர்கள் 1919-ம் ஆண்டிற் சிறிது காலத்துக்கு அர

சாட்சியைக் கைப்பற்றி பல கொலைகள் புரிந்தனர். ஆனால் அந்த நாளில் ஹங்கேரியரோ போல்ஷிவிக்குக் கொள்கைகளிற் பிரியங் கொள்ளவில்லை. எனவே, போல்ஷிவிக்கர் தம் முயற்சிகளிற் சித்திபெறுதுபோக, உயர்குலமக்களே அங்கத்தவராகக் கொண்ட ஒருவகைக் குடியரசு ஹங்கரியில் தாபிக்கப்பட்டது.

இத்தாலியிற் பாசிஸ்டுப் புரட்சி: போர்முடிந்த காலத்திலே, கொம்முனிஸ்டுகளின் செல்வாக்கு இத்தாலியிலும் மிக அதிகமாக இருந்தது; அதனை அடக்க இத்தாலிய அரசாட்சியாருக்குப் போதிய வன்மையில்லைபோன்றே தோற்றியது. வேலை நிறுத்தம் எங்கும் காணப்பட்டது; கொம்முனிஸம் வெற்றியடையும்போலவே தோற்றியது; ஆனால் இங்கிலைமை, இத்தாலியருக்கு, சிறப்பாக, உலகப் போரிற் பங்கு பெற்றவருக்குப் பிடிக்கவில்லை. இவர்கள், பெனிட்டோ **மூசொலீனி** என்பவனைத் தலைவனைக்கொண்டு திற்மையுள்ள பெரிய "பாசிஸ்டு" சங்கத்தைத் தாபித்தனர். இச்சங்கத்தார், போல்ஷிவிக்கரை யெதிர்த்து, தாமும் கொடுஞ் செயல்களைப் புரிந்தனர். தாம் கொம்மூனிஸ்டுகள் அல்ல ரென்பதைக் காட்டுதற்காக அவர்கள் கருநிற சட்டையை அணிந்தனர். 1922-ம் ஆண்டில் அவர்கள் போர்க்கோலம் பூண்டெழும்பி, ரோமாபுரிக்கு அணிவகுத்துச் சென்று, அரசாட்சியைக் கைப்பற்றி, மூசொலீனியைப் பிரதான மந்திரியாக்கினர். அவன் ஊழல்கள் நிறைந்து திறமையற்றிருந்த அரசாட்சிப் பகுதிகளைப் பூரணமாகச் சீர்திருத்தினன்; அரசனுடைய ஆதரவைப் பெற்றான். தன்னுடைய நிலையினை வலி

மூசொலீனி

யுறுத்திக் கொண்ட பின் இத்தாலியை மிகச் சிறந்ததொரு தேசமாக்குதல் வேண்டுமென்று முயன்றான். அவனுக்கும் அவனுடைய சகாக்களுக்கும் சனநாயகச் சுதந்தரத்திலும் பேச்சுச்சுதந்தரத்திலும் நம்பிக்கையிருக்கவில்லை. அவர்கள் சிந்தனைகளைக்கூட அடக்குவதற்கு முயன்றார்கள். இவர்கள் காட்டியதை ஜெர்மனியில் அடல்ப் ஹிட்லர் முன்மாதிரியாகக் கொண்டு நடந்தார். (26-வது அத்தியாயத்தைப் பார்க்க.) இத்தாலியருக்கு ஒரு திறமை வாய்ந்த அரசாங்கத்தை அமைத்து, மிகுதியான பொருளாதாரச் சீர்திருத்தத்தை உண்டாக்கி, பொதுநல வேலைகளைப் பெருக்கிக கொண்டால் தானும் தன் சகாக்களும் முற்றிலும் பழைய காலத்ததுவே யெனக் கொண்ட குடியரசுச் சுதந்தரத்தை அவர்கள் நோக்கார்கள் என்று கருதியிருந்தான். அதனால் பாராளுமன்ற முறையினையும் ஒதுக்கி வைத்து, 19-ம் நூற்றாண்டில் அவர்கள் வேண்டுமெனப் போராடிய உரிமைகளையும்—பேச்சிலும் எழுத்திலும் சுதந்திரம்; அநியாயக் கைதும் விசாரணை இன்றிய சிறையும் இல்லாமை—மறுத்துவிட்டார்கள். அந்த உரிமைகளுக்காகவே சுதந்தரநாடுகள் இரண்டாவது பெரும்போரினைத் தொடக்கினார்கள்.

உதவிக் குறிப்புக்கள்.

இவ் வத்தியாயத்தில், போல்ஷிவிக்கர் கட்சியின் ஆட்சி பல மடைந்ததிலிருந்து தொடங்கி இரண்டாவது உலகப்பெரும் போரின் ஆரம்ப காலம் வரையும் நடைபெற்ற ருஷ்யப் புரட்சியின் வரலாறு கூறப்பட்டது. மூசொலீனியின் தலைமையில் இத்தாலியிலேற்பட்ட புரட்சி சுருக்கிக் கூறப்படுகிறது. இது ஐரோப்பாவில் தோன்றிய ஒரு 'புது ஆட்சி முறையின்' அறிகுறியாகும். 19-ம் நூற்றாண்டுத் தாராளக் கட்சியினரின் கருத்துகளுக்கு விரோதமானது மன்றி, இரண்டாமுலகப் போருக்கும் இது அடிகோலியதாயிற்று. சர்வாதிகார ஆட்சிக் குட்பட்ட மக்களின் வாழ்க்கைக்கும் குடியாட்சிக்குட்பட்ட மக்களின் வாழ்க்கைக்குமிடையிலுள்ள தார தம்மியங்களைச் செவ்வனே அறிந்துகொள்ளுவது அவசியமாகும்.

சில பிரதான நிழ்ச்சிகள்.

1917. ருஷ்யப் புரட்சி யுண்டாயது. முதலிற் "காடெற்று கள்" என்போரும், பின்னர் கிரென்சிகியின் தலைமையில் மென்ஷிவிக்கரும் அதிகாரம் செலுத்தினர்.

நொவம்பர். லெனினைத் தலைவனாகக்கொண்ட போல்ஷிவிக்கர் கிரென்சிகியை அதிகார பதவியினின்றும் நீக்கினர்.

1918. பிறெஸ்டு-லிட்டோவ்ஸ்கு உடன்படிகையில் கடும் நிபந்தனைகளை ஜெர்மானியர் போல்ஷிவிக்கருக்கு விதித்தனர்.

ருஷ்ய அரச குடும்பத்தினர் கொலை செய்யப்பட்டனர்.

1919. ஜெர்மனியிலும் ஹங்கரியிலும் போல்ஷிவிக்கரியக்கம் சித்தி பெறவில்லை.

1921. பொதுவுடமைக் கட்சியினரின் அரசாட்சி சித்திபெற வில்லை.

1922. இத்தாலியில் பாசிஸ்டுப் புரட்சி. மூசொலீனி சர்வாதிகாரியானான்.

1924. லெனினின் மரணம். அவனுக்குப்பின் ஸ்டாலின் சர்வாதிகாரியானான்.

1929. இத்தாலிய அரசாங்கத்தினரும் பாப்பரசரும் சமாதானம் செய்து கொண்டனர்.

1933. ஜெர்மனியில் 'நாஜியர்' புரட்சி.

1936. போல்ஷிவிக் கட்சியினர் ஸ்டாலினுக்குச் சதி செய்ததையிட்டு விசாரணை.

1937. குடிகளுக்குக் கூடுதலான சுதந்திரம் அளிக்கும், ஐக்கிய சோவியெற் சோஷலிஸ்ட் குடியரசு நாடுகளின் புதிய அரசியல் திட்டம்.

25. முதலாவது உலகப் பெரும்போருக்குப் பின் உலகம் சீரடைதலும், பின் பொருளாதார வீழ்ச்சியும்

அரசியற் சிக்கல்கள் : சமாதான உடன்படிக்கையின் நியமங்களிலிருந்து நாடுகளின் புனருத்தாரணத்துடன் அதன் அத்திவாரத்தில் சமூக ஒற்றுமையும் சுயநிர்மாணமும் அமைந் திருப்பதை எவரும் இலகுவிற் கண்டுகொள்ளலாம். அல்லா மலும், சுயாட்சிக் குடியரசு ஆதாரவிதிகளும் பிரயோகிக்கப் பட்டமையும் தெளிவாகக் கிடக்கின்றது. உலகத்தில் சமா தானத்தை நிலவச்செய்து அங்குமிங்குமாகப் பரந்து கிடக்கும் நாடுகளுக்கிடையிலே பரந்த தொடர்பினை ஏற்படுத்தவும் ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டுமென்று முயற்சி நடை பெறுவதாயிற்று. அந்த உடன்படிக்கையானது எல்லோருக் கும் பூரண திருப்தியளிக்கவில்லை யாதலால் பல கஷ்டங்கள் வந்தெய்தின. புதிய நாடுகளுக்கு விதிக்கப்பட்ட எல்லைகள் அவற்றிற்கு ஒப்புவனவாயும் அமையவில்லை. தோற்கடிக்கப் பட்ட நாடு (சிறப்பாக ஹங்கரி) தமக்குரிய நாட்டுப்பகுதி களில் பெரும் பாகங்களை இழந்துவிடுவதை விரும்பவில்லை. சுவீடனுக்கும், பின்லாந்துக்கும், போலாந்துக்கும், லிதுவேனியா வுக்கும், இடையிலிருந்த தகராறுகளையும், இன்னும் ஒரு சில வற்றையும், சர்வதேச சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத் தது. கிரீசுக்கும் பல்கேரியாவுக்கும் இடையே மூழவிருந்த போரும் இவ்விதமே நிறுத்தப்பட்டது. புதிய கிழக்கைரோப்பிய நாடுகளின் எல்லைகளைத் தீர்க்கப் பல சிறுச் சண்டைகளும் ஏற் பட்டன. பல லட்ச ஹங்கேரியரை ருமேனிய, செக்கோசில வாக்கிய ஆட்சிகளின்கீழ் அமைத்தமையால் ஹங்கரி சமா தான உடன்படிக்கையை எதிர்த்துக்கொண்டே வந்தது. எல்லை களைத் திருத்துவதை மறுப்பதற்காக ருமேனியாவும் செக்கோ சிலவாக்கியாவும் யுகோசிலாவியாவுடன் கூடி, பிரான்சின் ஆதரவுடன் 'சிறு மூவர் நட்பு' என்றொரு ஒப்பந்தம் செய்தன.

உலகப் பெரும்போருக்குப் பின் **முஸ்தாபா கெமால் பாஷா** என்னும் பெயர் பூண்ட திடசாலியான தலைவன் துருக்கியிற்

ரூன்றினான். அவன் தன் நாட்டின் மீது விதிக்கப்பட்ட சமாதான நியமங்களை, விசேடமாகச் சின்ன ஆசியாவிலிருந்த சில பிரதேசங்கள் கிரீசுக்கு அளிக்கப்பட்டதை, ஒப்ப மறுத்தான். அவன் போரிட்டுக் கிரேக்கரைத் துரத்தி, புதிய நியமங்களை யேற்படுத்திச் சித்தியடைந்தான். இதன் பின்பு, அவன் துருக்கியைத் தேசீயக் குடியரசாக அமையும்படிச் சீர்திருத்தினான். அவன் மேலைட்டு நாகரிகத்தின் சிறந்த அமிசங்கள் பலவற்றைக் கொண்டுவந்ததோடு, துருக்கிய சுல்தான், இஸ்லாமியரின் **காலிப்பு** என்னும் உத்தியோகங்களை நீக்கினான்; இச் செய்கை இஸ்லாமிய உலகத்தில் பெருங் கலவரமுண்டாக்கியது. அது போன்ற இயக்கம் பாரசீகத்திலும் தோன்ற அங்கேயும் ஆப்கானிஸ்தானிலும் பிரித்தானியர் தாம் கொண்ட ஆதிக்கத்தைக் கைவிட்டனர். தமது பொறுப்பாட்சிப் பிரதேசமாகிய இராக்குக்கு எமிர் பைசலை அரசனாக்கி, அவனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். 1932-ல் இராக்கின் சுதந்திரத்தை அங்கீகரித்தனர்.

இதற்குக் கீழ்த்திசையிலே தேசீய வுணர்ச்சி, இந்தியாவிலும் சீனத்திலுமுள்ள மாந்தரின் வாழ்க்கையையும் கொள்கைகளையும் பெரிதும் மாற்றியது. இரு நாடுகளைப்பற்றின வகையிலும், ஐரோப்பியரின் ஆட்சியோ அல்லது செல்வாக்கோ தரிக்கொணாதென்னும் மனப்பான்மைத் திட்டமாக வெளிக்காட்டப்பட்டுள்ளது; இம்மனப்பான்மை, ஆனாலிதனிலும் குறைந்த அளவில், பிராஞ்சிய, டச்ச கிழக்கிந்தியத் தீவுகளிலும், குடியேற்ற நாடுகளிலும், மத்தியத்தரைக் கடலின் தென் கரையிலுள்ள ஐரோப்பியக்கட்டளைப் பிரதேசங்களிலும் தோற்றியுள்ளது.

பொருளாதாரச் சீர்திருத்தவமைப்பு: போர் முடிவடைந்தபோது அ. ஐ. நாட்டைத் தவிர்ந்த சகல தேசத்தினருந் தத்தம் நாடுகள் மிகவுஞ் சீர்கேடான பொருளாதார நிலைமையிலிருப்பதையும், உணவுப்பொருள்களும் மூலாதாரப்பொருள்களும் குறைந்திருப்பதையுங் கண்டனர். அவர்களுடைய தொழில்களும், போர்க்கருமங்களுக்கு உதவவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன; போர்க்கருமங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட

வீரர் மீண்டும் உத்தியோகம் தேடிநின்றனர். இந்நிலைமை, விசேடமாக மத்திய, கீழ் ஐரோப்பிய தேசங்களில் துக்கிக்கக் கூடியதாயிருந்தது. ஆனல், துரதிர்ஷ்டவசமாக, நேச வல் லரசுகளின் கருமங்களின் பொறுப்பேற்ற அரசியல் நிபுணர் கள், அரசியற் பிரிவெல்லைகளின் நிருமாணத் திட்டத்தினும் பார்க்க, உலகத்தின் பொருளாதார நிலைமையின் சீர்திருத் தமே பிரதானமென்பதை உணரவில்லை. உலகின் சகல நாடு களும் பொருளாதார ரீதியில் ஒன்றேடொன்று தொடர்பு பட் டிருக்கின்றதென்பதை மறந்து ஒவ்வொரு நாடும் தன் தன் கரு மங்களில் ஈடுபட்டிருந்தது.

அமெரிக்க ஐக்கிய நாடு, பிரித்தானியா, யப்பான் போன்ற கைத்தொழில் நாடுகளிலும், அவற்றுக்கு மூலப்பொருள்களை யும் உணவுப்பொருள்களையும் கொடுத்துதவிய நாடுகளிலும் சிறிதுகாலத்துக்கு எல்லாம் நல்லது போலவே காணப்பட்டது. மானிடர்க்கு அத்தியாவசியமான தொழிற்சாலைப்பொருள்கள் அதிகமாகச் செலவழிந்து, ஒரு சிறிதே எஞ்சியிருந்தமையினல் அவற்றை மீண்டும் செய்யவேண்டியிருந்தது. பலர் விரை விலே செல்வவான்களாயினர். பிரித்தானியப் பிரதான மந்திரி யான திரு லாயிட்ஜோஜ் கூறியவாறு, " உலகத்தை வீரவான் கள் சீவித்தற்கேற்றதாக"ச் செய்தற்பொருட்டு, சமுதாய சீர் திருத்தத்துக்காகப் பலவகை யேற்பாடுகள் தொடங்கப்பட்டன. ஆனல் 1920-ம் ஆண்டினிறுதியளவில், தாற்காலிகமாகத் தோற்றிய இச் சுபிட்சநிலை, அமெரிக்காவிலுங்கூட, முடிந்து விட்டது. மத்திய, கீழ்த்திசை ஐரோப்பிய நாடுகளிலே உண விலும் மூலப்பொருள்களிலும் குறைவேற்பட்டது. தொழிற் சாலை யந்திரங்களிற் பெரும்பாலானவை தேய்ந்திருந்தபடி யினலே, அவற்றைப் புதுப்பிக்க வேண்டியிருந்தது. ஆனல் அவசியமான அவற்றை விலைகொடுத்து வாங்கப் பணமில்லை. பொருள்களின் விலை அதிசயமான பல்வித்தங்களில் மாறியது; ஐரோப்பாவின் ஒரு பகுதியில் வழங்கிய நாணயங்களின் மதிப்பு அடிக்கடி மாறினமையினலே, அப்பகுதியிலிருந்தவர், இன்றைக்குத் தம் நாணயத்துக்கிருந்த விலையே நாளைக்கும் இருக்கும் என்று சொல்லமுடியவில்லை. ஆஸ்திரியாவிற்

போன்ற நாடுகளில் போருக்குப்பின் ஒரு உருட்டித்துண்டு வாங்க உதவிய பணம், போருக்குமுன், ஒருகிராமம் முழுவதிற்கும் ஒரு மாதத்துக்கோ அல்லது கூடின காலத்துக்கோ போதுமான உணவுப்பொருள்களை வாங்கப் போதுமாயிருந்தது. இப்பிரச்சனைகளை ஆராய்தற் பொருட்டு சர்வதேச விசாரணை சபைகள் தாபிக்கப்பட்டன. சிறிது காலத்துக்குப்பின், அவர்கள் கண்டறிந்த வழிவகைகள் அந்நிலைமையைச் சீர்திருத்த ஓரளவுக்குதவின. 1921-1922-ம் ஆண்டுகளில் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் எங்கும் காணப்பட்டது. உண்மையில், ஆஸ்திரியாவும் ஹங்கரியும் முற்றுக அழிந்துவிடும் போலிருந்தன. சர்வதேச சங்கம் விசாரணை சபைகளைத் தாபிக்க, அவை யிவ்விருநாடுகளின் வரவு செலவுத் திட்டங்களின் பொறுப்பை யேற்றன. ஆஸ்திரியா விசேடமாகச் சீர்கெட்டிருந்தது; ஜெர்மானியக் குடியரசுடன் ஐக்கியம் பூணுவதே அதற்கிருந்த ஒரே வழி போலிருந்தது. ஆனல் இத்தகைய ஐக்கியம் தன் பழைய பகைவனின் பலத்தைக் கூட்டுமென்று பிரான்சு நினைத்ததினல், இவ்வைக்கியம் தடுக்கப்பட்டது. விசாரணைச் சபையின் முயற்சிகள் சித்திபெற, ஆஸ்திரியா 1923-லும், ஹங்கரி 1924-லும் பூரண நாசத்தினின்றும் தப்பின.

ஜெர்மனியின் பொருளாதார நிலைமையும் நிலையற்றதாயிருந்தது. அதன் செல்வம் ஓங்கினலன்றி, நட்ட ஈடாக அது கொடுக்கவேண்டிய தொகையை அளித்தலியலாது. 1922-ல் ஜெனீவாவில் ஓர் இராஜதந்திரிகள் மகாநாடு கூடி இப்பிரச்சனைகளை ஆராய்ந்த போதிலும் பயன் அதிகம் ஏற்படவில்லை. நட்ட ஈடாக ஜெர்மனி எவ்வளவு செலுத்த வேண்டுமென்பதையும் எவ்வாறு செலுத்த வேண்டுமென்பதையும் கண்டறிய வேண்டியது அத்தியாவசியமாயது. இதற்காக, 1924-ம் ஆண்டிற் சபையொன்று கூடி ஒரேற்பாட்டைச் செய்தது. நிற்க, பொருளாதார சம்பந்தமாக யேற்பட்ட கஷ்டங்களைத் தீர்க்கவும், சுபிட்ச நிலைமையை மீண்டு மேற்படுத்தவும் பல தேசத்து அரசாங்கத்தினரும் ஒத்துழைக்க வேண்டுமென்பது தெளிவாயிற்று. 1925-ஆம் ஆண்டு முதலாக, உலகத்திலே

செல்வநிலைமை மீண்டும் மேலோங்குவதுபோலக் காணப் பட்டது.

ஆனால் பலர், இங்நிலை நீடிக்குமெனக்கருதி விலைபடக் கூடியதற்கு மேலான அளவுக்குப் பொருள்களை உண் டாக்கினர்; பலர் தொழிற்சாலைப் பொருள்களை அபரிமித மாக உற்பத்தி செய்தனர்; இது துக்கிக்கத்தக்க வொரு விஷயம். பல அரசாங்கத்தினர், தமது பிரசைகளுக்கு வேலை யிராது போகுமெனப் பயந்து, தம்முடன் வியாபாரம் நடாத்த விரும்பின ஏனையநாடுகளின் பொருள்களின் மேல் அதிக வரி விதித்து, வியாபாரத்துக்குத் தடைசெய்தனர். இதன் பயனாக மேன்மேலும் அதிகரித்தது வந்த சுபிட்ச நிலை 1930-ம் ஆண்டில் தடைபட்டது; வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் மீண்டு மொருக்கால் அதிகரிக்கலாயின. இப்பொருளாதார வீழ்ச்சி பல்லாண்டுகளாக நிலவி, பாரதூரமான விளைவுகளும் ஏற்பட்டன.

ஜெர்மனி. போருக்குப்பின் ஐரோப்பாவின் சீரடைதல் ஜெர் மனியின் சீரடைதலில் அதிகமாய்த் தங்கியிருந்தது. பழைய அரச வம்சத்தைச் சார்ந்த மன்னர்களனைவரும் முற்றாக ஒழிக்கப் பட்ட போதிலும் பல ஜெர்மானியர் புது ஜனநாயகக் குடியரசில் திருப்தி கொள்ளவில்லை. புதிய அரசாட்சியாளர்கள் இயன்ற ளவு தங்கள் வாக்குகளை நிறைவேற்றவும் சமாதான ஏற்பாடு களை ஒத்துக்கொள்ளவும் முயன்றனர். ஆனால் அவர்கள் இருக்க வேண்டிய நட்டஈடு சுமக்க முடியாத பெரும்பாரமா யிருந்தது. குடியரசை யாதரித்த இரு பிரபலஸ்தர்கள் படு கொலை செய்யப்பட்டனர்; புது அரசியல் திட்டத்தை நிரா கரிக்க முயற்சிகள் செய்யப்பட்டன. உலகப் பெரும் போருண் டாதற்கு பொறுப்பேற்பதையும் நட்ட ஈடாகத் தண்டப்பணஞ் செலுத்துவதையும் பல ஜெர்மானியர் பெரிதும் எதிர்த்தனர். அல்சேஸ்-லொறெனைப் பிரான்சு பற்றியமையாலும், றைன் நதிப் பிரதேசத்தில் நேசதேசப் படைகள் தங்கியமையாலும், அவர்களின் கோபம் முக்கியமாய்ப் பிரான்சின் மேலிருந்தது. பிராஞ்சியரைப் பற்றினமட்டிலோ, சமாதான ஏற்பாட்டின் நிய மங்களுக்கிணங்க நடவாதிருக்க ஜெர்மானியர் கருதுகின்றன

ரோவென அவர்கள் ஐயங்கொண்டனர். றைன் நதிப் பிரதேச மக்களையும் பவேரிய மக்களையும் ஜெர்மானிய சமஷ்டியிலிருந்து பிரிக்க முயன்றும், அவர்கள் அனுகூலமடையவில்லை. 1923-ம் ஆண்டு மிகவும் நெருக்கடியான ஆண்டாக இருந்தது பொருளாதார வகையில் ஜெர்மனி பாழாகிவிடும் போலிருந்தது; அதன் பிரமாண நாணயமான "மாக்" விலை மதிப்பில் மிகவும் குறைந்தமையினாலே, உலகப் பெரும் போருக்கு முன் ஒரு மாக்கு விலை கொடுத்து வாங்கக்கூடிய ஒரு பொருளை இப் போது இலட்சக்கணக்கான மாக்குகள் கொடுத்து வாங்க வேண்டி இருந்தது. ஜெர்மானிய அரசாங்கத்தினரின் சமயோசிதபுத்தியினால் அந்த அபாயநிலை தீர்க்கப்படுவதாயிற்று. அதன் பயனாக ஜெர்மானிய மத்திய வகுப்பினைச் சார்ந்தோர் தமது சேமிப்புகளை யெல்லாம் இழந்தனர். அது காரணமாக அவர்கள் மனக்கசப்புற்று, நாளடைவில் நாஜி இயக்கத்துக்கு விருப்பத்துடன் துணைபுரிந்து நின்றனர்.

1925-ம் ஆண்டுத் தொடக்கத்திலே குடியரசுத் தலைவனான ஏபட் இறந்தான்; அவனுக்குப்பின் பொது சனங்களால் விரும்பப்பட்ட ஹிண்டன்பர்க்கு என்னும் படைத்தலைவன் தெரிவு செய்யப்பட்டான். அதே ஆண்டில் ஜெர்மனியில் தங்கிய பிறநாட்டுத் துருப்புகள் திருப்பிக் கூப்பிடப்பட்டன. உலக வாணிபத்தில் தமது தானத்தை மீண்டும் பெற ஜெர்மானியர் தம் வழக்கமான திறமையுடன் உழைக்கத் தீர்மானித்து விட்டனர்; ஆனால் ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் சேர்ந்து கொண்டதன்றி, தரைப்படை, கடற்படை ஓரளவு அமைக்க உத்தரவும் பெற்றது. தம்மேல் வேர்சேல்ஸ் உடன்படிக்கையினால் விதிக்கப்பட்ட நியதிகளை எதிர்ப்பதில் ஜெர்மானியர் சிறிதும் பின்னிற்கவில்லை.

பிரான்சு: இப்போர் நடந்த காலத்திலே பிரான்சுக் கேற்பட்ட துன்பங்கள்—ருஷ்யா நீங்கலாக—வேறெந்நாட்டினதினும்பார்க்க அதிகமாயிருந்தன. போர் முடிந்த வுடனே பிரான்சு நாசமடைந்த நாட்டுப்புறங்களையும் பாழடைந்த பட்டினங்களையும் புதிதா யமைக்கவேண்டி யிருந்தது. அந்நாடு கட்டாயப் போர்ச்சேவை முறையையும் பெரியதொரு படை

யையும் கொண்டதுமன்றி 'சிறிய மூவர் நட்பையும்' அதிகம் ஆதரித்தது.

முதலாவ்து உலகப் பெரும்போரில் பிராஞ்சியப் படைகளுக்கு ஏற்பட்ட அளவற்ற தாக்கங்களிலிருந்து, பிற நாடுகளைப்போல, பிரான்சும் விரைவாக மீட்சிபெற இயலவில்லை. பிராஞ்சியர் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிட மிருந்தும் பெரிய பிரித்தானியாவிலிருந்தும் பெறலாமெனக் கருதியிருந்த உதவிகளைப் பெற முடியாததனாலே பெரிதும் ஏமாற்ற மடைந்தனர். தமது நாட்டின் கிழக்குப் பகுதிக்கு அரணைகத் தகர்க்க முடியாதென்னும் கருத்துடன் மகினெற் தொடர் அரணினைக் கட்டி யெழுப்பினர். அவர்களது கருத்து தவறென்பதைப் பின் நடைப்பெற்ற நிகழ்ச்சிகள் காட்டி விட்டன.

இரண்டு உலகப் போர்களுக்கு மிடைப்பட்ட காலத்தில் பிரான்சு மிகப் பலம் வாய்ந்த நாடெனக் கருதப்பட்டது. ஆயின் பிரான்சினுடைய பலம் வெளித்தோற்றத்தளவிலன்றி உண்மையானதொரு பலமாகத் திகழவில்லை. அதனுடைய அரசாங்கமும் அரசியலும் திருப்தியற்ற நிலையிலிருந்தன. 1934-ம் ஆண்டிலே பொதுஜனவாழ்க்கையில் திடுக்காடு விளைக்கும் சம்பவங்கள் பல நடைபெற்றன. பெரிய வேலை நிறுத்தங்கள் பல உண்டாயின; அவற்றுட் சில இரத்தக் களறியாகவும் முடிந்தது. கொம்முனிஸ்ட் கட்சியின் பலம் நகரங்களில் அதிகரித்துக்கொண்டு வருவதாயிற்று. அது செல்வர்களுக்கும் பெரும் பயத்தினை விளைவிப்பதாயிற்று. பிராஞ்சியரிற் பெரும் பாலானோர் ஹிட்லரின் ஆட்சியில் ஜெர்மனி பலமடைந்து வருவதைக் கண்டு பயம் மிகுந்தவராயிருந்தனர். (அடுத்த அத்தியாயத்தைப் பார்க்க.) எனினும், அங்கே அதிலும் பார்க்க பாஸிஸ்ட் கொள்கைகளை விரும்பியதான செல்வாக்கு மிகுந்த கட்சி யொன்று நிலவுவதாயிற்று. அக்காரியம் பிரான்சுக்குப் பெரிய பலவீனமாய்த் தோற்றியது. இரண்டாவது உலகப் போரில் பலரும் அதிசயிக்கும் வண்ணம் எதிர்ப்பார்த்திராதபடி பிரான்சு பெரும் தோல்வி யடைந்து வீழ்ச்சியுறுவதாயிற்று.

பெரும்பொருளாதார வீழ்ச்சி: 1925-க்கும் 1926-க்கும்

இடையில் சுபிட்சம் மெல்ல வந்து கொண்டிருப்பதாகத் தோற்றினாலும், உண்மையில் அப்படி நடக்கவில்லை. பலர் பெரும் நம்பிக்கை கொண்டு மற்றவர் வாங்க விரும்பாத அளவுக்கு விளைபொருட்களையும் உற்பத்திப் பொருட்களையும் உண்டாக்கினர். பல அரசாங்கங்கள் தங்கள் நாடுகளுடன் வாணிபம் செய்ய விரும்பிய நாடுகளின் பொருட்களுக்கு உயர்ந்த தீர்வைகளை விதித்து, வியாபாரத்திற்கு முட்டுக்கட்டை இட்டன. தங்கள் நாட்டுமக்கள் தொழில் இழந்து விடுவார்கள் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும். இன்னோரன்ன காரணங்களால், வளர்ந்து வந்த சுபிட்சம் தடைப்பட்டது. 1929, ஒக்டோபரில் நியூயோக்கில் உள்ள 'முதலீட்டுச் சந்தை' (Stock Market) முறியத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து ஓர் பெரும் பொருளாதார நெருக்கடி உலகம் பூராவும் பரவியது. 1939-ல் இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பித்தபோதும் உலகம் இந்த நிலையில் இருந்து முற்றுக மீட்சி பெறவில்லை. இப்பெரும் அழிவுக்குரிய பிரதான காரணங்களில் ஒன்று இப்பொருளாதாரப் பிரச்சனை என்றே கூறலாம்.

எல்லா இடங்களிலும், பிரதானமாக தந்நம்பிக்கை அதிகம் உடைய அ. ஐ. நாட்டில், இலட்சக்கணக்கானோர் வேலையற்றனர். சேமிப்புகளும் நூற்றுக்கணக்கான வியாபாரங்களும் பாழடைந்தன. பிறதேசங்களிலிருந்து கடன் வாங்கிய தேசங்கள், திருப்பிக் கடனைக் கொடுக்க முடியாது போயின. எங்கும் விலைவாசிகள் இறங்கின. இதனால் தானியங்கள், தேயிலை, கோப்பி, சீனி, றப்பர் உற்பத்தியாளர் பெருந்தொகையான இருப்பை நட்டத்திற்கல்லாமல் விற்கமுடியவில்லை. உலக வாணிபம் கிட்டத்தட்ட அரைவாசி வீழ்ச்சியுற்றது. வர்த்தகம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே வியாபாரம் செய்யும் நாடுகள் ஒன்றுக்கொன்று கடன் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றன. வங்கிகள் மூலம் இது ஒழுங்கு செய்யப்படும். ஆனால் நம்பிக்கை மறைய எங்கும் வங்கிகள் முறியத் தொடங்கின. பிரதானமாக ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும், 'உலக நாணயம்' ஆட்டம் கொடுத்தது. பிரசித்தி வாய்ந்த இங்கிலாந்து வங்கியே முறியும் தறுவாயை அடைந்தது.

ஸ்டான்லி போல்ட்வினின் தலைமையின்கீழ், கொன்சே வேட்டிவ், லிபெறல், லேபர் ஆகிய மூன்று கட்சியினரையுங் கொண்ட ஒரு 'தேசிய அரசாங்கம்' ஏற்படுத்திப் பெரிய பிரித்தானியா அப்போதிருந்த நெருக்கடியைச் சமாளித்துக் கொண்டது. 'தங்க மாற்றி'னின்றும் பெரிய பிரித்தானியாவை விலக்கியது தான் அந்த அரசாங்கம் செய்த முதற் செயல்—அதாவது, இங்கிலாந்து வங்கி தன் தாள்க்காசுக்குப் பதிலாகத் தங்க நாணயம் இறுக்க வேண்டும் என்று இதுகாறும் இருந்த கட்டுப்பாட்டை நிராகரித்தது. ஐரோப்பிய கொடுக்கல் வாங்கல்களுக்கெல்லாம் லண்டன் முக்கிய மத்தியஸ்தானமாகையால் ஏனைய அரசாங்கங்களும் 'தங்கமாற்றை' விடவேண்டியதாயிற்று. பிரித்தானியப் பொருட்களுடன் பிறநாட்டுப் பொருட்கள் பிரித்தானியாவிலே வியாபாரப் போட்டியிடாமல் கடும் சுங்க வரிகள் விதிக்கப்பட்டன. ஆகவே, 'தடையற்ற வியாபாரக் கொள்கையைப் பிரித்தானியா கைவிட்டது. வாராந்தப் 'பிச்சைச் சம்பளம்' கொடுத்தே இருபது லட்சம் வேலையற்ற மக்கள் பட்டினியினின்றும் மீட்கப்பட்டனர். பொது ஜனங்கள் தேசிய அரசாங்கத்தை ஆதரித்தனர். மெல்ல மெல்ல நிலைமை திருந்தி வந்தது.

ஐக்கிய நாட்டில் மக்கள் தலைதூக்க முடியாதவராயினர். புதிய ஜனாதிபதி, பிரங்கிளின் ரூஸ்வெல்ற் நாடு நலன் பெறப் பெரும் முயற்சிகள் செய்தார். அவர் அளித்த 'புது முறை' ஓரளவு அனுகூலமாயிற்று. மக்களிடமும் நம்பிக்கை தோன்றியது. பெரிய பிரித்தானியாவில் உள்ள அளவுக்கு இல்லாவிட்டாலும், நிலைமை திருந்தியது. 1934 அளவில் உலக நிலைமை திருந்தத் தொடங்கி விட்டது. ஆனால் இதற்கிடையில், இந்த 'வியாபார மந்தத்தின்' பயனாக, ஐரோப்பாவிலும் தூர கிழக்கிலும் பெரும் மாற்றங்கள் வருவதாயின. இந்த மாற்றங்களால் வந்த பயன்—உலக மக்கள் இனிமேல் வரப் போவதில்லை என்று எண்ணி யிருந்த—இன்னுமொரு உலகப் போராகும்.

உதவிக் குறிப்புக்கள்.

சமாதான வுடன்படிக்கைகளுக்குச் கைச்சாத்திடப்பட்ட பின் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இவ்வத்தியாயத்திற் சுருக்க மாகக் கூறப்பட்டுள்ளன. போருக்குப் பிந்திய முதல் ஐந்து அல்லது ஆருண்டுகள் கஷ்டமும் சிக்கல்களும் நிறைந்த கால மாயிருந்தது. ஆரசியல் நிபுணர்கள், விசேடமாக வல்லரசு களின் நாட்டினர், அப்போதேற்பட்ட பிரச்சனைகளைத் தீர்த்ததற் குச் சர்வதேச சங்கத்தைப் பயன்படுத்த விருப்பமற்றிருந்தனர்; அவர்கள் பழைய அரசியற்றந்திர முறைகளையோ அன்றேல் விசேட கருமங்களுக்கெனக் கூட்டப்பெற்ற மகாநாடுகளையோ நாடினர். இவ்வாண்டுகளிலே, மத்திய ஐரோப்பாவிலே பொருளாதார நிலை முற்றுகச் சிதையுமென்று பெரிதும் பயப் படக் கூடியதாயிருந்தது; எனினும், இந்நிலைமை பெருங் கஷ் டத்துடன் நீக்கப்பட்டது. 1925-ம் ஆண்டின் பின் நாடுகளின் நிலைமை பொதுவாகப் பெரிதும் சீர்திருந்தியுள்ளது. ஜெர்மனி சர்வதேச சங்கத்தின் பிரதான அங்கத்துவ நாடுகளில் ஒன்று கியது. ஆனால் இத்திருத்தம் நெடுநாள் நிற்கவில்லை. தொடர்ந்து வந்த பொருளாதார வீழ்ச்சி இரண்டாம் உலக யுத்தத்தில் முடிந்தது. இவ்வீழ்ச்சி 'உலகமெங்கும் பரவியதால், உலகப் பொருளாதார நிலை சீரடைவதைத் தடுத்து, விடுதலைக் கும் சமாதானத்திற்கும் எதிராகிய இயக்கங்களை வளர்த்தது. இவற்றின் மூல காரணம் அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஏற்பட்ட தேசிய வெறியாகும்'

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1923. பிராஞ்சியரும் பெல்ஜியரும் ரூர் பள்ளத்தாக்கைப் பிடித்துக் கொண்டனர்.
கிரீசுக்கும் இத்தாலிக்குமான போர் "சமஸ்தான தூதர்" மாநாட்டிற் றடுக்கப்பட்டது.

1924. நட்ட ஈட்டுப்பணத்தைச் செலுத்த "டாஸ்" என் பாரின் ஏற்பாடு.

1925. லொகார்னோவில் மகாநாடு வெற்றியுடன் கூடியது. கிரீசுக்கும் பல்கேரியாவுக்குமான போர் சர்வதேச சங்கத்தினாற் றடுக்கப்பட்டது.

1926. ஜெர்மனி சர்வதேச சங்கத்திற் சேர்ந்துகொண்டது.

1927. ஜெனீவாவிற் கூடிய போர்க்கருவித் தணிக்கை மகாநாடு சித்தி பெறவில்லை.
ஜெனீவாவிற் சர்வதேசப் பொருளாதார மகாநாடு கூடியது.

1928. போரை ஒழிக்கப் பிரயண்டும் கெல்லோக்கும் செய்த உடன்படிக்கைக்கு உலகத்திலுள்ள நாடுகளில் அநேகமாய் எல்லாம் கைச்சாத்திட்டன.

1929. பெரும் பொருளாதார வீழ்ச்சித் தொடக்கம்.

26. இரண்டாவது உலகப் போருக்கு அடிப்படையான நிகழ்ச்சிகள்

1930-39-ல் நிகழ்ந்த கஷ்டங்கள். 1929-ம் ஆண்டின் பொருளாதார வீழ்ச்சியோடு ஆரம்பமான பத்து வருடங்களுள்ளும், பல நிகழ்ச்சிகள் தொடர்ந்தேர்ச்சியாக நடந்தன. முதலாமுலகயுத்தத்தின் பின் மக்கள் இனி ஒருபோதும் அவ்வனைய யுத்தம் வரமுடியாது எனக் கருதியிருந்தனர். ஆனல் இந் நிகழ்ச்சிகள் முந்தினதிலும் பெரிய இன்னும் ஒரு உலகப் போரை மூட்டின.

சர்வதேச சங்கம் இவைகள் நிகளாமல் தடுக்கும் என்று கருதப்பட்டது. ஆனல் அந்த ஸ்தாபன அங்கத்தவர்களே அதில் முழுவிசுவாசம் வைக்கவில்லை. இதை உருவாக்கி ஆதரித்தவர்கள் இதனல் சண்டைகள் தடுக்கப்படும் என்றும், தேசங்களினிடையே ஏற்படும் தகராறுகள், மத்தியட்சரினலோ, பரஸ்பர உடன்படிக்கையினலோ தீர்க்கப்படும் என்றும் கருதினர்கள். வெகு சில தேசங்கள் மாத்திரம் இதை ஏற்றுக்கொண்டன. ஜெர்மனி, இத்தாலி, யப்பான் ஆகிய மூன்றும் தங்கள் நோக்கத்தையும் விருப்பத்தையும் பூர்த்தி செய்ய, போர்தொடுக்கும் கருத்தை விடுபவர்களாக இல்லை.

அ. ஐ. நாடும் சோ. ஐ. நாடும் இதில் இல்லாமையும் ஜெர்மனி, இத்தாலியுடைய அரைமன ஒத்தாசையும், பலதேசங்கள் பழைய அரசியல் தந்திரங்களைக் கையாள விரும்பியமையும் சர்வதேச சங்கத்தைப் பெலவீனப் படுத்தின.

1934-ல் ஐ. சோ. சோ. கு. நாடு சர்வதேச சங்கத்திற் சேர்ந்தது. ஆனல் பொருளாதார வீழ்ச்சியினல் பல தேசங் களும் திரும்பவும் தங்கள் பாட்டைத்தாமே பார்த்துக்கொள்ள நேர்ந்தது. ஆக்கிரமிப்புத் தேசங்களாகிய ஜெர்மனி, யப்பான், இத்தாலி சங்கத்திலிருந்து முறையே விலகின. 1938-ல் சங்கத் தின் வீழ்ச்சி பொதுவாக வெளிப்படையாயிற்று. இம்மூன்று வல்லரசுகளும் விரைவாகத் தங்கள் ஆயுதபலத்தை முழுதும் பெருக்கின. இதன் விளைவாக இவைகள் 'பெர்லின்—ரோம்—ரோக்கியோ அச்சு' எனப்பட்ட ஒருவித ஒப்பந்தத்தில் சேர்ந்து கொண்டன. இம்மூன்றில் ஒன்றையும் மக்கள் ஆட்சி நாடு என்று கூறமுடியாது. ஐரோப்பாவிலுள்ள பல சிறிய தேசங் கள் ஓரளவு இவற்றைப் பின்பற்றி, மக்கள் ஆட்சியை ஒழித்துச் சர்வாதிகார ஆட்சியை நிறுவின. இதனல் 1939-ல் பிரித் தானியா, பிரான்சு, செக்கோசிலவாக்கியா, பெல்ஜியம், நெத லாந்துகள், ஸ்கந்திநேவிய நாடுகள், பின்லாந்து, சுவிற்சலாந்து மட்டுமே ஐரோப்பாவில் மக்கள் ஆட்சி நாடுகளாக இருந்தன.

பெரும்பாலான சிறிய நாடுகள் நடுநிலை நாடுகளாக இருக் கத் தெண்டித்தன. எதிர்பார்த்த யுத்தத்தில் புகாதிருக்க நினைத்தன. (ஆனல் அதுவும் வாய்க்கவில்லை.) காலத்தில் பிரித்தானியாவும் பிரான்சும் அச்சு நாடுகளுக்கு எதிராக நண் பராய் ஒத்துழைக்க முடிவு செய்தன. மூன்று அச்சு நாடுகளும் கொம்முனிஸத்திற்கு விரோதிகளெனப் பிரகண்டனப் படுத்தப் பட்ட போதும், சோவியெற் ஐக்கிய நாட்டின் நிலை எதுவென்று அறியப்படவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடு நடுநிலையாக நிற் பதாகவே முடிவு செய்தது.

ஜெர்மனியில் நாஜிப் புரட்சி. வியாபாரப்பணமந்தம் ஜெர் மனியை மிகவும் கடுமையாகத் தாக்குவதாயிற்று. ஆகவே "நட்ட ஈடு" எனப் பெருந்தொகையான பணத்தினைத் தாங்கள் பிறருக்கும் முக்கியமாக அமெரிக்க ஐக்கிய நாடு களுக்குக் கொடுத்துக் கொண்டுவர முடியாதென ஜெர்மா னியத் தலைவர்கள் கூறினர். ஜெர்மனியிலே பணமே இல்லா மற் போய்விட்டது; லட்சக்கணக்கான மக்கள் வேலையின்றித் தவித்தனர்; எல்லோரும் அரசாங்கத்திலிருந்த தலைவர்கள்மீது

கொண்டிருந்த நம்பிக்கையையும் இழந்தனர். "தேசீய சோஷலிஸ்டுகள்" என்னும் பெயருடன் ஒரு கட்சியினர் அப்போது நாட்டில் ஏற்பட்டிருந்த நிலையினைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதிருந்த அரசாங்கத் தலைவர்களை நீக்கினர்கள். மேலும் ஜெர்மனியைப் பாதிக்கும் பேதங்களை எடுத்துக் காட்டி மக்களிடம் பெரும் ஆதரவை அந்தக்கட்சி பெற்றது. அக்கட்சிக்குத் தலைவனாக வாய்த்தவன் அடோல்ப் ஹிட்லர் என்பவனாவான். ஆஸ்திரியாவில் மிகத் தாழ்ந்ததொரு குடியிற் பிறந்தவன்; முதலாவது உலகப்பெரும் போரில், அதிகாரம் பெறுத சாதாரண உத்தியோகத்தனாக ஜெர்மனியின் சார்பிற் போர் செய்தான். 1914-ல் தலைவரைச் சண்டைக்குத் தூண்டிய பேரவாவும், பெற்ற தோல்வியில் பெரும் ஆத்திரமும், பழிவாங்கும் எண்ணமும், மற்றும் ஜெர்மானியருக்கு இருந்தது போலவே இவனுக்கும் இருந்தது. வியத்தற்குரிய சில சம்பவங்களினால் ஹிட்லர் தான் கொண்டிருந்த கருத்துக்களையெல்லாம் நடைமுறையிலே கொண்டு வருவானேயினான். 1923-ம் ஆண்டின் முகனையிலே ஒரு புரட்சியை ஏற்படுத்த முயன்றும் அது சித்தி பெற்றதாகவில்லை. எனவே, அவன் சிறையிலிடப்பட்டான். அவன் சிறையிலிருந்த காலத்திலே, முதலாவது உலகப் பெரும் போரினால் ஏற்பட்டவற்றை முற்றிலும் மாற்றிக் கொள்வதற்கு ஜெர்மனி யாது செய்யவேண்டுமென்று கூறி, "மெயின் காய்ம்பு" (எனது பிரயத்தனம்) என்னும் பெயருடன் ஒரு புத்தகம் எழுதி யிருந்தான். அதில் ஜெர்மனி செய்ய வேண்டிய



அடோல்ப் ஹிட்லர்

வற்றைப் புற்றியதொரு முழுத் திட்டம் கொடுக்கப்பட்டிருந்தது. சிறை யிலிருந்து விடுதலை பெற்றதும் அவன் அந் நூலினை வெளியிட்டான்; அதனுள்ளே கூறப்பட்டவற்றையும் முறை தவருமல் எவரும் திகைக்கும்படியாகச் செய்கையிலே காட்டி னான்.

இம் முறைகள் யாவும் குழப்பமும் கொடுமையும் நிறைந் தவை; மனித இயற்கையிற் சிறந்த கொள்கைகள் எல்லாவற் றையும் அவைகள் பொருட்படுத்தவேயில்லை. ஹிட்லர் தனது கருத்துக்களையும் கொள்கைகளையும் தன்னைப் பின்பற்றியவர் களுக்கு நன்முகச் சரியெனப்படும் வண்ணம் காட்டி தனது சொல் வன்மையினலும் தோற்றத்தினலும் எல்லோரையும் அமையும்படி செய்தான். தன்னுடைய கட்சியினரைச் செம்பு நிறச் சட்டைகளை அணியச் செய்து அக்கட்சியினரை "நாஜி கள்" (தேசீய சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சியினர்) என் றும் நிறுவினன். பொருளாதாரத் தாழ்வு ஏற்பட்ட காலத் திலே, நல்ல வேளையாக, அவனுடைய இயக்கமும் உருப் பெற வந்துவிட்டது. ஐரோப்பாவின் பிற பகுதிகளில் ஜெர்மனியிற் போலவே பொருளாதார மந்தம் ஏற்பட்டிருந்தது, இந்த இயக் கத்துக்கு ஆக்கந் தருவதாயிருந்தது. ஜெர்மனி முழுவதும் அவனுடைய புத்தகத்தினை வாங்கி ஆவலோடு படிப்பதாயிற்று. முதலாவது உலகப் பெரும் போரிலே ஜெர்மனியருக்கு ஏற் பட்ட தோல்வியானது தமது நாட்டினுக்கே என்றும் நீங்காத வசையினைக் கொடுப்பதாகும் என்பதை ஜெர்மனியருட் பலர் உணர்ந்தனர். ஜெர்மனியில் செல்வாக்குள்ள ராணுவ வகுப் பினரும் இக்கட்சியிற் சேர்ந்து கொண்டனர். ஹிட்லர் மேலும் கைத்தொழில், நிதி யாதியவற்றிற்குத் தலைமைவகித்தோ ருடைய உதவியையும் பெற்றார். அவர்களும் குடியரசு அர சாங்கம் வீழ்ச்சியுறுவதையே விரும்பி நின்றனர். இந்த இரு பகுதிகளின்—ராணுவ, முதலாளித்துவ வகுப்பினர்—தலைவர் களும் ஹிட்லரையும் அவருடைய நாஜிக் கட்சியினரையும் தமது விருப்பத்தை நிறைவேற்றுவதற்குக் கருவியாகக் கொள்ளலாமெனக் கருதியிருந்தனர். ஆனல், முடிவில் அவர் கள் எதிர்பார்த்திருந்ததற்கு முற்றிலும் மாருக ஹிட்லரே தமது

எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு அவர்களைக் கருவிகளாகப் பயன்படுத்திவிட்டான். குடியரசு அரசாங்கம் தனது பக்கத் திற்கு ஈர்ப்பத்திற்கு மிக முயன்றும் இயலாதிருந்த ஜெர்மானிய இளைஞர்களுக்கு ஹிட்லரின் புதிய நூலினை ஆதரிப்பதில் ஒரு தனி ஆசை ஏற்படுவதாயிற்று. கொம்முனிஸ்ட் கட்சியினைச் சேராதவர்கள் எல்லோரும் எழுச்சி மிகுந்த நாஜிகள் ஆயினர். அவர்களே தொகையிலும் மிகுந்திருந்தனர். 1923-ம் 1930-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினுற் கஷ்ட மடைந்த மத்திய வகுப்பினர் தீவிரமான எதிர்ப்பினைச் செய்ய முனையவில்லை. 1933-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர் தலில் ஹிட்லரும் அவனுடைய கட்சியினரும் வெற்றிபெற்று வலிமை மிகுந்தவராயினர். ஜெர்மானியக் குடியரசின் தலைவ னை ஹிண்டன்பர்க்கினுல் பிரதம மந்திரியாக அவன் நியமிக் கப்பட்டான். இரண்டாம் உலகப் பெரும் போருக்குக் காரண மாயமைந்த கொடுஞ் செயல்களுக்கு இதுவே அத்திவாரமாக அமைவதாயிற்று.

யப்பானும் சீனமும் : முதலாவதாக ஏற்பட்ட பெரிய சச்சரவின் அறிகுறிகள் தூரக் கீழ்த்திசையிலிருந்தே வந்தன. சர்வதேச சங்கத்தின் கருத்துக்களுக்கியைந்து, யப்பான் அர சாங்கம் முதலாவது உலகப் போரின் பின் பத்து ஆண்டுகள் வரையில், போர் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது சீனத் திடம் தான் வேண்டி நின்றவற்றைக் கேளாது விட்டு விட்டது. ஆயின், அந்நாட்டிலிருந்த நிலைமைகள் சில, அவர்கள் பல ஆண்டுகளாக மனத்திலே திட்டம் வகுத்து வைத்திருந்தவற் றுட் பலவற்றைச் செய்து முடிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத் தன. அவர்கள், சீனத்தில் ஐரோப்பியரும் அமெரிக்கரும் கொண்டிருந்த செல்வாக்கினை அறவே யொழித்து, அவர்கள் செய்துகொண்டிருந்த வியாபாரத்தையும் முற்றுகத் தடை செய்து, கீழ்த்திசை ஆசியாவில் யப்பான் தனியரசு செய்ய வேண்டுமென்று ஆசை கொண்டிருந்தது. சீனமும் மஞ்சூரி யாவும் ஒற்றுமையடைந்ததையும் சியாங்கை சேக் செல்வாக் குடன் கூடிய ஆதிக்கத்தைப் பெற்றதையும் மனத்தளர்வுடன் நோக்கிக்கொண்டிருந்தார்கள். (27-ம் அத்தியாயம் பார்க்கவும்).

சீனத்திலுள்ள பல கோடி மக்களுக்குத் தாங்கள் தயாரித்த பொருள்களை விற்பனை செய்வதற்கும், சீனத்திலுள்ள கைத் தொழில் மூலப்பொருள்களைத் தங்கள் கைத்தொழிற்சாலை களுக்காகப் பெற்றுக்கொள்ளவும் யப்பானியர் விரும்பினர்.

பொருளாதார மந்தத்தினால் பெரிதும் தாக்கமடைந்தது மல்லாமல், மிகப்பரந்திருந்த வெளிநாட்டு வியாபாரம் குறை வடைந்ததும், தொழிற் கூலி மலிவினால் அவர்கள் மிகக் குறைந்த விலைக்குக் கொடுத்த பொருள்களுக்குப் பிறநாடுகள் அதிக தீர்வை விதித்ததும் யப்பானுக்குப் பெரியதொரு வீழ்ச்சி யாக விருந்தது. ஆதலால், 1905-ம் ஆம் ஆண்டிலே தனது ஆட்சிக்குள் விடப்பட்ட தெற்கு மஞ்சூரியாப் புகைரதப் பகுதி யில் சீனர்களால் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றதென்ற சாட் டுடன், 1931-ம் ஆண்டிலே யப்பான் மஞ்சூரியாவைத் தாக்கு வதாயிற்று. இந்த வளமும் செல்வமும் மிகுந்திருந்த மாகாணம் விரைவிலே கைப்பற்றபபட்டு 'மஞ்சுக்கோ' என்னும் பெய ருடன் ஒரு புதிய தனி இராச்சியமாக அமைக்கப்பட்டது. அத னுடைய மேற்பார்வை உண்மையாக யப்பானியர் கையி லேயே இருப்பதாயிற்று. சீனத்தின் பழைய இராசப் பரம் பரையினைச சார்ந்த ஒருவரைப் பிடித்து அந்த இராச்சியத் துக்கு மன்னனென வைத்திருந்தார்கள். இதைத் தவருன காரியமெனக்காட்டி, நான்கிங்கிலுள்ள சீன அரசாங்கம் சர்வ தேச சங்கத்துக்கு ஒரு தடைத் தீர்மானத்தைச் சமர்ப்பிப்ப தாயிற்று. சர்வதேச சங்கம் யப்பானுக்கு எதிராகத் தீர்வை கொடுத்த போதிலும் அதன் அங்கத்தவரெவரும் கடுமையான நடவடிக்கைகள் எதுவும் எடுத்தாரல்லர். யப்பான், சர்வதேச சங்கத்தினை அவமதித்து விட்டு, அதிலிருந்து விலகிக்கொள்வ தாயிற்று. 1933-ஆம் ஆண்டிலே, மஞ்சுக்கோவுடன் அதனருகி லிருந்த ஜெகோல் என்னும் மாகாணத்தையும் யப்பான் சேர்த் துக்கொள்வதாயிற்று. சீனப்படையினர்க்கும் யப்பானியப் படை யினர்க்கு மிடையில் அவ்விடத்தில் போர் நடைபெற்றது மல்லாமல் சங்காய் துறைமுகப் பகுதியிலும் நடைபெறுவ தாயிற்று.

யப்பானியரது தாக்குதலின் இரண்டாவதுபடி இதைவிட

மோசமானதாயிருந்தது. அந்தத் தாக்குதல் யப்பானியர் பொருட்களைச் சீனர்கள் பகிஷ்காரம் செய்ய முயன்றதனால் ஏற்பட்டதாகும். 1937-ம் ஆண்டிலே, மஞ்சுக்கோ எல்லைப் புறத்தில் யப்பானியப் படையினர்க்கும் சீனப் படையினர்க்கு மிடையில் சில சச்சரவுகள் ஏற்பட்டன. சியாங்கை சேக், தமது படையினரைப் பின்வாங்கவிடாது தடுத்து, எதிர்த்து நின்றமையினாலே போர் தொடுக்காமலே பெரியதொரு யுத்தம் நடைபெறுவதாயிற்று. யப்பானியர்கள் இந்த யுத்தத்தை "சீனச் சம்பவம்" என்று கூறிக்கொண்டார்கள். சோவியெற் ஐக்கிய நாடுகள் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த வெளிப்புற மங்கோலியா தவிர வட சீனம் முழுவதையுமே யப்பானியர் கைப்பற்றிக்கொண்டார்கள். சங்காயைக் கைப்பற்றி "சர்வ தேச குடியேற்ற நிலம்" என விளங்கிய சீனப் பிறநாட்டு வியாபாரத் தலைமைக் காரியாலயத்தையும் அழித்து மிகுந்த சேதம் விளைத்துவிட்டார்கள். மேலும், அவர்கள் மத்திய பகுதி தென் பகுதிகளுக்குள்ளும் புகுந்து சியாங்கை சேக்கினை நான்கின் தலைநகரிலுள்ள அவருடைய இடத்திலிருந்தும் துரத்தி விட்டார்கள். தாங்கள் தங்கியிருந்த இடப்பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருந்த சீன மக்களுக்கெல்லாம் அளவற்ற கொடுமைகளைச் செய்தார்கள். ஆனால், சுங்கிங்கில் தனது தலைநகரை அமைத்துக் கொண்டிருந்த சியாங்கை சேக்கின் தலைமையில் சீனப்படையினர் 'கெறில்லா'ப் போர் புரிந்து நின்றார்கள். ஈற்றில் இப்போர் இரண்டாமுலகப் போருடன் இணைந்தது. சர்வதேச சங்கத்திலிருந்த நாடுகள் இந்தப் போரிலே தலையிடாமல் நின்றமை அச்சங்கத்தின் பலவீனத்தை ஆக்கிரமிப்பு நாடுகளுக்குக் காட்டுவதாயிற்று. இந்தச் சம்பவத் தால் ஏவப்பட்டு ஜெர்மனியும் இத்தாலியும் யப்பானைப் பின் பற்றியனவாய்ச் சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக் கொண்ட னர்.

இத்தாலியும் அபிசீனியாவும்: மூசொலீனி அடிக்கடி தனக்குச் சமாதானத்தில் நம்பிக்கையில்லையெனக் கூறிக் கொண்டு வந்தபோதிலும், சில ஆண்டுகளாக, சர்வதேச விவ காரங்களில் நியாயமான முறையில் நடந்து கொண்டிருந்தான்.

எனினும், பொறுப்பாட்சிப் பிரதேசமாக இத்தாலிக்கு ஆப்பிரிக் காவிலுள்ள ஜெர்மானிய குடியேற்ற நாடுகள் கொடுபடாமை யால் சமாதான உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் அவனுக்கு ஒருபொழுதும் திருப்தியளித்தது கிடையாது. சில காலம் வரை அவன் பெரிய பிரித்தானியாவுடனும் பிரான்சுடனும் சேர்ந்து நாஜி ஜெர்மனிக்கு எதிராக வேலை செய்துகொண் டிருந்தான். நாஜித் தாக்குதல் ஏற்பட்டால் அதிலிருந்து ஆஸ் திரியாவைக் காப்பது இத்தாலியே யெனக் கருதினன். ஹங்கரி சமாதான உடன்படிக்கையினைத் திருப்பி ஆராய்தல் வேண் டும் என வேண்டிக்கொண்டதற்குக்கூடச் சாதகமாய் நின்றான்.

ஆனல், 1934-ஆம் ஆண்டிலே மாற்றம் ஏற்பட்டுவிட் டது பொருளாதார மந்தத்தினற் பெரிதும் பாதிக்கப் பட்டிருந்த மக்களின் மனத்தினை, அதை நினைப்பதற்கு இடங்கொடாமல், வேறு வழியிற் புகுத்த வேண்டுமென முசொலீனி ஆசை கொண்டான். அதற்காக மிகவும் துரித மானதொரு வெளிநாட்டுக் கொள்கையை மேற்கொள்ளத் தொடங்கினன். அவ்வருடத்தில் இத்தாலிய சோமாலிலாந் தின் எல்லைப்புறத்தில் ஏற்பட்ட ஒரு சச்சரவினைக் காரண மாகக் காட்டிக் கொண்டு அபிசீனியாவைத் தாக்குவதற்கு ஆயத்தஞ் செய்தான். 1896-ம் ஆண்டிலே அபிசீனியர் தம்மைப் படுதோல்வியடையும்படி செய்ததை மறவாதிருந்த இத்தாலியர்க்கு இந்த யுத்தம் ஏற்படுவது மிகவும் மகிழ்ச்சி யைக் கொடுப்பதாயிருந்தது. 1935-ம் ஆண்டில் இத்தாலியர் அபிசீனியாவின்மேற் போருக்கெழுந்தனர். அபிசீனிய நாட்டின் இயற்கையமைப்பு அவர்களுக்குச் சிறிது தொந்தர வைக் கொடுத்து நின்றது. புதிய யுத்தக் கருவிகளுடன் போருக் கெழுந்த இத்தாலியருக் கெதிரில், பயிற்சி யளிக்கப் படாத போர் வீரர்களைக் கொண்ட அபிசீனியச் சக்கரவர்த்தி ஹெயிலி செலாச்சி நிற்கமுடியாமல் தோல்வியடைந்தான். 1936-ம் ஆண்டின் இறுதிக்காலத்தில் அபிசீனிய மன்னருக் குரியதாயிருந்த நாடு முழுவதும் இத்தாலிய குடியேற்ற நாட்டுச் சக்கராதிபத்தியத்துடன் சேர்க்கப்படுவதாயிற்று.

சக்கரவர்த்தி தப்பியோடினர். அவர் முன்னதாகச் சர்வ

தேச சங்கத்துக்கு முறையிட்டபொழுது, அச்சங்கத்தினர் இத் தாலியுடன் பல பொருட்கள் வியாபாரம் '' பொருளாதார அநுமதி '' யின்றிச் செய்யலாகாதெனத் தாம் ஒரு தீர்மானம் செய்தார்கள். ஆயின், எல்லாப் பொருள்களுள்ளும் முக்கிய மான எண்ணெய் வகை வியாபாரத்தை அவர்கள் தடுக்க வில்லை. அதைத் தடைசெய்தால் அந்த யுத்தம் ஐரோப்பிய யுத்தமாகப் பரவும் எனக் கருதிப் பயந்தனர். பிரதானமாக, பிரான்சு மூசொலீனிக்கு அதிகம் கோபமூட்டுதலாகாது என்று கருதிக் கொண்டிருப்பதாயிற்று.

இந்த அநுமதியினற் பயன் ஒன்றுமே ஏற்படவில்லை. சர்வதேச சங்கத்தினின்று இத்தாலி விலகிக்கொள்ளச் செய்ததுதான் இறுதியிற் கண்ட பயனாகும். எப்பொழுதும் மூசொலீனி ஹிட்லரின் ஆதரவினைப் பெற்றுக்கொண்டிருந் தான். தன் போன்ற கருத்துள்ள ஆட்சியாளனே அதிகம் சார இது தூண்டியது. 1936-ம் ஆண்டில் இச்சர்வாதிகாரிகள் இருவரும் '' ரோம்-பெர்லின் அச்சு '' என ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். முதலாவது உலகப் போரின்பின், அதன் பயனைப் பிரிட்டனும் பிரான்சும் ஐரோப்பாவில் வகித்து வந்த தலைமைப் பதவியை எதிர்ப்பதே அவ்வுடன்படிக்கையின் முக்கிய நோக்கமாயிருந்தது. தேவை ஏற்பட்டால், வேறொரு போர் தொடக்கி, அவர்களுடைய தலைமைப் பதவியை ஒழிக்க வேண்டும் எனக் கருதினர்கள். விரைவிலே, யப்பானும் கொம்முனிஸமை அழித்தொழிப்பதற்காக ஒரு இரகசிய ராணுவ உடன்படிக்கையிற் சேர்ந்து கொண்டது. இது 'கொமின்ரேண்-எதிர்ப்பு உடன்படிக்கை' எனப்பட்டது. இதுவே பின் '' பெர்லின்-ரோம்-ரோக்கியோ '' அச்சு வல்லரசு களாக மாறுவதாயிற்று.

ஸ்பானிய உள்நாட்டுப் போர். ஸ்பெயின் முதலாவது உலகப்போரில் நடுவுநிலைமை வகித்துக் கொண்டிருந்தது. 1920-ம் ஆண்டுக்குப்பின் 1930-ம் ஆண்டுவரையில் அந் நாட்டிலே குழப்பங்கள் அதிகமாகவிருந்தன. சில காலம் வரை அங்கே சர்வாதிகார ஆட்சி நிலைபெறுவதாயிற்று. ஆனால், 1931-ம் ஆண்டில் அந்நாட்டின் அரசனையிருந்த

அல்பொன்சோவைத் துரத்திவிட்டு, ஸ்பானியருட் தாராளக் கொள்கையுடையாரும் சோஷலிஸ்ட் வாதிகளுமாகச் சேர்ந்து ஒரு குடியரசினைத் தாபித்தார்கள். அந்தப் புதிய அரசாங்கம் பல திருத்தங்களை நாட்டிலே புகுத்தி ரோமன் கத்தோலிக்க திருச்சபையினதும் நிலபுல மிகுதியும் உடையோரதும் பலத்தினைத் தகர்ப்பதற்காக முயன்று கொண்டிருந்தது. 1933-ம் ஆண்டில் இந்த அரசாங்கம் வீழ்ச்சியடைந்தது. அடுத்த ஆண்டில் புரட்சிகரமான பல வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. அவையெல்லாம் தீவிர முயற்சியினால் அழித்தொழிக்கப் பட்டன. பல சோஷலிஸ்ட், தாராளக் கட்சித் தலைவர்களும் பிடிக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டனர். எங்ஙனமாயினும், 1936-ம் ஆண்டிலே நடைபெற்ற பொதுத் தேர்தலிலே அவர்கள் வெற்றி பெற்றார்கள். எனினும், அவர்களுடைய எதிரிகள் அவர்களுடைய வெற்றியின் பயனை அனுபவிக்க விடவில்லை. பிராங்கோ என்னும் பெயர் கொண்ட தளபதியின் தலைமையில், ஸ்பானிய மொரோக்கோவிலே, ஒரு கலகம் உண்டாகி ஸ்பெயினிலும் பரவியது. தரைப்படையினரும், திருச்சபையினரும் நாட்டுப்பகுதியினர் சிலரும் பிராங்கோவை ஆதரித்து நின்றனர். நகரத் தொழிலாளர்களும், கடற்படையினரும் கதலோனியா, நவார் ஆதியவிடங்களில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களும் குடியரசு அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்தார்கள். அந்த உள்நாட்டுக் கலகத்தில் இரு பகுதியினரும் மிகக் கொடிய போர்புரிந்துகொண்டு நின்றார்கள். அங்கே பல அக்கிரமங்களும் செய்யப்பட்டன. முதலில், பிராங்கோவின் படைகள் வெற்றி பெற்ற போதிலும் மாட்ரிட் என்னும் தலைநகரின் அரணால் தடுக்கப்பட்டன.

அந்த வேளையிலே பிறநாடுகளும் அக்கலகத்திலே தலையிடத் தொடங்கின. சோ. ஐ. நாடு, தன்னாலியன்றளவுக்கு யுத்ததளபாடங்களைக் குடியரசு அரசாங்கத்துக்கு அனுப்பியது. சோஷலிஸ்ட் கொள்கையினர் சேர்ந்த 'சர்வ தேசப்படை' ஒன்று மாட்ரிட் நகரைக் காக்கப் பெரும் போர் செய்தது. ஆனால், ஜெர்மனியும் இத்தாலியும் மிகுதியான படையினரையும் யுத்தக் கருவிகளையும் பிராங்கோவுக்கு அனுப்பி வைத்தார்

கள். ஸ்பானிய கலகம் ஒருவேளை ஐரோப்பிய போராக மாறுமோ என்ற பயம் எல்லோருடைய மனத்திலும் குடி கொண்டிருந்தது. ஆனால், பிரான்சும் பிரித்தானியாவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உதவியுடன் அக்கலகம் பரவாத படி தடுத்து விட்டன. பிறநாடுகள் அக்காலத்திலே தலையிடக் கூடாதென்று ஒரு பொது உடன்படிக்கை செய்துகொண்ட போதிலும், ஜெர்மனியும் இத்தாலியும் இரகசியமாகச் சகல உதவிகளையும் பிராங்கோவுக்குச் செய்துகொண்டே வந்தன. தாங்கள் போர்புரிவதற்காக அனுப்பிய தொண்டர் படைகளை திருப்பி யழைக்க முயலவுமில்லை. ஜெர்மானிய ஆகாய விமானங்கள் ஸ்பானிய நகரங்களின்மேற் குண்டு பொழிவ தற்கு உபயோகிக்கப்பட்டன. குடியரசு துறைமுகங்களுக்குப் பண்டங்களை ஏற்றிக்கொண்டு வந்த பிறநாட்டுக் கப்பல்களை யெல்லாம் இத்தாலிய நீர் மூழ்கிகள் கடலுள் ஆழ்த்தின. உண்மையில், பிறநாடுகள் அக்கலகத்திலே தலையிடக் கூடா தென்ற உடன்படிக்கையானது குடியரசுக்காரருக்கே தீங்காகி முடிந்தது. 1938-ம் ஆண்டின் இறுதியிலே இது வெளியா யிற்று. அதற்கிடையிலே பிராங்கோ பூரண வெற்றியடைந்து விட்டார். அந்த வெற்றியில் தாம் அனுப்பிய போர் வீரர் களும், மாலுமிகளும், ஆகாய விமானச்சாரதிகளும் எடுத்துக் கொண்ட பங்கு பெரிதென்று ஹிட்லரும் மூசொலீனியும் வெளியரங்கமாகப் புழுகத்தொடங்கி விட்டார்கள். அவர்கள் அந்தப் போரின் மூலமாகத் தாங்கள் புதிதாகச் செய்து கொண்ட டாங்கிகள், விமானங்கள், குண்டுகள் ஆதியவற்றை உபயோகித்தும் பார்த்துவிட்டார்கள். இவற்றையெல்லாம் விட, தாம் இயற்றப் போகின்ற போரிலே, புதிய ஸ்பானிய சர்வாதிகாரியைத் தமக்கு உறுதுணையாக நிற்கக்கூடிய ஒரு நண்பனைப் பெற்றுர்கள்.

ஹிட்லர் போருக்கு வழிகோலியமை: ஜெர்மனியில், ஹிட்லரும் நாஜியரும் எப்படிப் பூரண அதிகாரம் பெற்றுர்கள் என்று முன் அத்தியாயத்தில் படித்தோம். ஹிட்லர் தான் பிரதம மந்திரியாக வந்தவுடன் தனது "மெயின் காய்ம்ப்" என்ற நூலிலே கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறையிற்

கொண்டு வரத் தீர்மானித்தான். ஜெர்மனியின் படைப் பலத்தை அதிகரிப்பித்து, யுத்தக்கருவிகளையும் பெருக்குவித்து, இரகசியமாகத் தனது திட்டத்தினைச் சித்தி பெறுவிக்க முதலிற் கவனஞ் செலுத்தினன். அது, குடியரசின் தலைவராயிருந்த ஹிண்டன்பர்க்குக்கும் போரில் விருப்பம் மிகுந்த ராணுவ வகுப் பினர்க்கும் பெரிதும் மகிழ்ச்சி தருவதாகும் என அறிந்து கொண்டான். பொருளாதார மந்தத்தினுல் வேலையின்றி யிருந்த இலட்சக்கணக்கான மக்களுக்கும் அதன் மூலமாக வேலை கொடுக்கலாமெனக் கருதினன். கைத்தொழிற்றுறை யினர்க்கும் இது பெரிதும் பிடிப்பதாகும். ஜெர்மன் மக்களுக் கும் அவர்களுடைய தேசீய பற்றினை மிகுதிப் படுத்திப் பெருமை கொள்ளவும் இது ஓரளவுக்கு உதவுவதாயிற்று. அவன் தன் தளபதியான கோரிங் என்பவனுடைய உதவியுடன் அளவிறந்த விமானங்களை ஆக்குவித்துப் பெரியதொரு விமானப் படையினையும் அமைப்பித்தான். இவையாவும் சமாதான உடன்படிக்கைகளுக்கு விரோதமானவையாய் இருந்தபோதிலும், பிரித்தானியாவோ பிரான்சோ அவ்விஷயத் திலே தலையிடத் துணிவு கொள்ளவில்லை.

பின், ஜெர்மனியிலே வாழ்ந்து கொண்டிருந்த கொம் முனிஸ்ட் கட்சியினரையும் யூதர்களையும் தாக்க ஆரம்பித்தான். அதற்காக, தான் பிரத்தியேகமாக அமைத்துக்கொண்ட "எஸ். ஏ." என்று கூறப்படும் நாஜிப் படையினரை உதவியாகக் கொண்டு, மிகப் பாதகமான முறையில் அவர்களை வருத்திக் கலைத்தான். பலர் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானவர் களை அப்புறப்படுத்திக் கடூரமான மறியலில் வைத்தான். இந்தச் செயல்களை ஜெர்மானிய மக்களுட் பலர் அங்கீகரித்தார்கள். எவ்விதத்திலும், சிலர் தவிர, சிறுபான்மை கட்சியினர் எதிர் வார்த்தை பேசுவதற்குக்கூட அச்சங் கொண்டிருந்தார்கள். 1934-ஆம் ஆண்டிலே, நாஜிக் கட்சியில் விசுவாச மற்றவர் களெனக் காணப்பட்ட தலைவர்கள் சிலர் கொல்லப்பட்டார் கள். ஹிட்லரின் அத்தியந்த நண்பர்களுட்படப் பன்னூற்றுக் கணக்கானோர் தமது உயிரை இழந்தனர்.

ஜெர்மனியில் அப்போது விளங்கிக்கொண்டிருந்த குடி

யரசு ஸ்தாபனங்களே அழித்தொழிப்பதில் அடுத்தபடியாகக் கவனஞ் செலுத்தினன். அரசாங்கத்தின் அதிகாரம் முழுவதும் அதன் "தலைவர்" (Führer) ஒருவரிலேயே தங்கியிருந்தது. அந்த அதிகாரத்தை "எஸ். ஏ." படையினரும், தேர்ந்தெடுக்கப்பட்ட மல்லர்களைக்கொண்ட "எஸ். எஸ்." படையினரும் "கெஸ்ரபோ" என்னும் இரகசியப் பொலிஸ் படையினரும் பாதுகாத்து வந்தார்கள். புத்தகங்களும் பத்திரிகைகளும் மிகக் கடுமையாகத் தணிக்கை செய்யப்பட்டன. சில அடக்கு முறைச் சட்டங்களின் மூலமாக, சுதந்திரம் சிறிதுமின்றி அழிக்கப்பட்டது. இவைகளின் மூலமாக, சர்வாதிகாரிக்கு எவ்வகையான எதிர்ப்பும் செய்யமுடியாதபடி ஜெர்மன் மக்கள் அடக்கிவைக்கப்பட்டனர். இதனால், பலர் ஹிட்லருக்கு எதிர்ப்பு மிகுதியாக விருந்தது என்பது கருத்தல்ல. விரைவில், மக்கள் ஹிட்லரை தேசீய வீரனென்று போற்றி வழிபடத் தொடங்கிவிட்டார்கள். தனது அதிகாரத்தை நிலைப்பிப்பதற்காக, பாடசாலைகளிற் கற்பிப்பதற்கென நாஜிக் கல்வித் திட்டமொன்றினை வகுத்துக்கொண்டான். அதனுடைய நோக்கம் எதிர்காலத்திலே உதிக்கும் குழந்தைகள் "மெயின் காய்ம்ப்"பில் கூறப்பட்டவையன்ற வேறு எவையும் அரசியற் கொள்கைகளாக ஜெர்மனியில் வரக் கூடாது என்பதேயாகும். பாலர் பருவத்திலிருந்தே குழந்தைகளை "தலைவருக்கு" வணக்கஞ் செலுத்தும்படி கற்பித்ததுமன்றி போர்ப் பயிற்சி பெறவும் வைத்தார்கள். நாஜி அரசாங்கத்துக்கு எதிராகப்பெற்றோர் ஏதாவது கதைத்தாற்கூட, அறிவிக்கும்படி பயிற்றப்பட்டார்கள். ஜெர்மானிய மக்கள் "ஆளும் இனம்" என்றும், "ஆரியர்"கள் என்றும், "நோடிக்ஸ்" என்றும், அவர்கள் அகில உலகத்தையும் ஆட்சிபுரிவதற்காகவே பிறந்தவர்களென்றும், அவர்களுடைய வேலை பிறநாடுகளைக் கைப்பற்றி ஆட்சிபுரிவதுதான் என்றும் குழந்தைகளுக்குக் கற்பித்தார்கள். 1918-ஆம் ஆண்டின் பின் ஜெர்மனிக்கு ஏற்பட்ட இன்னல்கள் யாவற்றுக்கும் யூதர்களே காரணம் என்றும், முதலாவது உலக யுத்தத்தில் தமது நாட்டுக்கு வந்தெய்திய தோல்வி யூதர்களால் ஏற்பட்டதே

என்றும், அவர்கள் வெறுக்கப்படவேண்டியவர்கள் என்றும் குழந்தைகளுடைய மனதிற் பதிக்க முயன்றார்கள். இங்ஙன மாக ஜெர்மானிய மக்களுட் பெரும்பாலானோருடைய உதவி யைப் பெற்றதோடு வருங்காலக் குழந்தைகளையும் "சிறந்த நாஜிகள்" ஆக்கிக்கொள்ள வழிகோலினர்கள். ஜெர்மனியில் ஹிட்லரின் அதிகாரம் ஓங்கி வளர்வதாயிற்று. 1934-ஆம் ஆண்டில் தலைவர் ஹிண்டன்பர்க் இறந்தபின் ஹிட்லரே தலை மைப் பகுதியை வகித்தான். யூதர்கள் தமக்கு விதிக்கப்பட்ட கொடிய தண்டனைகளை யெல்லாம் தாங்கமுடியாமல் ஜெர்மனி யிலிருந்து வெளி யேறினர்கள். அங்ஙனமாக வெளியேறிய பல்லாயிரக்கணக்கான மக்களுள் பிரசித்திபெற்ற எழுத்தாளர் களும், இசைவல்லவர்களும், விஞ்ஞான சாத்திரிகளும் பலரா வர். கணித சாத்திரத்தில் அதிமேதாவியும் சிறந்த நூலாசிரி யர் எனப் பெயர் பெற்றவருமான ஐன்ஸ்ரைன் கூட ஜெர்ம னியை விட்டு நீங்க வேண்டியவரானர். ஜெர்மனியை விட்டு வெளியேறுமலிருந்த யூதர்கள் ஒருவருக்கேனும் மரியாதை யுள்ள எத்தொழிலையாவது செய்யும் உரிமை கொடுக் கப்படவில்லை. யூத இரத்தத்தொடர்பு சிறிதளவு கொண்டவர் கூட இக் கதியினையே அடைந்தவரானர்.

ஜெர்மனியிலே பூர்ணமான ஆதிக்கத்தைப் பெற்றுக் கொண்ட ஹிட்லர் வெளிநாட்டு விவகாரங்களிலே தலையிடத் தொடங்கினன். போர் தொடக்குவதற்கான ஆயத்தங்களையும் படிப்படியாகச் செய்யத் தொடங்கினன். 1933-ம் ஆண்டில் ஆயுத பரிகரண மகாநாட்டிலிருந்தும், சர்வதேச சங்கத்திலிருந் தும் விலகிக் கொண்டான். அல்லாமலும், வேர்சேல்ஸ் உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டிப் பரிகசித்தான். 1935-ம் ஆண்டில் கட்டாயப் போர் பயிற்சி செய்வித்தான், அந்த முயற்சியிலே தன்னுடைய படைத்தலைவர்களின் பூரணமான உதவியினைப் பெற்றான். உடன்படிக்கைக்கு அமைந்த அளவு தாம் வைத்துக்கொண் டிருந்த சிறிய ஜெர்மானிய படையினருக்குப் பின் அளிக்கப் பட்ட பயிற்சியினால், அவர்களே மேலும் பலர்க்குப் பயிற்சி யளித்து, திறம்பட பெரியதொரு படையினை அமைக்கலானர்

கள். பொருளாதாரத் துறையில் ஹிட்லர் மிகவும் கவனஞ் செலுத்தி, போர் ஏற்பட்டால், ஜெர்மனி தனக்கு வேண்டிய வற்றைத் தானே தனது நாட்டில் பெறுவதற்கான வசதிகளை அமைத்தான். வெளிநாட்டிலுள்ள ஜெர்மானிய பணத்துக்கு ஜெர்மனியிற் பெறவியலாதிருந்த றப்பர், பெற்ரோல் முதலிய பொருள்களையும் பிற மூலப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்தான். இவைகளைத் தயாரிப்பதற்கும், பிற நாடுகளிலிருந்து பொருள்களைப் பெறுவதற்கும் ஜெர்மானிய மக்கள் மிகுதியும் உழைக்க வேண்டியவர்களானார்கள். அவர் கள் தங்களுடைய வாழ்க்கைத்தரத்தினைக்கூட மிகவும்குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதாயிற்று. 'உணவிலும் சிறந் தது பீரங்கி' என்பது கோரிங்கின் கூற்று.

ஜெர்மனியை ஒரு தனியரசாகத் திகழச் செய்ய வேண்டு மென்று, ஹிட்லர் தன் நூலில் முதற்படியாகத் தெளிவாகக் கூறியிருந்தான். அதைச் சாதிப்பதற்காக, 1936-ம் ஆண்டிலே ஜெர்மன் மக்களாகப் பிறந்தோர் எல்லோரையும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த தேசப் பகுதிகளுடன் எவ்வகையா வது சேர்த்து ஜெர்மனியுடன் இணைக்க முயன்றான். அதற்காக எந்த முறையையும் கையாளுவதற்கு ஆயத்தமுள்ளவனாயிருந் தான். குறைந்த சாதியினர் முக்கியமாக ஐரோப்பாவின் மத்திய பகுதிகளிலும் கிழக்குப் பகுதிகளிலும் வாழ்ந்து கொண் டிருந்த சிலாவிய மக்களை மேற்கொண்டு, பெருகிவரும் ஜெர் மானிய மக்கள் வசிப்பதற்கு இடம் கொடுக்க விரும்பினான். ஜெர்மனி முன் இழந்த குடியேற்ற நாடுகளுடன் இயலுமாயின் கூடுதலான நாடுகளையும் பெறுதல் வேண்டுமென்ற ஆசை அவனுடைய மனத்திற் குடிகொண்டிருப்பதாயிற்று. ஐரோப் பிய இராஜதந்திரிகள் அப்போது ஹிட்லரின் ஆசைகளுக்கு போதுமான முக்கியத்துவம் கொடுத்துப் பொருட்படுத்தவில்லை. உலகம் முழுவதையுமே அடிப்படுத்தி ஆளவேண்டுமென்ற ஆசை இத்துடன் கூடியிருந்ததை அவர்கள் அறிந்திலர்.

முதற்படியாக, றைன் நதிப் பிரதேசத்தில் தனது புதிய படைகளைக் கொண்டு சென்று நிறுத்தி அதைத் திருப்பிப் பிடித்துக்கொண்டான். அங்ஙனம் ஹிட்லர் செய்யத் துணிந்த

போது அவனுடைய படைத்தலைவர்கள் இணங்கவில்லை. பிரான்சும் பிரிட்டனும் அந்தச் செயலினைக் கடுமையாக எதிர்ப்பார்க்களென்று எல்லோரும் கருதியிருந்தார்கள். ஆயினும், ஹிட்லரின் ஆக்கிரமிப்பினைக் கண்டும் அவ்விரு தேசங்களும் வாளா விருந்தன. இந்த வெற்றியானது ஹிட்லருக்கு மனத்திடனைப் பெரிதும் கொடுப்பதாயிற்று. அல்லாமலும், அவ்விரு நாட்டு இராஜதந்திரிகளையும் எங்ஙனமாகச் சமாளிப்பது என்றும் கண்டு கொண்டான். சமாதான உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளலாமென்றும், தம்முடைய நாட்டவர்களுக்கு எத்தேசத்தின் மீதும் விரோதமான எண்ணமோ கொள்கையோ கிடையாது என்றும் கூறி ஏமாற்றிக்கொண்டுவந்தான். ரைன் நதிப் பிரதேசத்தினை "சீக்பிரீட்" அறணினை அமைத்துப் பலமுறுத்தினன். மேற்குப் பகுதியிலிருந்து எவ்விதமான தாக்குதலும் ஏற்படாமல் இதைச் செய்தான்.

அடுத்தபடியாக, ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் சேர்த்து இணைத்துகொள்வதற்கான நடபடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தான். 1918-ஆம் ஆண்டுக்குப்பின் ஆஸ்திரியாவின் சரித்திரமே மிகவும் குழப்பம் வாய்ந்ததாயிருந்தது. 1934-ஆம் ஆண்டிலே, ஆஸ்திரியாவின் தலைவராயிருந்த டொல்பஸ் வீயன்னுவிலிருந்த சோஷலிஸ்ட் கட்சியினருக் கெதிராகத் தன் படையினை உபயோகித்துச் சில நடபடிக்கைகளை எடுத்துக் கொண்டதுமன்றி, ஒருவிதமான சர்வாதிகார ஆட்சியினையும் தாபித்தான். அந்த ஆட்சியோ சோஷலிஸ்ட் கட்சியினையும் ஆஸ்திரிய நாஜிகளையும் தாக்குதற்காக ஏற்பட்டதாகும். தனது ஆட்சிக்குள் வந்தமையாத ஜெர்மன் நாடுகளில் நாஜிக் கட்சிகளை வளர்ப்பதற்காக ஹிட்லர் அமைத்த திட்டத்துள் இதுவுமொன்றுகும். 1936-ம் ஆண்டிலே டொல்பஸ், ஹிட்லரின் இரகசியத் தூண்டுதலினற் கொல்லப்பட்டான். அப்போது தான் அந்தக் கொலைக்குக் காரணனல்ல என்று ஹிட்லர் மறுத்து விட்டான். அடுத்தபடியாகத் தலைவனுய் வந்த சூஸ்நிக் என்பானுக்கு முதலில் மூசொலீனி உதவி யளித்துக் கொண்டு வந்தான். அப்போது, இரண்டு ஆண்டுகள் வரையில் ஆஸ்திரிய நாஜிகளை அடக்கியாளுதல் இயலுவதாயிற்று.

மூசொலீனி தான் கொடுத்த உதவியினை நிறுத்தி விட்டு, ஹிட்ல ருடன் நட்புப்பூண்டு கொண்டதும், சூஸ்நிக்குக்கு உதவியில்லா மற் போய்விட்டது. 1938-ம் ஆண்டில், ஹிட்லர் சூஸ்நிக்கை அழைப்பித்து அவன் தன் பதவியை இராஜிநாமாச் செய்யும் வரையும் பயமுறுத்தினன். அதன் பின், ஹிட்லர் தனது படை களையெல்லாம் ஆஸ்திரியாவுக்குக் கொண்டு சென்று குவித் தான். ஜெர்மனியிலிருந்து பிரித்துக் கொள்ளமுடியாத ஒரு பகுதியே ஆஸ்திரியா என்று பிரகடனஞ் செய்தான்.

இப்போது, தனக்கு நாடு பிடிக்கும் எண்ணம் சிறிது மில்லை யென்று கூறினன். ஆயின், ஐரோப்பாவில் ஜெர்மா னிய மக்கள் வசித்துக்கொண்டிருந்த இடங்கள் வேறும் இரண்டு இருந்தன. அவ்விடங்களில் இருந்தவர்களைப் பிறநாட்டினரே அரசாண்டு கொண்டிருந்தார்கள். செக்கோசிலவாக்கியாவின் வடமேற்குப் பகுதியிலே சுடேற்றன் பிரதேசத்தில் வசித்துக் கொண்டிருந்தவர்களின் தொகையறக்குறைய முப்பதுஇலட்சம் பேருக்கு மேற்படவிருக்கும். மற்றையது, டான்சிக் எனப்பட்ட தாய் ஜெர்மன் மக்கள் வசித்துக்கொண்டிருந்த போல்டிக் துறை முகத்துக்குப் போகும் வழியிலுள்ள பிரதேசமாகும். அது சர்வ தேச சங்கத்தினராலே பரிபாலிக்கப்பட்டு வருவதாயிற்று (அத்தியாயம் : 23 பார்க்க.)

இவ்விடங்களிலெல்லாம் ஹிட்லர் ஒரே படித்தான கொள் கையினையே அனுஷ்டித்துக் கொண்டுவந்தான். நாஜீக் கட்சி களை தாபித்து நீதியீனம் மிகுதியும் நிலவத்தக்கதாய்ப் பல அட் டூழியங்களைச் செய்து கொண்டிருந்தான். இந்தப் பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருந்த ஜெர்மானிய மக்கள் மிகுதியும் துன் புறுத்தப்படுகின்ருர்கள் என்று ஜெர்மானிய பத்திரிகைகள் தீவிரமாகப் பிரசாரஞ் செய்யத் தொடங்கின.

செக்கோசிலவாக்கியா, பிரான்சுடன் கூடி, படை வலியும் மிகுந்ததாய் ஜெர்மனிக்கெதிராய் கேந்திர நிலையமாயமையக் கூடியதொரு நாடாக விருந்தது. ஆஸ்திரியா கைப்பற்றப் பட்டவுடன் அந்நாடு மூன்று திசையிலும் வளைக்கப்பட்டதாய் வலிமை குன்றியதாயிற்று. எனவே, நேரடியான தாக்குதல் ஒரு போரினைத் தொடக்குவதாக முடியும் என்று எதிர்ப்பார்க்

கப்பட்டது. இதைத் தடுப்பதற்காக, பிரிட்டிஷ் பிரதம மந்திரி யான நெவீல் சேம்பர்லேன், 1938-ம் ஆண்டிலே செப்ரெம்பர் மாதத்தில் ஹிட்லரைச் சந்தித்து உரையாடுவதற்காகப் பறந்து சென்ருர். அவர்கள், மியூனிச் என்ற இடத்திலே சந்தித்து, பிரான்சின் உடன்பாட்டுடன் ஹிட்லரின் எண்ணத்துக்கு இயைந்து விட்டுக்கொடுத்தார்கள். இனிமேல் நாடு பிடிக்கும் எண்ணமே தனக்குக் கிடையாது என்று வாக்குறுதி கூறிய ஹிட்லரை அவர்கள் நம்பி, சுடேற்றன் பிரதேசத்தை ஜெர்மனி யோடு இணைக்க அவர்களும் உடன்பட்டனர். ஆயின் ஹிட்ல ருக்குத் தனது வாக்குறுதியை நிறைவேற்றும் கருத்துத் தானும் இருந்ததில்லை. இதனல், செக்கோசிலவாக்கியா தனக்கு எல்லைப் புறப் பாதுகாவலாக விருந்த ஒரு நாட்டினை இழந்து வலியிழந்து போவதாயிற்று. மியூனிச் உடன்படிக்கை ஜெர்மனி, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி ஆதியான நாடுகளுக்கிடையிற் செய்யப் பட்டது. இந்த மகாநாட்டிலே செக்கோசிலவாக்கியா சேர்ந்து கொள்ளவில்லை. பிரான்சும் செக்கோசிலவாக்கியாவுக்கு உதவி யளிப்பதானல் தானும் படையனுப்பி உதவிபுரிவதாக வாக் களித்த சோ. ஐ. நாட்டுக்குக்கூட அழைப்பு அனுப்பப்படவில்லை. அங்ஙனம் செய்யாமல் விட்டது பிரித்தானிய இராஜதந்திரிகளும் பிரான்சிய இராஜதந்திரிகளும் செய்த பெரிய தவருகும். போலாந்தும் ஹங்கரியும் சில இடப்பகுதிகளைப் பெற்றுக் கொண்டன என்பது கருத்திலிருத்தப்பட வேண்டியதொரு விஷயமாகும்.

பிரித்தானியாவும் பிரான்சும் கைக்கொண்டிருந்த கொள் கையானது 'குளிர்ச்சி' போடும் வேலைதான் என்று கருதப்பட் டது; ஹிட்லர், தான் விரும்பியவற்றுட் சிலவற்றைப் பெற்றுக் கொண்டால், திருப்தியடைந்து விடுவான் என்று அவர்கள் கருதியிருத்தல் வேண்டும்; அல்லாவிடில், இப்படியாகக் 'குளிர்ச்சி' போட்டுக் கொண்டு தாம் போருக்கு ஆயத்தஞ் செய்து கொள்ளலாமென்று நினைத்திருக்கவேண்டும். இந்த எண்ணங்களெல்லாம், 1939-ம் ஆண்டிலே, தகர்ந்து போயின என்று தெளிவாயிற்று. மார்ச்சு மாதத்திலே ஹிட்லர், எஞ்சி யிருந்த செக்கோசிலவாக்கியாப் பகுதியுள் தனது படைகளை

அணிவகுத்துச் சென்று நிறுத்தி, அதையும் கைப்புற்றிக் கொண்டான். நீதிநெறி யொன்றையும் நோக்காது, செய்யப்பட்ட வெறிகொண்ட செயல் என்று அந்த ஆக்கிரமிப்பைச் சொல்லலாம். இதைப் பின்பற்றி, அச்சுவல்லரசுகளில் கூட்டாளியாகிய இத்தாலி, தானும் பால்க்கன் தேசத்துக்குரிய அல்பேனியாவுக்குள் படையெடுத்துச்சென்று அதனை அடிப்படுத்திக்கொண்டது.

பிரித்தானிய மக்களும் பிராஞ்சிய மக்களும் இனி எப்படியும் யுத்தமொன்று ஏற்படத்தான் போகின்றது என்று கண்டு கொண்டார்கள். இரு நாட்டினரும் தமது படைகளைப் பெருக்கிப் பயிற்சியளிப்பதில் முக்கிய கவனஞ் செலுத்தினார்கள். தமக்கு வேண்டிய போர்க் கருவிகளை மிகத் துரிதமாக ஆக்கிக்கொண்டார்கள். பிரித்தானியாவில் கட்டாய ராணுவச் சேவையும் ஏற்படுவதாயிற்று. அச்சுவல்லரசுகள் தம்மைத் தாக்குமோ வென்று பயந்து கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்குத் துணை செய்வதாகப் பிரித்தானியா வாக்களிப்பதாயிற்று. பிரித்தானியாவும் துருக்கியும் தமக்குள் திட்டமான தொரு உடன்படிக்கையும் செய்து கொண்டன. ஐ. சோ. சோ. கு. நாடுகளுடன் பூண்டு கொள்ளும் ராணுவ ஏற்பாடு ஒன்றே எல்லாவற்றிலும் சிறந்த பாதுகாப்பாயிருந்திருக்கும். ஆயின் இது செய்யப்படவில்லை.

அடுத்தபடியாக, ஹிட்லர் போலாந்தைத் தாக்கப் போகிறான் என்பது வெளியாயிற்று. செக்கோசிலவாக்கியாவைக் கைப்பற்றியபோது தான் கையாண்ட தந்திரங்களையே ஹிட்லர் இப்போதும் கையாளுவதற்கு முயன்றான். டான்சிக்கிலுள்ள நாஜீக் கட்சியினரை எழுச்சிப் படுத்திவிட்டான்; ஜெர்மானிய பத்திரிகைகளும் ரேடியோவும் துணையற்றவரான ஜெர்மானிய மக்களுக்குப் போலாந்தில் மிகுதியான கொடுமை செய்யப்படுகின்றதெனப் பிரசாரஞ் செய்து கொண்டிருந்தன. கடைசியாக, டான்சிக்கினை ஜெர்மனியுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், அதற்குப் போவதற்குப் போலாந்துக்கு ஊடாய் ஒரு பாதை வேண்டும் என்றும் ஹிட்லர் வேண்டி நின்றான்.

இந்த முறை, எங்ஙனமோ, மேலைத்தேய வல்லரசுகள்

ஏமாற்றமடையவில்லை. அவை, சோ. ஐ. நாடுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தொடங்கி, அந்த வலிமிகுந்த நாட்டின் உதவியையும் பெற்றுக்கொள்ளுவதற்காக மிக முயன்று கொண்டிருந்தன. எனினும், அவை விரும்பிக்கொண்டபடி காரியம் இலகுவில் முற்றுப்பெறவில்லை: முழு ஏமாற்றமே அடைந்தன. செக்கோசிலவாக்கியாவின் விஷயத்தில் தன்னைச் சிறிதேனும் மதியாமல் நடந்துகொண்டது ஸ்டாலினுக்கு மனத்தை விட்டகலவில்லை. போலாந்து மக்கள் ஹிட்லர்மீது அவநம்பிக்கைகொண்டதுபோல் தன்னிடத்தும் ஐயுறவு வைத் திருந்ததும் அவர்கள் கொண்டிருந்த நிலையும் ஸ்டாலினுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஏனெனில், போலிஷ்ய சாகியத்தவ ரென்று கூறுவதிலும் பார்க்க ருஷ்ய சாகியத்தவரென்று கூறப் பட வேண்டிய எத்தனையோ லட்சம் ருமேனிய மக்கள் புதிய போலாந்திலே சேர்க்கப்பட்டிருந்தார்கள். அதுவுமல்லாமல், அவனுடைய படைகள் யுத்தத்துக்குப் போதிய ஆயத்தத்துட னிருந்தன வென்றும் சொல்ல முடியாது. எப்போதாவது ஒரு காலத்தில் ஜெர்மனி ருஷ்யாவைத் தாக்கியே தீரும் என (" மெயின் காய்ம்பு " தெளிவாகக் கூறுகின்றது) ஸ்டாலின் நம்பியிருந்தான் என்று தோற்றுகின்றது. அப்படியாகத் தாக் கப்படும் காலத்தை, மேலைத்தேய வல்லரசுகளுடன் போர் செய்து ஜெர்மனி வலியிழக்குமளவும், தள்ளிப் போட்டுக் கொள்ளவேண்டுமென ஸ்டாலின் கருதினான். எனவே, 1939-ம் ஆண்டில் ஸ்டாலின் ஹிட்லருடன் ஒருவரை ஒருவர் ஆக்கிரமிப்பதில்லை என்று உடன்படிக்கை செய்துகொண்ட போது எல்லா வல்லரசுகளுக்கும் அதிசயமும் பயமும் ஏற்படுவ தாயிற்று. ஐ. சோ. சோ. கு. நாடுகளுக்கெதிராக ஹிட்லருடன் கொமின்ரேண் எதிர்ப்பு உடன்படிக்கை செய்துகொண்டு ஜெர்மனியுடன் நட்புப் பூண்டுகொண்டிருந்தவர்க்கும் இது திகிலை விளைப்பதாயிற்று. அதைப்பற்றியெல்லாம் அந்நாடுகள் சிந்திப்பதற்கே நேரம் வாய்க்கவில்லை. செப்ரெம்பர் மாதம் முதலாந் திகதி ஹிட்லரின் படைகள் போலாந்தின்மீது படை யெடுத்தன. இரண்டு நாட்களின் பின் பிரித்தானியாவும் பிரான்சும் சேர்ந்து ஜெர்மனியுடன் போர் தொடுத்தன.

உதவிக் குறிப்புக்கள்.

தேசிய •வெறியர்களின் தலைவர்களால் உலகம் திரும் பவும் போரில் அமிழ்த்தப் பட்டதும், 1919-ல் அமைக்கப்பட்ட சமாதான உடன்படிக்கை தகர்ந்ததும், சர்வதேச சங்கம் பயனற்றுப் போயதும் இந்த அத்தியாயத்திற் கூறப்பட்டிருக் கிறது. 19-ம் நூற்றாண்டில் சுதந்திரத்துடன் ஒன்று பட்டு நின்ற இத் தேசிய உணர்ச்சி, அதற்கு எதிராகத் திரும்பி, ஆக் கிரமிப்பு நாட்டு மக்களின் சுதந்திரத்தை முதலில் நசுக்கி, பின் மற்ற நாடுகளின் சுதந்திரத்தையும் நசுக்கப் பார்த்தது. அத் தலைவர்கள் உண்மையையும் தர்மத்தையும் கவனியாமல் இயற் றிய கொடுமைகளும் முக்கியமாக ஹிட்லரின் வரலாறும் கூறப் பட்டன. தேசீயவாதம் ஒழிக்கப்பட்டாலன்றி அத்திலாந்திக் சாசனத்திலே கூறப்பட்ட நால்வகைச் சுதந்திரமும்—பேச்சு, வழிபாடு, வறுமையின்மை, பயமின்மை—பெறுமாறில்லை. தன்னலமின்மையும் சர்வதேச ஒத்துழைப்பும் நிலவினாலல்லது உலகத்தில் என்றும் சமாதானம் நிலைத்திராது.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1931. யப்பான் மஞ்சூரியாவைத் தாக்கியது.

1933. ஹிட்லர் 'மூன்றாவது றைஸி'னைத் தாபித்தது.

1935. இத்தாலி அபிசீனியாவைத் தாக்கியது.

1936-9. ஸ்பானிய உள்நாட்டுக் கலகம்.

1936. றைன்நதிப் பிரதேசத்திற் நிரும்பவும் போர் ஆயத் தங்கள்.

1937. யப்பான் சீனாவைத் தாக்கியது.

1938. ஆஸ்திரியாவும் சுடேற்றன் பிர்தேசமும் பலவந்த மாக ஜெர்மனியுடன் சேர்க்கப்பட்டது.

1939. செக்கோசிலவாக்கியா ஜெர்மனியாற் கைப்பற்றப் பட்டது. ஜெர்மனியால் போலாந்து தாக்கப் பட்டது. இரண்டாவது உலகப் போரின் ஆரம்பம்.

27. இரண்டாவது உலகப் போரும் அதன்பின் நிகழ்ந்தவையும்

இரண்டாவது உலகப் போர் ஆறு வருடங்களாக நடை பெற்றது. ஏறக்குறையப் பூமியின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவியுள்ளது. வெகு சில நாடுகள் மட்டும் நடு நிலையாய் ஒரு பக்கமும் சேராமல் இருக்கக் கூடியதாயிருந்தது—ஐரோப்பா வில், சுவிற்சலாந்து, சுவீடின், ஸ்பெயின், போர்த்துகல், ஐறிஷ்ய குடியரசு நாடு ஆகியவை. இந்த மாபெரும் உலக அழிவையும் அதனுல் உறும் பயனையும் பற்றி ஒரு சிறு அத்தி யாயத்தில் பொதுவாக எடுத்துக்காட்ட முடியுமே தவிர, விரிவாக எடுத்தாள முடியாது.

போலாந்து வெகு விரைவில் பிடிபட்டது. அந்தப் படை யெடுப்பு பின் வரப்போகும் போர் முறைகளுக்கெல்லாம் மாதிரி யாயிருந்தது. அந்நாட்டின் தலைநகர் உவார்சோ, முதலாவ தாக ஆகாயத்தினின்றும் குண்டால் தாக்கப்பட்டு, பெரும் பாலும் அழிக்கப்பட்டது. அந்த நேரமே ஆயுதம் தாங்கிய வாகனப் படைகள் வெகு விரைவாக நாடெங்கும் சென்று, இழக்கமான போர்க்கருவிகளையுடைய போலாந்திய சேனைகளை அடக்கி வென்றன. சோவியெற் ஐக்கிய நாடு தனது படை களை அனுப்பி போலாந்தின் கீழ்பாகங்களைக் கைப்பற்றியது. போர் தொடங்கியவுடனே தன் தலைநகரங்கள் குண்டுகளால் ஆகாயத்திலிருந்து தாக்கப்படும் என்று பிரித்தானியா எதிர் பார்த்திருந்தது. ஆனல் அவ்வாறு நிகழவில்லை. 1939—40-ன் மாரிகாலத்தில் தரையிலே நிகழ்ந்த வேறு போர் மிகக் குறைவு. பிரித்தானியப் படை கால்வாயைக் கடந்து, பிரான்சிய படையின் இடப்பக்கத்தில் போரணி வகுத்து நின்றது. எதிரி களால் தகர்க்க முடியாதென அரண் செய்யப்பட்ட மகினோ மதில் வரிசையின் பாதுகாப்பில் பிரான்சிய சேனை நின்றது.

தென்னப்பிரிக்காவில் அற்ப மறுப்பிருந்த போதிலும், பிரித்தானிய பொதுநல நாடுகள் தம் தாய் நாட்டுக்காகப் போர் புரிய ஒருமனமாய் முன்வந்தன. தென் அயர்லாந்து மாத்திரம் ஒரு பக்கமும் சேரவில்லை. காத்திராப் பிரகாரம்

'அச்சரசு'க் கட்சியில் உள்ள இத்தாலியோ அல்லது யப்பானோ ஆரம்பத்தில் போர் தொடுக்கவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகள் தாம் இந்தப் போரில் கட்சிப் பற்றற்றவை யெனக் கூறின. ஆரம்பத்தில். ஐ. சோ. சோ. கு. நா. ஒரு பக்கமும் சேரவில்லை. ஆனால் பின்லாந்துடன் போர் கிளப்பி, அச்சிறு நாட்டுக் கெதிராகத் தாமே போர் தூண்டிப் படை யெடுத்து, பின்னர் பலாத்காரமாகத் தமக்கு நாடும் சலிகைகளுங் கொடுக்கும்படி செய்தன.

பிரான்சு தோல்வியுறல்: 1940-ன் இளவேனிற் காலத்தில் ஜெர்மானியர் மேற்றிசையில் மிகக் கடும்போர் தொடுக்கத் தீர்மானித்தார்கள். நோர்வே, டென்மார்க், ஒல்லாந்து, பெல்ஜியம், லக்ஸம்பேர்க் ஆகிய நடுநிலை நாடுகளில் போர் தூண்டி, அவற்றைத் தோற்கடித்து வென்றார்கள். பிரித்தானியர் நோர்வேயுக்கு உதவியளிக்க முயன்று, தங்கள் படைகளை அந்நாட்டில் இறக்கியும், துரத்தப்பட்டனர். போர் நடத்திய முறையை இட்டு பிரித்தானியப் பொது மக்கள் தம்நாட்டு மந்திரிகள் மீது மிகவுஞ் சினங் கொண்டனர். அதன் பயனாக பிரதமர் சேம்பர்லேனினுடைய இடத்தில் உவின்ஸ்டன் சேர்ச்சில் பிரதம மந்திரியாக வரும்படி அழைக்கப்பட்டார். கொன்சேர்வேட்டிவ், லேபர், லிபெறல் ஆகிய முக்கட்சிகளிலுமிருந்து கூட்டப்பட்ட ஒரு பொது மந்திரி சபைக்கு அவர் தலை தாங்கினார். அவரின் உயிர் ஊட்டும் தலைமையும் விசேட திறமையும் வெற்றிக்குக் காலாயின. அந்த நாடுகள் மீது தரையாலும், ஆகாயத்தாலும் ஜெர்மானியர் தாக்கிய போர் மிக வெற்றிகரமாய் முடிந்தது. கனகாலமாகக் கடுஞ் சூட்சியுடன் ஜெர்மானியரால் வகுக்கப்பட்ட யுத்த முறைகளும் அடுக்கணிகளும் பிரித்தானிய, பிரான்சிய ஆயத்தங்களிலும் பார்க்க மிகச் சிறந்தவை என்பது விரைவில் தெளிவாயிற்று. அப்படியாயின், நீதியீனமாக அவர்கள் தாக்கிய அச்சிறிய நாடுகளின் போர்அணிகளிலும் பார்க்க எவ்வளவு மேம்பட்டவை என்பது சொல்லவே தேவையில்லை. வைகாசியில் ஜெர்மானிய சேனைகள் பிரான்சிய அரண் வரிசையைத் தகர்த்து, வெகு வேகமாயும் சூழ்ச்சியாயும் போரை நடத்தி, நேச நாடுகளின் படைகளைச் சிதற

டித்து பிரான்சைச் சரணடையச் செய்தன. பிரித்தானிய சேனைகள் தமது ஆயுத அடுக்கணிகள் ஏறக்குறைய எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அகப்பட்ட வள்ளங்களில் ஒருவாறு தப்பியோடிக் கால்வாயைக் கடந்தன. அவை உயிர் தப்பியதே பிரித்தானியக் கடல், ஆகாய இரு படைகளின் திறமையால். இந்த நிலையில் இத்தாலியும் போர் தொடுத்தது. அதாவது, பொதுநல நாடுகள் தவிர வேறுதவியின்றி, இவ்விரண்டு 'அச்சு'வல்லரசுகளுடன் பிரித்தானியா தனித்து நின்று போராட நேர்ந்தது. ஆறு வாரங்கள் மாத்திரம் சமர் புரிந்து பிரான்சின் பெரும்பாகத்தை ஜெர்மானியர் கைப்பற்றினர். வென்றவர் மூன்றில் ஒரு பாகத்தை மாத்திரம் வயதில் முதிர்ந்த பிரான்சிய தளகர்த்தனுகிய பேற்றன் என்பவனே ஆள விட்டனர். அவன் இயன்ற அளவு ஜெர்மானியருடன் சமாதான ஏற்பாடுகள் செய்து கொண்டான்.

பொதுநல நாடுகள் தனித்து அச்சரசுகளை எதிர்த்தது: பிரித்தானியாவுந் தாக்கப்பட்டுத் தோல்வியுறக் காலமாகி விட்டதெனத் தோன்றினது. ஆனலும் ஒடுங்கிய ஆங்கிலேயக் கால்வாயைக் கடந்தாலொழிய அது முடியப்போவதில்லை. பிரித்தானியக் கப்பல்களுக்கு நீர் மூழ்கிகளாலும் கடற் கண்ணிகளாலும் ஜெர்மானியர் பெரும்சேதம் விளைவித்து வந்த போதிலும், கடற் போரில் ஜெர்மானியரிலும் பார்க்க பிரித்தானியர் வலிமை வாய்ந்தவரா யிருந்தனர். எனினும் ஆகாயத்தில் முதன்மை அடைந்தால் கடற்படைப் பலத்தில் உள்ள குறையை நிவிர்த்தியாக்கலாம் என்று ஜெர்மானியர் எண்ணினர்கள். ஆகவே, ஆடி மாதத்தில் ஜெர்மானிய ஆகாயப்படை ('லுப்ற் உவாபே' எனப் பெயர் கொண்டது) பிரித்தானியத் துறைமுகங்களையும் ஆகாயவிமான நிலையங்களையும் தாக்கத் தொடங்கிற்று. ஆனல் பிரித்தானிய மகுட ஆகாயப்படை தனது 'கறிக்கேன்' 'ஸ்பிற்பைர்' ஆகிய இருவகைப் போர் விமானங்களாலும் எதிர்த்து உன்னதமாகப் போர் புரிந்தது. இதைப் 'பிரித்தானியப் போர்' எனக் கூறுவர்—உண்மையில்

இது பிரித்தானியாவைப் பிடிக்க நிகழ்ந்த போர். இப்போரில் லுப்ற் உவாபே படை அடைந்த பேரழிவின் காரணமாக, பிரித்தானியாவைத் தாக்க என்று தரைப்படை யெல்லாம் ஆயத்த மாக்கி யிருந்தும், ஹிட்லர் துணியவில்லை. இது பிரித்தானிய ருக்குப் பெரும் வெற்றி. அடுக்க, ஜெர்மானியர் இரவிற் குண்டு வீசும் விமானங்களை அனுப்பி நகரங்கள், துறைமுகங்கள், பட்டினங்கள் மாத்திரமன்றி கிராமங்களையும் குண்டுகளால் தாக்கி அச்சம் தரும் அழிவை உண்டாக்கினர். பிரித்தானிய குண்டு விமானங்கள் திருப்பிக் கூடியவரை — அது கொஞ்ச மல்ல — ஜெர்மானிய தொழிலாலைகளையும் ராணுவ நிலையங் களையும் தாக்கி உடைத்தன.

இப்போது வட ஆப்பிரிக்காவிலும் கிழக்காப்பிரிக்காவிலும் இத்தாலிய சேனையின் தாக்குதலை பிரித்தானியா சமாளிக்க வேண்டியதாயிற்று. இத்தாலி நல்ல கடற்படை, ஆகாயப் படை மாத்திரமின்றி, நல்ல தரைப்படையு முடையது. அவை எகிப்தையுங் கெனியாவையுந் தாக்கத் தொடங்கின. தம் நாட்டைக் காக்கவே பிரித்தானியருக்கு ராணுவ பலம் போதாம லிருந்த போதிலும், பிரித்தானியத் துருப்புகளை ஆப்பிரிக்கா வுக்கு அனுப்ப உவின்ஸ்டன் சேர்ச்சில் தீர்மானித்தார். பிரித் தானியாவுடைய மத்தித்தரைக் கடற்படையைவெல்ல இத் தாலியருக்கு முடியவில்லை. ஆஸ்திரேலிய, நியூசீலாந்திய, தென்னப்பிரிக்க, இந்திய சேனைகள் உதவியுடன் பிரித்தானியச் சேனைகள் இத்தாலியச் சேனைகளை மீண்டும்மீண்டும் தோற்க டித்தன. அபிசீனியாவினின்றும் வெளியே துரத்தி, எகிப்தின் மேற்கெல்லைக்கப்பால் வெகுதூரம் தள்ளிக் கொண்டுபோய் விட்டன.

ஆனால், 1941-ன் தொடக்கத்தில் போல்க்கன் குடாநாட் டுத் தேசங்களை யெல்லாம் வெருட்டியோ, தாக்கியோ, தங்கள் ஆதிக்கத்தின் கீழ் ஜெர்மானியர் அடக்கிக் கொண்டனர். கொன்ஸ்தாந்திநோப்பிளைச் சுற்றித் துருக்கிக்கிருந்த அற்ப நிலப்பகுதி யொன்றை மாத்திரம் பிடிக்கவில்லை. கிட்டத்தட்ட யுத்தம் முடியும் வரை துருக்கி ஒரு பக்கமும் சாராமல் நடுநிலை

காத்தது. இத்தாலியர் அனுப்பிய ஒரு சேனையை இதற்கு முன் எதிர்த்து வென்ற கிரேக்க தேசத்திற்குத் துணைபுரிய பிரித்தானியர் ஒரு சேனையை அனுப்பினர். ஆனால் ஜெர்மானியர் தென்கிழக்குப் பக்கமாகப் படையெடுக்க, அந்தச்சேனை திரும்பி வர நேரிட்டது. ஜெர்மானியர் ஆகாய மார்க்கமாய்த் தங்கள் துருப்புகளை அனுப்பி கிரேக்கர் ஆண்டு வந்த கிறீற் தீவையும் பிடித்தனர். வடக்காப்பிரிக்காவில் உள்ள இத்தாலியருக்கு உதவி கொடுக்க ஒரு படையை இப்போது அவர்கள் அனுப்பக் கூடியதாயிருந்தது. ஆகவே, இத்தாலியரை முன்பு துரத்தத் தொடங்கிய எகிப்திய எல்லைக்கு மீண்டும் பிரித்தானிய சேனை பின்வாங்க வேண்டி வந்தது.

1941-ன் மத்தியில், ஒன்றேமுக்கால் வருடப் போராட்டத்தின் பின்னர், ஐரோப்பிய அச்சரசுகள்—ஜெர்மனி மிகப் பெரும் பங்காளியாக நிலவ—ஐரோப்பாக் கண்டம் முழுவதையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டன. தப்பிய நாடுகளாக சுவீடின், சுவிற்சலாந்து, ஐபீரியக் குடாநாடு, ஐ. சோ. சோ. கு. நா. ஆகியவை. இவைகளில் ஸ்பெயின் அச்சு நாடுகளுடன் பெரும் நட்பு வாய்ந்த அரசு; ஐ. சோ. சோ. கு. நா. ஜெர்மனியுடன் "அனுக்கிரமிப்பு ஒப்பந்தம்" எழுதியுள்ளவை. இவ்வேளையில் அச்சரசுகளை இறுதியில் அறவே தோல்வியுற விளைவித்த இரு விசேஷ நிகழ்ச்சிகளில் முதலாவது நிகழ்ச்சி நடைபெற்றது—அதாவது ஹிட்லர் தான் பொருந்திய ஒப்பந்தத்தை மீறி ஐ. சோ. சோ. கு. நாடுகள் மீது போர் தொடுக்கத் தீர்மானித்தான்.

ஐ. சோ. சோ. கு. நாடுகளும் அ. ஐ. நாடுகளும் போரிற் கலந்தது. ஒரு வருட காலமாகக் கிட்டத்தட்டத் தனித்துநின்று போர்புரியும் பிரித்தானியாவுக்கு இது ஒரு வலிய நாட்டின் உதவியை அளித்தது. ஆயுதத் திறமை வாய்ந்த ஜெர்மானிய படை சோவியெற் ஐக்கிய நாட்டுக்குள் வெகு தூரம் துளைத்து, மொஸ்கோ, லெனின்கிருட் நகரங்களை அடைந்ததாயினும் அவற்றைப் பிடிக்க முடியவில்லை. பன்முறை சோவியெற் சேனைகள் தோற்றாலும், ஏராளமாகச் சரண் அடைந்ததில்லை. ஹிட்லரின் திறம் தளகர்த்தரில் பலர் ஐ. சோ. சோ. கு. நாடு

களைத் தாக்குவதே அவன் விடும் பெரும் பிழை என்று அப்போதே எண்ணினர்.

ஜனநாயக முறைகளை எதிர்த்து வரும் தேசங்கள் இவ்வாறு வெற்றி யடைவதைக் கண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டு ஜனாதிபதி, பிரங்க்லின் ரூஸ்வெல்ட்டும் அமெரிக்க மக்கள் பெரும்பாலாரும் அச்சம் அடைந்தனர். ஆகவே ஏராளமான போர்க் கருவிகளை அவர்கள்—முதலில், பணம் பெற்றுக் கொண்டும், பின்பு 'கடன்-குத்தகை' எனக்கூறி நன்கொடை யாயும்—பிரித்தானியாவுக்குக் கொடுத்துதவினர். ஆயினும், வெளிப்படையாகப் போரில் இறங்க அமெரிக்கர் இன்னும் மனங்கொள்ளவில்லை. ஆனால், ஆவணி, 1941-ல், பிரித்தானி யாவும் அ. ஐ. நாடுகளும் கூடி தாம்உறுதியாகக் கைப்பிடிக்கும் சுயாதீனக் கொள்கைகளை வெளியிட்டு, "அட்லாண்டிக் சாசனம்" என இன்று வழங்கப்படும் உடன்படிக்கையை எழுதிக் கையொப்பமிட்டன. அந்த வருட இறுதியில் காத் திராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. பிரான்சின் கதியற்ற நிலையை வாய்ப்பெனக் கண்டு இந்தோசீனத்திலுள்ள போர்த் தளங்களைக் கைப்பற்றிக் கொண்ட யப்பான் சட்டெனப் போர் தொடுத்தது. பிரித்தானியரில் அல்ல, அமெரிக்கரில். மார்கழி 1941-ல், ஹாவாய் முத்துத் துறையில் நங்கூரமிட்டுநின்ற அமெரிக்க பசிபிக் கப்பற் படையில், யுத்தப் பிரகடனம் எதுவும் இல்லாமல் யப்பான் திடீரெனக் குண்டு பொழிந்து, சிறந்த அந்தப் படையைச் சிறிது காலம் இயங்காமற் தடுத்தது. உடனே பிரித்தானியா யப்பானுடன் போர் தொடுத்தது. என்றாலும், ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும் கைமுட்டிய கரைச்சல் இருந்தமையால் அது உடனே செய்யக்கூடியவை அதிகம் இருக்கவில்லை. வலிய தரைகடலாகாயப் படைகளை உடையயப்பானியர் ஹொங்கோங், சிங்கப்பூரில் அரண் செய்யப் பட்ட கடற்படைத் தளத்துடன் மலேயா, பர்மா ஆகிய பிரித்தானிய ஆட்சி நாடுகளை விரைவிற் பிடித்தனர். இவை மட்டுமல்ல. டச்சர் ஆண்டு வந்த கிழக்கிந்திய தீவுகளும், அமெரிக்கத் துருப்புகளின் காவலில் அமைந்த பிலிப்பைன் தீவுகளும் அவர்களின் கைக்குட்பட்டன. பசிபிக்

சமுத்திரத்திலுள்ள வேறு தீவுகளையும், விசாலமான நியூகினித் தீவையும் தாக்கினர். இவையெல்லாம் ஒரு சில மாதங்களில் முடிவாயின. யப்பானியர் தாம் விரும்பிய எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டவர்போலிருந்தாலும், உண்மையில் அவர்கள் செய்து முடித்தது யாதெனின், மிகப் பலம் வாய்ந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போருக்குள் இழுத்து அச்சரசுகளின் வீழ்ச்சியை நிச்சயப்படுத்திய தொன்றுதான். உலகில் வேறெந்த நாட்டிலுங் கிடையாத செல்வமும், கைத்தொழில் விருத்தியும், தொகையான ஆட்பலமும், அதனலுறும் பெரும் சேனைகளும், வேறு சண்டைச் சாதனங்களும், இன்னும் மாபெரும் இயந்திரத் தேர்ச்சியும் அத்தேசத்தில் உண்டு. இவையெல்லாம் பூரணமாய் விருத்தியாக்கப்படும்பொழுது நேசநாடுகள் வெற்றிபெறத் தடையே யிராது.

ஐரோப்பாவில் நேசநாடுகள் வெற்றி பெறல்: ஆனலும் வென்று முடிய நீடிய காலமாயிற்று. மேற்கே எகிப்தின் எல்லையில் நின்ற பிரித்தானியச் சேனை ஆப்பிரிக்காவிலுள்ள ஜெர்மானிய-இத்தாலிய துருப்புகளை எல் அலாமேயின் களத்தில் (1942) அறவே அடித்தது. பின்பு கரையோரமாகத் துரத்திக் கொண்டு போய், ஆப்பிரிக்காவின் வடமேற்குக் கரையில் இறங்கிய ஆங்கிலேய-அமெரிக்க ராணுவங்களுடன் கூடி ரூனிசியாவிலே அவைகளைச் சிதறடித்தது. முதல் சிசிலியையும், பின்பு இத்தாலியையுமே இச்சேனை பிடிக்கத் தொடங்கிற்று. 1943-ன் இறுதியில் இத்தாலியர் அடங்கினர். ஐ. சோ. சோ. கு. நாடுகளைத் தாக்கி முன்வாங்கிய ஜெர்மானிய சேனைகள், 1942-ல் வொல்கா நதியினின்ற ஸ்டாலின்கிருட் நகரின் காவற் படைகளால் நிறுத்தப்பட்டன. அடுத்த வருடத் தொடக்கத்தில், முற்றுகையிடும் சேனை நகரின் முன்னலே படுதோல்வியுற்றது. ஜெர்மானிய சேனைகள் அப்போது பின்வாங்கத் தொடங்கிக் கடைசியில் ஐ. சோ. சோ. கு. நாடுகளினின்றும் முற்றுகக் கலைபட்டுத் தம் தேசத்திற்குட் திரும்பி ஓடின.

ஜெர்மானியருக்கு உள்ள பெரும் போர்க் கப்பல்கள் ஆக ஒரு சில. கடற்போரில் அவையெல்லாம் படிப்படியாய் பிரித்தானியக் கடற்படையால் அழிவுற்றன. ஆனலும் அவர்



ஜெர்மனிக் கெதிராக நிகழ்ந்த போர்.

களின் நீர்மூழ்கிகளும் ஆகாய விமானங்களும் நேச நாடுகளின் வியாபாரக் கப்பல்களுக்குப் பெரும் சிதைவு செய்தன. உயிருக்கும் பொருளுக்கும் பெரும் சேதம் விளைந்தது. பிரித்தானியாவுக்கு ஏற்றப்பட்ட உணவையும் மூலப் பொருட்களையும், சோவியெற் ஐக்கிய நாட்டிற்குப் போகும் சண்டைப் பொருட்களையும் கொண்டுசெல்ல விடாமல் பெரும் பங்கம் விளைத்தன. இதில் பூரணசித்தி பெற்றிருந்தாராயின் ஜெர்மானியர் வென்றிருப்பார்கள். ஆகாயத்தில், ஜெர்மானிய விமானங்கள் பிரித்தானியாவைக் குண்டிட்டுத் தாக்குதல் வர வரக் குறைந்தது. ஆனால், இரவில் பிரித்தானிய ஆகாயப் படையும், பகலில் அமெரிக்கப் படையும் மாறிமாறி ஜெர்மனியில் குண்டு வீசி, அதன் நகரங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் மிகப் பெரும் அழிவு விளைத்தன. ஆயிரம் விமானங்கள் தானும் ஒரே நேரத்திற் தாக்கின.

1943-ல் சோவியெற் துருப்புகள் ஜெர்மானியரைக் கலைத்துக் கொண்டு நிதானமாக முன்னேறினர். ஐரோப்பாக் கண்டத்தில் இறங்கிப் போராடுவதற்கென மிகக் கவனமாக ஒழுங்கு செய்யப்பட்டு, அமெரிக்க-பிரித்தானிய சேனைகள் இணைந்த மாபெரும் போர்படை ஒன்று பிரித்தானியாவிற் திரட்டப்பட்டது. இது 1944, ஆனியில் பிரான்சின் வடகரையில் வெற்றிகரமாய் இறங்கிற்று. சொற்ப காலத்தில் வேறு மொரு படையை நேச நாடுகள் கொண்டு வந்து தென்கரையில் இறக்கின. கனநாட்செல்ல முன் பிரான்சு முழுவதும் மீட்கப்பட்டது. ஜெர்மானியர் தங்கள் தற்பாதுகாப்புக்காகவே போராட வேண்டியதாயிற்று. கிழக்குப் போர்க் களத்தில் சோவியெற் ராணுவம் ஜெர்மானிய சேனைகளை ருமேனியா, ஹங்கரி இரண்டினின்றும், ஆஸ்திரியாவின் பெரும் பாகத்தினின்றும் துரத்தி முன்னேறியது. 1945-ன் வேனிற் காலந் தொடங்க, கிழக்காலும் மேற்காலும் ஜெர்மனி தாக்கப்பட்டது. அதே நேரத்தில், ரோம் நகரை 1944, ஆனியில் பிடித்துவிட்டு, மாரிகாலத்தில் ஜெர்மானியரால் தடைப்பட்டு நின்ற நேச நாட்டுப் படைகள், வேனிற் காலமானதும் வடஇத்தாலிய சமபூமிக்குள் பொங்கிவந்து, தெற்கிலிருந்து ஆஸ்திரியாவிற்

படையெடுக்க ஆயத்தமாய் நின்றன. இச்சண்டைகளுக்குள் மூசொலீனி பிடிபட்டுத் தன் தேசத்தவர் கையாற் கொலையிடப் பட்டான். 1945, சித்திரையில் சோவியெற் சேனை பெர்லின் நகரை முற்றுகையிட்டு, வைகாசி ஆரம்பத்தில் பிடித்தது. ஹிட்லரும் அவரது முதற் பிரசாரகர் கேபெல்ஸ் உம், இன்னும் பல நாஜித் தலைவரும் தற்கொலை புரிந்தார்கள். அதே மாதத் தில் ஜெர்மானிய ராணுவம் சரணடைந்தது.

ஆசியாவில் நேசநாடுகள் வெற்றி பெறல்: ஆசியாக் கண்டத்தில் அமெரிக்கரும் பிரித்தானியரும் நெடு நாளாகப் போர் புரிந்தார்கள். முதலாவதாக யப்பானிய கப்பற்படையை உடைத்து முடிப்பதென அமெரிக்கர் திட்டம் வகுத்தனர். அவ்வாறே கோறல் கடல், மிட்வே தீவு ஆகிய இரு பெரு யுத்தங்களிலும் வெற்றி பெற்று அவர்கள் முன்னேறத் தொடங்கினர். இக்கடற் சண்டைகளில் யப்பானியப் படை யிலுள்ள பெருங்கப்பல்களை யெல்லாம் குண்டிட்டுத் தாழ்த்த விமானங்கள் "தாங்கிக் கப்பலிற்" கொண்டுவரப்பட்டன. இது அமெரிக்கர் எய்திய வெற்றியில் முக்கியமாகக் கவனிக் கத்தக்கது. யப்பானுக்குப்போகும் பாதையிலுள்ள தீவுகளை ஒன்றின்பின் ஒன்றுகக் கைப்பற்றிக் கொள்ளுவதே அவர் களின் அடுத்த வேலை. கடலாகாயங்களில் நேச நாட்டுப் படைகள் ஆட்சி பெற்றிருந்தமையால் ஏனைய தீவுகளில் நின்ற யப்பானிய ராணுவங்கள் வெளியேற முடியாது ஆங் காங்கே நிற்க நேர்ந்தது. இவ்வாறு "தீவு விட்டுத் தீவு பாயும்" திட்டத்தைக் கையாளு முன்னரே, அமெரிக்கரும் ஆஸ்திரேலியருங்கூடி சொலமன் தீவுகளிலும், யப்பானியர் தாக்கிக் கொண்ட நியூகினியிலும் மிகக் கடும் போர் புரிந்தனர். 1944 பிறக்க, இத்திட்டங் கைகூடத் தொடங்கியது. மீண்டும் ஒரு பெருங் கடற்போரில் வெற்றியடைந்து, பிலிப்பைன் தீவு களில் தம் பட்டாளங்களை இறக்கிய பிற்பாடு, யப்பானில் குண்டு போடக்கூடிய தூரத்துக்குள் இருக்கும் இவோஜீமா, ஒக்கினுவா எனும் இரு தீவுகளையும் அமெரிக்கர் கைப் பற்றினர். ஒக்கினுவாவைப் பிடிக்க வெகு தொகையான உயிர்ப் பலி கொடுத்தார்கள்.



யப்பானுக் கெதிராக நிகழ்ந்த போர்.

ஆசியாக் கண்டத்தில் பர்மாவைத் தாக்க நேச நாடுகள் திட்டம் செய்தன. மேற்சீனத்தில் யப்பானுக்கடங்காமல் ஒரு படி நின்று பிடித்த சியாங்காய் ஷெக்கின் சீனச் சேனைகளுக்கு உதவி அளிப்பதும் இதின் ஒரு நோக்கம். "தென்கிழக்காசிய அதிகாரம்" (S.E.A.C.) எனப் பெயர் பெற்ற ஒரு பெருங் காரியாலயம் நிறுவப்பட்டு, பிரித்தானிய கடற்படைத் தளபதி, லூயி மௌன்ட் பற்றன் பிரபுவின் பொறுப்பில் அமைக்கப் பட்டது. ஆரம்பத்தில் இது வடகிழக்கு இந்தியாவில் தாபிக்கப் பட்டது. பின்பு மலாயாவிற் போர் நடத்துவதற்காக இலங் கைக்கு மாற்றப்பட்டது. என்ருலும் மலாயாவைத் தாக்க வேண்டிய அவசியம் நிகழவில்லை. 1944-ன் தொடக்கத்தில் யப்பானியர் இந்திய வடகிழக்கு எல்லையில் துணிவுறத் தாக்கி யும், தோல்வியடைந்தனர். 14-ம் படையின் பிரித்தானிய-இந்திய துருப்புகள் அவர்களைப் பர்மாவுக்குள் கலைத்துக் கொண்டு போய்க் கடைசியாக பர்மாவையுந் திருப்பிப் பிடித்தன. இந்த வெற்றிக்குப் பேருதவியாயிருந்தது ஆகாயப் படை. ரோட்டு, றேயில் இல்லாத பர்மாக் காடுகளுக்கூடாகப் போக்குவரவு செய்யவேமுடியாமையால், துருப்புகளுக்குத் தேவையான உணவும் ஏனைய பொருள்களும் விமானங்களால் வழங்கப் பட்டன.

யப்பான் மீது குண்டுப் போர்: பசிபிக் களத்தில் 'சுப்பெ போற்றெஸ்' எனும் பிரமாண்டமான அமெரிக்க விமானங்கள் யப்பானில் முறையாகக் குண்டு பொழியத்தொடங்கின. நகரங்கள் பெரும் இம்சைக்குள்ளாயின. எனினும், தாக்க வரும் சேனைகளை எதிர்த்துக் கடும் சமர்புரியத் தயாராக இருப் பவர்போல் யப்பானியர் தோற்றினர். யப்பான் மேல் படை யெடுப்பதால் வரப்போகும் அளவற்ற உயிர் மோசத்தைத் தவிர்ப்பதற்காய் அமெரிக்கர் ஒரு பயங்கரமான இரகசிய ஆயுதமாகிய அணுகுண்டைத் தயாரித்துக் கொண்டனர். ஆவணியில் ஹிரோஷீமா, நாகசாக்கி நகரங்களில் வீசிய இரு குண்டுகள் ஒரு நொடியில் உண்டாக்கிய பயங்கர அழிவு போரை முடித்தது. மேலும் தமது நாடு சிதைவுறும் என்றஞ்சி யப்பானியர் சரணடைந்தனர்.

ஐக்கிய நாடுகளைக் கூட்டியது: கோடாகோடி மக்கள், முக்கியமாக ஜனநாயக நாடுகளில் வாழ்பவர், யுத்தம் முடிவதைக் கண்டு சந்தோஷமுற்று, சமாதானமும் செழிப்பும் நிலவுங்காலம் வருமென எதிர்பார்த்திருந்தார்கள். 1944-ம், 1945-ம் ஆண்டுகளில், யுத்தம் முடியுமுன்னரே, சர்வதேச சங்கம் போன்ற ஒரு சர்வதேச ஸ்தாபனத்தைத் திரும்பவும் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுவந்தன. மேலும், போர்களைத் தடுக்கவும், தேசங்களுக்கிடையில் எழும் வாதங்களைத் தீர்க்கவும் ஏற்ற முறையில் அந்த ஸ்தாபனத்தை அமைத்து, சகல நாடுகளையும் அதற்குள் கூட்டிக்கொள்ள எண்ணினார்கள். தூர கிழக்கில் போர் முடிவடைய முன்னமே ஐக்கிய நாட்டு ஸ்தாபன நிபந்தனைச் சாதனம் எழுதப்பட்டு, 51 அங்கத்துவ தேசங்களின் கையொப்பம் பெற்று விட்டது. சர்வதேச

"பெருமூவர்"
உவின்ஸ்டன் சேர்ச்சில், பிரங்க்லின் றூஸ்வெல்ற், மாஷல் ஸ்டாலின்

சங்கம் போலில்லாமல், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அமெரிக்கா, ஐ. சோ. சோ. கு. நா. போன்ற சகல தேசங்களையும் அடித்தள அங்கத்துவ தேசங்களாகக் கொண்டு ஆரம்பமாயிற்று. யுத்த காலத்திலேயே, இவ்விரு தேசத்தலைவர்கள், ஜனாதிபதி பிரங்க்லின் ரூஸ்வெல்ற், மாஷல் ஸ்டாலின் மாத்திரமன்றி, ஐக்கிய ராச்சியப் பிரதமர் உவின்ஸ்டன் சேர்ச்சிலும்—"பெரு மூவர்" எனப் பெயர் தாங்கி—நன்கு ஒத்துழைத்து வந்தமையால், இம்மனப்பான்மை மேலும் வளர்ந்து வருமென அனைவரும் எதிர்பார்த்திருந்தனர்.

ஐ.சோ.சோ.கு. நாடுகளும் அவற்றின் துணைக்கோளங்களும்:

எனினும், ஐக்கிய நாடுகள் கூட்டங்களிலாவது அல்லது மேலும் தொடக்கப்பட்ட ஏனைய அநேக சர்வதேச ஸ்தாபனங்களிலாவது, அல்லது வேறெவ்வழியிலாவது, ஐ. சோ. சோ. கு. நா. தமது யுத்த கால நண்பர்களுடன் ஒத்துழைக்க விருப்பமேதுங் காட்டவில்லை. ஒரு சிலரைத் தவிர வேறு யாரையும் தமது நாட்டுக்குள்ளோ, அல்லது யுத்தக் கடைசி காலத்தில் தம் சேனைகள் பிடித்துக் கொண்ட கிழக்கைரோப்பிய நாடுகளுக்குள்ளோ செல்லவிடாமல் தடுத்தன. போர் முடிந்து மூன்று வருஷங்களுக்குள், மக்கள் பெரும்பாலாரின் விருப்பத்திற்கு மாறுக, அங்கே கொம்முனிஸ்ட் அரசாங்கங்களை நிறுவியதுமன்றி, சோவியெற் ஐக்கிய நாட்டிலே சார்ந்து கொண்டு, அதனுடைய வெளிநாட்டுக் கொள்கையைத் தழுவிப் பின்பற்றும் நாடுகளாகவும் அவற்றை மாற்றி விட்டன. இந்நாடுகள் செக்கோசிலவாக்கியா, போலாந்து, ருமேனியா, அல்பேனியா, ஹங்கரி, பல்கேரியா, யுகோசிலாவியா. ஹங்கரி ஒன்றைத்தவிர, இந்த நாடுகளில் வசிப்பவர் பெரும்பாலும் சிலாவியரே. இவை "துணைக்கோள" நாடுகளென வழங்கப்படும். ஆயினும் யுகோசிலாவியா தனது தேசிய வீரன் மாஷல் ரீற்ரோவின் முயற்சியால் சோவியெற் ஆதிக்கத்தினின்றும் விலகிக் கொண்டது. என்றாலும் கொம்முனிஸ்ட் முறைகளைத் தழுவியே நின்றது. ஆகவே, ஐரோப்பா பொதுவில் இரண்டு எதிர்க் கட்சிகளாகப் பிரிவு

பட்டிருந்தது—கொம்முனிஸ்ட் நாடுகளும், சுயாதீன முறை களைக் கைப்பிடித்து ஜனநாயகத்தை நம்பிநிற்கும் நாடுகளும். இவ்விரு பிரிவினர்க்குமிடையே உள்ள பேதங்கள் பின்வரு மாறு: கொம்முனிஸ்ட் ஆட்சி நாடுகளில் ஒரு சிறு குழுவினர் சர்வாதிகாரிகளாக ஆளுவர்; பொதுமக்களுக்கு பேச்சிலோ, போக்குவரத்திலோ சுயாதீனங் கிடையாது; ஜனநாயகத்தைத் தழுவும் நாடுகளில் வழங்கி வருவதுபோல், பொதுத் தேர்தலிற் போட்டியிடுபவரில் ஒருவரை மக்கள் தம்மிஷ்டப்படி சீட்ட ளித்துத் தெரிவு செய்ய முடியாது. தாமும் ஜனநாயகக் கொள்கைகளையே கையாண்டு வருபவரெனக் கொம்முனிஸ்டு கள் கூறிவருகின்றனர். ஆனல் அவர்கள் ஜனநாயகம் எனக் கொள்ளுவது, 19-ம் நூற்றுண்டிலே ஐரோப்பிய மக்களை சர்வாதிகார ஆட்சியினின்று மீட்ட பழங்கொள்கைகளுக்கு முழுவதும் வேறுபாடாயுள்ளது. மேலும், தற்காலத்திலே ஜனநாயகக் கொள்கைகள் உற்பத்தியான பிரித்தானியா, பிரான்சு ஆகிய இரு நாடுகளிலும், அமெரிக்க ஐக்கிய நாடு களிலும், இன்னும் பிரித்தானியாவினிடமிருந்து பெரும்பாலுந் தமது அரசியற் கொள்கைகளை, விசேஷமாய், ''பாராளுமன் றரசைப்'' பெற்றுக்கொண்ட இந்தியா போன்ற ஏனைய தேசங்களிலும், வாழ்ந்து வந்த மக்கள் பெரும்பாலாருக்கு மன எழுச்சியூட்டியுள்ள கொள்கைகளும் கொம்முனிஸ்ட் கொள் கைகளுக்கு முழுமாறுனவை.

அச்சு நாடுகள்: தோல்வியுற்ற தேசங்கள், ஜெர்மனி, இத்தாலி, யப்பான், எல்லாம் ஒரே விதிப்படி நடத்தப்பட வில்லை. அவற்றின் போர்த்தலைவர்கள் பெரும்பாலார் கொல்லப்பட்டோ, தற்கொலை புரிந்தோ இறந்துவிட்டனர்; சிலர் செய்துள்ள ''போர்ப் பழிகளுக்காக,'' நாட்டைப் பிடித்துக்கொண்ட அரசுகள் அவர்களுக்கு மரண தண்ட னையோ, அல்லது நீண்ட சிறைவாசமோ விதித்தன. இம் மூன்று தேசங்களிலும் நேச நாடுகள் தமது ராணுவங்களை நிறுத்திக் கொண்டன. ஆஸ்திரியா திரும்பவும் ஜெர்மனி யினின்று பிரிக்கப்பட்டது. இவ்விரு தேசங்களும் தனித் தனியே நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு

மண்டலத்திலும் முறையே அமெரிக்க, பிரித்தானிய, பிரான்சிய, சோவியெற் துருப்புகள் இருந்துகொண்டன. அவற்றின் தலைநகரங்கள் பெர்லினும் வியன்னாவுங்கூட நான்கு பிரிவுகளாய் வகுக்கப்பட்டன. ஆனால், இப்பிரிவுகளில் ஒரு வகையான கூட்டரசாங்கத்தை தாபித்த போதிலும், கடைசியில் அது பெர்லினில் முறிந்து போயிற்று. யப்பானிற் பெரும்பாலும் அமெரிக்கத் துருப்புகளே நிறுத்தப்பட்டன. முதலில் அமெரிக்கர் பின் வாங்கியபோதும், பின்பு சாமர்த்தியமாகத் திட்டம் செய்து, சிறப்பாக முடிக்கப்பெற்ற "தீவு விட்டுத் தீவு பாயும்" போரிலும் முதற் தளபதியாகக் கடமையாற்றிய மக்காதர் அந்த நாட்டை ஆளும் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான். இத்தாலி ஏற்கனவே சரணடைந்து, ஓரளவு நேச நாடுகளுடன் ஒத்துப் போர் புரிந்தமையால் கடுமையாகப் பாதிக்கப்படவில்லை. ஆனால் நெடுநாளாய்ப் பெரும் பணச் செலவுடன் வடஆப்பிரிக்காவிலும் கிழக்காப்பிக் காவிலும், ஈஜியன் கடலிலும் கட்டியெழுப்பிய இராச்சியங்களை இத்தாலி இழக்க நேரிட்டது.

மேற்றிசையில் "சீதளப் போர்:" அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்சு, அண்மையில் தம்முடன் பொருதிய நாடுகளைப் பிடித்துக் கொள்ளச் சில துருப்புகளை வைத்துக்கொண்டாலும், அதிகமானோரை அவரவர் தொழில்துறைகளுக்குத் திருப்பி அனுப்பின. ஆனால் ஐ. சோ. சோ. கு. நாடுகள் அவ்வாறு செய்யாதும், அவ்வளவு படை குலையாதும், கோடிக் கணக்கான ஆட்களைப் போர்மயமாய் வைத்துக் கொண்டிருந்தன. முன்னய நேச நாடுகள் மீது சோவியெற் நாடு வரவர பகைமை காட்டியமையினால், அவையும் கலக்கமுறத் தொடங்கின. ஆகவே ஐக்கிய நாடுகள் கூட்டங்களில் அவைகள் சமாதான ஒப்பந்தங்களையும், நிராயுத ஏற்பாடுகளையும் ஒழுங்கு செய்ய முயன்றன. ஆனால் ஐ. சோ. சோ. கு. நாடுகளின் எதிர்ப்பினால் இவையொன்றுமே கைகூடவில்லை. எனவே, அணுக் குண்டொன்று தடையாயிராவிடின்—ஆரம்பத்தில் அமெரிக்கர் மாத்திரம் அந்த இரகசியத்தை அறிவர்—சோவியெற் சேனைகள் இதுவரையில் ஐரோப்பாவிற் படை

யெடுத்து, அங்குள்ள தேசங்களில் எல்லாம், கிழக்கைரோப்பிய தேசங்களில் நிறுவிய பிரகாரம் கொம்முனிஸ்ட் சர்வாதிகார அரசாங்கங்களே ஏற்படுத்தியிருக்கும் என்று அவை எண்ணத் தொடங்கின. எனவே, உலகம் இருபோர்ப் பாசறையாய்ப் பிழவுண்டுகிடப்பது முற்றுகத் தொலைந்துவிட்டது என்று யாவரும் நம்பியது வீணுக, திரும்பவும் அதே நிலை முன்னிலும் அதி மும்முரமாய் வந்து சூழ்ந்து கொண்டது.

ஒருபுறம் சோவியெற் ஐக்கிய நாடும், பொதுவாக அதன் கோள நாடுகள் எனக் கூறப்படும் ஏனைய கொம்முனிஸ்ட் ஆட்சி நாடுகளும்: மறுபுறம் வட அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும்: இவ்விரண்டு குழுவினுக்குமிடையில் உறும் பகைமை "சீதளப் போர்" எனப் பெயர் பெறலாயிற்று. ஜெர்மனியில் அமெரிக்கர், பிரான்சியர், பிரித்தானியர் தங்கியுள்ள பாகத்திலே அவர்களின் ஆதிக்கம் படிப்படியாய் தளர்த்தப்பட்டது. ஜனநாயக முறைகளைச் சார்ந்த தலைவர் ஒருவர், டக்டர் அடெனோர் என்பவரின் வழிகாட்டுதலின் கீழ் சில வருஷங்கள் கழிந்த பின்னர், ஜனநாயக ஸ்தாபனங்களை அம்சமாகக் கொண்ட ஓர் "சமஷ்டிக் குடியரசு" நிறுவ மேற்கு ஜெர்மானியர் விடைபெற்றனர். இந்த மூன்று நாட்டுச் சேனைகளும் ஜெர்மனியிற் தங்கினுர்கள் எனினும், அவை நண்பராய்த் தங்கினுர் தவிர, அடக்கி ஆளுபவராயல்ல. ஆனல் ஜெர்மனியில் சோவியெற் துருப்புகள் தங்கிய மண்டலத்தில், பொதுமக்கள் பெரும்பாலாரின் விருப்பத்திற்கு விரோதமாக, கீழ் ஐரோப்பாவிலும், மத்திய ஐரோப்பாவிலும் உள்ள துணைக் கோளநாடுகளில் அமைக்கப்பட்ட அரசாங்கங்களைப் போலவே, கொம்முனிஸ்ட் அரசாங்கமொன்று நிறுவப்பட்டதுமன்றிப் பெரும் சோவியெற் படைகளும் அங்கே நிறுத்தப்பட்டன.

வட அட்லாண்டிக் உடன்படிக்கை ஸ்தாபனம்: 1949-ல் அ. ஐ. நாடுகளும் மேற்கைரோப்பிய நாடுகளும் தமக்கிடையே பொருந்திக் கொண்ட "வட அட்லாண்டிக் உடன்படிக்கை" என்ற ஒப்பந்தத்திற்கமைய, திரும்பவும் போராயுதங்களைப் பெருக்கினர். வட அட்லாண்டிக் உடன்படிக்கை ஸ்தாபனம்

(ஆங்கிலத்தில் ''நாற்ரோ'') என்று கூறப்படும் அமைப்பை அவை உண்டுபண்ணின. அதின் ராணுவத் தலைமை நிலையம் பாரிஸ் நகரில். தலைவர் ஓர் அமெரிக்க தளபதி. முதன் முதலாக நியமிக்கப்பட்டவர், பின்பு அ. ஐ. நாடுகளுக்கு ஜனாதிபதியாய் வந்த ஜெனெரல் ஐசின்ஹோவர். நாற்ரோவின் நோக்கம் சோவியெற் படை யெடுப்பினின்றும் பாதுகாப்பதே என்று கூறப்பட்டது. நாற்ரோவைச் சேர்ந்த நாடுகளெல்லாம் சோவியெற் நாட்டுக்கஞ்சியே சேர்ந்தன. அவையாவன : அ. ஐ. நா., கனடா, ஸ்பெயின், சுவீடின், ஐறிஷ்ய குடியரசு, சுவிட்சலாந்து தவிர்ந்த மேற்கைரோப்பிய தேசங்களனைத்தும். ஜெர்மானிய சமஷ்டிக் குடியரசும் சேர்க்கப்பட்டது. பின்னர், கிறீசும், துருக்கியும் சேர்ந்தன. இதற்குப் போட்டியாக ஐ. சோ. சோ. கு. நாடு ஐரோப்பிய கொம்முனிஸ்ட் நாடுகளைத் திரட்டி ''உவார்சோ ஒப்பந்தத்தை'' உருவாக்கியது. சோவியெற் ஐக்கிய நாடு கிழக்கு ஜெர்மனியையும் ஏனைய நாடுகளையும் தத்தம் ராணுவப் படைகளைப் பெருக்க ஆதரவளித்தது. உவார்சோ ஒப்பந்தம் இந்தச் சேனைகளையும் அங்குள்ள சோவியெற் சேனைகளையும், சோவியெற் தலைமையின்கீழ் இயங்கும் மிகப் பெரிய ராணுவ அமைப்பாகத் திரட்டியது. சோவியெற் ஐக்கிய நாட்டின் ஆதிக்கத்தை எதிர்த்துவந்த யுகோசிலாவியா மாத்திரம் சேர மறுத்தது. இவ்வண்ணம் ஐரோப்பா திரும்பவும் ஆயுதம் தாங்கிய இருபோர்க் களங்களானது.

1956-ல் ஆஸ்திரியாவில் தங்கிய பிற படைகள் விலக, அங்கு தங்கிய அரசுகளுடன் பொருந்தி, ஆஸ்திரியா, சுவிட்சலாந்துபோல் எந்நாளும் நடுநிலைதாங்கும் ஜனநாயகக் குடியரசை ஸ்தாபித்தது.

ஆசிய நாடுகள்—அண்மையிற் சுயராச்சியம் பெற்ற இந்த நாடுகளைப்பற்றி அடுத்த இரண்டு அத்தியாயங்களிலும் வாசித்தறிவோம்—பெரும்பாலும் ராணுவ உறவுகொண்ட இவ்விரு குழுவில் ஒரு புறமுங் கலவாது நடுநிலை வகிக்க இயன்றளவும் முயன்றது கவனிக்கத் தக்கது. 1955-ல் இவை சில ஆப்பிரிக்கத் தேசங்களுடன், இயன்றளவு நடுநிலை தாங்கிக் கொள்ளும் நோக்கத்துடன், இந்தோனேசியாவில், பான்டுங் நகரில்

ஓர் மகாநாட்டைக் கூட்டின. ஆனல், சோவியெற் ஐக்கிய நாட்டிற்கு அருகிலுள்ள துருக்கி, இருக், இருன், பாக்கிஸ் தான் ஆகிய நான்கு நாடுகளும் அந்த வல்லரசுக்கு அஞ்சி, பிரித்தானியாவுடன், தம்மைப் பாதுகாக்கவெனப் '' பாக்டாட் உடன்படிக்கையை''ச் செய்தன. பசிபிக் கிழக்குத் தெற்கு எல்லைகளிலுள்ள சில தேசங்களும், ஆஸ்திரேலியாவும், நியூ சீலாந்தும், கொம்முனிஸ்ட் தேசங்கள தம்மைத் தாக்கும் வேளை பரஸ்பர உதவி அளிக்க எண்ணி '' தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கை ஸ்தாபனம்'' (சியற்ரோ) ஒன்றைக் கூட்டி யிருக்கின்றன. எஞ்சிய ஆசிய நாடுகளில் பெரும்பாலானவை பூரண நடுநிலை வகிக்க எண்ணின. இவை, இந்திய பிரதம மந்திரி நேரு வழிகாட்ட, 'பஞ்சசீலம்' என்ற ஐந்து உலக சமாதான விதிகளை, வருங்காலத்தில் எல்லா நாடுகளும் ஏற்று அனுட்டிக்கும் என்ற நம்பிக்கையுடன் வெளியிட்டன.

உதவிக் குறிப்புகள்

உலகம் முழுவதையும் தாம் அடக்கி ஆளலாம் என்று நம்பியவர், அச்சரசு நாடுகளை எதிர்த்து நின்ற நாடுகளுடன் தொடுத்த இரண்டாமுலகப் போரின் வரலாற்றை இந்த அத்தி யாயம் எடுத்துக்கூறும். அச்சரசுகள் முதலில் பெரும் வெற்றி பெற்றதையும், இறுதியில் தோல்வியுற்றதையும்; பிரித் தானியா ஆரம்பத்திலிருந்து இடங்கொடாமல் நின்று எதிர்த்த தையும், பின்பு அ. ஐ. நாடும், ஐ. சோ. சோ. கு. நாடும் அவைக்கு எதிராகப் போரில் வந்ததையும், முடிவில் இவ்விரு தேசங்களும் உலகில் மிக்க வலிமை கொண்டதையும் இது காட்டும்.

மேலும், நேச தேசங்கள் கொம்முனிஸ்ட், கொம்முனிஸ்ட் அல்லாத நாடுகளென இரு குழுவாகப் பிழந்ததும், கொம் முனிஸ்ட் நாடுகள் படைக்கலம் குறைக்காமையால் மற்றவை படைக்கலம் பெருக்க வேண்டியதும், இவ்வாறு உலகின் பெரும்பாகம் இரு போர்ப் பாசறைகளாகப் பிரிய, இந்த அமைதியின்மை '' சீதளப்போர் '' எனப்படுவதும், மூன்ருவது உலகப்போர் என்ற அபாயம் வந்துற்றதும் எடுத்துக் காட்டப் படும்.

இரண்டாமுலக யுத்தத்தில் நிகழ்ந்ததைப்பற்றியும், நிகழ்த்திய வகையைப்பற்றியும் பல தேசங்களில் பெருந் தொகையான புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. பிரித்தானியா போன்ற சில தேசங்கள் உத்தியோக பூர்வமான வரலாற்றைப் பல தகுமை வாய்ந்த சரித்திராளர்களால் பல புத்தகங்களில் எழுதுவித்திருக்கிருக்கின்றன.

சிறில்போல்ஸ் என்ற ஆக்ஸ்போட் சர்வகலாசாலைப் பேராசிரியர் எழுதிய "இரண்டாம் உலக யுத்தம்" படிக்கத் தகுந்த புத்தகம். தெளிவும் சுருக்கமுமானது. அதே தலையங் கத்துடன், இன்னுமொரு புத்தகம், மிகவும் விரிவானது, வெளியிட்டுவரும் பொழுது வாசிக்கத் தகுந்தது. அதை எழுதி யவர், உலகை உலுப்பிய அந்த நிகழ்ச்சிகளில் நடமாடிய முக்கிய நடிகர்களில் ஒருவர், உவின்ஸ்டன் சேர்ச்சில்.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1939. போலாந்தில் ஜெர்மனி படையெடுத்து இரண்டா வது உலகப்போரை தொடக்கியது.

1940. பிரான்சையும் நடுநிலை நாடுகளையும் ஜெர்மனி வென்றது. பிரித்தானியப் பெரும்போர். இத்தாலி ஜெர்மனியுடன் சேருதல்.

1941. தென்கிழக்கு ஐரோப்பாவிலும், ஐ. சோ. சோ. கு. நாடுகளிலும் ஜெர்மனி படையெடுத்தது. முத்துத் துறைமுகத்தில் அமெரிக்க கடற்படையை யப்பான் அழித்தது.

1942. தென்கிழக்கு ஆசிய நாடுகளை யப்பான் படை யெடுத்துப் பிடித்தது.
வட ஆப்பிரிக்காவில் நின்ற ஜெர்மானியர் எல்அலா மெயின் களத்தில் தோல்வியுற்றது.
ஸ்டாலின்கிருட் நகரை ஜெர்மானியர் பிடிக்க முடி யாது போயது.

1943. ஐ. சோ. சோ. கு. நாடுகளினின்று ஜெர்மானிய சேனை பின்வாங்கியது. கடற்போரில் அமெரிக்கர் யப்பானியரை வென்றது.
இத்தாலி மீது நேச நாடுகள் படை யெடுத்தது. இத்தாலி அச்சரசுகளை விட்டு நீங்கியது.

1944. நேச நாடுகள் பிரான்சில் படை இறக்கியது. சோவியெற் சேனைகள் ஜெர்மனியைத் தாக்கியது.

1945. மேற்குத்திசை நேச நாடுகள் ஜெர்மனிக்குள்ளே போர் தொடுத்தது. பெர்லின் நகரை சோவியெற் படை கைப்பற்றியது. ஹிட்லரின் மரணமும் ஜெர்மனி சரணடைந்ததும். யப்பானியர் பிடித்திருந்த ஆசிய நாடுகளைத் திருப்பிப் பிடித்தது. யப்பானில் அணுக்குண்டு பொழிந்தது. யப்பான் சரணடைந்தது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபிக்கப்பட்டது.

1949. வட அட்லாண்டிக் உடன்படிக்கை 'நாற்ரோ'வைத் தொடக்கியது. உவார்சோ உடன்படிக்கை.

1955. பான்டுங்கில் ஆப்பிரிக்காசிய மகாநாடு.

28. பொதுநல நாடுகள்

இரண்டாமுலகப் போரின் பயனுக ஆசிய—ஆப்பிரிக்கக் கண்டங்களில் நிகழ்ந்த மாற்றங்கள் ஐரோப்பாவில் நிகழ்ந்தவற்றிலும் பார்க்கக் குறைவானவையல்ல. ஒரு வகையில் கூடிய விசேஷம் பெற்றவை. ஆனால் இவற்றை ஒன்றுடன் ஒன்றைத் தொடர்புறுத்துவதற்கும், அவற்றில் சிலவற்றை விளக்கிக் கொள்வதற்கும், 13-வது அத்தியாயத்தில் யாம் குறிப்பிட்டுள்ள ''பிரித்தானியப் பொதுநல நாடுகளின்'' அபிவிருத்தியை மீண்டும் படித்தல் அவசியம்.

பொதுநல நாடுகள்: உலகப் போர்கள் இரண்டின் இடையில் பிரித்தானியப் பொதுநல நாடுகளின் இயல்பு அதிக மாற்றம் அடைந்தது. இரண்டாவது உலகப் போரின் பின்னர் இன்னும் அதிகமான மாற்றங்கள் தோன்றின. முன்பு ''பிரித்தானிய சாம்ராச்சியம்'' என வழங்கப் பெற்ற தேசங்களில் பற்பல சுய ஆட்சி பெற்றதை முன்னைய அத்தியாயங்களில் காட்டியுள்ளோம். இந்த அத்தியாயத்தில் அப்பெயர் மாறி, ''பிரித்தானிய பொதுநல நாடுகள்'' என்ற பெயர் வழக்கு எவ்வாறு வந்ததென்றும், எதற்காகவென்றும், எடுத்துக் காட்டப்படும். இன்று இவற்றின் அடிப்படைக் கொள்கை

சுயராச்சிய நாடுகளுக்கிடையில் அமையும் சம பங்காளித்துவம். எனவே, அப்பெயரிலும் "பிரித்தானிய" என்ற பதம் வரவர உபயோகத்தினின்றும் நீங்கி வருகிறது. சம பங்காளித்துவம் படிப்படியாக வளர்ந்து வந்த கொள்கை. தம் பொருள்களை விலைப்படுத்தும் இடங்களைத் தேடியோ, தாம் வசித்த ஊர்களிலும் பார்க்கச்சிறந்த ஊர்களைப் பிரித்தானியாவுக்கு வெளியே அடையவோ, தொல்லையின்றிச் சுயாதீனமாகத் தெய்வத்தை வழிபட விரும்பியோ, பண்டைக்காலத்திலே தமது நாட்டை விட்டு வெளியேறிய பிரித்தானியர், தாம் ஒரு சாம்ராச்சியத்தைத் தாபிக்கும் எண்ணமே யில்லாமல் அதை வளர்த்தனர். அவ்வண்ணமே, 19-ம் நூற்றாண்டிலும் அந்தச் சாம்ராச்சியத்தின் வலிமையை வளர்க்கவென்று உழைத்தவர்களும் பொதுநல நாடுகளின் கருத்தைத் தெளிவாக அறியாதாராயிருந்தனர்.

ஆட்சித் துறையிலுள்ள சகல அங்கங்களையும் நேரே நடத்தவோ, மேற்பார்வையிடவோ, பிரித்தானிய உத்தியோகத்தரை அனுப்பியே தாம் ஏதோ வகையிற் சேகரித்த "குடியேற்ற நாடுகளைப்" பிரித்தானிய அரசாங்கம் தொடக்கத்தில் ஆண்டு வந்தது. ஆனால் பிரித்தானிய அரசாங்கம் காலகதியில் இந்த முறையைப் படிப்படியாய் மாற்றி, குடியேறின மக்களுக்குள் ஆட்சிக் கருமங்களை மேற்பார்வையின்றித் தாமாகவே நடத்தும் ஆற்றல் உடையோரைப் பொறுப்பேற்று நடத்த நியமித்தது. பிரித்தானியா அல்லது ஏனைய ஐரோப்பிய தேசங்களினின்றும் வெளியேறிய மக்களின் சந்ததியார் சீவித்த நாடுகளில் மாத்திரம் இந்த முறை தொடக்கத்திலே கையாளப்பட்டு வந்தது. அதன் பயனைக் கனடா, ஆஸ்திரேலியா, நியூசீலாந்து, தென்னப்பிரிக்கா பூரண சுய ஆட்சி அடைந்த வரலாற்றை 13-ம், 14-ம் அத்தியாயங்களிற் படித்துள்ளோம்.

உவெஸ்ட் மின்ஸ்டர் சட்டம்: 1887 தொடக்கம் நாலாண்டிற் கொருமுறை பிரித்தானிய சாம்ராச்சியத்துக்குள்ளே சுய ஆட்சி பெற்றிருந்த தேசங்களின் பிரதம மந்திரிமார், பிரித்தானிய பிரதம மந்திரி, குடியேற்ற நாட்டு மந்திரி முதலிய மந்திரிகளுடன் கலந்து கூடித் தங்களனைவரையும் பாதிக்கும் பிரச்

சினைகளை—பிரதானமாகத் தங்களுக்கிடையில் தனித்தனியே உறும் தொடர்புகளை—ஆராய்ந்து வருவதுண்டு. 1917-ல் கூடிய "சாம்ராச்சிய மகாநாடு" என்று வழங்கப்பெறும் இந்த மகாநாட்டில் முதல்முதல் இந்தியப் பிரதிநிதிகள் சமுகமா யிருந்தனர். முதலாமுலகப் போர் நடந்தேற முன் இந்த நாடு களுக்கும் பிறநாடுகளுக்குமிடையில் உண்டான தொடர்புகள் முழுதிற்கோ, பெரும் பாகத்திற்கோ பிரித்தானியாவே பொறுப் பேற்றிருந்தது. ஆனல் போர் முடியப் பெரும் மாற்றம் நிகழ்ந் தது. 1926-ல் கூடிய மகாநாட்டில் சுய ஆட்சி நிலவும் நாடு கள் உண்மையில் சுதந்திர நாடுகள் என்று பிரித்தானியா ஒத் துக்கொண்டது. 1931-ல் இந்தச் சுதந்திர நிலையை உவெஸ்ட் மின்ஸ்டர் சட்டம் என்ற சட்டத்தை பிரித்தானிய பாராளு மன்றம் நிறுவி ஏற்றுக் கொண்டது. இந்தச் சட்டத்தின் பிர காரம் பொதுநல நாட்டு ஸ்தாபனத்தில் இத்தேசங்கள் ஐக்கிய ராச்சியத்தின் சமபங்காளிகள் என ஒப்புக்கொள்ளப்பட்டன. ஐக்கிய ராச்சியத்திற்கும், சுய ஆட்சி நாடுகளுக்கு மிடையில் உறும் தொடர்புகளை இதுகாறும், பிரித்தானியாவைப் பொறுத் தளவில், குடியேற்ற நாடுகள்மந்திரி நடாத்தி வந்தார். அந்த அலுவல்களை அவரிடமிருந்து நீக்கிப் பொதுநல நாட்டுத் தொடர்பு மந்திரியெனப் புதிதாக நியமிக்கப்பட்ட மந்திரி யொருவர் பொறுப்பேற்றார். குடியேற்ற நாடுகள் மந்திரிக் குரிய அதிகாரம் போலல்லாமல், "முடிக்குள் அமையும் டொமினியன், சார்பரசு" நாடுகள் எவற்றையும் கட்டுப்படுத்த அதிகாரம் இப்புதிய மந்திரிக்கில்லை. ஏனைய சம பங்காளி நாடுகள் ஒவ்வொன்றும் பொதுநல நாட்டு அலுவல்களைப் பொறுப்பேற்று நடத்துவதற்காக ஒவ்வொரு மந்திரியை, சில சமயம் பிரதம மந்திரியையே, நியமித்து வருகின்றன. உவெஸ்ட் மின்ஸ்டர் சட்டத்தின் பின்னர், ஐக்கிய ராச்சியம் உட்பட எல்லாப் பொதுநல நாடுகளும், தமக்குள்ளே நிகழுங் கருமங்களை நடத்துவதற்காக 'ஹைக்கமிஷனர்' என்று சொல் லப்படும் பிரதிநிதி யொருவரை நியமனம் செய்து, ஒவ்வொரு நாடும் மற்றெவ்வொரு பங்காளி நாட்டிற்கும், அனுப்பி வரு கின்றன. பொதுநல நாடுகளுக்கு வெளியே உள்ள தேசங்கள்

சிலவற்றிற்கு அவை தங்கள் தூதரை அல்லது வேறு பிரதி நிதிகளை நியமித்து வருகின்றன; அங்ஙனம் நியமிக்காத சம யங்களில் பொதுவாகப் பிரித்தானிய தூதுவரையே தங்களைச் சார்ந்த கருமங்களையும் பார்த்துதவக் கேட்டுக் கொள்கின்றன. பெரிய பிரித்தானிய முடிமன்னரே இந்தப் பூரண சுய ஆட்சி நாடுகளுக்கும் முடியரசு என்பதை மனதில் கொள்ளவேண்டும். ஆகவே இரண்டாவது எலிசபேத் இராணி ஆஸ்திரேலியா வுக்குப் போகும்பொழுது ஆஸ்திரேலியா இராணி யென்றே போகின்றார். பொதுநல நாடுகளின் சுய ஆட்சி நாடுகள் எல் லாம் வெளிநாட்டு விஷயங்களில் தாம் விரும்பிய விதமே செய்ய உரிமை இருப்பதுமல்லாமல், விரும்பிய விதமே செய் தும் வருகின்றன. ஐக்கிய ராச்சியம் காட்டும் வழியைத் தாம் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டுமென அவைகள் இப்போது எண்ணுவது மில்லை. ஆயினும் பொதுநல நாடுகள் பல துறை யில் ஒற்றுமையாக வாழ்வதுமன்றி, சமாதானம் பரவுதற்கு ஒரு பெரும் ஏதுவாயு மிருக்கின்றன.

கனடா: இரண்டாவது உலகப்போர் நடந்த பொழுது, பொதுநல நாடுகளின் பகைவர்களை எதிர்க்கும் பொது முயற்சி யில், கனடிய சேனை, கப்பல், பணம், பொருளெல்லாம் சிறிதள வுங் குறைவின்றிச் செலவழிக்கப்பட்டன. பிரித்தானிய ஆகா யப் படைவீரர் கனடிய விமான நிலையங்களில் பெருந்தொகை யாகப் பயிற்றப்பட்டனர். ஜெர்மானியர் குண்டிட்டுத் தாக்கக் கூடும் என்ற அச்சமின்றி அவர்கள் பயிற்சி பெறக் கூடியதா யிருந்தது.

யுத்த முடிவின் பின் கனடாவின் சனத்தொகை 160 லட்ச மாகக் கூடியிருக்கின்றது. அந்த நாட்டிலுள்ள ஏராளமான இயற்கைவள ஆதாரங்களை மேன்மேலும் அபிவிருத்தி செய்த மையால் கனடா இன்று உலகத்தின் பெரும் வணிக நாடு களுள் நான்காவதிடம் பெற்றிருக்கின்றது.

ஆஸ்திரேலியா: இரண்டாவது உலகப்போர் தொடங்கிய தும் பிரித்தானியாவுக்கு உதவியளிக்க ஆஸ்திரேலியா தருப் புக்களை அனுப்பியது. வட ஆப்பிரிக்காவிலும் வேறு இடங்களி லும் அவை வீரச் சமர் புரிந்தன. ஆயினும், யப்பான் போரிற்

கலந்து வெற்றிகள் பல பெற்றபின், ஆஸ்திரேலியாவின் வட திசையில் அணித்தாயுடைய நீயூகினியெனும் பெருந்தீவைத் தாக்கியபொழுது, அதிகமான ஆஸ்திரேலியரைத் தம் தாய் நாட்டைக் காப்பதற்காகத் திருப்பியனுப்ப வேண்டியிருந்தது. ஆஸ்திரேலியர் சிறப்பாகச் சமர் புரிந்து, யப்பானியரை அந்தத் தீவினின்றும் வெளியே துரத்தப் பெரும் சேவை செய்தார்கள். இக்காலத்தில் யுத்தாயுதம் தயாரிக்கும் யந்திரசாலைகள் ஆஸ்திரேலியாவில் அமைக்கப்பட்டன. தொழிலாலைகளும் தொடர்ந்து தோன்றின. ஆஸ்திரேலிய வணிகத்தின் முக்கிய அம்சம் இதுகாறும் செம்மறியாட்டு ரோமம் ஏற்றுமதியாயிருந்தது. தொழிற்சாலைகள் அதிகம் நிறுவியதன் பயனாக போர் முடிவடைந்த பின் பிறநாடுகளிலிருந்து பெற்றுவந்த அனேக தொழிற்சாலைப் பண்டங்களை ஆஸ்திரேலியர் தாமே தயாரிக்கக்கூடியதாயிருந்தது. இதுவரையும் பயிருங் குடிசனமும் இல்லாத சில பாகங்களில் பெருஞ் சுரங்கப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றமையால் ஆஸ்திரேலியாவில் செல்வம் அதிகம் பெருக இடமுண்டு.

நியூசீலாந்து : இரண்டுலகப் போர்களுக்குமிடையில் நியூசீலாந்தின் செல்வம் பெருகிக் கொண்டே வந்தது. இரண்டாவது போர் தொடங்கியபொழுது ஆஸ்திரேலியாவைப் போல நியூசீலாந்தும் யப்பானியரால் தாக்கப்படும் என்ற அபாயம் சில நாளாக விருந்தது. கடைசியாக அவர்களைத் துரத்தியடிக்க நியூசீலாந்திய சேனைகள் உதவி யளித்தன. அதுவுமன்றி நியூசீலாந்து ஐரோப்பிய ஆப்பிரிக்கப் போர்க்களங்களுக்கும் துருப்புகளை யனுப்பி அங்கே வெகு சிறப்பாகப் போரிற் பங்கு பற்றியது.

தென்னப்பிரிக்க ஐக்கிய நாடு: 1939-ல், ஏனைய பொதுநல நாடுகளுடன் கலந்து இரண்டாவது உலகப் போரிற் பங்கு பற்றுவதா இல்லையா என்ற பிரச்சினையில், தென்னப்பிரிக்க ஐக்கிய நாட்டு மக்களின் கருத்து இருதிறப்பட்டிருந்தது. ஆனால் பிரதம மந்திரியாக வந்த ஜெனெறல் ஸ்மட்ஸ் (பின்பு பீல்ட் மாஷல்) மத்திய பாராளுமன்றத்தில் ஒரு சில பெரும் பான்மை வாக்குகளால், போரிற் பங்குபற்ற வேண்டுமென்ற

அங்கீகாரம் பெற்றார். இத்தாலியருடன் அபிசீனியாவிலும், பின்பு வடக்காப்பிரிக்காவிலும் தென்னப்பிரிக்கத் துருப்புகள் திறமாகச் சமர் புரிந்தன.

சமர் முடிந்து சொற்ப காலத்தில் பீல்ட் மாஷல் ஸ்மட்ஸ் தலைமை தாங்கிய ஐக்கியக் கட்சி பொதுத் தேர்தலிற் தோல்வி யடைந்தது. அப்பெரியாரும் சில நாட் செல்லக் காலமானர். பிரதம மந்திரியாக வந்த "தேசியக் கட்சித்" தலைவர் டக்டர் மலானும், அவருக்குப் பின் ஆண்ட ஸ்றிடொம் அவர்களும் ஸ்மட்ஸ் போன்று உலகப் பிரசித்தி பெற்ற வரல்லர். ஆகவே, டச்சரின் சந்ததியரான ஆப்பிரிக்கானரின் நயநட்டத்தை மற்றெல்லா விஷயங்களிலும் மேலாக அவர்கள் கவனித்து வந்தார்கள்.

வில்லங்கமான பல சிக்கல்கள் தென்னப்பிரிக்க ஐக்கிய நாட்டிற் கனகாலமாக இருந்து வருகின்றன. தேசியக் கட்சியின் அரசியற் கொள்கையினல் டச்சரின் சந்ததியாருக்கும் பிரித்தானியரின் சந்ததியாருக்குமிடையில் நிலவிய அன்னியோன்னியம் இன்று ஓரளவு குறைந்து வருகிறது. மேலும் ஒரு பிரச்சினை அங்கே வாழும் இந்தியரைப் பொறுத்தது. அந்நாட்டிலே தொழில் புரிவதற்கெனக் கொண்டு வரப்பட்ட இந்தியர் திரும்பிப் போகாமல் அங்கேயே நிலையாயினர், பலர் வியாபாரிகளாக. சிலர் பெருஞ் செல்வராகி விட்டனர். பிரித்தானிய சந்ததியார் அனேகர் வாழ்கின்ற நேட்டால் மாகாணத்திலே விசேஷமாக அவர்கள் காணப்படுகின்றனர். ஆனல் கருமை நிற பாந்துச் சாதியினரது பிரச்சினைதான் முக்கியமானது. கிட்டத்தட்ட டச்சர் கடல்மார்க்கமாக வந்து குடியேறி, ஆப்பிரிக்காக் கண்டத்தின் தென் பகுதியிற் பரவிய அக்காலத்திலேயே பாந்துக்களும் வடக்குத் திசையிலிருந்து தென்னப்பிரிக்காவில் வந்து குடியேறினர். அதிகமானவர் தத்தம் பரம்பைப் பிரதேசங்களில் வசித்து வருகிறார்களாயினும், ஆயிரக்கணக்கான பாந்துக்கள் சுரங்கங்களிலும் ஏனைய தொழிற்சாலைகளிலும் வேலை செய்கின்றனர்.

கருமை அல்லது மாநிறச் சாதிகளுக்கு மேலே, வெண்ணிறச் சாதியின் முதன்மையை தென்னப்பிரிக்காவில் நிலைநிறுத்த

வேண்டுமென்று, முற்றுக ஆப்பிரிக்கானரைக் கொண்ட தேசிய அரசாங்கம் பிடிவாதமாயிருக்கின்றது. இந்தக் கொள்கை "அப்பதேயிட்" என வழங்கப்படும். சாதிகளே ஒன்றோடொன்று கலவாமற் பிரித்து வைத்து, தத்தம் வழியில் வளரவிடுவதே அதன் விதி. பாந்துச் சாதியினர் இன்னும் அநேக ஆண்டுகளுக்குத் தேசத்தை ஆளும் முயற்சியில் பங்குபற்றத் தராதல மற்ற வராயிருப்பரென்றும், பங்குபற்ற மாட்டாரென்றும் அவர்கள் சாதிக்கின்றனர். இந்த அப்பதேயிட் கொள்கையை ஏனைய பொது நல நாடுகள் அவ்வளவு விரும்புவதில்லை.

தென்னப்பிரிக்கா அதிக சுர்ங்கச் செல்வம் நிறைந்த நாடு இன்னும் அதிக அபிவிருத்திக்கு இடமுண்டு. அங்கே யெடுக்கப்படும் தங்கமும் வைரமும் உலகப் பிரசித்தி பெற்றவை. விவசாய அபிவிருத்திக்கும் அதிக இடமுண்டு.

அயர்லாந்து : பிரித்தானியா முதன்முதற் பிடித்தாண்ட திறை நாடாகிய அயர்லாந்தைப்பற்றி இவ்விடத்திற் கூறுதல் அவசியம். அது நீடிய சரித்திரமும் நித்திய குழப்பமும் உடையது. கடந்த காலத்திலே பன்முறை ஆங்கிலேயர் ஐறிஷ் யரைக் கொடுமையாக நடத்தியுள்ளார்கள். அதன் பயனுக முளைத்தெழுந்த ஆத்திரமும் வெறுப்பும் இன்றும் முற்றுகத் தணியவில்லை. ஸ்கொற்லாந்து, ஏறக்குறைய அதற்கு நூறு வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்துடன் எவ்வண்ணம் இணைக்கப்பட்டதோ, அவ்வண்ணம் 1800-ல் அயர்லாந்தும் பெரிய பிரித்தானியாவுடன் சேர்க்கப்பட்டது. ஆனல் ஐறிஷ் யரிற் பெரும்பாலார் இதை விரும்பவில்லை. தமக்குப் புறம்பான பாராளுமன்றம் அமைக்கவேண்டுமென விரும்பி, "மனே ஆட்சி" என்ற இயக்கத்தை உண்டுபண்ணினர். நெடுங்காலமாக, பெரிய பிரித்தானிய பாராளுமன்றமும் மக்களும் மனேஆட்சி அளிக்க விரும்பவில்லை. ஆயினும் ஐறிஷ்ய மக்களின் வாழ்க்கை நிலையை சீர்திருத்தவும் முந்நாள் செய்த பல குறைகளே நிவிர்த்தி செய்யவும் பல முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனல் முதலாம் உலகப் போர் தொடங்க சற்று முன்பும் போர்க்காலத்தும் "சின்பீன்" எனப்படும் புரட்சிக் கட்சியொன்று அயர்லாந்தில் வளர்ந்திருந்தது. அதின்

நோக்கம் பூரண விடுதலே. 1916-ல் இக்கட்சியினர் ஆயுத பாணிகளாய் கலகம் செய்தனர். புரட்சி கைகூடவில்லே. ஆயினும் கரைச்சல்கள் தொடர்ந்துகொண்டே வந்தன. ஆகவே, 1921-ல் பிரித்தானிய அரசியற் தலேவர் கூடி ஐறிஷ்யர் கேட்டவை ஏறக்குறைய எல்லாவற்றையும் கொடுக்கத் தீர்மானித்தார்கள்—ஆனல் எல்லாவற்றையு மல்ல. அயர்லாந்தின் பெரும்பகுதி ''ஐறிஷ்ய சுதந்திர நாடு'' ஆகியது. ஆனல் அயர்லாந்தின் வடகிழக்குப் பகுதியாகிய அல்ஸ்டரில் வசிப்பவர் பெரும்பாலும் ஸ்கொட்லாந்திலிருந்து வந்து குடியேறியவர் சந்ததியிற் தோன்றியவர். அவர்கள் சிக்கனத்தையும் பிரையாசத்தையும் பேணுகின்ற மக்கள். அவர் களின் மூதாதைகள் 17-ம் நூற்ருண்டிலேயே பிரித்தானிய அரசாங்கத்தால் அங்கே குடியேற்றப்பட்டவர். தீவின் வடகீழ் மாகாணங்கள் ஆறிலும் அவர்களே பெரும்பான்மையினர். இவர்களனேவரும் புரொட்டெஸ்தாந்து சமயத்தவராயிருக்க, ஏனைய ஐறிஷ்யரிற் கிட்டத்தட்ட எல்லாரும், அல்ஸ்டரிலுள்ள வர் சிலரும், ரோமன் கத்தோலிக்கர். ஆகவே பல வேளேயி லும் இருபாலாருக்குமிடையில் சமய உணர்ச்சி கொதித்து வரும். அல்ஸ்டரின் புரொட்டெஸ்தாந்து மதத்தவர் ஐக்கிய ராச்சியத்துக்குள் வாழவே எந்நாளும் விரும்பியவர். ஆகவே 1921-ல் அல்ஸ்டர் எஞ்சிய அயர்லாந்தினின்றும் பிரிக்கப் பட்டு, வடக்கயர்லாந்து என்ற பெயருடன், தனக்கெனவே ஒரு பாராளுமன்றமும், பன்னிரண்டு பிரதிநிதிகளேப் பிரித் தானிய பாராளுமன்றத்திற் கனுப்பும் உரிமையும் பெற்றது.

அயர்லாந்தின் எஞ்சிய பகுதி பூரண சுயராச்சியம் பெற்றது. ஆனல் தீவை இருபாகங்களாகப் பிரித்ததைப் பற்றி அன்றும் இன்றும் திருப்தியில்லே. ஆகையால், ஐறிஷ்ய சுதந்திர நாடு இரண்டாவது உலகப் போரில் நடுநிலே தாங்கி யது. எனினும் தொகையான ஐறிஷ்யர் பிரித்தானியப் படையிற் சேர்ந்து சமர்புரிந்தார்கள். 1949-ல் சுயாதீனநாடு—இன்று அதன் பெயர் ஐறிஷ்யக் குடியரசு—பொதுநல நாடுகளினின்று முற்ருக விலகத் தீர்த்துக் கொண்டது.

பொதுநல நாடுகள் விரிவடைதல் : ஐரோப்பிய பரம்

பரையினர் வாழ்ந்து வந்த சுய ஆட்சி நாடுகள் ஏற்கனவே பூரண சுயராச்சியம் பெற்றன. அல்லாதார் வசிக்கும் தேசங்களுக்கு இரண்டாவது உலகப்போர் முடியமுன் அந்த நிலை கிடைக்கவில்லை. அதுவரை ஐக்கிய ராச்சியத்தின் "குடியேற்ற நாடுகளும் சார்பரசு நாடுகளுமாய்" அவை நிலைத்திருந்தன. இவை பலவகையாவன: இந்தியா போன்ற ஏராளமான நிலப்பரப்பும், புராதன நாகரிகமும், நீடிய சரித்திரமும்வாய்ந்த தேசங்களையுமன்றி, சீர்திருத்தமற்ற பூர்வக் குடிகள் வாழும் நாடுகளையுங் கொண்டவை. இத்தேசங்கள் எல்லாவற்றிற்கும் பிரித்தானிய அரசாங்கம் தன்னைப் பொறுப்பாளியாகக் கருதிக்கொள்கிறது; அதாவது, பிறநாடுகள் தாக்காமற் பாதுகாப்பதும், உள்நாட்டிற் சட்ட ஒழுங்குகள் அமைப்பதும், பொதுச் சாதனங்கள், சுகாதார சேவை, கல்வி முதலிய மேல்நாட்டு நாகரிக நலன்களை அளிப்பதும் தன் கடன் எனப் பொறுப்பேற்கின்றது. சுதேசிகளை பிரித்தானிய உத்தியோகஸ்தருடன் மத்திய அரசாங்கத்திலே மேன்மேலும் பங்கு பற்றப் பழக்குவதைக் கடைசி இலக்காக வைத்து உள்ளூர் ஸ்தாபன சுய ஆட்சியையும் இந்த நாடுகளில் அவ்வரசாங்கம் ஆதரித்து வருகின்றது. முதலாமுலகப் போருக்குமுன் இவ்வகையான தொடர்பு முறை அதிகம் விருத்தியடையவில்லை. இரு யுத்தங்களுக்கும் இடைக்காலத்திலே பிரித்தானிய பொதுநல நாடுகளிலுள்ள ஐரோப்பிய தொடர்பற்ற நாடெதுவும் பூரண சுயராச்சியம் பெறவில்லை. எனினும் ஐக்கிய ராச்சியம் அதுவே தனது நோக்கம் என்று வெளிப்படையாகக் கூறியுள்ளது. விசேஷமாக இந்தியாவிலும் இலங்கையிலும் இந்த முறை வெகு தூரங் கையாண்டு வரப்பட்டது. என்னவென்றாலும், நிகழ்ந்த மாற்றங்கள் போதாதென்றும், தாமதமாயிருப்பதென்றும் அந்நாடுகளில் உள்ள அறிஞர்கள் எண்ணினார்கள்.

இந்தியாவில் சுயராச்சிய இயக்கம்: இருபோருக்கும் இடைக்காலத்தில் சுயராச்சிய இயக்கம் இந்தியாவில் பெலத்தது. அக்காலத்தில் நிகழ்ந்தவை 15-வது அத்தியாயத்தில் காணப்படும். 1939-ல் உலக யுத்தந் தொடங்கியதால், சுயராச்சிய முறைகள் மேலும் கொடுபடாது நிறுத்தப்பட்டன.

முக்கியமாக, யப்பான் போர் தொடுத்து, இந்தியாவின் வடகிழக்கெல்லைவரைச் சமர் செய்து வந்தமையால் இப்படி நிகழ்ந்தது. ஆசியாவில் மாத்திரமன்றி மற்றும் இடங்களிலும் இந்தியப் படை துணிகரமாய்ப் போர் புரிந்தது. சிறைப்பட்ட பின்னர் யப்பானியரோடு சேர்ந்த ஒரு சில ஆயிரம் படை வீரரைத் தவிர—அவரிலும் பெரும்பாலார் போர்முனைச் சிறையினின்றும் வெளியேறுவதற்காக—அதிகமானவர் தங்கள் பிரித்தானியத் தலைவர் மீது பற்றுமாறுதவரா யிருந்தார்கள்.

தம் தேசத்தவர் போரிற் பங்கு பற்றுவதைப் பிரதானமாக இந்தியத் தலைவர்கள் எதிர்த்து பிரித்தானிய ஆட்சியினின்றும் தங்களை விடுவிக்க மேன்மேலும் முயன்றனர். சமராடும் சமயத்தில் அது அறவே முடியாதெனப் பிரித்தானியர் மறுத்தது மன்றி, அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியப் போர் முயற்சி மிகவுந் தளர்ச்சி யடையும் என்றஞ்சி, காந்தியையும் நேருவையும் வேறும் பல இந்தியத் தலைவரையுங் காவலில் வைத்தனர். ஆனால் யுத்தம் முடிவு பெற்றதும், 1945-ல் அரசாங்கம் தாங்கிய தொழிற்கட்சி, இந்திய சுயராச்சிய அலுவலைக் கையாண்டு, பெருந்தளகத்தனும், ஆரும் ஜோஜ் மன்னரின் மைத்துனனுமாகிய லூயி மௌன்ட்பற்றன் பிரபுவை இந்தியாவுக்கு வைஸ்ரேயாக அனுப்பியது. கடைசி வைஸ்ரே யாக வந்தவர் அவர் தான்; அவரே தென்கிழக்காசியாவிற் போர் புரிந்த நேச நாட்டுச் சேனைக்கெல்லாம் பிரதம தளபதி யாயிருந்தவர். இப்போது, பிரித்தானிய அரசாட்சியை இந்தியத் தலைவருக்குக் கலகமின்றிப் பாரங்கொடுத்து முடிக்க அவர் உழைத்தார். தாம் கேட்ட பிரகாரம் பிரித்தானிய அரசாங்கம் சுயராச்சியம் வழங்க ஆயத்தமா யிருப்பதை இந்தியத்தலைவரும் முழுமனதாய் நம்பினர்.

இந்தியாவும் பாக்கிஸ்தானும்: தேசீய இயக்கம் இந்தியா வில் முளைத்தெழும்பிய காலத்தில் அங்கே வசித்த முஸ்லிம் களின் தலைவர்கள் பொதுவாக இந்துத் தலைவருக்கு ஆதரவ ளித்து வந்தனர். ஆயினும் அவர்கள் இந்துத் தலைவர்களைப் போலக் கடுஞ் கிளர்ச்சி செய்ய விரும்பவில்லை. ஆனால் பூரண சுயராச்சியங் கிட்டிவர, இரு சமுகத்தினருக்குமிடையில்

என்றும் நிலவிய வெறுப்பு அதிகரித்து வந்தது. பாக்கிஸ்தான் என்ற பெயருடன் தமக்கான தனி ராச்சியம் ஒன்றை உபகண்டத்தின் வடமேற்கிலும் வடகிழக்கிலும் நிறுவ வேண்டுமென்ற இயக்கம் முஸ்லிம்களுக்குள் முளைத்துப் பரவியது. இந்த இயக்கத்தின் தலைவர் ஜின்னு. இந்தியா பிரிவுபடாத நாடாக நிலவும் என்று பிரித்தானியர் காத்திருந்தனர். ஆயினும், அது தேசமக்களும் அவர்களின் தலைவர்களும் தீர்த்துக் கொள்ள வேண்டிய விஷயம் என்று கூறினர். சுயராச்சியம் பெறும் நேரத்தில், முஸ்லிம் இயக்கத்தின் பயனாக இரண்டு வெவ்வேறு டொமினியன்களை அமைக்க ஒத்துக்கொண்டார்கள். மௌன்ட் பற்றன் பிரபு இந்தியாவுக்கு (பாரதம்) முதற் தேசாதிபதியானார். ஜவஹர்லால் நேரு முதற் பிரதம மந்திரி. பாக்கிஸ்தானின் முதற் தேசாதிபதி ஜின்னு. புதிய இந்திய நாடு முப்பது கோடி மக்களைக் கொண்டது. அவர்களிற் பலர் முஸ்லிம்கள். பாக்கிஸ்தானின் ஜனத்தொகை ஏறக்குறைய எட்டுக் கோடி. பெரும்பாலார் முஸ்லிம்கள். இவர்களில் அரைவாசியிற் கூடியவர் வடகிழக்கிலுள்ள கிழக்கு வங்காளத்தில் வசிப்பவர். இது வடமேற்கிலுள்ள பாக்கிஸ்தானிலிருந்து கிட்டத்தட்ட ஆயிரம் மைல் தூரத்திலுள்ளது. இரு நாடுகளின் எல்லைகள், ஏறக்குறைய எல்லாவற்றையும், ஒற்றுமையாகத் தீர்த்துக் கொண்டமையால் உபகண்டத்தைப் பங்கிடும் அலுவல் இரத்தஞ் சிந்தாமலே ஒப்பேறும்போல் தோன்றியது. ஆனால் அவ்பேரூக, தலைவர்கள் பொதுவாக சமரசமும் பகுத்தறிவும் வாய்ந்தவரா யிருந்தபோதிலும், அவர்களைப் பின்பற்றியவர் அவ்வளவு மனப்பான்மை காட்டவில்லை; புதிய ராச்சியமாகிய பாக்கிஸ்தானில் அம்பிட்ட இந்துக்கள் அனேகரும், அதில் அம்பிடாத முஸ்லிம்கள் அனேகரும் எதிர்மார்க்கமாய்த் தம் நாட்டைவிட்டு வெளியேறத் தொடங்கினர். இவ்வாறூக லட்சக் கணக்கான மக்கள் திரண்டு வெளியேறியபொழுது கலகங்களும் சச்சரவுகளும் நிகழ்ந்தன; விசேஷமாகப் பெரும் பஞ்சாப் மாகாணத்தில் பல்லாயிரம் சனங்கள் தம் சொத்தை இழந்தது மன்றி குற்றமொன்றுமே செய்யாதவர் பெரும்பாலும் தமது உயிரையும் இழந்தனர். இயற்கை நியதிப்படியாக, நாட்டை

விட்டு வெளியேறியதினலும் நிகழ்ந்த படுகொலைகளினலும் இரு சாரருக்குமிடையில் சீற்றமும் மனத்துவேஷமு முண்டாயின. ஆயினும் இரு அரசாங்கங்களின் தலைவரும், பெரும் வில்லங்கப்பட்டு, தங்களைப் பின்பற்றிய மக்களைப் போர் தொடங்கவிடாமற் சமாளித்துக் கொண்டனர்.

இந்திய சிற்றரசுகள்: பிரித்தானியர் ஆண்ட காலத்தில் இந்தியா இருவகையான ஆட்சி பெற்றிருந்தது. பிரித்தானிய இந்தியா வென்று அழைக்கப்படும் எல்லைக்குள்ளே, பிரித்தானிய அரசாங்கம் விசேஷ பயிற்சிபெற்ற பிரித்தானிய, இந்திய செயலாட்சிச் சேவையாளர்களை நியமித்து, நேர்முகமாக ஆண்டுவந்தது. இந்தியாவின் கூடிய பாகம் இவ்வாறு ஆளப் பட்டது. ஆனல் மறைமுக ஆட்சியும் பெரும் நிலப்பரப்பில், நிலவியது. அதாவது, பெரிதும் சிறியதுமான சிற்றரசுக்கள் ஏறக்குறைய நானூறு இருந்தன. இவற்றை ஆண்ட மன்னர் கள் பிரித்தானியருடன் செய்துகொண்ட உடன்படிக்கைக் கமைய அரசு புரிந்தனர். பிறநாட்டு விவகாரங்களையும் ஏனைய சில அரசியல் விஷயங்களையுந் தவிர, மற்றும் அலுவல்களில் இவ்வரசரிற் சிலரும், பின்தோன்றியவரும், பண்டை நாளில் வழங்கிய அதிகாரத்துடன் ஆண்டு வந்தார்கள். இவர்கள் வைஸ்ரேய் அவர்களுக்கே நேர்முகமாய் கட்டுப்பட்டவரா யிருந்தனர். பிரித்தானிய உத்தியோகத்தர் ஒருவர் ஒவ்வொரு சிற்றரசு ராச்சியத்திலும் வசித்து வருவார். அவரின் கடமை, அரசருக்கு மந்திராலோசனையும் உதவியு மளிப்பதுமன்றி, சில வேளைகளில் அவரைத் தடை செய்தலுமாகும்.

பிரித்தானியர் விட்டு விலகியபின், எல்லாரும் அல்லா விட்டாலும், அதிகமான அரசர் தங்கள் அதிகாரத்தைப் புதி தாக அமைக்கப்பட்ட அரசாங்கங்களுக்குக் கொடுத்தார்கள். ஆனல் பெரிய இரு ராச்சியங்களிற் சச்சரவு நிகழ்ந்தது. மத்திய இந்தியாவில் மிக விசாலமான கைடெறபாட் நாட்டை ஆண்ட நிசாம் எனப்படும் தனவந்தரான அரசர் இந்தியாவுடன் சேர விரும்பவில்லை. அவர் முஸ்லிம், ஆனல் பிரசைகள் பெரும் பாலார் இந்துக்கள். அவரின் நாடு குழப்பத்திற்கு இரையாகும் வேளையில், இந்திய அரசாங்கம் சேனைகளை அனுப்பி, அவரை

இந்திய கூட்டுறவுடன் சேரும்படி பலவந்தப்படுத்த, விருப்ப மின்றி அவர் ஒத்துவந்தார். வடமேற்குக் கோடியில் உள்ள காஷ்மீரில், அரசர் இந்து, பிரசைகள் பெரும்பாலார் முஸ்லிம் கள். தனதாதிக்கத்தை இழக்க நேரிடுமென்றஞ்சியதால் அவர் தனது விருப்பப்படியே சேர்ந்து கொள்ளலாம் என்ற உரிமையை உபயோகித்து, பாக்கிஸ்தானுடன் சேராது இந்தியாவுடன் சேருவதாக அறிவித்தார். அவருடைய நாடு இந்த இரு தேசங் களுக்கும் இடையில் இருக்கிறது. பாக்கிஸ்தானியருக்கு இது மிகவும் கோபத்தை மூட்டியது. ஆகையால் 1948-ல் தமது எல்லையில் வசித்த காட்டு முராண்டிகளான சாதிகள் காஷ்மீ ரைத் தாக்கியபொழுது, பாக்கிஸ்தானிய சேனை அவர்களைத் தடுக்கத் தெண்டிக்கவில்லை. இந்திய சேனை மிகவுங் கஷ்டப் பட்டு அவர்களைத் தடுத்தது. இதற்கிடையில் பாக்கிஸ்தானிய படை காஷ்மீரின் ஒரு பாகத்தைப் பிடித்தது. இரு நாடுகளுக் கிடையிலும் போர் மூழாமல் மிக அரும்பொட்டாய் தான் விலக்கப்பட்டது. ஆனல் இரு சேனைகளும் காஷ்மீரில் தங்கின. இன்று, 1957-லும், அங்கேயே தங்கி யிருக்கின்றன. ஐக்கிய நாடுகளுக்கு ஒப்படைக்கப்பட்டும் இந்த சிக்கலான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை.

இந்திய குடியரசு: 1948-ல் மௌண்ட்பற்றன் பிரபு தேசா திபதிப் பதவியினின்றும் நீங்கியபோது, ஸ்ரீ ராஜகோபாலாச்சா ரியர் என்னுமோர் இந்தியர் அப்பதவியில் இருந்து, 1950-ல் புதிய அரசியற் திட்டம் வரும்வரை கடமையாற்றினர். புதிய அரசியலமைப்பின் விதிப்படி இந்தியா ஒரு ஜனதிபதியின் தலைமையின் கீழ் குடியரசாக மாறியது. ஆயினும் பொதுநல நாடுகளினின்றும் வெளியேறவில்லை. விக்ரோறியா இராணி போல் இன்று இரண்டாம் எலிசபேத் இராணி இந்தியப் பேரரசி அல்லள். ஆயினும் இந்திய அரசாங்கம் அவரைப் பொதுநல நாடுகளின் தலைவர் என்று ஒப்புக்கொள்கிறது. இந்தியக் குடியரசின் முதன்முதலான ஜனதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத். ஜவஹர்லால் நேரு தொடர்ந்து பிரதம மந்திரியாக வந்தார். 1951—52-ல் நிகழ்ந்த முதலாவது பொதுத் தேர்தலில் அவருடைய காங்கிறெஸ் கட்சி பெரும்

பான்மைக் கட்சியாக வெற்றி யடைந்தது. உலகில் நிகழ்ந்த தேர்தல்களில் இதுவே மிகப் பெரியது. இரண்டாவது தேர்தலிலும் அவ்வாறே நிகழ்ந்தது. இதற்கு முன்னதாக 1948-ல் மத வெறி கொண்ட இந்து ஒருவனால் மகாத்மா காந்தி கொல்லப்பட்டது இந்தியாவில் மாத்திரமன்றி, பிறநாடுகள் பலதிலும் மக்களனைவர்க்கும் துயரை விளைத்தது. இந்தியாவை அரசாளுபவர்கள் பெரிய தொருமுயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதை அவர்கள் ஜனநாயக முறையாகச் செய்து முடிக்க தீர்மானித்திருக்கின்றனர். அவர்கள் பெரும் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல் முறையில் கொண்டு வருகின்றனர்.

ஜவஹர்லால் நேரு

பாக்கிஸ்தான் குடியரசு: இக்குடியரசு மேற்குப் பாக்கிஸ்தான், கிழக்குப் பாக்கிஸ்தான் என்று தற்போது கூறப்படும் இரு பாகங்களைக் கொண்டது. இந்திய குடியரசிற்குள்ள ஆயிரம் மைல் தூரமான நிலம் இடையிலிருந்து இவற்றைப் பிரிக்கின்றது. கிழக்குப் பாக்கிஸ்தானே, ஏறக்குறைய முழுதையும், இந்திய நிலப்பகுதி சுற்றியுள்ளது. ஆனால் கடல் வழியாக வெளியேற வங்காள விரிகுடாவில் ஒரு துறைமுகம் அதற்கு உண்டு. இந்தியரைப் போலன்றி, தங்கள் அரசியற் திட்டத்தை அமைக்க பாக்கிஸ்தானியர் நெடுங்காலம் எடுத்து, 1956-ல் செய்து முடித்து, கிழக்கு மேற்குப் பாக்கிஸ்தான்களுக்கு வெவ்வேறு திட்டங்களை வகுத்திருக்கின்றனர். இத்திட்டத்தின் பிரகாரம் பாக்கிஸ்தான் குடியரசாய் மாறியிருக்கிறது. தெரியப்

பட்ட தேசீய மன்றம் பொதுநல நாடுகளில் சேர்ந்திருக்கத் தீர்மானித்திருக்கிறது.

இலங்கை: 1931-ல் அதிக சுயராச்சியம் இலங்கை மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஐரோப்பிய மக்கள் வசிக்கும் தேசங்களைத் தவிர வேறெந்தப் பொதுநல நாட்டிற்கும் இது வரை வழங்கப்படாத சர்வ மக்கள் வாக்குரிமை — அதாவது ஒவ்வொரு 21 வயதான ஆணுக்கும் பெண்ணுக்கும், அரசாங்க சபை என்று அன்று கூறப்பட்ட சட்ட நிரூபண சபைத் தேர்தலில் வாக்களிக்க உரிமை உண்டு. தங்களுக்குப் பூரண சுயராச்சியம் தரவேண்டும் என்று முதலாவது யுத்தகாலந் தொட்டுக் கேட்டுவந்த படித்த இலங்கை வாசிகள், இதுகாறும் வழங்கிய சுய ஆட்சி போதாதென்று பூரண சுயராச்சியம் தரும்படி கேட்டனர். என்றாலும் இந்தியாவில் எடுத்துக்கொண்ட சட்ட மறுப்பு முறைகளைக் கையாளாமல், சட்ட விதிகளுக்கமையக் கிளர்ச்சி செய்தனர்.

இரண்டாவதுலக யுத்தம் தொடங்கியதும் கடற்படை இயங்கக்கூடிய இரு பெருந்துறைமுகங்களாகிய கொழும்பையும் திரிகோண மலையையும் உடைய இலங்கை கடல், தரை, ஆகாயப்படைத்தளமாகப் பெரு முக்கியத்துவம் பெற்றது. பிரித்தானிய உறவில் இலங்கையர் விசுவாசமுள்ளவரா யிருந்தனர். அவர்களின் தலைவர், சாமர்த்தியமும் நேர்மையும் வாய்ந்த டீ. எஸ். சேனநாயக்க, சமாதான முறையில் சுயராச்சியம் பெற வேண்டும் என்று தீர்த்துக் கொண்டார். இதிலே அவர் முழு வெற்றி யடைந்தார். 1948 மாசியில் இலங்கை குடியேற்ற நாடு என்ற நிலைநீங்கிப் பூரண சுயராச்சியம் உள்ள பொதுநல நாடுகளில் ஒன்றாகியது. உடனே அத்தீவு ஒழுங்கும் சமாதானமும் நிலவும் அரசாங்கத்தின் கீழ் அமைந்தது. சேனநாயக்கவின் அரசியற் கொள்கையின் பயனாக, வெவ்வேறு இனத்தவருக்கிடையில், விசேஷமாக சிங்களருக்குந் தமிழருக்கு மிடையில், ஒருகாலம் இருந்த வேற்றுமை உணர்ச்சி எவ்வளவோ அற்றுப்போயிற்று.

1952-ல் சேனநாயக்க காலமானார். அவரின் மகன் அவருக்குப்பின் பிரதம மந்திரியானார். அதன் பின்பு இரு

பிரதம மந்திரிகள் வந்தார்கள். இரு சேனநாயக்கர்கள் காலத்தில் சிங்களர் தமிழருக்கிடையில் இருந்த உறவு இப்போது ஓரளவு குறைந்து விட்டது. காரணம், 1956-ல் பதவியேற்ற அரசாங்கம், பெரும்பாலாராகிய சிங்களரின் பாஷையை மாத்திரம் அரசாங்க பாஷை ஆக்கியதும், அதை முக்கிய சிறுபான்மையினராகிய தமிழர் வெறுத்ததுமாம். மேலும் இவ் வரசாங்கம் இந்தியா, பாக்கிஸ்தான்போல இலங்கையைக் குடியரசு நாடாக மாற்றும் நோக்கத்தையும் வெளியிட்டது. ஆனால் 1957-ன் முடிவுவரை அவ்வாறு செய்யவில்லை.

பர்மா: 1937-ல் பர்மா இந்தியாவினின்றும் பிரிக்கப் பட்டதென்று 15-வது அத்தியாயத்தில் வாசித்தறிந்தோம். முதல் யப்பானியரால் பிடிக்கப்பட்டு, பின்பு மீட்கப்பட்டபின் பர்மாவும் பூரண சுயராச்சியம் பெற்றது. ஒரு சில மாதங் களாகத் திரும்பவும் அது பிரித்தானிய அரசாங்கத்தின் கீழ் அமைந்திருந்தது. ஆனால் பொதுநல நாடுகளுள் தமது நாடு இருக்கப்படாதென்று பர்மாவின் தலைவர்கள் கடைசியாகத் தீர்த்தனர். ஆகவே 1947-ல் சமாதானமாகப் பிரித்தானிய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து பிரிந்துகொண்டனர்.

மலாயாவும் சிங்கப்பூரும்: இரண்டாவது உலகப் போர் நிகழ்ந்த காலத்தில் மலாயாவும் சிங்கப்பூர்ப் பெருந்துறை முகமும் யப்பானிய ஆட்சியின் கீழ் இருந்தன. மலாயாவின் கூடிய பாகம் அடர்ந்த காடாயிருப்பதால், யப்பானியருக்கு மாறுன பெரும் எதிர்ப்பு இயக்கம் ஒன்று அங்கே இருந்தது. இதை நடத்தியவர்கள் பெரும்பாலும் சீனரே. சிறையிலகப் படாத அல்லது காவலினின்றும் தப்பியோடிய ஒரு சில பிரித் தானியர் அவர்களுக்கு உதவிபுரிந்தனர். இச்சீனரில் அதிக மானோர் கொம்முனிஸ்டுகள். பிரித்தானியர் யப்பானியரைத் துரத்திய பின்பு அவர்கள் பிரித்தானியரையும் எதிர்த்தனர். இதை அடக்க பெருந்தொகையாகத் துருப்புகளைப் பிரித் தானியர் அனுப்பினர்கள். பெரும்பாலும் வெற்றிபெற்று ராயினும் கொடிய கானகத்தில் ஒழித்திருந்து போராடும் அந்த எதிரிகளை, 1957-ன் தொடக்கத்திலும் அவர்கள் முற்றுக அடக்கிக் கொள்ளவில்லை. இதற்கிடையில் சிங்கப்பூருக்கும்

மலாயாவுக்கும் அதிக சுயராச்சியங் கொடுபட்டது. 1957-ல் மலாயாவுக்குப் பூரண சுயராச்சியம் வர இருந்தது. சிங்கப்பூர் வாசிகள் பெரும்பாலார் சீன பரம்பரையில் வந்தவர்களே. ஆனல் மலாயாவில், ஊர்ப்பிறந்த மலாயர் சீனரிலும் பார்க்கப் பெரும் பங்கினர். ஆகையால் மலாயாக் குடா நாட்டின் இவ்விரு பாகங்களுக்கும் கிட்டிய உறவிருந்தும், வியாபாரத் தொடர்பில் ஒன்றில் ஒன்று தங்கியிருந்தும், இரண்டுபட்டே இருக்கின்றன. மலாயா சுல்தானரின் ஆட்சியில் அமையும் ஒன்பது சிற்றரசுகளையும் பினங், மலாக்கா என்ற இரு குடியேற்ற நாடுகளையும் கொண்ட நாடு. புத்தியாக, இவர்கள் '' அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்ட அரசராகி,'' தங்கள் அதிகாரம் முற்றையும் கைவிடாவிட்டாலும், பெரும் பாகத்தை மத்திய அரசாங்கத்திற்கு விட்டிருக்கின்றனர். ஆகவே மலாயாவை '' மலாய சமஷ்டி '' எனக் கூறுவது பொருத்த மாகும்.

ஆப்பிரிக்காவில் சுய ஆட்சி பரவுதல்: இரு உலகப் போர் களுக்குமிடையில் பிரித்தானியர் பிடித்து வைத்திருந்த ஏனைய ஆப்பிரிக்க நாடுகளில் சுயராச்சியம் படிப்படியாய் வளர்ந்து வந்தாலும், இரண்டாவது போரின் பின்புதான் கெதியாக விருத்தியடைந்தது.

மத்திய ஆப்பிரிக்காவில் பிரித்தானியர் வசமிருந்த நாடு களாவன, தென்ரொடேசியா, வடரொடேசியா, பின்பு ''நியாச லாந்து'' எனப் பெயர் மாறிய 'பிரித்தானிய மத்திய ஆப்பிரிக்கா' என்பனவாம். தென்ரொடேசியாவில் பிரித்தானிய மக்கள் மிகப் பலர் வசிக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் குடியேறி யவர்களும் அவர்களின் சந்ததியாருமே. வடரொடேசியா வில் இவர்களின் தொகை குறைவு. நியாசலாந்தில் கிட்டத் தட்ட எல்லாரும் ஆப்பிரிக்கச் சாதியினர். தென்ரொடேசியா வில் அதிக சுய ஆட்சி நிலவியதினல் லண்டனில் உள்ள குடி யேற்ற நாட்டுக்கந்தோரினது ஆதிக்கத்திற்குள் அது ஒரு போதும் இருக்கவில்லை. வடரொடேசியாவும் நியாசலாந்தும், சிறப்பாக நியாசலாந்தும், அற்ப சுய ஆட்சி பெற்ற நாடுகள். ஆனல் 1945-ன் பின்பு இம்மூன்று தேசங்களையும் ஒரு சமஷ்டி

அரசாங்கத்திற்குள் சேர்க்க ஓர் இயக்கம் தோன்றி வளர்ந்தது. 1953-ல் பல ஒப்பந்தப் பேச்சுகளின் பின் 'ரொடேசிய நியாசலாந்திய சமஷ்டி ராச்சியம்' ஏற்படுத்தப்பட்டது. அது பூரண சுயராச்சிய நாடல்லாவிடினும், கிட்டத்தட்ட பூரண சுயராச்சிய நாடே. அங்கே வசித்த ஐரோப்பியரும் பிரித்தானிய அரசாங்கமும் மாத்திரமே அந்நாட்டின் பெரும் பொருளாதார அபிவிருத்திக்கு, பிரதானமாக வடரொடேசியாவில் வளர்ந்த பெரும் செம்புச் சுரங்கத் தொழிலுக்குக் காலாயிருந்தனர். அவர்களே அரசியற் தலைவராகவும் விளங்கினர். ஆனால் தமது தெற் கெல்லையிலுள்ள தென்னப்பிரிக்கரின் கொள்கையிலும் வித்தியாசமான கொள்கையை அவர்கள் கடைப்பிடித்தனர். அதாவது, சகல இனத்தவரும் பங்காளிகளாய் வாழுவதே அவர்கள் இலக்காயினும், ஆப்பிரிக்கர் சுய ஆட்சியில் சம அந்தஸ்திற்குப் பக்குவமாகப் பங்காள் போகக்கூடும் என்று நம்பினர்கள்.

கிழக்காப்பிரிக்காவில் கெனியா, உகான்டா, ரங்கன்யீக்கா (இதுஒரு காலம் ஜெர்மானிய கிழக்காப்பிரிக்காவாக இருந்தது) ஆகிய மூன்று நிலங்களும் சுயராச்சிய ஸ்தாபனங்களை வளர்த்து வருகின்றன. கெனியாவில் ஏறக்குறைய 30,000 ஐரோப்பியக் குடிகள் உளர். கிட்டத்தட்ட எல்லாரும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து வந்து குடியேறியவர். கெனியாவில் வாழும் ஆப்பிரிக்க குலத்தினர் பெரும்பான்மையாக ஓரளவு பிற்போக்கானவர்கள். இங்கேயும், குடியேறிய சில வெள்ளைக்காரர் விரும்பாதிருந்தாலும், பங்காளித்துவக் கொள்கை அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. தொகையான இந்திய வணிகரும் அவருடைய சந்ததியாரும் அங்கேயிருப்பது மேலும் சிக்கலுக்கு இடமாகிறது. 1953-ல் ஐரோப்பிய ஆசியக் குடியேற்ற மக்களுக்கும் கிறிஸ்தவ மதத்திற்கும் எதிராக ஒரு கலகம் எண்ணிக்கைகூடிய சாதியான கிக்குயுவருக்குள் கிளம்பியது. இது "மௌ-மௌ" என்னும் பெயருடன் ஓர் இரகசியக் குழுவாக உருவாகியது. அக்குழுவினர் குடியேறியவரில் சிலரையும் விசேஷமாகத் தம்முடன் சேர்ந்துவராத தமது சொந்தச் சாதியினரையும் மிக்க

கோரமாக வருத்தினர். சில வருஷங்களின்பின் மிக்க கஷ்டத்துடன் இந்த இயக்கம் அடக்கப்பட்டது.

உகான்டாவில் வசிக்கும் ஆப்பிரிக்கர் அவ்வளவு பிற்போக்கானவரல்லர். ஆகவே அவர்கள் நியாயமான சுயராச்சிய முறைகளை அனுபவிக்கின்றனர். இந்நாட்டிற் கல்வி மிக வளர்ச்சியடைந்திருக்கின்றது.

ரங்கன்யீக்கா 1957-லும் சுயராச்சியத்தின் முதற் படிகளில் தான் நின்றது. அங்கேயுள்ளவர் ஏறக்குறைய அனைவரும் ஆப்பிரிக்கர். ஐரோப்பிய ஆசிய குடியேற்ற மக்கள் அவர்களுடன் சிநேகமாய் வாழ்கின்றனர் போல் தோன்றுகிறது.

மேற்காப்பிரிக்காவிற்ருன் அபிவிருத்தி மிகத் துரிதமாயிருக்கிறது. அங்குள்ள மூன்று குடியேற்ற நாடுகள், பொற்கரை, சியெரூலியோன், காம்பியா, நெடுங்காலமாக பிரித்தானிய ஆட்சியில் இருந்து வருகின்றன. நான்காவதும், மேற்காப்பிரிக்காவில் எவ்வளவோ பெரியதுமான நைஜீறியா, 16-வது அத்தியாயத்திற் கூறப்பட்டவாறு, ஆப்பிரிக்காக் கண்டத்தை ஐரோப்பியர் பங்கிட்டபொழுது, பிரித்தானியர் வசமாயிற்று. இரண்டாமுலகப் போரின் பின்பு, இந்நாடுகளெல்லாவற்றிலும் கல்வி, பொருளாதாரம், சுய ஆட்சி இம்மூன்றும் மிக விரைவாய் விருத்தியடைந்திருக்கின்றன. சியேரூலியோனும் காம்பியாவும், இரண்டும் சிறிய நாடுகளாயினும் ஓரளவு சுயராச்சியம் பெற்றிருக்கின்றன. நைஜீறியா, வடக்கு, கிழக்கு, மேற்கென முப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு சமஷ்டி அரசாங்கத்தின் கீழ் ஒவ்வொரு பகுதியும் தனித்தனி ஒவ்வொரு சட்டசபை வைத்திருக்கிறது. இவற்றிற்கு ஒரு நான்காவது பகுதியுங் கூட்டப்பட்டது. அதாவது ஒரு காலம் ஜெர்மானியருக்கிருந்த 'பொறுப்பாட்சி' நாடாகிய கமறூன்ஸ்; நைஜீறியா முழுவதற்கும் ஒரு மத்திய சட்டசபை உண்டு. இந்த நாடு பூரண சுயராச்சிய நிலைக்குவர இன்னுங் கனகாலமில்லை.

பொற்கரை பூரண சுயராச்சியம் அடைந்து விட்டது. 1957 பங்குனியில், காளை எனும் பெயருடன் அது விடுதலை பெற்றது. ஆப்பிரிக்கர் வசிக்குங் குடியேற்ற நாடுகளில் இதுவே

முதன்முதலாகப் பொதுநல நாடுகளின் பூரண சுயராச்சிய நாடாகியது. இங்கிலேயிலிருந்து அது முன்னேறுவதை ஐரோப் பாவிலும் ஆசியாவிலும் இருக்கும் அதன் கூட்டாளி நாடுகள் மிக ஆவலுடன் கவனித்துவரும்.

மேற்கிந்திய தீவுகள்: கறிபியக் கடலில் உள்ள பிரித் தானிய குடியேற்றத் தீவுகள் ஒத்துக்கொண்டபடி ஒரு சமஷ்டி ஆட்சித்திட்டம் ஒழுங்காயிருக்கிறது. அவற்றில் சிலவற்றில், ஒரு சில கட்டுப்பாட்டுக்கமைந்த சுயராச்சியம் கனகாலமாக நிலவி வருகின்றது. இத்திட்டம் 1958-ல் நடைமுறையில் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது இன்னும் ஒரு பூரண சுய ஆட்சி நாடு பொதுநல நாடுகளில் கூடிவிடும்.

உதவிக் குறிப்புக்கள்.

சுயாதீன நாடுகளும் குடியேற்ற நாடுகளும் உறவுறும் அந்தப் பெரும் பொதுநல நாட்டுக்குழு ஆதியில் பிரித்தானிய சாம்ராச்சியமாகத் தொடங்கிப் பின்பு, பிரித்தானிய பொதுநல நாடுகளாக வளர்ந்து, இன்று பொதுநல நாடுகளாக விளங்கி வரும் வரலாற்றை, 13—16-ம் அத்தியாயங்களில் விடுபட்ட இடத்திலிருந்து மீண்டும் இவ்வத்தியாயத்தில் எடுத்தாளு கின்ரோம். பல தேசங்கள்—முக்கியமாக ஆசியாவிலும், ஆப்பிரிக்காவில் ஒன்றும்,—விடுதலேயாகி சுய ஆட்சி நாடு களாய் பொதுநல நாட்டு வரிசையில் எல்லாம் சம பங்காளி களாய் நிலவுவதை ஒரு புறமும், மறுபுறம் ஐரோப்பிய நாடாகிய ஐறிஷ்ய குடியரசும், ஆசிய நாடாகிய பர்மாக் குடி யரசும், பொதுநல நாடுகளிற் சேர விரும்பாமல் நிற்பதையும் காண்கிரோம். இத்தகைய முன்னேற்றம், ஒன்றில் அற்ப கலகத்துடன் அல்லது கலகமே இல்லாமல், வந்தது முக்கிய மாகக் கவனிக்கத்தக்கது. மேலும், முன்பு ஐக்கிய ராச்சியத் தின் கீழமைந்த வேறு குடியேற்ற நாடுகள் சுயராச்சிய முறை களே மேலும்மேலும் அடைவதையும், பார்க்குமளவில், இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை, கானா போல் பொதுநல நாடுகளில் முழு உரிமை அங்கத்துவம் பெறப்போவதையும் காண்கிரோம்.

பொதுநல நாடுகளைப்பற்றி எடுத்தாளும் நூல்கள் ஏராளம். ஆனலும், சுயாதீனமும் சுய ஆட்சியும் வாய்ந்த

இத்தேசங்களின் நட்புத்தொடர்பு முறைகள் நாளுக்கு நாள் வேறுபடுவதால், இந்த நூல்கள் விரைவில் காலந் தப்பியவை யாகி விடுகின்றன. அவ்வண்ணமே காலத்தில் இவ்வத்தியாய மும் ஆகும்.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1887. முதலாம் குடியேற்ற நாட்டு மகாநாடு.
1917. சாம்ராச்சிய மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகள் சமுகமளித்தது.
1931. உவெஸ்ட் மின்ஸ்டர் சட்டம்.
1947. இந்தியாவுக்குப் பிரித்தானியா சுதந்திரங் கொடுக்க, அது இந்தியா (பாரதம்) பாக்கிஸ்தான் என இரு நாடுகளாகப் பிரிவு பெற்றது. பர்மா பொதுநல நாடுகளினின்றும் விலகியது.
1948. இலங்கைக்கு பிரித்தானியா சுதந்திரம் அளித்தது.
1949. ஐறிஷ்ய குடியரசு பொதுநல நாடுகளினின்றும் விலகியது.
1953. மலாயச் சமஷ்டி.
1957. பொற்கரை(கானா)க்கு பிரித்தானியா சுதந்திரம் அளித்தது.

29. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் தோன்றிய புதிய தேசங்கள். ஐக்கிய நாடுகள்.

ஆசியாவிற் தோன்றிய புதிய நாடுகள்: பொதுநல நாடு கட்குட்படச் சுதந்திரம் பெற்ற நாடுகளையும்—அதாவது, இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை—வெளியேபோன பர்மா வையும் தவிர, ஆசியாவில் வேறுபல நாடுகளும் புதிதாகத் தோன்றின. முக்கிய காரணம், யப்பான் படையெடுத்து நாடு பிடித்ததும், பின்பு தோல்வியுற்றதுமேயாகும்.

இந்தோனேசியா: இவைகளுள் முதலாவதாக இந்தோ னேசியா: இது தென்கிழக்காசியாவின் பெரியவும் சிறியவு

மான தீவுகளிலே டச்சர் முன்பு தமது குடியேற்ற நாடுகளாக வைத்தாண்டுவந்த தேசங்களைக் கொண்டுள்ளது. இவற்றுட் பெரியன ஜாவா, சுமாத்திரா, செலிபீஸ் என்பனவும் போர்னியோவின் பெரும் பாகமும். இவையெல்லாம் யப்பானியரால் பிடிக்கப்பட்டன. அவர்கள் வெளியேறியபின் டச்சர் திரும்பி வந்தனர். ஆனால் அங்கே வசிக்குங் குடிகள் விசேஷமாய் ஜாவாத்தீவினர், டச்சரின் ஆட்சியின் கீழ் அமையவிரும்பவில்லை. அதிக உடன்படிக்கைப் பேச்சுகளும், ஓரளவு சண்டையும் நடந்தேறிய பின்பு டச்சர் அவர்களுக்குச் சுதந்திரங் கொடுத்தனர். இவ்வாறு இந்தோனேசியக் குடியரசு ஒரு புது நாடாக நிலைநாட்டப்பட்டது. கிட்டத்தட்ட 600 லட்சம் மக்களைக் கொண்ட நாடு. சாதியில் இவர்கள் பெரும்பாலார் மலாயர். சமயத்தில் முஸ்லீம்கள். முன்னே பட்டேவியா என்றும், இன்று யக்காத்தரா என்றும் கூறப்படுந் தலைநகரில் நிலவும் அரசாங்கத்தின் முக்கிய கடமையாவது சட்ட ஒழுங்கை நாட்டில் மீண்டும் அமைப்பதேயாகும். யப்பானியர் வெளியேறியபின் டச்சரின் குடியேற்ற நாட்டாட்சினின்றும் விடுதலை அடைய நிகழ்ந்த போராட்டத்தில் சீர்குலைந்த சட்டஒழுங்கு இன்னும் முற்றுகத் திருப்பி அமைக்கப்படவில்லை.

பிலிப்பைன் தீவுகள்: இன்னும் கிழக்கிலே, பிலிப்பைன் தீவுகளிலிருந்து அ. ஐ. நாடு முற்றுக நீங்கினது. யுத்தத்தின் முன்னரே அவைகளுக்குப் பெரும் பங்கு சுயஆட்சி கொடுக்கப்பட்டிருந்தது. முன் அளித்த வாக்குறுதிப்படி 1946-ல் பூரண சுயராச்சியம் கொடுபட்டது. அன்றுமுதல் இந்தக் குடியரசு அ. ஐ. நாடுடன் மாத்திரமன்றி மேற்கைரோப்பிய நாடுகளுடனும் மிக நட்புப் பாராட்டி வருகின்றது.

சீனம்: சீனத்தில் நிகழ்ந்த மாற்றங்களே ஆசிய நாடுகளில் ஏற்பட்டவை எல்லாவற்றிலும் சிறப்பானவையும் குறிப்பிடத்தக்கவையுமாகும். சண்டைக்காலத்தில் வலுவாய்ந்த சீனக் கொம்முனிஸ்ட் பட்டாளங்கள், யப்பானியருடன் போர் புரிந்தும், சியாங்கைஷெக்குடன் ஒத்துழையாமலும், அந்தப் பெரிய நாட்டின் வடமேற்குப் பாகங்களை ஆண்டு வந்தன. போர் முடிவு பெற்றபின் அத்தலைவன் (சியாங்) தகுந்த

அரசாங்கத்தை அமைக்க முடியாதவனுயிருந்தான். கோடிக் கணக்காக அமெரிக்க டொல்லர் நாட்டுக்குள் பெருகியும், அது ஜனங்களுக்குச் சுவறவில்லை. கொம்முனிஸ்ட் கட்சியில் தோன்றிய திறமை வாய்ந்த தலைவன், மாசேதுங் சியாங்கை ஷெக் மீது போர் தூண்டி, அவனைச் சீனப் பெருநிலத்திற்கு வெளியே போய் போர் மோசா வெனும் பெருந் தீவிற் சேரத் துரத்தினன். அங்கே அமெரிக்க கடற்படை அடைக்கலம் அளிக்க சியாங் தன் படைகளுடன் தங்கியிருக்கிறன்.

மா சேதுங்

கொம்முனிஸ்ட் சீனம்: சீன மக்கள் குடியரசை கொம்முனிஸ்ட் கட்சி நிலைநாட்டியது. ஏறக்குறைய 50 கோடி மக்களைக் கூட்டிய பெரும் ஜனத்தொகையின் பயனுகவும், அவர்களிடத்தே புதிதாகப் பிறந்துள்ள ஆற்றலின் பயனுகவும் அந்நாட்டின் செல்வாக்கு ஆசியாக் கண்டம் முழுவதிலும் மாத்திரமன்றி உண்மையில் ஜெகம் எங்கும் பரவி வரும் என்பது திண்ணம். அங்கரசாளும் கொம்முனிஸ்ட் கட்சியார் தமது அரசியல் முறைகளை சோவியெற் ஐக்கிய நாட்டு முறைகளைப் போல அமைத்திருக்கின்றனர். இயற்கை நியதியின்படி, அவர்களும் ஐரோப்பிய கொம்முனிஸ்ட் தேசங்களுடன் சார்பா யிருக்கின்றனர். விவசாயப் பகுதியில் பெரும் மாற்றங்களை வருவித்து, றெயில், ஆகாயப் போக்குவரவுச் சாதனங்களை மிகவுமதிகமாய் விருத்திசெய்து, கைத்தொழில்களையும் நல்ல திட்டங்களால்

அமைக்க பெருமுயற்சி செய்கின்றனர். இயற்கை வளப் பொருள்கள் மிகவும் நிரம்பிய நாடு சீனம். இதில் பெரும் பகுதி இன்னும் விருத்தி செய்யப்படாது கிடக்கின்றது. ருஷ்ய யந்திர அறிஞர்களின் உதவியைச் சீன அரசு அதிகம் உபயோகித் திருக்கிறது. சோவியெற் ஐக்கிய தேசத்திலிருந்து கைத் தொழி லபிவிருத்திக்காகப் பணத்தையும் பொருளையும் கடன் வாங்கியுள்ளது. எனினும் பல துறைகளிற் சீனவரசு ருஷ்யா வைப் பின்பற்றினாலும் எந்த நேரமென்றாலும் தான் நினைத்த வழியிற் செல்லமுடியும். தற்கால முறையில் நாட்டை அபி விருத்தி செய்ய உண்மையில் இப்போதுதான் சீனர் தொடங்கி யுள்ளார். ஒரு வேளை இன்னும் பல வருடங்களுக்குச் சீன மக்களின் ஆற்றலும், பெரும்பாலும் இந்த நோக்கத்திலே ஈடுபடலாம்.

கோறியா: இரண்டாவது உலகப்போர் முடியச் சில வாரங்களுக்கு முன்னர்தான் சோவியெற் ஐக்கிய நாடு யப்பான் மீது போர்கொண்டது. அதுவரையும் போர்துவக்க மறுத்து வந்தது. இப்போது, கோறியாவின் வடபாதியைப் பிடித்து அங்கேயொரு கொம்முனிஸ்ட் ராச்சியத்தை நிறுவியது. 1910-லிருந்து ஆண்டுவந்த யப்பானியரினின்றும் அந்த நாடு விடுதலையானவுடன் தென்பாதியில் ஜனநாயக முறை யான குடியரசு அமைக்கப்பட்டது. சீன, ருஷ்ய கொம்மு னிஸ்ட்டுகளிடம் ஆயுதங்களையும் பெற்று அவைகளை உபயோ கிக்கும் முறைகளையும் பழகியுள்ள வடகோறியர், 1950-ன் மத்தி யில் திடீரெனத் தென்கோறியாவைத் தாக்கி, ஆயுதமும் ஆயத் தமுங்குறைந்த அந்த நாட்டின் சேனைகளைப் பின்வாங்கும்படி துரத்தினார்கள். ஐக்கிய நாடுகள் இதை 'நேர்முக ஆக்கிர மிப்பு' எனக்கொண்டு அதைத் தடுக்கத் தீர்மானித்தன. தென் கோரியரை மீட்கப் படைகள், பெரும்பாலும் அமெரிக்கப் படைகள், அனுப்பப்பட்டன. இவை, வட கோரியரைத் தெற்கி னின்றுந்துரத்தி, சீனத்துடன்தொடும் வடஎல்லை வரையும் சென்றன. ஆனால் அந்த வேளையில் சீனமக்கட் குடியரசு நூறுயிரக்கணக்கான சீனப்போர் வீரரை (தொண்டர் எனக் கூறி) சடுதியாய் அனுப்பி, ஐக்கிய நாடுகளின் சேனையை வட

தென் கோறியாக்களின் எல்லைக்குமப்பால் துரத்தினது. ஐக்கிய நாடுகளின் துருப்புக்கள் கடைசியாக, இழந்த நிலத்தில் ஓரளவைத் திரும்பவும் பிடித்து, தமது சேனையின் முதல் வரிசையை வட கோரியாவில் மறுபடியும் அமைத்தன. இச்சண்டை சிறு காலம் இழுபட்டபின், 1953-ன் கோடையில், சண்டை நிறுத்தமொன்று ஒழுங்கு பண்ணப்பட்டது.

வட, தென்கோறியாக்களென இரு குடியரசு நாடுகள் முன்போலவே இருந்து கொண்டன. 1953 தொடக்கம் நிலையற்ற சண்டை நிறுத்தம் இவைகளுக்கிடையில் நடந்து வருகிறது. திரும்பவும் ஆயுதப்போர் அங்கே மூண்டு கொள்ளும் என்ற பயம் என்றும் இருக்கின்றது.

இந்தோசீனம்: யுத்தத்திற்கு முன்னே, சுய ஆட்சி நாடாகிய சையம் (அல்லது தாய்லாந்து) ஒன்றைத் தவிர, இந்தோசீனப் பெருங்குடா நாடு முழுவதும் பிரான்சினது குடியேற்ற நாடுகளுள் ஒன்றாயுள்ளது. யப்பானியர் அவைகளைப் பிடித்தாண்ட காலத்தில் பிரான்சிய உத்தியோகத்தர், அதிகாரம் செலுத்தியோ செலுத்தாமலோ அங்கே இருந்து விட்டு, அவர்கள் நீங்கிய பின் முன்போலத் தமது ஆதிக்கத்தைச் செலுத்தப் பார்த்தனர். பாதிச் சுதந்திரம் பெற்றுள்ள கம்போடியா, லேயோஸ் என்ற இருதேசங்களும் தொடக்கத்திலே இதை அவ்வளவு எதிர்க்கவில்லை. ஆனால் குடா நாட்டின் கிழக்கிலே, இன்று வியெற்நாம் என்று கூறப்படும் பெரும் நாட்டின் வடபாகத்தில், யப்பானியர் ஆண்ட காலத்திலும் பின்பும் கொம்முனிஸம் அதிகம் பரவிக்கொண்டது. ஆங்கே யுத்த காலத்தில் யப்பானியரை எதிர்த்துப் போராடிய கொம்முனிஸ்டுகள், வியெற்மின் என்ற பெயருடன் ஒரு சுயேச்சை நாட்டை அமைத்து, பிரான்சியருடனும் தென் வியெற்நாமியருடனும் கவனிப்புக்குரிய வெற்றியுடன் போர் புரிந்தனர்.

தமது சிறைநாடுகளை மக்களின் இஷ்டமின்றி ஆளுவதற்காக, மேலும்மேலும் பணத்தைக் கொட்டிப் போர் புரிந்து, இந்தோசீனத்தில் தமதாதிக்கத்தைநிலைநாட்டுவதிற் பயனில்லையென்றது பிரான்சியருக்குத் தெளிவானது. ஆகவே 1954-ல்

அவர்கள் வியெற்மின் உடன் சமாதான ஏற்பாடு செய்து, தென்வியெற்நாமை விட்டு விலக உடன்பட்டு, கம்போடியா, லேயோஸ் ஆகிய இருதேசங்களுக்கும் பூரண சுதந்திரம் அளித்தனர். வடக்குத் தெற்கென்றுள்ள இரு வியெற்நாம்களையும் ஒரு நாடாகச் சேர்ப்பதற்கு முயற்சிகள் எடுபட்டன. எனினும், தெற்கை ஆளுபவர் வடக்கை ஆளும் கொம்முனிஸ்டுகளிற் கொண்ட ஐயுறவினால், இன்று, 1957-ன் மத்திவரை, இவை கைகூடவில்லை. பார்க்கிற அளவில், இவ்விரு குடியரசுகளும், இன்னும் சில காலமென்றாலும், கோறியாபோல், வடக்குக் கிழக்கென வெவ்வேறு நாடுகளாக இருந்துகொண்டே வரும்.

மத்திய கிழக்கு: தூர கிழக்கில் நிலை குழப்பமுடையதாயிருக்க, கிட்டிய கிழக்கிலும் மத்திய கிழக்கிலும் நிலை உலக சமாதானத்திற்கு இன்னும் அதிக இடைஞ்சலாயிருந்தது.

1882 முதல் ஆண்டு வந்த பிருத்தானியரின் கையினின்றும் எகிப்து கழன்று வருவதைப் 16-வது அத்தியாயத்தில் வாசித்தறிந்தோம். முதலாமுலகப் போரின்பின் பழைய துருக்கிய சாம்ராச்சியம் பிளவுண்டதனால் முளைத்தெழுந்த புது நாடுகளைப் பற்றியும்; பலஸ்தீனவையும், இருக் ஜோர்டன் என்று கூறப்பட்டு வந்த இரு நாடுகளையும் சர்வ தேச சங்கம் பிரித்தானியாவுக்குப் "பொறுப்பாட்சிப் பிரதேசமாக" ஒப்படைத்ததைப் பற்றியும்; அவ்வாறே பிரான்சுக்கு சீரியா கொடுபட்டதைப் பற்றியும், 22-வது அத்தியாயத்தில் வாசித்துள்ளோம்.

கிறிஸ்தவ யுகத்தின் முதலாம் நூற்றாண்டிலேயே, ரோமரால் பலஸ்தீனவிலிருந்து துரத்தப்பட்டு, இன்று உலகெலாம் பரவியுள்ள யூதமக்களுக்கு அதே நாட்டைத் திரும்பவும் அவர்களின் "தேசிய இல்லமாக" வழங்கவேண்டுமென முதலாமுலகப் போர் முடிவில் ஒத்துக்கொள்ளப்பட்டது. பெருமைக்குரிய அந்த ஜனங்கள் தங்கள் உற்பத்தி நாட்டையொருபோதும் மறந்ததில்லை. ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்காக் கண்டங்களிலெல்லாம் சிலபட்டிருந்தாலும் தம் இன, மத உணர்ச்சியை என்றும் பேணி வந்திருக்கின்றனர். தாம் வசித்துவந்த நாடுகளில் வாழும் மக்களுடன் அவர்கள் ஒருபோதும் இரண்டறக் கலந்ததில்லை. பலவகையான கடும்

இன்னல்களே ஏனையோர் விதித்து வந்தபோதிலும், பிழைத்துக் கொண்டனர். அவர்கள் பட்டுள்ள இம்சைகளில் மிகவுங் கொடூரமானதும் கடைசியாக நிகழ்ந்ததும் ஜெர்மனியில் ஹிட்லரின் அரசாங்கம் விதித்தது. ஆயிரக்கணக்கான யூதர் அதில் மாண்டார்கள். பல்லாண்டுகளாக, 'சயனிசம்' என் றெரு இயக்கம், தாம் பலஸ்தீனுவில் திரும்பவுங் குடிகொள் ளும் இலக்குடன் சில யூதருக்குள் பரவியது. 'தேசிய இல்லம்'



இஸ்றேலும் அராபிய நாடுகளும்.

நிறுவப்பட்ட பின்னர் இந்த இயக்கம் உலகெங்குமுள்ள யூதருக்குள் மிகவும் வலிந்து வளர்ந்தது.

இருபோர்களுக்கும் இடைக்காலத்தில் ஆயிரக்கணக்காகப் பலஸ்தீனுவில்வந்து அவர்கள் குடியேறினர். பல நூற்றாண்டு களாக அங்கே வாழ்ந்து வந்த அராபியருக்கு இது வெகு வெறுப்பாயிருந்தது. வலியும் விவேகமும் வாய்ந்த யூத மக்கள் அங்கே குடியேறியதால் அந்தச் சிறு தேசத்தின் செல்வம் மிகவும் அதிகரித்ததாயினும், யூதர் தங்கள் நிலங்களை விலை கொடுத்து வாங்கி வருவதைக் கண்டு அராபியர் வெகு ஆத்திரங்கொண்டனர். தாம் வசிக்க இடமேயின்றி வெளியே தள்ளப்படுவார்கள் என்றஞ்சினர். பயந்தது நியாயமின்றி யல்ல. பெருங் கலகங்கள் நிகழ்ந்தன. இரத்தம் சிந்தப் பட்டது. கலகத்தை அடக்கப் பிரித்தானியர் கைகொண்ட முயற்சிகளை அராபியர் வலாற்காரமாக எதிர்த்தனர். இந்த 'யூதரின் தேசிய இல்லம்' நிறுவியதால் எழுந்த சிக்கல்களைத் தீர்க்கவென்று பிரித்தானிய அதிகாரிகள் கொண்டுவந்த திட்டங்கள் ஒன்றையும், யூதரோ, அராபியரோ, யாரும் ஏற்றுக்கொள்ள வில்லை.

1939-ல் யுத்தந் தொடங்கியதும் இந்தக் கலகங்கள், அப் போதைக்காவது, நின்று விட்டன. சீரியாவைத் தாக்கிப் பிடிப்பதற்காக நேச நாடுகள் பலஸ்தீனுவைத் தளமாக உபயோ கித்தன. கடல்கடந்த ஏனைய பிரான்சியர் பலரைப்போலல் லாது, சீரியாவிலுள்ள பிரான்சிய உத்தியோகத்தரும் படை வீரரும், ஜெர்மானிய கட்டுப்பாட்டுக்குட்பட்டுள்ள பிரான்சிய அரசாங்கத்திடம் பற்று மாறுதிருந்தனர். சீரியாவைப் பிடித்த பின்பு 'சுயாதீனப் பிரான்சிய' அரசாங்கம் அங்கே தமது பொறுப்பாட்சியை முடித்துக்கொள்ள ஒத்துக்கொண்டது. ஆகவே, 1943-ல் சீரியாவும் லெபனனும் சுயாதீனக் குடியரசு களாக உற்பத்தியாயின.

யுத்தம் முடிவு பெறத் திரும்பவும் பலஸ்தீனுவிற் கலகம் தொடங்கியது. இந்த முறை பிரித்தானிய அதிகாரிகளுக் கெதிராக ஆயுதம் தூக்கியவர் யூதர் என்றாலுங் கடைசியாக, 1948-ல் யூதரின் "தேசிய இல்லம்" இஸ்றேல் எனும் பெய

ருடன் ஒரு புது நாடாக நிலவவேண்டும் என்று, பிரித்தானியரின் சம்மதத்துடன் ஐக்கிய நாடுகளால் தீர்க்கப்பட்டது. 1946-ல் பிரித்தானியர் ஜோர்டானுக்குப் பூரண சுயராச்சிய மளித்தனர். ஆயினும் அந்நாடு ஒருறவுடன்படிக்கையால் பிரித்தானியாவுடன் இணைக்கப்பட்டிருந்தது. அதன் விதிப்படி ஜோர்டன் படையைப் பராமரிப்பதற்காகப் பல கோடிப் பணத்தை வருஷா வருஷம், 1956 வரை, அந்நாட்டிற்குப் பிரித்தானியா கொடுத்து வந்தது. 1957-ல் இந்த உடன்படிக்கை இருவரின் சம்மதத்துடன் நிறுத்தப்பட்டது.

இஸ்றேலை ஸ்தாபித்ததைப் பற்றி எகிப்தும் மற்றும் புதிதாய்த் தோன்றிய அராபிய நாடுகளும் பெருங் கோபங் கொண்டன. 1949-ல் அவைகளில் ஐந்து நாடுகள் இஸ்றேலுடன் போர் தொடுத்தன. ஆனால் இஸ்றேலியர் வெகு அற்பகாலத்துக்குள் திறமையான படையொன்றை அணிவகுத்திருந்தமையால் தம்முடன் பொருத வந்த ஆயுதக் குறைவும் அணிமுறைக் குறைவுமுடைய துருப்புக்களுடன் தோல்வியடையாமற் போராடினர். இரு மாதங்களாகப் போர் நடந்த பின்பு ஐக்கிய நாடுகள் போர் நிறுத்தமொன்றை ஒழுங்கு பண்ணக்கூடியதாயிருந்தது. இதன் பயனாக முன்பு வைத்திருந்ததிலும் பார்க்கக் கூடிய நிலம் இஸ்றேலுக்குக் கிடைத்தது. நிலைபரமான ஏற்பாடு ஏதேனும் செய்ய முயன்றும், முடியவில்லை. இந்தப் பகுதி உலக சமாதானத்திற்கு இடைஞ்சலான இடமாகவே இருந்துகொண்டு வந்தது.

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்னும் பின்னும் அடுத்த காலத்தில் மத்திய கிழக்குத் தேசங்கள் சிலவற்றில் மிகப் பெரும் மாற்றம் வந்து கொண்டிருந்தது. பார்சிகம் (இன்று இரான் என வழங்கப்படும்), இராக், அராபியா வாகிய நாடுகளில் மண்ணுக்குக் கீழே கோடாகோடிக் கலன் பெற்ரோல் எண்ணெய் அடைபட்டிருக்கிறதெனக் காணப்பட்டது. அது யந்திரங்களை இயக்கும் சக்தியின் முதற் பொருளாகையால், உலகின் கைத்தொழில் தேசங்கள் மேலும்மேலும் அதிலே தங்கியிருக்க வேண்டி வந்தது. மத்திய கிழக்கில் வாழும் மக்கள் எண்ணெயைத் துறைமுகங்களில் நிற்கும் 'டாங்கர்'

கப்பல்களுக்கு அனுப்பவோ, விதம்விதமான பொறிகளில் உபயோகிக்கக்கூடிய வண்ணம் அதை செப்பம் பண்ணவோ வழிவகை அறிந்திலர். யந்திரக்காரரின் சேவையையோ, அல்லது விலையுயர்ந்த யந்திரங்களையோ, விலை கொடுத்து வாங்க முதற்பணமுமற்றவர். இவையெல்லாவற்றையும் செய்து முடித்தவை மேற்குத் தேசங்களும், அ. ஐ. நாடும், முக்கியமாகப் பிரித்தானியா. இந்த எண்ணெயால் வந்த பணத்தில் கிட்டத்தட்டப் பாதிப்பங்கு அதை நடப்பித்த கம்பனிகளுக்கும், மறுபாதி எண்ணெயைத் தரும் நிலத்தை அரசாண்ட மன்னருக்கும் போனது.

இஸ்றேல் நாட்டிற்கு அடிகோலியதைப் பற்றி அராபிய தேசங்கள் பிரித்தானியாவையே குற்றங்கூறும் மனத்தவாயிருந்தன. விசேஷமாக எகிப்திலே இந்த உணர்ச்சி மிகவுங் கசப்பாயிருந்தது. மேலும், சுவேஸ்கால்வாயில் பிரித்தானியத் துருப்புகள் நிலைத்திருப்பதை எகிப்தியர் கடுமையாய் எதிர்த்தனர். ''சீதளப்போர்'' போய் யுத்தம் மூளுங்காலத்தில் உபயோகிப்பதற்கென்று அங்கே ஒரு பெரும் பிரித்தானிய ராணுவத் தளம் கட்டப்பட்டிருந்தது. 1951-ல் பிரித்தானியருக்கு விரோதமாகக் கலகங்கள் கிளம்பின. அதன்பின் எகிப்திய படைத்தலைவர் சிலர் கூடிய குழுவொன்று தம் மன்னர் பாரூக்கை அரசினின்றும் விலக்கி, ராணுவ அதிகாரத்தின் கீழ் அடங்கிய குடியரசாக எகிப்தை நிறுவினர். ஜெனறல் நாகு உவிப்பை ஜனாதிபதியாக்கினர். ஆனால் 1954-ல், உண்மையில் நாட்டையாண்டு வந்த இந்தப் படைத்தலைவரின் குழுவினர் அவரையும் நீக்கி விட்டு, அந்த இடத்தில் தங்களிலொருவனான கேனல் நஸ்ஸர் என்பவனை அமைத்தார்கள். சுவேஸ் கால்வாய் ராணுவத் தளத்தையும், எழுபது வருடமாக பிரித்தானிய—எகிப்திய கூட்டுறவு மேற்பார்வையின் கீழ் அரசாளப்பட்டு வந்த சுடானையும் பற்றிய ஏற்பாடுகள் செய்ய பிரித்தானியருடன் எகிப்தியத் தலைவர் பேச்சுகள் தொடங்கினர். தாம் விரும்பியவிதமே செய்யச் சுடானியருக்கு முழு அதிகாரம் வழங்கப்படல் வேண்டும் என்று இரு பகுதியாரும் ஒத்துச் சுடானிய விஷயத்தை முற்றுக்கட்டினர்; சுடானியர் தேசத்தின் சுதந்திரத்தையே

விரும்பித் தெரிந்தனர். தங்களுடன் சேர்ந்துகொள்ளுவர் என்று காத்திருந்த எகிப்தியருக்கு இது மிகவும் வெறுப்பாக விருந்தது. இவ்வாறு இன்னும் ஒரு புதிய சுயேச்சை நாடு ஆப்பிரிக்காவில் நிலவியது.

சுவேஸ் ராணுவத்தள விஷயம் தொந்தரவு கொடுத்துக் கொண்டே வந்தது. பெரும் யுத்தம் மூண்டால் திரும்பவும் அந்தத் தளத்தில் தங்கள் ராணுவங்களை அமைக்கும் உரிமை ஒன்றிருக்கத் தங்கள் படைகளை அங்கே யிருந்து நீக்கக் கடைசியிற் பிரித்தானியர் சம்மதித்தனர்.

நைல் நதியை மறிக்கக்கூடிய பெரிய அணை ஒன்றைக் கட்டுவதற்காக வேண்டிய பெருந்தொகைப் பணத்தைக் கடன் வாங்கப் பிரித்தானியருடனும் அமெரிக்கருடனும் கேனல் நஸ்ஸர் பேச்சுகள் தொடங்கினன். நாட்டின் செல்வத்தைச் சமாதான வழிகளிற் செலவு செய்யாது, கொம்முனிஸ்ட் நாடு களில் வாங்கிய போர் ஆயுதங்களையும் விமானங்களையும் கொண்டு சேனையையும் ஆகாயப் படையையும் வளர்ப்பதற் காக நஸ்ஸர் ஏராளமான பணச்செலவு செய்வதுபோற் தோன்றினபடியால் அவர்கள் அவனை நம்பவில்லை. ஆகவே, 1956-ல் அவர்கள் பணத்தைக் கடன் கொடுக்க மறுத்தார்கள். அதற்குப் பழிவாங்க எண்ணி, சுவேஸ் கால்வாயை அது தொடங்கிய காலந்தொட்டு நடத்திவந்த கம்பனியாரிடமிருந்து நஸ்ஸர் பறித்தெடுத்தான். இது பிரித்தானிய அரசாங்கத்திற் கும், அக்கால்வாயாற் போக்குவரவு செய்து வியாபாரம் பண் ணுங் கப்பல்களை உடைய ஏனைய அரசாங்கங்களுக்கும் வெகு கோபத்தை மூட்டினது. ஆகவே அந்த அலுவல் ஐக்கிய நாடு களின் தீர்ப்புக்கு விடப்பட்டது. பின் நிகழ்ந்தவை இந்த அத்தி யாயத்தில் இனிமேற் கூடுப்படும்.

வட ஆப்பிரிக்கா: வடமேற்கு ஆப்பிரிக்காவின் பெரும் பாகத்தை எவ்வாறு பிரான்சியர் தம்முடைய அதிகாரத்தின் கீழ்க்கொண்டு வந்தார்கள் என்று 16-வது அத்தியாயத்திலும், இத்தாலியர் எவ்வாறு திரிப்போலியைப் பற்றினர் என்று 21-வது அத்தியாயத்திலுங் கவனித்தோம். யுத்தம் முடி வடைந்தபின், லிபியா என்ற பெயருடன் திரிப்போலி பிரித்

தானிய "பொறுப்பில்" ஐக்கிய நாடுகளால் விடப்பட்டது. ஆனல், 1951-ல் அந்தத் தேசம் பூரண சுயஆட்சி நாடானது. பிரித்தானியர்வுடன் உறவுடன்படிக்கை செய்திருக்கின்றது.

தேசிய இயக்கங்கள் மொரோக்கோவிலும் ரூனிசியாவிலும் எழும்பின. 1956-ல் பிரான்சியர், முழுமனமற்றவராயினும், அந்நாடுகளுக்குச் சுயராச்சியங் கொடுத்தனர். அதேமாதிரி இயக்கம் அல்ஜீறியாவிலுந் தோன்றியது. ஆனல் இங்கேயுள்ள சூழ்நிலை ஓரளவு வித்தியாசம். ஏறக்குறையப் பத்து லட்சம் பிரான்சிய மக்கள் அல்ஜீறியாவில் வாழ்கின்றனர். ஆகவே பிரான்சியர் அந்த நாட்டைப் பிரான்சின் ஒரு பகுதியாகவும், அங்குள்ள மக்களைப் பிரான்சிய பிரசைகளாகவுங் கருதி வருகின்றனர். ஆனல் எகிப்து ஏனைய முஸ்லிம் நாடுகள் ஆகிய இவற்றின் ஆதரவோடு உள் நாட்டுக் கலகம் மூண்டு, இன்றும், 1957-ன் மத்தியில், எரிந்து கொண்டேயிருக்கிறது. மொரோக்கோ, ரூனிசியா நாடுகளுக்கு அளித்தது போன்ற சுயராச்சியம் அளியாமலே, அல்ஜீறியாவின் வில்லங்கமான சிக்கல்களை விடுவிக்கப் பிரான்சியர் அப்போது வழிவகை தேடிக் கொண்டேயிருந்தனர்.

ஐக்கிய நாடுகள்: ஐக்கிய நாடுகள் நித்திய சமாதானத்தை நிலைநாட்டி, யுத்தங்களை, உலக யுத்தங்களைப் பொறுத்த வரையிலாவது, ஒழிக்கும் என்று உலகமக்கள் நம்பியிருந்தார்கள், முக்கியமாக மேற்குத் தேசங்களிலும் புதிதாகத் தோன்றிய ஆசிய நாடுகளிலும் வாழ்பவர். இந்த நம்பிக்கை "சீதளப் போரினல்" கவலைக்கிடமாகக் குன்றிவந்தது. 1945-ல் அமைக்கப்பட்ட பிரகாரம், ஐக்கிய நாடுகள், ஐம்பத்தொரு அங்கத்துவ தேசங்களின் பிரதிநிதிகள் கூடிய ஒரு பொதுச் சபையையும், ஒரு பாதுகாப்புச் சபையையுங் கொண்டன. பாதுகாப்புச் சபை அ. ஐ. நா., ஐ. சோ. சோ. கு. நா., பிரித்தானியா, பிரான்சு, சீனம் ஆகிய நிரந்தர அங்கத்துவமுடைய ஐந்து தேசங்களையும், இருவருடத்திற் கொருமுறை தெரிந்தெடுக்கப்படும் பிறிதோர் ஆறு தேசங்களையுங்கொண்டது. பாதுகாப்புச் சபையிலே சமர்ப்பிக்கும் எந்தப் பிரேரணையாயினும் நிலையான அங்கத்தவரில் எவரும் எதிர்வாக்களித்தால்,

நடைமுறைக்கு வராது என்று விதிக்கப்பட்டது. பூமியின் அதிக பாகங்கள் கொம்முனிஸ்ட் அல்லது கொம்முனிஸ்ட் விரோதி என இரு குழுவாகப் பிளவுபட்டதனால்—பொதுச் சபையிலும் பாதுகாப்புச் சபையிலும் கொம்முனிஸ்ட் தேசங்கள் சிறுபான்மையினராயுளர்—ஐ. சோ. சோ. கு. நா. 1957-ம் ஆண்டுவரை எழுபதுமுறை அதுபோன்ற பிரேரணைகளை நிராகரித்துள்ளன. இது "வீட்டோ உபயோகம்" எனப்படும். தங்களுக்கு விரோதமாயிருக்கக்கூடுமென்று ஐ. சோ. சோ. கு. நா. எண்ணுகின்ற தேசங்கள் எவையோ, அவையை ஐக்கிய நாடுகளில் அங்கத்துவங் கூராவண்ணம் தடுப்பதற்காகப் பல தடவை இந்த "வீட்டோ" உபயோகிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் இந்த விஷயத்தில் அவை படிப்படியாய் இளகி வந்திருக்கின்றன. ஆகவே, இன்று உலகத்தின் தேசங்களிற் கிட்டத்தட்ட எல்லாம் ஐக்கிய நாடுகளில் அங்கத்துவம் பெற்றிருக்கின்றன. —ஆனால் சீன மக்கள் குடியரசு இல்லை. அந்நாடு சேருவதற்கு அ. ஐ. நா. கடும் மறுப்பாயிருக்கின்றன. இரு ஜெர்மானிய குடியரசுகளில் எதுவும் சேரவில்லை. தனது மத்தியஸ்த நிலையைப் பூரணப்படுத்துவதற்காக சுவிற்சலாந்து அங்கத்துவம் பெற மறுத்துநிற்கின்றது.

சீனத்தின் நிலைபரம் விந்தைக்கிடமாகிறது. ஐக்கிய நாடுகள் அமைக்கப்பட்டபொழுது, சியாங்கை ஷெக்கின் ஆட்சியின்கீழ் இருந்த சீனம் பாதுகாப்புச் சபையில் நிரந்தரமான அங்கத்துவமுடையது. சியாங் உடைய 'தேசியச் சீனக் குடியரசு' போமோசாத்தீவொன்றை மாத்திரங் கொண்டுள்ள போதிலும், இன்றும் 1957-ல், அந்த நிலைமாறுதிருக்கின்றது. அனேக தேசங்கள் இது பரிகாசத்திற் கிடமான நிலையென்றெண்ணி, அந்த இடத்தைச் சீனமக்கட் குடியரசே வகிக்க வேண்டுமென விரும்புகின்றன. ஆனால் கோறியாவில் ஐக்கிய நாடுகள் அனுப்பிய படைகளை எதிர்த்து மக்கள் குடியரசு "தொண்டர் படையால்" குறுக்கிட்டுப் போராடியதை அ. ஐ. நா. மன்னித்துவிடவில்லை. பாதுகாப்புச் சபை தமது படைகளை அனுப்பிய காலத்தில், ஐ. சோ. சோ. கு. நா. ஏதோ பேய்த்தனமாக, அந்த நாட்களில் தமது பிரதிநிதியை



ஐக்கிய நாட்டு ஸ்தாபனக் கட்டடம்

நிறுத்திய காரணத்தால் வீட்டோத் தடையை உபயோகிக்க முடியாமற் போனது, கவனிக்கத்தக்கது.

ஐக்கிய நாடுகளின் ஏனைய கிளைச் சபைகளாவன: பொருளாதாரச் சமூகச் சபை: தர்மகர்த்தர் சபை: சர்வதேச நீதி மன்றம்: மேலும் ஐக்கிய நாடுகளுடன் தொடர்புடைய அம்சங்களாவன: சர்வதேசத் தொழிற் கந்தோர்: உலக சுகாதார ஸ்தாபனம்: உணவு விவசாய ஸ்தாபனம்: ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞானக் கலாச்சார ஸ்தாபனம், (யுனெஸ்கோ): சர்வதேச நாணயநிதி: சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கி ஆவன. இவைகளின் சேவை பொதுவாக மாறுபாடு கூட வளர்க்கக்கூடியதன்று. எந்த அங்கத்துவ தேசத்திலும் அத்தேசத்தின் சம்மதமின்றி யாதொரு முயற்சியும் செய்ய இச்சபைகளுக்கு அதிகாரமில்லை. ஆயினும், பொதுவாக அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டு வருகிறது. நியாயம்,

அவைகளின் சேவை நாட்டு வளர்ச்சிக்குக் காலாயிருக்கிறது, விசேஷமாக அபிவிருத்தி குறைவான தேசங்களிலே.

கவனிக்க வேண்டியது, தங்கள் தீர்மானங்களைக் கட்டாயப் படுத்திச் செலுத்த ஐக்கிய நாடுகளுக்கு அதிகாரமில்லை. வட கோறியா தென்கோறியாவைத் தாக்கியதைத் தடுக்கவென்று கோறியாவுக்கு ஐக்கிய நாடுகளின் போர்ப்படை அனுப்பப் பட்டது போலக் கடைசிக் கந்தாயத்தில் ஒருவேளை கட்டாயப் படுத்தலாம். அப்போதும், சீனமக்கள் குடியரசிலிருந்து "தொண்டர்கள்" வந்து குறுக்கிட்டமையால், படையனுப்பி யும் பயன்படவில்லை.

1956-ன் பின்னடியில் எகிப்திலும் ஏனைய அராபிய நாடு களிலுமிருந்து, எல்லைகடந்து வந்து கொள்ளைக்காரர் தாக்கிய தாற் கோபங்கொண்ட இஸ்றேல் எகிப்திற் படையெடுத்து, எகிப்திய சேனையைத் தோற்கடித்ததுமன்றி, 1949-ம் ஆண்டிற் செய்த போர் நிறுத்த உடன்படிக்கையின்படி எகிப்து வைத்துக் கொண்டிருந்த பாகங்களையும் பிடித்தது. பிரித்தானிய பிரான்சிய அரசாங்கங்கள் எகிப்திய இஸ்றேலிய படைகளைப் போராடாமற் பிரிக்கவும், சுவேஸ் கால்வாயைப் பாதுகாக்கவும் என்ற நோக்கங்களை வெளியிட்டுத் தமது படைகளை அங்கே அனுப்பின. இது ஐக்கிய நாடுகளுக்கு அறிவித்தலின்றிச் செய்யப்பட்டது. இந்த ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் அந்த ஸ்தாபனம் தீர்ப்பான நடவடிக்கை எடுத்தது. பிரித்தானியா, பிரான்சு, இஸ்றேலாகிய மூன்று நாடுகளையும் போர் நிறுத்தித் தமது படைகளையும் வெளியேற்றும்படி கேட்டுக்கொண்டது. அவைகள் சம்மதிக்க, பல நாடுகளினின்றுங் கூட்டப்பட்ட ஒரு சிறு சேனையை எகிப்திய இஸ்றேலிய படைகளைப் பிரித்து வைத்துக்கொள்ள அனுப்பியது. ஐக்கிய நாடுகள் குறுக்கிட்டு அனுகூலம் பெற்றதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. என்றாலும் இதை எழுதும்பொழுது பார்க்கிற அளவில், இஸ்றேலுக்கும் அராபிய தேசங்களுக்கும் இடையில் மாறுத சமாதானத்தைக் கொண்டுவர அவை கருதுவது அனுகூலமாய் முடியுமோ வெனத் திடஞ்சொல்ல முடியாது.

ஏறக்குறைய அதே காலத்தில் ஹங்கரியிலுள்ள கொம்

முனிஸ்ட் அரசாங்கத்திற்கு விரோதமாக ஒரு கலகம் எழும்பியது. சோவியெற் போர் வீரர் அதையடக்கினர். ஐக்கிய நாடுகள் குறுக்கிட விரும்பியபொழுது, ஐ. சோ. சோ. கு. நா. பாதுகாப்புச் சபையில் 'வீட்டோவை' உபயோகித்துத் தடுத்தன. ஆகவே ஐக்கிய நாடுகள் நடவடிக்கை எடுக்க முயன்றும் பயன்படவில்லை. இந்த விஷயம் இரண்டும் இதை எழுதுங் காலத்திற்கு மிகவுங் கிட்டியவையாகையால் இதன் மேற் குறிப்புகள் கூற இடங்கொடா.

ஐக்கிய நாடுகளைத் தொடக்கிய காலத்தில் எதிர்பார்த்தவையெல்லாம் இதுவரை நிறைவேறவில்லை யென்பது இவை மூலந்தெளிவாகும். எந்த அங்கத்துவ தேசத்தின் உள்நாட்டு அலுவலிலாவது தலையிட அவைக்கு அதிகாரமில்லை. அதுவுமன்றி, பாதுகாப்புச்சபையில் நிலைபரமான அங்கத்துவம் பெற்ற தேசத்தின் அலுவலில், அந்தத்தேசத்தின் சம்மதமின்றித் தலையிட, அதிகாரம் எள்ளளவேணுமில்லை. அங்கத்துவ நாடுகளின் மேல் தந்தீர்ப்புகளைச்செலுத்த நிலையான காவலர்படை அவைக்கில்லை. தற்போது தமக்குள்ள தனி ஆணையில் ஒருபங்கைஐக்கிய நாடுகளுக்குக் கொடுக்க எல்லா நாடுகளும் சம்மதித்து வரும் வரை, இந்நிலை தொடர்ந்தே வரும். இன்றுவரை, இவை நடந்தேறுமோ வென்பதற்கு அறிகுறிகள் அதிகமில்லை. ஆனல் இது நடந்தேறும் வரை ஐக்கிய நாடுகளின் சேவை பயன்படமாட்டாததுமன்றி, உலக சமாதானமும் பாதுகாக்கப்படமாட்டாது. இதைப் பாதுகாக்கமுடியாமல் மூன்ருவது உலகப்போர் மூண்டால் அதன் பலாபலன், 22-வது அத்தியாயத்தின் முடிவிற் காட்டிய பிரகாரம், நாகரிகத்தின் அழிவாகும்; ஒரு வேளை இந்தப் பூமியிலுள்ள மானிட உயிரனைத்தும் அழியக்கூடும். ஆகையால், ஐக்கிய நாடுகளை ஏதோ ஓர் உலக அரசாங்கமாக அமைப்பதுதான் உலக மக்கள் எதிர்பார்க்கக் கூடிய நித்திய சமாதான வழியாகும்; ஒரு வேளை, மானிடர் உயிர் தப்பும் வழியுமாகும்.

உதவிக் குறிப்புகள்.

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த காலந்தொட்டு நிகழ்ந்த மாற்றங்களை இந்த அத்தியாயம் தொடர்ந்து காட்டு

கின்றது. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலுமுள்ள பெரிய சிறிய நாடுகளிலே, சில ஐரோப்பிய தேசங்கள், முக்கியமாகப் 19-ம் நூற்றாண்டில் பெற்றிருந்த ஆட்சியை எவ்வாறு அவைகளிற் பல படிப்படியாகக் கழற்றிக் கொண்டு சுயராச்சியம் பெற்றன என்ற வரலாற்றை இந்த அத்தியாயத்தின் முதற்பாகங் கூறும்.

சீன மக்கள் குடியரசைத் தவிர, புதிதாகச் சுயராச்சிய மடைந்த இந்நாடுகளெல்லாம் ஐக்கிய நாடுகளில் அங்கத்துவம் பெற்றிருக்கின்றன. இந்த அத்தியாயத்தின் இறுதியில் ஐக்கிய நாடுகளென்றால் என்ன, எவ்வாறு நடத்தப்படுவன, இதை யாம் எழுதுங் காலம் வரை, எவ்வளவுக்கு அனுகூலம் அடைந்துள்ளன அல்லது பிசகுபட்டிருக்கின்றன, என்பதை ஓரளவு பார்க்கின்றோம். நன்குணர்ந்து மனதில் வைத்திருக்க வேண்டிய விஷயம் இது, ஐக்கிய நாடுகளின் சாசன விதிகள் அனைத்தையும் நடைமுறையிற்கொண்டு, அந்தஸ்தாபனம் கூடிய அதிகாரம் வழங்கக்கூடியதாக அவ்விதிகளைத் திருத்தியமைத்தாலொழிய, உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும் முடியாது, உலகமே உலக மக்களால் அழிவுறுவதைத் தடுக்கவும் முடியாது.

இந்த அத்தியாயத்திற் குறிப்பிட்ட சம்பவங்கள் மிகவும் அண்மையில் நிகழ்ந்தவையாகையால், தொடர்ந்து வாசிக்கத் தக்க நூல்களைத் தெரிந்து கொடுப்பது முடியாத காரியம். குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றி அனேக நூல்களும் பிரதிகளும் பிரசுரிக்கப்பட்டே வருகின்றன. ஐக்கிய நாடுகள் சங்கத்தின் கிளைச் சங்கங்கள் உள்ள தேசங்களில், அவை பிரதிகளையும் வேறும் நூல்களையும் வெளியிடுகின்றன. அவ்வளவு விலையல்ல. இவைகளிற் சில இளைய மாணவருக்குதவும்.

பெரும் பத்திரிகைகளிலும் ஏனைய வெளியீடுகளிலும் தற்கால விஷயங்களைக் கவனிக்க ஆசிரியர் மாணவரை ஊக்கப் படுத்த வேண்டும். அப்படியான கல்விக்கு இந்த அத்தியாயம் ஓராதாரமாகும் என்றும் எதிர்பார்த்து நூலாசிரியர் இதை எழுத எத்தனித்தார்.

சில பிரதான நிகழ்ச்சிகள்.

1946. இந்தோ சீனத்தில் (வியெற்நாம்) உள்நாட்டுக் குழப்பம்.

1948. புதிய நாடாகிய இஸ்றேல் ஸ்தாபிக்கப்பட்டது. அராபியருடன் போர்.

1949. இந்தோனேசியக் குடியரசு நிறுவப்பட்டது. சியாங்கைஷெக் சீனத்தலைநிலத்தினின்றும் துரத்தப்பட்டது. சீனமக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.

1950. ஐக்கிய நாடுகளின் துருப்புகள் கோறியாவுக்கு அனுப்பப்பட்டது. சீனத் ''தொண்டர்'' கோறியாவிற் குறுக்கிட்டது.

1953. கோறியாவிற் சண்டை நிறுத்தம்.

1954. வியெற்நாமிற் சண்டை நிறுத்தம்.

1955. பிரான்சியர் தம் இந்தோசீன நாடுகளை விட்டு விலகியது.

1956. மொறோக்கோவும் ரூனிசியாவும் பிரான்சினின்றும் விடுதலையானது. சுவேஸ்கால்வாய் கம்பனியை எகிப்து தேசிய மயமாக்கியது. ஆங்கில பிரான்சியத் துருப்புகள் எகிப்தில் இறங்கியது. ஐக்கிய நாடுகளால் நடவடிக்கை எடுபட்டது. ஹங்கரியில் முளைத்த குழப்பம் சோவியெற் துருப்புகளால் அடக்கப்பட்டது.

மாதிரி வினாக்கள்

1-ம் அத்தியாயம்

1. "எதேச்சாதிகாரம்" என்பதினால் நீர் விளங்கிக் கொள்வது யாது? 1788-ம் ஆண்டிலே, உலகத்தில் எந்நாடுகள் எதேச்சாதிகாரமுறையில் ஆளப்படவில்லை? எதேச்சாதிகாரமுறைப்படி ஆளப்பட்ட நாட்டுக்கும் அவ்வாறு ஆளப்படாத நாட்டுக்குமுள்ள வேற்றுமைகள் யாவை?

2. 1789-ம் ஆண்டிலே ஐரோப்பாக் கண்டத்துக்குப் புறம்பான பிரதேசங்கள் எந்தெந்த ஐரோப்பிய நாடுகளுக்கு உரியனவா யிருந்தன? உலகப் படமொன்றில் இவற்றைக் குறிக்க. (வர்ணச்சுண்ணக் கட்டிகளாற் குறித்தல் நன்று)

3. 18-ம் நூற்றாண்டில் இந்தியாவில் அரசியல் விஷயங்களிலேற்பட்டிருந்த கலவர நிலையை விவரிக்க.

4. (1) 1780-ம் ஆண்டிலும் (2) இக்காலத்திலும் முறையே —"குடியேற்ற நாடு" என்னுஞ் சொற்றொடருக்குள்ள பொருள் யாது?

2-ம் அத்தியாயம்

1. அரசியற் புரட்சிக்குமுன் பிராஞ்சியர் எவ்வெவ்வகுப்பினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர்? இவ்வகுப்பினரொவ்வொருவரும் 16-ம் லூயியின் ஆட்சியுடன் அதிருப்தியடைந்ததற்கான காரணங்களைத் தருக.

2. ஐயத்துக்கிடமான வொருவனைச் சிரச்சேதஞ் செய்யக் கூறும் ஒரு கடிதத்தை அரசியற்புரட்சித் தலைவனுக்கு மாறு எழுதியதாகக் கற்பனை செய்து ஒரு கடிதமெழுதுக.

3. "பயங்கர ஆட்சி" தோற்றியதற்குக் காரணங்களெவை?

3-ம் அத்தியாயம்

1. கைத்தொழிற் புரட்சி யுண்டான கால முதலாக ஏற்பட்ட ஆறு பிரதான யந்திரங்கள் யாவை ?
2. 19-ம் நூற்றாண்டினாரம்ப ஆண்டுகளில் வட இங்கிலாந்தில் உள்ள ஒரு தொழில் நகரத்தின் நிலைமையை (நீர் அதனைத் தரிசித்ததாகக் கருதி) விவரிக்க.
3. "ஒரு நூற்றாண்டு காலத்துக்கு முந்தியதினும் பார்க்க, இப்போது அவுஸ்திரேலியா இங்கிலாந்துக்கு அண்மையிலுள்ளது." இதனை விவரிக்க.

4-ம் அத்தியாயம்

1. பிராஞ்சியப் புரட்சியின் கடற்படையினும் பார்க்கத தரைப் படை கூடின வெற்றி பெற்றதேன் ?
2. ஐரோப்பாவின் புறவுருவப்படமொன்றில் (1) 1798-ம் ஆண்டுவரையிலும் (2) 1808-ம் ஆண்டுவரையிலும், பிராஞ்சியராட்சி பரவியதைக் குறிக்க.
3. தன்னதிர்ஷ்டத்தை சேர் சிட்னி சிமித் கெடுத்தானென நெப்போலியன் கூறியதேன் ?
4. இறுதியாக நெப்போலியன் தோல்வியடைந்தமைக்குக் காரணங்க ளெவையெனக் கூறு ?
5. ஒரு பிராஞ்சியப் படைவீரன், தானும் தன் படையினரும் மொஸ்கோவினின்றும் பின்வாங்கிய வரலாற்றை ஸ்பெயினிற் படைத்தொழில் புரியும் தன் சகோதரனுக்குத் தெரிவிப்பதாக ஒரு கடிதம் எழுதுக.

5-ம் அத்தியாயம்

1. நெப்போலியப் போர்கள் முடிந்தவுடனேயே ஜெர்மனி ஏன் ஓரிராச்சியமாக ஐக்கியமடையவில்லை ?
2. வியன்னை உடன்படிக்கைக்குப் பின் இத்தாலி பிரிக்கப் பட்ட வகையை அந்நாட்டின் புறவுருவப்படமொன்றில் குறிக்க.

3. சாரான அலக்சாந்தர் எத்தகையன் என நீர் நினைக்கிறீர் ?

4. இத்தாலியரின் தேசீயவுணர்ச்சியைப் பற்றியும் அது எவ்வாறு அடக்கப்படவேண்டுமென்பதைப்பற்றியும் மெட்டர்நிக்குக்கும் அவனுடைய நண்பனொருவனுக்கும் நடந்ததாகக் கற்பனை சம்பாஷணையொன்று எழுதுக.

6-ம் அத்தியாயம்

1. "பாராளுமன்றச் சீர்திருத்தம்" என்றாலென்ன ? 1832-ம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டம் இதற்கான இயக்கத்தைப் பிரித்தானியாவில் எவ்வளவு தூரம் கொண்டு சென்றது? அதன் பின் இவ்விஷயத்திலேற்பட்ட நிகழ்ச்சிகளை இக்காலம் வரையிற் கூறுக.

2. 1830-ம், 1848-ம் ஆண்டுகளிற் பிரான்சிற் புரட்சிகளேற்பட்டதேன் ?

3. வியன்னை ஏற்பாடு 1830-ம் ஆண்டளவில் என்ன அளவுக்கு முறிவடைந்தது ?

4. "தாராளக்கொள்கை" அல்லது "பரந்த நோக்கு," "தேசீயம்" என்பவற்றிலிருந்து திட்டமாக நீரறிவதென் ?

7-ம் அத்தியாயம்

1. 1848-ம் ஆண்டிற் புரட்சிக்கான இயக்கங்கள் எந்தெந்த நாடுகளிற் கிளம்பின ? ஒவ்வொரு நாட்டிலும் இப்புரட்சிகள் சித்திபெறுமைக்கு முறையே காரணங்களைக் கூறுக.

2. லூயி நெப்போலியன் தன்னைப் பிராஞ்சிய சக்கரவர்த்தியாகச் செய்துகொள்ள இயன்றதெங்ஙனம் ?

3. புரட்சி யெண்ணங்கள் ஏனைய நாடுகளினும் பார்க்கப் பிரித்தானியாவில் குறைந்த அளவுக்குக் காணப்பட்டதேன்?

4. கண்ணிய முள்ள நடுத்தர நிலைமையிலுள்ள ஆங்கில 'கொன்சேர் வேட்டிவ்' கட்சியைச் சேர்ந்தவனொருவன் சார்ட்டிஸ்டுகளின் விண்ணப்பத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களைத் தன் நண்பர்களுக்குக் கூறுவதுபோன்று வரைக.

8-ம் அத்தியாயம்

1. "அரசியலமைப்பின்படி ஆட்சிபுரிந்த அரசி" யென விக்ரோரியா ராணி அழைக்கப்படுவதேன்? அவராட்சியினிறுதிக் காலத்தில் சனங்கள் அவரிடம் பெரிதும் பிரியங்கொண்டிருந்ததற்குக் காரணந்தருக.

2. டிக்கின்ஸ் என்னும் நவீன நூலாசிரியர் என்னென்ன தீமைகளைத் தமது நூல்களில் எடுத்துக்காட்டிக் கண்டித்தார்?

3. இக்காலத்துத் தொழிலாளியின் நிலைமையை விக்ரோரியா ராணியார் ஆளத்தொடங்கிய காலத்துத் தொழிலாளியின் நிலைமையுடன் ஒப்ப நோக்குக.

4. விக்ரோரியா ராணிகாலத்தவர் தம் சீவிய நிலைமையுடன் திருப்தியடைந்தனர் எனக் குறை கூறப்படுகின்றது. இதற்குக் காரணமென்? அவர்கள் திருப்தியுடனிருந்தமைக்கு நற்காரண முண்டென நீர் கருதுகின்றீரோ?

9-ம் அத்தியாயம்

1. 1842-ம் ஆண்டிலே நேப்பில்சு நகரத்துக் கலகத்துக்குதவி புரிந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வெனிசு நகரத்தைச் சார்ந்த பந்தியரா என்னும் பெயர்பூண்ட இரு சகோதரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இங்ஙிகழ்ச்சி வியன்ஞ நகரத்து அரசியல் நிபுணர்களுக்கொரு எச்சரிக்கையாகுமென ஏன் கூறலாகும்?

2. 1858-ம் ஆண்டில் லூயி நெப்போலியனைக் கவூர் தரிசித்துப் பேசியது ஓரிரகசிய விஷயம். இத்தாலிய வொற்றுமைக்காக அச்சக்கரவர்த்தி தலையிடவேண்டுமென

வற்புறுத்துதற்குக் கவூர் என்னென்ன நியாயங்களை எடுத்துக்காட்டி யிருக்கலாம் ?

3. இத்தாலியில் ஐக்கியத்தை யுண்டாக்குவதில் கரிபால்டி பெற்ற பங்கு யாது ?

4. புதிய இத்தாலிய ராச்சியத்துடன் பாப்பாண்டவர் வாதஞ் செய்து மனத்தாப மடைந்த தேனென்பதையும், இறுதி யிலே இது நீங்கின தெவ்வாறென்பதையும் விளக்குக.

10-ம் அத்தியாயம்

1. ஜெர்மானிய நாடுகளின் ஐக்கியத்தைப் பிருஷ்யா ஆதரித்த தேன் ? ஆஸ்திரியா எதிர்த்ததேன் ?

2. பிருஷ்யாவினுட்சிக்கடங்க ஜெர்மனி ஐக்கியமடைதற்குப் பிஸ்மாக் செய்த ஏற்பாட்டின் பிரதான அமிசங்களைக் கூறுக.

3. பிருஷ்யப் படைகள் எவ்வழியிலும் திறனும் வெற்றியு மடைந்ததற்குக் காரணங்களெவையெனக் கூறுவீர் ?

4. பிராஞ்சிய பிருஷ்யப் போர் மூண்டால், கூடியவரையில் பிரான்சுக்கு எங்கிருந்தும் உதவி கிடைக்காதிருக்கும் படி அதனைப் பிரித்து வைக்கப் பிஸ்மாக் செய்த ஏற் பாட்டின் விவரங்களைத் தருக.

11-ம் அத்தியாயம்

1. 19-ம் நூற்றாண்டில் ருஷ்ய சார்கள் ஆண்டுவந்த வெவ் வேறு சாதியினரெவர்? படம் வரைந்து அதனுதவி கொண்டு உமது விடையை விளக்குக.

2. 1815-1913-ம் ஆண்டுகளுக்கிடையே ருஷ்யாவுக்கும் பிரித்தானியாவுக்கும் சம்பந்தமான அரசியல் விஷயங் களைக் கூறுக.

3. 1914-ம் ஆண்டுவரையிலே, ருஷ்யர் துருக்கியுடன் போர் புரிதற்குத் தயாராயிருந்ததென் ?

4. தாம் ஆளப்பட்ட வகையைப்பற்றி ருஷ்யர் பெருந் திருப்தி யீனமடைந்ததென்? நீர் கூறுவனவற்றுள் சிலவற்றை விளக்க ஒரு சிறு கதை யெழுதுக.

12-ம் அத்தியாயம்

1. 1833, 1879, 1914-ம் ஆண்டுகளில் பால்க்கன் தீபகற்பத்தின் அரசியல் நிலைமையைப் பால்க்கன் புறவுருவத் தேசப்படங்களிற் குறிக்க.

2. பால்க்கன் நாடுகள் 1878-ம் ஆண்டின் பெர்லின் மகா நாட்டினுல் தாக்கப்பட்டதெங்ஙனம்?

3. ஆஸ்திரியா 1867-1913-ம் ஆண்டுகளுக்கிடையே பால்க்கன் நாடுகளை நடத்திய விதத்தை விவரிக்க.

4. 2-ம் பால்க்கன் போரில் (1913) எந்நாடுகள் பங்கு பெற்றன? ஒவ்வொறு நாடும் பங்குபெற்றதற்குக் காரணங் கூறுக. இறுதியில் ஒவ்வொன்றுக்கும் ஏற்பட்ட இலாப நட்டம் யாது?

13-ம் அத்தியாயம்

1. பிரித்தானியப் பொதுநல நாடுகளில் எவ்வெவ்வகை அரசியல் முறைகள் காணப்படுகின்றன? உம் ஞாபகத்திலுள்ள வரையில் ஒவ்வொரு வகைக்கும் கூடின உதாரணங்களை வரைக.

2. 1-ம் பிரித்தானியச் சாம்ராச்சியத்துக்கும் 2-ம் பிரித்தானியச் சாம்ராச்சியத்துக்குமுள்ள பிரதான வேறுபாடுகளென்ன?

3. பிரித்தானியச் சாம்ராச்சியத்தின் அபிவிருத்தியிலே 'டரும் அறிக்கை'யின் பிரதானமென்ன?

4. பிரித்தானியப் பொதுநல நாடுகளில் ஒட்டாவா ஒரு காலத்திற் பிரதான பட்டினமாகலாமெனக் கூறப்படுகின்றது. இவ்வாறு கூறுதற்குக் காரணங்களென்ன?

14-ம் அத்தியாயம்

1. "சமஷ்டி" என்பதற்கு பொருள் யாது ? கனடா, அவுஸ் திரேலியா—இவற்றினரசியலமைப்பிலுள்ள சமஷ்டிக் கொள்கைகளின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுக.
2. பிரித்தானியப் பொதுநல நாடுகள் ஏன் சேர் எட்வேட் கிறேக்கு நன்றி செலுத்தவேண்டும் ?
3. நியூசீலாந்து உன்னதமான டொமினியன் எனப்படுவது ஏன் ?
4. ஏனைய டொமினியன் நாடுகளினும் பார்க்கத் தென்னப் பிரிக்க அரசாட்சியார் கவனிக்கவேண்டிய பிரச்சினைகள் கடினமாயிருப்பதேன் ?

15-ம் அத்தியாயம்

1. இந்தியா, "உபகண்டம்" எனக் கூறப்படுவதேன் ?
2. பிரித்தானியர் இந்தியாவை யாள வந்ததென் ? கவன மாகக் காரணந்தருக. அவர்களாட்சி பரவியதைப் படிப் படியாக விவரிக்க. உமது விடையைப் படங்கள் மூலம் விவரிக்க.
3. இந்தியாவைப் பிரித்தானியராள்வதாலேற்பட்ட பலா பலன்களை விவரிக்க.
4. இந்தியாவில் பிரித்தானியர் ஆட்சி செல்வாக்குப் பெரு மைக்குக் காரணம் என்ன ?

16-ம் அத்தியாயம்

1. 19-ம் நூற்றாண்டிலே, ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பாக் கண்டத்துக்குப் புறம்பாகப் பெரிதும் பரவுவதற்குப் பிரதான காரணங்களெவை ?
2. தற்கால எகிப்தை உண்டாக்குவதிற் பிரித்தானியா புரிந்த தொண்டை மதிப்பிடுக.
3. ஆப்பிரிக்காவில் ஐரோப்பியச் செல்வாக்கு பரவுவது எதனாற் சாத்தியமாயிற்று ?

4. ஆசியாவின் புறவுருவப் படமொன்றில் 1939-ம் ஆண்டிலே ஐரோப்பிய ராட்சிக்குட்பட்டிருந்த நாடுகளைக் குறிக்க.

17-ம் அத்தியாயம்

1. ஐரோப்பியர் தலையிடாமலே, யப்பானியர் தம் நாட்டை மேனாட்டவர் முறைப்படி அபிவிருத்தி செய்துகொள்ள முடிந்ததேன்?

2. அயல் நாடுகள் இடைவிடாது தலையிடும் அபாய நிலைமை சீனத்திலேற்பட்டதென்?

3. யப்பான் கோறியாவிற் பூரண அதிகாரத்தைப்பெற்ற தெங்ஙனம்?

4. சீனத்தில் அங்கியர் தலையிடுதல் நின்றதெவ்வாறென விளக்குக.

18-ம் அத்தியாயம்

1. அமெரிக்க ஐக்கிய நாடுகளில், வடக்கிலும், தெற்கிலும் மேற்கிலுமிருந்த நாடுகளின் தன்மையிற் காணப்பட்ட சிறப்பான வேறுபாடுகளெவை?

2. அமெரிக்க உள்நாட்டுப்போருக்குக் காரணம் அடிமைப் பிரச்சினையினும் பார்க்க, நாடு இரண்டாகப் பிரிதலே எனக்கூறுதல் என்ன அளவுக்கு உண்மையாகும்?

3. அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலாவது உலகப் பெரும் போரிற் சேருவதைப்பற்றி 1916-ம் ஆண்டில் இரு அமெரிக்கர் நடாத்தியதாக ஒரு சம்பாஷணையை வரைக.

4. அ. ஐ. நாடு தனது 'தனிமை' அல்லது 'புறநீங்கல்' கொள்கையில் நின்று ஏன் விலகிற்று?

19-ம் அத்தியாயம்

1. நீரறியக்கூடிய வரையில் நோய்களைக் குணமாக்கவும் தடுக்கவும் சென்ற நூற்றாண்டுகளிற் கண்டுபிடிக்கப் பட்ட எல்லா முறைகளையும் வரைக.

2. விஞ்ஞான சாத்திரத்தின் பிரதான பிரிவுகளெவை? ஒவ் வொரு பிரிவோடுந் தொடர்பு பூண்ட பெரும் விஞ்ஞான சாஸ்திரி ஒருவரின் பெயரையேனுந்தருக.

3. 1800-ம் ஆண்டு முதலாகச் சமுதாய நிலைமையிலேற்பட்ட சீர்திருத்தங்களெவை? இவை நீர் வாசஞ் செய்யுமிடங் களிலுங் காணப்படுகின்றனவா? காணப்படின், உதார ணங்கள் தருக.

4. சன சமுதாயத்திற் பெண்மக்கள் தற்போது பெற்றுள்ள நிலைமையை அவர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன் பெற்றி ருந்ததோடு ஒப்பிடுக.

20-ம் அத்தியாயம்

1. ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கரி, இத்தாலி ஆகிய மூன் றும் உடன்படிக்கை செய்து கொண்டதற்குக் காரணம் தருக.

2. 1871-ம் ஆண்டுக்குப்பின் ஜெர்மனி எல்லாவகைகளிலும் விருத்தியும் வன்மையுமடைதற்கு அந்நாட்டு மன்னர் எடுத்துக்கொண்ட நடபடிக்கைகளெவை?

3. 1904-ம் ஆண்டுவரைக்கும் பிரித்தானியாவுக்கும் ஜெர் மனிக்கும் அதிகமனத்தாபமேற்பட்டதின் காரணத்தைக் கூறுக.

4. "மூவர் நட்பு" என்பது யாது? "நட்பு"க்கும் "உடன் படிக்கை"க்கு முள்ள வேறுபாடு யாது?

21-ம் அத்தியாயம்

1. உலக சமாதான இயக்கத்தின் வரலாற்றை 2-ம் ஹேக் மகாநாடு (1907) வரையில் விவரிக்க.

2. துருக்கியில் ஜெர்மனிக்குச் செல்வாக்கு ஏற்பட்டதின் காரணங்களையும் அது 1914-ம் ஆண்டுவரைக்கும் விருத்தியடைந்த வரலாற்றையும் கூறுக.

3. போர் மூண்டபோது, மூவருடன்படிக்கையிற் கைச்சாத் திட்ட ஏனைய நாடுகளுடன் இத்தாலி ஏன் சேர்ந்துகொள்ள வில்லை ?

4. முதலாவது உலகப் பெரும்போர் தவிர்க்கமுடியாத நிகழ்ச்சியென்பீரா? அல்லது அதனைத் தடுத்திருக்கக் கூடுமெனக் கருதுகின்றீரா ?

22-ம் அத்தியாயம்

1. 1916-ம் ஆண்டுவரைக்கும் உலகப் பெரும்போரிற் பங்கு பெற்ற நாடுகளின் பட்டியொன்று தயாரிக்க. ஒவ் வொன்றும் அதிற் பங்கு பெற்றதேனெனச் சுருக்கமாகக் காரணங் காட்டுக.

2. உலகப் பெரும்போரிற் கடற்படைகள் பெற்ற பங்கின் முக்கியத்தை மதிப்பிடுக.

3. இப்போரில் "மார்ன் சண்டை"யே உண்மையில் வெற்றி-தோல்வி கூறும் நிகழ்ச்சியென அதிகமாகக் கருதப்படு வதேன் ?

4. வெவ்வேறு போர்க்களங்களின் பட்டிகளைத் தயாரிக்க. ஒவ்வொரு போர்க்களத்திலும் நேச வல்லரசுகள் முறையே வெற்றிபெற்றமைக்கும், தோல்வியடைந்தமைக்குங் கார ணங்களைச் சுருக்கமாகக் கூறுக.

23-ம் அத்தியாயம்

1. சமாதான நியமங்களைக் குறிக்கும்போது உவில்சனின் 14 திட்டங்களையும் மாற்றவேண்டியது அவசியமென ஏன் கருதப்பட்டது ?

2. முவ்வகைப்பட்ட "பொறுப்பாட்சிப் பிரதேச"ங்களுக் குள்ள வேறுபாடுகளைக் கூறுக ; ஒவ்வொன்றிற்கும் உதாரணங்கள் தருக.

3. 1918-ஆம் ஆண்டின்பின் உலக சமாதானத்தை நிலைக்கச் செய்தற்காயமைக்கப்பட்ட தாபனங்களினமைப்பைக் கவனத்துடன் விவரிக்க.

4. சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் உட்கருத்து யாது ?

24-ம் அத்தியாயம்

1. "போல்ஷிவிஸம்" என்பது யாது? ருஷ்யப் புரட்சியில் போல்ஷிவிக்கரின் வெற்றிக்குக் காரணங் கூறுக.
2. "சோவியெற்" அரசியல் முறையை விவரிக்க (இதனை யொரு விளக்கப்படம் வரைந்து காட்டலாம்).
3. "கொம்முனிஸம்" என்பது யாது? ருஷ்யாவில் இம் முறை சித்திபெறுததற்கும், இதற்குப் பதிலாகப் "புது பொருளாதார முறை" ஏற்பட்டதற்குங் காரணந் தருக.
4. "பாசிஸம்" என்றால் என்ன என்று விளக்குக.

25-ம் அத்தியாயம்

1. சமாதானமேற்பட்ட பின் புதிய அரசியலமைப்பைத் தடுத்து நின்ற பிரதான கஷ்டங்களென்ன?
2. உமதெண்ணப்படி, போரினாலேற்பட்ட மிகப் பிரதான பொருளாதார மாற்றங்களென்ன?
3. சமாதானமேற்பட்ட கால முதலாக 1930-வரைக்கும் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கு மேற்பட்ட தொடர்பை ஆராய்க.
4. 'பொருளாதார வீழ்ச்சி' என்பதின் கருத்தென்ன? 1929-ல் ஆரம்பமான வியாபார மந்தத்தினால் ஏற்பட்ட பிரதான விளைவுகள் யாவை?

26-ம் அத்தியாயம்

1. சர்வதேச சங்கம் பயனற்றதாகி ஒழிந்தற்கான நியாயங் களைக் கூறுக.
2. "பரந்த கொள்கைக் குடியரசு பயனற்றது; பழங்காலத் தது," என்று பாஸிஸக் கட்சியினரும் நாஜிக் கட்சியினரும் கூறியதேன்?
3. செக்கோசிலவாக்கியாவின் அதிகாரம் முழுவதையும் பெறுவதற்கு ஹிட்லர் எவ்வெவ்வழிகளைக் கையாண் டான் என விவரிக்க.
4. சோவியெற் ஜெர்மானிய 'ஆக்கிரமிப்புத்தடைப் பொருத் தம்' உலகச் சரித்திரப் போக்கை எவ்வாறு மாற்றியது?

27-ம் அத்தியாயம்

1. இரண்டாம் உலக யுத்தத்தில் ஜெர்மனி ஆரம்பத்தில் வெற்றி அடைந்தமைக்குக் காரணம் என்ன ?
2. இவ் யுத்தத்தில் ''பிரித்தானியப் பெரும்போர்'' ஓர் திருப்ப மாக இருந்ததேன் ?
3. யுத்தத்தில் இத்தாலியின் பங்கை விளக்குக.
4. '' சீதளப்போர் '' என்ற பதங்களின் கருத்தை நீர் எப்படி விளங்கிக் கொள்கிறீர் ?
5. அ. ஐ. நா. உம், ஐ. சோ. சோ. கு. நா. உம் போர் தொடுக்கு முன், ஐரோப்பிய அச்சு வல்லரசுகள் இரண்டாவது உலக யுத்தத்தில் வெற்றியடைய முடியாமைக்குக் காரண மென்ன ?
6. நேச நாடுகள் வெற்றியடைவதற்கு எவ்வெவ் வழியில் வலிமை கூடிய கடற்படை ஏதுவாயிருந்தது ?

28-ம் அத்தியாயம்

1. 'கை கலக்காத போர் முறை' அல்லது 'மௌனப் போர் முறை' என்பதால் நீர் விளங்கிக் கொள்ளும் பொருளைத் தெளிவாய்க் கூறும்.
2. பிரித்தானிய சாம்ராச்சியம் பொதுநல நாடுகளாக மாற்றப் பட்டது என்று சொல்லுவதின் கருத்தென்ன ?
3. தென் ஆப்பிரிக்க ஐக்கிய தேச வரலாறு, ஆஸ்திரேலியா வின் வரலாற்றிலும் பார்க்க குழப்பங்கள் கொண்டதா யிருப்பதேன் ?
4. பொதுநல நாடுகளில் அமையும் சமஷ்டி நாடுகள் எவை ? அவையில் ஒன்றை எடுத்து, அந்நாட்டு மக்கள் தனி அர சாங்கத்தை விரும்பாது சமஷ்டி அரசாங்கத்தை விரும்பு வது என்ன காரணத்தால் என்று இயன்றளவு தெளி வாக்கும்.

TAMIL NADU ARCHIVES MADRAS

5. இந்தியாவும் இலங்கையும் சுயராச்சியம் அடைந்த முறைகளில் என்னென்ன வேறுபாடுகளுண்டு? இந்த வித்தியாசம் வருவதற்குக் காரணம் யாது?

29-ம் அத்தியாயம்

1. இந்தோனேசியக் குடியரசில் சட்ட ஒழுங்குகளை அமைப்பதிலும் பார்க்க இந்தியாவில் அமைப்பது இலகுவாயிருப்பதின் காரணமென்ன?
2. சீனம் கொம்முனிஸ்ட் நாடாகியது என்ன காரணத்தால்?
3. உலக சமாதானத்திற்கு மாறுக மத்திய கிழக்கிலே உற்பத்தியாகும் இடையூறுகள் எவை?
4. ஐக்கிய நாடுகள் ஒரு சர்வலோக அரசாங்கமாக மாற்றப்படவேண்டுமென்று, கொள்கிறீரா? அவ்வாறு மாற்றின், என்ன அதிகாரம் அச்சபைக்கு அளிக்கவேண்டும்?
5. சர்வ தேச சங்கத்திலும் பார்க்க ஐக்கிய நாடுகள் அனுகூலமடைய இடமிருந்ததுபோல் ஏன், உதாரணமாக 1947-ல், தோன்றியது?

TAMIL NADU ARCHIVES LIBRARY
111915

1.9.6

Pakeman's The Modern World, Tamil, Rs. 4·50